கலைஞரின்
கடிதங்கள்



32

01.08.2001 - முதல்
09.03.2002 - வரை

சீதை பதிப்பகம்

கலைஞரின் கடிதங்கள்

தொகுதி - 32

01.08.2001 -09.03.2002



தலைவர் கலைஞர்



சீதை பதிப்பகம்,
சென்னை-05. ☎ 97907 06549/97907 06548

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்

9, செயின்ட் ஜான் சர்ச்சு வணிக
வளாகம், ராக்கின்ஸ் சாலை,
திருச்சி - 620 001.
9952034876 / 9943428994
04312419584.

Gowra Puthaga Maiyam

9, Saint John Church Complex,
Rockins Road, Trichy - 620 001
99520 34876 / 04312419584.
gowraputhagamaiyam@gmail.com

Available @ :

கௌரா ஏஜென்ஸீஸ்

எண்.1 சாமி தெரு,
சாய் பாபா கோவில் பின்புறம்
திருவல்லிக்கேணி, சென்னை - 05.
9790706548 / 9790706549
044 28443791.

Gowra Agencies

No : 1 Samy Street,
Sai Baba Temple Back Side
Triplicane, Chennai - 05.
9790706548 / 044 28443791.
gowra09@gmail.com

கலைஞரின் கடிதங்கள்

Kalaignarin Kadithangal

விலை : ரூ.**300.00** CODE :**2300**

எழுதியவர் : **கலைஞர்**
தொகுப்பாசிரியர்கள் :
கோ.சண்முகநாதன் M.com BGL
முனைவர் கி. இராஜமாணிக்கம் IAS ஒய்வு
கலைஞரின் செயலாளர்கள்
பொருள் : கடிதம்
© உரிமை :
பதிப்பாசிரியர் :
எஸ். கௌமாரீஸ்வரி M.A., M.L.I.S.,
பதிப்பு :
முதற் பதிப்பு – 2022
வெளியீடு :
சீதை பதிப்பகம்
6ஏ/4, பார்த்தசாரதி சாமி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை – 600 005
பக்கம் : 400
ஒளி அச்சு : ஜெய் ஜீனா
அச்சிட்டோர் :
கிளாசிக் பிரிண்டர்ஸ், சென்னை–2.
ISBN :

Author : Kalaignar
Editors:
K. Shanmuganathan M.com BGL
Dr K. Rajamanikam IAS
Subject : Epistle
© Rights :
Publisher :
S.Gowmareeswari M.A., M.L.I.S.,
Edition :
1st Edition - 2022
Published @ :
Seethai Pathippagam
6A/4, Parthasarathi Samy Street,
Triplicane,
Chennai-600 005.
Pages : 400
Typeset by : JaiJeena
Printed @ :
Classic Printers, Chennai - 2.
ISBN :

42239
894.8116
திரு.கலை.32

திருக. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வுக் நூல்
நிலையம்
சென்னை-18
அறிவாலயம்



அம்மாவுக்கு....

கௌரா பதிப்பகக் குழுமம்

மு.க.ஸ்டாலின்
தமிழக முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

அணிந்துரை அல்ல இது; மிகவும் பணிந்துரை!

"கலைஞரின் கடிதங்கள்" அனைத்தையும் அச்சியற்றி, வெளியிடுவதென முடிவெடுத்து, அந்த முடிவு கனிந்து, இப்போது கடிதங்கள் அனைத்தும் 54 தொகுதிகளாக வெளிவருகின்றன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மீது கொண்டிருக்கும் மாறாத பற்றாலும், மதிப்பாலும், மரியாதையினாலும், கழக வரலாற்றில் சிறப்பு வாய்ந்த இந்த அரிய – பெரிய பணிமுழுவதையும் ஆற்றிட முன்வந்திருக்கும் சென்னை – சீதை பதிப்பகத்தார்க்கும், அதன் உரிமையாளர் அருமை நண்பர் திரு. இராஜசேகரன் அவர்களுக்கும், நெஞ்சார்ந்த நன்றியையும், மகிழ்ச்சியையும், பாராட்டுதல்களையும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், இங்கே பதிவு செய்வது என்னுடைய முதல் கடமை ஆகும்.

இந்தத் தொகுதிகள் வெளிவருவதற்குப் பின்னணியில் இருந்து, பல்லாற்றானும் உதவிய, தலைவர் கலைஞர் அவர்களின் செயலாளர்கள் – பாசம் மிகுந்த எனது அண்ணன்மார், திரு. கோ.சண்முகநாதன், முனைவர் கி.இராஜமாணிக்கம் ஆகிய இருவர்க்கும் என்னுடைய நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. இராஜசேகரன் அவர்கள் என்னிடம், "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கு, அணிந்துரை வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தந்தைக்குத் தனயன் "அணி"யாகத் திகழ்ந்திட முடியுமே அன்றி; அணிந்துரை அளித்திடத் துணிவது, அதிகப்படியான செயலாக ஆகிவிடும்.

தலைவர் கலைஞர் அவர்களின் எழுத்துக்கு அணிந்துரை வழங்கிடும் உயரம் எனக்கு நிச்சயமாக இல்லை என்பதை நானறிவேன். அதனாலே அணிந்துரைக்குப் பதிலாக "பணிந்துரை" தருகிறேன் என்று சொன்னேன். அதன்படி, இது அணிந்துரை அல்ல; மிகவும் பணிந்துரை!

எழுதுவதை உயிர்மூச்சாகக் கொண்டு இயங்கிய தலைவர் கலைஞர் அவர்கள், வாழ்ந்த காலம் முழுவதும் எழுதி எழுதி இமயம்போல் குவித்தவர். அவர் எழுத்து வேந்தர்; சொல்லேருழவர்; கருத்துக் கருவூலம்; வண்ணமயமான எண்ணங்களின் வற்றாத ஊற்று!

தலைவர் கலைஞர், கழக உடன் பிறப்புகளுக்குக் கடிதம் எழுதத் தொடங்கி, மொத்தம் 4051 கடிதங்கள் எழுதியிருக்கிறார்.

ஏ அப்பா, கேட்கவே மலைப்பாக இருக்கிறது அல்லவா!

ஒரு நாளைக்கு ஒரு கடிதம் என்று வைத்துக் கொண்டாலும், தொடர்ந்து 11 ஆண்டுகள், 36 நாட்கள் கடிதம் எழுதியிருக்கிறார். இப்படி எழுதுவது தனியொரு மனிதருக்குச் சாத்தியப்படுமா என்றால்; சாத்தியப்படாத எதையும், எந்தத் துறையாக இருந்தாலும், அதை எடுத்துச் சாத்தியப்படுத்திச் சாதனை செய்து சரித்திரம் படைத்தவர் கலைஞர்!

முடியுமா, நேரம் கிடைக்குமா, உடல் நலனுக்கு ஒத்துவருமா - என்ற கேள்விகளின் முனைமுறித்துப் போட்டவர் கலைஞர். பெரும்பாலும், காலை எழுந்ததும் கடிதம் எழுதுவது, கலைஞர் தவறாது தொடர்ந்து இறுதிவரை ஆற்றிய கடமையாகவே இருந்தது. இந்த அளவுக்கு, நான்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடிதங்கள் எழுதி வெளியிட்டிருக்கும், ஒரே அரசியல் தலைவர் அகில உலகத்திலும் அவர் ஒருவரேதான்!

கடிதம் எழுதுவது என்பது, கிரேக்கத்திலிருந்து தொடங்குகிறது. டையோஜெனீஸ் (கி.மு.412 - 323) என்ற கிரேக்க ஞானி, தன்னைக் காண அலெக்சாந்தர் விரும்பியதாக அவருடைய நண்பர் அரிஸ்ட்டிப்பஸ் எழுதிய கடிதத்திற்கு, அனுப்பிய பதில் கடிதம் பிரபலமானது.

கிரேக்க தத்துவ ஞானி சாக்ரட்டீஸின் 9 கடிதங்கள் வரலாற்றில் இடம்பெற்றிருப்பவை. இயேசுநாதரின் சீடர்கள்

எழுதிய கடிதங்கள், விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் பொறிக்கப்பட்டுள்ளன. சிசரோ, ரோமாபுரியின் வரலாற்றை 835 கடிதங்களாக எழுதி வைத்திருக்கிறார்.

லியோ டால்ஸ்டாய், ஹோரஸ் வால்போல், மெக்காலே, கோல்ட் ஸ்மித், பைரன், கீட்ஸ், பெர்னாட்ஷா போன்ற அறிஞர்கள் பலரும் எழுதிய கடிதங்கள் கடித இலக்கியத்தில் முக்கியமான பங்கு வகிக்கின்றன.

கலையரசி மாதவி, கோவலனுக்கு இரண்டு கடிதங்கள் அனுப்பியதாகச் சொல்கிறது சிலப்பதிகாரம். விவேகானந்தர், அமெரிக்கா சென்றிருந்தபோது அவருடைய நண்பர்களுக்கு எழுதிய கடிதங்கள், அண்ணல் காந்தி அடிகள் பல்வேறு சூழ்நிலைகளில் எழுதிய எண்ணற்ற கடிதங்கள், பண்டித நேரு அவர்கள் சிறையில் இருந்தவாறே அவருடைய மகள் இந்திரா காந்தி அம்மையாருக்கு எழுதிய கடிதங்கள் (உலக வரலாறு) ஆகியவை கடித இலக்கியமாகப் பார்க்கப்படுகின்றன.

மறைமலை அடிகளாரின் நாவல் “கோகிலாம்பாள் கடிதங்கள்”, இலக்கியச் சுவையும் தரமும் உடையது. கடிதக் இலக்கியத்தை கருத்துச்செறிவுடன் கையாண்டவர் டாக்டர் மு.வரதராசனார் அவர்கள் ஆவார்கள். அவருடைய “அன்னைக்கு’, "தம்பிக்கு”, “நண்பர்க்கு’, "தங்கைக்கு" ஆகியவை

ஒருகட்டத்தில் மொத்தத் தமிழ் மக்களின் கவனத்தையும் கவர்ந்தவை.

அந்த வரிசையில் வைத்துப் போற்றிப் புகழத் தக்கவை, புகழ்ந்து நினைவிலே வைத்து எப்போதும் பாதுகாத்திடத் தக்கவை, பாதுகாத்துப் பாரம்பரியமாகப் படித்துப் பயன்பெறத் தக்கவை, பேரறிஞர் அண்ணா அவர்களின் “தம்பிக்கு” கடிதங்களும்; அண்ணா அவர்களைப் பின்பற்றி, தலைவர் கலைஞர் எழுதிய “உடன்பிறப்புக்கு” கடிதங்களும் ஆகும்.

தந்தை பெரியார் அவர்கள் எதிலும், எப்போதும் அறிவியல்பூர்வமான அணுகுமுறையைப் பின்பற்றியவர் என்றால்; பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அடிப்படையில் கலை உணர்வு மிக்கவர்கள் என்பதால், அறிவியல் உண்மைகளையே, கவித்துவ நடையில் எடுத்து இயம்பியவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அன்றாட அரசியல் பிரச்சினைகளையும், உலக நிகழ்வுகளையும், கட்சித் தோழர்களுக்கு எடுத்துச் செல்லவும், ஏற்றபடி தொகுத்துச் சொல்லவும், கடித வடிவத்தைக் கைக்கொண்டார்கள்; அந்தக் கடிதங்களை இலக்கியத் தேனில் தோய்த்து, திகட்டாத தெள்ளுதமிழில் வாரி வழங்கினார்கள். அவற்றைப் படித்துப் படித்து, தம்பிமார்களும், உடன்பிறப்புகளும், விவரங்களை அறிந்து, விழிப்புணர்ச்சி வளர்ந்திடப் பெற்றார்கள்.

அண்ணா - கலைஞர் கடிதங்கள், "வீழ்ச்சியுற்ற தமிழினத்தில் எழுச்சி வேண்டும்; விசை ஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்; சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமைதன்னைத் தொகையாக எதிர் நிறுத்தித் தூள்தூளாக்கும் காழ்ச்சிந்தை மறச்செயல்கள் மிகவும் வேண்டும்; கடல்போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்;" என்ற உயரிய, உன்னத நோக்கில் எழுதப் பட்டவை.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கடித இலக்கியத்தில், இல்லாததே இல்லை என உறுதியாகச் சொல்லலாம். உலக நாடுகளின் வரலாறு, இந்திய வரலாறு, சங்கத் தமிழ், இலக்கியங்கள், அரசியல் நிகழ்வுகள் என எல்லாவற்றையும்;

தமது தம்பிமார்கள் அறிந்திருக்க வேண்டும்; அறிந்திருப்பவற்றை அய்யம் திரிபறத் தெரிந்திருக்க வேண்டும்; தெரிந்து கொண்டவற்றைத் தெருக்கள்தோறும், திண்ணைகள்தோறும் கொண்டுசென்று விளக்கி உரைத்து, இன - மொழிப் பெருமையை மீட்டெடுக்க வேண்டும்; தமிழர்கள் மானமும் அறிவும் வளர்த்து மாமனிதர்களாக உயர்ந்திட வேண்டும்; என்ற பேரவாவுடன் எழுதப்பட்டவை அந்தக் கடிதங்கள்!

பேரறிஞர் அண்ணா அவர்களைப் போலவே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதும் முன்; அன்று தலையாயதான எந்தப் பிரச்சினையைப் பற்றி எழுத வேண்டும் என்பதைத் தீர்மானித்து, அந்தப் பிரச்சினையின் முழுப் பரிமாணங்களையும் அறிந்து, சிந்தித்து, சொல்ல வேண்டியவற்றை மன ஏட்டில் வரிசைப்படுத்தி; படிப்போர் வியக்கும்படி எழுதி முடிப்பதில், ஈடு இணை இல்லாதவர் என்பதை, ஒவ்வொரு கடிதத்திலும் நிரூபித்துக் காட்டி விடுவார்.

அதுமட்டுமல்ல; ஒரு கடிதத்தை எழுதியதற்குப் பிறகு, அவரே ஒரு முறை அதை நுட்பமாகப் படித்துப் பார்த்து விடுவார்; அத்துடன் விட்டு விடுவாரா? இல்லை; தமது செயலாளரைக் கூப்பிட்டுப் படிக்கச் சொல்வார்; ஏதாவது சந்தேகம் இருக்கிறதா என்று கேட்பார்; சந்தேகம் என்றால், அந்த இடத்தை எளிதில் புரிந்து கொள்ளும்படி மாற்றம் செய்வார்; அத்துடன் முடிந்ததா என்றால், இல்லை; கடிதம் அச்சியற்றப்பட்டு, "ப்ரூஃப்" வந்ததும், மீண்டும் ஒருமுறை அவரே படித்துப் பார்ப்பார் அல்லது தன்னுடைய செயலாளரை படிக்கச் சொல்லி ஊன்றிக் கேட்பார்; பின்னர் அன்றைய "முரசொலி" இதழ் முழுமையாகி வந்ததும், ஒரு முறை படிப்பார்; மாலையில் வெளியூர் - இதழ் கைக்குக் கிடைக்கும்போது, அண்ணன் ஆர்க்காட்டாரோ, அண்ணன் துரைமுருகனோ, முனைவர் பொன்முடியோ, அல்லது நானோ பக்கத்தில் இருந்தால், இதழைக் கொடுத்துப் படிக்கச் சொல்லிச் செவிமடுப்பார்.

மறுநாள், அறிவாலயத்திலோ, அல்லது இல்லத்திலோ, கழகத் தோழர்கள் யாரும் எதிர்ப்பட்டால், "கடிதம் படித்தாயா?" என்றுதான் முதலில் கேட்பார்.

இவை அனைத்தையும் அருகிருந்து நான் பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் அவருடைய முகத்தில் அலுப்போ, சலிப்போ தோன்றாது. படிக்கப் படிக்க உற்சாகம் கொள்வார். கடிதத்தில் எழுதி இருப்பதை அப்படியே நினைவில் செதுக்கி வைத்திருப்பார்; எத்தனை மாதங்கள் ஆனாலும் கடிதத்தில் எழுதிய கருத்தை அப்படியே திருப்பிச் சொல்வார்; நாங்கள் அவருடைய கருத்தை, நினைவாற்றல் பிசகு காரணமாக, மாற்றிச் சொல்ல நேரிடும்போது, திருத்துவார்.

அப்பப்பா; அப்படி ஒரு தலைவரை, இன்னொரு முறை வாழ்நாளில் காண முடியுமோ? "இங்கிவரை யாம் பெறவே என்ன தவம் செய்து விட்டோம்!".

கலைஞர் ஒரு பன்முகங்கொண்ட பேராளுமை. கடித இலக்கியம், அவரது ஒரு முகம், ஒப்பிலாத் திருமுகம்!

1968-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22-ஆம் நாள் முதல், 1977-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ஆம் நாள் வரையில்

கலைஞரின் கடிதங்கள், பத்துத் தொகுதிகளாக 1986-ஆம் ஆண்டில் வெளிவந்தன; அதைத் தொடர்ந்து, 11 மற்றும் 12-ஆவது தொகுதிகள், 1993-ஆம் ஆண்டில் வெளிவந்தன.

22.10.1968-இல் தலைவர் கலைஞர் எழுதிய முதல் கடிதத்திலிருந்து, 15.11.2016 அன்று எழுதிய கடைசிக் கடிதம்வரை அனைத்துக் கடிதங்களையும் வெளியிட முடிவுசெய்து; இப்போது, சீதை பதிப்பகத்தார் வெளியிடுகிறார்கள்.

கலைஞர் கடிதங்கள் ஏற்கனவே 12 தொகுதிகளாக வெளியிடப்பட்டபோது, "என்னுரை" என்ற பகுதியில், தலைவர் கலைஞர் அவர்கள் எழுதி அளித்த முன்னுரை, அப்போதும் இப்போதும் முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமல்லாமல்; வெளிவரவுள்ள "கலைஞரின் கடிதங்கள்" ... தொகுதிகள் அனைத்திற்கும் முன்னுரை - அறிமுக உரையாகக் கொள்ள வேண்டும்.

தலைவர் கலைஞரின் அந்த "என்னுரை"யில், "நண்பா" என விளித்துத் தொடங்கியும், "உடன்பிறப்பே" என விளித்துத் தொடங்கியும், இங்ஙனம் "மறவன்" என முடித்தும் "அன்புள்ள மு.க.'' என முடித்தும், "மறவன் மடல்" வார இதழிலும், "நம் நாடு" வார இதழிலும் மற்றும் பெரும்பாலும், நாள்தோறும் அல்லது வாரத்தில் நாலைந்து முறை "முரசொலி' நாளிதழிலும் நான் எழுதிய கட்டுரைகளின் வடிவமே "கலைஞர் கடிதம்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டது, இப்போது வெளிவரும் "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கும் மெத்தப் பொருந்தும்.

மேலும் அந்த "என்னுரை"யில்: "என் கடிதங்கள் காலை ஏழு மணிக்குப் பிறப்பெடுக்கும்; ஒவ்வொரு நாளும்! பொதுவாழ்வில் இதுவரை; பாசறை - போர்க்களம் - பதவிப் பொறுப்பு - பணியாற்றும் வாய்ப்பு - இப்படி மாறி மாறி வரினும் சந்தித்த; இன்னமும் சந்தித்துக் கொண்டிருக்கிற சோதனைகள் எண்ணிலடங்கா!"

"குமுறல் - கொந்தளிப்பு - கவலை - கலக்கம் - ஏமாற்றம் - துரோகம் - இப்படி எத்தனையோ ஈட்டிகள் என் இதயத்தில் பாய்ந்து ரணமாக்கியுள்ளன". அந்த ரணம் ஆற்றிடும் மருந்தாகத்தான் எனது எழுத்துகள் எனக்குப் பயன்பட்டிருக்கின்றன!"

"எனது கடிதத் தொகுப்புகளில் பல செய்திகள், நிகழ்ச்சிகள், மதிப்புமிக்க தலைவர்கள், அன்புக்குரிய நண்பர்கள் விமர்சிக்கப்பட்டிருக்கலாம். அது; அந்தக் காலகட்டத்து அரசியல் தட்பவெப்பத்தைக் காட்டுவதாகவே எடுத்துக்கொள்ள வேண்டுமெனப் பணிவன்புடன் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் விளக்கிச் சொன்னதை, இந்தத் தொகுதிகளைப் படிக்கும்போது, கவனமாகக் கருத்தில் இருத்திக் கொள்ள வேண்டுமென்று விரும்பி வேண்டுகிறேன்.

தலைவர் கலைஞர், 22.10.1968 - அன்று, "அன்பு நண்பா !" என விளித்து, "ஜாக்குலின்கள்" என்று தலைப்பிட்டு எழுதிய முதல் கடிதம், அவர் எவ்வளவு

அதிசயிக்கத்தக்க நுட்பமான ஆற்றலாளர் என்பதை எடுத்துக் காட்டும்.

அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் மனைவி ஜாக்குலின், தனது கணவர் கல் நெஞ்சன் ஒருவனின் துப்பாக்கிக்கு இரையானதற்குப் பின்னர், அய்ந்தாண்டுகள் பொறுத்திருந்து, தனது 39 வயதில், ஒனாசிஸ் என்ற 68 வயது கோடீஸ்வரனை, மறுமணம் செய்துகொண்டார்; இந்தத் திருமணத்தை அமெரிக்க நாட்டிலேயே பெரும்பாலானோர் விரும்பவில்லை; என்பது செய்தி.

இந்தச் செய்தியை கழகத் தோழர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என எண்ணிய தலைவர் கலைஞர், அந்தச் செய்தியை; கழகத்திலே இருந்த சிலர் - பாசத்தோடு பழகிய நண்பர்கள், சென்னை மாநகராட்சித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளர்களாக மாறிய நிகழ்வோடு ஒப்பிட்டு எழுதியிருக்கிறார்.

அங்கே, சொந்த நாட்டிலே பாராட்டப்படாத மறுமணம்; இங்கே பதவி வெறியைத் தணித்துக் கொள்ள, கழகத்தையே எதிர்த்து சுயேட்சைகளாகப் போட்டியிட்ட கழகத் தோழர்கள்.

எந்தச் செய்தியையும் மேலோட்டமாகப் பார்த்து, கடந்து செல்பவரல்ல கலைஞர். அந்தச் செய்தியை, கழகத்தை நிலைநிறுத்தவும், கழகத் தோழர்களுக்கு உணர்ச்சி ஊட்டவும், எப்படிப் பயன்படுத்தலாம் என்று நினைத்துக் காத்திருந்தவர் கலைஞர்.

15.11.2016 - அன்று தலைவர் கலைஞர், “மத்திய அரசின் அறிவிப்பும், சாதாரண மக்களின் அவதியும்” என்ற தலைப்பில் "முரசொலி”க்கு எழுதிய கடைசிக் கடிதம்; பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் பண மதிப்பிழப்பு அறிவிப்பைப் பற்றியது. ’

அந்தக் கடிதத்தில், ஏடுகளில் வெளியான செய்திகளை எடுத்துக்காட்டி, பணமதிப்பிழப்பு நடவடிக்கையினால் நாட்டிலே ஏற்பட்ட விளைவுகளை விளக்கியிருக்கிறார்.

குபேரர்களைப் பற்றியோ, கோடி கோடியாய்ப் பணம் குவித்திருக்கும் செல்வந்தர்களைப் பற்றியோ, மேட்டுக்குடிகளைப் பற்றியோ எப்போதும் கவலைப்படாதவர் கலைஞர்.

நடுத்தர மக்கள், அடித்தள மக்கள், உழைத்து வாழும் பிரிவினர், அன்றாடங்காய்ச்சிகள் - ஆகியோரைப் பற்றியே சதாசர்வ நேரமும் நினைந்து நினைந்து கசிபவர் கலைஞர் என்பதை; பண மதிப்பிழப்பு நடவடிக்கையினால் அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை, அந்தக் கடைசிக் கடிதத்தில் பட்டியல் இட்டிருக்கிறார்.

அந்தப் பிரிவினர்தானே கழகத்தின் வேர்கள்! மண்ணுக்குள் மறைந்திருந்து மரத்தைத் தாங்கும் வேர்களைப் போல, கண்ணுக்கெட்டிய தூரம்வரை கழகத்தைக் காத்து நிற்பவர்கள் அவர்கள் அல்லவோ! அதனால்தான் தலைவர் கலைஞர் அவர்களுக்கு, கடைசிவரை, அவர்கள் மீது அவ்வளவு அக்கறை, ஆழ்ந்த பிடிப்பு!

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் கடிதத்திற்குத் தலைப்பு சூட்டும்போது; சிற்பி செதுக்கியானதும் சிற்பத்திற்குக் கண் திறப்பு செய்வதைப் போல, ஒளி பொருந்திய - கருத்தாழம் மிகுந்த - நினைவில் நீடித்து நிற்கக்கூடிய, தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து அலங்கரிப்பார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள்:

"காகிதக் கப்பலில் கவனம் செலுத்தாதே தம்பி"
"மகுடி ஊதும் மகானுபாவர்கள்”
“கிளிக்குப் பச்சை பூசுவதா?”
"கண்ணீரும் பன்னீரும்”

“படமும் பாடமும்”
“மூலவர் மூவர் முரசொலி”

போன்ற எண்ணற்ற தலைப்புகளை கடிதங்களுக்குச் சூட்டியிருக்கிறார். –

ஒவ்வொரு அங்குலமும் அண்ணாவின் அடியொற்றி வளர்ந்த கலைஞர்

அவர்கள்:

"நேர்மையும் பொறுப்பும், நீர்மேல் எழுத்தல்ல!"
"எருக்கம் பூவில், இனிய மணம் தேடுவதோ?"
"கண்ணுக்கு விருந்தானாய் – மனப் புண்ணுக்கு மருந்தானாய்!"
"அன்று எத்தனை பிரிவு? இன்று எத்துணைப் பரிவு?”
"இடர் எது வரினும், ஏற்பேன்"
"பறித்து வராத பாரிஜாதம்"

போன்ற நினைவில் நங்கூரம் போட்டு நிற்கும் தலைப்புகளையே சூட்டியிருக்கிறார்.

கலைஞரின் கடிதங்கள், காலத்தின் கண்ணாடி! கலைஞரின் கடிதங்கள், கற்கண்டுச் சொற்கோவை! கலைஞரின் கடிதங்கள், கருத்துச் சுரங்கம்! கலைஞரின் கடிதங்கள், வானவில்லைப் போல, வண்ணங்கள் நிறைந்த எண்ணங்களின் பசுஞ்சோலை! கலைஞரின் கடிதங்கள், கடலின் ஆழத்தைக் காட்டும், மலையின் உயரத்தை உரசும்! கலைஞரின் கடிதங்கள், நினைத்தாலே இனிக்கும், நெஞ்சமெல்லாம் மணக்கும்!

கலைஞரின் ஒவ்வொரு கடிதத்தையும் ஊன்றிப் படித்து, ஒப்பிலாப் பயன் பெறுக! “யாம் பெற்ற இன்பம், பெறுக தமிழ் வையகம்!”

அன்புடன்,

(மு.க. ஸ்டாலின்)
14.09.2021

பதிப்புரை

அரசியல் இலக்கியமான கலைஞரின் கடிதங்கள்

திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆறாவது முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர்த்தி, அதனை உங்களுக்குக் காணிக்கையாக்குவேன் என வங்கக் கடலோரம் பேரறிஞர் அண்ணா துயிலுமிடத்தை ஒட்டி, ஓய்வெடுக்கும் முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடத்தில் சூளுரைத்தவர் கழகத் தலைவர் தளபதி அவர்கள். தேர்தல் களத்தில் மகத்தான வெற்றி பெற்று, அந்த வெற்றியைக் கலைஞரின் ஓய்விடத்தில் காணிக்கையாக்கி, தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவர் மாண்புமிகு **முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்** அவர்கள்.

சொன்னதைச் செய்வோம் என்று சூளுரைத்து நிறைவேற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர். சொல்லாமலே செய்து முடிப்பவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தலைவர் கலைஞரின் விருப்பப்படி, கடற்கரையில் இடம் ஒதுக்கப்படுமா என அவர் மறைந்தபோது தமிழ்நாட்டில் மட்டுமின்றி, உலகெங்கும் வாழும் தமிழர்களிடம் பதற்றம் கலந்த எதிர்பார்ப்பு மிகுந்திருந்தது. அப்போதைய ஆட்சியாளர்கள் காழ்ப்புணர்வுடன் மறுத்த நிலையில், நீதிமன்றத்தை நாடி, விடிய விடிய சட்டப் போராட்டம் நடத்தி, கடற்கரையில் தலைவர் கலைஞருக்கான இடத்தை உறுதி செய்து, உலகத் தமிழர்களின் நெஞ்சில் உயர்ந்து நின்றவர் நம் முதல்வர்.

தந்தைக்குத் தனயனாக, தலைவருக்குத் தொண்டனாக, இயக்கத்தின் தலைமையாக எல்லா நிலையிலும் தலைவர் கலைஞரின் பேராற்றலை மக்கள் நெஞ்சங்களில் நிலைத்திருக்கச் செய்யும் பெரும்பணியை முதல்வர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார். அத்தகைய பெரும்பணிகளில் ஒன்றைச் சீதை பதிப்பகத்திடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்தார். அதுதான், கலைஞர் கடிதங்கள் எனும் இந்த மாபெரும் தொகுப்பு. **4051 கடிதங்களைக் கொண்ட 54 பாகங்களாக** வெளியாகியுள்ள இந்தத் தொகுப்பிற்கு அணிந்துரையை மாண்புமிகு முதல்வர் அவர்களே வழங்கியிருப்பது, சீதை பதிப்பகத்தின் மீது அவர் வைத்திருக்கும் நம்பிக்கையின்

வெளிப்பாடு. அணிந்துரை என்ற சொல்லுக்குப் பதில் பணிந்துரை என அவர் பயன்படுத்தியிருப்பது தனது தந்தையும் தலைவருமான முத்தமிழறிஞர் கலைஞர் மீது எப்போதும் அவர் வைத்திருக்கும் பெருமதிப்பின் அடையாளம். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'கலைஞரின் கவிதை மழை'யை வெளியிடும் முதல் வாய்ப்பைப் பெற்றுத் தந்த எங்கள் வழிகாட்டியான மூத்த பத்திரிகையாளர் **அய்யா சின்னகுத்தூசி**யை நினைவில் கொள்கிறோம். தலைவர் கலைஞர் அவர்களே அப்போது அதனை மெய்ப்புப் பார்த்து, முழு வடிவம் பெறச் செய்தார். ஒன்றிய அமைச்சர்கள், தோழமைக் கட்சித் தலைவர்கள், தமிழின் மிகப் பெரும் கவிஞர்கள், கழக நிர்வாகிகள் முன்னிலையில் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் கவிதை மழை வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

அதுபோலவே, முத்தமிழறிஞர் கலைஞரின் சிறுகதை இலக்கியத்தை சிறுகதைப் பூங்கா எனும் தலைப்பில் சீதை பதிப்பகம் வெளியிட்ட போதும், மிகச் சிறப்பான விழா நடத்தப்பட்டு, அருமையான உரையை வழங்கினார் தலைவர் கலைஞர் அவர்கள். கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் அவர் ஆற்றிய உரைகளை 'கல்வி நிலையங்களில் கலைஞர்' எனக் கடலூர் இள. புகழேந்தி அவர்கள் தொகுத்திட, அதனைச் சிறப்பான முறையில் வெளியிட்டது சீதை பதிப்பகம்.

இன்றைய தகவல்-தொழில்நுட்பமும் சமூக வலைத்தளங்களும் இல்லாத காலத்தில், ஒவ்வொரு நாளும் தனது இயக்கத் தொண்டர்களுடன் உரையாடுவதற்கான ஊடகமாக உடன்பிறப்புக் கடிதங்களைத் தலைவர் கலைஞர் மிகச் சிறப்பாகக் கையாண்டார். அந்தக் கடிதங்களை முழுமையான தொகுப்பாகக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் அவரிடம் இருந்தது. அந்த எண்ணத்தை முதல்வர் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்.

கடிதங்களின் முழுத் தொகுப்பு உருவாக்கப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் தலைவர் கலைஞரின் நிழலாக, அவரது மனதின் குரலை அறிந்தவராக விளங்கிய உதவியாளர் **அய்யா கோ.சண்முகநாதன்** M.com BGL அவர்கள். கலைஞர் அந்தக் கடிதங்கள் பலவற்றையும் எழுதியபோதே

அருகிலிருந்து கவனித்தவர் என்பதாலும், அப்போதே மெய்ப்புப் பார்த்து அச்சுக்கு அனுப்பியவர் என்பதாலும், ஒவ்வொரு கடிதத்தின் காலகட்டத்தையும் அறிந்து முறையாகத் தொகுத்தளித்தார். தனது இறப்பிற்கு முன்பாக, கடிதத் தொகுப்புப் பணியை முழுமையாக நிறைவேற்றிவிட்டே நம்மிடமிருந்து பிரியாவிடை பெற்றிருக்கிறார் அய்யா சண்முகநாதன். எப்போதும் எங்கள் மீது அளப்பரிய அன்பைப் பொழிந்த அய்யாவை சீதை பதிப்பகம் எந்நாளும் நினைவில் கொண்டிருக்கும்.

மறவன் என்ற பெயரில் முதலில் கடிதங்களை எழுதிய தலைவர் அவர்கள் பின்னர் மு.கருணாநிதி, மு.க. என உடன்பிறப்புகளுக்குக் கடிதங்கள் எழுதியுள்ளார். பின்னர் மீண்டும் மு.கருணாநிதி என்ற பெயரிலேயே கடிதங்களைத் தொடர்ந்து எழுதியுள்ளார். தலைவர் கலைஞர் அவர்களின் கடிதங்களைக் காலவரிசைப்படுத்தி, தொகுப்பில் விடுபட்ட கடிதங்களையும் தேடி இணைப்பதில் முனைவர் **திரு கி. இராஜமாணிக்கம்** ஐ.ஏ.எஸ்.(ஓய்வு) அவர்களின் பணி அளப்பரியது. தலைவர் கலைஞரின் அருகிலிருந்து ஆட்சிப்பணியையும் இயக்கப் பணியையும் கவனித்த அவர், இந்தத் தொகுப்பு மிகச் சிறப்பான முறையில் வெளியாவதற்குத் துணை நின்றவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படைப்புகளை வெளியிடும் ஒவ்வொரு வாய்ப்பும் சீதை பதிப்பகத்திற்குப் பெருமை தரக்கூடியதாகும்.

சீதை பதிப்பகத்தின் வெளியீடுகளைத் தலைவர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து வழங்கும் போது ஏற்பட்ட மகிழ்ச்சிக்கும் உணர்ச்சிக்கும் அளவில்லை. அதன் தொடர்ச்சியாக, கழகத் தொண்டர்களுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் அரசியல் இலக்கியமான முரசொலி உடன்பிறப்புக் கடிதங்கள் முழுத் தொகுப்பு எனும் இமாலயப் பணியை நிறைவேற்றியிருப்பதை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குச் சீதை பதிப்பகத்தின் புகழ்வணக்கமாகக் கருதுகிறோம்.

இந்தப் பணியை எங்களிடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

பதிப்பகத்தார்

உள்ளே...

தலைப்பு	ஆண்டு	பக்கம்
2620. கண்துடைப்பென்று கம்யூனிஸ்டுகளுக்கு தெரியாதா ?	01-08-2001	23
2621. செல்லும் வழியெல்லாம் சென்னைக்கே!	09-08-2001	33
2622. திட்டக்குழுவில் தி.மு.க. ஆட்சிக்குப் பாராட்டு!	10-08-2001	39
2623. அமைதியின் உருவமாய் ஆர்த்தெழும் சிங்கமாய் வா!	11-08-2001	45
2624. ஆயுதமேந்தி வருவர்; அறிவாயுதம் அதன் பேர்!	12-08-2001	49
2625. பாசிச ஆட்சியின் கீழ் தத்தளிக்கும் தமிழகம்!	15-08-2001	53
2626. உள்ளம் இருப்பதற்கு பதில் ஒரு பள்ளம் இருந்தால்!	16-08-2001	58
2627. கண்களுக்குத் திரையும், கைகளுக்குப் பூட்டும்!	17-08-2001	62
2628. தெரிவித்தவையும்; முன்பே அறிவித்தவையும்!	20-08-2001	67
2629. சாதனைகளை தேடினால் வேதனைகளே மிஞ்சும்!	22-08-2001	75
2630. திருந்தவே முடியாதவர்க்கான தேவையற்ற வேலை!	23-08-2001	80

2631. அரசு எவ்வழி; அதிகாரிகள் அவ்வழி!	24-08-2001	87
2632. சிந்தனைக்குரிய சிலப்பதிகாரம், இராமாயணம்!	28-08-2001	93
2633. இங்குள்ள தமிழர் ஒன்றாதல் காண்போம்!	29-08-2001	99
2634. கட்டளையிடவில்லை; கனிவுடன் அழைக்கிறேன்!	04-10-2001	105
2635. படைதிரளட்டும்: பாசறை பலமாகட்டும்!	29-11-2001	110
2636. கண்ணதாசன் பாடியது காதில் ஒலிக்கிறது!	30-11-2001	113
2637. இந்த நேரம் - இந்தச் சந்தேகம் தேவைதானா?	2-12-2001	118
2638. டிசம்பர் 7 முழு அடைப்பு, வேலை நிறுத்தம்!	6-12-2001	121
2639. விரிவாக விளக்கிட சுருக்கமான செய்திகள்!	9-12-2001	125
2640. அறிவுரைகள் அனுபவ உரையாகட்டும்!	10-12-2001	128
2641. ஏணி ஏற முடியாதவரைக் கேணியில் தள்ளுவதா?	11-12-2001	131
2642. மகிழ்ச்சிக்குரிய மறக்க முடியாத நிகழ்ச்சி!	13-12-2001	135
2643. ஊரார் இருவர் உரையாடல்!	16-12-2001	139
2644. வலிமை சேர்ப்போம் வாரீர்!	17-12-2001	141
2645. தமிழர் அணி தயாராகட்டும் !	19-12-2001	143

2646. இன்றைய நிலையில்; அன்றைய நினைவு!	25-12-2001	146
2647. தனியே அவர்க்கோர் குணம் என்பது இதுதானோ?	26-12-2001	154
2648. காளி சோதிடரும்; காழி சோதிடர்களும்!	27-12-2001	158
2649. உள்ளம் பதறுகிறது!	29-12-2001	163
2650. தாசர் புத்தி தலைக்கேறலாகுமா?	30-12-2001	166
2651. ‘‘குற்றம் பார்க்கின் சுற்றமில்லை!	31-12-2001	170
2652. நாம் இளிச்சவாயர்களாகவே இருந்தால்!	2-1-2002	175
2653. கற்பரசி கண்ணகியின் புகழ் பாடி வா!	3-1-2002	179
2654. வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்!	4-1-2002	182
2655. எங்குற்றான் என் தமிழன்?	5-1-2002	198
2656. குப்பனின் குமுறல்!	8-1-2002	201
2657. இன முழக்கம் செய்திடுவோம்; இழிவுகளை அகற்றிடுவோம்!	9-1-2002	204
2658. களம் சென்றவனை நினைத்து கடலுக்குள் சென்றாள்!	12-1-2002	207
2659. பொங்கல் வாழ்த்து!	13-1-2002	214
2660.வீரத்திருமகன்தான்; வெற்றித் திருமகன்!	14-1-2002	217
2661.சமுத்திரக் கரையிலிருந்து சங்கீத சபாவுக்கு!	17-1-2002	221

2662. இடைத்தேர்தல் மூன்று அதில் இவர்கள் இஷ்டப்படி ஒன்று!	18-1-2002	226
2663. இறந்தும் வாழ்தலே இறவா சொர்க்கம்	19-1-2002	230
2664. மூச்சிருக்கும் வரையில் முத்தமிழுக்குத் தொண்டு செய்வோம்!	20-1-2002	233
2665. விழுப்புண் படாத நாளெல்லாம் வீணான நாள் என்பான் வீரன்!	22-1-2002	241
2666. எனக்கும் உனக்கும் எதற்காக அயர்வு?	23-1-2002	248
2667. நல்லவேளை! நறுக்கென்று பதில் கிடைத்தது!	24-1-2002	252
2668. நான் கண்ட மூலிகை நஞ்சுதனை முறிக்கும்!	25-1-2002	256
2669. சேர்ந்து கரம் குவித்து, சிரம் தாழ்த்துகிறேன்!	26-1-2002	260
2670. யோசித்துப் பார்த்தால் உண்மை புலப்படும்!	28-1-2002	269
2671. பிறர் சூழ்ச்சி கழகத்தை அழிப்பதுண்டோ?	29-1-2002	273
2672. இந்த நாரதர் கலகமும் நன்மையில் முடிந்திட!	30-1-2002	278
2673. அறவழியே நிலைத்திட ஆவன செய்வோம்!	2-2-2002	282
2674. "தீவிரவாதப் பரிவு" எனத் திரிப்பதோ கயிறு?(1)	3-2-2002	286
2675. "தீவிரவாதப் பரிவு" எனத் திரிப்பதோ கயிறு?(2)	4-2-2002	291

2676. இதுதான் மங்களகர மகிழ்ச்சிகர ஆட்சியா?	5-2-2002	297
2677. 16வது இடமாவது பாடம் புகட்டுமா?	6-2-2002	301
2678. ஆட்சியை மாற்றுவதற்கல்ல; திருத்துவதற்கு!	7-2-2002	306
2679. வந்திடவுமில்லை; என்னை வென்றிடவுமில்லை!	8-2-2002	310
2680. மன வேதனையை இந்த மடல் மூலம் அறிக!	9-2-2002	314
2681. ஏறுது ஏறுது விலைவாசி! ஏமாறாமல் நீ யோசி!	10-2-2002	317
2682. அண்ணல் வகுத்த வழி அயராதுழைத்த சிங்கம்!	11-2-2002	321
2683. பழைய பல்லவி; மீண்டும் பாடுகிறார்கள்!	12-2-2002	328
2684. உடன்பிறப்புகளின் மனக்கிளைகளே என் தங்குமிடம்!	14-2-2002	332
2685. ஓய்வு உறக்கத்தை ஓரங்கட்டிவிட்டு உழைத்திடுக!	19-2-2002	336
2686. தமிழர் நெஞ்சிலிருந்து என்னை அகற்ற தலைகீழாக நின்றாலும் முடியாது!	20-2-2002	341
2687. பணிமுடிக்கும் வரையில் பாதை மறவாமல் பாடுபடு!	21-2-2002	346
2688. காது கொடுத்துக் கேள்; கற்பனை உரையாடல்!	22-2-2002	348
2689. அரசியல் கிறுக்கருக்கு அய்யன் வள்ளுவரின் அறிவுரை!	24-2-2002	352

2690. நிருபர் கொலையுடன் முடியுமா தீவிரவாதக் கதை?	24-2-2002	357
2691. எதிர்பார்த்ததும் - எதிர்பாராததும்!	27-2-2002	360
2692. முரண்பாடுகளுக்குத்தானே இது காலம்!	28-2-2002	364
2693. தொய்வும், தொங்கலும் இல்லாத தொடர் பயணம்!	1-3-2002	367
2694. இப்போது எங்கே போனது அந்த அறிவுரை?	02-03-2002	373
2695. இலாவணிப் பாட்டும், தாவணிக் கனவும்!	3-3-2002	377
2696. இடுக்கில் நுழையும் அரசியல்!	5-3-2002	381
2697. அவைத்தலைவர் காளிமுத்துக்கு ஓர் அன்பு மடல்!	7-3-2002	384
2698. இங்கே, சந்தர்ப்பவாதம் எங்கே வந்தது?	8-3-2002	389
2699. பதற்றம் நிறைந்த பத்து மாதப் பட்டியல்!	9-3-2002	393

2620. கண்துடைப்பென்று கம்யூனிஸ்டுகளுக்கு தெரியாதா ?

உடன்பிறப்பே,

ஜெயலலிதா தனக்குப் பிடிக்காத எதிர்க்கட்சியினரை மட்டுமின்றி, தனக்குப் பிடிக்காத அரசு அதிகாரிகளை பழி வாங்குவதும் கடந்த கால ஆட்சியிலும், இப்போதைய ஆட்சியிலும் தொடர்ந்து கடைப்பிடித்து வரும் நடைமுறை என்பது நாட்டு மக்களுக்கும் அரசு அதிகாரிகளுக்கும் நன்றாகவே தெரியும். ஆனால் முக்கியமாகத் தொழிலாளர்களுக்காகவும், அரசு அலுவலர்களுக்காகவும் வாதாடுகிற வலிமை கொண்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும் இன்றுள்ள அ.தி.மு.க. ஆட்சி தொழிலாளர்களுக்கு எதிராகவும், அரசு அலுவலர்களுக்கு எதிராகவும் குரல் கொடுக்கும் போது கூட அதை அலட்சியப்படுத்தி விட்டு, அரசையும் முதல்வரையும் தாங்கிப் பிடிக்கிறது என்பதை கவனிக்கும்போது இயற்கையில் கம்யூனிஸ்ட் இயக்கக் கொள்கையிலே நாட்டம் கொண்டவர்கள் விக்கித்துப் போகிறார்கள்.

இடதுசாரி இயக்கங்கள் ஆளுங்கட்சியின் தோழமைக் கட்சியாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் எந்தக் காலத்திலும் தொழிலாளர்களுக்காகவும், விவசாயிகளுக்காகவும், அரசு அலுவலர்களுக்காகவும் குரல் கொடுக்கத் தவறுவதில்லை. அரசின் நடவடிக்கைகளைக் கண்டிக்க வேண்டிய நேரத்தில் கண்டிக்காமல் இருக்க மாட்டார்கள். ஆனால் அண்மைக்காலத்தில் அந்தக் கட்சிகளின் நடைமுறை எந்த அளவிற்கு மாறுபட்டுள்ளது?

கடந்த 24ந்தேதி திருவல்லிக்கேணியில் ஜெயலலிதா தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கக்கட்டிடத் திறப்பு விழாவிலே கலந்து கொண்டு புதிய கட்டிடத்தைத் திறந்து வைத்திருக்கிறார். அங்கே பேசும்போது அரசு அலுவலர்களின் நலன் தனது ஆட்சியிலே காக்கப்படுமென்று கூறவில்லை. அல்லது வேறு ஏதாவது

சலுகைகள் புதிய அரசினால் வழங்கப்படுமென்றும் கூறவில்லை. மாறாக என்ன கூறுகிறார் தெரியுமா?

> *** "அரசுக்குக் கிடைக்கின்ற மொத்த வரி வருவாயில் 70 சதவிகிதம் ஊதியத்திற்கும், 24 சதவிகிதம் பென்ஷனுக்கும் செலவிடப்படுகிறது. மொத்தம் 94 சதவிகிதம் அரசு அலுவலர்களுக்கே போய் விடுகிறது. வெறும் 6 சதவிகிதம்தான் வளர்ச்சித் திட்டங்களுக்கு மிஞ்சுகிறது".**

என்று கூறியதோடு மட்டுமல்லாமல், அரசு அலுவலர்களுக்கு ஏராளமான சலுகைகள் வழங்கப்படுகின்றன என்றும், அவர்கள் கொடுத்து வைத்தவர்கள் என்றும் பேசியிருக்கிறார்.

ஜெயலலிதாவை அழைத்து விழா நடத்தியவர்கள் கம்யூனிஸ்ட் இயக்க ஆதரவாளர்கள்தான். அவர்களால் மெல்லவும் முடியவில்லை, விழுங்கவும் முடியவில்லை. ஆனால் வேறு வழி இல்லாமல் அந்த இயக்கத் தலைவர்களால் ஜெயலலிதாவின் பேச்சுக்கு மறுப்பு தெரிவிக்க இயலவில்லை. மௌனமே கேடயமாயிற்று.

இந்நேரம் வேறொரு கட்சி அல்லது தி.மு.கழகமே ஆளுங்கட்சியாக இருந்திருந்தால் திரு.சங்கரய்யா என்ன செய்திருப்பார்? அரசு அலுவலர்களுக்காக தரப்படுகின்ற ஊதியத்தை இந்த அளவிற்கு விமர்சிப்பதா? அரசு அலுவலர்களுக்காக தண்டமாகவா அரசு ஊதியத்தை வழங்குகின்றது, சலுகைகளையெல்லாம் அளிக்கின்றது? அரசு அலுவலர்கள் உழைத்து விட்டுத்தானே இந்த ஊதியத்தைப் பெறுகிறார்கள்? என்றெல்லாம் கடுமையாக கேள்வி கேட்டிருப்பார்! சி.பி.ஐ. கட்சித் தலைவர் திரு.நல்லகண்ணு அவர்கள் அதைவிட கடுமையாக அறிக்கை விட்டிருப்பார். ஆனால் யாரும் அரசு அலுவலர்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுக்க வில்லை. ஜெயலலிதா பேச்சுக்குக் கண்டனமும் தெரிவிக்க வில்லை.

அதைப்பற்றி செய்தியாளர்கள் என்னைக் கேட்ட போது, "அரசு அலுவலர்களுக்கு தரப்படுகின்ற ஊதியம் இனாமாகத் தரப்படுவதல்ல; அதுவும் திட்டச் செலவுகளிலே ஒன்றுதான். திட்டங்களுக்காகப் பணம் செலவிடப்படும்போது, அந்தத் திட்டத்தை நிறைவேற்றும் அலுவலர்களுக்குத் தரப்படும்

ஊதியத் தொகையும் சேர்த்துத்தான் திட்டச் செலவு. இதனை நான் இப்போது கூறவில்லை, பல முறை சொன்ன கருத்துத்தான்" என்று பதிலளித்தேன். அ.தி.மு.க. வின் தோழமைக் கட்சிகளாக இருக்கின்ற காரணம் ஒன்றினாலேயே இதுவரை அரசு அலுவலர்களுக்காகக் குரல் கொடுத்து வந்த கம்யூனிஸ்ட் கட்சிகள் இதைப் பற்றி வாய் திறக்க முடியாமல் போய் விட்டது.

மத்திய அரசு தமிழகத்திலே பணியாற்றும் மூன்று போலீஸ் அதிகாரிகளை டெல்லிக்கு மாற்றியிருக்கின்றது. அதற்குக் கண்டனம் தெரிவித்து இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளும் "பா.ஜ.க.வின் பங்காளியான, தி.மு.க.வை திருப்திப்படுத்தவே இந்தக் காரியத்தை மத்திய அரசு செய்திருப்பதாக" அறிக்கையிலே தெரிவித்திருக்கின்றன. இது உண்மையானால் ஆளுங்கட்சியான அ.தி.மு.க.வின் பங்காளியாக நின்று தான் ஆட்சியின் ஜனநாயக விரோதச் செயல்களுக்கெல்லாம் அந்தக் கட்சிகள் ஆதரவு தெரிவித்து அறிக்கைகளை விடுகிறார்களா?

தமிழக அரசின்கீழ் பணியாற்றும் மூன்று அதிகாரிகளை மத்திய அரசின்கீழ் பணியாற்ற அழைத்தது குற்றம் என்கிறார்கள். ஜெயலலிதா ஆட்சியிலே இருந்த போது அவருக்குப் பாதுகாப்பு அதிகாரியாக பணியாற்றிய திரு. விஜயகுமார் என்ற காவல் துறை அதிகாரி மத்திய அரசுக்குச் செல்ல விரும்பிய போது, மத்திய அரசுகூட அதற்காக மாநில அரசுக்கு வேண்டுகோள் வைக்காத நிலையிலேகூட உடனடியாக மத்திய அரசுக்கு அந்த அதிகாரியை அனுப்பிவைத்ததுதான் தி.மு.கழக அரசு. "ஆகா, ஜெயலலிதாவின் பாதுகாவல் அதிகாரியையா மத்திய அரசுக்கு அழைக்கிறீர்கள், முடியாது. அவர் அ.தி.மு.க. ஆட்சியிலே முதல்வருக்கு நம்பிக்கைக்கு உரியவராகப் பணியாற்றியவர். எனவே அவரை முன்னாள் டி.ஜி.பி. திரு.ராஜகோபாலன் அவர்களை ஜெயலலிதா அரசு சாதாரண பதவியிலே அமர்த்தியிருப்பதைப் போல அமர்த்துவோம். டெல்லிக்கு அனுப்ப முடியாது" என்றெல்லாம் சிறுபிள்ளைத்தனமாக நடந்து கொள்ளவில்லை கழக அரசு.

இப்போதுகூட அதே விஜயகுமார் அவர்களையும், ஐ.ஏ.எஸ். மூத்த அதிகாரியான சங்கர் அவர்களையும் ஜெயலலிதா ஆட்சிப் பொறுப்பேற்றதும் அவர்கள் மத்தியிலே பணியாற்றிய நிலையிலே மாநிலத்திற்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டதுதான் தாமதம், உடனடியாக மத்திய அரசு அவர்களை மாநிலத்திற்கு அனுப்பி

வைத்தது. முடியாது; அ.தி.மு.க. எங்களுடைய பங்காளி கட்சி இல்லை; எனவே அனுப்ப முடியாதென்று அற்பத்தனமாக நடந்து கொள்ளவில்லை. இதுவும் கம்யூனிஸ்ட் கட்சிகள் அறிந்ததுதான்.

அதுமாத்திரமல்ல; நான் முதலில் சுட்டிக்காட்டி யுள்ளதைப்போல ஜெயலலிதா 1991-1996 ஆண்டுக் காலத்தில் பொறுப்பிலே இருந்த போது அவரது நம்பிக்கைக்குரியவராக சென்னை மாநகர காவல் துறை கமிஷனராக இருந்தவர்தான் ஆர். ராஜ கோபாலன் என்ற ஐ.பி.எஸ். அதிகாரி, பிறகு தி.மு.கழக ஆட்சியிலே, அவர் ஜெயலலிதாவின் நம்பிக்கைக்கு உரிய அதிகாரி ஆயிற்றே என எண்ணிடாமல், அவரைத்தான் டி.ஜி.பி.யாக ஆக்கினோம். ஆனால் அவர் தி.மு.க. ஆட்சியிலே டி.ஜி.பி.யாய் ஆக்கப்பட்டார் என்பதற்காகவே ஜெயலலிதா பொறுப்பேற்ற ஒரு மாத காலத்திற்குள்ளாகவே அந்தப் பதவியிலிருந்து மாற்றி அவரை பயிற்சிக் கல்லூரி இயக்குநராக ஆக்கி விட்டார்.

பதவியிலிருந்து ஜெயலலிதா இறக்கிய போதும், இவரின் தகுதியை மத்திய அரசு அறிந்து, நல்லதொரு பொறுப்பிலே நியமித்திருக்கும் போது, அதனை இந்து' போன்ற பத்திரிகைகள் எல்லாம் பாராட்டும்போது, இந்தப் பொறுப்பிற்கு இன்று வரை அவரை அனுப்ப ஜெயலலிதா ஒப்புக் கொள்ளவில்லை. கம்யூனிஸ்ட் கட்சிகள் ஏன் குரல் கொடுக்கவில்லை? அவரும் ஒரு அதிகாரிதானே? ஜெயலலிதாவிற்கு வேண்டிய மூன்று அதிகாரிகளை மத்திய அரசுக்கு அனுப்ப மறுக் கின்ற ஜெயலலிதாவின் செயலை ஆதரிக்கும் இவர்கள், திரு.ராஜகோபாலனை ஜெயலலிதா அனுப்ப மறுத்துள்ளதைப் பற்றி மட்டும் ஏன் பேச மறுக்கிறார்கள்?

தற்போது மத்திய அரசிலே திரு.ராஜகோபாலனுக்கு நல்லதொரு பதவி கிடைத்திருப்பதைப்போலவே, தி.மு.கழக ஆட்சியில் D G.P. அந்தஸ்தில் பணியாற்றிக் கொண்டிருந்த திரு.ராகவன் அவர்களுக்கு டெல்லியில் சி.பி.ஐ. டைரக்டர் பதவி கிடைத்தது. அவர் ஜெயலலிதாவிற்கு மிகவும் வேண்டியவர் என்றெல்லாம் ஏடுகள் எழுதின. இருந்தாலும் கழக அரசு பெருந்தன்மையோடு அந்தப் பதவி பொறுப்பேற்க அனுமதித்தது.

அது மாத்திரமல்ல; அலெக்ஸாண்டர் என்ற மூத்த ஐ.பி.எஸ். அதிகாரி, அவர் எம்.ஜி.ஆர். காலத்திலேயே அவருக்கு மிகவும்

வேண்டிய அதிகாரியாகப் பணியாற்றிய திறமையான அதிகாரி. ஜெயலலிதா ஆட்சியிலே இருந்த போதும் அவருக்கும் மிகவும் வேண்டிய அதிகாரியாக இருந்தவர். அவர் தி.மு.கழக ஆட்சியிலேயும் திறம்பட பணியாற்றினார் என்பதால், ஜெயலலிதா ஆட்சிக்கு வந்ததும், அவரை எந்தப் பணியும் இல்லாத ஒரு பொறுப்பிலே நியமித்தார்கள். அடுத்து இரண்டொரு நாட்கள்தான். பிறகு அவர் தென்கோடி முனையில் உள்ள மண்டபம் முகாமில் ஒரு சிறிய பதவிக்கு மாறுதல் செய்யப்பட்டு இரண்டு மாதங்களாக அந்த அதிகாரி தன் குடும்பத்தை எல்லாம் பிரிந்து பணியாற்றுகிறார் என்றால், கம்யூனிஸ்ட் கட்சிகள் அவரை அரசு அலுவலராக கருதவில்லையா?

அதைப்போலவேதான் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர், திரு.காளிமுத்து சென்னை மாநகரின் ஆணையாளராகவே பணியாற்றினார். தி.மு. கழக ஆட்சியிலே அவருக்கு அந்தப் பொறுப்பு அளிக்கப் பட்டது. அவருடைய தகுதி, அவர் எந்த இனத்திலிருந்து இந்த அளவிற்கு முன்னுக்கு வந்தார் என்பதையெல்லாம் எண்ணிப் பார்த்து அவருக்கு அந்தப் பதவி வழங்கப்பட்டது. ஜெயலலிதா ஆட்சியிலே அவருக்கு என்ன கதி தெரியுமா? சில நாட்கள் காத்திருப்போர் பட்டியலிலே வைக்கப்பட்டார். அதற்குப் பிறகு சாதாரணதொரு பணிக்கு மாற்றப்பட்டார். பின்னர் அங்கேயும் அவரை நீடிக்க விடவில்லை. தற்போது மீண்டும் காத்திருப்போர் பட்டியலிலே நாட்களை எண்ணிக் கொண்டிருக்கின்றார்.

மத்திய அரசு மூன்று அதிகாரிகளை அவர்களின் திறமையை எண்ணிப் பார்த்து டெல்லிக்கு வாருங்கள் என்று அழைத்ததற்காக, ஆகா! இது மத்திய அரசின் அரசியல் பழி வாங்கல் என்று அறிக்கை விடுத்துள்ள அருமை கம்யூனிஸ்டு தலைவர்களே; மற்றும் அவர்களுடைய தோழமைக் கட்சியினரே, உங்களுக்கு இந்தப் பழி வாங்கல் கண்களிலே தெரியவில்லையா? திரு.முத்துக் கருப்பனுக்காக உருகும் நெஞ்சம் திரு.காளிமுத்துக்கு இந்த ஆட்சியிலே அநீதி இழைக்கப்பட்ட போது ஏன் துடித்தெழவில்லை?

தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த இன்னொருவர் உமாசங்கர் ஐ.ஏ.எஸ். என்ற இளம் அதிகாரி. நேர்மையானவர். 24 மணி நேரமும் உழைக்கக் கூடியவர். அவரை என்னுடைய திருவாரூர் மாவட்டத்திற்கே மாவட்ட ஆட்சித் தலைவராக ஆக்கினேன்.

முதன் முதலாக அந்த மாவட்டத்தைக் கணினிமயமாக்கியவர். அப்படிப்பட்ட அந்தத் திறமையான அதிகாரிக்கு இந்த ஆட்சியிலே கிடைக்கப் பெற்ற மரியாதை என்ன?

ஜெயலலிதா ஆட்சிப் பொறுப்பேற்றதும் காத்திருப்போர் பட்டியலிலே அவர் சேர்க்கப்பட்டார். எத்தனை நாட்கள்? அவரோடு காத்திருப்போர் பட்டியலிலே வைக்கப்பட்டிருந்த மற்றவர்களுக்கு 20 நாட்களுக்குப் பிறகு வேறு உருப்படாத இடங்களிலே நியமனம் தரப்பட்ட போதிலும் உமா சங்கருக்கு நியமனம் தரப்படவில்லை. அவரைப் பற்றி 26-7-2001 தேதியிட்ட ஆங்கில நாளிதழ் (இந்து) குறிப்பிடும்போது, "The Government also refused permission for Mr. Umashankar, who had turned Tiruvarur into the first e-district in the country, to attend a United Nations Asian Pacific Centre of Technology sponsored seminar in Bangkok, though he was the only Indian bureaucrat invited for the meet." என்று எழுதியிருந்தது.

அதாவது "இந்த நாட்டிலேயே திருவாரூர் மாவட்டத்தை முதல் கணினி மாவட்டமாக ஆக்கிய திரு. உமா சங்கர் ஒருவருக்குத்தான் பாங்காக்கிலே ஐக்கிய நாடுகள் சபையினால் நடத்தப்படும் மாநாட்டிற்கு அழைப்பு வந்திருந்த போதிலும், அவருக்கு இந்த அரசாங்கம் அனுமதி வழங்க மறுத்து விட்டது" என்று அந்த ஆங்கில நாளிதழே குறிப்பிட்டுள்ளது. இந்தச் செய்தி அந்த இதழிலே வெளிவந்ததும், உடனடியாக இந்த அரசு மறுநாளே அவசர அவசரமாக பதவிப் பொறுப்புகளிலேயே அடி மட்டத்திலே உள்ள ஒழுங்கு நடவடிக்கைக் குழு ஆணையராக உமாசங்கர் சேலத்திலே நியமிக்கப்பட்டார். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த இந்த அதிகாரிக்கு பதவி கொடுக்காமல் பல நாட்கள் காத்திருப்போர் பட்டியலிலே வைத்திருந்து கடைசியிலே சாதாரண தொரு பதவியிலே அமர்த்தி அலட்சியப்படுத்தினால் கூட பரவாயில்லை. அந்த மாவட்டத்தை கணினி மயமாக்கப் பாடுபட்ட குற்றத்திற்காக அவர் டெண்டர் கோரி கம்ப்யூட்டர்களை வாங்கியதை வைத்து, அதிலே முறைகேடு நடந்து விட்டதாகக் கூறி துறை விசாரணை ஒன்றை நடத்திடவும் இந்த அரசு முன்வந்திருக்கின்றது.

இந்த அளவிற்கு இந்த இளம் அதிகாரி இந்த ஆட்சியிலே பழி வாங்கப்படுவதற்காக கம்யூனிஸ்ட் கட்சிகள் இரக்கப்பட்டதுண்டா? தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினைச் சேர்ந்த ஒரு திறமையான அதிகாரியை இப்படி பழி வாங்குவது தவறு என்று ஒருமுறையாவது

கூறியதுண்டா ? அந்த அதிகாரி செய்த பாவம் என்ன? கடந்த கால ஜெயலலிதா ஆட்சியிலே நடைபெற்ற சுடுகாட்டு ஊழலுக்கு ஒத்துழைப்பு கொடுக்க மறுத்த ஒரு பாவம்தான்.

கடந்த தி.மு.க. ஆட்சியிலே முதல்வர் அலுவலகத்திலே பணியாற்றிய நான்கைந்து திறமையான ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை என்னுடைய அலுவலகத்திலே பணியாற்றினார்கள் என்ற ஒரேயொரு காரணத்திற்காக அவர்களை பல நாட்கள் காத்திருப்போர் பட்டியலிலே வைத்திருந்து பிறகு அந்தத் திறமையான அதிகாரிகளை கன்னியாகுமரி என்றும், திருநெல்வேலி என்றும், ராமனாதபுரம் என்றும், மதுரை என்றும் பந்தாடியிருக்கிறார்களே, தொழிலாளர்களின் தோழன், அரசு அலுவலர்களின் பாதுகாவலன் கம்யூனிஸ்ட் கட்சி என்றைக்காவது குரல் கொடுத்தது உண்டா? அறிக்கை எழுதியது உண்டா?

என்னுடைய செயலாளர்களில் ஒருவராக இருந்த திரு.ராமசாமி என்ற மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரி - ஜெயலலிதா பதவிப் பொறுப்பேற்றதும் தன்னிலை என்னவாகும் என்பதை உணர்ந்து, தானாகவே முன்வந்து, இன்னும் பல ஆண்டுக்காலம் பதவியில் நீடிக்கும் வாய்ப்பிருந்தும், அதனை விரும்பாமல் தானே ஓய்வு பெறும் திட்டத்தின் கீழ் ஓய்வு பெற முன்வந்து எழுதியும் கொடுத்தார்.

I.A.S. அதிகாரிகள் மூன்று மாத காலத்திற்குள் அவ்வாறு ஓய்வு பெற விரும்பினால் - மத்திய அரசின் ஒப்புதல் வேண்டும். அந்த ஒப்புதலையும் மத்திய அரசு அளித்து, மாநில அரசுக்கு ஜெயலலிதா பொறுப்பேற்ற இரண்டொரு நாட்களில் அனுப்பியபோதும், ஜெயலலிதா அரசு அவரை விடுவிக்கவில்லை. மாறாக கன்னியாகுமரியிலே ஒரு சாதாரண பதவியிலே நியமித்துள்ளது. அவர் உடல் நலம் இல்லாதவர். அவரது மனைவி சென்னையிலே டாக்டராக உள்ளார். அந்த ராமசாமி என்ன மிட்டாவா? மிராசா? அந்த அதிகாரியை ஜெயலலிதா அரசு பழிவாங்கியது கம்யூனிஸ்ட்களுக்கு தெரியாதா?

ஜெயலலிதா ஆட்சிப் பொறுப்பேற்றதும் சட்டப் பேரவை செயலகத்திலே செய்தது என்ன?

1991 - 96ல் அ.தி.மு.க. ஆட்சி நடைபெற்ற போது சட்டப்பேரவையின் செயலாளராக சி.எஸ். ஜானகிராமன் என்ற

அதிகாரி இருந்தார். அவருக்கு ஜெயலலிதா மூன்றாண்டு காலம் பதவி நீடிப்பு கொடுத்தார். அதன் காரணமாக அந்த அதிகாரிக்கு கீழேயிருந்த பல அதிகாரிகள், பல ஆண்டுக் காலம் பணியாற்றியவர்கள், தாங்களும் செயலாளர் பொறுப்பிற்கு தகுதி மூப்பின் அடிப்படையில் வரலாம் என்று கருதியிருந்தவர்களின் எண்ணத்தில் ஜானகிராமனுக்கு மூன்றாண்டு பதவி நீட்டிப்பு கொடுத்த காரணத்தால் மண் விழுந்தது.

அந்த வழியில் தற்போது மீண்டும் ஜெயலலிதா பொறுப்பேற்றதும் ஓய்வு பெற்று வீட்டிலே தூங்கிக் கொண்டிருந்த அந்த ஜானகிராமனை தேடிப் பிடித்து அழைத்து வந்து, மீண்டும் ஒரே ஆணையில் ஓராண்டிற்கு என்றுகூட அல்ல; ஐந்தாண்டு காலத்திற்கு முதன்மைச் செயலாளர் என்ற பதவியை உருவாக்கி, அனைத்துப் பொறுப்புக்களையும் அவரிடம் அளித்துள்ளார்.

இதன் காரணமாக இதுவரை செயலாளராக இருந்தவர் "டம்மி" ஆக்கப்பட்டு எந்தப் பொறுப்பும், அதிகாரமும் இல்லாதவராக ஆக்கப்பட்டுள்ளார். அவருக்கு கீழே இணைச் செயலாளராக துணைச் செயலாளராக இருப்பவர்கள் எல்லாம், தாங்களும் செயலாளராக ஆகலாம் என்ற நம்பிக்கையோடு இருந்தவர்கள் எல்லாம், அராஜக ஆட்சியிலே வாய் திறக்க முடியாமல், நீதிமன்றத்திற்கும் செல்ல பயந்து போய் உள்ளார்கள். அந்த அலுவலர்களுக்காக கம்யூனிஸ்ட் இயக்கம் கேள்வி எழுப்பியதுண்டா?

பொதுத் தேர்தலிலே ஒரு வேட்பாளர் இரண்டு தொகுதிகளுக்கு மேல் வேட்பு மனு தாக்கல் செய்தால், அவர் வேட்பு மனு தாக்கல் செய்த அத்தனை தொகுதிகளிலும் அவருடைய வேட்பு மனு செல்லாமல் போய்விடும். இது எல்லோருக்கும் தெரிந்த ஒரு சட்ட விதி. முதலமைச்சராக இருந்தவருக்கு, இந்த விதி கூட தெரியாமலோ அல்லது தெரிந்தும் மக்களிடம் அனுதாபத்தை கிடைக்கச் செய்திட வேண்டுமென்பதற் காகவோ நான்கு தொகுதிகளிலே ஜெயலலிதா திட்டமிட்டு வேட்பு மனு தாக்கல் செய்தார். இந்த சட்டப் பிரிவு கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கும் மற்றும் அவர்களுடைய தோழமைக் கட்சிகளுக்கும் தெரிந்ததுதான். ஆனாலும் ஜெயலலிதா நான்கு இடங்களிலே அதாவது ஆண்டிப்பட்டி, கிருஷ்ணகிரி, புவனகிரி, புதுக்கோட்டை ஆகிய தொகுதிகளிலே வேட்பு மனு தாக்கல் செய்தார். அதன்

காரணமாக அந்தத் தொகுதிகளிலே பணியாற்றிய அரசு அதிகாரிகள் தேர்தல் சட்ட முறைப்படி அவருடைய வேட்பு மனு செல்லாது என்று அறிவித்தார்கள். பாவம், அவர்கள் வேறென்ன செய்வார்கள். ஏதோ ஒரு தொகுதியிலே ஜெயலலிதாவின் வேட்பு மனு செல்லும் என்று சட்டத்தை மீறி அனுமதித்திருந்தால் தேர்தல் கமிஷன் அந்த அதிகாரியின் மீது கடும் நடவடிக்கை எடுத் திருக்கும். எனவே சட்டத்திற்கு பயந்து அவர்கள் வேட்பு மனு செல்லாது என்று அறிவித்தார்கள்.

ஆனால் ஜெயலலிதா ஆளுநரின் ஒத்துழைப்போடு எப்படியோ முதல்வராக அவசரம் அவசரமாகப் பொறுப்பேற்ற பிறகு, தனது வேட்பு மனுவைச் செல்லாது என்று அறிவித்த அந்தப் பரிதாபத்திற்குரிய நான்கு அதிகாரிகளையும் அவர்கள் பணியாற்றிய இடத்திலிருந்து பந்தாடினார். அவர்களுக்கு வேறு பணி கூட உடனடியாக வழங்காமல் காத்திருப்போர் பட்டியலிலே வைக்கச் செய்தார். கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களிடமும், தோழர்களிடமும், இன்னமும் நான் வைத்துள்ள மரியாதையின் பெயரால் கேட்கிறேன், அந்த நான்கு அதிகாரிகளும் மனிதர்கள் தானே? அந்தப் பாவப்பட்ட அதிகாரிகள் மீது உங்களுக்கு ஏன் அக்கறை வரவில்லை? நியாயத்திற்காக போராடுபவர்கள் கம்யூனிஸ்ட்கள் என்று காலம் காலமாக கருதிக் கொண்டிருக்கும் உங்களுடைய தோழர்களே உங்களைப் பற்றி என்ன நினைப்பார்கள்?

உங்களோடு சேர்ந்து எத்தனை மேடைகளில் பேசியிருப்பேன்? பக்கத்திலே அமர்ந்து எத்தனை முறை அளவளாவியிருப்போம். அப்படிப்பட்ட என்னை காவல் துறை அதிகாரிகள் படுத்திய பாட்டினை நீங்கள் காணவில்லையா? இன்னும் நான் பட்ட அடியின் 'வடு' மாறவில்லையே! அப்போது உங்கள் மனம் இளகித்தானே உடனடியாக இந்த ஆட்சியைக் கண்டித்து அறிக்கை விட்டீர்கள். அப்போது கூட நான் சொன்னேனே, தான் ஆடா விட்டாலும், தன் தசை ஆடும் என்பதற்கேற்ப நீங்கள் அறிக்கை விடுத்திருக்கிறீர்கள் என்று.

அந்தக் கொடுமைக்குக் காரணமான அதிகாரிகளில் சிலரை - அந்தக் காரணங்களுக்கும் அல்ல என்று - மத்திய அரசே விளக்கமளித்து அவர்களை மத்திய பணிக்கு அழைத்திருக்கும்போது, ஜெயலலிதாவிற்காகப் பரிந்து கொண்டு

மத்திய அரசைக் கண்டித்து அறிக்கை விடுகிறார்களே, அது நியாயந்தானா?

நீதி விசாரணை வைத்து விட்டார் ஜெயலலிதா என்று பெருமை பொங்கப் பேசுகிறார்களே கம்யூனிஸ்டுகள்; கும்பகோணம் மகாமகப் படுகொலையின்போது நீதி விசாரணை கேட்டவர்களையெல்லாம் நெற்றிக் கண்ணால் சுட்டுவிட்டு வெறும் ஆர்.டி.ஓ. விசாரணை வைத்தவர்தானே இந்த ஜெயலலிதா என்பதை மறந்துவிட முடிகிறதா?

ஒரு பக்கம் விசாரணைக் கமிஷனை அரசே நியமிக்கிறது - அதே அரசு; தனது காவல்துறை எடுத்த வீடியோ படத்தை அரசின் செலவிலேயே பட்டி தொட்டியெங்கும் போலீஸ் காவலுடன் போட்டுக் காட்டிப் போலீசார் செயலுக்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்கிறது; இந்த நிலையில் நீதி விசாரணை என்பது ஒரு கண்துடைப்பாகத்தானே முடியும் என்பது கம்யூனிஸ்டு நண்பர்களுக்கு தெரியாதா என்ன?

அன்புள்ள,

மு.க.

01-08-2001

2621. செல்லும் வழியெல்லாம் சென்னைக்கே!

உடன்பிறப்பே,

ஆகஸ்டு 6ஆம் நாள் தமிழகத்திலும் புதுவையிலும் மொத்தம் நூறு இடங்களில் நமது கழகம்; அண்மையில் பொதுக் குழுவில் நிறைவேற்றிய தீர்மானத்தின் அடிப்படையில் அ.தி.மு.க. அரசின் மினி எமர்ஜன்சி நடவடிக்கைகளைக் கண்டித்தும், தமிழகம் போலீஸ் ராஜ்யமாக மாறி வருகிற ஏதேச்சதிகாரப் போக்கினை எதிர்த்தும் குரலெழுப்பிட அறவழியில் கண்டனப் பேரணிகளும், விளக்கப் பொதுக் கூட்டங்களும் நமது அடலேறுகளாம் கழக முன்னணியினரின் கண்காணிப்பில் மிகுந்த எழுச்சியுடன் நடைபெற்றன என்பதை அறிந்து அகமகிழ்ச்சி கொள்கிறேன்.

பொதுக்குழு தீர்மானத்தின் இன்னொரு பகுதிதான் சென்னையில் நாம் ஆகஸ்டு 12ஆம் நாள் நடத்த இருக்கும் மகத்தான பேரணியும், மாபெரும் பொதுக்கூட்டமுமாகும்.

அன்று நாம் நடத்த இருக்கின்ற பேரணியும் பொதுக் கூட்டமும் ஏதோ மாநில ஆட்சியைக் கலைப்பதற்கு மத்திய அரசை வலியுறுத்தும் காரியமாகுமெனச் சிலர் கதை கட்டுவது நம் காதில் விழாமல் இல்லை. மாநில அரசுகளில் கழுத்தில் விழுகிற கொடுவாளாம் 356-வது பிரிவே அரசியல் சட்டத்தில் இல்லாமல் செய்துவிடுவோம்; அப்படியொரு முடிவெடுக்க அனைத்துக் கட்சிகளும் உடன்படுவீர் எனப் பல்லாண்டு காலமாக அழைத்துக் கொண்டிருக்கும் இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை இப்போது நான் சென்னை மத்திய சிறையிலிருந்து வெளிவந்த 4.7.2001ஆம் நாள் மாலையில் நடைபெற்ற செய்தியாளர்கள் கூட்டத்தில்கூட விளக்கமாகக் கூறியிருக்கிறேன்.

356ஐ பயன்படுத்தி உடனடியாக அ.தி.மு.க. அரசைக் கலைக்க வேண்டுமென்ற ஏகோபித்த எண்ணம் தி.மு.க. தலைமைக்கு இருந்திருக்குமேயானால்; 29.7.2001ஆம் நாள் சென்னையில் நடைபெற்ற பொதுக்குழுவில் அந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டிருக்குமே!

பொதுக்குழுவில்; இந்த மாநில அரசு பற்றி நிறைவேற்றப்பட்ட தீர்மானம் என்ன?

இதோ அந்தத் தீர்மானம் - கழகப் பொதுக்குழு நிறைவேற்றிய 19-வது தீர்மானம் :-

கடந்த ஜூன் திங்கள் 29-ஆம் தேதி நள்ளிரவில் கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் இல்லத்திலே கதவை உடைத்துக் கொண்டு படுக்கை அறைக்குள்ளும் நுழைந்து கைது செய்ததோடு, காட்டு மிராண்டித்தனமான முறையிலே வலுக்கட்டாயமாக அலற அலற தூக்கிச் சென்ற கொடுமை, இந்தக் கைது பற்றிய காரணத்தைக் கேட்ட மத்திய அமைச்சர்கள் இருவரையும் தாக்கியதோடு அவர்களையும் கைது செய்த அநியாயம், இந்தச் சம்பவத்தை யொட்டி தமிழகமெங்கும் கிளர்ந்தெழுந்த கழகத் தோழர்கள் 50 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்களையும் கைது செய்த செயல், தங்களுக்குப் பிடிக்காதவர்களையும் எதிர்க் கட்சியினரையும் பழிவாங்க வேண்டுமென்பதற்காகவே யாரோ ஒருவரிடம் ஒரு புகாரைப் பெற்றுக்கொண்டு அதைக் காரணமாகக் காட்டி கைது செய்திடும் போக்கு, கழகத்தினர் பொறுப்பிலே இருக்கும் உள்ளாட்சி மன்றங்களிலே மக்கள் நலத் திட்டங்களை ஆற்ற முடியாமல் அரசு அதிகாரிகள் மூலமும், ஆளுங்கட்சியினரின் கூட்டணிக் கட்சிகளின் ஒத்துழைப்போடும் இடைஞ்சல் விளைவித்தல் போன்ற ஜெயலலிதாவின் போலீஸ் ராஜ்ய அராஜகங்களைக் கண்டித்து; வரும் ஆகஸ்ட் திங்கள் 6-ஆம் தேதி திங்கட்கிழமையன்று தமிழகம் மற்றும் புதுவை மாநிலம் முழுவதும் 100 இடங்களில் கண்டனப் பேரணிகளும் பொதுக்கூட்டங்களும் நடத்துவது என்றும், அதைத் தொடர்ந்து ஆகஸ்ட் 12-ஆம் தேதி சென்னையில் மாபெரும் கண்டனப் பேரணி ஒன்றை நடத்தி தொடர்ந்து மகத்தான பொதுக் கூட்டம் ஒன்றையும் நடத்துவதென்றும் இப்பொதுக் குழுவில் முடிவெடுக்கப்படுகிறது.

இந்தத் தீர்மானத்தைத்தான் திசை திருப்பி நமது பேரணியையே தடுத்து விடலாமா எனச் சில மூளைகளில் ஞானோதயம் பிறந்திருக்கிறது.

தடைக்கற்கள் உண்டெனினும் தடந்தோள் உண்டெனச் சிரிப்பாய் எனும் கவிஞர் பெருமகனின் கம்பீர வார்த்தைகளுக்கு வடிவம் தந்து செயலாற்றக் கூடிய உன் போன்ற உடன்பிறப்புகள், அவரவர் ஊர்களில் ஆர்த்தெழுந்த அணி வகுப்பைத் தொடர்ந்து சென்னைக்கான பயண ஏற்பாடுகளில் கவனம் செலுத்திக் கொண்டிருப்பீர்களென எனக்குத் தெரியும்.

நான் பொதுக் குழுவிலே நிறைவாகப் பேசியதை என் உடன்பிறப்புகள் மறந்திருக்க மாட்டீர்கள் - காவல்துறை அதிகாரிகளால் அடிபட்டு, மிதிபட்டு, காயம் பட்டு அதற்குப் பிறகும் கூட என் உயிரனைய உடன்பிறப்புகளாம் உங்களையெல்லாம் ஒருசேரக் கண்ட அந்தப் பொதுக்குழுவில் நான் உணர்ச்சி வசப்பட்டுப் பேசி, யாரையும் உசுப்பிவிட முனையவில்லை.

உணர்ச்சி தேவைதான்! ஆனால் அந்த உணர்ச்சி கட்டுப்படுத்தப்படக் கூடியதாக - அந்த உணர்ச்சி, நல்லவைகளுக்குப் பயன்படக் கூடியதாக, அமைய வேண்டும். அண்ணா அவர்கள் இந்த இயக்கத்தை கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற மூன்று தாரக மந்திரங்களைக் கூறியே வளர்த்தார். எனவே நாம் கடமை உணர்வோடு இருக்க வேண்டும்; அமைதி காக்க வேண்டும்; உரிமை காக்க வேண்டும்.

இதைத்தான் பொதுக்குழுவில் நான் வலியுறுத்திக் கூறியிருக்கிறேன். இப்போதும் கூறுகிறேன். எதிர் முகாம்கள் சிலவற்றிலிருந்து - குறிப்பாக ஆளுங்கட்சி முகாமிலிருந்து; எழுதிக் காட்டவோ அல்லது திரும்ப எடுத்துச் சொல்லவே இயலாத அளவுக்கு கண்ணியக் குறைவான நாராச நடைப் பேச்சுகள் - எழுத்துகள் - நம்மைப் பொறுத்தவரையில் அவற்றுக்குப் பதிலாக பதில் வேண்டாம். பொதுமக்கள் புரிந்து கொள்வார்கள் - எழுதுகிறவர்கள், பேசுகிறவர்கள், செயல்படுகிறவர்கள் மனமே சுடும்; மனிதத் தன்மையை இழந்து விட்டு நடக்கிறோமேயென்று அவர்களின் மனச்சாட்சியே அவர்களைக் குத்தும், குடையும்!

உடன்பிறப்பே, திராவிடர் இயக்கம் தோன்றிய காலத்தில் - சுயமரியாதைக் கொள்கைகளைச் சுடர் விட்டு ஓங்கி எழுந்த

காலத்தில் நடைபெற்ற தர்க்கரீதியான சொற்போர்களையும் சில நேரங்களில் அவை மிதமிஞ்சி சென்ற நிகழ்வுகளையும் நான் படித்தும், கேட்டும் அறிந்திருக்கிறேன்.

வரும் ஆகஸ்ட் 12, நமது பேரணி புறப்படுகிற இடம் சென்னையில் மறைமலையடிகளார் பெயரில் அமைந்துள்ள பாலத்தின் அருகிலிருந்து!

மறைமலையடிகளார் தமிழ் மொழி காக்க இந்தி ஆதிக்கத்தை எதிர்த்துப் போர்ப் படைத் தளபதியாக விளங்கியவர். ஆனால் சமயப்பற்றில் தந்தை பெரியாரும், அவரும் ஒத்துப் போகாதவர்கள். அந்தக் கொள்கை மோதுதல் காரணமாக அப்பொழுது வெளிவந்து கொண்டிருந்த **திராவிடன்** என்ற இதழில் மறைமலையடிகளாரைக் குறித்து கடுமையான கண்டனங்கள் எழுத்து வடிவில் வெளி வந்து கொண்டிருந்தன.

அதற்கு விளக்கமளித்த மறைமலையடிகளார் மீது திராவிடர் இதழ் நிர்வாகத்தினர் வழக்கொன்றும் தொடுத்தனர். அதன் தொடர்ச்சியாக மறைமலையடிகளார் மீது கடுமையான விமர்சனங்கள் திராவிடன் இதழில் செய்யப்பட்டன.

அந்த நேரம் பெரியார் சுற்றுப் பயணத்திலே இருந்தார். மறைமலையடிகளாரைப் பழித்தும், இழித்தும் திராவிடனில் வெளியான கட்டுரையைப் படித்துப் பதறினார். மதிப்பிற்குரிய அடிகளாரைத் தம் இயக்கத்தினர் நடத்தும் முறை இதுவா என வேதனைப்பட்டார்; ஈரோடு திரும்பினார்.

மறைமலையடிகள் தமிழுக்கும், தமிழருக்கும் ஆற்றிய பணிகள் எத்தனை எத்தனை? எவ்வளவு பெரிய புலமை படைத்தவர். அவர் மேல் வழக்கா? நமது இயக்கத்தினர் நடந்து கொண்ட முறைக்காக நான் மன்னிப்புக் கோருகிறேன் என்ற முறையில் பெரியார் தலையங்கம் தீட்டினார்.

பெரியாருடைய பெருந்தன்மையைப் போற்றி அடிகளாரும் அவருக்குப் பதில் கடிதம் எழுதினார். இவைகளெல்லாம் நடைபெற்றது 1928ஆம் ஆண்டு!

உடன்பிறப்பே, கொள்கைகளில் எத்தனை வேறுபாடுகள் இருந்தாலும் கூட தமிழை வாழ வைக்க, தமிழகத்தை உயர்த்த

ஒன்றுபட்ட இரு பெரும் தலைவர்களுக்கிடையே உட்பகை தோன்றின் இனத்திற்கே ஊறு விளையும் என்பதை உணர்ந்தன்றோ அந்த இரு பெரும் தலைவர்களும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து ஒருவரை ஒருவர் மதித்து நடந்து கொண்டிருக்கிறார்கள்.

அவ்வண்ணம் பெரியார் அவர்களால் மதிக்கப்பட்ட மறைமலையடிகளார் பெயர் தாங்கிய பாலத்திலிருந்து புறப்படுகின்ற நமது பேரணி, கடற்கரை சீரணி அரங்கத்தில் பெரும் கடலாய் விரிவடைய இருக்கின்றது. கடற்கரை வெண்மணற்பரப்பைக் கழக உடன்பிறப்புகளும், லட்சோப லட்சம் தமிழ்ப் பெருமக்களும் நிரப்பிட இருக்கும் அந்த நாள், ஆம், ஆகஸ்ட் 12ஆம் நாள் மாலை நேரத்தைக் கற்பனை செய்து பார்க்கிறேன். அன்று நீ என் மீது வீசும் ஒவ்வொரு பார்வையும் என் நெஞ்சப் புண்ணுக்கு மருந்தாக அன்றோ அமையவிருக்கின்றது!

எனவே, உடன்பிறப்பே, அந்தப் பார்வைக்காகத் தவங்கிடக்கும் இந்த இதயத்திற்கு ஆறுதல் தந்திட அணி வகுத்து வந்திடுவாய்!

நீ வருவதற்கேற்ற வாகன வசதிகள் கூட தடுக்கப்படுகின்றன எனச் செய்திகள் வருகின்றன - மனமிருந்தால் மார்க்கமுண்டு என என் சகோதரர்களுக்கு நான் சொல்லியா தரவேண்டும்!

எந்த வாகனத்தில் வந்தாலும் சரி; எனக்கென்னவோ நீ சென்னை வந்துவிட்டு ஊர் திரும்பிச் செல்லும் வரையில் மனம் ஒரு நிலையில் நில்லாது.

சில நாட்களாக சாலை விபத்துகள் நாள் தவறாமல் பகலில் கூட பலரது உயிரைக் குடிக்கும் பயங்கரச் செய்திகள் அடுக்கடுக்காக வருவதைப் பார்க்கும் போது; உன் பயணம் எவ்வளவு நிதானமாக இருக்க வேண்டும் என்பதில் எனக்குள்ள அக்கறையும், கவலையும் உன் கூடப்பிறந்தோர்க்குக்கூட இருக்காது என்பதை உணர்ந்து அதற்கேற்பப் பயணம் மேற்கொள்க!

இடையில் பல நாட்கள்! - பல சம்பவங்கள்! - இவற்றைக் கடந்து சந்திக்க இருக்கிறோம்!

கடற்கரையின் மணல் துகள்களில் எண்ணிக்கையை வெல்லட்டும் நமது கூட்டம்!

ஓங்கி உயரும் அலைகளின் ஓசையை வெல்லட்டும் நமது முழக்கம்!

சர்வாதிகாரக் கொடுமை சாய்த்திடவும் - ஏதேச்சதிகாரத்தை வீழ்த்திடவும் - மனித உரிமைகள் நிலை நாட்டப்படவும் - மகுடமேந்திகளின் மமதைக்குப் பாடம் புகட்டிடவும்;

நமது மகத்தான பேரணியும் -

மாபெரும் பொதுக்கூட்டமும் பயன்படட்டும்!

எங்கே; புறப்பட்டுவிட்டாயா? -

செல்லும் வழியெல்லாம் சென்னைக்கே! என அமையட்டும் ஆகஸ்ட் 12 அன்று!

அன்புள்ள,

மு. கருணாநிதி

(09-08-2001)

2622. திட்டக்குழுவில் தி.மு.க. ஆட்சிக்குப் பாராட்டு!

உடன்பிறப்பே,

டெல்லியில் திட்டக்குழுவின் கூட்டம் நடைபெற்று தமிழக அரசின் சார்பில் நிதியமைச்சரும் மற்றும் உள்ள அதிகாரிகளும் கலந்து கொண்டு இந்த ஆண்டு திட்ட ஒதுக்கீடு 6,040 கோடி ரூபாய் அளவிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதென்றும், இது கடந்த ஆண்டை விட 340 கோடி ரூபாய் அதிகமென்றும் மாநில அரசு கேட்டதைவிட திட்டக்குழு 40 கோடி ரூபாய் கூடுதலாக தந்திருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

1999-2000ஆம் ஆண்டு தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் டெல்லியில் நடைபெற்ற திட்டக்குழுக் கூட்டத்தில் அந்த ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீடு 5,250 கோடி ரூபாய்.

2000-2001ஆம் ஆண்டுக்கு தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் திட்டக்குழு ஒப்புதல் அளித்த திட்ட ஒதுக்கீடு 5,700 கோடி ரூபாய்.

அதாவது 450 கோடி ரூபாய் அதிக ஒதுக்கீட்டிற்குக் கழக ஆட்சியில் திட்டக்குழுவிடமிருந்து ஒப்புதல் பெறப்பட்டது.

ஆனால் இந்த ஆண்டு 5,700 கோடி ரூபாயை விட கூடுதலாக 2001-2002ஆம் ஆண்டிற்கு 340 கோடி ரூபாய் மட்டுமே அதிகம் பெற்று மொத்தம் 6,040 கோடி ரூபாய்க்கு ஆண்டு திட்டத்திற்கான ஒப்புதலைத் தமிழக அரசு பெற்றுள்ளது.

இதிலேகூட வருவாய்க் கூறுகளை வலிவுபடுத்துவோம் என்று உறுதிப்பாட்டோடு கூடுதலாக ஒப்புதல் கேட்பதற்குப் பதிலாக மாநில அரசு மவுனமாக இருந்த நிலையில் திட்டக்குழுவாகப் பார்த்து, கேட்டதைவிட 40 கோடி ரூபாய் கூடுதலாக ஒதுக்கிய செய்தியும் வந்துள்ளது.

இன்று காலையில் ஒரு பொருளாதார நிபுணரை சந்திக்கின்ற வாய்ப்பு பெற்றேன். அவர் சொன்னார் : திட்டக்குழு சார்பாக தமிழக

அரசைப் பாராட்டியிருக்கிறார்கள். அந்தப் பாராட்டுகளெல்லாம் ஐந்தாண்டு கால கழக அரசின் சாதனைகளால் கிடைத்தவையாகும். இன்னும் இரண்டாண்டுக் காலத்திற்குக் குறையாமல் அந்த தாக்கம் இருக்கத்தான் செய்யும் என்று குறிப்பிட்டார்.

ஆனால், முதலமைச்சர் ஜெயலலிதாவிற்குப் பதிலாக நிதியமைச்சரால் திட்டக்குழுவில் படிக்கப்பட்ட முதலமைச்சருடைய பேச்சு - அதாவது அதிகாரிகளால் தயாரிக்கப்பட்ட பேச்சு (சென்ற ஆண்டு திட்டக்குழுவிற்கும் இதே அதிகாரிகள்தான் முதலமைச்சருக்கான பேச்சைத் தயாரித்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.)

இந்த இரண்டு உரைகளுக்கும் இடையில் ஏதாவது முரண்பாடுகள் இருக்குமேயானால் அதற்கு அந்த அதிகாரிகள்தான் பொறுப்பு என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

என்னைச் சந்தித்த பொருளாதார நிபுணர் புகழ்ந்துரைத்த கழக அரசின் சாதனைகளை முதலமைச்சர் ஜெயலலிதாவினால் அப்படியே ஏற்றுக் கொள்ள முடியவில்லையென்பது அவருக்கு அதிகாரிகள் தயாரித்துக் கொடுத்துள்ள உரையை உற்று நோக்கும்போது புரிகிறது.

அந்த உரையில், தமிழ்நாட்டில் வறுமை சற்றுக் குறைந்துள்ளது என்பது உண்மையாக இருந்த போதிலும் புள்ளி விவரங்களின் அடிப்படையில் பார்க்கும்போது வறுமைக்கோட்டைக் கடந்துள்ள நபர்கள் வறுமைக் கோட்டிற்கு மேலே சற்றுதான் உயர்ந்துள்ளனர் என்று ஜெயலலிதா குறிப்பிட்டிருக்கிறார்.

அவரது கூற்று உண்மையா என்பதற்குப் பின்வரும் ஒப்பீட்டை கவனிப்பது அவசியம்.

2001-2002ஆம் ஆண்டிற்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையில் இந்த ஒப்பீடு பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதாவது இம்மாநிலத்தில் தனி நபர் வருமானம் 1995-1996ல் ரூ.11,894 ஆக இருந்து 1999-2000ஆம் ஆண்டில் ரூ. 18,786 ஆக அதிகரித்துள்ளது.

இவ்வாறு தனி நபர் வருமானம் தமிழகத்திலே அதிகரித்து வருகிற காரணத்தினாலே தான் வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள

மக்கள் தொகை தமிழகத்திலே இந்தியாவிலே வேறு எந்த பெரிய மாநிலத்திலும் இல்லாத அளவிற்குக் குறைந்து வருகிறது.

மத்தியத் திட்டக் குழு 23.2.2001 அன்று தேசிய மாதிரி ஆய்வு அமைப்பின் (National Sample Survey Organisation) மதிப்பீடுகளுக்கு ஒப்புதல் அளித்து வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள மக்கள் பற்றிய கணக்கெடுப்பு முடிவுகளையும் வெளியிட்டது.

இந்தியாவிலேயே உள்ள மொத்த மக்கள் தொகையில் 1993-94ஆம் ஆண்டில் 35.97 விழுக்காடாக இருந்த வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்கள் தொகை, 1999-2000ஆம் ஆண்டில் 26.10 விழுக்காடாகக் குறைந்துள்ளது.

இந்திய அளவிலே இந்த அளவிற்கு வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள மக்கள் தொகை ஒட்டுமொத்தமாகக் குறைந்திருந்த மாநிலங்களில் எந்த அளவிற்கு வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்கள் தொகையின் எண்ணிக்கை குறைந்திருக்கிறது என்பதையும் அந்தப் புள்ளி விவரம் சுட்டிக் காட்டியிருக்கின்றது.

தமிழகத்திலே 1993-94ஆம் ஆண்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழேயிருந்த மக்கள் தொகை 35.03 விழுக்காட்டிலிருந்து 1999-2000ஆம் ஆண்டில் 21.12 விழுக்காடு அளவிற்குக் குறைந்திருக்கிறது.

இந்தியாவிலே உள்ள அனைத்துப் பெரிய மாநிலங்களையும் எடுத்துக் கொண்டு பார்க்கும்போது, வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள மக்கள் தொகை தமிழகத்திலேதான் இந்த ஐந்தாண்டுகளில் அதிக அளவிற்குக் குறைந்திருக்கின்றது.

இதை முழுமையாக முதலமைச்சர் ஜெயலலிதா ஏற்றுக் கொள்ள முடியாமல் வறுமை சற்றுக் குறைந்துள்ளது என்பது உண்மையாக இருந்த போதிலும் என்று திட்டக்குழு பேச்சில் மழுப்பியிருக்கிறார்.

அதுமட்டுமல்ல; அந்த உரையில் ஜெயலலிதா 1994-1995ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2000-2001 ஆம் ஆண்டின் மாநிலத்தின் மொத்த உற்பத்தியில் வேளாண்மைத் துறையின் பங்கு உண்மையான மதிப்பில் மிகவும் குறைந்துள்ளது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆனால் உண்மையென்ன?

1995-1996ஆம் ஆண்டு உணவுப் பொருட்கள் உற்பத்தி 64.05 லட்சம் மெட்ரிக் டன்கள். 1996-97ல் 69.30 லட்சம் மெட்ரிக் டன்கள். 1997-1998இல் 81.04 லட்சம் மெட்ரிக் டன்கள். 1998-99இல் 94.12 லட்சம் மெட்ரிக் டன்கள்.

அரிசி உற்பத்தி என்று மாத்திரம் எடுத்துக் கொண்டால் 95-96ல் 52.90 லட்சம் மெட்ரிக் டன்கள். 96-97இல் 58.05 லட்சம் மெட்ரிக் டன்கள். 97-98இல் 68.94 லட்சம் மெட்ரிக் டன்கள். 98-99இல் 81.41 லட்சம் மெட்ரிக் டன்களாகும்.

அரிசி உற்பத்தியிலே தமிழகத்தின் உற்பத்தித் திறன் ஒரு எக்டேருக்கு 3579 கிலோ என சாதனை புரிந்த தமிழகம் இந்தியாவிலேயே முதல் இடத்தில் இருப்பதை இல்லையென்பது, கையை வைத்து கண்ணைப் பொத்திக்கொண்டு சூரியனையே மறைத்து விட்டதாக சொல்கிற விந்தையான செயலாகும்.

அதுமட்டுமல்ல; கரும்பு உற்பத்தித் திறனில் ஒரு எக்டேருக்கு 134.16 மெட்ரிக் டன் உற்பத்தி செய்து உலகத்திலேயே தமிழகம் முதல் இடத்தில் உள்ளது.

தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சியைப் பொருத்தவரையில் கழக அரசின் நிலையை இந்த ஆண்டு 2001 ஜனவரித் திங்கள் 29ஆம் நாள் பேரவையில் நான் வைத்த இடைக்கால நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறேன்.

அதாவது, 1996-97ஆம் ஆண்டிற்கும் 1998-99ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில், நிலையான விலைகளின் அடிப்படையில் (at constant prices) மாநிலத்தின் மொத்த உற்பத்தியின் (Gross State Domestic Product) வளர்ச்சி வீதம் சராசரியாக ஆண்டொன்றுக்கு 6.05 சதவீதமாக இருந்தது. இந்த அரசு எடுத்துள்ள பல நடவடிக்கைகளின் காரணமாக 1999-2000ஆம் ஆண்டில் இது 7.04 சதவிகிதமாக அதிகரித்துள்ளது. இந்தியாவில் பொருளாதார வளர்ச்சி மிக உயர்ந்துள்ள மூன்று மாநிலங்களில் ஒன்றாகத் தமிழகம் விளங்குகிறது என்று குறிப்பிட்டிருந்தேன். இதையும் இன்றைய முதலமைச்சர் திட்டக்குழுவில் ஆற்றிய தனது உரையில் மிகுந்த லாவகத்தோடு திரித்துக் கூற முயன்றிருக்கிறார்.

பதினோராவது நிதி ஆணையத்தின் பரிந்துரைகளால் தமிழகத்திற்குப் பெருத்த நிதி இழப்பு ஏற்பட்டுள்ளதைப் பலமுறை நான் சுட்டிக்காட்டி உள்ளதோடு, 2001-2002ஆம் ஆண்டிற்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையிலும்,

பதினோராவது நிதி ஆணையம், அதன் துணை அறிக்கையில் அனைத்து மாநிலங்களுக்கும் ரூபாய் 5304 கோடிதான் என பரிந்துரைத்துள்ளதும், அதிலும் மொத்தமாக ஐந்தாண்டுகளுக்குத் தமிழகத்தின் பங்கு ரூபாய் 402 கோடி மட்டுமே என்று கூறியிருப்பதும் தமிழகத்தைப் போல் முனைப்பாகச் செயல்படும் மாநிலங்களுக்குக் கடும் தண்டனையாக அமைந்துள்ளது என்று நான் குறிப்பிட்டிருப்பதை முதலமைச்சர் இப்போது தன்னுடைய உரையிலும் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

ஐந்தாண்டுகள் தி.மு.கழக ஆட்சி என்னதான் செய்திருந்தபோதிலும் ஏதோ ஒரு வழியில் குறை சொல்ல வேண்டுமென்று முதலமைச்சர் ஜெயலலிதா முனைந்து முயன்றிருந்தாலும்கூட அதற்கு நேர்மாறாகத் திட்டக்குழுவின் தலைவர் திரு. கே.சி. பந்த் திட்டக் குழுவில் ஆற்றியுள்ள உரையில் குறிப்பிட்டுள்ள உண்மைகள், தி.மு.கழகத்தில் உள்ள உன் போன்ற ஒவ்வொரு உடன்பிறப்பிற்கும் ஊக்கம் தரக்கூடியவையாகும்.

தமிழ்நாட்டில் சுகாதாரம் மற்றும் கல்வித் துறைகள் வளர்ச்சியுற்று இருப்பதை கே.சி.பந்த் பாராட்டியுள்ளார். நில வளத்தைப் பெருக்குவதில் தமிழகம் 2-வது இடத்தில் இருக்கிறதென்பதையும் மகிழ்ச்சியோடு அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

கல்வி அறிவில் 1991ஆம் ஆண்டு 63.7 சதவிகிதம் வளர்ச்சி பெற்றிருந்த தமிழகம், 2000-2001ஆம் ஆண்டில் வளர்ச்சியை 73.47 சதவிகிதமாக உயர்த்தியிருக்கிறது என்பதையும் பெருமிதத்தோடு கூறியிருக்கிறார்.

ஆரம்பக் கல்வி மற்றும் மேல்நிலைக் கல்விக்கு 100 சதவிகிதம் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருப்பதும், தனியார் துறைகளில் புதிய முதலீடுகள் திரட்டப்பட்டிருப்பதும், மென்பொருள் ஏற்றுமதியில் வளர்ச்சி ஏற்பட்டிருப்பதும் மற்றும் உயிரியல் தொழில் நுட்பப் பூங்கா நிறுவப்பட்டிருப்பதும்

பாராட்டத்தக்க அம்சங்கள் என்று திட்டக்குழுவின் துணைத் தலைவர் கே.சி. பந்த் கூறியிருப்பதைக் கண்டு இந்த ஆட்சிச் சக்கரத்தை ஐந்தாண்டுகள் சுழற்றியவன் என்ற முறையில் நானும் அந்த இடத்தில் என்னை அமர வைத்தவன் என்ற முறையில் நீயும் பூரிப்புக் கொள்ளலாம் அல்லவா! அந்தப் பூரிப்புடன் புறப்பட்டு வா சென்னைக்கு!

அடுக்கடுக்கான சாதனைகள்! ஏழை - எளிய - நடுத்தர மக்கள், தொழிலாள தோழர்கள், மாணவர்கள், மகளிர், இளைஞர்கள், முதியோர் என நாள்தோறும் திட்டங்களைத் தீட்டி நாடு வாழ, மக்கள் நலிவு தீர ஆட்சி நடத்தியவர்கள் நாம்.

ஜனநாயகத்தில் ஆட்சிகள் மாறலாம். மாற்றுகிற உரிமை மக்களுக்குண்டு. அந்த உரிமையை மதிப்பதே ஜனநாயக மாண்பு! ஆனால் ஜனநாயகம் என்ற பெயரால் சர்வாதிகாரத்தைச் சீராட்டி, பாராட்டி மக்களின் அன்றாட வாழ்க்கையிலே அராஜகத்தைக் கட்டவிழ்த்து விட்டு நீதியே நீ இன்னும் இருக்கின்றாயா? என்று கண்ணீரும் கம்பலையுமாக மக்கள் ஏங்கித் தவிக்கும் நிலையை ஏற்படுத்திவிட்டு ஏதேச்சதிகாரப் பிடியில் எங்கள் அடிமைகளாக என்றென்றும் இருப்பீர் என்று ஆணையிடும் ஒரு ஆட்சிக்கு எச்சரிக்கை விடுக்க - அறிவுரை கூற நாம் நடத்தும் அறப்போராட்டத்தின் ஒரு கூறுதான் சென்னைப் பேரணி! அதன் வெற்றி உன் கையில்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

(10-08-2001)

2623. அமைதியின் உருவமாய் ஆர்த்தெழும் சிங்கமாய் வா!

உடன்பிறப்பே,

சென்னைப் பேரணிக்கு பலத்த பாதுகாப்பு என்று தமிழ் நாளேடுகளிலும் - Unprecedented Security for DMK Rally on Aug. 12 என்று ஆங்கில ஏடுகளிலும் கொட்டை எழுத்துச் செய்திகளை வெளியிட்டுச் செலவில்லாமல் நமது பேரணிக்கான பெரும் விளம்பரத்தைப் போலீசார் செய்துள்ளனர்.

15 ஆயிரம் போலீசார் பேரணி நாளன்று சென்னையில் குவிக்கப்படுவார்களாம். கலவரங்கள் ஏற்படின் அவற்றைச் சமாளிக்க தேவையான அனைத்து சாதனங்களும் தயார் என்றும் வன்முறை வெடிக்க இடம் தரமாட்டோம் என்றும் போலீஸ் அதிகாரிகள் சூளுரைத்துச் செயல்பட வீர உரை நிகழ்த்தியுள்ளார்கள்.

ஆகஸ்டு 12 அன்று நாம் நடத்த இருப்பது சைதாப்பேட்டை மறைமலை அடிகள் பாலத்திலிருந்து கடற்கரை வரையிலான அறவழி அமைதிப் பேரணி தானே தவிர, அமளிப் பேரணியல்ல!

தண்ணீர் பீச்சி அடிக்கும் இயந்திரங்கள் உதவியாலோ - கண்ணீர்ப் புகைக் குண்டுகளின் துணையாலோ - பேரணியில் வருவோரை மிரட்டி பயமுறுத்தி பேரணியின் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் குலைத்திடும் எண்ணம் எள் முனையளவும் இன்றைய அரசின் போலீசாருக்கு இல்லை என்பதை நம்புவோமாக! ஏனெனில் ஜனநாயகத்தை மதித்துத்தான் இந்தப் பேரணிக்கு அனுமதி கொடுத்திருக்கிறோம் என்று போலீஸ் அதிகாரி ஒருவர் அறிவித்திருக்கிறார்.

இங்கேதான் எனக்குச் சந்தேகமாக இருக்கிறது; இவர்கள் எதை ஜனநாயகமெனக் கருதிக் கொண்டிருக்கிறார்கள்? அறுபத்தைந்து ஆண்டு கால பொது வாழ்வில் இந்தப் போலீஸ்காரர்களுக்காகவும்

சேர்த்துக் குரல் கொடுத்த ஒருவனை - உடல் நலிவுற்றவன் என்று தெரிந்தும்கூட உதைத்து இழுத்துச் சென்றிட மனம் துணிந்தார்களே; அச்செயலைத்தான் ஜனநாயகத்தின் விதை என்கிறார்களா; அல்லது இலை என்கிறார்களா?

அம்மவோ; இந்த ஜனநாயகம், விதையாக இருந்தே அழுகி முளைக்காமல் போகட்டும் - இலையாக இருந்தே உரிமை முழக்கத்தின் வெப்பத்தில் உதிர்ந்து போகட்டும் - மாறாக விழுதுகளாகத் தோன்றி ஒரு விஷ விருட்சம் விரிந்து பரவிட வழிகாண வேண்டாம் என மக்கள் சக்தி எனும் மகேசனிடம் பிரார்த்தனை செய்கிறேன்.

அர்த்த ராத்திரியில் ஐம்பதாயிரம் கழக உடன்பிறப்புகளை லாரிகளில், வேன்களில் ஏற்றி தஞ்சைக்கும், சென்னைக்கும், வேதாரண்யத்திற்கும் வேலூருக்குமென்று சிறைவிட்டு சிறை இட்டு நிரப்பினார்களே; அதற்குப் பெயர்தான் அதிகாரியார் அங்கலாய்க்கும் ஜனநாயகமோ?

ஏறத்தாழ எழுபது தமிழக்குல மாந்தர் என் இனிய உடன்பிறப்புகள் தீயிட்டுக் கொண்டும் - அதிர்ச்சியில் நெஞ்சு வெடித்தும் - ஆவிகளை அர்ப்பணித்தனரே; அந்த ஒரு கறுப்புநாளின் கடுமை தாங்க முடியாமல்; அந்த நாளைக் கருவுற்றுப் பிரசவித்த சர்வாதிகார ஏதேச்சாதிகார சாத்தானுக்கு ஜனநாயகம் எனும் ஒரு செல்லப் பெயருமுண்டோ? அங்ஙனமாயின் அது செல்லப்பெயர் அல்ல; செல்லாப் பெயர்!

தமிழக வரலாற்றில் இடம் பெற்றுள்ள பொல்லாப் பெயர்! நல்லோர் உள்ளத்தில் நில்லாப் பெயர்! ஜனநாயகமாம் ஜனநாயகம்; அந்த நெறிப்படி இந்த அரசும், இந்த அரசின் காவல்துறையும் நமது பேரணிக்கு அனுமதி அளித்துள்ளதாம்!

எப்படி அனுமதி? அடடா; சென்னைக்குச் செல்லும் பேரணி வீரர்கள் எவருக்கும் - அரசுப் பேருந்துகள் மட்டுமல்ல; தனியார் பேருந்துகளும் தரக்கூடாது என உத்திரவு! தனியார் பேருந்துகள் மட்டுமல்ல; வேன்களும் வழங்கிடக்கூடாது - இப்படியொரு கட்டளை! மிரட்டல்! அச்சுறுத்தல்!

இவ்வளவு தடைகளையும் வாய்ச் சொல்லாம் அருளியவாறே இட்லர் தர்பார் நடத்துவோர்; ஜனநாயகத்தைப் பற்றிப் பேச

பெற்றுள்ள தகுதியை எண்ணியெண்ணிச் சிரிக்கத்தான் வேண்டியுள்ளது.

"ஜனநாயகம் வீட்டு விளக்கு -
சர்வாதிகாரம் காட்டுத்தீ"

என்று அறிஞர் அண்ணா மொழிந்ததை நினைத்துப் பார்க்கவோ - அல்லது எடுத்துச் சொல்வோரை ஏறெடுத்து நோக்கவே எங்கே நேரம் இவர்களுக்கு!

ஆகஸ்டு 6ஆம் நாள் நூறு இடங்களில் இந்த அரசின் மினி எமர்ஜென்சியைக் கண்டித்து - செயற்கைப் புகார்கள் மீதான பொய் வழக்குகளைக் கண்டித்து - ஹெராயின் வைத்துக் கைது செய்யும் போக்கைக் கண்டித்து - போலீஸ் ராஜ்யத்தின் துளிர்விடும் கெடுபிடிகளைக் கண்டித்து - கழகச் சார்பில் பேரணிகள் நடைபெற்றிருக்கின்றன.

எந்த ஓர் இடத்திலும் கலாம் விளைந்ததாகவோ - கைகலப்பு ஏற்பட்டதாகவோ எந்தச் செய்தியும் வரவில்லை - ஆனால் சென்னைப் பேரணியில் மட்டும் வன்முறையை எதிர்பார்த்து வானளாவிய தற்காப்பு ஏற்பாடுகள் என்கிறார்கள் எனும்போது; உடன்பிறப்பே; நீதான் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்!

நூறு இடங்களில் நமது பேரணி வெற்றி கண்டு ஆளுங்கட்சியினர் ஆறாத எரிச்சல் கொண்டுள்ளனர். அவர்கள் ஒரு வேளை; மோதல் செயல்களில் ஈடுபடக் கூடும்! நீதி நியாயத்தை உணர்ந்திருப்பினும் அதனை வெளியிட முடியாமல் மோதலுக்கு முதலில் வித்திட்டோர் பக்கமோ போலீசார் பரிந்து பேசிடவும் - செயல்படவும் கூடும்! எனவே என்னதான் ஆளுந்தரப்பிலிருந்து ஆத்திரமூட்டப்பட்டாலும் அதனை அமைதி வழிநின்று வென்று காட்டிடு!

பேரணியின் ஒவ்வொரு அங்குல அசைவையும் பொது மக்கள் பார்த்துக் கொண்டுதானிருப்பார்கள் - பத்திரிகையாளர்கள் பார்த்துக் கொண்டுதானிருப்பார்கள். அவர்களுக்குத் தெரிந்துவிடும்; எங்கிருந்து வம்பு தொடங்குகிறது என்பது!

தடாகம் அமைதியாக இருக்கும் வேளையில்தான்; அதில் எங்கே ஒரு சலனம் ஏற்படுத்தப்படினும்; கண்டுகொள்வது எளிதாக இருக்கிறது!

எனவே உடன்பிறப்பே; நீயுண்டு - உன் முழக்கம் உண்டு - உன் கையில் இரு வண்ணக் கொடி உண்டு - மறைமலை அடிகளார் பாலம் தொடங்கி, கடற்கரை காமராஜர் சாலை வரையில் அமைதியின் உருவமாய் நடைபோட்டு வா! ஆர்த்தெழும் சிங்கமாய்க் கொள்கை முழக்கமிட்டு வா!

"நமக்கு நாமே பாதுகாப்பு! நமக்கு நாமே நமது
பட்டாளத்துச் சிப்பாய்கள்!

இராணுவ உடையணியாத இராணுவ வீரர்கள்
நாம் என்பாரே அண்ணா -

அந்த அண்ணனின் ஆசைப்படி நடக்கட்டும்
நமது பேரணி!"

நான் காத்திருக்கிறேன்; கண்களை விசாலமாக்கிக் கொண்டு உன்னைக் காண்பதற்காக!

அனபுள்ள,

மு. கருணாநிதி

(11-08-2001)

2624. ஆயுதமேந்தி வருவர்; அறிவாயுதம் அதன் பேர்!

உடன்பிறப்பே,

தி.மு.க. பேரணியில் பங்கேற்பவர்கள் ஆயுதங்கள் கொண்டு வந்தால், கடும் நடவடிக்கை எடுக்கப்படும். ஆயுதங்களும் வாகனங்களும் பறிமுதல் செய்யப்படும். அந்த நபர்கள் கைது செய்யப்பட்டு அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்

இப்படி எச்சரித்திருப்பவர் போலீஸ் டி.ஜி.பி.யாக இருக்கும் திரு. ரவீந்திரநாத் அவர்கள்.

"இவர் யார் எச்சரித்திட; நாம் யார் காதில் போட்டுக் கொள்ள? என்று பதிலுரைத்திடவோ; அல்லது மீறிச் செயல்படவோ நாமொன்றும் பண்பாடுகளைப் போட்டு மிதிக்கும் தாதாக்களின் தலைவர்களுமல்ல; அவர்தம் தோழர்களுமல்ல! அத்தகையோர் இருக்கும் திக்கு தெரிந்திருந்தும் தெரியாதவரைப் போலக் காவல் துறைத் தலைவர் கழகப் பேரணியில் வருவோரை எச்சரித்திருப்பது தான் வேடிக்கையாக இருக்கிறது. உடன்பிறப்பே; ஒன்றை மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். சென்னைப் பேரணியில் அணி வகுப்போர் ஆயுதமேந்தித் தான் வரப்போகிறார்கள். அது என்ன ஆயுதம் என்பதை அதிர்ச்சிக்கும் ஐயத்துக்கும் இடமின்றி உடனடியாக உணர்த்தி விடுகிறேன்."

சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பு ராஜாராணி எனும் திரைப்படத்தில் இரண்டு மூன்று ஓரங்க நாடகங்களை இணைத்துத் திரைக்கதை வசனம் தீட்டியிருந்தேன்.

அந்த நாடகங்களில் என் நண்பர் நடிகர் திலகம் சிவாஜி பிரதான பாத்திரங்களேற்று நடித்திருந்தார். அந்த மூன்று ஓரங்க நாடகங்களில் சாக்ரடீசும் ஒன்று!

சிவாஜி, பெரியார் வேடமேற்று நடிக்காதது பெருங்குறையென்று இன்று பேசப்படுகிறதே; அந்த சாக்ரடீஸ் வேடத்தையும், நடிப்பையும், உரையாடல்களையும் கண்டு கேட்டு இன்னமும் நினைவில் வைத்திருப்பவர்களுக்கு மனத்தில் அந்தக் குறையும் இருந்திட வாய்ப்பில்லை எனலாம்.

சாக்ரடீசை, இப்படி அறிமுகப்படுத்துகிறேன் அந்த நாடகத்தில்!

"குள்ள உருவம் - திடகாத்திரமான தேக அமைப்பு - சுழன்று கொண்டேயிருக்கும் ஒளி விளக்கு போன்ற கண்கள் - தட்டையான மூக்கு - துடிப்பு நிறைந்த அகன்ற புருவங்கள் - தடித்த உதடுகள் - சிறிய தாடி - போர்வை போல் உடல் முழுவதும் மறைத்திருக்கும் பட்டும் பஞ்சும் கலந்த சாதாரணமான ஒரே உடை - இவன்தான் கிரேக்கம் தந்த கீர்த்தி வாய்ந்த அறிஞன் சாக்ரடீஸ்! ஏதென்ஸ் நகரத்து மூலைமுடுக்குகளிலே, சந்து பொந்துகளிலே, போவோர் வருவோரை நிறுத்தி வைத்துத் தர்க்கவாதம் புரியும் இலட்சியவாதி"

அந்த இலட்சியவாதி, இளைஞர்களை நோக்கி - வாலிபப் பட்டாளத்தை அழைத்து - ஆயுதமேந்துங்கள் என்கிறான். நானும் ஆயுதம் ஏந்தி வரும் எங்கள் அணிவகுப்பு என்கிறேன்! நான் சாக்ரடீஸ் அல்ல; சாதாரணமானவன் - சாமான்யன்!

ஆனால் அவன் பரிந்துரைத்துள்ள ஆயுதத்தைப் பரிந்துரைக்கும் பக்குவத்தைப் பெற்றவன் - அல்லது என் தலைவர்களிடத்திலே கற்றவன்!

இதோ; சாக்ரடீசின் அழைப்பு!

"ஏற்றமிகு ஏதென்சு நகரத்து எழில் மிக்க வாலிபர்களே! நாற்றமெடுத்த சமுதாயத்தில் நறுமணம் கமழ்விக்க - இதோ சாக்ரடீஸ் அழைக்கிறேன்; ஓடி வாருங்கள்! பச்சை ரத்தம் பாய்ந்தோடக் கச்சைக் கட்டிக் களம் செல்லும் காளையரே! உங்களைத்தான் கூவி அழைக்கிறேன்... கூட்டம் கூட்டமாகச் சூழ்ந்து வாருங்கள்! வீரம் விலை போகாது, விவேகம் துணைக்கு வராவிட்டால்! தீட்டிய வாளும், தினவெடுத்த தோள்களிலே தூக்கிய ஈட்டியும்

தேவையில்லை; தீரர்களே!! இருட்டுமேனியும் குருட்டுமதியும் கொண்ட மடமைப் பைசாசத்தை ஒரே நொடியில் ஒழித்துக் கட்டும் புதிய போர்க்கருவி! புறங்காணா வீரர்களின் அகங்காட்டும் புரட்சிக் கருவி! புலி நிகர் பருவ இளைஞர்களே! என்னோடு புறப்படுங்கள்! பகைவன் நம் நாட்டுக்குள்ளே புகுந்து விட்டான் - படை எதுவுமின்றி! பாமரரின் உள்ளத்தைக் கொள்ளை அடித்து விட்டான். அறியாமை அந்தகாரத்திலே மக்களை மூழ்கடித்து விட்டான், மூட நம்பிக்கை எனும் அந்தப் பகைவன்! எழில் மிகுந்த நமது நாட்டை அறிவுப் பொழிலாக மாற்ற ஆற்றல் நிறை தோழர்களே, அணி வகுத்துப் புறப்படுங்கள்! அறிவாயுதமேந்திப் புறப்படுங்கள்!"

இதனை நித்தமும் கேட்டு எரிச்சலுற்ற சாக்ரடீசின் எதிரிகள் அனிடஸ், மெலிடஸ், லைகன் என்பார் மூவரும் ஒன்று கூடி என்ன பேசினார்கள்?

அறிவாயுதமாம் - அனைத்துலகும் அடி பணியும் அஸ்திரமாம் - அந்த ஆயுதம் அனைவரின் கைக்கும் கிடைத்து விட்டால் பிறகு நாம் தலைதூக்கவே முடியாது என்று அனிடஸ் அங்கலாய்க்கிறான்.

ஆமாம், பொது மக்கள் கழுதைகளாயிருந்தால்தான், நாம் தூக்கி வைக்கும் பொய் மூட்டைகளைச் சுமந்து நடப்பார்கள். குருடர்களாய் இருந்தால்தான் நாம் சொல்லுகிற வழியில் செல்வார்கள். இப்படி நாம் கிழித்த கோட்டைத் தாண்டாத மக்களுக்கு இவன் அறிவாயுதம் வழங்குவதற்குள் இவனை நாம் அழித்து விட வேண்டும் என வழி மொழிந்தான் மெலிடஸ்.

அதன் தொடர்ச்சியாக விசாரணை மண்டபத்தில் சாக்ரடீசுக்கு சாதகமாக 220 வாக்குகளும், மரண தண்டனை அளிக்குமாறு 281 வாக்குகளும் பதிவாகின்றன. முடிவறிந்து தனது முடிவை அறிந்த முதியோன், அந்த மன்றத்தில் பேசினான்;

இந்த நீதிமன்றம் பெருமைக்குரிய தீர்ப்பை அளித்து மௌனப் புன்னகை புரிகிறது! உலக சரித்திரத்திலே இடம் பெறுகிற இந்தத் தீர்ப்புக்கு ஆளாகிவிட்ட பெருமை முதன் முதலாக எனக்குக்

கிடைத்திருக்கிறது. அறிவாயுதத்தைக் கையிலே ஏந்து என்று கூறியதற்கு அழிவைப் பரிசாகத் தரும் புண்ணிய காரியத்தை நிறைவேற்றி விட்டார்கள்!.. 281-220!.. முப்பத்தொரு வாக்குகள், இப்படித் திரும்பி விழுந்திருந்தால் சாக்ரடீஸ் காப்பாற்றப்பட்டிருக்கலாம்! அந்த வாக்குகளும் ஆயிரக்கணக்கான நாணயங்கள் செலவிடப்பட்டு வாங்கப்பட்டவை என்பதைக் கூறாமலிருக்க முடியாது! கவலையில்லை! இந்த மன்றத்தின் முறைப்படிப் பேசி வாழ்வதைக் காட்டிலும், என் முறைப்படிப் பேசிச் சாவது எவ்வளவோ மேன்மையானது!.. எனக்குத் தெரியும்; ஒரு மனிதன் - எதையும் பேசி, எதுவும் செய்து, மன்னிப்புக் கேட்கத் தயாராயிருந்தால் இது போன்ற தண்டனைகளிலேயிருந்து நிச்சயம் மீளலாம்! களத்திலே எதிரியின் காலில் விழுகிற போர் வீரனாக மாறிவிட நான் நினைத்ததில்லை. அதனால் மரணத்தைப் பரிசாகப் பெற்றிருக்கிறேன்.

உடன்பிறப்பே, இப்படிப் பேசி அறிவாயுதம் ஏந்திடச் சொன்னவனுக்கு அது தண்டனை!

அரிவாளோ, சுத்தியோ, வாளோ, வேலோ, சூலாயுதமோ, சுக்குமாந்தடியோ, ஈட்டியோ, கட்டாரியோ ஏந்திக் கொண்டு கழகப் பேரணிக்கு வந்திடு - அணி வகுத்திடு என்று யாரும் யாரையும் அழைக்கவில்லை. யாரையாவது போலீசார், நம் மீது களங்கம் கற்பித்திட கூலிக்கு நாலு ஆட்களைப் பிடித்து அவர் கையில் ஆயுதங்களைத் திணித்து நடவடிக்கை எடுத்தால் தவிர - அதாவது ஹெராயின் வழக்கு ஜோடிப்பது போல செய்தால் தவிர - வேறு எவரும் என் உடன்பிறப்புகள் - ஆம், உண்மையான உடன்பிறப்புகள் - ஆயுதமேந்திடும் அராஜக வழி சென்றிடமாட்டார்! அமைதி குலைத்திட எண்ணிட மாட்டார்!

அதே நேரம் வீண் மிரட்டல்களுக்கும் அஞ்சிட மாட்டார்! ஆயுதமேந்தி வருவர்; அறிவாயுதம் அதன் பேர்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

(12-08-2001)

2625. பாசிச ஆட்சியின் கீழ் தத்தளிக்கும் தமிழகம்!

உடன்பிறப்பே,

தேனினுமினிய இயல்பும் - தேக்குமரத் தேகமும் படைத்தவனான - பாட்டாளிகளின் அன்புத் தோழன் - என் அருமைத் தம்பி வை. பெருமாள் கழகத் தொண்டர்கள் மீது காவலர்களின் கடும் தாக்குதல் கண்ட அதிர்ச்சியால் நெஞ்சு வெடித்துச் சாகிற அளவுக்கும் தஞ்சை மாவட்டம் சீர்காழி நகரக் கழகத்தின் கண்மணி செல்வ ரமேஷ் காவல் துறையினரின் தடியடிக்குப் பலியாகிற அளவுக்கும் - திண்டுக்கல் நகரக் கழகச் செயல்வீரன் அந்தோணியின் மண்டை பிளக்கப்பட்டு மரணமடைகிற அளவுக்கும் - துப்பாக்கி ரவை பாய்ந்து சென்னை சைதாப்பேட்டை கழக உறுப்பினர் சோலை முருகேசனின் உயிரைக் குடிக்கிற அளவுக்கும் - கோவை மதுக்கரையிலிருந்து நண்பர்களுடன் வேனில் வந்த ரெங்கசாமி என்ற கழக மாமணியை அவர்கள் வந்த வாகனத்துடன் கொளுத்தி, துடித்துக் கருகிய ரெங்கசாமியைக் சாம்பலாக்கியதுடன், அவர்கள் வந்த வேனையும் தீயிட்டுப் பொடியாக்கியும் கோர நர்த்தனமாடிய போலீசாரும் மற்றும் ரௌடிகளும் வெறிக் கூச்சல் போடுகிற அளவுக்கும் குப்பத்து தாதாவின் கையாளின் அரிவாள் வெட்டுக்கு ஆளாகி ராயப்பேட்டை மருத்துவமனையில் ஜெயகுமார் என்ற கழகத் தொண்டர் உயிரிழந்த அளவுக்கும் இதுவரை தெரிந்த அளவில் ஆறு உயிர்கள் - கழகத்தின் கொடி நிழலில் நின்று கொள்கை காத்தோர் உயிர்கள் - சென்னையில் நடைபெற்ற கழகப் பேரணியில் கயவர்களின் ரத்தப் பசிக்கு இரையாக வழங்கப்பட்டுள்ளன.

இன்னும் எத்தனை உயிர்களைப் பறித்தாலும் இளகிடாத இதயத்துடன் அதிகார ரீதியாகவும் - அரசியல் ரீதியாகவும்; ஆணவத்தையும் அலட்சிய மனப்பான்மையையும் துணைக்கு அழைத்துக் கொண்டு விமர்சிக்கின்றவர்கள் இருக்கத்தான் செய்வார்கள்!

இப்படிப்பட்டவர்களும் இருக்கிறார்களேயென்று நம் நெஞ்சம் கனத்துப் போகும்போது நாட்டு நன்மையில் அக்கறையும், மக்கள் உரிமையிலும் நலனிலும் மெத்தக் கவலையும் கொண்ட உள்ளத்தினர், இன்னும் இந்த உலகில் வாழ்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்ப்பதிலே எனக்கோர் ஆறுதல்!

பலிகள் ஐந்தாறு உயிர்கள் - பலத்த காயம் பட்ட என்பாசமிகு உடன்பிறப்புகள் சுமார் நூறு பேர் - அந்தக் காயங்களில் வழியும் குருதியை வழித்துத் துடைத்தவாறு என்னைக் கண்டதும் வலி மறந்து வாழ்க கழகம் என்று முழங்கிடும் காட்சி - இவற்றை நேரடியாகக் கண்டபோதும்; எனது உயிரனைய உடன்பிறப்புகளை ஓட ஓட விரட்டி அவர்களைத் துப்பாக்கிளால் சுட்டு, தடிகளால் தாக்கி, தங்களின் தோழர்களாக துணைக்கு வந்த குப்பத்து தாதாக்களின் படை வரிசையை ஏவி பட்டாக் கத்தி, வீச்சரிவாள், சுருள் கத்தி போன்ற வன்முறை ஆயுதங்களால் வெட்டி வீழ்த்தி, சென்னைக் கடற்கரையை ரணகளமாக ஆக்கியபோதும்; அய்யோ! எதற்காக உன்னை இந்தப் பேரணிக்கு வருமாறு கடிதம் எழுதினேன்? என்று என் தலையில் அடித்துக் கொண்டேன். என்னால் அல்லவா உனக்கு இந்த வேதனை. வெட்டுண்டு ரத்தம் கொட்டும் உன் தலை தொட்டும், கை கால் தொட்டும் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் தடவை விட்டு விட்டால் இனி இவர்கள் அடிக்கடி பேரணி, மாநாடு, ஊர்வலம் என்று நடத்துவார்கள். எனவே ஒரேடியாக சென்னைப் பேரணியில் இவர்களில் நூறு பேருக்காவது சமாதி கட்டிவிட வேண்டும்

என்று சதித் திட்டம் வகுக்கப்பட்டதாகக் கேள்விப்பட்டேன். அது உண்மையாகவே ஆகிவிட்டது. சென்னைப் பேரணியில் கட்டவிழ்த்துவிடப்பட்ட ரௌடிகள் வன்முறையும், அதனைப் போலீசார் வேடிக்கை பார்த்த நிகழ்ச்சியும், ஏன்; அவர்களே குப்பத்து தாதாக்களின் படை வரிசையில் ஒரு வரிசையாக நின்று கழகக் கண்மணிகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததும் நான் கேள்விப்பட்டதை உண்மையென்றே நிரூபித்துவிட்டன. இத்துடன் நான் இணைத்துள்ள படத்தைப் பார்த்தாலே உனக்குப் புரியும்.

பேரணிக்கு மூன்று நாட்களுக்கு முன்பே மந்திரி குமார் ஒருவரும், குப்பத்து தாதா ஒருவரும், காராத்தே வீரர் ஒருவரும் ரகசியமாகச் சந்தித்தனர்.

அதன் விளைவாகத்தான் சென்னைப் பேரணியிலே அமைதி காத்திடுவதற்கு ஆயத்தம் ஏதும் செய்யாமல் - காவல் துறையினர் காலிகளுடன் கூட்டணி சேர்ந்து கடற்கரை மணலை ரத்த மழையால் நனைத்திடத் துணை புரிந்திருக்கின்றனர்.

கடற்கரையோரமுள்ளது டி.ஜி.பி. அலுவலகம், அந்த அழகான கட்டிடத்தை இடித்து விட்டு வேறு இடத்தில் கட்டிடம் கட்டவும் - தொன்மையான அந்தக் கட்டிடத்தை இடிக்கப் பல லட்சம் பேரமும் பேசப்பட்டு - கட்டிடம் இடிக்கப்படும் நிலையில் 1996-ல் கழக ஆட்சி வந்தது. தொன்மை வாய்ந்த வரலாற்றுப் புகழ் பெற்ற டி.ஜி.பி. அலுவலகம் கடற்கரையில் இருப்பதே சிறப்பு என சட்டமன்றத்தில் நான் அறிவித்து புதிய பொலிவுடன் அந்தக் கட்டிடம் பழுது பார்க்கும் பணிகள் நடைபெற்று, ஒரு வெள்ளை மாளிகையாக இன்று கடற்கரையில் காட்சி தருகிறது. அந்த வெள்ளை மாளிகைக்குள்தான் (ஒருமுறை ஜெயலலிதா பட்டம் சூட்டினாரே) அந்தக் கறுப்பு ஆடுகள் சில புகுந்து கொண்டு - சமூக நலன் பாதிக்கப்படுகிற அளவுக்கு செயல்பட்டு வருகின்றன.

இல்லையேல்; சின்னமலைக்கருகில் மறைமலை அடிகளார் பாலத்திலிருந்து பல வீதிகளைக் கடந்து 10 கிலோ மீட்டர் தூரத்துக்கு மேல் அமைதியான முறையில் லட்சக் கணக்கானோர் பங்கேற்ற அந்தப் பேரணி; கடற்கரைக்கு அதுவும் டி.ஜி.பி. அலுவலகத்துக்கு அருகே வரும்போது; விளக்குகள் அணைவானேன்? வீண் வம்பு இழுக்கும் காரியத்தைச் சில விஷமிகள் நடத்துவானேன்? அதனை காவலர் கண்கொட்டாமல் வேடிக்கை பார்ப்பானேன்?

நல்லெண்ணங் கொண்ட நடுநிலை ஏடுகள் கேட்டிருப்பதுபோல - வருகிற வழியெல்லாம் போலீசார் மெட்டல் டிடக்டர் வைத்து கழகத்தினரிடமோ, அல்லது அவர்கள் வந்த வாகனங்களிலோ ஆயுதம் எதுவும் உள்ளதா என்று துருவித் துருவி ஆராய்ந்து ஆயுதங்கள் எதுவுமில்லையென்று அனுப்பியுள்ள நிலையில், அரிவாள்களுடனும், பட்டாக் கத்திகளுடனும் பேரணியில் வந்த கழகத்தினர் எவ்வாறு களத்தில் குதித்திருக்க முடியும்?

இதோ இந்து ஏடு எழுப்பியிருக்கும் இரண்டு முக்கிய கேள்விகளுக்கு காவல்துறை விடையளிக்கப் போகிறதா? அல்லது மாநில அரசின் விசாரணைக் கமிஷன் காரணத்தை கண்டு

சொல்லப்போகிறதா? ஒருவேளை ஜெயலலிதாவின் அறிக்கையே போதுமானதென்று, கமிஷன் கருதப் போகிறதா?

இதோ, இந்துவின் கேள்விகள் :-

காவல் துறை ஆணையரின் அறிக்கையிலே அயோத்தியா குப்பத்திற்கு அருகிலே வன்முறை நடைபெறுவதாக கேள்விப்பட்டவுடன் அந்த இடத்திற்கு காவலர்கள் விரைந்தனர் என்று கூறியிருக்கிறார். சென்னை மாநகர காவல் துறை பேரணி பாதுகாப்பிற்காக 13 ஆயிரம் காவலர்களை தயாராக வைத்திருப்பதாக கூறியிருந்த நிலையில், வன்முறை நடைபெறக் கூடுமென்று எதிர்பார்க்கக் கூடிய அயோத்தியா குப்பத்திற்கு அருகிலே காவலர்களை நிறுத்தாதது ஏன் என்பது புதிராகவே உள்ளது என்று இந்து இதழில் கேள்வி கேட்டுள்ளார்கள்.

இரண்டாவதாக காவல்துறை ஆணையர் செய்தியாளர்களுக்கு அளித்த குறிப்பில், அயோத்தியா குப்பத்தைச் சேர்ந்தவர்கள்தான் தி.மு.க.வினரைத் தாக்கினார்கள் என்று கூறப்பட்டுள்ளது. அப்படியானால் ஏன் இதுவரை அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் யாரும் கைது செய்யப்படவில்லை என்றும் இந்து கேட்டுள்ளது. அக்கிரமம் - அநியாயம் - அராஜகத்தை மூடி மறைக்க 102 காவல்துறையினர் காயம் பட்டதாக அதிகாரிகள் கூறியுள்ளனர்.

உடன்பிறப்பே, 12-ந் தேதி இரவு ராயப்பேட்டை மருத்துவமனைக்கு சென்று காயம்பட்ட கழகத்தினரைப் பார்த்துவிட்டு, 13-ந் தேதி காலை அரசு பொது மருத்துவமனைக்கு நானும் பேராசிரியரும் சென்றோம். உண்மையிலேயே காயம்பட்டு சிகிச்சை பெற்று படுத்திருந்த கழகத்தினரை அவசர அவசரமாக வெளியே அனுப்பிவிட்டு, சுமார் 50 போலீசாரைக் கொண்டு வந்து உட்கார வைத்திருந்தனர். பாவம்; அவசரமாக அழைத்து வரப்பட்டவர்கள். அவசர சிகிச்சைக்காகவோ - அவசிய சிகிச்சைக்காகவோ அல்ல- அவர்களை நான் அவர்கள் வரிசையாக உட்கார்ந்திருந்த நிலையில் பார்த்துக் கொண்டேதான் உள்ளே நுழைந்தேன்.

ஏதோ அலுவலக இன்டர்வியூக்கு வந்து காத்திருப்பவர்கள்போலக் காட்சி தந்தார்கள். நான் பார்ப்பதற்காக சென்ற கழக உடன்பிறப்புகளின் காயங்களை நான் பார்த்து விடக் கூடாதென்று (ஒருவரைத் தவிர) அனைவரையும் வேறு பகுதிக்கு

மாற்றி விட்டார்கள். அதனால் அவர்களை நான் சந்தித்து ஆறுதல் கூற வாய்ப்பில்லாமல் போயிற்று. அதனால்தான் சொல்லுகிறேன்; அரசின் எல்லா துறைகளுமே மினி எமர்ஜென்சி காலத்தை அனுபவித்துக் கொண்டிருக்கின்றன. 15,000 போலீசார் பாதுகாப்பு என்று கொட்டை எழுத்தில் அறிக்கை விட்டது போலீஸ் அதிகார வர்க்கம் - ஆனால் லட்சக்கணக்கான மக்கள் திரண்டிருந்த பேரணி பொதுக் கூட்டத்தின் பக்கம் ஒரு போலீஸ்காரர் கூட வரவில்லை என்பதை ஏடுகளும் உறுதிப் படுத்தியுள்ளன.

கூட்டத்தில் செய்தி சேகரிக்கவும், பேரணியில் படம் எடுக்கவும் வந்த நிருபர்களையும், புகைப்படக்காரர்களையும் பெண் நிருபர்கள் என்று கூடப் பார்க்காமல் ஆஜ் டெக் செய்தியாளர் ஜெயஸ்ரீ மற்றும் நக்கீரன் செய்தியாளர் பிரகாஷ், ஜீ டி.வி. கேமராமேன் மனிஷ், ஏசையா, இந்து புகைப்படக்காரர் மூர்த்தி, தினமணி புகைப்படக்காரர் ராஜி ஆகியோரைச் சகட்டு மேனிக்கு எல்லோரையும் போலீசாரின் குண்டாந்தடிகள் பதம் பார்த்திருக்கின்றன. அவர்களது புகைப்படக் கருவிகள், வீடியோ சாதனங்கள் பறிக்கப்பட்டிருக்கின்றன.

வீடியோ சாதனங்கள் மட்டுமா? மொத்தத்தில் பத்திரிகை சுதந்திரம் - மக்களின் சுதந்திரம் - எதிர்க்கட்சிகளுக்குரிய ஜனநாயக உரிமை - அனைத்துமே பறிக்கப்படுகிற பாசிச ஆட்சியின் கீழ் தமிழகம் தத்தளிக்கிறது இன்று!

தலைவலியும் காய்ச்சலும் தங்களுக்கு வந்தால்தான் தெரியும் என்ற பழமொழியை மறந்தவர்களால் இதனை உணர்ந்து பார்க்க முடியாது.

அன்புள்ள,

மு. கருணாநிதி

(15-08-2001)

2626. உள்ளம் இருப்பதற்கு பதில் ஒரு பள்ளம் இருந்தால்!

உடன்பிறப்பே,

சென்னை மாநகர வரலாறு இதுவரை கண்டிராத மாபெரும் பேரணியைக் கண்டு அதிர்ந்த ஆட்சியாளர்கள் - அந்த ஆட்சியாளரின் பொம்மலாட்டத்துக்குத் தக்கபடி குதியாட்டம் போட்ட காவல்துறையின் சில கல் நெஞ்ச அதிகாரிகள் - அவர்களுக்குப் பிள்ளை குட்டிகள் இருப்பதைக்கூட மறந்து விட்டு தமது இதயங்களை அகற்றி வீசி விட்டு அராஜகச் செயல்களில் ஈடுபட்ட காவல்துறையின் குட்டி அதிகாரிகள் - பிறவியிலேயே பொல்லாதோராய் உருவெடுத்து சமூக விரோதிகளாகவே வளர்க்கப்பட்டு; எப்படியோ காக்கிச் சட்டை அணிந்து கொண்டு விட்ட காவல்துறையைச் சேர்ந்த ஒருசில கயவர்கள் - கடந்த 12ந் தேதியன்று சென்னைக் கடற்கரையை; பிண பூமி என ஆக்கிடவே திட்டம் தீட்டிச் செயல்பட்டதுடன்; அந்தப் பேய் வேலைக்குத் தோதாகவும் துணையாகவும் குப்பத்துத் தாதாக்கள் சிலரையும் ஒரு ரௌடிப் பட்டாளத்தையும் பயன்படுத்திக் கொண்டார்கள் என்பதற்காக ஆதாரங்களைப் படங்களுடன் பத்திரிகைகள் வெளியிட்டிருக்கின்றன. அந்தப் படங்களையும் ரௌடிகளுடன் போலீசார் இணைந்து நின்று நமது பேரணி மீது தாக்குதல் நடத்துவதையும் காட்டுகின்ற தொலைக்காட்சிப் பேழைகளையும் ஆளுநரிடம் அளித்துள்ளோம். டெல்லிக்கும் அனுப்பியுள்ளோம்.

ஒரு போலீஸ்காரர்க்கு விரல் துண்டாகி விட்டதாம் - அதற்கு நமது அனுதாபம்! அதே சமயம் ஆறு கழகக் கண்மணிகளின் பிணங்கள் விழுந்திருக்கின்றனவே; இதெல்லாம் தி.மு.க.வின் வன்முறையால் ஏற்பட்டது எனப் பசப்புகிறார்களே; அவர்களை எப்படித் திருத்துவது! அவர்களிடம் எந்த நியாயத்தை எதிர்பார்ப்பது!

போலீசாரும் ரௌடிகளும் கைகோத்துக் கொண்டு, நமது பேரணியில் வந்தவர்கள் மீது நடத்திய வெறியாட்டத்தை நீயும் நானும் தொலைக்காட்சியிலே கண்டோம். அதில் ஒரு காட்சி. கடற்கரையில் நடைபாதையில் காவலர்களால் பட்ட அடியால் காலொடிந்து, தலை உடைந்து ரத்த வெள்ளத்தில் மிதக்கிற ஒரு கழகக் கண்மணி கதறிக் கொண்டிருக்கிற காட்சி - அய்யகோ; அவர் என்ன ஆனார் என்று தெரியாமலே ஏங்கிக் கொண்டிருந்தேன்.

என்ன ஆனார்? இரக்கமில்லாத அரக்கர்களால் அவர் எப்படி நடத்தப்பட்டார் என்பதை இன்று காலை சட்டமன்ற உறுப்பினர் தம்பி கடலூர் புகழேந்தி என்னிடம் விளக்கிக் கூறியதுடன்; அந்தக் காலொடிந்த கழகப் பெரியவர் மருத்துவமனையிலிருந்து எழுதிய கடிதமொன்றையும் காட்டினார்.

அந்தக் கடிதத்தைப் படித்த போது 1976ஆம் ஆண்டு எமர்ஜன்சி கொடுமையின் போது மிசாக் கைதிகளாக சென்னை சிறையில் அடைக்கப்பட்ட கழகத்தினர்க்கு அந்த சிறை அதிகாரிகள் சிலரால் இழைக்கப்பட்ட கொடுமைகள்; நீதிபதி இஸ்மாயில் கமிஷன் விசாரணையின்போது வெளிப்படுத்தப்பட்டதே; அது தான் மீண்டும் என் நினைவுக்கு வந்து கண்ணீரை வரவழைத்து. மிசாக் கைதிகளுக்கு அளிக்கப்பட்ட சோற்றில் சிறுநீரைக் கலந்து கொடுத்து, கழகத்தினர் கால் கைகளை ஒடித்த சிறை அதிகாரிகள் சிலரின் குடும்பங்கள் பூண்டற்றுப் போய் விட்டன. இது 1976ல், வினை விதைத்து வினை அறுத்தவர்களின் கதையாகும். அந்தக் கதை மீண்டும் தொடராமலா போய்விடும்? என்பதை கடின சித்தமுடைய காவல் துறை அதிகாரிகள் ஞாபகத்தில் கொள்வது நலமாகும்.

புகழேந்தி என்னிடம் காட்டிய கடிதத்தை அப்படியே; நீ படிப்பதற்காக இணைத்துள்ளேன். அந்தக் கடிதம் வருமாறு :-

சுகுணன் (வயது 65) அக்கரை-கோரி, வட்டம் 39, கடலூர் நகரம்.

நான் நீண்ட காலமாக தி.மு.க.வில் உள்ளேன். மறைந்த இரெ. இளம்வழுதியுடன் கழகப் பணி செய்தவன். தலைவர் கலைஞர் அவர்கள் மீது உயிரை வைத்திருப்பவன்.

கண்டனப் பேரணியில் கலந்து கொள்ள கடலூர் ஓ.டி.யில் இருந்து புறப்பட்ட வேனில் சென்னைக்கு வந்தேன்.

பேரணியில் போலீஸ் அலுவலகத்திற்கு முன்னால் போலீஸ் எல்லோரையும் காரணமின்றி அடித்து விரட்டியது.

நான் கலைஞர் வாழ்க என்று கத்திக் கொண்டிருந்தேன்.

எனது தலையிலும் இடது காலிலும் போலீஸ் அடித்தது. வலி தாங்க முடியாமல் கீழே விழுந்து துடித்தேன்.

கொஞ்ச நேரத்தில் மூன்று பெண் போலீசாரும் இரண்டு ஆண் போலீசாரும் வந்தார்கள்.

அவர்கள் என்னை போலீஸ் வேனில் தூக்கிப் போட்டார்கள்.

நான் வலி அதிகமாக உள்ளது என கஷ்டப்பட்டு கூறினேன்.

அப்போது ஒரு பெண் போலீஸ் எனது இரத்தம் வழியும் இடது காலை பார்த்து யார் உன்னை அடித்தது எனக் கேட்டார்.

நான் போலீஸ்காரங்க அடித்தார்கள் என்று கூறினேன். உடனே வேனில் இருந்த போலீஸ்காரர்கள் அசிங்கமாக திட்டினார்கள்.

ஒருவன் எனது கையில் இருந்த லத்தியால் எனது வலது முழங்காலில் ஓங்கி அடித்தான்.

நான் அலறினேன். கத்தி, கத்தி நாக்கு வறண்டு போனது. குடிக்க தண்ணீர் கேட்டேன். ஒரு போலீஸ்காரன் மூத்திரம் பெய்கிறேன் குடிடா என்று கூறினான்.

பெண் போலீசாரும் சிரித்தார்கள். என் இரண்டு கால்களை உடைத்ததைப் பற்றிக் கூட எனக்கு கவலையில்லை.

மூத்திரம் குடிக்கச் சொன்னது எனக்கு உயிரே போனது போல இருந்தது.

ரெண்டு போலீஸ்காரங்க பூ சின்னம் (நட்சத்திரம்) தோளில் குத்தியிருந்தார்கள்.

நான் எனது மனசாட்சிப் படி தெளிவான மன நிலையில் உண்மையை என் விருப்பப்படி கூறியுள்ளேன். யார் எங்கு கேட்டாலும் சொல்லுவேன்.

- எஸ். சுகுணன் -

உடன்பிறப்பே,

பெட்ரோல் குண்டு எறிவதையும், கற்களைக் கண்டனப் பேரணியினர் மீது வீசுவதையும், பட்டாக் கத்தி கொண்டு கழக உடன்பிறப்புகளை ஓங்கி ஓங்கி வெட்டுவதையும் போலீசாரின் துணையோடு - ஆம்; அவர்களின் தூண்டுதலோடு செய்வதை பத்திரிகைக்காரர்கள் படம் பிடிப்பதையும், தொலைக்காட்சியினர் படம் எடுப்பதையும் தடுக்க வேண்டுமெனத் திட்டமிட்டு; அந்தத் திட்டத்திலிருந்து தப்பி வந்த காட்சிகளையும் பட ஆதாரங்களையும் நிறையவே நாம் வைத்திருக்கிறோம். அவற்றில் ஒன்றுதான்; கால் இழந்தாலும் கழகக் கொள்கையை இழக்க மாட்டேன் எனும் உறுதியுடன் மருத்துவமனையில் படுத்திருக்கும் சுகுணன் பற்றிய செய்தியும் படமுமாகும்.

அண்ணா சொன்னது போல் உள்ளம் என ஒன்றிருப்போர் இந்த உண்மையை மறைக்க மாட்டார்! உள்ளம் இருக்க வேண்டிய இடத்தில் ஒரு பள்ளம் மட்டுமே இருந்தால் அவர்களை இரக்கமுடையோர் பட்டியலில் இணைக்கவே இயலாது!

என் செய்வது; இத்தகையோர் எண்ணிக்கை இன்று தமிழகத்தில் சற்று கூடுதலாகவே இருக்கிறது!

அன்புள்ள,

மு. கருணாநிதி

16-08-2001

2627. கண்களுக்குத் திரையும், கைகளுக்குப் பூட்டும்!

உடன்பிறப்பே,

1942 முதல் முரசொலியின் ஆசிரியராக பத்திரிகைத் துறை அனுபவம்; தொடர்ந்து 59 ஆண்டுகளாக எனக்கு உண்டு என்ற உரிமையையும் - 1938 முதல் இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கு கொண்டு திராவிட இயக்க அரசியல் வரலாற்றில் தொய்வும் மாற்றமும் இல்லாத அளவில் 63 ஆண்டு காலம் பாடுபட்டு வரும் நிலையையும் அடிப்படையாகக் கொண்டு உனக்கு இக்கடிதம் எழுதுகிறேன்.

சென்னையில் தி.மு.க. சார்பில் நடைபெற்ற பேரணி குறித்தும், அப்பேரணியில் போலீசாரும் ரவுடிகளும் இணைக்கப்பட்டு; தூண்டிவிடப்பட்டு அமைதியாக அணி வகுத்து வந்த லட்சக்கணக்கானக் கழகக் கண்மணிகள் மீது வெறித்தனமாகப் பாய்ந்து அடித்தும், வதைத்தும், சுட்டுப் பொசுக்கியும் - போலீசார் போதாதென்று தாதாக்களின் தயவில் கடற்கரையைக் குருதிக் காடாக ஆக்கியது குறித்தும் - போலீஸ் அதிகாரிகளின் அறிக்கைகளையும் - முதலமைச்சர் அறிக்கைக்கும் அதிகாரிகளின் அறிக்கைக்குமிடையேயுள்ள முரண்பாடுகளையும் சுட்டிக்காட்டி, ஏடுகள் பலவற்றிலும் வந்துள்ள கருத்துக்களில் 99 சதவிகிதம் கருத்து; பத்து கிலோ மீட்டர் தூரம் பல லட்சம் மக்களைக் கொண்ட பேரணி அமைதியாக வந்திருக்கும் போது கலவரத்துக்குக் காரணமே; கடற்கரையில் குவிக்கப்பட்டிருந்த காவல்துறையினரும் - அவர்களின் பாதுகாப்பில் செயல்பட்ட ரௌடிகளும் - அவர்களுக்குப் பாசறையாக விளங்கிய டி.ஜி.பி. அலுவலகமும்தான் என்று திட்டவட்டமாகத் தெரிவித்திருப்பதையும் எடுத்துக்காட்டி; வலுவான சாட்சியங்களாக அந்த ரண களத்தில் எடுக்கப்பட்ட புகைப்படங்களையும் பொது மக்கள் பார்வைக்கும், விசாரணை நடத்தப் போகிற நீதியரசர் பார்வைக்கும் படுமென்ற

நம்பிக்கையுடன் என் கடிதங்களில் இணைத்திருக்கிறேன். நீயும் அவற்றைப் பார்த்திருப்பாய்.

நடந்தது அநியாயம் என்பதை விளக்கி, அதுவும் இந்த ஆட்சி அமைந்து மூன்று மாத காலமாகப் பத்திரிகை சுதந்திரத்தின் கழுத்தை நெரிப்பதும் - பத்திரிகை செய்தியாளர்களைத் தாக்கிக் காயப்படுத்துவதும் சர்வ சாதாரணமாகி விட்டது எனக் கூறிக் கண்டனம் செய்து சென்னை போன்ற இடங்களில் பத்திரிகையாளர்கள் உண்ணாவிரதமும், கறுப்புச் சின்னம் அணிந்த கண்டன நடவடிக்கைகளும் பெருமளவில் நடைபெற்றிருக்கின்றன.

குறிப்பாக சென்னை தி.மு.க. பேரணியில் போலீசாரும் அவர்களுடன் துணை நின்ற ரௌடிகளும் பத்திரிகையாளர்களை மட்டும் தாக்கிக் காயப்படுத்தவில்லை. தி.மு.க.வினரைப் போலீசாரும் ரௌடிகளும் தாக்கியதைப் படமெடுத்ததற்காகவும் - அச்செய்திகளை சேகரித்தமைக்காகவும் பத்திரிகையாளர்கள் மடக்கப்பட்டு, சிறை வைக்கப்பட்டு, வசைமாரி பொழியப்பட்டு, அவர்களது உடைமைகளும் உடைக்கப்பட்டன என்றாலும் - அதே போலீசாரும் ரௌடிகளும்தான் பேரணியில் வந்த தி.மு.க.வினரை வெட்டியும் குத்தியும் சுட்டும் கொன்று குவித்தார்கள் என்பதை மனமுள்ளோர் எவரும் மறுத்து விடவும் முடியாது! மறைத்து விடவும் இயலாது!

ஒருசிலர் மட்டும் இந்தப் பேரணியில் ஆட்சியாளரும், அவர்தம் ஏவலர்களும், காவலர்களும் நடத்திய வெறியாட்டத்தினால் ஆட்சியின் மாட்சிக்குக் களங்கம் ஏற்பட்டு விட்டதை உணர்ந்து - அதே நேரத்தில் தி.மு.க.வுக்கும் மக்கள் மத்தியிலே பேராதரவும் பெருமளவுக்கு நன்மதிப்பும் ஏற்பட்டு விடக்கூடாது என்பதிலே மிகுந்த எச்சரிக்கையாக இருப்பதை என்னால் உணர முடிகிறது.

அதனால்தான் தி.மு.க. - அ.தி.மு.க. - இரண்டுமே ஒரே மாதிரியான அணுகுமுறை கொண்ட கட்சிகள்தான் - இரண்டுமே மோசம் - என்ற நிலையில் தமது விமர்சனங்களைச் சிலர் செய்து கொண்டிருக்கிறார்கள்.

இல்லாவிட்டால் பல லட்சம் பேர் கலந்து கொண்டு எழுச்சியுடனும் அதே சமயம் கட்டுப்பாட்டுடனும் அமைதியாகப் பத்து கிலோ மீட்டர் தூரம் வந்த அந்தப் பேரணியில் யாரோ ஒரு

நூறு பேர் தரக்குறைவான முழக்கங்களைச் செய்ததைப் பிரதானப் படுத்துவார்களா?

தரக்குறைவாக முழக்கமிட்டவர்களின் செயல் அருவருக்கத்தக்கது - வெறுக்கக் கூடியது - நமது கழகம் கட்டிக் காத்து வரும் கண்ணியத்துக்கு மாறானது என்பதை எடுத்துக் கூறி, அச்செயலை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

கழகத்திலே மட்டுமல்ல; எந்தவொரு கட்சியிலும் இது போன்ற உணர்ச்சிமிகு நிகழ்ச்சிகளில் தலைவர்களையும் முன்னோடிகளையும் மீறி பல நடவடிக்கைகளில் தொண்டர்கள் ஈடுபட்டு விடுவதற்கு எத்தனையோ உதாரணங்கள் உண்டு.

1996 ஆம் ஆண்டு நரசிம்மராவ் பிரதமராக இருந்த நிலையில் தமிழகத் தேர்தல் கூட்டணி குறித்து எழுந்த சர்ச்சை காரணமாக காங்கிரஸ் அலுவலக வளாகத்திலேயே - தெருச்சண்டையில் நடப்பது போல - பிரதமர் நரசிம்மராவ் உருவப் பொம்மையை, கட் அவுட்களை கொடும்பாவி கொளுத்தவில்லையா? த.மா.கா. தலைவர்கள் அதனைத் தடுக்க முடியாமல் திணறவில்லையா?

ஏதோ; சென்னைப் பேரணியில் சிலர் முழக்கிய கண்ணியமற்ற கோஷங்களை நியாயப்படுத்துவதற்காக இந்த நிகழ்ச்சியை நான் நினைவுபடுத்தவில்லை.

தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நெல்லையில் நடைபெற்ற ஒரு அ.தி.மு.க. பேரணியில்; ஒரு ரத வண்டியில் அம்பாள் உருவத்தில் ஜெயலலிதா கையில் சூலமேந்தி ஆங்காரமாக நிற்பது போலவும் அவரது காலடியில் நான் நடுங்கிக் கொண்டு கிடப்பது போலவும் ஜோடனை செய்யப்பட்டு ஊர்வலம் போகவில்லையா?

உடன்பிறப்பே, சென்னைப் பேரணியில் கழகத்தினர் சிலர் கண்ணியமற்ற கோஷங்களை எழுப்பியது சரிதான் என்பதற்காக இதனைக் குறிப்பிடவில்லை.

இந்த முறைகள், கண்யமற்ற காரியங்கள் மாற்றார் முகாம்களில் இனியும் நடைபெற்றால்கூட அதற்குப் பதிலுக்குப் பதில் என்று நாம் யாரும் அத்தகைய இழிசெயல்களில் ஈடுபடக் கூடாது என்று உனக்கும் மற்ற உடன்பிறப்புகளுக்கும் உரிமையுடன் எச்சரிக்கை செய்கிறேன்.

சென்னைக் கடற்கரையில் நடைபெற்ற ரத்தக் களறிக்கு இதுதான் காரணமென்று எவரும் தீர்ப்பு எழுதி விட முடியாது. ஏனெனில் இத்தகைய வன்முறை வெறியாட்டத்துக்கும், அந்த வெறியாட்டத்தில் தி.மு.க. தொண்டர்களைச் சுட்டுத் தள்ளுவதற்கும், வெட்டிச் சாய்ப்பதற்கும் சில நாட்களுக்கு முன்பே தாதாக்களும் அமைச்சர்களும் ஓர் இடத்தில் கூடி திட்டம் வகுத்து விட்டார்கள் என்பதை முன்பே ஒரு கடிதத்தில் குறிப்பிட்டுள்ளேன்.

15-8-2001 தேதியிட்ட முரசொலி கடிதத்தில் ஒரு போலீஸ் அதிகாரி, தாதாக்களின் சீடர்களுடன் அளவளாவிக் கொண்டிருப்பதும், அந்தச் சந்திப்பும் திட்டமிடுதலும் சென்னைக் கடற்கரையில் பேரணி வரும் பகுதியிலே நடைபெற்றது என்பதும் உள்ளங்கை நெல்லிக்கனி போன்று உண்மையான விஷயம்.

மற்றும் 16-8-2001 தேதியிட்ட முரசொலி கடிதத்தில் கடலூர் சுகுணன் என்ற கழகப் பெரியவரின் படத்தையும் அவர் காவல்துறை தாக்குதலால் காலொடிக்கப்பட்ட கதையையும் காவலர்களால் கர்ண கடூரமாக நடத்தப்பட்டதையும் அவரது கடித ஆதாரத்துடனேயே பட விளக்கமுடன் எடுத்துக் கூறியுள்ளேன்.

இதோ இந்தக் கடிதத்துடன் இணைத்துள்ள இரண்டு படங்கள்!

பாண்டிச்சேரியிலிருந்து கழகத் தொண்டர்களை ஏற்றிக் கொண்டு பேரணிக்கு வந்த பேருந்து - பேருந்தின் பெயர் விஜயலட்சுமி டிரான்ஸ்போர்ட் P.Y. 01 மு 4999 என்ற எண்களைக் கொண்டது. அந்தப் பேருந்து போலீசார் வீசிய கற்களால் கடற்கரைச் சாலையில் தாக்கப்பட்டு உள்ளிருந்த தொண்டர்கள் காயமுற்றனர். இதோ பார் அந்தப் புகைப்படத்தை! கடற்கரைச் சாலையில் ஒரு காவல் துறை நண்பர்; பேருந்துக்கு முன்னால் நின்று கொண்டு பேருந்தைத் தாக்கிடும் காட்சியை! இதைக்கூட கழகத் தொண்டன், காக்கி உடை போட்டுக் கொண்டு அந்தப் பேருந்தைத் தாக்கினான் என்று ஜெயலலிதா சொன்னாலும் சொல்லுவார் - அதை நம்பாவிட்டாலும் அவர் சொன்னதைப் போட்டுத் தொலைக்க வேண்டுமேயென்று சில பத்திரிகைகள் பிரசுரித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இதோ, இன்னொரு படமும் இணைத்திருக்கிறேன். இது தனியார் டி.வி. நிறுவனமொன்று தொலைவிலிருந்து எடுத்த

காட்சி. கோவை மதுக்கரையிலிருந்து கழகத் தொண்டர்கள் வந்த வேன் - ரௌடிகளால் கொளுத்தப்பட்டு பின்னணியில் எரிந்து கொண்டிருக்கிறது. ஓடியவர்கள் போக, ஓட முடியாமல் வேனுக்கு முன்னால் விழுந்த கழகக் கண்மணி ரங்கசாமியை தாதாவின் ஒரு ஆள் ஓங்கி ஓங்கி அரிவாளைத் தூக்கி வெட்டி மூன்று இடங்களில் உடலைப் பிளக்கிறான். இப்படியொரு காட்சியில் பயங்கர வில்லனாக இருந்து விட்டவனை மறைத்து விட்டு; ரங்கசாமி விபத்தில் இறந்து விட்டதாக மருத்துவமனைச் சான்றிதழ் தயாரிப்பதற்கு முயன்றார்கள். ஆனால் நமது கழகத்தினர் கடுமையாக வாதிட்டு உண்மையை மறைக்காமல் சான்றிதழ் கொடு எனக் கேட்டுப் பெற்று, அதன் பின்னரே உடலை ஊருக்கு எடுத்துச் சென்றுள்ளனர்.

இத்தனை கொடுமைகளும் கோர நர்த்தனமாடிய காட்சியை வெளியிட்டு விடக் கூடாது என்பதற்காகத்தான் பத்திரிகையாளர்களின் கண்களுக்குத் திரையிடவும், கைகளுக்குப் பூட்டு மாட்டவும் போலீசார் முயற்சித்திருக்கின்றனர்.

அவர்களின் திட்டத்தையும் தீய நோக்கத்தையும் பொடிப் பொடியாக்கிடும் வண்ணம் போர்க்குரல் கொடுத்த பத்திரிகையாளர்கள் நமது பாராட்டுக்குரியவர்கள்! நமது பாதுகாப்புக்கும் உரியவர்கள்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

(17-08-2001)

2628. தெரிவித்தவையும்; முன்பே அறிவித்தவையும்!

உடன்பிறப்பே,

1989ஆம் ஆண்டு - அதாவது 13 ஆண்டுக்காலம் எதிர்க்கட்சியாக இருந்து விட்டு மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்புக்கு வந்த கழக அரசின் சார்பில் அந்த ஆண்டு மார்ச் திங்கள் 25ஆம் நாள் பட்ஜெட்டைப் படிப்பதற்கு நான் எழுந்து நின்றவுடன் படிக்காதே! படிக்காதே! பட்ஜெட் படிக்காதே! என்று கூச்சல் போட்டவர்கள் யார் என்பதும், - பிடுங்கி எறி அந்த பட்ஜெட்டை என்று உத்தரவிட்டவர் யார் என்பதும் - அந்த உத்திரவுப்படி அவையில் சில உறுப்பினர்கள் என்மீது பாய்ந்து பட்ஜெட் புத்தகத்தைப் பிடுங்கிக் கிழித்ததும் - அதைத் தடுக்க முயன்ற என் முகத்தில் குத்தி மூக்குக் கண்ணாடி கீழே விழுந்து நொறுங்கியதும் - அமைச்சராக இருந்த வீரபாண்டி ஆறுமுகத்தின் நெற்றியில் காயம்பட்டு ரத்தம் வழிந்ததும் - திட்டமிட்டுக் கலவரம் செய்தவர்களே; தங்களைத் தாக்கி விட்டதாக ஓலமிட்டதும்; பட்ஜெட் படிக்கும்போது கலவரம் என்று கூறி 356ஐப் பயன்படுத்தி தி.மு.க. ஆட்சியைக் கலைக்க வேண்டுமென்று ஆர்ப்பரித்து அறிக்கைகள் விட்டுக் கொண்டிருந்ததும் யார் என்பது - நாட்டு மக்கள் அனைவரும் அறிந்து வைத்துக் கொண்டு இன்னமும் மறக்காமல் இருக்கிற நிலையில், தி.மு.க.வுக்கு ஜனநாயகம் கற்றுக் கொடுக்க சிலர் முன் வருவதுதான் ஜெகஜால வேடிக்கை ஆகும்!

18-8-2001 அன்று சட்டப் பேரவையில் நிதி அமைச்சர் பொன்னையன் அவர்கள் பட்ஜெட் படிக்கும் போது, படிக்காதீர் என்று யாரும் தடுக்கவில்லை. ஆண்டாண்டு காலமாக எதிர்க் கட்சிகள் கடைப்பிடித்து வரும் ஜனநாயக முறைப்படி எதிர்க்கட்சித் தலைவர் பேராசிரியர் அவர்கள் ஓர் அறிக்கை படித்து விட்டு வெளிநடப்பு செய்தார். நேரடி ஒளிபரப்பு - ஒலிபரப்பு மூலம் நாட்டு மக்கள் அனைவரும் கண்டு கேட்ட அந்த அறிக்கை வாசகம் அவைக் குறிப்பில் ஏறாது என்றவுடன்; அவையில் கழக உறுப்பினர்களும்,

தோழமைக் கட்சி உறுப்பினர்களும் ஓரிரு நிமிடம் முழக்கம் எழுப்பி விட்டு, அமைதியாக வெளியேறி விட்டனர்.

கடந்த 5 ஆண்டு கால கழக ஆட்சியில் மூன்று நான்கு அ.தி.மு.க. உறுப்பினர்கள் அவையில் இருந்து கொண்டு, கறுப்புக் கொடி காட்டியது போலவோ - பட்ஜெட் புத்தகத்தைக் கிழித்துப் போட்டது போலவோ - எதுவும் இப்போது நடைபெற்று விடவில்லை.

ஆனாலும் தி.மு.க.வினருக்கு ஜனநாயகம் தெரியவில்லை என்று ஜெயலலிதா விமர்சித்திருக்கிறார்.

பாவம்; அவர் அகராதிப்படி அவையில் அ.தி.மு.க.வினர் இதுவரை நடந்து காட்டிய முறைகள்தான் ஜனநாயக முறைபோலும் என்றெண்ணி நமக்குள்ளே சிரித்துக் கொண்டு - இந்த ஆட்சியினர் மிகுந்த ஆரவார முஸ்தீபுகளுடன் வெளியிட்டுள்ள பட்ஜெட் குறித்து சிறிது ஆராய்வோம்!

வரப்போகிறது, வரப்போகிறது, பராக், பராக் என்று ஏக விளம்பரத்துடன் அறிவிக்கப்பட்ட பட்ஜெட் அவையிலே நேற்றைய தினம் வைக்கப்பட்டு விட்டது. காவிரி நதி குடகிலே உற்பத்தியாகிறது என்று சொல்வதைப் போல ஒவ்வொரு திட்டத்திற்கும் முன்பும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் சிந்தனையில் உதித்தவாறு என்று கட்டியம் கூறப்பட்டு அமைச்சர் பொன்னையன் அவர்களால் அது படிக்கப்பட்டது.

ஜெயலலிதா சிந்தனையிலே உதயமான அந்தத் திட்டங்கள் என்னென்ன என்பதை ஏடுகளில் நீ படித்திருப்பாய்! அதில் முதல் திட்டமாக வேளாண்மைத் துறையிலே அறிவிக்கப்பட்டுள்ள திட்டம் பயிர் செய்ய ஏற்ற 20 லட்சம் எக்டேர் தரிசு நிலங்களை வரும் ஐந்தாண்டு காலத்திற்குள் மேம்படுத்திட மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்கள் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் எனும் மிகப்பெரிய அளவிலான தொலைநோக்குத் திட்டம் ஒன்றை ஏற்கனவே அறிவித்துள்ளார் என்று கூறப்படும் திட்டமாகும். தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் புதிய திட்டமா?

2000-2001ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை நான் அவையிலே படித்த போது அதில் உள்ள வாசகங்கள் வருமாறு :-

தரிசு நில மேம்பாடு அரசின் முன்னுரிமைத் திட்டங்களில் ஒன்றாக இருந்து வருகிறது. முதல் அமைச்சர் தலைமையில் தரிசு நில மேம்பாட்டுக் குழுமம் ஒன்றை அரசு அமைத்துள்ளது. இந்த ஆண்டில் ரூ. 5.56 கோடி செலவில் பத்து மாவட்டங்களில் 25 ஆயிரம் ஏக்கர் தரிசு நிலங்களில் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு முதன் முறையாக முந்திரி, வேம்பு, பழச்செடிகள் போன்றவை அங்கே பயிரிடப்பட்டுள்ளன. வரும் ஆண்டில், மேலும் 75 ஆயிரம் ஏக்கர் தரிசு நிலங்கள் 24 மாவட்டங்களில் மேம்படுத்தப்படும். அடுத்து வரும் 10 ஆண்டுகளில் ஏறத்தாழ 25 லட்சம் ஏக்கர் தரிசு நிலங்களை மேம்பாடு செய்வதற்கான தொலைநோக்குத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது.

இதிலிருந்து தற்போது அறிவிக்கப்பட்டுள்ள திட்டம் புதிய திட்டம் அல்ல என்பதும் கடந்த ஆண்டே கழக ஆட்சியில் அறிவிக்கப்பட்டு அமல்படுத்தப்பட்டுக் கொண்டு வரும் திட்டம்தான் என்பதும் தெளிவாகும்.

அடுத்து, அந்த பட்ஜெட்டில், விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களின் வருமானத்தை அதிகரிக்கவும், வேளாண்மைத் துறையின் வளர்ச்சி வேகத்தை அதிகப்படுத்தவும், வேளாண்மை உற்பத்தியையும் உற்பத்தித் திறனையும் மேம்படுத்தவும் உதவுகிற வகையில் புதிய வேளாண்மைக் கொள்கை ஒன்று வகுக்கப்பட்டு வருகிறது என்று நிதியமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார். அதாவது புதிய வேளாண்மைக் கொள்கை தற்போதுதான் வகுக்கப்பட்டு வருவதாகக் கூறப்பட்டுள்ளது. உண்மை என்ன?

2000-2001 ஆம் ஆண்டு கழக அரசின் நிதி நிலை அறிக்கையிலேயே புதிய வேளாண் கொள்கை ஒன்றை உருவாக்கவும், அதன் செயல்பாட்டினை கண்காணிக்கவும் முதலமைச்சரைத் தலைவராகவும், வேளாண்மைத் துறை அமைச்சர், பொதுப்பணித் துறை அமைச்சர், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள், அரசுத் துறை அதிகாரிகள் மற்றும் வல்லுநர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட உயர் நிலைக் குழு ஒன்று அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, அதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. அதைத்தான் தற்போது புதிதாக வேளாண்மைக் கொள்கை ஒன்றை உருவாக்கப் போவதாக நிதி நிலை அறிக்கையிலே படித்திருக்கிறார்கள்.

மூன்றாவதாக இப்போது படிக்கப்பட்ட பட்ஜெட் அறிக்கையிலே மீனவர்களுக்காக ஒவ்வொன்றும் ரூபாய் 37,000 செலவில் 4000 வீடுகள் கட்டித் தரப்படும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. கடந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையை நான் வைத்த போது இதுபற்றி குறிப்பிட்ட வாசகங்கள் வருமாறு :-

சிந்தனைச் சிற்பி ம. சிங்காரவேலர் நினைவு மீனவர் இலவச வீட்டு வசதித் திட்டத்தின்கீழ், இதுவரை 16 ஆயிரம் வீடுகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டு அவற்றுள் 11,500 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 4,500 வீடுகள் கட்டும் பணி விரைவில் முடிவடையும். வரும் நிதியாண்டில் மேலும் 4000 வீடுகள் ரூ. 14.80 கோடி செலவில் கட்டப்படும். ஆக, 1996ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட வண்ணம் மீனவர்களுக்கு ஐந்தாண்டு காலத்தில் 20,000 வீடுகள் கட்டும் திட்டம் வரும் நிதியாண்டில் நிறைவுறும்.

எனவே 1996ஆம் ஆண்டு தி.மு.கழக அரசிலே என்னால் அறிவிக்கப்பட்ட இந்தத் திட்டத்தைத்தான் இப்போது ஏதோ புதிதாக திட்டமிட்டு அறிவிப்பதைப் போல அறிவித்திருக்கிறார்கள். ஒருவேளை, அவர்களுடைய நிதிநிலை அறிக்கையிலே 37 ஆயிரம் ரூபாய்ச் செலவில் 4000 வீடுகள் என்பதால் கழக அரசு அனுமதித்த தொகையை விட அதிக தொகை ஒதுக்கி கட்டுகிறார்களோ என்பதற்காக கழக அரசிலே ஒதுக்கப்பட்ட 14.80 கோடி ரூபாயை 4000 வீடுகளால் வகுத்தும் பார்த்தேன். அப்போதும் வீடு ஒன்றுக்கு 37 ஆயிரம் ரூபாய்தான் வருகிறது. எனவே கழக அரசு அறிவித்த கட்டிய வீடுகளின் அதே மதிப்பில்தான் இவர்களும் கட்டுவதாக அறிவித்திருக்கிறார்கள். ஒரே ஒரு மாறுதல், சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் வீடு கட்டும் திட்டம் என்ற பெயரை விட்டுவிட்டார்கள்.

அடுத்து, உயிரியல் தகவல் தொழில் நுட்பம் மற்றும் மரபணுசார் துறைகளில் உலகத் தரம் வாய்ந்த மரபணுசார் மையம் ஒன்றை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று அ.தி.மு.க. அரசின் பட்ஜெட் அறிக்கையிலே கூறப்பட்டுள்ளது.

உயிரியல் தொழில் நுட்பம் குறித்த தலைப்பில் கழக ஆட்சியில் இந்த ஆண்டின் துவக்கத்தில் வைக்கப்பட்ட இடைக்கால நிதி நிலை அறிக்கையில் இதைப்பற்றி கூறும்போது இந்த அரசு அறிவித்த

உயிரியல் தொழில் நுட்பக் கொள்கையைச் செயல்படுத்திட டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் தலைமையிலான மாநில உயிரியல் தொழில் நுட்ப வாரியம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளதுடன் உயிரியல் தொடர்புடைய தொழில்களுக்கு நிதி உதவி அளிப்பதற்காக புதிய வளர் தொழில் நுட்ப ஊக்க நிதி ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே உயிரியல் தொழில் நுட்பத்திற்காக புதிதாக கொள்கை வகுக்கப்பட்டதும், அதனை அமல்படுத்தியதும் தி.மு.கழக அரசுதான் என்பது தெளிவாகும்.

நேற்று படிக்கப்பட்ட அ.தி.மு.க. அரசின் பட்ஜெட் அறிக்கையிலேயே நான் மேலே எழுதியிருப்பதைப் போல குறிப்பிட்டு விட்டு பின்னர் அதே அறிக்கையில் இதற்கான உடன்படிக்கை ஒன்று கடந்த ஆண்டு கையெழுத்தாகியது. இது நம் நாட்டில் சுகாதாரம் மற்றும் மருந்தாக்கத் தொழில்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்று உண்மையை மறைக்க முடியாமல் பாராட்டியிருக்கிறார்கள். அதற்காக நன்றி செலுத்தத்தான் வேண்டும்.

நிதியமைச்சர் நேற்று படித்த பட்ஜெட் அறிக்கையில் இளைஞர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் விளையாட்டுக்கான அடிப்படை வசதியை மேம்படுத்த, இவ்வரசு உறுதி பூண்டுள்ளது. இளைஞர்களிடம் காணப்படும் விளையாட்டுத் திறமையைக் கண்டறிந்து, ஊக்கமளிக்க, போதிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதுவும் புதிதாக அறிவிக்கப்படும் ஒன்றல்ல! இந்த ஆண்டின் துவக்கத்தில் கழக அரசின் சார்பில் படிக்கப்பட்ட இடைக்கால நிதி நிலை அறிக்கையில் இளைஞர்களுக்கு விளையாட்டு, உடற்பயிற்சி மற்றும் பொழுதுபோக்குக்கான வசதிகளை அளிக்க ஊராட்சிகளிலும் நகர்ப்பகுதிகளிலும் விளையாட்டு மையங்கள் ஏற்படுத்தப்படும் என்று அறிவித்திருந்ததைத் தொடர்ந்து இதுவரை 7000 இடங்களில் இத்தகைய மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டம் அனைத்துப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்படும் என்று ஏற்கனவே நடைமுறையிலே உள்ளதைத்தான் தற்போது தொடர்ந்து அறிவித்திருக்கிறார்களே தவிர இதுவும் புதிதாகக் கூறப்பட்டுள்ள திட்டம் அல்ல.

அடுத்து, அந்த பட்ஜெட் அறிக்கையில் குடும்பக் கட்டுப்பாட்டுக்கு ஊக்கமளித்து, பெண் சிசுக் கொலையை

ஒழிப்பதற்காகவும் ஆண் குழந்தைகளை மட்டுமே விரும்பிப் பெற்றுக் கொள்ளும் போக்கைக் கட்டுப்படுத்துவதற்காகவும் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் என்னும் புரட்சிகரமானதொரு திட்டத்தை 1992ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தியதாக குறிப்பிட்டு அந்தத் திட்டத்திலே தற்போது மாற்றம் செய்து அறிவிப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதிலே உண்மையென்னவென்றால், ஜெயலலிதாவினால் 92ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட திட்டத்தினால் யாருக்கும் பயன் கிடைக்கவில்லை என்பதும், எனவே கழக ஆட்சியிலே அந்தத் திட்டத்தைச் சீரமைத்து, ஏழைக் குடும்பங்கள் எல்லாம் பயன் பெறும் வகையிலே அமல்படுத்தப்பட்டு வருவதும்தான் உண்மை.

அதன் விவரம் வருமாறு :-

1992ஆம் ஆண்டு ஜெயலலிதா அரசினால் பெண் குழந்தை நலத் திட்டம் என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி ஒரு குடும்பத்திலே இரண்டு பெண் குழந்தை மட்டும் இருக்க வேண்டும். இரண்டாவது குழந்தை பிறந்த பின் அறுவை சிகிச்சை செய்திருக்க வேண்டும். இரண்டாவது குழந்தைக்கு 3 வயதிற்குள் பதிவு செய்ய வேண்டும். இப்படிப் பதிவு செய்து கொண்ட குழந்தைகள் பெயரில் 5000 ரூபாய் முதலீடு செய்யப்படுவதாகக் கூறி அனைவருக்கும் பாஸ் புத்தகம் கொடுத்தார்கள். ஐந்தாண்டுகளுக்குப் பின் கிடைக்கும் வட்டிப் பணத்திலிருந்து முதல் வகுப்பு பயிலும் குழந்தைக்கு 250 ரூபாய் என்றும், ஆறாம் வகுப்பு பயிலும் குழந்தைக்கு 500 ரூபாய் என்றும் இப்படி முறையே வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் பாஸ் புத்தகம் தான் வழங்கப்பட்டதே தவிர எந்தக் குழந்தையின் பெயரிலும் 5000 ரூபாய் வீதம் தொகை முதலீடு செய்யவே இல்லை. அதனால் எந்தக் குழந்தைக்கும் வட்டிப் பணத்திலிருந்து படிப்பு உதவி தொகை வழங்கப்படவில்லை.

எனவே தி.மு.கழக ஆட்சியிலே புதிய திட்டமாக இரு பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் என்ற பெயரிலே கொண்டு வரப்பட்டது. இத்திட்டத்தின்படி இரண்டு பெண் குழந்தைகள் மட்டுமே இருக்க வேண்டும். இரண்டாவது குழந்தை பெற்ற பின் தாய் அறுவை சிகிச்சை செய்து கொண்டிருக்க வேண்டும். இரண்டாவது குழந்தைக்கு 3 வயது ஆவதற்குள் இரண்டு குழந்தைகளையும் பதிவு செய்து கொள்ளலாம்.

ஒவ்வொரு குழந்தைக்கும் 1500 ரூபாய் வீதம் போக்குவரத்து நிதி நிறுவனத்தில் வட்டிக்கு தொகை முதலீடு செய்யப்படும். ஐந்தாண்டுக்கு ஒரு முறை குழந்தை பெயரிலே உள்ள முதலீட்டை புதுப்பிக்க வேண்டும். 20 ஆண்டுகள் பூர்த்தியானதும் ஒவ்வொரு குழந்தைக்கும் 29 ஆயிரம் ரூபாய் கிடைக்கும். ஒரு பெண் குழந்தை மட்டுமே இருந்து அறுவை சிகிச்சை செய்து கொண்டால் 3000 ரூபாய் முதலீடு செய்யப்படும். அந்தக் குழந்தைக்கு 20 ஆண்டுகளுக்கு பின் 58 ஆயிரம் ரூபாய் கிடைக்கும். இவ்வாறு கழக ஆட்சியில் ஒரு லட்சத்து 26 ஆயிரம் குழந்தைகள் பதிவு செய்யப்பட்டார்கள். 20 கோடி ரூபாய் அதற்கான முதலீடு செய்யப்பட்டது.

இப்படி பட்ஜெட்டில் தெரிவிக்கப்பட்ட திட்டங்கள் பல முன்பே அறிவிக்கப்பட்டவைதான் என்பதை தொடர்ந்து எழுதிக் கொண்டே போகலாம்; நிதி அமைச்சர் படித்த அறிக்கையிலே தற்போதுள்ள டைடல் பூங்காவிற்கு அருகிலேயே புதிய டைடல் பூங்கா (இரண்டு) அமைக்க இவ்வரசு கொள்கையளவில் இசைவு அளித்துள்ளது. இவ்வளர்ச்சிப் பணிகளினால் சென்னை, இம்மாநிலத்தில் தகவல் தொழில் நுட்பப் புரட்சி மையமாக உருவெடுக்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

கழக அரசில் இந்த ஆண்டின் துவக்கத்திலேயே படிக்கப்பட்ட நிதி நிலை அறிக்கையிலேயே தரமணியில் ரூபாய் 338 கோடி செலவில் 12 லட்சம் சதுர அடி பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள உலகத் தரம் வாய்ந்த கணினி மென் பொருள் தொழில் நுட்பப் பூங்கா (டைடல் பூங்கா) பெற்றுள்ள வரவேற்பை அடுத்து, 20 லட்சம் சதுர அடி பரப்பளவில் இரண்டாவது கணினி மென்பொருள் பூங்கா அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று குறிப்பிடப்பட்டு, அதற்கான செயல் திட்டங்கள் எல்லாம் தொடங்கப்பட்ட நிலையிலேதான் தேர்தல் குறுக்கிட்டது. அவ்வாறு அறிவிக்கப்பட்ட இரண்டாவது டைடல் பூங்காவைத்தான் இந்த ஆட்சியிலே செய்யப்படும் சாதனையாக பட்ஜெட் அறிக்கையிலே அறிவிக்கப்பட்டுள்ளது.

மற்றுமோர் எடுத்துக் காட்டு கூற வேண்டுமேயானால் இந்த பட்ஜெட் அறிக்கையிலே மகளிரின் பொருளாதார நிலையை மேம்படுத்தவும் அவர்களிடம் சேமிக்கும் பழக்கம் உருவாக்கவும், விழையும் தற்போதைய சேமிப்பு இணைந்த சிறுகடன் வசதித்

திட்டம் மேலும் சீரமைக்கப்பட்டு, விரிவுபடுத்தப்படும் என்று கூறப்பட்டுள்ளது. அதாவது இந்தத் திட்டம் ஏற்கனவே நடைமுறையிலே உள்ள திட்டம் என்பதையும், அதைத்தான் விரிவுபடுத்தப்படும் என்றும் அவர்களே ஒப்புக்கொண்டு அறிவித்திருக்கிறார்கள். இந்தத் திட்டம் 2000-2001 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலேயே கழக அரசினால் அறிவிக்கப்பட்டு அமல்படுத்தப்பட்டு வரும் வெற்றிகரமான திட்டமாகும்.

எனவே நான் நேற்றைக்கே அறிவித்தவாறு தற்போது படிக்கப்பட்டுள்ள பட்ஜெட் அறிக்கையிலே எந்தவிதமான புதுமையான திட்டங்களும் இல்லை, ஏற்கனவே கழக அரசிலே செய்யப்பட்ட சாதனைகளையும் திட்டங்களையும் தான் திரும்ப அறிவித்திருக்கிறார்களே தவிர வேறொன்றும் இல்லை.

அதிலும்கூட, பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம், வாழ்ந்து காட்டுவோம் திட்டம், உழவர் சந்தை திட்டம், பூமாலைத் திட்டம் போன்ற திட்டங்களைப் பற்றி எதுவும் குறிப்பு கூடக் காட்டப்படவில்லை.

வெள்ளை அறிக்கை என்ற ஒன்று இணைத்து வழங்கப்பட்டுள்ளது. அதன் தொடர்பான விளக்கத்தை நிதித்துறைச் செயலாளரே பத்திரிகையாளர்களிடம் அளித்துள்ளார். கழக ஆட்சியில் இருந்த நிதித்துறை செயலர்கள்தான் இப்போதும் இருக்கிறார்கள் - அல்லது இப்போதுள்ள நிதித்துறை செயலர்கள்தான் அப்போது கழக ஆட்சியிலும் இருந்தார்கள் என்பதை மறந்து விடாமல் அந்த வெள்ளை அறிக்கையையும், பட்ஜெட்டில் தெரிவிக்கப்பட்டுள்ள இடைக்குறிப்புகளையும் படித்துணர்ந்தால் உண்மைகள் விளங்கும்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

(20-08-2001)

2629. சாதனைகளை தேடினால் வேதனைகளே மிஞ்சும்!

உடன்பிறப்பே,

எந்தப் பத்திரிகையைப் புரட்டினாலும் - அது நாளேடாயினும், அல்லது வார ஏடாயினும் அதிலே இந்த ஆட்சியைப் பற்றிய விமர்சனப் பேட்டி ஒன்று மக்களிடத்திலே எடுக்கப்பட்டு அது வெளிவந்திருப்பதைக் காணலாம்.

விவசாயிகளுடைய கடனுக்கான வட்டியும், அபராத வட்டியும் மொத்தம் 310 கோடி ரூபாய் தள்ளுபடி செய்ததற்குப் பாராட்டு என்று அந்த விமர்சனங்கள் அமைந்துள்ளதையும் நீ படித்திருப்பாய்!

ஏடுகளில் பேட்டிகள் மாத்திரமல்லாமல் ஜெயலலிதா அரசாங்கமே பத்திரிகைகளில் அளித்துள்ள ஒரு பக்க 100 நாள் சாதனை விளம்பரத்தில் முதல் சாதனையாக விவசாயிகளின் கடனுக்கான வட்டி மற்றும் அபராத வட்டி 310.51 கோடி ரூபாய் தள்ளுபடி ரூபாய் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறதே தவிர அந்த அளவிற்கு உண்மையில் தள்ளுபடி செய்யப்படவில்லை.

விவரம் புரியாமலேயே இதனை சில விவசாயிகள் பாராட்டுவதும் அதனை இந்த அரசு விளம்பரப்படுத்திக் கொள்வதும் வேதனையான வேடிக்கையாகும்.

ஏற்கனவே தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் விவசாயிகளுடைய கடனுக்கான அபராத வட்டி முழுவதும் தள்ளுபடி செய்யப்பட்டு, வட்டியிலும் 7 சதவிகிதம் தள்ளுபடி செய்யப்பட்டு எஞ்சிய 5 சதவிகித வட்டிதான் அவர்கள் தரவேண்டுமென்று அறிவிக்கப்பட்டிருந்தது. இப்போது அந்த ஐந்து சதவிகித வட்டியைத்தான் இந்த அரசு தள்ளுபடி செய்திருக்கிறது. ஆனால் அதற்காக 310 கோடி ரூபாய் அரசாங்கத்திற்கு செலவு என்று அறிவித்தார்களே தவிர அது உண்மையா என்றால் இல்லை.

ஏனென்றால் இப்போது நிதியமைச்சர் பொன்னையன் படித்த பட்ஜெட்டில் இந்த தள்ளுபடிக்காக விவசாயிகளுடைய கடனுக்கான வட்டி மற்றும் அபராத வட்டி தள்ளுபடிக்காக 100 கோடி ரூபாய்தான் இந்த நிதி ஆண்டில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் 310 கோடி ரூபாய் தள்ளுபடி என்று இன்னமும் தம்பட்டம் அடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிதி ஆண்டுக்கு 100 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கின்றது என்பதிலேகூட மொத்தச் செலவு அந்த நூறு கோடி ரூபாய்க்கு உள்ளேதான் இருக்கும் என்கிறபோது 310 கோடி ரூபாய் தள்ளுபடி என்று கூறுவது எப்படி பொருத்தமாக இருக்கும்? இது விவசாயிகளை ஏமாற்றுகிற அரசியல் சித்து விளையாட்டு என்பதைத் தவிர வேறொன்றும் இல்லை. இந்த விளையாட்டை விஷயம் தெரிந்த விவசாயிகள் உணராமல் இல்லை. விவசாயிகள் தங்கள் அரசியலுக்குப் பயன்படுத்திக் கொள்கிற சில அரசியல் வியாபாரிகள்தான் ஊமையர் கனவு கண்டது போல சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் தங்களுக்குத் தாங்களே முணகிக் கொண்டு, இது விவசாயிகளின் அரசு என்று விளம்பரப் பலகை எழுதிக் கொண்டிருக்கிறார்கள்.

நாங்கள் ஆட்சிக்கு வந்தால் சிமெண்ட் விலையைக் குறைப்போம் என்றார்கள். சிமெண்ட் விலை மாத்திரமல்ல; எல்லா அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும் கிடுகிடுவென உயர்ந்து கொண்டு போவதைத்தான் இன்றைக்குப் பார்க்கிறோம். ஒருவேளை இதுவும் இவர்களுடைய நூறு நாள் சாதனைகளில் ஒன்று போலும்!

கிராமங்களிலும், நகரங்களிலும் வாழும் ஏழைப் பெண்கள் அனைவருக்கும் உதவிடும் வகையில் அவர்கள் குடும்பத்திற்கு சமையல் எரி வாயு இணைப்பு இலவசமாக வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்று தேர்தல் அறிக்கையிலே அறிவித்தார்கள். இன்றைக்கு நூறு நாள் விளம்பரத்தைப் பார்த்தால் - பொன்னையன் வெளியிட்ட பட்ஜெட்டைப் படித்தால் அந்த அறிவிப்பு தேய்ந்து குறைந்து, வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் புதிதாக திருமணம் ஆன தம்பதியினருக்கு இலவசமாக சமையல் எரிவாயு வழங்கப்படும் என்று மாறியிருக்கின்றது.

மூடப்பட்ட தொழிற்சாலைகள் திறக்கப்பட்டு தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை வாய்ப்பு கிடைக்க

நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேர்தல் அறிக்கையிலே கூறினார்கள். ஆனால் இன்றைக்கு இந்த 100 நாட்களில் மூடப்பட்ட தொழிற்சாலைகளில் ஒன்றுகூட திறக்கப்பட்டதாக செய்தி வரவில்லை.

பத்து சதவிகிதம் பிழிதிறன் உள்ள கரும்புக்கு தி.மு.கழக ஆட்சியில் டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் விலை என்று நிர்ணயிக்கப்பட்டது. சதவிகித கணக்கின்றி எல்லா கரும்புகளுக்கும் டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் விலை நாங்கள் தருவோமென்று தேர்தல் நேரத்திலே அ.தி.மு.க.வினரும் அவர்களின் கூட்டணிக் கட்சியினரும் முழங்கினார்கள். அதைப் பற்றி இப்போது வெளியிடப்பட்ட பட்ஜெட் அறிவிப்பில் எதையும் காணோம். இதுவும் நூறு நாள் சாதனைகளில் ஒன்று போலும்!

பட்ஜெட் அறிக்கையிலே இது காணாதது மட்டுமல்ல; நிதிநிலை அறிக்கையோடு சேர்த்து வைக்கப்பட்டுள்ள வெள்ளை அறிக்கையிலே 9.21 சதவிகிதம் பிழிதிறன் உள்ள கரும்புக்கு கர்நாடகத்தில் டன் ஒன்றுக்கு 822.30 ரூபாயும், 10.09 சதவிகிதம் பிழி திறன் உள்ள கரும்புக்கு ஆந்திராவில் 684.60 ரூபாயும், 11.30 சதவிகிதம் பிழி திறன் உள்ள கரும்புக்கு மராட்டியத்தில் 707.50 ரூபாயும்தான் விலை கொடுக்கப்பட்டது. இவற்றுக்கு மாறாக 9.21 சதவிகிதம் பிழி திறன் உள்ள கரும்புக்கு டன் ஒன்றுக்கு 841 ரூபாய் விலை தமிழ்நாட்டில் வழங்கப்பட்டது என்று கூறப்பட்டுள்ளது.

தி.மு.க. ஆட்சியில் 10 சதவிகிதம் பிழி திறன் உள்ள கரும்புக்கு ஆயிரம் ரூபாய் விலை என்று தமிழ் நாட்டிலே விலை நிர்ணயிக்கப்பட்டது எனக் குறிப்பிட்டேனே; அதே நேரத்தில் மராட்டியத்தில் 11.30 சதவிகிதம் பிழி திறன் உள்ள கரும்புக்கு 875 ரூபாய் வழங்கப்பட்டது என்பதையும், ஆந்திராவில் 10.09 சதவிகிதம் பிழி திறன் உள்ள கரும்புக்கு 750 ரூபாய் வழங்கப்பட்டது என்பதையும், கர்நாடகத்தில் 10.64 பிழிதிறன் உள்ள கரும்புக்கு டன் ஒன்றுக்கு 950 ரூபாய் வழங்கப்பட்டது என்பதையும் இன்றைய அரசு அளித்துள்ள வெள்ளை அறிக்கையே வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுடைய பழைய பாக்கிகளுக்கு உடனடியாக தொகை பட்டுவாடா செய்யப்படும் என்று தேர்தல் நேரத்திலே அறிவித்தார்கள். ஆனால் ஒரு ஒப்பீடு உற்று நோக்கத்தக்கது.

வெள்ளை அறிக்கையில் வந்துள்ள விபரப்படி, 1990-91இல் ஆட்சிக்கு வந்த ஜெயலலிதா 1995-96 வரை ஐந்தாண்டு காலத்தில் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு அளித்த நிதி உதவித் தொகை 63.96 கோடி ரூபாயாகும். 1996-97 ஆம் ஆண்டிலிருந்து தி.மு.கழக ஆட்சியில் 1999-2000 ஆம் ஆண்டு வரை நான்கு ஆண்டுகளில் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு அளித்த நிதி உதவித் தொகை 278.43 கோடி ரூபாயாகும்.

பால் உற்பத்தியாளர்களுக்கு பயன்மிகு நன்மைகளைச் செய்வோம் என்று தேர்தல் அறிக்கையிலே சொன்னார்கள். ஆனால் பால் உற்பத்தியாளர்கள் தங்களுடைய பால் கொள்முதல் விலையை குறைத்துவிட்டார்கள் என்பதற்காக ஊருக்கு ஊர் கோரிக்கை பேரணி நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இதுவும் நூறு நாள் சாதனைகளில் ஒன்று போலும்!

இவர்களுடைய நூறு நாள் சாதனைகளில் பின்வரும் சாதனைகளையும் சேர்த்துக் கொள்ளலாம். இந்த 100 நாட்களில் சாலை விபத்துகளில் இறந்தோர் எண்ணிக்கை மட்டும் ஏறத்தாழ 200 பேர். ஏர்வாடி மனநலக் காப்பகத்தில் மாண்டோர் எண்ணிக்கை 28 பேர். வேலூர் வெடி மருந்து தொழிற்சாலையில் சிதறுண்டு விழுந்து செத்தவர்கள் எண்ணிக்கை 25 பேர்.

இந்த அராஜக ஆட்சியை எதிர்த்து கழகம் நடத்திய கண்டனப் பேரணியில் போலீசார் தடியடிக்கும் துப்பாக்கிப் பிரயோகத்திற்கும் இரையாகி மாண்டவர்களின் தொகை 8 பேர்.

இவைகளையன்னியில் எதிர்க்கட்சியினரை பழி வாங்குவதற்காகவே கைது செய்ய வேண்டி அதற்கென பொய்ப்புகார்களை தயார் செய்வது போன்ற பல சாதனைகள் இந்த நூறு நாட்களில் நடைபெற்றிருக்கின்றன. பொய்ப்புகார்களைப் பெற்றும் ஹெராயின் வைத்து ஜாமீனில் வெளி வர முடியாத அளவிற்கு வழக்கு பதிவு செய்தும் கைது நடவடிக்கைகளில் ஈடுபட்டது சாதனை அல்லவா?

உச்சநீதிமன்றத்தின் வழி காட்டுதல் நெறிமுறைகளுக்கு மாறாக தங்களின் அரசியல் எதிரிகளைக் கைது செய்து பழி வாங்கியதும், தங்கள் ஏதேச்சாதிகாரத்திற்கு அடையாளமாக இரண்டு மத்திய அமைச்சர்களைச் சிறையிலே அடைத்ததும்

இந்த நூறு நாட்களில் அம்மையாரின் அற்புதமான சாதனைகள் அன்றோ?

விழுப்புரத்தில் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் தனது கடமையைச் செய்யச் சென்ற பொன்முடியையும், அவருடன் சென்ற சுரேஷ் என்ற சன் டி.வி. நிருபரையும் கைது செய்து பத்திரிகையாளர்கள் மீது அடக்குமுறையைத் தொடங்கி, அதைத் தொடர்ந்து சென்னையில் கோட்டைவாசலில் மனு கொடுக்க வந்த பத்திரிகையாளர்களைச் சாலையில் உருட்டியும் புரட்டியும், அடுத்து அவர்களைக் கைது செய்து வேப்பேரி காவல் நிலையத்தில் அடைத்து வைத்தும், அதற்கடுத்த உச்சக்கட்டமாக சென்னையில் நடைபெற்ற தி.மு.கழகப் பேரணியில் போலீஸ்காரர்களுடைய அட்டூழியங்களையும் அ.தி.மு.க. குண்டர்களின் வன்முறைகளையும் படமெடுத்த, செய்தி சேகரித்த பத்திரிகையாளர்களையும் காயப்படுத்தியும், அவர்களுடைய புகைப்படக் கருவிகளையெல்லாம் அடித்து உடைத்து நொறுக்கியும் - அவர்களில் ஆண் பெண் உட்பட அனைவரையும் கைதிகளைப் போல அடைத்து வைத்தும் புரிந்த சாதனை; இந்த நூறு நாள் சாதனையின் சிகரம் அன்றோ?

இன்னும் ஒரு அரும்பெரும் சாதனை! திறமையுள்ள ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., அதிகாரிகளை மூலைக்கு மூலை பந்தாடி விட்டு, பலருக்கு பணியே கொடுக்காமல் பல நாட்கள் காத்திருப்போர் பட்டியலில் காத்திருக்கச் செய்து, தான் ஆணையிட்டால் அதைப்பற்றிச் சிந்திக்காமல் அதற்கு தலை குனிந்து ஏற்போரை மட்டும் அரசு அதிகாரப் பணிகளிலே அமர்த்தி, நாடும் ஏடும் நகைக்கும் அளவிற்கு நடத்தப்பட்டுள்ள அதிகாரிகள் வர்க்க பந்தாட்டம்கூட இந்த நூறு நாள் சாதனைப் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டிய ஒன்றல்லவா! ஒரு பக்க சாதனை விளம்பரத்தில் இவற்றையெல்லாம் சேர்க்க இடமில்லாத காரணத்தால் விட்டுவிட்டார்கள் போலும்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

(22-08-2001)

2630. திருந்தவே முடியாதவர்க்கான தேவையற்ற வேலை!

உடன்பிறப்பே,

1. தன்னைப் பெரிய பொருளாதார மேதை என்று கருணாநிதி கூறிக் கொள்கிறார்.

2. கருணாநிதி, தனக்குத் தெரியாதவற்றைத் தெரிந்தது போலக் காட்டிக் கொள்கிறார்.

3. தேவையற்ற வேலைகளில் இனி மேலாவது கருணாநிதி ஈடுபடாமல் இருந்தால் அது தமிழ் மக்களுக்கும் தமிழகத்துக்கும் ஆற்றுகிற பேருதவியாக இருக்கும்.

4. கருணாநிதி; மத்திய திட்டக்குழு தி.மு.க. அரசுக்குப் பாராட்டு தெரிவித்ததாகக் கூறுவது நகைப்புக்குரியது.

5. 2001-2002ஆம் ஆண்டுக்கான திட்ட ஒதுக்கீடு ரூபாய் 6,040 கோடி ரூபாய் என்று அதிகப்படுத்தி ஒதுக்கியிருப்பது தன்னுடைய கடந்த கால ஆட்சியில் நடைபெற்ற செயல்களின் விளைவே என்று கருணாநிதி தனக்குத் தானே நற்சான்று பத்திரம் வழங்கிக் கொண்டார்.

இந்த விமர்சனங்களும்-ஏளனமான- எரிச்சல் மிகுந்த வாசகங்களும் இந்நாள் முதல்வர் ஜெயலலிதா ஆகஸ்டு 22ஆம் நாள் விடுத்துள்ள நீண்ட அறிக்கையில் காணப்படுபவை ஆகும்.

அவரது அறிக்கையின் முதல் பகுதியில் உள்ள நான்கு விஷயங்களையும் அலட்சியப்படுத்தி விடலாம். ஐந்தாவதாக அவர் குறிப்பிட்டுள்ள விஷயம்; அடிப்படையிலேயே தவறானதாகும்.

1999-2000ஆம் ஆண்டுக்கான தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அந்த ஆண்டுக்கான திட்டக் குழுவின் ஒதுக்கீடு 5,250 கோடி ரூபாய்.

2000-2001ஆம் ஆண்டுக்கு தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அந்த ஆண்டுக்கான திட்ட ஒதுக்கீடு 5,700 கோடி ரூபாய்.

அதாவது 450 கோடி ரூபாய் அதிக ஒதுக்கீடு - ஆனால் இந்த ஆண்டு 5,700 கோடி ரூபாயை விடக் கூடுதலாக 340 கோடி ரூபாய் மட்டுமே அதிகம் பெற்று 6,040 கோடி ரூபாய் என்று திட்ட ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

எனவே, ஒதுக்கீடு உயர்த்தி வழங்கப்பட்டதற்கு ஏற்கனவே நடைபெற்ற தி.மு.க. ஆட்சிதான் காரணம் என்று நான் எப்படிச் சொல்லியிருக்க முடியும்?

ஏனெனில் இந்த ஆண்டு திட்டத்துக்கு உயர்த்தி வழங்கப் படவில்லை. கடந்த ஆண்டு உயர்த்தப்பட்ட திட்டத் தொகை 450 கோடி என்கிற போது; இந்த ஆண்டு உயர்த்தப்பட்டது 340 கோடி ரூபாய்தான் என்பதைக் கணக்கிட்டால்; ஜெயலலிதா அறிக்கையில் தெரிவித்துள்ளதுபோல் உயர்த்தி வழங்கப்படவில்லை குறைத்துத்தான் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் உயர்த்தி வழங்கப்பட்டதற்கு நான்தான் காரணம் என்று நான் எப்படிக் கூறியிருக்க முடியும்? நான் கூறாத ஒன்றைக் கூறியதாகக் கற்பித்துக் கொண்டு ஜெயலலிதா அறிக்கை விட்டிருப்பதுதான் நகைப்புக்கு இடம் தரக்கூடியதாகும்.

எந்தவொரு மாநில அரசின் திட்டம் பற்றி விவாதிக்கப்படும் பொழுதும் திட்டக்குழுவில் அந்த மாநில அரசுப் பணிகள் பற்றிய குறை நிறைகளை எடுத்து விவாதிப்பது என்பது நடைமுறையில் காலம் காலமாக இருந்து வருவதுதான். அந்த உண்மையை தமிழக அரசின் சார்பாக திட்டக்குழுவுக்கு விவாதிப்பதற்காகச் சென்ற அதிகாரிகள் அறியாதவர்கள் அல்லர். அவர்கள் விபரம் புரிந்தவர்கள்.

தி.மு.க. அரசில் திட்டத்துக்கு ஒதுக்கிய தொகையையே செலவழிக்கவில்லை - துரோகம் செய்து விட்டார்கள் - என்றெல்லாம் வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ எனும் விதத்தில் ஜெயலலிதா விடுத்துள்ள அறிக்கைக்கு திட்டக்குழு விவாதத்திற்கு சென்ற அதிகாரிகளின் மனத்துக்குள் விளக்கமான

பதில் இருக்குமென்பது எனக்குத் தெரியும். நான் அந்த அதிகாரிகளையும் அரசியல்வாதிகளாக்க விரும்பவில்லை. ஏனெனில் எந்தவொரு அதிகாரியும் தமது பொறுப்பைத் தட்டிக் கழித்திட முடியாது.

டெல்லி திட்டக்குழுக் கூட்டத்திலே ஜெயலலிதா கலந்து கொள்ளவில்லை என்றபோதிலும் தமிழக அரசின் சார்பில் நிதியமைச்சர் அந்தக் கூட்டத்திலே கலந்துகொண்டு முதல்வரின் உரையை அங்கே படித்திருக்கிறார்.

ஜெயலலிதா அந்த உரையிலே கூறப்பட்டிருந்த சில கருத்துக்கள் பற்றிக் கூட திட்டக்குழுவின் முடிவுகள் அறிவிக்கப்பட்டவுடன் நான் முரசொலியில் கடிதமாக எழுதியிருந்தேன். ஜெயலலிதாவின் உரையிலே தமிழ்நாட்டில் வறுமை சற்று குறைந்துள்ளது என்பது உண்மையாக இருந்த போதிலும், புள்ளி விபரங்களின் அடிப்படையில் பார்க்கும்போது வறுமைக்கோட்டைக் கடந்துள்ள நபர்கள் வறுமைக் கோட்டிற்கு மேலே சற்றுதான் உயர்ந்துள்ளனர் என்று தெரிவித்திருக்கிறார்.

ஜெயலலிதாவின் இந்தப் பேச்சிலிருந்து தமிழ் நாட்டிலே வறுமை சற்று குறைந்துள்ளது என்பது உண்மை என்பதை அவரே ஒப்புக்கொண்டிருக்கிறார் என்பது தெளிவாகிறதா இல்லையா? வறுமைக் கோட்டிற்கு மேலே சற்று உயர்ந்துள்ளனர் என்று முதலமைச்சர் தெரிவித்திருக்கிறாரா? இல்லையா? ஜெயலலிதா இவ்வாறு திட்டக்குழுவிலே தனது உரையைக் கொடுத்து படிக்கச் சொல்லிவிட்டு, அதைப் பற்றிய விளக்கத்தை நானும் கடிதம் மூலமாக எழுதி பத்து நாட்களுக்கு மேல் ஆன நிலையில் தற்போது திடீரென்று விழித்துக்கொண்டு திட்டக்குழு தி.மு.கழக ஆட்சியைக் குறை கூறிவிட்டது என்று ஒரு நீண்ட அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

முதலமைச்சரின் திட்டக்குழுப் பேச்சினிலே தமிழகத்தில் வறுமை சற்று குறைந்துள்ளது என்பது உண்மை என்று வேறு வழியின்றி கூறியபோதிலும், மத்திய திட்டக் குழு 23-2-2001 அன்று வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள மக்கள் பற்றிய முடிவுகளை வெளியிட்டபோது, இந்தியாவிலே உள்ள மொத்த மக்கள் தொகையில் 1993-94ஆம் ஆண்டில் 35.97 விழுக்காடாக இருந்த வறுமைக் கோட்டிற்குக் கீழே

உள்ள மக்கள் தொகை, 1999-2000ஆம் ஆண்டில் 26.10 விழுக்காடாக குறைந்துள்ளது என்றும், தமிழகத்திலே 1993-94ஆம் ஆண்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழேயிருந்த மக்கள் தொகை 35.03 விழுக்காட்டிலிருந்து 1999-2000ஆம் ஆண்டில் 21.12 விழுக்காடு என்ற அளவிற்கு குறைந்துள்ளது என்றும் தெரிவித்திருந்தது. இந்தியாவிலே உள்ள அனைத்துப் பெரிய மாநிலங்களையும் எடுத்துக் கொண்டு பார்க்கும்போது, வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள மக்கள்தொகை தமிழகத்திலேதான் இந்த ஐந்தாண்டுகளில் அதிக அளவிற்கு குறைந்திருக்கின்றது.

இதிலிருந்து ஜெயலலிதா தனது பேச்சிலே குறிப்பிட்டதைப் போல சற்றுதான் அந்த எண்ணிக்கை உயர்ந்துள்ளது என்றது; உண்மை அவருக்கு அவ்வளவு கசப்பாக இருந்திருக்கிறது என்பதைக் காட்டுகிறதல்லவா?

மேலும், ஜெயலலிதா இன்று விடுத்த அறிக்கையிலே தனது ஆட்சிக்கு தானே நற்சான்று வழங்கிக் கொண்டார் என்று என்னைப் பற்றி எழுதியுள்ளார். நான் இந்த நேரத்தில் தமிழ்நாட்டு மக்களையும், அரசியல் கட்சிகளின் தலைவர்களையும் ஒன்றை எண்ணிப் பார்க்குமாறு கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய அறிக்கைகளையும், கடிதங்களையும் நீங்கள் படிக்கிறீர்கள். அதிலே எந்த அளவிற்கு ஆதாரங்களை எடுத்து வைத்து எழுதுகிறேன் என்பதையும் பாருங்கள். அதே நேரத்தில் ஜெயலலிதாவின் அறிக்கைகளில் ஆகட்டும், பேச்சுகளில் ஆகட்டும், எந்த அளவிற்கு மரியாதைக் குறைவான முறையிலே வார்த்தைகள் கையாளப்படுகின்றன என்பதையும் ஒருக்கணம் எண்ணிப் பாருங்கள். இந்தப் பிரச்சினை குறித்து முரசொலியில் நான் எழுதிய கடிதத்திலே எங்கேயாவது எனக்கு நானே நற்சான்று வழங்கிக் கொண்டிருக்கிறேனா என்பதையும் படித்துப் பாருங்கள்.

மாறாக, திட்டக்குழுக் கூட்டத்திலே - அதன் தலைவராக இருக்கும் திரு. கே.சி.பந்த் அவர்கள் அந்தக் கூட்டத்திலே ஆற்றிய உரை ஏடுகளிலே வெளிவந்திருந்ததை அப்படியே எடுத்துக்காட்டி, திட்டக்குழுவின் தலைவர் இப்படியெல்லாம் கழக ஆட்சியைப் பாராட்டியிருக்கிறார், அதனையெண்ணி கழக உடன்பிறப்புகள் ஊக்கம் பெறலாம் என்றுதான் எழுதியிருந்தேன். இதிலே என்ன தவறு?

திட்டக்குழு விவாதத்தின்போது என்னென்ன பேசப்பட்டது என்றும் முந்தைய கழக ஆட்சியைக் குறைகூறி பேசப்பட்டது என்றும் அந்தக் கூட்டத்திற்கே நேரடியாகச் செல்லாத ஜெயலலிதா தற்போது கூட்டம் நடைபெற்று முடிந்து பத்து நாட்களுக்குப் பிறகு அறிக்கை விடுத்துள்ளார். அந்த அறிக்கையிலே திட்டக்குழு கடந்த தி.மு.க. ஆட்சியிலே தமிழ்நாடு பெருத்த சரிவினை அடைந்ததாக சுட்டிக் காட்டப்பட்டதாகக் கூறுகிறார். அப்படி சுட்டிக் காட்டப்பட்டதால் தான் நான் முந்திக்கொண்டு கழக ஆட்சியிலே சாதனை செய்து விட்டதாக பறை சாற்றிக் கொண்டேன் என்று ஜெயலலிதா அறிக்கை விடுத்துள்ளார்.

திட்டக் குழுவிலே கழக அரசைக் குறை கூறினார்கள் என்று ஜெயலலிதா அறிக்கையிலே தெரிவித்திருப்பதைப் போல இதுவரை எந்த ஏடுகளும் செய்தி வெளியிடவில்லை. அவ்வாறு இருக்க திட்டக்குழுவிலே நடைபெற்றது எனக்கு எப்படித் தெரிந்திருக்க முடியும்? நான் எப்படி முந்திக்கொண்டு அதற்கு பதில் அளித்திருக்க முடியும்? அவர் தெரிவித்திருக்கும் கருத்துக்களிலே எள் அளவிற்காவது உண்மை இருக்க முடியுமா?

கல்வித் துறையில் கழக அரசு சரியாகச் செயல்படவில்லை என்று திட்டக் குழுவிலே கூறப்பட்டதாக இப்போது ஜெயலலிதா தெரிவித்திருக்கிறார். திட்டக் குழுவின் தலைவர் திரு.கே.சி. பந்த் அவர்கள் திட்டக்குழுவிலே உரையாற்றும் போது கல்வி அறிவில் தமிழகம் கடந்த 1991ஆம் ஆண்டு 63.7 சதவிகிதம் வளர்ச்சி கண்டிருந்தது. 2000-2001ஆம் ஆண்டில் அது 73.47 சதவிகிதமாக உயர்ந்திருக்கிறது என்று பாராட்டிப் பேசியதாக முரசொலியில் அல்ல, தினத்தந்தி இதழிலேயே முதல் பக்கத்திலே செய்தி வந்திருக்கிறதா? இல்லையா? இது கழக ஆட்சியை இழித்துக் கூறிய கருத்தா? பாராட்டிப் பேசிய கருத்தா?

நான் இந்தக் கருத்தை எடுத்துக் கூறினால், என்னை நானே பாராட்டிக் கூறிக் கொண்டேன் என்பதா வாதம்?

அது மாத்திரமல்ல; ஜெயலலிதாவின் இன்றைய அறிக்கையில் ஆசிரியர் பதவிகள் கழக ஆட்சியில் காலியாக வைக்கப்பட்டு, அவற்றை நிரப்புவதற்கு எவ்வித முயற்சியும் செய்யப்படவில்லை என்றும் தெரிவித்திருக்கிறார். ஏற்கனவே நடைபெற்ற ஜெயலலிதா ஆட்சியின் ஐந்தாண்டு காலத்தில் 8450 இடைநிலை ஆசிரியர்கள் மட்டுமே புதிதாக நியமிக்கப்பட்டார்கள். தி.மு.கழகத்தின்

ஐந்தாண்டு கால ஆட்சியில் 41,887 இடைநிலை ஆசிரியர்கள் அதுவும் பதிவு முன்னுரிமைப்படி நியமிக்கப்பட்டார்கள்.

அதைப்போலவே கடந்தகால ஜெயலலிதா ஆட்சியில் 843 முதுநிலை பட்டதாரி ஆசிரியர்கள் மட்டுமே புதிதாக நியமிக்கப்பட்டதற்கு மாறாக தி.மு.கழக ஆட்சியிலே 2,916 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் பணியிலே அமர்த்தப்பட்டுள்ளார்கள். ஆசிரியர் பணியிடங்களை கழக ஆட்சியிலே காலியாக வைத்திருந்தார்கள் என்ற கூற்று எப்படி உண்மையாகும்?

இதுபோல பட்டதாரி ஆசிரியர்கள் ஜெயலலிதா ஆட்சியில் 838 பேர் நியமிக்கப்பட்டதற்கு மாறாக தி.மு.க. ஆட்சியில் 4046 பேர் நியமிக்கப்பட்டார்கள். ஜெயலலிதா ஆட்சியிலே சிறப்பாசிரியர்கள் ஒருவர் கூட நியமனம் புதிதாக செய்யப்படவில்லை. கழக ஆட்சியிலே 2270 சிறப்பாசிரியர்கள் புதிதாக நியமிக்கப்பட்டார்கள். எனவே ஜெயலலிதாவின் இந்தக் கூற்றும் பொய்யானது என்பதை எளிதிலே புரிந்து கொள்ள முடியும்.

சுற்றுலாத் துறையின் வளர்ச்சிக்காக கடந்த தி.மு.க. ஆட்சியிலே எந்தவிதமான முயற்சிகளும் எடுக்கப்படவில்லை என்று ஜெயலலிதா தனது அறிக்கையிலே தெரிவித்திருக்கிறார். சுற்றுலாத் துறைக்காக 92-93இல் அ.தி.மு.க. ஆட்சியிலே ஒதுக்கப்பட்ட தொகை 1.42 கோடி ரூபாய்; 1995-96இல் அ.தி.மு.க. ஆட்சியிலே ஒதுக்கப்பட்ட தொகை 2.79 கோடி ரூபாய். ஆனால் 1996-97இல் தி.மு.க. ஆட்சியிலே சுற்றுலாத் துறைக்காக ஒதுக்கப்பட்ட தொகை 4.89 கோடி ரூபாய். 2000-2001இல் தி.மு.க. ஆட்சியிலே சுற்றுலாத் துறைக்காக ஒதுக்கப்பட்ட தொகை 5.50 கோடி ரூபாய். இந்தப் புள்ளி விவரத்திலிருந்து சுற்றுலாத் துறை யார் ஆட்சிக் காலத்திலே அதிகமாக கவனிக்கப்பட்டது என்பதை தெளிவாகப் புரிந்து கொள்ளமுடியும்.

ஜெயலலிதா தனது அறிக்கையிலே சிசு இறப்பு விகிதத்தில் கழக ஆட்சியிலே எந்தவிதமான முன்னேற்றமும் இல்லை என்று தெரிவித்திருக்கிறார். ஆனால் சிசு மரண விகிதத்தைக் குறைத்ததிலே தமிழகம் கழக ஆட்சியிலே மகத்தான சாதனை புரிந்துள்ளது. 1000 பேர் பிறக்கிறார்கள் என்றால் இதில் பிறந்த ஓராண்டிற்குள் அகில இந்திய அளவில் 72 குழந்தைகள் இறந்து போகிறார்கள். ஆனால் தமிழகத்தில் 1000 பேர் பிறக்கிறார்கள்

என்றால் 53 குழந்தைகள் மட்டுமே இறந்து போகிறார்கள். இது புள்ளிவிவரம் காட்டும் உண்மையாகும்.

கழக ஆட்சியிலே ஆதிதிராவிட மக்களுக்கு எதுவும் செய்யவில்லை என்பதைப்போல ஒரு குற்றச்சாட்டினை ஜெயலலிதா தனது அறிக்கையிலே தெரிவித்திருக்கிறார். ஜெயலலிதா முன்பு ஆட்சியிலே இருந்த ஐந்தாண்டுகளில் ஆதி திராவிடர்களுக்காக கட்டிய இலவசத் தொகுப்பு வீடுகள் ஒரு இலட்சத்து 20 ஆயிரத்து 700 ஆகும். 1996-க்குப் பின் தி.மு.கழக ஆட்சியில் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகள் 2,96,131 ஆகும். இந்த வீடுகளுக்கு கான்கிரீட் கூரை போடுவதற்காக வீடு ஒன்றுக்கு மாநில அரசால் வழங்கப்பட்ட 7000 ரூபாய் 1998-99 முதல் 12 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டது என்பதையும் நினைவில் கொண்டால் ஜெயலலிதாவின் இந்த குற்றச்சாட்டும் உண்மையல்ல என்பது தெளிவாகும்.

என்னை பொருளாதார மேதை என்று நான் கூறிக்கொள்வதாக ஜெயலலிதா தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். அம்மையார் அவர்களே, நான் எங்கேயும் பொருளாதார மேதை என்று என்னைக் கூறிக் கொண்டதில்லை. அந்தப் பெருமை எல்லாம் உங்களுக்கேதான் உரியது. என்னைப் பற்றிப் பேரவையிலே முன்பொருமுறை நானே சொன்னதைப்போல மிக மிக என்று எத்தனை மிக வேண்டுமானாலும் போட்டுக் கொள்ளலாம் அத்தனை மிகப் பின்தங்கிய சமுதாயத்திலே பிறந்தவன் நான்.

தேவையற்ற வேலைகளில் இனிமேலாவது நான் ஈடுபடாமல் இருக்க வேண்டுமென்றும் ஜெயலலிதா அறிவுறுத்தியுள்ளார். எது தேவையான வேலை, எது தேவையற்ற வேலை என்பது எனக்குத் தெரியும். திருந்தவே முடியாதவர்களுக்காக கைவலிக்க எழுதிக் கொண்டிருப்பது வேண்டுமானால் தேவையற்ற வேலையாக இருக்கலாம்.

அன்புள்ள,

மு. கருணாநிதி

(23-08-2001)

2631. அரசு எவ்வழி; அதிகாரிகள் அவ்வழி!

உடன்பிறப்பே,

கைவலியென்று கூறிவிட்டுத் தொடர்ந்து கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறானே யென்று நீ நினைத்திடுவாய் - கைவலி இன்னமும் முழுமையாக நீங்கிடவில்லை. நான் சொல்லிக் கொண்டேயிருக்க என் உதவியாளர் தம்பி சண்முகநாதன் சுருக்கெழுத்தால் எழுதி, அதனைக் கணினியில் அச்சுக் கோத்துத்தான் என் கடிதங்கள் உருவாகின்றன.

சில நேரங்களில் அரிதாக நானே எழுதிட முயற்சி செய்து வலதுகை மணிக்கட்டை மட்டும் அசைத்து கடிதம் தீட்டுகிறேன். சொல்லி எழுதுவதைவிட, நானே கையால் எழுதுவதுதான் எனக்கு மன நிறைவு.

இன்றைக்கு இந்தக் கடிதத்துக்கு இந்தப் பீடிகை ஏன் என்பதற்கு விளக்கம் தேவையில்லை. கடிதத்தை முழுவதும் படித்தாலே உனக்குப் புரிந்துவிடும்.

ஓய்வில்லா உழைப்பு - முதுமை இவற்றின் காரணமாக தொடர்ந்து இரண்டு நிமிடங்களுக்கு மேல் என்னால் நிற்க முடியாது என்பதால்தான்; தேர்தலுக்கு முன்புகூட சட்டப்பேரவையில் அவைத்தலைவர் அனுமதி பெற்று உட்கார்ந்துகொண்டே உரையாற்றினேன்.

இத்தகைய உடல்நிலையில் ஆட்சி மாற்றத்துக்குப் பிறகு பொய்யாக ஜோடிக்கப்பட்ட வழக்கு ஒன்றுக்காக என்னைக் கைது செய்திட நள்ளிரவில் என் படுக்கை அறைக்குள்ளேயே போலீசார் நுழைந்து என்னைச் சித்ரவதை செய்து தூக்கிச் சென்றார்களே; அதற்குப் பிறகு எனது வலது கையைச் சில கோணங்களில் மெல்ல அசைத்தால்கூட வலி உயிர் போகிற அளவுக்கு இன்னமும் என்னை வாட்டிக் கொண்டிருக்கிறது.

அப்படி வலிக்கும்போதெல்லாம் எனக்குக் காவல்துறை அதிகாரிகள் சிலர் விளைத்த கொடுமை நினைவுக்கு வருவதைக் காட்டிலும்; அந்தக் கொடுமை கண்டு உயிர் விட்டார்களே எழுபது உடன்பிறப்புகள்; அவர்களைப் பற்றியும் - சென்னைக் கண்டனப் பேரணியில் எட்டுபேர் பலியானார்களே அவர்களைப் பற்றியும் - பலர் படுகாயமுற்றார்களே அவர்களைப் பற்றியும்தான் நினைப்பு அதிகமாகி நெஞ்சில் நெருப்பை அள்ளிக் கொட்டுகிறது.

இவற்றைப் பற்றியெல்லாம் கவலைப்படாதது மட்டுமன்றி, இந்த நிகழ்ச்சிகளை அறவே மறுப்பதிலும் - தனியாக அமர்ந்தோ, தமருடன் அமர்ந்தோ தாங்கொணாத மகிழ்ச்சி அடைவதிலும் ஒரு சிலர் இன்பம் காணுகிறார்கள்; அறிவேன் நான்!

அரசில் வீற்றிருப்பவர்கள் இவற்றை மறைத்து அலட்சியப் போக்கிலும் அல்லது தமது எண்ணம் ஈடேறியது என்ற ஆணவத்திலும் - கொழிப்பது ஒன்றும் வியப்பில்லை. ஆனால் எனக்கு வியப்பு அளிக்கக் கூடியது ஒன்றுண்டு!

அரசு எவ்வழி, குடிமகளும் அவ்வழி! என முதுமொழி ஒன்றுண்டு. அந்த முதுமொழியை நூற்றுக்கு நூறு ஏற்றுக் கொள்ள இயலாது.

ஆனால் இப்போது, அரசு எவ்வழி, அதிகாரிகளும் அவ்வழி என ஒரு புதுமொழி உருவாகிற அளவுக்கு தமிழகத்தில் நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

இரண்டு பெரிய பத்திரிகைகளில் காவல்துறையின் பெரிய அதிகாரி ஒருவர் வழங்கிய பேட்டி வெளியாகியிருக்கிறது. அந்தப் பெரிய அதிகாரி காவல்துறையின் தலைமை அதிகாரி - அதாவது டி.ஜி.பி. ரவீந்திரநாத் அவர்களாவார்.

ஒரு அதிகாரியின் பேட்டி பற்றி ஒரு முன்னாள் முதலமைச்சர் - ஒரு பெரிய இயக்கத்தின் தலைவர் - இப்படிக் கடித வாயிலாக விளக்கமளிப்பது தேவையா என்று எண்ணிடத் தோன்றும்.

ஆனால் அந்தப் பெரிய அதிகாரி அளித்த பேட்டி கடந்த ஜூலை 3ஆம் தேதியன்று எல்லா ஏடுகளிலும் வெளி வந்திருந்தாலும்கூட தினமணி இதழில் பெட்டிச் செய்தியாக டி.ஜி.பி.க்கு எல்லாமே தமாஷ்தான் என்று தலைப்பிட்டு வெளிவந்தது. செய்தியாளர் கேட்ட கேள்விகளும் பதில்களும் வருமாறு :-

கேள்வி :- கருணாநிதி கைது செய்யப்பட்ட சரியான நேரம் என்ன?

டி.ஜி.பி. பதில் :- எனக்கு ஞாபக மறதி கொஞ்சம் அதிகம். வேணும் என்றால் என் உதவியாளரிடம் கேளுங்கள். தெரியும்.

கேள்வி :- திங்கட்கிழமை (பந்த்) கடைகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தனவே?

டி.ஜி.பி. :- பஸ்ஸில் ஒருவர் செல்கிறார். அவர் மீது யாரோ கல் எறிவதில் இறந்து விடுகிறார். அதுபோல எதுவும் நடக்கக் கூடாது என்றுதான் கடைகள் அடைக்கப்பட்டிருந்தன.

கேள்வி :- வீட்டில் கைது செய்து அழைத்து வரும் போது கருணாநிதி செருப்பு அணிந்திருந்தார், சி.பி.சி.ஐ.டி. அலுவலகத்தில் நுழையும்போது செருப்பு இல்லையே? அது எப்படி கழன்று விழுந்தது?

டி.ஜி.பி. :- கோயிலுக்கு செல்லும்போது செருப்பைக் கழற்றுவதில்லையா? அதேபோலத்தான் இதுவும்! செருப்பு விவகாரத்தைப் போய்க் கேட்கிறீர்களே!

உடன்பிறப்பே, சி.பி.சி.ஐ.டி. அலுவலகம் கோயிலாம் - டி.ஜி.பி. ரவீந்திரநாத் அவர்கள் கூறுகிறார். அந்தக் கோயிலுக்குள் நான்தான் செருப்பு அணியக் கூடாதாம் - என்னை அந்த அலுவலகத்திற்கு அழைத்துச் சென்ற காவல் அதிகாரியும் மற்றும் காவலர்களும் செருப்பு அணிந்திருக்கலாமாம். டி.ஜி.பி. அவர்களின் கருத்துப்படி அந்த செருப்பணிந்த அதிகாரிகள் சி.பி.சி.ஐ.டி. அலுவலகத்தை புனிதமாகக் கருதவில்லை என்று டி.ஜி.பி. அவர்களால் ஜாடையாக அறிவுறுத்தப்படுகிறது என்றுதானே எடுத்துக் கொள்ள வேண்டும்!

நான் சிறையிலிருந்தபோது வெளிவந்த தினமணியில்தான் இப்படி ஒரு தமாஷ் பேட்டியைக் காவல்துறையின் பொறுப்பு வாய்ந்த முதன்மைத் தலைவர் அளித்துள்ளார் என்ற செய்தி, பெட்டிச் செய்தியாக வெளியிடப்பட்டுள்ளது.

எவ்வளவு பெரும் பொறுப்பிலே உள்ளவர் எத்தகைய பொறுப்பற்ற முறையில் பதில் அளித்திருக்கிறார் என்ற என் வியப்பு முற்றிலுமாக அடங்குவதற்குள்ளாக; இதோ இந்த வாரம் ஆனந்த விகடன் இதழில் அதே அதிகாரியின் பேட்டி ஒன்று வந்திருக்கிறது.

நான் அந்த அதிகாரியின் பேட்டியைப் பெரிதுபடுத்தி பதில் எழுதிக் கொண்டிருக்கவில்லை. பத்திரிகையுலகத்தின் பிதாமகன்கள் எனக் கூறப்படும் டி.எஸ்.சொக்கலிங்கமும், சிவராமனும் இயக்கிய தினமணி ஏடும்; வார இதழ் வரலாற்றில் திருப்புமுனை உருவாக்கிய வாசன் அவர்கள் தொடங்கி; பேராசிரியர் கல்வி, பெரும் எழுத்தாளர் சாவி போன்றோர் எழுத்துத் தொண்டாற்றிய ஆனந்த விகடன் இதழிலும் வந்துள்ள இந்த அதிகாரியின் பேட்டி வாயிலாக என்னைப் பற்றி விதைக்கப்படும் தவறான கருத்துக்கு நான் விரிவாகப் பதில் அளிக்க வேண்டியது என் கடமை ஆகிவிட்டதே; அதனால்தான் இவ்வளவும் எழுதுகிறேன். விகடன் செய்தியாளர் கேள்வியும் அதற்கு டி.ஜி.பி. அவர்களின் பதில்களில் ஒன்றும் வருமாறு :-

கேள்வி :- கலைஞர் முதல்வராக இருந்தபோதே நீங்கள் சட்டம் ஒழுங்கு டி.ஜி.பி. பதவி கேட்டு அவரிடம் போனீர்களா?

டி.ஜி.பி. பதில் :- நோ சான்ஸ்! பிறந்தநாள் நியூ இயர் நாட்களின் போதுகூட நான் போனதில்லை. கருணாநிதி என்னைப் பற்றி வேண்டுமென்றே சொல்கிறார். இப்படித்தான் அவர் கைதானபோது நீதிபதியிடம் எந்தக் காயமும் இருப்பதாகக் காட்டவில்லை. ஆனால் பிறகு ஒருநாள் தனது சட்டையைக் கழற்றி காயமிருப்பதாகச் சொன்னார். இதிலிருந்தே அவர் அரசியல் பண்ணுகிறார் என்று புரியவில்லையா?

உடன்பிறப்பே, உண்மை எது? பொய் எது? ஊரில் என்ன நடக்கிறது? - என்று அறியக்கூடிய உளவுத் துறையையும் தன் கீழே வைத்திருக்கும் தலைமைக் காவல்துறை அதிகாரி; இப்படி துளியளவு பொறுப்புணர்ச்சியுமில்லாமல் ஒரு பேட்டி கொடுத்திருப்பது எந்த வகை நியாயமோ புரியவில்லை.

நான் கைது செய்யப்படும்போது போலீசாரால் கேவலமாக நடத்தப்பட்டதையும், தாக்கப்பட்டதையும், சட்டை கிழிக்கப்பட்டதையும், உடல்நிலை பாதிக்கப்பட்டு ரத்தக் கொதிப்பு ஏறியிருப்பதையும் நீதிபதியிடம் என் வழக்கறிஞரும் நானும் சொன்ன காரணத்தினால்தான், நீதிபதி அவர்கள் என்னுடன் என் குடும்ப டாக்டர் திரு. கோபால் சென்னை அரசு மருத்துவமனைக்கு உடன் செல்லலாமென்றும், முதலில் சிகிச்சை செய்து விட்டு பிறகு சிறையில் அடைக்க வேண்டுமென்றும் காவல்துறை அதிகாரிகளிடம் கூறினார். ஆனால் அதன்படி

என்னை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லாமல் சென்னை சிறைவாசலுக்குக் கொண்டு வந்து அங்கிருந்து வேலூர் சிறைக்கு கொண்டு செல்ல முயற்சி மேற்கொண்டார்கள். நான் அதை மறுத்து உண்ணாவிரதம் தொடங்கிய பிறகுதான் என்னை சென்னை சிறையில் அடைத்தார்கள்.

சிறையிலிருந்து 4.7.2001 மாலை விடுதலையானேன். 6.7.2001 அன்று அப்போலோ மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை பெற்று 9.7.2001 மாலையில் வீடு திரும்பினேன்.

ஜூலை 9 சிகிச்சை முடிந்தபிறகும் கை தோள் பட்டை வலி நிற்கவில்லை. மாறாக மேலும் வலி அதிகமாயிற்று. கையில் தோள் பகுதிக்குக் கீழே ரத்தம் உள்ளுக்குள் கசிந்து ரத்தக்கட்டு ஏற்பட்டு; அப்போதுதான் செய்தியாளர்களிடம் என் தோள்பட்டைப் பகுதியைக் காட்டினேன்.

தொடர்ந்து மறுநாளே மீண்டும் 1.8.2001 அன்று அப்போலோவில் சேர்ந்து 5.8.2001 அன்று மாலை சிகிச்சை ஓரளவு முடிந்து வீடு திரும்பினேன்.

அந்த விபரங்களும் அப்போலோ மருத்துவமனை வழங்கிய விபரங்களுடன் இதோ இந்தக் கடிதத்திலேயே ஆதாரமாக இணைக்கப்பட்டுள்ளது.

* வலி அதிகமானது - வலதுதோள் தசை நார்கள் கடினமாகியது - அந்த வேதனை வலது கையின் மேற்புறம் வரையில் பரவியுள்ளது.

* நீலங்கலந்த சிகப்பு நிறத்தில் கசிவு ஏற்பட்டு ரத்தக்கட்டு ஏற்பட்டுள்ளது. இது 29.7.2001லிருந்து காணப்படுவது.

* ஏற்கனவே சிறிதளவு இருந்த தோள் பட்டை வலி 30.6.2001 அன்று ஏற்பட்ட காயத்தினால் தீவிரமாகியுள்ளது.

முதல் தடவை மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற்றதற்கு 60,895 ரூபாயும், இரண்டாவது தடவை தங்கி சிகிச்சை பெற்றதற்கு 46,565 ரூபாயும் மருத்துவமனைக் கட்டணமாகச் செலவானது என்பதையும்; நான் சொல்வது உண்மைதானா என்பதையும்; நான் இணைத்துள்ள ஆதாரங்கள் சரிதானா

என்பதையும் காவல்துறையின் பெருந்தலைவர் ரவீந்திரநாத் அவர்கள் அப்போலோ மருத்துவமனையில் விசாரித்து அறிந்து கொள்ளலாம்.

அதற்குப் பிறகாவது அரசியல் பண்ணுவது யார் என்பதை அவர் புரிந்து கொள்ளலாம்!

என் செய்வது; அரசு எவ்வழியோ அதிகாரிகளும் அவ்வழி என்பதை டி.ஜி.பி. ரவீந்திரநாத் அவர்கள் ஏடுகளுக்கு அளித்த பேட்டிகள் மூலம் நிரூபித்திருக்கிறார்.

அன்புள்ள,

மு. கருணாநிதி

(24-08-2001)

2632. சிந்தனைக்குரிய சிலப்பதிகாரம், இராமாயணம்!

உடன்பிறப்பே,

நான் எழுதிய சிலப்பதிகாரம் நாடகக் காப்பியம் எனும் ஆங்கில மொழி பெயர்ப்பு நூலுக்கு அறிஞர் அண்ணா வழங்கியுள்ள அணிந்துரையில் ஒரு பகுதி வருமாறு :-

இந்த நூல் வாயிலாக யாரையும் விஞ்சுகின்ற அளவிற்கு கருணாநிதி வெற்றி கொண்டுள்ளார், தான் ஒரு ஒப்புவமையற்ற நடை அழகு காட்டும் எழுத்தாளர் என்பதால்! நூல் முழுவதும் கருணாநிதி, ஒரு காவியப் படைப்பிற்குத் தேவையான செழுஞ் சொல்லோட்டத்தை சீரிய அழகு அமைப்பை உருவாக்கித் தருகிறார். மு. கருணாநிதியின் இந்நாடகமே ஒரு சிலம்பு! இளங்கோவடிகளின் தங்கம் இதில் இருக்கிறது. இந்தப் புகழ்மிக்க எழுத்தாளர் கருணாநிதியின் ஆற்றலும் இதில் அபரிமிதமான அளவுக்கு இருக்கிறது. சிலப்பதிகாரம் - காலத்தையும் கடந்த கருத்தமைதி கொண்டது. அதன் போதனை - தமிழ்நாட்டில் மட்டும் முடங்கிக் கிடப்பதல்ல

அண்ணாவின் இத்தகைய பாராட்டுதலைப் பெற்ற சிலப்பதிகாரம் என்ற எனது நாடகக் காப்பியத்தில் தொடக்கக்காட்சிகள் இரண்டை நினைவுபடுத்த விரும்புகிறேன். சோதிடத்தைக் கட்டாயப் பாடமாக ஆக்க வேண்டுமா வேண்டாமா என்ற விவாதம் அகில இந்திய அளவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொழுது இந்த இரு காட்சிகளும் அதற்கான விடையைத் தரும் என்ற நம்பிக்கையில்தான் இதனை நினைவுபடுத்துகிறேன்.

காட்சி - (1)

(செங்குட்டுவன் பிறந்த நாள் விழா நடைபெறும் கொலுமண்டபம் மிக்க அழகுற அமைக்கப்பட்டிருக்கிறது. வேந்தன்

நெடுஞ்சேரலாதனும் அரசி நற்சோணையும் அமர்ந்திருக்கிறார்கள் அரியாசனத்தில்! வில்லேந்திய வீரர்குல மங்கையரின் கூத்து நடைபெறுகிறது. செங்குட்டுவனும் இளங்கோவும் மண்டபத்தில் நுழைந்திடும்போது, கூத்தாடும் பாவையர், அவர்களை எதிர்கொண்டழைத்து அரசர் இருக்கையிடம் அழைத்துச் செல்கிறார்கள். இருவரும் பெற்றோரை வணங்கி அருகே அமர்கிறார்கள். தொடர்ந்த கூத்து முடிகிறது. நெடுஞ்சேரலாதன் எழுந்து வாழ்த்துரையாற்றுகிறான்!)

நெடுஞ்சேரலாதன் :- அவையத்துப் பெருமக்கள்! சேர நன்னாட்டின் செழிப்பையும் புகழையும் பெருக்கிடும் ஆற்றல் பெற்ற செங்குட்டுவனை மகனாகப் பெற்றதை எண்ணி எண்ணி என் மனம் துள்ளுகிறது இன்று! தம்பியுடையான் படைக்கஞ்சான் எனும் பழமொழிக்கேற்ப இளங்கோவை இளையோனாகப் பெற்ற என்னருஞ் செல்வனை வாழ்த்துகிறேன், இந்த நன்னாளில்! விரைவில் செங்குட்டுவன் முடிசூடி செங்கோல் ஏந்தி, தமிழ் அறம் வளர்ப்பான் என்றும்....அந்நாள் அண்மையில் அமையுமென்றும் அறிவிக்கின்றேன்...

அவையோர் :- வாழ்க செங்குட்டுவன்! செங்குட்டுவன் வாழ்க!!

(நிமித்திகன் குறும்புச் சிரிப்புடன் எழுகிறான்)

நிமித்திகன் :- வாழ்க செங்குட்டுவன்! வாழ்க எதிர்கால மன்னர் இளங்கோ!!

சேரலாதன் :- என்ன நிமித்திகரே! என்ன கூறுகிறீர்?..

நிமித்திகன் :- நான் கூறவில்லை அரசே! ஊழ்வினை அப்படித்தான் கூறுகிறது! முடிபுனையும் உரிமை மூத்த மகன் செங்குட்டுவனுக்குத்தான் உண்டெனினும்...விதி புனையும் கதையோ வேறாக இருக்கிறது! இளையவன் இளங்கோதான் சேர மண்டிலத்தை ஆளுவானாம்...

சேரலாதன் :- (வியப்புடன்) என்ன?...

அவையோர் :- மூத்தவனிருக்க இளையவனுக்குப் பட்டமா?

இளங்கோ :- இல்லை! இல்லை!! என் அண்ணனே ஆளப் பிறந்தவர்!

சேரலாதன் :- இளங்கோ! நிமித்திகர் வாக்குப் பொய்க்காது!

இளங்கோ :- பொய்க் காது படைத்தவர்களுக்கு நிமித்திகர் வாக்குப் பொய்க்காது!... இது உண்மைக் காது!... அவர் ஆருடங் கேட்டுக் கலங்காது!...

நிமித்திகன் :- ஊழ்வினையை மாற்ற இயலாது இளங்கோ!...

இளங்கோ :- ஏன் இயலாது? ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித் தாழாது உஞற்றுபவர் எனக் குறள் கூறும் கருத்தை உண்மையாக்குகிறேன்! நீர் கூறும் விதியை மதியால் வெல்லுகிறேன்!

நிமித்திகன் :- மூத்தவன் இராமன் காடாள வேண்டும்; இளையவன் பரதன் நாடாள வேண்டும் என்ற விதியை யாராவது மாற்ற முடிந்ததா?

இளங்கோ :- பரதனும் ஆளவில்லை; இராமனும் ஆளவில்லை; பதினான்கு வருடம் பாதுகை அல்லவா நாடாண்டது! நிமித்திகரே, பழைய இதிகாசங்களைக் காட்டி விதியை நிலை நிறுத்த எண்ணாதீர்! இதோ... நான் படைக்கிறேன் புதிய இதிகாசம்! உமது ஆருடத்தை அறிவால் வெல்லுகிறேன்... அண்ணனையே அரசுக்குரியவராக ஆக்குகிறேன்! ஏற்றுக் கொள்ளும் நிமித்திகரே எனது அறைகூவலை! உமது கூற்று தூள்! தூள்!! தூளாகப் போகிறது பாரும்!...வருகிறேன்!....

(இளங்கோ மண்டபத்தை விட்டு வெளியேறுகிறான். அவை, வியப்பில் ஆழ்கிறது. அரசரும் அரசியும் ஒருவருக்கொருவர் பார்த்துக் கொள்கிறார்கள், வேதனையோடு!)

***

காட்சி (2)

சேரலாதன் மாளிகை

(ஆங்கு சேரலாதன், நற்சோணை, செங்குட்டுவன், வேண்மாள் இருக்கிறார்கள்)

செங்குட்டுவன் :- இளங்கோ யார்? என் தம்பி தானே! நான் ஒருவன் பிறக்கவில்லையென்று கருதிக் கொண்டு அவனுக்கு முடி சூட்டுங்களே!...

சேரலாதன் :- மூத்தவனிருக்கும்போது இளையவனுக்கு... முறையல்லவே செங்குட்டுவா!

செங்குட்டுவன் :- இறைவனருள் அப்படித்தான் இருப்பதாக நிமித்திகர் கூறி விட்டாரே! தந்தையே! தம்பிக்கே நாடு உரியதாகட்டும்! விதி வழி அவனுக்கு வரவேண்டியதை நான் தடை செய்யமாட்டேன்! படைத் தளபதியாக இருந்து நாட்டையும் தம்பியையும் பாதுகாப்பேன்...

(அண்ணா என மென்மையான குரல் கேட்டு அனைவரும் திரும்புகிறார்கள். இளங்கோ, இளங்கோவடிகளாக மாறி நிற்கிறான்! துறவுக் கோலம்!)

செங்குட்டுவன் :- தம்பி! இது என்ன கோலம்?

இளங்கோ :- தூய்மையுள்ளங்கொண்ட அண்ணனுக்காகத் தம்பி ஏற்றுக் கொண்ட துறவுக் கோலம்! இளங்கோ அரசனல்ல; இளங்கோ அடிகள்!...

நற்சோணை :- இளங்கோ, என் ஆசை மகனே உன்னை இப்படிக் காண வேண்டுமென்பது விதியா?

இளங்கோ :- விதி இதுவல்ல தாயே! நான் வேந்தனாக வேண்டுமென்பது விதி! இது, மதி!...

செங்குட்டுவன் :- தம்பி! வேண்டாம் இந்தக் கோலம்! ஏற்றுக் கொள் சேரப் பேரரசை! என் உள்ளமெல்லாம் நிறைந்தவனே! எழில்மிகு வஞ்சித் தலைநகரின் வீதிகளில் ஏறுபோல் பவனி வரவேண்டிய நீ, துறவிக் கோலம் பூண்டு, துடிக்க விடாதே எங்களை!

சேரலாதன் :- அன்புத் திருமகனே! உன் தியாக உள்ளத்தைத் திறந்து காட்டி விட்டாய்! தென்னகத்து மண்ணிலெல்லாம் புகழ் மணக்கச் செய்து விட்டாய்! ஆனால் பெற்று வளர்த்த எங்களைப் பித்தராக்குவது முறையா என எண்ணிப் பார்!...

நற்சோணை :- ஆமாம் கண்ணே! இளங்கோ! ஈட்டிகள் ஆயிரத்தை எங்கள் இதயத்தில் பாய்ச்சாதே!

(வேண்மாள் கண்ணீர் விட்டவாறு தூணில் சாய்ந்திருக்கிறாள்).

அதோ பார்; உன் அண்ணி கண்ணீர் விடுவதை... அப்பா துடிப்பதை...அண்ணன் கலங்குவதை....பெற்ற வயிறு புலம்புவதைக் கேளடா மகனே, கேள்!

இளங்கோ :- யாரும் என்னைத் தடுக்க வேண்டாம்!...விதியை வெல்வதற்கு நான் தேர்ந்தெடுத்த முடிவு இது!...விதி விட்ட வழியில் நடப்போமென்று இருந்தால் வேதனைக் களமாகி விடும் தமிழ்நாடு! விதிப்படியே வெற்றி தோல்வியென எண்ணியிருந்தால்...அப்பா இமயத்தின் நெற்றியிலே விற்கொடியைப் பறக்க விட்டிருக்க முடியாது! விதியை எதிர்க்கிறேன்...மேலும் மேலும் எதிர்க்கிறேன்! எடுத்த எடுப்பிலேயே எனக்குக் கிடைத்த வெற்றி இது! என்னை வாழ்த்தி வழி அனுப்புங்கள்!...

செங்குட்டுவன் :- இளங்கோ! எங்கு போகிறாய்?

இளங்கோ :- இன்பத் தமிழகத்தை விட்டு எங்கும் போய் விட மாட்டேன். தலைநகருக்கு அருகேயுள்ள குணவாயிற் கோட்டத்திலேயே தங்கப் போகிறேன் அடிக்கடி அனைவரையும் சந்திக்கிறேன். அப்பா!.... அம்மா!..... அண்ணி!..... அண்ணா!..... வருகிறேன்.....,

(அனைவரது விழிகளிலும் நீர் பெருகி வழிகிறது!)

(இளங்கோவடிகள் வெளியேறுகிறார் அரண்மனையைத் துறந்து)

அரண்மனை வாயிற்புறம்.

(இளங்கோவடிகள் வெளியேறுவதைக் காவலர் அனைவரும் கண்கலங்க கவனிக்கிறார்கள்! நாவலர், பாவலர் அனைவருமே அமைதி நிறைந்த சோகத்தோடு மரம் போல் நிற்கிறார்கள். பெண்டிரும், பாவலரும், உழவரும், வணிகரும் சித்திர உருவங்களாய் அசையாது நின்று விடுகின்றார்கள். மாளிகையிலிருந்த அன்னை, தந்தை, அண்ணன், அண்ணி காணுகிறார்கள். இளங்கோவடிகள் வெகு தொலைவில் போய் விடுகிறார்....எதிரே நிமித்திகன் வருகிறான்....)

நிமித்திகன் :- யார்? இளங்கோவா? ...என்ன இது?....

இளங்கோ :- நீர் பெருமையோடு பேசினீரே அந்த விதியின் வீழ்ச்சி! மதியின் வெற்றி! தோல்வி கண்ட முகத்தைத் தொங்க

விட்டுக் கொண்டு உமது தொழிலையே துறந்து விட்டு என்னைத் தொடர்ந்து வாரும்....

நிமித்திகன் :- ஆ!.....

இளங்கோ:- ஏன் முடியாதா? உள்ளம் பக்குவமடைய வில்லையா? ஊழ்வினை தடுக்கிறதா வருகிறேன்!....

(நிமித்திகன் வியப்போடு தனக்குள்)

நிமித்திகன் :- இப்போது பிழைப்பே போனது; இனி மாளிகைப் பக்கம் போனால் மானம் போய் விடும். தோல்வி! பெரிய தோல்வி!!

(திகைத்து நிற்கும் நிமித்திகனோடு காட்சி முடிகிறது.)

உடன்பிறப்பே,

சேர இளவல் இளங்கோவிற்கு நிமித்திகன் கூறிய சோதிடம் மட்டும் பொய்த்துப் போய்விடவில்லை. அயோத்தி இராமனின் மகுடாபிஷேக விழாவிற்கு மாமுனிவர் வசிஷ்டர் குறித்துக் கொடுத்த நாள் நட்சத்திரம் கூட இராமனை நாடாள்வதற்குப் பதிலாக காடாள்வதற்கு அனுப்பியதை சோதி பாட ஆராய்ச்சி நடைபெறும் இந்நாளில் நினைவுபடுத்திக் கொள்வது நல்லதல்லவா?

அன்புள்ள,

மு. கருணாநிதி

(28-08-2001)

2633. இங்குள்ள தமிழர் ஒன்றாதல் காண்போம்!

உடன்பிறப்பே,

மாநில ஆட்சி மொழிகள் அனைத்தையும் மத்திய ஆட்சி மொழிகளாக ஆக்க வேண்டுமென்ற ஒரு கருத்தும், அவ்வாறு உடனடியாக ஆக்குவதற்கு இயலவில்லை என்று கூறினாலும் அதற்குரிய காரண காரிய விளக்கங்களை எடுத்துச் சொன்னாலும் முதற்கட்டமாக இலக்கிய வளம் மிகுந்ததும், காவி வளம் செறிந்ததும், தொன்மை வாய்ந்ததுமான தமிழ் மொழியை மத்திய ஆட்சி மொழிகளில் ஒன்றாக உடனடியாக ஆக்கிடுக என்ற குரல் இன்றைக்குத் தமிழகத்தில் வலுப்பெற்றிருக்கின்றது.

இந்தக் குரலை முதலில் எழுப்பியவர்கள் யார் என்று ஒருவருக்கொருவர் போட்டி போடுவதிலிருந்தே தமிழ் மொழியும் இந்தியாவின் மத்திய ஆட்சி மொழிகளில் ஒன்றாக வேண்டுமென்ற கருத்து வலுப்பெற்றிருக்கின்றது என்பதை உணர்ந்து கொள்ள முடியும்.

தமிழகத்தில் இன்றைய ஆளுங்கட்சியினராக இருக்கும் அ.தி.மு.க.வினர்; ஏதோ தாங்கள்தான் தமிழ் மத்திய ஆட்சி மொழியாக வேண்டுமென முதலில் தீர்மானம் போட்டவர்கள் என்று கூறிக் கொள்கிறார்கள். அது உண்மையாக இருக்குமானால் நமக்கு மகிழ்ச்சிதான். ஆனால் வரலாற்றில் உண்மை நிகழ்ச்சிகளை மறைத்து விட்டால் அது உண்மையான வரலாறாக இருக்க முடியாது.

1965ஆம் ஆண்டிலேயே அண்ணா அவர்கள் மாநிலங்களவை உறுப்பினராக இருந்தபோது அந்த அவையில் ஆற்றிய ஆங்கில உரையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார் :-

“I can never forget that I have got a hoary language called Tamil, I will never be satisfied till that language in which my forefathers spoke,

in which my poets have given sermons and scriptures, in which we have got classics and literature of inexhaustible knowledge. I will never be content till that day when Tamil takes its due place as one of the official languages in the Union."

அதாவது : "மிகத் தொன்மையான மொழியான தமிழை தாய்மொழியாக நான் பெற்றிருக்கிறேன் என்பதை நான் மறந்துவிட முடியாது. எனது முன்னோர்கள் பேசிய அந்த மொழி - எனது கவிஞர்கள் அரும்பெரும் அறிவுரைகளையும், தத்துவங்களையும் யாத்துக் கொடுத்த அந்த மொழி - அள்ள, அள்ளக் குறையாத அறிவுக்களஞ்சியங்களும், காவியங்களும், இலக்கியங்களும் நிறைந்த அந்த மொழி - அதுதான் எனது தமிழ்மொழி - அம்மொழி இந்தியாவின் ஆட்சி மொழிகளில் ஒன்றாக உரிய இடத்தைப் பெறும்வரை நான் ஒருபோதும் திருப்தியடைய மாட்டேன்" என்று அண்ணா பேசியிருக்கிறார்.

இதனை திருச்சியில் 1996ஆம் ஆண்டு ஜனவரி 26, 27, 28 ஆகிய நாட்களில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழக மாநில மாநாட்டில் தமிழ் மத்திய ஆட்சி மொழியாக ஆக வேண்டும் என்ற தீர்மானத்தை முன் மொழிந்தபோது தம்பி முரசொலி மாறன் சுட்டிக்காட்டிப் பேசியிருக்கிறார்.

மாநிலங்களவையில் மேலும் அண்ணா என்ன பேசினார் என்பதையும் மாறன் பின்வருமாறு குறிப்பிடுகிறார் :-

But we have got a language of our own and therefore we plead that our language should find a place in the official languages list of this Union. Till that time, English should continue so that there may not be injustice, intentional or unintentional

அநீதி இழைக்கப்படாமல் இருப்பதற்காக என்னுடைய மொழியாகிய தமிழ்மொழியை ஆட்சி மொழி ஆக்குக. அதுவரையில் ஆங்கிலம் தொடர்ந்து நீடிக்கட்டும் என்று அண்ணா சொல்லியிருக்கிறார்.

எனவே திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி மொழிக் கொள்கையாக மத்தியில் தமிழும் ஆட்சி மொழியாக வேண்டுமென்ற கருத்தை 1965ஆம் ஆண்டிலேயே அறிஞர் அண்ணா அவர்கள் மாநிலங்களவையிலே முழங்கி, அந்தக் கருத்து கழகத்தின் மாநில மாநாட்டில் முதன் முதலாக சிறப்புத்

42239
894.8116

திரு.க. அறக்கட்டளை
பேராசிரியர் அன்பழகனார்
ஆய்வுமையம்
தேனாம்பேட்டை, சென்னை-18
அறிவாலயம்
கருணா 32

தீர்மான வடிவில் 1996 ஜனவரியில் கொண்டுவரப்பட்டு அன்று முதல் இன்று வரை கழக மாநாடுகளில், பொதுக் குழுக்களில், கருத்தரங்குகளில் வலியுறுத்தப்பட்டு வருகிறது.

திருச்சி மாநில மாநாட்டில் இந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டபோது முன்மொழிந்து தம்பி முரசொலி மாறன் ஆற்றிய உரையின் சில பகுதிகளை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அவை வருமாறு :-

"ஒரே வரியில் சொல்ல வேண்டுமேயானால் மத்திய அரசே! உடனடியாகத் தமிழையும் இந்தியோடு சேர்த்து இந்தியாவின் ஆட்சி மொழியாக ஆக்குக!" என்று கேட்டுக் கொள்கிற தீர்மானம்தான் இந்தத் தீர்மானம்.

இதன் மூலமாக நம்முடைய கோரிக்கைக்கு ஒரு புதிய பரிமாணத்தையும், ஒரு புதிய வேகத்தையும் நாம் கொடுக்கிறோம். We are giving a new dimension and thrust to our policy. இந்தியாவிலே இரண்டு மொழிக்குடும்பங்கள் இருக்கின்றன. ஒன்று திராவிட மொழிக் குடும்பம்; தென்னாட்டில் வாழும் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு ஆகிய அனைத்தும் திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை, அந்த மொழிக் குடும்பத்திற்குப் பிரதிநிதித்துவம் கிடையாது. நீங்கள் ஆட்சி மொழியாக ஆக்கியிருக்கிறீர்களே அந்த இந்தி இந்தோ ஆரிய (Indo-Aryan) மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது. எனவே திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த தமிழையும் ஆட்சி மொழியாக ஆக்குங்கள் என்று கேட்கிறோம்.

இதில் ஒரு சிறு விளக்கம் கொடுக்க வேண்டியிருக்கிறது. இதுவரையில் நாம் என்ன சொல்லி வந்தோம் என்றால் எட்டாவது அட்டவணையில் இருக்கிற மொழிகளை ஆட்சி மொழிகளாக ஆக்குங்கள்; அதுவரையில் ஆங்கிலம் நீடிக்கட்டும் என்று சொல்லி வந்தோம். இப்பொழுது அதை மறுபரிசீலனை செய்திருக்கிறோம். ஏனெனில் அந்த எட்டாவது அட்டவணையே எங்கள் கருத்துப்படி முக்கியத்துவம் வாய்ந்ததல்ல. ஏனென்றால் அந்த எட்டாவது அட்டவணையை எதற்காக உருவாக்கியிருக்கிறார்கள் என்றால், எந்தெந்த மொழிகளிலிருந்து கடன் வாங்கி இந்தியை வளப்படுத்தலாம் என்பதற்கு ஒரு பட்டியல் போட்டிருக்கிறார்கள்.

அதுதான் எட்டாவது அட்டவணை. அது ஒன்றைத் தவிர அதற்கு வேறு தனிச்சிறப்பு கிடையாது. மேலும் அது உண்மையைப் பிரதிபலிப்பதாக இல்லை. It is not realistic..

இப்படித் தவறான தகவல்கள் அடிப்படையில் அமைந்திருக்கிற காரணத்தாலும் மேலும் அந்தப் பட்டியல் நீண்டு கொண்டே போவதாலும்தான் மாநிலங்களில் ஆட்சி மொழிகளாக இருப்பவைகளை இந்தியாவின் ஆட்சி மொழிகளாக ஆக்குங்கள் என்று கேட்கிறோம். தமிழை இந்தி மொழியோடு சேர்த்து ஆட்சி மொழியாக ஆக்க முடியுமா என்றால், முடியும்.

U.P.S.C. - என்று சொல்லப்படுகிற மத்திய அரசின் பப்ளிக் சர்வீஸ் கமிஷனின் தேர்வுகள் இப்போது 15 மொழிகளில் நடத்தப்படவில்லையா?

அதுமட்டுமா? சின்னஞ்சிறிய சுவிட்சர்லாந்தில் மூன்று மொழிகள் ஆட்சிமொழிகளாக ஆக்கப்பட்டிருக்கின்றன. சின்னஞ்சிறிய பெல்ஜியம் நாட்டிலே இரண்டு மொழிகள் ஆட்சி மொழிகளாக ஆக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால், கனடாவில் பத்து மாநிலங்கள். அதில் பிரஞ்சுமொழி பேசப்படுவது கியூபெக் என்ற ஒரு மாநிலத்தில்தான். ஆனால் அங்கே ஆட்சிமொழிகள் எது என்று கேட்டால் ஆங்கிலமும், பிரஞ்சுமொழியும் என்று பெருமையோடு சொல்கிறார்கள்.

அப்படி ஆட்சிமொழிகளாக, கனடாவில், இரண்டு மொழிகள் வழங்கும் பொழுது சுவிட்சர்லாந்து நாட்டில் மூன்று மொழிகள் வழங்கும்பொழுது, பெல்ஜியத்திலே இரண்டு மொழிகள் வழங்கும்பொழுது இந்தியாவிலே ஏன் ஒன்றுக்கும் மேற்பட்ட மொழிகள் வழங்க முடியாது? அது மட்டுமல்ல; இந்தியைவிட எங்கள் தமிழ்மொழி இலக்கிய வளம் படைத்த மொழி, இலக்கண அமைப்பு கொண்ட மொழி.

இதனால் ஏதோ பிரளயம் ஏற்பட்டு விடுமென்று யாரும் பயந்துவிட வேண்டாம். நான் 1979ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் மாநிலங்களவையில் இதே கருத்துப்பட ஒரு தனிநபர் தீர்மானத்தைக் கொண்டு வந்து பேசியிருக்கிறேன். இப்பொழுது மார்க்சிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராக இருக்கிறாரே; மதிப்பிற்குரிய அரிகிஷன்சிங் சுர்ஜித் அவர்கள் - அப்பொழுது

மாநிலங்களவையில் உறுப்பினராக இருந்தார். அவர் என்னுடைய தீர்மானத்திற்கு ஒரு திருத்தம் கொண்டு வந்தார். என்ன திருத்தம் என்றால் நாடாளுமன்றத்திலும் சரி, மத்திய அரசு அலுவலகங்களிலும் சரி; எல்லா தேசிய மொழிகளுக்கும் சமத்துவம் கொடுக்கப்பட வேண்டும். அது மட்டுமல்ல; நாடாளுமன்றத்தில் எல்லா தேசிய மொழிகளிலும் பேசுவதற்கு அனுமதி வேண்டும். உடனடியாக மொழி பெயர்ப்பு வேண்டும். நாடாளுமன்றத்தில் நிறைவேறுகிற அனைத்து சட்டங்களையும் எல்லா மொழிகளிலும் மொழி பெயர்க்க வேண்டும் என்பதே அவரது திருத்தம்.

அது மட்டுமல்ல; இதுதான் முக்கியமானது; மத்திய அரசின் பணிகளுக்காக இந்தியைக் கட்டாயமாக உபயோகப்படுத்துவது தவிர்க்கப்பட வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பாக அப்போதே அரிகிஷன்சிங் சுர்ஜித் அவர்கள் திருத்தம் கொண்டு வந்தார்கள்.

அப்பொழுது பேராசிரியர் என்.ஜி. ரங்கா அவர்களும் மாநிலங்களவை உறுப்பினராக இருந்தார். அவர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர். அவர் என்னுடைய தனி நபர் தீர்மானத்திற்கு ஒரு திருத்தம் கொடுத்தார். அது என்னவென்றால் தமிழ் மட்டுமல்ல; தெலுங்கும், கன்னடமும், மலையாளமும், ஒரிய மொழியும், வங்காளி மொழியும், தமிழோடு சேர்ந்து ஆட்சி மொழி ஆக வேண்டும் என்று ஒரு திருத்தம் கொண்டு வந்தார்.

எனவே, இந்தியாவின் தொன்மை வாய்ந்த மொழிகளில் ஒன்றான திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த தமிழ்மொழி; உலகெங்கும் பேசப்படுகிற மொழி; சிங்கப்பூரிலும் மலேசியாவிலும் ஆட்சிமொழியாக இருக்கிற மொழி; இலங்கையில் ஆட்சி மொழியாக இருக்கிற மொழி; தென்னாப்பிரிக்காவில் பேசப்படுகிற மொழி; மொரீஷியஸ் தீவுகளில் வழங்கப்படுகிற மொழி - அந்த மொழி இந்தியாவின் ஆட்சி மொழியாக ஆக்கப்பட வேண்டுமென்கின்ற இந்தத் தீர்மானத்தை மத்திய அரசு நடைமுறைப்படுத்த வேண்டும்."

மேலும் நீண்ட உரையாற்றி முரசொலி மாறன் கொண்டு வந்த இந்தத் தீர்மானத்தை கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள் வழி மொழிந்தார்கள்.

மாநாட்டின் தலைவர் என்ற முறையில் அந்தத் தீர்மானத்தை நான் நிறைவேற்றி வைத்தேன்.

உடன்பிறப்பே,

இதனை நான் ஒரு நீண்ட கடிதமாக ஆக்கியதற்குக் காரணம் தமிழும், மத்திய ஆட்சி மொழிகளில் ஒன்றாக வேண்டுமென்பதற்கு உரிய இடத்தில் அதாவது மாநிலங்களவையில் 1965ல் அடியெடுத்துக் கொடுத்தவர் அறிஞர் அண்ணா; அதை மாநிலங்களவையில் 1979ல் தனி நபர் தீர்மானமாகக் கொண்டு வந்த தம்பி முரசொலி மாறன், மாநில மாநாட்டிலும் தீர்மானமாகக் கொண்டு வந்து முன் மொழிந்ததும், நமது பொதுச் செயலாளர் இனமானப் பேராசிரியர் வழி மொழிந்ததும், அதை அந்த மாநாட்டில் மாநாட்டுத் தலைவர் என்ற முறையில் ஒருமனதாக நான் நிறைவேற்றி வைத்ததும் தமிழக வரலாற்றின் சிறப்புமிகு அத்தியாயமாக இருப்பதையெண்ணி பெருமிதம் அடையலாம் என்றாலுங்கூட, இன்றைக்கு தமிழகத்தில் உள்ள பல்வேறு கட்சிகளும் அந்தக் குரலை எதிரொலிப்பது மகிழ்ச்சிக்குரியது. இது ஒரு ஆரோக்கியமான போட்டியே தவிர தமிழ் மொழியின் முன்னேற்றத்தையும் பெருமையையும் அதற்குரிய தகுதியையும் பெற்றுத் தருகின்ற முயற்சியையும் பின்னுக்குத் தள்ளுகின்ற போட்டியல்ல என்பதை உணர்ந்து மகிழ்ச்சி அடைகிறேன்.

உடன்பிறப்பே,

இங்குள்ள தமிழர் ஒன்றாதல் காண்பதற்குக் கனவு கண்டு கவிதை தீட்டினார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் – அந்தக் கனவு; தமிழ் மொழியை மத்திய ஆட்சி மொழியாக்கும் களத்திலாவது பலிக்கட்டும்.

அன்புள்ள,

மு. கருணாநிதி

(29-08-2001)

2634. கட்டளையிடவில்லை; கனிவுடன் அழைக்கிறேன்!

உடன்பிறப்பே,

தன்னால் கட்சிக்கு என்ன லாபம் என்று கருதிடுவோர் கட்சியின் ரத்த நாளம் போன்றவர்கள் - கட்சியால் தனக்கு என்ன லாபம் என்று கருதிடுவோர் கட்சியில் வளரும் புற்றுநோய்; என்று பல ஆண்டுகளுக்கு முன்பே நான் குறிப்பிட்டது நினைவிருக்குமென்று நம்புகிறேன்.

ஒரு கட்சி வளரும் போதும், வலிவு பெறும் போதும், மக்களின் ஆதரவைப் பெருமளவுக்குப் பெற்றிடும் போதும்; அதுவரையில் தொலைவில் இருந்தோராயினும் - தூற்றிக் கொண்டிருந்தோராயினும் - அக்கட்சியில் இணைந்து மாசற்ற முறையில் மக்கள் தொண்டாற்றுவோம் எனும் மனமாற்றம் பெற்று பணியாற்றிடும் பாங்கினையும் காண்கிறோம். அதற்கு மாறாகச் சிலரோ, தங்களின் வியாபார நோக்கத்திற்கு அக்கட்சி பயன்படும் எனில் அதே கட்சியில் தொடர்வதும்; பயன்படாது எனக் கண்டால் வேறிடம் தாவுவதும் என்பதையே தங்களின் கொள்கை கோட்பாடுகளாகக் கொண்டுள்ளனர் என்பதையும் அறிகிறோம்.

அத்தகையோர் எண்ணிக்கை, நமது கழகத்தில் குறைவு என்று கூற முடியுமே தவிர, அறவே அவர்கள் இங்கே இல்லையென்று சொல்லிவிட முடியாது. அவர்களைத் தலைமைக் கழகம் அடையாளம் காணுவதில் சற்றுத் தாமதம் ஏற்பட்டாலும், அடிமட்டத்திலேயுள்ள உழைக்கும் செயல்வீரர்கள் உடனடியாகக் கண்டுபிடித்து விடுகிறார்கள்.

அந்த வடிகட்டுதலையும் மீறி சில பேர், கழகத்தின் முடிவுகளை எதிர்த்து, நேரடியாகவோ - மறைமுகமாகவோ செயல்படுவார்க ளேயானால்; அல்லது கழகத்தின் வட்டத்திற்குள்ளேயே தமக்கொரு தனி வட்டம் அமைத்துக் கொண்டு செயல்படுவார்களேயானால்;

அவர்கள், தங்கள் மீது இன்னமும் தலைமைக் கழகம் நடவடிக்கை எடுக்கவில்லையே என்று பெருமைப்பட்டுக் கொள்ளாமல் கட்டுப்பாட்டைக் குலைத்துவிட்ட சிறுமையை எண்ணி வெட்கித் தலைகுனிய வேண்டியவர்களாவார்கள்.

இந்த இயக்கம் ஏதோ, சில ஊராட்சித் தலைவர் பதவிகள், நகராட்சி - மாநகராட்சி மன்றப் பதவிகள், சட்டமன்ற - நாடாளுமன்றப் பதவிகள், அமைச்சர் பதவிகள் எனும் அணிமணிகள் பூண்டு அலங்கார உலா வருவதற்காக என்றே தொடங்கப்பட்டதல்ல.

இலட்சியம் எனும் போர்வாளும், கொள்கை உறுதி எனும் கேடயமும் ஏந்தி எந்த நேரமும் தமிழ் மக்களின் உரிமைகளைக் காத்திடத் தயார் என முழங்கிடும் சிப்பாய்களைக் கொண்ட பாசறைதான் இந்தக் கழகம்.

இடையிடையே சந்திக்கும் தேர்தல்கள், மக்கள் விரும்பி அளித்திடும் பொறுப்புகள்; இவையெல்லாம் நமது நீண்ட நெடிய பயணத்தில் நிறைவேற்றித் தீரவேண்டிய ஜனநாயகக் கடமைகள்.

அந்தக் கடமையை நிறைவேற்றிடும்போதுகூட நாம் ஒரு அரசியல் கட்சி என்பதைவிட, பாசத்தினால் பிணைக்கப்பட்ட ஒரு குடும்பத்தினர் என்ற உணர்வே ஓங்கி நிற்கிறது! ஆம்; ஓங்கி நிற்க வேண்டும்!

அந்தக் குடும்பப் பாசப் பிணைப்பை; நமது கழகம் ஈடுபட்ட ஓர் அறப்போராட்ட நேரத்திலேகூட அறிஞர் அண்ணா அவர்கள், கண்களில் துளிர்த்த நீரைத் துடைத்தவாறு எழுதிக் காட்டியுள்ளதை நினைவுபடுத்துகிறேன்.

1965ஆம் ஆண்டு ஏப்ரல் 4ஆம் நாள் காஞ்சி இதழில் அண்ணா அவர்கள் எழுதியது வருமாறு :-

“சென்னையிலிருந்து நானூறு கல் தொலைவில் பாளையங்கோட்டையில் தனிமைச் சிறையில் தம்பி கருணாநிதியை வைத்துக் கொடுமை செய்வதனைக் கேட்டுத் தமிழகம் தத்தளிக்கிறது; விம்மிடுகின்றனர் தாய்மார்கள்; துடிக்கின்றனர் முதியோர்கள்; வேதனைப்படுகின்றனர் இளைஞர்கள்; அறம் அறிந்தவர்கள் பதறுகின்றனர்; சட்டம் தெரிந்தவர்கள் இதற்குப் போதுமான நியாயம் இல்லை என்று

எடுத்துரைக்கின்றனர்; கழகத் தோழர்கள் கலக்கம் அடைந்துள்ளனர்.

இலைகள் உதிர்ந்த நிலையில் சில மரங்கள் - இது முழுதும் வெட்டவெளி அல்ல என்பதைக் காட்டுவதற்காக இருந்து கொண்டிருந்தன. மற்றபடி அந்த இடம் இயல்பாகவே வெப்பத்தை அதிகமாகக் காட்டக் கூடிய இடம்.

முப்பது அறைகளுக்கு மேல் இருக்கும். அதிலே ஓர் அறையில் தம்பி கருணாநிதி. மற்ற அறைகள் எல்லாம் பூட்டிக் கிடந்தன. மொத்தத்தில் ஒருவிதமான வெறிச்சோடிய நிலை. ஆள் நடமாட்டமே இல்லை. ஒரு சொல் கூடக் காதிலே விழ முடியாத இடம். அத்துணை தனிமை! அவ்வளவு பாதுகாப்பு!

பாதுகாப்புச் சட்டப்படி சிறைப்பிடித்து வைத்திருப்பதால், மிக்க பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும் என்பது அரசின் திட்டம் போலும்! அதனால்தான் பக்கத்திலேயே உள்ள இளம் குற்றவாளிகளுக்கான சிறைக் கூடத்தில், பல நூறு பேர் இருக்க, கருணாநிதிக்காகவே ஒரு பெரிய தனிச் சிறையை ஒதுக்கி, அதிலே தனியாக வைத்திருக்கிறார்கள்.

மக்களைப் பெற்றவர்கள் மனம் நொந்து, ஏனோ இந்தக் கொடுமை என்று கண்ணீர் மல்கிடும் நிலையில் இருந்தபடி கேட்பார்கள். இந்தித் திணிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து, தீக்குளித்து இறந்தவர்களை எண்ணி, எண்ணி, இந்த நாடே பதறுகிறது; கதறுகிறது! நல்லோர் அனைவரும் நெஞ்சு நெக்குருகிப் போயினர். இந்திக்காரர்களிலேகூடச் சிலர், செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

காலை மணி பத்து இருக்கும். நான் அங்குச் சென்றபோது, உடன் வந்திருந்த நெல்லை நகராட்சி மன்றத் தலைவர் மஜீத், வழக்கறிஞர் இரத்தினவேலு பாண்டியன், மற்றும் பலரையும் தனியே இருக்கச் செய்து விட்டு, என்னை மட்டும் சிறை அதிகாரிகள் மூவர் கருணாநிதி இருந்த சிறைக்கூடம் அழைத்துச் சென்றனர். சந்தித்துப்

பேசுவதற்காக ஓர் அறை தயாரிக்கப்பட்டு இருந்தது. இரு அதிகாரிகள் உடன் இருந்தனர்.

கருணாநிதி அழைத்து வரப்பட்ட போது முன்பு பலமுறை ஒருவரை ஒருவர் சந்தித்தது உண்டு என்ற போதிலும், இம்முறை தனியானதோர் தவிப்புணர்ச்சி எழுந்து வாட்டியது. அதனை அடக்கிக் கொள்வது கடினம் என்றபோதிலும் கலக்கம் காட்டுவது நமது உள்ளத்தின் உறுதி பற்றி மற்றவர்களுக்கு ஐயப்பாடு ஏற்படுத்திவிடுமே என்ற அச்சம் துணை செய்தது. தவிப்பு உணர்ச்சியைத் தள்ளி வைத்துவிட்டு, அரைமணி நேரத்திற்கு மேல் பேசிக் கொண்டிருந்தோம்.

கொடுமைகள் இழைக்கப்படும்போது - அநீதி தலைவிரித்தாடும்போது - அக்கிரமம் தன் அகன்ற வாயினைத் திறந்து அகோரக் கூச்சல் இடும்போது - எல்லாம் இறுதியில் நன்மைக்கே என்ற தத்துவத்தைத் துணைக்கு அழைத்துச் சமாதானம் தேடிக்கொள்ள முடியவில்லை. காரணம், நாம் ஓர் அரசியல் கட்சியின் உறுப்பினர்கள் என்ற முறையில் மட்டும் இருந்து வருபவர்கள் அல்லர்; பாசத்தினால் பிணைக்கப்பட்ட ஒரு குடும்பம் ஆகிவிட்டிருக்கிறோம். அதனால் நம்மில் சிலருக்கு இழைக்கப்படும் கொடுமை, நம் எல்லோருடைய உள்ளத்தையும் வேதனையில் ஆழ்த்தி விடுகிறது."

இவ்வாறு அறப்போர் நேரத்தில் அண்ணா அவர்களால் உணர்ச்சிமயமாகச் சுட்டிக் காட்டப்பட்டதும் - நம்மிடையே நீங்காமல் இருந்ததுமான அந்தக் குடும்பப் பாசப்பிணைப்பு; ஜனநாயகக் கடமையை நிறைவேற்றும் தேர்தல் நேரத்தில் மட்டும் நம்மிலே சிலரை விட்டு விலகிச் செல்வானேன்?

அப்படி விலகிச் செல்வதின் விளைவுதானே; பழகிய பாசம் - பண்பான பாசம் - அனைத்தையும் துறந்து கழகத்திற்குச் செய்யும் மோசமாக உருவெடுக்கிறது!

பாளைச் சிறையில் எனைக் கண்ட அண்ணா பதைத்துப் போனது 35 ஆண்டுகளுக்கு முன்பு காஞ்சி இதழில் எழுதிக் கண்ணீர் வடித்தார். பாளையில் நானிருந்த நிலை கண்டே

அப்படிப் பதைத்தார் என்றால்; இப்போது இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பு நடந்த நிகழ்ச்சியைக் காண நேர்ந்திருப்பின் எப்பாடுபட்டிருப்பார் என்பதை; அந்த அண்ணனை அறிந்த இந்தத் தம்பிதான் உணர முடியும்.

எனவே அந்த அண்ணன் சுட்டிக் காட்டியுள்ள குடும்பப் பாசப் பிணைப்பின் பேரால் கேட்டுக் கொள்கிறேன்; எத்துணை கசப்பு, காழ்ப்பு, இவை உடன்பிறப்புகளே; உங்களைக் கட்டித் தழுவிட வந்தாலும் அவற்றை உதறி எறிந்து விட்டு, கழகம் காத்திடவும் - கழகக் கூட்டணி வெற்றி பெற்றிடவும் கச்சை கட்டிக் கிளம்புக எனக் கட்டளையிடவில்லை நான்; கனிவுடன் அழைக்கிறேன்.

அன்புள்ள,

மு. கருணாநிதி

(04-10-2001)

2635. படைதிரளட்டும்: பாசறை பலமாகட்டும்!

உடன்பிறப்பே,

திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடித்தளத்திலிருந்து தலைமைக் கழகம் உள்ளிட்ட அனைத்து அமைப்புகளுக்குமான 12வது தேர்தல் நடைபெறுவதற்குத் தோதாக கழக உறுப்பினர்கள் சேர்க்கும் பணியை வருகிற டிசம்பர் திங்கள் (2001) 1ஆம் தேதி தொடங்கி (2002) ஜனவரி 31ந் தேதி வரையில் விரைவாகவும், முறைப்படியும் செய்து முடிக்க வேண்டுமென்று நமது பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள் விடுத்துள்ள அறிக்கைக்கேற்ப செயல்பட ஆரம்பித்திருப்பாய்!

இந்தியத் திருநாட்டில் கட்சி அமைப்புகளை ஜனநாயக அடிப்படையில் இயங்கச் செய்து, கொள்கை முடிவுகள், அரசியல் நடைமுறைக்கான தீர்மானங்கள் போன்றவற்றை பொதுக்குழு, செயற்குழுக்களை தேவைக்கேற்பக் கூட்டிக் கலந்துபேசி, அக்குழுக்கள் வகுத்திடும் நெறிமுறைக்கேற்ப செயற்படுத்தும் ஜனநாயகப் பேரியக்கங்களில் ஓர் இயக்கமாகவும் - அவற்றுள் சிறப்புமிக்க இயக்கமாகவும் திகழ்வது தி.மு.க. என்பதை அரசியல் உணர்ந்தோர் அனைவரும் அறிவர்.

ஒரு கிளைக் கழகச் செயலாளர் அல்லது அக்கழக நிர்வாகிகளிலிருந்து தலைமை வரையில் ஜனநாயக முறையில் அல்லாது தேர்ந்தெடுக்கப்பட இயலாத வண்ணம் - நியமன முறையில் பொதுவாகவே யாரும் நியமிக்கப்படவோ; பொறுப்பிலிருந்து பொதுவாக விலக்கப்படவோ இயலாத வண்ணம் - திராவிட முன்னேற்றக் கழகத்திற்கென வகுக்கப்பட்டு பொதுக் குழுவின் ஒப்புதல் பெற்றுள்ள சட்ட திட்டங்களின் அடிப்படையில் மட்டுமே இயங்கும் ஜனநாயகப் பாசறையாக அறிஞர் அண்ணா அவர்களின் வழிகாட்டுதலின்படி நடை பயின்று கொண்டிருக்கும் நமது இயக்கம் என்று சொல்லிக் கொள்வதிலே நமக்கு ஒரு பெருமை! ஒரு பெருமிதம்! -

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் மூன்று மூல முழக்கங்களை அண்ணா அவர்கள் நமக்கு நினைவூட்டாத நாளே இருந்ததில்லை!

தந்தை பெரியார் அவர்கள் கூட ஒருமுறை சொன்னார்; கடமையும் கண்ணியமும்கூட பிறகு இருக்கட்டும்; கட்டுப்பாடு காத்திட்டால் அதில் எல்லாமே அடக்கம்; எனவே தி.மு.கழகத்தினர் முக்கியமாகக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடியுங்கள் என்று!

பெரியாரின் இந்த அறிவுரை, நாம் சமுதாயப் புரட்சி இயக்கமாக இருந்தவரையில் தேவைப்பட்டதைவிட, மிக அதிகமாக அரசியல் இயக்கமாகவும் ஆகிவிட்ட பிறகு தேவைப்படுகிற ஒன்றாக ஆகிவிட்டது.

அதிலும் குறிப்பாக ஒன்றை நினைவூட்ட விரும்புகிறேன். 1967 பொதுத் தேர்தலின்போது, வாக்குப்பதிவு முடிவுற்று, வாக்குகளை எண்ணி வெற்றி பெற்றோர் தொகுதிகளை அறிவிக்கும் நாளன்று நானும், நாவலரும், பேராசிரியரும், என்.வி.நடராசன் அவர்களும், நாஞ்சிலார், ஆசைத்தம்பி, அரங்கண்ணல் போன்ற கழக முன்னணியினர் பலரும் அண்ணா அவர்களுடன் அமர்ந்திருக்கிறோம்.

கழகம் நூறு இடங்களில் வெற்றி என்ற விபரம் கிடைக்கிற வரையில் அண்ணா முகத்தில் மலர்ச்சி மண்டிக் கிடந்ததைக் காண முடிந்தது. எங்கள் அருகில் இருந்த வானொலிப் பெட்டி; நூறு இடங்களைத் தாண்டி தி.மு.க. வெற்றி பெற்று வருகிறது; ஆட்சி அமைக்கத்தக்கப் பெரும்பான்மை இடங்களைப் பெறும் வாய்ப்பு; என்று அறிவிக்கத் தொடங்கியதும் அண்ணாவின் முகம் வாடிப் போன காட்சி கண்டோம்.

என்.வி.நடராசன், அண்ணாவைப் பார்த்து,

“என்ன அண்ணா ; நாங்கள் எல்லாம் சந்தோஷம் தாங்காமல் இருக்கிறோம். நீங்கள் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு இருக்கிறீர்கள்?” என்று கேட்டார்.

அப்போது அண்ணா சொன்னார்; “ஆளுங்கட்சியானால் அவ்வளவுதான்! கட்சியின் வேகம், விறுவிறுப்பு எல்லாம் போய்விடும் - பிறகு பதவி பவிசு என்று ஆவலும் - கொள்கை கோட்பாடுகளில் மெத்தனமும் வந்துவிடும். அதை நினைத்துத்தான் கவலைப்படுகிறேன். நூறு இடத்தோடு வெற்றி நின்றிருந்தால் பலமான எதிர்க்கட்சியாக இருந்திருக்கலாம்“

அண்ணா இப்படிச் சொன்னது, அங்கிருந்தோர் அனைவருக்கும் அதிர்ச்சியாக இருந்தது எனினும்; காலப்போக்கில்; அவர் கணக்கிட்டுத்தான் சொல்லியிருக்கிறார் என்ற உண்மை என் போன்றோர்க்குத் தெளிவாகவே புரிந்தது.

அப்படிப் புரிந்த காரணத்தால்தான்; பதவி பவிசு எனப் பல் இளித்து, பகுத்தறிவுத் தடம் பிறழ்ந்து, பச்சோந்திகளாகிவிட்ட சில புல்லுருவிகள் தோன்றினாலும்கூட; எந்தச் சூறாவளியிலும் சுருண்டு விழாத தருவாக இந்த இயக்கம் இருந்திட, தனது போர்க் குணம் மாறாமல் பார்த்துக் கொள்ளவேண்டுமென்பதி லேயும் ஏற்றுக் கொண்ட கொள்கைக்கு மாற்றமில்லாமல் வீறு நடைபோடுவதிலேயும் கண்ணும் கருத்துமாக இந்தக் கழகத் தலைமையும், முன்னணித் தளநாயகர்களும், இன்னமும் செந்நீரும் கண்ணீரும் சிந்திக் கழகச் செழிப்புக்குப் பாடுபட இருக்கிறோமெனப் படை திரளத் தயாராக இருக்கும் லட்சோப லட்சம் உடன்பிறப்புகளும்; அண்ணா ஒப்படைத்துள்ள இந்த இயக்கம் காத்திட உயிர் தரவும் தயாராகவே உள்ளனர்.

அந்த உறுதி படைத்த நெஞ்சினரைத்தான் அழைக் கிறேன்; நமது பேராசிரியர் அவர்களின் அறிக்கைக்கிணங்க, இந்த இலட்சியப்படை வரிசையில் உங்களையும் வீரர்களாக இணைத்துக் கொள்ளுங்கள் என்று!

அய்யாவும் அண்ணாவும் வகுத்தளித்த கொள்கைகளை ஆட்சியில் அமர்ந்த காரணத்தால் சாதனைகளாக்க முடிந்தது!

ஆட்சியில் இல்லாது சோதனைகளை சந்திக்கும் கால கட்டத்திலும்; ஈட்டி முனையைக் கூராக்கிக் கொள்ள வீரனுக்கு அவகாசம் கிடைத்தது போல என எண்ணிக் கொண்டு;

கழக உறுப்பினர்களாகும் கடமையை ஆற்றிடுவீர்!

ஆட்சியில் இருந்தபோதும்; நெருக்கடி காலத்தில் அந்த நெருப்பு உமிழும் நிகழ்ச்சிகளைக்கூட எதிர் கொள்ளத் தயங்காமலும் - களம் பல புகுந்திடத் தோள் தட்டிய வரலாறுகளை உருவாக்கியும்; கழகத்தின் மாண்புக்கு மாண்பு சேர்த்த மாப்புகழ் கொண்டு; என் மனத்தில் நீங்காத இடம் பெற்றுள்ள உடன்பிறப்பே

உறுப்பினர் சேர்க்கும் பணி தீவிரமாகட்டும் - ஆம்; படை திரளட்டும்! நமது பாசறை பலமாகட்டும்!

அன்புள்ள, **மு.க.**

29-11-2001

2636. கண்ணதாசன் பாடியது காதில் ஒலிக்கிறது!

உடன்பிறப்பே,

சூரியகாந்தி என்று ஒரு திரைப்படம் - விசுவாசமிக்க எனது நண்பன், கழகத் தொண்டன் - பல முறை களம்கண்டு சிறை சென்ற உடன்பிறப்பு - ஜெயங்கொண்டம் வேணு தயாரித்த படம். பிரபல நடிகர் முத்துராமனும், செல்வி ஜெயலலிதாவும் நடித்த அந்தப் படம் நூறு நாட்கள் வெற்றிகரமாக ஓடி மக்களின் பாராட்டைப் பெற்றதாகும். அப்படத்தின் நூறாவது நாள் வெற்றி விழா சென்னை ராஜேஸ்வரி மண்டபத்தில் நடைபெற்றது.

அந்த விழாவில் தந்தை பெரியாரும் அப்போது ஆட்சிப் பொறுப்பில் இருந்த நானும் கலந்து கொண்டு, பரிசுகள் வழங்கியதோடு, படத்தின் வெற்றிக்குக் காரணமான நடிக நடிகைகள், கதை வசனகர்த்தா, இயக்குநர், பாடலாசிரியர், ஒளிப்பதிவாளர், தயாரிப்பாளர் அனைவரையும் வாழ்த்தியும் பாராட்டியும் பேசினோம். சினிமாவே பிடிக்காது என்ற கொள்கை யுடைய பெரியார் அவர்கள் ஒரு சினிமா விழாவுக்கு வருகை தந்து பாராட்டிப் பேசியது அந்தச் சமயம் அனைவரையும் கவனிக்க வைத்த நிகழ்ச்சியாகும். அதிருக்கட்டும் இப்போதென்ன அந்தப் பழைய சூரிய காந்தி படத்தைப் பற்றிய திடீர் நினைவு உனக்கு வந்தது? என்று உடன்பிறப்பாகிய நீ கேட்கக் கூடும்.

அந்தப் படத்திலே என் நண்பர் கவியரசு கண்ணதாசன் எழுதிய ஒரு பாட்டு எனக்கு மிகவும் பிடித்தமானதாகும். அந்தப் பாட்டை அவர் எழுதியதற்கு ஒரு வரலாறே உண்டு.

என் தந்தை முத்துவேலர் என் இளமைப் பருவத்தில் ஒரு கதை சொல்லுவார். சில பேர் ஆணவமாகப் பேசுவதற்கும், எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசுவதற்கும் காரணம், அவர்கள்

இருக்குமிடத்தைப் பொறுத்தது என்பதற்காக அவர் சொல்லும் கதை அது:-

ஒருநாள் கைலாசத்திலுள்ள சிவனை சந்திக்க, மகாவிஷ்ணு கருடவாகனத்திலேறிப் பறந்து வந்தாராம். கைலாசத்தில் வந்து சிவன் அருகே விஷ்ணு அமர்ந்தவுடன், பரமசிவன் கழுத்தில் ஊர்ந்து கொண்டிருந்த பாம்பு, கருடனைப் பார்த்து என்ன கருடா! சௌக்கியமா? என்று கேட்டதாம்.

பொதுவாக கருடனைக் கண்டாலே அஞ்சி நடுங்கி ஓடக்கூடிய பாம்பு, கருடனைப் பார்த்து சௌக்கியமா என்று கேட்டது ஆச்சரியமான ஒன்று தானே!

அதற்கு பாம்பைப் பார்த்து, கருடன் பதில் சொன்னதாம் இருக்குமிடத்தில் இருந்தால் எல்லோரும் சௌக்கியந்தான்! என்று!

இப்படியொரு கதை என் தந்தை சொல்வார் என்று அறிஞர் அண்ணா அவர்களிடம் நான் ஒரு முறை சொன்னேன். அண்ணா அவர்கள் அதை மனத்திலே வைத்துக்கொண்டு; ஒரு சில கூட்டங்களில், மாநாடுகளில் உரையாற்றியபோது ஆட்சியாளர்கள் சிலர் அலட்சியமாகவும் அகங்காரமாகவும் வார்த்தைகளை வீசும் சமயம் கருடா சௌக்கியமா? என்ற இந்தக் கதையைக் கூறிடுவார்.

அப்போது கழக நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் பழக்கமுடைய கவியரசு கண்ணதாசனின் இதயத்தில் கருடா சௌக்கியமா? ஒரு பாட்டாகவே உருப்பெற்று, அந்தப் பாட்டு இந்தச் சூரியகாந்தி படத்திலும் இடம் பெற்றுவிட்டது. படத்தில் இந்தப் பாடலை கண்ணதாசனே பாடுவார்.

கழுத்திலிருந்த பாம்பு கேட்டது
கருடா சௌக்கியமா?

பரமசிவன் கழுத்தாக இல்லாமல் பாம்பு, தரையிலோ ஆற்றங்கரையிலோ, வரப்பு மேட்டிலோ, வயற்காட்டிலோ ஊர்ந்து சென்றிடுமேயானால் பறக்கும் கருடனின் நிழல் பட்டால் கூட நடுங்கி ஓடி ஒளியக் கூடியதுதான்! - ஆனால் இப்பொழுது அப்படியில்லாமல் நீலகண்டனின் நீண்ட கழுத்தையல்லவா சுற்றிக் கொண்டு படம் உயர்த்திக் கருடனைப் பார்க்கிறது - அதனாலே என்ன கருடா சௌக்கியமா என்று சிறிதும் அச்சமின்றி,

அடக்கமின்றி, ஒருவித கர்வத்துடன் கேட்க முடிகிறது கருடா சௌக்கியமா? என்று!

பத்திரிகைகளில் பரபரப்புடன் திடீர் பட்ஜட் அறிவிப்பு ஒன்று வெளிவந்துள்ளது. பதைப்பு மேலிட்ட பல கட்சிகளின் பொறுப்புள்ள தலைவர்கள் அதனைக் கண்டித்து அறிக்கைகள் வெளியிட்டுள்ளனர்.

செய்தியாளர்கள் என்னைக் கேட்டனர் - நான் சொன்ன கருத்து:- "ஆட்சியில் அமர ஆதரவளித்த கட்சிகளுக்கும், அமர வைத்த வாக்காளர்களுக்கும் மகிழ்ச்சி என்றால் எனக்கும் மகிழ்ச்சிதான்''.

இத்துடன் எனது விமர்சனத்தை நிறுத்திக் கொண்டேன்.

ஆனால் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா அம்மையார் அவர்கள் இந்தக் கட்டண உயர்வுக்கும், அரிசி போன்றவற்றின் விலை உயர்வுக்கும், அரசு அலுவலர் சலுகை ரத்து போன்றவைக்கும், பஸ்களை தனியார் உடைமை ஆக்குவதற்கும் - கடந்த காலத்தில் கருணாநிதியின் நிர்வாகத் திறமையில்லாமைதான் காரணம் என்று கூறியுள்ளார்.

1989ஆம் ஆண்டு முதல் 1991ஆம் ஆண்டு வரை தி.மு.க. ஆட்சியிலே இருந்த போது கஜானாவைக் காலி செய்துவிட்டுச் சென்று விட்டதாகவும், 1996ஆம் ஆண்டு ஜெயலலிதா 800 கோடி ரூபாய் உபரி நிதி வைத்துவிட்டுச் சென்றதாகவும் அதையும் தி.மு.க. ஆட்சியில் செலவழித்து விட்டு 700 கோடி ரூபாய் பற்றாக்குறை வைத்து விட்டுச் சென்று விட்டதாகவும் அதனால்தான் ஜெயலலிதா தற்போது பேருந்து கட்டணம், மின் கட்டணம், பால் கட்டணம் ஆகியவைகளை உயர்த்த வேண்டி வந்து விட்டதாகவும், இதற்கெல்லாம் காரணம் என்னுடைய கையாலாகாத்தனம் என்றும் எனக்கு ஆற்றலில்லை, திறமை யில்லை என்றெல்லாம் அவர் அர்ச்சனை செய்திருக்கிறார்.

1996-ல் ஜெயலலிதா ஆட்சியை விட்டுப் போகும் போது அவரது நிதிநிலை அறிக்கையில் தற்போது அவர் கூறியிருப்பது போல் 800 கோடி ரூபாய் உபரி வைத்து விட்டுச் சென்றதாகக் கூறுவது சரியா என்று பார்க்கலாம்.

1994-95இல் அ.தி.மு.க. ஆட்சியில் வருவாய்க் கணக்கிலே வரவு 7844 கோடி ரூபாய். செலவு 9084 கோடி ரூபாய். வருவாய்க்

கணக்கில் பற்றாக்குறை 1240 கோடி ரூபாய். இது நாவலர் அவர்களால் ஜெயலலிதா ஆட்சியிலே வைக்கப்பட்ட நிதி நிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருப்பதுதான்.

1995-96ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் வருவாய்க் கணக்கிலே வரவு 8985 கோடி ரூபாய். செலவு 9910 கோடி ரூபாய். வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை 925 கோடி ரூபாய். இதுவும் அ.தி.மு.க. ஆட்சியிலே நாவலர் அவர்களால் வைக்கப்பட்ட நிதி நிலை அறிக்கைதான். 1996-97இல் அ.தி.மு.க. ஆட்சியினால் வைக்கப்பட்ட இடைக்கால நிதி நிலை அறிக்கையிலே தெரிவித்தபடி வருவாய்க் கணக்கிலே வரவு 10543 கோடி ரூபாய். வருவாய்க் கணக்கில் செலவு 11505 கோடி ரூபாய். வருவாய்க் கணக்கிலே பற்றாக்குறை 962 கோடி ரூபாய். எனவே 1996-97 ஆம் ஆண்டிற்கு அ.தி.மு.க. அரசினால் வைக்கப்பட்ட இடைக்கால நிதி நிலை அறிக்கையிலே அவர்கள் தெரிவித்திருப்பது 962 கோடி ரூபாய் பற்றாக்குறை என்று தானே தவிர, 800 கோடி ரூபாய் உபரி என்றல்ல. 800 கோடி ரூபாய் உபரி நிதி இருந்திருந்தால் ஏன் நிதி நிலை அறிக்கையிலே 962 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கிலே பற்றாக்குறை என்று சொல்லியிருக்க வேண்டும்? திட்ட மதிப்பீடுகள், திருத்த மதிப்பீடுகளிலும், ஒட்டுமொத்தப் பற்றாக்குறையிலும் மாறுவதும் உண்டு.

எல்லா ஆட்சியிலும் எல்லா காலத்திலும் நிதி பற்றாக்குறை இருந்தது என்பதுதான் உண்மை. அந்தப் பற்றாக்குறையை வைத்துக்கொண்டு ஒரு மக்கள் நல அரசு மக்களைப் பாதிக்காத அளவிற்கு திட்டங்களைத் தீட்ட வேண்டும். அந்த வகையிலே தான் தி.மு.கழக அரசு கடந்த ஐந்தாண்டு காலத்தில் எவ்வளவோ நிதி நெருக்கடி இருந்த போதிலும் அதனை சமாளித்துக் கொண்டுதான் அரசு அலுவலர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் பொது மக்களுக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படாத அளவிற்கு பணிகளை ஆற்றி வந்தது. அதற்கு முன்பிருந்த அ.தி.மு.க. அரசு மீது பழியைப் போட்டு விட்டு மக்கள் தலையிலே சுமையை ஏற்றவில்லை. அதற்குப் பெயர்தான் ஆற்றலே தவிர, நிர்வாகத் திறமையே தவிர, கையால் ஆகக் கூடிய செயலே தவிர, முந்தைய ஆட்சி மீது பழி தூற்றி விட்டு, மக்கள் தலையிலே சுமையை ஏற்றுவதற்குப் பெயர் ஆற்றலோ, திறமையோ, கையாலாகும் தன்மையோ அல்ல!

உடன்பிறப்பே,

கருணாநிதிக்கு ஆற்றல் இல்லை - நிர்வாகத் திறமை இல்லை - கருணாநிதியின் கையாலாகாத்தனம்! அலறுகிறார் கருணாநிதி! இந்தச் சொற்றொடர்கள், அம்மையார் தனது பெயரால் இறக்கியுள்ள சரக்குகள்! இவற்றை விட மலிவானதாக இவரது தற்காலிக (ஆக்டிங்) முதலமைச்சர் மூலம் அறியாமையில் கருணாநிதி இருக்கிறார் போன்ற சரக்குகள் ஏற்கெனவே இறக்குமதி செய்யப்பட்டு விட்டன. இதற்கு நான் யாரை நொந்துகொள்ள? உன்னைத்தான் நொந்துகொள்ள வேண்டும். ஏன்? ஏன்? என்பதை நீயே எண்ணிப் பார்த்துக் கொள்! பரமசிவன் கழுத்திலிருக்கும் பாம்பு கேட்டது - கருடா சௌக்கியமா! யாரும் இருக்குமிடத்தில் இருந்துகொண்டால் எல்லாம் சௌக்கியமே! கவியரசு கண்ணதாசன் பாடுவது காதில் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது!

அன்புள்ள,

மு.க.

30-11-2001

2637. இந்த நேரம் - இந்தச் சந்தேகம் தேவைதானா?

உடன்பிறப்பே,

பஸ் தொழிலாளர்கள் 15 நாட்கள் நடத்திய வேலை நிறுத்தப் போராட்டத்தில் தி.மு.க.வும், மார்க்சிஸ்ட்களும் தோளோடு தோள் நின்று சிறைச்சாலையா, சித்திரவதையா எது பற்றியும் கவலைப்படாமல் ஈடு கொடுத்த பிறகும் - இப்போது அ.தி.மு.க. அரசு, திடீரென ஒரு மினி பட்ஜட்டை வெளியிட்டு மக்கள் மீது யுத்தம் தொடுத்திருக்கும் இந்த நெருக்கடியான கட்டத்தில், இரு கட்சிகளும் அதனை எதிர்த்துப் போர்க் கொடிகளை உயர்த்திப் பிடித்துள்ள இந்த நிலையிலும், ஒரே அணியில் இல்லாவிடினும், பலமுனைகளில் ஒரு முனையில் நின்று அரசின் மினி பட்ஜட்டை எதிர்த்து தாக்குதல் நடத்தும் முக்கியமான வேளையிலும் - திடீரென மார்க்சிஸ்ட் கட்சியின் அதிகார பூர்வமான பத்திரிகை (தீக்கதிர்)க்கு ஒரு சந்தேகம் வந்து விட்டது. என்ன சந்தேகம் அது?

“மத்தியில் ஆளும் பா.ஜ.க. - தி.மு.க.
கூட்டணிக்கும், தமிழகத்தை ஆளும்
அ.இ.அ.தி.மு.க. வுக்கும் இதயம் என்று
ஒன்று இருக்கிறதா என்ற சந்தேகமே
எழுகிறது”

இது அந்தப் பத்திரிகை தலையங்கத்தின் வாசகம்.

நான் சொல்ல விரும்புவது, யாருக்கு இதய மிருக்கிறது, யாருக்கு இல்லை என்பதைப் பிறகு ஆராய்ச்சி செய்து; தேவையானால் ஆபரேஷன் செய்தாவது பார்த்துக் கொள்ளலாம். இப்போது ஒரு பொதுப் பிரச்சினையில் ஒவ்வொரு கட்சியும் ஒரு முனையில் நின்றாவது மக்களுக்காகப் போராட வேண்டிய சூழலில்,

இந்தச் சந்தேகம் ஏற்படுவது தேவைதானா என்பதை மார்க்சிஸ்ட் கட்சித் தலைவர்கள் யோசிக்க வேண்டாமா?

நேற்றைய தினம் இப்படித்தான் முரசொலி மாறன் மீது பாய்ந்து, மாறன் தனியார்மய ஹீரோக்களில் ஒருவர் என்று அக்கட்சியின் ஏடு வர்ணித்திருந்தது.

இதோ இந்தப் புகைப்படத்தில் இருப்பது மேற்கு வங்க முதலமைச்சர் திரு. புத்ததேவ் பட்டாச்சார்யா அவர்களும், பேட்டா ஷூ அதிபர் திரு. தாமஸ் ஜெ. பேட்டா அவர்களுமாவார்கள். இந்தப் படம் பிரபல ஆங்கில ஏடு (பிசினஸ் லைன்) ஒன்றில் வெளியாகியுள்ளது. அந்தச் செய்தியின் தலைப்பே Bengal woos Bata for leather complex (தோல் தொழிற்சாலை வளாகம் அமைக்க வங்காளம் 'பேட்டாவிடம் கெஞ்சல்) என்பதாகும். வந்துள்ள செய்தியில், பண்டாலா நகரில் மேற்கு வங்க அரசினால் அமைக்கப்பட்டு வரும் கல்கத்தா தோல் வளாகத் திட்டத்துடன் இணைந்து தொழிற்சாலை நடத்திட பேட்டா ஷூ நிர்வாகத்தின் தலைவருக்கு அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது. மேற்கு வங்க முதலமைச்சர் அவர்களையும், தொழிற்துறை அமைச்சர் அவர்களையும் சந்தித்துப் பேசிய பிறகு, பேட்டா கம்பெனியின் அதிபர் செய்தியாளர்களிடம் கூறும்போது, இது பற்றிய முடிவு கலந்து பேசி எடுக்கப்பட வேண்டிய ஒன்று என தெரிவித்தார். மேற்கு வங்க முதலமைச்சர் பட்டாச்சார்யா கூறும்போது, பேட்டா வின் அதிபர் வந்திருப்பது ஒன்றே அந்தத் திட்டத்தைப் பற்றி சிறப்பான ஒரு எண்ணம் ஏற்படுவதற்கு உதவிடும் என்றார். பட்டாச்சார்யா மேலும் கூறும்போது, ஒருங்கிணைந்த இந்தத் திட்டம் தயாரிப்பு வசதிகளுடன் கூடிய ஒரு ஏற்றுமதி பிராந்தியத்தை அமைத்திட உதவிடும் என்றும், பேட்டா அதிபர் எதனை விரும்புகிறாரோ அதனைச் செய்து கொள்ளலாம் என்றும் தெரிவித்தார் என்று செய்தி வந்திருக்கின்றது.

இதை நான் தவறு என்று குற்றம் சாட்ட முனைய வில்லை.

பொதுத் துறை நிறுவனங்களைத் தனியார் துறையாக்கக் கூடாது என்றும், புதிதாக நிறுவனங்கள் தனியார் துறையில் வருவது தவறல்ல என்றும் கருதுகிறவன் நான். எப்படியாவது வேலை வாய்ப்பு பெருகிட வேண்டும் என்பதால் இந்தக் கருத்து, வரவேற்கப்படுகிற கருத்தாகவே இருக்கிறது.

இந்த அடிப்படையில்தான் மேற்கு வங்க மார்க்சிஸ்ட் முதலமைச்சர் புத்ததேவ் பட்டாச்சார்யா அவர்கள், பேட்டா ஷூ அதிபரிடம் பேசியிருக்கிறார். தனியார் துறையில் தொழில் வளாகம் தொடங்கிட வேண்டுமென!

ஆனால் மார்க்சிஸ்டுகள் இங்கே நம் மீது பாய்கிறார்கள்!

அங்கே பேச்சு மூச்சைக் காணோம்!

மாமியார் உடைத்தால் மண் சட்டி!
மருமகள் உடைத்தால் பொன் சட்டி!

என்பது இதுதானோ!

அன்புள்ள,

மு.க.

2-12-2001

2638. டிசம்பர் 7 முழு அடைப்பு, வேலை நிறுத்தம்!

உடன்பிறப்பே,

நாள்தோறும் வெளியாகும் ஏடுகளைப்
புரட்டும்போது
தேள்போலும் செய்திகளால் துடிக்கின்றார்
தமிழ்மக்கள்!
வாள்போலும் ஏழைகளின் வாழ்வுதனை மாய்க்கின்ற
ஆட்சி
தாள்ஏந்தும் மனிதர்க்கோ ஒரு துளியுமில்லை
மனச்சாட்சி!

பேருந்துக் கட்டணத்தால் விழிபிதுங்கி, ரேஷனில்
பெறுகின்ற அரிசிவிலையும் மும்மடங்காய் உயர்ந்து
பேருருவாய் விலைவாசிக் கொடுமை மிகப்பெருகி
பெருமூச்சால் நெருப்பைக் கக்குகின்றார் தமிழ்
மக்கள்!

துணைபட்ஜட்டாய் ஒரு துண்டறிக்கை
வெளியிட்டார் – அது
அனைத்துப் பிரிவு மக்களையும் துளைக்கும்
பட்ஜட்டாம் – வெட்டித்
துண்டுபோடும் பட்ஜட்டாம் தொட்டால் ஷாக்
அடிக்கும் பட்ஜட்டாம்!
குண்டுதனைப் போட்டுவிட்டு, அது வண்டு
துளைக்காத மாங்கனி என்கின்றார்.

‘‘கருணாநிதி ஆட்சியிலே வருவாய்க்கே வழியில்லை – அள்ளி அள்ளிக் கொடுத்து கஜானாவைக் காலி செய்து விட்டார் – அதனால் தான் இந்தக் கசப்பு மருந்தைக் கொடுக்கிறோம். அதனை இனிப்பாக எண்ணி அருந்துக!

என அ.தி.மு.க. ஆட்சியாளர்கள் உபதேசம் செய்கிறார்கள்.

ஏறத்தாழ 5000 கோடி ரூபாய்க்கு புது வரிகள், வரி உயர்வு, கட்டண உயர்வு, கொள்கை அறிவிப்புகள் என்று மினி பட்ஜட் வெளியிட்டிருக்கும் அ.தி.மு.க. அரசு, மக்களின் பெரும் எதிர்ப்பைக் கண்டவுடன் எல்லாவற்றுக்கும் தி.மு.க.தான் பொறுப்பு என்று கூறி தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறது.

இவர்களின் கூற்று எந்த அளவுக்கு அப்பட்டமான பொய் - வீண்பழி - என்பதற்கு, தமிழக அரசின் நிதிநிலை அறிக்கை பற்றிய ஒரு சுருக்கமான புள்ளி விபரத்தைப் பார்ப்போம்.

1995-96 அ.தி.மு.க. ஆட்சியில் வருவாய்க் கணக்கிலே வருவாய் ரூ.8,985 கோடி.

1996-97 தி.மு.க. ஆட்சியில் வருவாய்க் கணக்கில் வரவு 11,068 கோடி ரூபாய்.

1997-98 - 12, 641 கோடி ரூபாய். (தி.மு.க. ஆட்சியில்)

1998-99 - 15,039 கோடி ரூபாய். 1999-2000 - 15,868 கோடி ரூபாய். 2000-2001 - 18,406 கோடி ரூபாய்.

2001-2002 - 20,635 கோடி ரூபாய்.

1995-96ல் அ.தி.மு.க. ஆட்சி முடிவில் 8,985 கோடி ரூபாய் என்ற அளவிலே இருந்த வருவாய் வரவு தி.மு.கழகத்தின் 5 ஆண்டு கால ஆட்சியில் 20,635 கோடி ரூபாயாக அதாவது 11,650 கோடி ரூபாய் அதிகமாக உயர்ந்திருக்கின்றது.

பற்றாக்குறை என்பது எல்லா ஆட்சியிலும் நிதிநிலை அறிக்கையிலே சுட்டிக்காட்டப்படுகிற - அரசினர் சந்திக்கக் கூடிய ஒரு கட்டம்தான்!

1994-95ல் ஜெயலலிதா ஆட்சியில் 1240 கோடி ரூபாய் பற்றாக்குறை.

1995-96ல் ஜெயலலிதா ஆட்சியில் 926 கோடி ரூபாய் பற்றாக்குறை.

1996-97ல் ஜெயலலிதா ஆட்சியின் இடைக்கால நிதிநிலை அறிக்கையில் பற்றாக்குறை 962 கோடி ரூபாய்.

1996-97ல் தி.மு.க. பொறுப்புக்கு வந்ததும் வைத்த நிதிநிலை அறிக்கையில் பற்றாக்குறை 1,039 கோடி ரூபாய்.

எனவே தி.மு.க. ஆட்சியில், பற்றாக்குறை நிதி நிலைக்கிடையிலேயும் மக்கள் நலவாழ்வுத் திட்டங்களும், வளர்ச்சித் திட்டங்களும் மக்களை கசக்கிப் பிழியாமல் நிறைவேற்றப்பட்டுக் கொண்டுதான் வந்தன. அவற்றைத் தொடர்ந்து 2001-2002ஆம் ஆண்டு கழக ஆட்சியில், நிதிநிலை அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்ட பற்றாக்குறை 996 கோடி ரூபாய்.

2001-2002 ஜெயலலிதா ஆட்சியில், கடந்த ஆகஸ்ட் மாதம் வைத்த நிதிநிலை அறிக்கையில் ஒட்டுமொத்த பற்றாக்குறை 827 கோடி ரூபாய் - இதை சரிக்கட்டத் தான் 135 கோடி ரூபாய்க்கு வரி விதித்து, நிகரப் பற்றாக்குறை 692 கோடி ரூபாயாக அறிவிக்கப்பட்டது.

இப்போது 692 கோடி ரூபாயை சரிக்கட்ட, சுமார் 5000 கோடி ரூபாய்க்கான கட்டண உயர்வு, புது வரி, வரி உயர்வு, கொள்கை மாற்ற முடிவு இவையெல்லாம் ஏன்?

அதுவும் ஏழைபாழைகள், மத்யதர வர்க்கத்தினர், தொழிலாளர்களின் இடுப்பை முறிக்கின்ற அளவுக்கு எதற்காக?

இதை நாம் மட்டும் கேட்கவில்லை - 7-ந் தேதி முழு அடைப்பு அறிவித்துள்ள கட்சிகள் மட்டும் கேட்க வில்லை!

மக்கள் கேட்கிறார்கள்!

7-ந் தேதிக்கு முன்பே கேட்கத் தொடங்கி விட்டார்கள் -

பல இடங்களில்! பல ஊர்களில்!

7-ந் தேதி ஒட்டுமொத்தமாக அமைதியான முறையில் - அண்ணா வழியில் - மக்களின் குரலை இந்த அரசுக்கு

உணர்த்திடவே முழு அடைப்பும், வேலை நிறுத்தமும் நடைபெறுகிறது.

அந்த அறப்போராட்டம் வெற்றிகரமாகவும் - மக்களின் வேதனையை அமைதியாக வெளிப்படுத்தும் வகையிலும் நடைபெற முழு அடைப்பினை அறிவித் துள்ள கட்சிகள் அனைத்தும் கண்ணும் கருத்துமாக இருந்து கடமையாற்றும். ஒத்துழைப்புத் தருமாறு அனைத்துப் பிரிவு மக்களையும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

6-12-2001

2639. விரிவாக விளக்கிட சுருக்கமான செய்திகள்!

உடன்பிறப்பே,

ஏறத்தாழ எல்லா எதிர்க்கட்சிகளும் அண்மையில் இந்த அரசு அறிவித்த 4,500 கோடி ரூபாய் ‘‘மினி பட்ஜட்டைக் கண்டித்து நடத்த இருந்த முழு அடைப்பு மற்றும் வேலை நிறுத்தம் காரணமாக அறிவிக்கப்பட்ட 4,500 கோடி ரூபாய் உயர்விலிருந்து 1,162 கோடி ரூபாய் மட்டுமே குறைக்கப்பட்ட மறு அறிவிப்பை அரசு வெளியிட்டது.

அதில் மனநிறைவு ஏற்படாத காரணத்தால், முதலில் அறிவித்தவாறு முழு அடைப்பு, வேலை நிறுத்தம் நடைபெறுமென எதிர்க்கட்சிகள் அறிவித்தன. அமைதியான முறையில் இந்த அறப் போராட்டம் நடைபெற்ற நிலையில், அரசின் உள்துறை செயலாளர் அவரது ஆசைப்படி, இந்தப் போராட்டம் பிசுபிசுத்து விட்டதாகக் கூறி, அரசிடம் ஒரு சபாஷ் வாங்க வேண்டுமென்பதற்காக ‘‘பந்த் நடந்த அன்றைய தினம், பஸ்கள் ஓடின, ரயில்கள் ஓடின, கடைகள் எல்லாம் திறந்திருந்தன. ‘‘மாமூல் வாழ்க்கை பாதிக்கப்படவில்லை என்பதை மகிழ்ச்சியுடன் அறிவித்துள்ளார். ரயில்கள் ஓடக் கூடாது என்றோ, ஓடாது என்றோ எந்தக் கட்சி சார்பிலும் அறிவிக்கப்படவில்லை.

பஸ்கள் ஓரளவு ஓடின என்பது உண்மைதான் - காரணம் ஏற்கனவே போனசுக்காகப் போராடி 17 நாட்களுக்கு மேல் வேலை நிறுத்தம் செய்த பேருந்து தொழிலாளர்களால் - தயவு தாட்சண்யம் பார்க்காத ஒரு ஆட்சியில் இதற்கு மேலும் தாக்குப் பிடித்துத் தங்கள் குடும்பங்களையே அழித்துக் கொள்ள முடியாதல்லவா!

பஸ்கள் ஓடின. ஆனால், பஸ்களில் பயணிகள் மிக மிகச் சிலரே இருந்தனர் என்றே பத்திரிகைகளில் செய்திகள் வந்திருந்தன. ஏனெனில், பயணிகள் தானே பஸ் கட்டணம் செலுத்த வேண்டியவர்கள், அவர்கள் எதிர்ப்பைக் காட்டினால் போதுமல்லவா!

இந்த வேலை நிறுத்தம் குறித்து செய்தியாளர் கூட்டத்தில் ஒருவர் கேட்டார். தி.மு.க. ஆட்சியிலும் பஸ் கட்டணம் உயர்த்தப்பட்டதே என்றும், மின்சாரக் கட்டணம் உயர்த்தப்பட்டதே என்றும்!

ஆமாம்! படிப்படியாகத்தான் எந்தக் கட்டணமானாலும் உயர்த்தப்பட்டதே தவிர, இப்படி ஒரேயடியாக மக்களை கசக்கிப் பிழிகிற அளவுக்கு உயர்த்தப்படவில்லை என்று சொன்னேன்.

இப்போதும், தி.மு.கழகம் மீண்டும் ஆட்சிக்கு வந்திருக்குமேயானால், பஸ் கட்டணமோ, மின் கட்டணமோ மக்களால் தாங்கக் கூடிய அளவுக்குச் சற்று உயர்த்தப்பட்டிருக்கும்.

பஸ் தொழிலாளர், மின்வாரியத் தொழிலாளர் கழக ஆட்சியில் பெற்ற 20 சதவிகித போனஸ், இந்த ஆண்டும் தங்குதடையின்றி பெற்றிருப்பார்கள்.

ஒருவேளை கடந்த ஆண்டு நண்பர் மலைச்சாமி அவர்கள் தலைமையில், 25 சதவீதம் வேண்டு மென்று போராட்டம் நடத்தியது போல, அ.தி.மு.க. தொழிற் சங்கம் போராட்டம்கூட நடத்தியிருக்கும். பஸ் கட்டணம், மின்சாரக் கட்டணம் உயர்த்தி யிருப்பதால் இதோ பிடியுங்கள் 21 சதவிகித போனஸ் என்று கொடுத்தாலும் கொடுத்திருப்போம்.

தி.மு.க.வே மீண்டும் ஆட்சிக்கு வந்திருந்தால் ஏற்கனவே ரத்து செய்யப்பட்ட மருத்துவமனை அனுமதி சீட்டு ஐந்து ரூபாய் என்ற அநியாயம், மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டிருக்க மாட்டாது.

சமையல் எண்ணெய்களுக்கு - திருப்பூர் பின்னலாடைகளுக்கு வரி விலக்கு அளித்த தி.மு.க. ஆட்சி, மீண்டும் பொறுப்புக்கு வந்திருந்தால் நிச்சயமாக வரி ரத்தைத் திரும்பப் பெற்று, 4 சதவீதம் புதிய வரி விதிப்பைக் கொண்டு வந்திருக்காது.

மாணவர்க்கான கல்விக் கட்டணத்தை இப்படிக் கண்ணை மூடிக் கொண்டு உயர்த்தியிருக்க மாட்டோம்.

நியாயவிலைக் கடை அரிசி விலையை உயர்த்துமாறு மத்திய அரசு ஜாடை காட்டியபோது, அதை மறுத்து விட்டு வறுமைக் கோட்டுக்குக் கீழே மேலே என்று வித்தியாசம் பார்ப்பதில் குழப்பமே மிஞ்சும் என்பதைப் புரிந்து கொண்டு, எல்லோர்க்கும் கிலோ அரிசி 3 ரூபாய் 50 காசுதான் என்று நிர்ணயித்த நிலையே தொடர்ந்து

நடைமுறையில் இருந்திருக்கும். மே மாதம் வரையில்தான் என்று காலக்கெடு விதித்து அதற்கு மேல் ஒரு கிலோ அரிசி 9 ரூபாய் என்று அறிவித்திருக்க மாட்டோம்.

அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் இன்று குய்யோ முறையோ என்று கூச்சலிடுகிற அளவுக்கு, ஏற்கனவே அவர்களுக்குக் கழக அரசு வழங்கிய சலுகைகள் ரத்து செய்யப்பட்டிருக்க மாட்டா.

சிமெண்டுக்கு நுழைவு வரி –

யூரியா உரத்துக்கு வரி –

போக்குவரத்துக் கழக பஸ்களின்

வழித்தடங்களில் தனியார் பஸ்கள் –

இதுபோன்ற அறிவிப்புகள் வெளி வந்திருக்காது.

முக்கியமாக மலிவு விலை மதுவை, கழக ஆட்சி மீண்டும் வந்திருந்தால் கண்டிப்பாக அமல்படுத்தி யிருக்க மாட்டோம்.

ஏனென்றால், 1990ஆம் ஆண்டு கழக ஆட்சியில் மலிவு விலை மதுவை அறிமுகப்படுத்தி, செல்வி ஜெயலலிதாவின் கடுமையான எதிர்ப்பை அப்போதே சமாளிக்க முடியவில்லை. அதை எண்ணிப்பார்த்து இப்போது கொண்டு வந்திருக்கவே மாட்டோம்!

எனவே உடன்பிறப்பே, தி.மு.க. ஆட்சி மீண்டும் பொறுப்புக்கு வராததால் ஏற்பட்டுள்ள விளைவுகள் என்ன என்பதை அ.தி.மு.க.வுக்கு விளக்கக் கூடிய அரிய வாய்ப்பு உன் போன்றோர்க்குக் கிடைத்துள்ளது.

இதனை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்வாய் என நம்புகிறேன்.

அன்புள்ள,

மு.க.

9-12-2001

2640. அறிவுரைகள் அனுபவ உரையாகட்டும்!

உடன்பிறப்பே,

அ.தி.மு.க. ஆட்சியில் கடந்த ஆகஸ்டு மாதம் ஒரு பட்ஜெட் படித்து சுமார் 700 கோடி ரூபாய் பற்றாக்குறை எனக் குறிப்பிட்டுவிட்டு, அதைச் சரி செய்திட நியாயமான முறையில் - சாதாரண, சாமான்ய, நடுத்தர மக்கள் தாங்குகிற அளவுக்கு வரி உயர்வோ, கட்டண உயர்வோ செய்யாமல் பற்றாக்குறை ஏற்பட்ட தொகையை விடப் பல மடங்கு அதிகமாக, சுமார் 5,000 கோடி ரூபாய்க்கு கட்டணங்களில், வரிகளில் மாறுதல் செய்துவிட்டு, எதிர்க்கட்சிகள் அமைதி வழியில் போராட்டம் அறிவித்தவுடன் கண்துடைப்பாக சுமார் 1,200 கோடி ரூபாய் மட்டுமே குறைத்திருப்பதாக அறிவித்துள்ளார்கள்.

உதாரணத்திற்கு ஒன்றே ஒன்றைக் குறிப்பிட வேண்டுமானால், 1997ஆம் ஆண்டு செப்டம்பரில் தி.மு.க. ஆட்சியில், பஸ் கட்டணம் 20 பைசா என்று நிர்ணயிக்கப்பட்டு, பிறகு 1998ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18 பைசா என ஆக்கப்பட்டு, பின்னர் 1999 அக்டோபரில் 22 பைசா என உயர்த்தப்பட்டது. இப்பொழுது அ.தி.மு.க. ஆட்சியில், 8 பைசா உயர்த்தி 30 பைசா என அறிவித்து விட்டு பிறகு 28 பைசா என்று நிர்ணயித்துள்ளார்கள்.

இதனை மேலும் குறைக்க வேண்டுமென்பது தான் பொதுமக்களின் கோரிக்கையாக இருந்து வருகிறது. பஸ் கட்டணத்தில் நியாயமான உயர்வு செய்யலாம் என்பதில் நமக்கு எந்தக் கருத்து மாறுபாடுமில்லை. இப்போது அறிவிக்கப்பட்டுள்ள பஸ் கட்டணம் 28 பைசா என்பதை இன்னமும் குறைக்கலாம்.

1999ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் 4 பைசா உயர்த்தி, அதாவது 18 என்பதை 22 பைசா என அறிவித்தபோது,

செல்வி ஜெயலலிதா அவர்கள் விடுத்த அறிக்கையை ஒருமுறை நினைவுபடுத்திக் கொள்வது நல்லது!

''இப்போது பொதுமக்களைப் பெரிதும் பாதிக்கிற வகையில் கருணாநிதி பஸ் கட்டணத்தை உயர்த்தி யுள்ளார். வெளியூர் செல்லும் சாதாரண பஸ்களுக்கு கிலோ மீட்டருக்கு 4 காசு உயர்த்தியிருப்பது அநியாயமாகும்.

இது ஜெயலலிதா அவர்களின் அன்றைய கண்டன அறிக்கையின் ஒரு பகுதி - 4 காசு உயர்த்தியதற்கே அம்மையார் அவ்வளவு கோபித்துக் கொண்டார். இன்றைக்கு அவரது யோசனைப்படி, அ.தி.மு.க. அரசு உயர்த்தியிருக்கிற பஸ் கட்டணம் கிலோ மீட்டருக்கு 6 பைசா அதிகமாகும்.

இதே செல்வி ஜெயலலிதா அவர்கள்தான் பஸ் கட்டண உயர்வு பற்றி தி.மு.க. ஆட்சியைக் கண்டித்து 1997ஆம் ஆண்டு செப்டம்பரில் விடுத்த அறிக்கையில்,

> ''பல்வேறு நிர்வாகச் சீர்திருத்தங்கள் மூலம் போக்குவரத்துத் துறை நஷ்டத்தைக் குறைக்க வழியிருக்கும் போது, பெட்ரோலியப் பொருட்களின் விலை உயர்வையும், போக்குவரத்துக் கழகங்களில் ஏற்படும் நஷ்டத்தையும் சொல்லி பஸ் கட்டண உயர்வை ஏழையெளிய மக்கள் மீது சுமத்துவது எந்த வகையில் நியாயம்? மிகக் குறைந்த ஊதியத்தைப் பெற்றுக் கொண்டு அன்றாட வாழ்க்கைக்குப் போராடும் சாதாரண மக்கள் இந்தப் பஸ் கட்டண உயர்வை எப்படிச் சமாளிப்பார்கள்? பஸ் பயணிகள் பெரும்பாலும் சாதாரண மக்கள்தான் என்பதை அரசு கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை என்பதை இந்தக் கட்டண உயர்வு எடுத்துக் காட்டுகிறது. எதிர்ப்பு வந்த பின்னர் கட்டணக் குறைப்பு என்று கண துடைப்பு நாடகம் நடத்தாமல், பஸ் கட்டண உயர்வை முழுமையாக ரத்து செய்ய வேண்டும்.

என்று கனல் தெறிக்கக் கூறியுள்ளார்.

அந்தக் கனலும், அனலும் கழக ஆட்சிக்கு எதிராகத்தான் கனன்று எழுமா?

அன்று கழக ஆட்சியில் நியாயமான அளவு கட்டண உயர்வுக்கே இப்படியொரு ஆவேசமான எதிர்ப்பு!

அதிலும் இப்போது பேருந்துக் கட்டண உயர்வை அறவே கைவிடுங்கள் என்று தி.மு.க. கூறவில்லை. நியாயமான அளவுக்கு உயர்த்துங்கள். தேவையானால் உங்கள் பழைய அறிக்கையை நீங்களே ஒருமுறை படித்துப் பாருங்கள் என்றுதான் கூறுகிறோம்.

ஒரு காசு பஸ் கட்டண உயர்வு என்றாலே எத்தனை கோடி வருமானம் வரும் என்ற கணக்கைப் பாருங்கள்!

எதிர்க்கட்சியாக இருந்து சொன்ன அறிவுரைகளை, ஆளுங்கட்சியாக இருக்கும்போது அனுபவ உரைகளாக எண்ணிப் பார்த்தால்தான் ஆரோக்யமான ஜனநாயகம் மலரும் என்பதை மறந்து விடக் கூடாது.

இது, பஸ் கட்டண உயர்வுக்காக மட்டுமல்ல - பற்றாக்குறை 700 கோடிக்கும் குறைவு என்கிறபோது 5,000 கோடிக்கு வரி உயர்வு, கட்டண உயர்வு, புதிய வரிகள் என அறிவிப்புச் செய்து பெரும் சுமையை ஏற்றிவிட்டு, அதில் சுமார் 1,200 கோடி அளவுக்கு மட்டும் குறைப்பது என்பது எந்த வகையில் நியாயம் என்ற கேள்விக்கும் அ.தி.மு.க. அரசிடம் மக்கள் பதிலை எதிர்பார்க்கிறார்கள்.

அன்புள்ள,

மு.க.

10-12-2001

2641. ஏணி ஏற முடியாதவரைக் கேணியில் தள்ளுவதா?

உடன்பிறப்பே,

ஆறு மாத ஆட்சியில் நடைபெற்றுள்ள அவலங்களையும், அராஜகங்களையும், போலீஸ் ராஜ்யக் கொடுமைகளையும் அனைத்துக்கும் உச்சகட்டமாகச் சாதாரண சாமான்ய மக்களை பாதிக்கும் மினி பட்ஜட்டின் விபரீத விளைவுகளையும், தொழிலாளர்களைத் துச்சமாகக் கருதி அவர்களின் கோரிக்கைகளைக் குப்பைக் கூடையில் எறிந்ததையும், மக்களிடத்திலே விளக்கிட ஆங்காங்கு கூட்டங்கள், தெருமுனைப் பிரச்சாரங்கள் நடத்துகின்ற பணியில் தி.மு.க. அமைப்புகளும், இளைஞர் அணி அமைப்புகளும் ஈடுபட்டுள்ள இந்த நேரத்தில் பயன்படுத்திக் கொள்வதற்கான புள்ளி விவரங்களை கடந்த இரண்டு நாட்களாக எழுதி வருகிறேன்.

இன்றைக்கு விலைவாசி குறித்து ஒரு விபரத்தைத் தருகிறேன். இதனை ஆளுங்கட்சி ஆதரவுப் பத்திரிகைகள் பிரசுரிக்க மாட்டா! ஒருவேளை பிரசுரித்தாலும் என் அறிக்கை அல்லது கடிதத்தின் கழுத்தை வெட்டியோ, கைகால்களைத் துண்டித்தோ, தங்கள் எஜமானர்களுக்கு எரிச்சல் வராத அளவுக்குத் தான் கடுகளவு வெளியிடுவார்கள். பாவம்! அவர்களுக்குத் தர்மசங்கடம் வருவானேன் என்பதற்காக என் கடிதத்தையோ, அறிக்கையையோ அந்த ஏடுகளுக்கு அனுப்பித் தொல்லை தரவேண்டாம் என்று கூறிவிட்டேன்.

உணர்வுள்ள ஓரிரு ஏடுகள் இவற்றை வெளியிடக் கூடும். அப்படியே வெளியிட்டாலும்கூட, நீயும், உன் போன்ற உடன்பிறப்புகளும் இந்தப் புள்ளி விபரங்களையும், இத்துடன் ஏற்கனவே தொடர்ந்து எழுதப்பட்டுள்ள கருத்துகளையும் பொது மக்களுக்குப் போய்ச் சேரும் வண்ணம் துண்டு அறிக்கைகளாக அச்சிட்டு வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆளுங்கட்சியான அ.தி.மு.க. பேச்சாளர்கள், எவ்வளவு தரக்குறைவாகவும், நரகல் நடையிலும் நமது கழகத்தைக் குறித்து கேட்போர் காதைப் பொத்திக் கொண்டு காத தொலைவு ஓடுகிற அளவுக்கும் காவல்துறையினரைப் பாதுகாப்பு அரணாக வைத்துக் கொண்டு கொட்டி முழக்குகிறார்கள் என்பது எனக்குத் தெரியும். இவர்களைப் போலவே, மலிவான, இழிவான சரக்குகளை விற்பதற்கு அரசியல் சந்தைக்கு வந்த அணுகுண்டு அய்யாவு, விபூதி வீரமுத்து, கோடையிடி குப்புசாமி போன்றவர்களையெல்லாம் இந்த திராவிட இயக்கம் சந்தித்தபோது, இன்றைக்கு தி.மு.க.வை, நாக்கு கொப்பளிக்கச் சுடு சொல் வீசித் தாக்கு கிறவர்கள் இருந்த இடம் எதுவென்று அவர்களுக்கே தெரியாது.

எனவே கழக அமைப்புகள் சார்பிலோ, இளைஞர் அணி சார்பிலோ மற்றும் இந்த இயக்கத்தின் எந்தவொரு அமைப்பின் சார்பிலோ மேடையேறி விளக்கம் கூறுகிறவர்கள், விஷத் துளியொன்று பால் குடத்தில் விழுந்ததுபோன்று தங்கள் பேச்சுகளை அமைத்துக் கொள்ளக் கூடாது.

படிக்க நேரமிருந்து படிக்க வேண்டுமென்ற நினைப்பும் இருந்தால், நான் எழுதி வந்துள்ள கடிதங்களை, விளக்க அறிக்கைகளை உடன்பிறப்புகள் படித்து, நெஞ்சில் பதிய வைத்துக் கொண்டு மக்களிடத்தில் அவற்றில் சிலவற்றையாவது எடுத்துக் கூறினால் போதும்.

அ.தி.மு.க. ஆட்சியில் கிலோ 46 ரூபாய் என்றிருந்த மஞ்சள் விலை தி.மு.க. ஆட்சியில் 37 ரூபாய் என்று குறைந்து, இப்போது மீண்டும் 41 ரூபாய் என உயர்ந்து விட்டது.

அ.தி.மு.க. ஆட்சியில் கிலோ 36 ரூபாய் என்றிருந்த நெம்பர் 1, துவரம்பருப்பு விலை, தி.மு.க. ஆட்சியில் 29 ரூபாய் என்று குறைந்து, இப்போது மீண்டும் 32 ரூபாய் என உயர்ந்து விட்டது.

அ.தி.மு.க. ஆட்சியில் கிலோ 28 ரூபாய் என்றிருந்த நெம்பர் 2, துவரம் பருப்பு விலை, தி.மு.க. ஆட்சியில் 22 ரூபாய் என்று குறைந்து, இப்போது மீண்டும் 26 ரூபாய் என உயர்ந்து விட்டது.

அ.தி.மு.க. ஆட்சியில் கிலோ 26 ரூபாய் என்றிருந்த கடலைப்பருப்பு விலை, தி.மு.க. ஆட்சியில் 24 ரூபாய் என்று குறைந்து, இப்போது மீண்டும் 32 ரூபாய் என உயர்ந்து விட்டது.

அ.தி.மு.க. ஆட்சியில் கிலோ 58 ரூபாய் என்றிருந்த

நல்லெண்ணெய் விலை, தி.மு.க. ஆட்சியில் 45 ரூபாய் என்று குறைந்து, இப்போது மீண்டும் 50 ரூபாய் என உயர்ந்து விட்டது.

அ.தி.மு.க. ஆட்சியில் கிலோ 43 ரூபாய் என்றிருந்த கடலெண்ணெய் விலை, தி.மு.க. ஆட்சியில் 35 ரூபாய் என்று குறைந்து, இப்போது மீண்டும் 44.50 ரூபாய் என உயர்ந்து விட்டது.

அ.தி.மு.க. ஆட்சியில் கிலோ 32.50 ரூபாய் என்றிருந்த பாமாயில் விலை, தி.மு.க. ஆட்சியில் 21 ரூபாய் என்று குறைந்து, இப்போது மீண்டும் 32 ரூபாய் என உயர்ந்து விட்டது.

அ.தி.மு.க. ஆட்சியில் கிலோ 26 ரூபாய் என்றிருந்த கடுகு விலை, தி.மு.க. ஆட்சியில் 20.50 ரூபாய் என்று குறைந்து, இப்போது மீண்டும் 30 ரூபாய் என உயர்ந்து விட்டது.

அ.தி.மு.க. ஆட்சியில் கிலோ 43 ரூபாய் என்றிருந்த பூண்டு விலை, தி.மு.க. ஆட்சியில் 28 ரூபாய் என்று குறைந்து, இப்போது மீண்டும் 75 ரூபாய் என உயர்ந்து விட்டது.

அ.தி.மு.க. ஆட்சியில் கிலோ 36 ரூபாய் என்றிருந்த நெம்பர் 1 உளுத்தம்பருப்பு விலை, தி.மு.க. ஆட்சியில் 30 ரூபாய் என்று குறைந்து, இப்போது மீண்டும் 34 ரூபாய் என உயர்ந்து விட்டது.

அ.தி.மு.க. ஆட்சியில் கிலோ 33 ரூபாய் என்றிருந்த நெம்பர் 2, உளுத்தம்பருப்பு விலை, தி.மு.க. ஆட்சியில் 26 ரூபாய் என்று குறைந்து, இப்போது மீண்டும் 28.50 ரூபாய் என உயர்ந்து விட்டது.

அ.தி.மு.க. ஆட்சியில் கிலோ 240 ரூபாய் என்றிருந்த மிளகு விலை, தி.மு.க. ஆட்சியில்140 ரூபாய் என்று குறைந்து, இப்போது மீண்டும் 180 ரூபாய் என உயர்ந்து விட்டது.

அ.தி.மு.க. ஆட்சியில் கிலோ 55 ரூபாய் என்றிருந்த நீள மிளகாய் விலை, தி.மு.க. ஆட்சியில் 41 ரூபாய் என்று குறைந்து, இப்போது மீண்டும் 52 ரூபாய் என உயர்ந்து விட்டது.

அ.தி.மு.க. ஆட்சியில் கிலோ 50 ரூபாய் என்றிருந்த குண்டு மிளகாய் விலை, தி.மு.க. ஆட்சியில் 40 ரூபாய் என்று குறைந்து, இப்போது மீண்டும் 48 ரூபாய் என உயர்ந்து விட்டது.

அ.தி.மு.க. ஆட்சியில் கிலோ 60 ரூபாய் என்றிருந்த தேங்காய் எண்ணெய் விலை, தி.மு.க. ஆட்சியில் 48 ரூபாய் என்று குறைந்து, இப்போது மீண்டும் 55 ரூபாய் என உயர்ந்து விட்டது.

அ.தி.மு.க. ஆட்சியில் கிலோ 34 ரூபாய் என்றிருந்த சீயக்காய் விலை, தி.மு.க. ஆட்சியில் 22.50 ரூபாய் என்று குறைந்து, இப்போது மீண்டும் 36 ரூபாய் என உயர்ந்து விட்டது.

அ.தி.மு.க. ஆட்சியில் கிலோ 19 ரூபாய் என்றிருந்த நெம்பர் 1, பொன்னி அரிசி விலை, தி.மு.க. ஆட்சியில் 15 ரூபாய் என்று குறைந்து, இப்போது மீண்டும் 20 ரூபாய் என உயர்ந்து விட்டது.

அ.தி.மு.க. ஆட்சியில் கிலோ 17 ரூபாய் என்றிருந்த நெம்பர் 2, பொன்னி அரிசி விலை, தி.மு.க. ஆட்சியில் 13 ரூபாய் என்று குறைந்து, இப்போது மீண்டும் 18 ரூபாய் என உயர்ந்து விட்டது.

அ.தி.மு.க. ஆட்சியில் கிலோ 10.50 ரூபாய் என்றிருந்த இட்லி அரிசி விலை, தி.மு.க. ஆட்சியில் 9 ரூபாய் என்று குறைந்து, இப்போது மீண்டும் 12 ரூபாய் என உயர்ந்து விட்டது.

அ.தி.மு.க. ஆட்சியில் கிலோ 12.50 ரூபாய் என்றிருந்த சிறுமணி அரிசி விலை, தி.மு.க. ஆட்சியில் 10 ரூபாய் என்று குறைந்து, இப்போது மீண்டும் 13 ரூபாய் என உயர்ந்து விட்டது.

அ.தி.மு.க. ஆட்சியில் கிலோ 140 ரூபாய் என்றிருந்த சீரகத்தின் விலை, தி.மு.க. ஆட்சியில் 120 ரூபாய் என்று குறைந்து, இப்போது மீண்டும் 150 ரூபாய் என உயர்ந்து விட்டது.

விலைவாசி குறைய வேண்டுமானால் எங்களுக்கு வாக்களியுங்கள்.....ஒரேயடியாக விலைவாசியைக் குறைப்போம் என்று தேர்தல் நேரத்தில் திருவாய் மலர்ந்தருளியவர்களை இன்றைக்கு எங்கு தேடினாலும் கிடைக்க மாட்டேன் என்கிறார்கள்.

வரி, கட்டணம் போன்றவைகளை மனம் போன போக்கில் உயர்த்தி விட்டு, ஏற்கனவே இந்த ஆட்சியில் ஏறியுள்ள விலைவாசியை சமாளிப்பதற்கு ஏணி கிடைக்காமல் திண்டாடுகிறவர்களை, கேணியில் தள்ளி விடும் காரியம் செய்கிறார்களே, நியாயமா என்று அவர்களுக்கு வாக்களித்த மக்களைப் பார்த்துக் கேளுங்கள்!

அந்தப் பிரச்சாரப் போருக்கு உடன்பிறப்புகள் ஏந்திட வேண்டிய ஆயுதங்களில் ஒன்றுதான் இந்த விலைவாசிப் பட்டியல்!

அன்புள்ள,

மு.க.

11-12-2001

2642. மகிழ்ச்சிக்குரிய மறக்க முடியாத நிகழ்ச்சி!

உடன்பிறப்பே,

19-11-2001 எனத் தேதியிட்டு மலேசியா பேராக் மாநில பெரியார் பாசறையிலிருந்து (Persatua Penganut Periyar Perak) எழுதப்பட்ட கடிதம் எனக்குக் கிடைத்தது.

வாழ்க தமிழினம்!
வளர்க பகுத்தறிவுக்கொள்கை!
இனமானம் காப்போம்!
பகுத்தறிவுச்சுடர் ஏந்துவோம்!

எனும் முழக்கங்களை முகப்பில் பொறித்துக் கொண்டுள்ள அந்த மடலை, பெரியார் பாசறை சார்பில் கவிஞர் தீப்பொறி அவர்கள் எழுதியிருந்தார்.

அதில், பாசறை சார்பில் டிசம்பர் 11ஆம் நாள் 30க்கு மேற்பட்டோர் கொண்ட குழுவினர் 20 நாள் தென்னாட்டுச் சுற்றுலா மேற்கொண்டு சென்னை வருவதாகவும், முதல் நாளே என்னைச் சந்தித்து உரையாட மிகுந்த ஆவலுடன் இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதன்படி, கவிஞர் தீப்பொறி பொன்னுசாமி, பாசறைத் தலைவர் ஜி. வாசு, செயலாளர் த.சி. முனியாண்டி, கலைஞர் ராதாகிருஷ்ணன், கவிஞர் பொன்நிலவன், கவிஞர் முத்துப்பாண்டியன், கவிஞர் தமிழ்மாறன், த.சி. முருகன், கவிஞர் வீரக்குமரன், கந்தசாமி, மு. கிருஷ்ணன், சாந்தமூர்த்தி, திருமதி மாதவி, செல்வி சியாமளா, வீரம்மாள், சீனுவாசன், ஆனந்தன், ரங்கம்மாள், சுப்பம்மாள், அழகப்பன், கிளியம்மாள், நாகேசுவரராவ், கே. மாயவன், கணேசன், பழனியம்மாள், தமிழ்ச்செல்வி, இலட்சுமி, பொன் தம்பிரான், ராஜம்மாள், கனகா, அலெக்ஸ், வி.எஸ்.மணியம்,

ராஜம்மாள், நாதன், ராஜம், முனியம்மாள் ஆகிய 36 பேர் சென்னை அண்ணா அறிவாலயத்தில் என்னையும் பொதுச் செயலாளர் பேராசிரியரையும் பொருளாளரையும் சந்தித்து உரையாடினர்.

தமிழகத்துக்கு வெளியே உள்ள நாடுகளில் வாழ்கிற தமிழர்கள் எத்துணை பற்று பாசமுள்ளவர்களாகவும், நம்மீது அன்பைப் பொழிபவர்களாகவும் இருக்கிறார்கள் என்பதற்கு மற்றொரு எடுத்துக் காட்டாக விளங்கியதுதான் இந்தப் பாசறைக்குழுவினரின் சந்திப்பும், அவர்களின் திறந்த உள்ளத்திலிருந்து பொங்கி எழுந்த இன உணர்வும் என்பதைப் பெருமிதத்துடன் எண்ணிப் பார்த்து இன்பப் பெருமூச்சு விடுகிறேன். இங்கிருக்கும் சில தமிழர்களை எண்ணிடும்போது, மலேசியா வாழ் தமிழர்களின் நல்லுணர்வையும், நன்றியுணர்வையும் ஒப்பிட்டுப் பார்த்தால் பெருமூச்சு விடத்தானே வேண்டியிருக்கிறது.

மலேசியா, சிங்கப்பூரில் வாழ்கிற தமிழர்கள் இன உணர்வு தீபங்களாகவும், இலட்சியச் சுடர்களாகவும் ஒளி விடுவதை, அவர்கள் நம்மை வரவேற்கும்போதே தமது விழிகளின் வாயிலாக உணர்த்தி விடுவர். அவ்வளவு கனிவு - அத்துணை அன்புப் பொழிவு தமிழ் நாட்டுக்காரர்களைக் கண்டவுடன்!

வெளிநாட்டில் உள்ள எல்லாத் தமிழர்களுமே பொது நல நோக்குடையோராக - இனப் பற்றாளராக - மொழிப் பற்றாளராக - தாங்கள் வாழும் புகுந்த வீட்டைப் பெருமைப்படுத்துவதைப் போலவே - பிறந்த மண்ணையும் மதிப்பவராக இருக்கின்றனரா என்ற கேள்வியெழுமேயானால் அதற்கு என் பதில்,

அவர்களிலும் தன்னலக்காரர், நன்றி மறப்போர், இன நலம், மொழி நலம் பேணாதோர் ஓரிருவர் இருப்பாராயின் அந்தக் குறை இங்கு வந்து போகும்போது இங்குள்ள தமிழர் சிலரிடம் கற்ற பாடமாக இருக்கக் கூடும் என்பதுதான்!

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் புறாக்களின் ஒழுக்கம் பற்றி மேன்மையாகக் கவிதை பாடும்போது;

“தகாச் செயல்கள் தன்னை, அன்பு
தவழ்கின்ற புறாக்கள் தம்மில்
ஒரு சில தறுதலைகள், கவலை சேர் மக்களின்பால்
கற்றுக் கொண்டிருத்தல் கூடும்’’

என்றாரே, அது போலத்தான் இதுவும்!

தமிழகத்தில் தமிழன் என்ற உணர்வும், தமிழ் மொழிப் பற்றும் குறைவது கண்டு மனம் குமையும்போது, ஒரு முறை மலேசியா, சிங்கப்பூர் போன்ற வெளிநாடு பயணம் சென்று வந்தாலே ஒரு புத்துணர்ச்சி ஏற்படும் நமக்கு! அந்த அனுபவத்தை 1987-ல் ஒரு முறையும், அடுத்து 1999-ல் ஒரு முறையும் நான் பெற்றதால் இதனை அறுதியிட்டுச் சொல்கிறேன்.

இப்போது மலேசியப் பெரியார் பாசறையினர் இங்கு வந்து எங்களைச் சந்தித்தபோது, ஏறத்தாழ ஒரு மணி நேரம் மலேசியாவில் இருந்தது போன்ற இன்பம் ஏற்படத்தான் செய்தது.

அவர்களில் பாவலர் முத்துப் பாண்டியன் எழுதிய சந்தப்பாடல்கள் என்ற நூலைத் தந்து அணிந்துரை எழுதித் தருமாறு கேட்டார்கள். மற்றொரு நூல் எழுச்சிக் கவிஞர் பொன்நிலவன் கவிதைகள் என்பதாகும். அதற்கும் அணிந்துரை எழுதுமாறு அன்புடன் பணித்தனர்.

பாவலர் முத்துப் பாண்டியனின் சந்தப் பாடல்களைப் படிக்கத் தொடங்கினேன்.

“குட்டக் குட்டக் குனிஞ்சிருந்தா கோழையின்னு பேரு –
நல்ல
கொள்கையோட தலை நிமிரு, கொடுமைகளைத் தீரு!

இந்த வரிகள் என்னை எந்த அளவுக்கு வசீகரித்திருக்கும் என்பதை நீ அறிவாய் எனினும்;

இந்தப் பாடலின் தொடக்கமாக;

“ஏண்டா தமிழா நமக்குள் வன்முறை? இனி
வேண்டாம் தமிழா உனக்குள் இக்குறை!

என்ற இரு வரிகளும் என் இதயத்துக்கு இதமாக இருப்பவை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

“குழி பறிக்க இழுபறியில் நிற்கிறோம் – இன்னும்
கொஞ்சம் மிஞ்சும் மானத்தையும் விற்கிறோம்
வழி தெரிந்தும் குழியிலே கால் வைக்கிறோம் – நல்ல
வாய்ப்பிருந்தும் வாலையே பிடிக்கிறோம்

என்று எழுச்சிக் கவிஞர் பொன்நிலவன் ஏங்குவது நமக்குப் புரிகிறது. மான உணர்வின் மீது அவர் கொண்டுள்ள மரியாதையை மனிதர்கள் அனைவரும் கொள்ள வேண்டுமே!

"மனிதனுக்கு மான உணர்வு வேணுங்க - அது
மரத்து விட்டால் அதுக்கு வேறு பேருங்க"

இது, கேலி புரியும் கவிதை வரியாகவா தெரிகிறது? மானமிழந்து மதி கெட்டுப் போகிறவர்களைப் பார்த்து இந்த மலேசியக் கவிஞன் கொட்டும் கண்ணீர்த் துளிகளாக அல்லவா தோன்றுகிறது.

பெரியார் பாசறை என்ற பெயருக்குப் பொருத்தமாக, ஆம்! உண்மையிலேயே பொருத்தமாக மலேசியாவில் உருவாகியுள்ள இந்தத் தன்மானக் கவிஞர்களைச் சந்தித்ததும் அவர்களுடன் வருகை தந்த தாய்க் குலத்தினர், தமிழ்ப் பெரியோர் அனைவருடனும் உரையாடியதும் மகிழ்ச்சிக்குரிய நிகழ்ச்சி, மறக்க முடியாத நிகழ்ச்சி!

அன்புள்ள,

மு.க.

13-12-2001

2643. ஊரார் இருவர் உரையாடல்!

உடன்பிறப்பே,

(அப்பாவியும் அனுபவசாலியும் பேசிக் கொண்டிருக்கிறார்கள் - அது உரைநடையாகவும் தெரியவில்லை; கவிதையாகவும் தெரியவில்லை; ஆனால் உண்மையாக மட்டும் தெரிகிறது.)

அப்பாவி:-என்ன அப்படிச் சொல்லிவிட்டீர்?
அன்னைத் தமிழ் மீது ஆணை!
தங்கத்துள் தங்கம் தனித்தங்கம் அவர்
பங்கமேதுமிலா பத்தரை மாற்றுத் தங்கம்!

அனுபவசாலி:- அப்பாவித்தனமாக உளறாதீர்
எப்போதும் என் பேச்சு
அனுபவத்தின் மறு பதிப்பு
ஆடாத தலை கூட ஆடுமய்யா
அட பிடி சில கோடி என்றால்

அசையும் ஒரு நொடியில் அய்யா!

அப்பாவி:- ஏற்காது அவரின் காது
எத்தனை கோடி பேரம் எனினும்,
தோற்காது தன்முன்னே நீதியென்று,
தோள்தட்டி முழங்கிடுவார்!

அனுபவசாலி:-காது தானே ஏற்காது அய்யா!
கன மழையாய்ப் பண மழையைக்
கண்ணாரக் காணும்படி பொழிய விட்டால்,
மண்ணாகப் போகாதோ அவர் மன உறுதி?

அப்பாவி:- பூமி பிளக்கின்ற நில நடுக்கம் வந்தாலும்
புயலும் சூறாவளியும் பிணைந்து சுழன்றாலும்
ஊழிப் பெருவெள்ளமே பொங்கி யெழுந்து,
உலகத்தைப் பாயாகச் சுருட்டினாலும்
ஏற்காது அவரின் காது

எத்தனை கோடி பேரம் எனினும்!
இதனை நான் எவர்க்கும் அஞ்சாமல்
இமயமலை மேலேறியும் சொல்லத் தயார்!

அனுபவசாலி:- இமயமலை ஏற வேண்டாம் அய்யா
ஏற்காடு மலைதனில் ஏறினாலே போதும்!
காது ஏற்கவில்லை உண்மை; ஆனால்
கையிரண்டும் நீண்ட காட்சி நான் கண்டேன்!

அப்பாவி:- ஏயப்பா அவரிடமா? நெருப்புப் பொறி
பறக்கும்
பார்வை யொன்று பட்டாலே போதும்;
பாயப் பார்க்கும் பணப்புலிகள் பதுங்கிச் சாகும்!
யாரைப் பார்த்துத் தவறு
சொன்னீர்;திருத்திக்கொள்வீர்!

அனுபவசாலி:- மந்திரி குமாரி படத்தில் மணவாளன்
பார்த்திபனை
மலையுச்சி மீதிருந்து பாதாளத்தில் தள்ளி
நீதியை, நியாயத்தை நிலை நாட்டினாளே
நேரிழையாள் அமுதவல்லி,
அந்தப் படப்பிடிப்பு நடந்த பாறையுள்ள
அழகிய ஏற்காட்டு மலைமீது தான்
ஏற்காது அவரின் காது என்று
எவர் காதைச் சொன்னீரோ
அவர் கை நீண்ட கதையும் நடந்ததய்யா!
அங்குள்ள
சுவர் மீது அழியாத களங்கமாகப் படிந்ததய்யா!

(அப்பாவி, மயங்கிச் சாய்கிறார். அனுபவசாலி,
அப்பாவியின் முகத்தில் தண்ணீர் தெளித்துத் தட்டி
எழுப்புகிறார்.)

அன்புள்ள,

மு. க.

16-12-2001

2644. வலிமை சேர்ப்போம் வாரீர்!

உடன்பிறப்பே,

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் எல்லைத் தகராறு மூண்டு, அது போராக வெடித்த போதும் சரி, நமது எல்லைக்கோடு தாண்டி சீனா ஆக்ரமித்துக்கொண்ட போதும் சரி, பண்டித நேரு அவர்கள்தான் இந்தியப் பிரதமராக இருந்தார். அவருக்கும் அவர் தலைமையில் இருந்த காங்கிரஸ் கட்சிக்கும் தி.மு.க. வுடன் நல்லுறவு இல்லை. சொல்லப்போனால் அண்ணா அவர்களும், அனைத்துக் கழக முன்னணியினரும் ஆயிரக்கணக்கான கழகச் செயல்வீரர்களும் காங்கிரஸ் அரசை எதிர்த்து நடத்திய அறப்போரில் சிறையில் வாடிய நேரம் அது.

அந்தக் கோபத்தை மனத்தில் வைத்து இந்தியா சீனா போராட்டத்தில் இந்தியப் பிரதமர் நேரு அவர்களையோ, மாநிலக் காங்கிரஸ் ஆட்சியாளர்களையோ குற்றம் சாட்டிட அப்போது தி.மு.க. முன்வரவில்லை! காரணம், இந்தியா மீது பகை கொள்வோர் யாராயினும் அவர்களை எதிர்த்து வெற்றிபெற நாம் அரசியல் மாச்சரியங்களை ஒதுக்கி வைத்துவிட்டு ஒன்றுபட வேண்டும் என்று தி.மு.க. கருதியது. கருதியவாறே காரியமாற்றியது. அந்நியப் பகை எந்த வடிவில் வந்தாலும் அது, படை கொண்டு வந்தாலும் - அல்லது பயங்கரவாதம் என்ற நிலையில் இந்தியாவில் படரத் தொடங்கினாலும் இதுதான் நமது அரசியல் ஆதாயத்துக்கு நேரம் என்று திட்டமிட்டுச் செயல்படுவதைவிட நாட்டுக்குத் தீமை வேறொன்றுமில்லையென்றே தி.மு.க. எண்ணியது. இப்போதும் அவ்வாறே எண்ணுகிறது.

13-ந்தேதி டெல்லியில் நாடாளுமன்றக் கட்டிடத்திற்குள் நுழைந்து, நினைத்துப் பார்க்கவே முடியாத நாசங்களைச் செய்திட முனைந்த பயங்கரவாதிகளை, வளாகத்திற்குள்ளேயே தடுத்து நிறுத்தி அவர்களில் ஐவரைச் சுட்டு வீழ்த்தி, மேலும் பலரை சிறைப்படுத்தியுள்ள நிலையில் கூட அரசியல் காரணமாகமத்திய அரசைக் குற்றம் சாட்டுவது ஏற்கத் தக்கதாக இல்லை.

மத்திய அரசில் தி.மு.க. அங்கம் வகிக்கிறது என்பதற்காக வக்காலத்து வாங்கிப் பேசவில்லை.

ஒருவேளை இந்த அரசில் அங்கமே வகிக்காமல் எதிர் வரிசையில் இருந்திருந்தால் கூட இந்தச் சமயத்தைப் பயன்படுத்திக்கொண்டு அரசியல் செய்திட தி.மு.க. விரும்பாது.

பயங்கரவாதிகளுக்கு பதிலடி கொடுத்து வீழ்த்திய அரசின் செயலையும், அதற்காகத் தங்கள் உயிர் கொடுத்த பாதுகாப்பு வீரர்கள் தியாகத்தையும் தி.மு.க. பாராட்டத் தவறாது.

அதனை நிரூபிக்கும் சான்றாகத்தான் பண்டித நேரு காலத்தில் பக்கத்து நாடுகளுடன் ஏற்பட்ட மோதுதல்களின்போது, இதுதான் தக்க சமயமென்று, மத்திய காங்கிரஸ் ஆட்சியை விமர்சித்துக் கொண்டிராமல் நாடு ஒன்றுபட்டு ஒரே குரலில் முழங்க வேண்டுமென்ற நிலையைக் கழகம் எடுத்தது. வீடு இருந்தால்தான் ஓடு மாற்றிக் கொள்ள முடியும், நாடு இருந்தால்தான் ஜனநாயக ரீதியில் நமது அரசியல் விவாதங்களை நடத்திட முடியும் என அன்று அண்ணா சொன்னதை நினைவில் நிறுத்த வேண்டும்.

இப்போதும் 13-12-2001 அன்று மட்டும் பாதுகாப்பு ஏற்பாடுகளில் சிறிது பின்னடைவு ஏற்பட்டிருந்தால்கூட இந்திய ஜனநாயகத்தின் மீது ஏவப்பட்ட பயங்கரத் தாக்குதலில் பாராளுமன்றக் கட்டிடமும், பிரதமர் உள்ளிட்ட அமைச்சர்களும், நூற்றுக்கணக்கான நாடாளுமன்ற உறுப்பினர்களும், எதிர்க்கட்சிகளின் பெருமை மிக்க தலைவர்களும் இன்று நம்மிடையே இருந்திருக்க முடியாதே என எண்ணும்போது நெஞ்சம் பதறுகிறதல்லவா!

எனவே எல்லோரும் ஒன்றுபட்டு நின்று பயங்கர வாதத்தை வீழ்த்துகின்ற அறப்போரில் இந்தியாவுக்கு மேலும் வலிமை சேர்ப்போம் வாரீர்! எனக் கேட்டுக் கொள்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

17-12-2001

2645. தமிழர் அணி தயாராகட்டும் !

உடன்பிறப்பே,

உலகத் தமிழ் இரண்டாவது மாநாடு பேரறிஞர் அண்ணா முதலமைச்சராக இருந்த போது 1968ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் நடைபெற்றபோது சென்னைக் கடற்கரையில் தமிழ்ச் சான்றோர் ஆன்றோர் சிலைகள் அமைக்கப் பெற்று அந்த மாநாட்டின் பொலிவை மேலும் பல மடங்கு உயர்த்திய உண்மையை உணராதார் எவருமிலர்.

அப்போது வைக்கப்பட்ட சிலைகளில் ஒன்றுதான்,

“இவளோ கொங்கச் செல்வி குடமலையாட்டி
தென்றமிழ்ப் பாவை செய்த தவக்கொழுந்து
ஒரு மாமணியா யுலகிற் கோங்கிய திரு மா மணி”

என இளங்கோவடிகளால் சிறப்பிக்கப்பட்ட கண்ணகியின் சிலையாகும்.

அந்தச் சிலை எவ்வாறு அமைய வேண்டுமென அண்ணா அவர்களும், நானும், நாவலரும், சிலம்புச் செல்வர் ம.பொ.சி.யும் கலந்து பேசி;

கண்ணகி, நீதி கேட்பதற்காகப் பாண்டிய மன்னன் அவைக்குள் நுழைந்த போது, “காவியுகு நீரும் கையிற் தனிச் சிலம்பும் ஆவி குடி போன அவ்வடிவும் கொண்டு வந்தாள்” என்று இளங்கோவடிகள் சித்தரித்துள்ளவாறே சிலை அமைய வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டு; அவ்வாறே சிலை தயாரிக்கப்பட்ட சிற்பக்கூடத்திற்கு அண்ணாவும், நாவலரும், பேராசிரியரும், நானும் எத்தனையோ முறை சென்று பார்வையிட்டு; திருத்தங்கள் கூறி; அப்படி வைக்கப்பட்டது அந்தச் சிலை.

சிலை அமைக்கப்பட்டு 33 ஆண்டுகள் கழிந்த பிறகு இப்போது யாரோ நிமித்திகர்கள் கூறியுள்ள சோதிடம் அல்லது

வாஸ்து சாத்திரப்படி; அச் சிலையை அகற்றியுள்ள நிகழ்ச்சி நடைபெற்றுள்ளதாக அறியும்போது அதிர்ச்சியால் நெஞ்சம் பதைக்கிறது.

நிமித்திகரின் சோதிடத்தைப் பொய்யாக்குகிறேன் என்று கூறி; அரண்மனை வாழ்வைத் துறந்தார் இளங்கோவடிகள்.

அந்த இளங்கோவடிகள் காவியநாயகியாகக் கண்ணகியைக் கொண்டு தமிழர்களுக்கு அளித்த இலக்கியக் கருவூலம்தான் சிலப்பதிகாரம்.

மதுரையம்பதிக்கு நீதி கேட்க வந்த போதுகூட அந்த ஈகைவான் கொடியன்னாள் மழை நிகர் கொடை வள்ளல் மாநாய்கன் திருச்செல்வி என்று தன்னைப் பற்றிச் சொல்லிக் கொள்ளாமல்; அந்தப் போதிலார் திருவினாள்;

“புறாவுக்கு உடல் தந்து புகழ் பெற்ற மன்னவரின் வரலாற்றை - தேர்க்காலில் மகனையிட்டு நியாயம் காத்த மனுநீதிச் சோழனது பெருங்கதையை - நீதியின் இலக்கணமாகப் பெற்றுப் பெருமை கொண்ட திருமாவளவன் கரிகால் சோழனது பூம்புகாரே எனது ஊர்; பெருவணிகன் மாசாத்துவானின் மருமகள்” என்று தமிழச்சிக்கே யுரிய பண்பாடு மாறாமல் பாண்டிய மன்னனிடம் அறிமுகப்படுத்திக் கொண்டாள் என்று சிறப்பிக்கின்ற அந்தச் சிலப்பதிகாரத்தையே இழிவுபடுத்தும் முறையில் சோதிடப் பொய்மைக்கு இடமளித்து கண்ணகி சிலையை; ஏதோ ஒரு பொய்க் காரணம் காட்டி, அகற்றி அந்தச் சிலையிருந்த இடத்தில் புதிய சாலையொன்றையும் அமைத்திருப்பது தமிழ்நாட்டு வரலாற்றில் தாங்க முடியாத அவமானகரமான நிகழ்ச்சியாகும்.

இந்நிகழ்ச்சி குறித்து நெஞ்சம் பதறித் தங்கள் கண்டனத்தை தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் இளங்கோவன், பா.ம.க. நிறுவனர் டாக்டர் இராமதாஸ், மறுமலர்ச்சி தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, பழ. நெடுமாறன், சுப்ரீம் ஸ்டார் சரத்குமார் ஆகியோர் தெரிவித்துள்ளார்கள்.

இந்த வரிசையில் தமிழர் தன்மானம் பேணுகின்ற மற்ற இயக்கங்களின் தலைவர்களும்; குறிப்பாகத் தமிழ்ச் சான்றோர்களும், புலவர் பெருமக்களும், கவிஞர்களும் இடம் பெறுவார்கள் என்று நம்புகிறேன்.

மீண்டும் கண்ணகி சிலை; முன்பு அமைக்கப்பட்டிருந்த இடத்திலேயே அமைக்கப்பட வேண்டும்.

இந்த வேண்டுகோள் மறுக்கப்படுமேயானால்;

போராட்டத்தைத் தவிர வேறு வழி என்ன இருக்கிறது?

“எங்குற்றான் என் தமிழன்?
இங்குற்ற இழிவுதனை எதிர்ப்பதற்குத் துணிவின்றிச்
செங்குத்துத் தூணைப் போல் நிற்கின்றானா?
அங்கத்தில் துடிப்பின்றிக் கிடக்கின்றானா?
அய்யோ பாவம்; அவனுக்குச்
சங்கத்தில் பாட்டெழுதி அரங்கேற்றுங்கள்!
தங்கத்தில் சிலையொன்று அமைத்திடுங்கள்!”

என்ற கேள்வி எழும் நிலைமைக்கும், கேலி புரியும் நிலைமைக்கும் ஆளாகாமல் அறப்போர் புரியத் தமிழர் அணி தயாராகட்டும்!

அன்புள்ள,

மு.க.

19-12-2001

2646. இன்றைய நிலையில்; அன்றைய நினைவு!

உடன்பிறப்பே,

தஞ்சைத் தரணியில் பூம்புகார் புதிய பூம்புகாராக உருவாக்கப் பெற்று 1975ஆம் ஆண்டு ஏப்ரல் 25ஆம் நாள் இரண்டாவது ஆண்டு விழா நடைபெற்றபோது தலைவர் கலைஞர் அவர்களின் தலைமையில் சிலப்பதிகார விருந்து என்ற தலைப்பில் கவிக்கோ அப்துல் ரகுமான், கவிப்பேரரசு வைரமுத்து, கவிஞர் தமிழன்பன், கவிப்புயல் பொன்னிவளவன், கவிஞர்கள் தி.கு. நடராசன், கண்ணப்பன், இளந்தேவன், சண்முகம் ஆகியோர் எட்டுத் தலைப்புகளில் கவிதை பாடியபோது, கலைஞர் அவர்கள் பாடிய தலைமைக் கவிதையை கண்ணகி சிலையை அகற்றியதால் கலாச்சாரப் போராட்டம் தொடங்கப்பட்டுள்ள இந்த நேரத்தில் பொருத்தமாக இருக்குமென்று கருதி வெளியிடுகிறோம். (ஆ.ர்)

அருந்தமிழே! அமுதே!
நறுமலர் மணமே! தேனே!
அன்னையாய் வந்தென்னை ஆட்கொண்டவளே!
அண்ணனாய் வந்தென்னை ஆளாக்கியவளே!
காஞ்சி அண்ணன் கால்மலர் தொழுது,
கவியரங்கம் தொடங்குகின்றேன்.
வாழ்த்திடம்மா
தமிழர்கள் வாழ
தமிழ் நிலம் வாழ
குடகுமலை உச்சியிலே கோலங்காட்டி,
அழகுமகள் காவிரியும் ஆடவந்தாள்.
ஆடவந்த ஆரணங்கை அடைவதற்கு
ஓடிவந்த கர்நாடகத்தான் அணை என்றான் – அவன்
கையணையைத் தாண்டிக் கல்லணைக்குள் நுழைந்து –

தன்

கற்புநெறி காப்பதற்குத் தஞ்சைக்கு தாவிவந்தாள்
பூம்பாவை காவிரியின் புகார் கேட்டுச் சோழமன்னன்,
பூம்புகாரின் கடல் அலையைக் கணவனாய் ஆக்கிக்
காத்தான்.

பிறந்த வீட்டை மறந்திடாமல் - என்றும்
புகுந்த வீட்டு வளம் பெருக வாழ்வதுதான்
பெண்மணிக்குப் பெருமையென்றால் - நம்
கண்மணியாம் காவிரிக்கும் அது பொருத்தம்தானே?
இவ்வாறு,
காவிரி புகுந்த பட்டினம்தான்
காவிரி புகும் பட்டினமாய்த் திரிந்து நின்று
காவிரிப்பூம்பட்டினமாய் மாறிற்றென்பேன்.
கரிகாலன் பெருவளத்தான் திருமாவளவன்
கனிவுமிகு நட்புக்கு அவன் உறையும் வாளும்;
கயமைமிகு பகைமைக்கோ உறை விட்டெழுந்த
வாளாம்!

உறையூரைத் தலைநகராய்க் கொண்டு - பின்னும்
ஒரு ஊரை மணந்து கொண்டான் தலைநகராய் - அந்த
இரு தார மணத்தானுக்கு வாய்த்த இளையவளே
இனியவளாய் இங்குநமை வரவேற்கும் பூம்புகாராம்.
நீரின் வந்த நிமிர் பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி முடையும் என
பட்டினப்பாலை முழங்குகின்ற துறைமுகப்
பட்டினமாய் விளங்கிற்றந்நாள்!
மருவூர்ப் பாக்கமுண்டு ஆங்கு மறங்கெழுவீரருண்டு
மருவு பெண்ணாசையால் மயங்குகிற
மாநகர நம்பியர்கள் நடமாடும் பகுதியுண்டு
நாளங்காடி உண்டு - அங்கு பிற
நாட்டார்கள் நாள்தோறும் வருதல் உண்டு.
அரச வீதி ஆடும் கொடித் தேர் வீதி
வணிகர் வீதி வாய்மை நிறை வேளாளர் வாழும் வீதி
மருத்துவர், சோதிடர், மாகதர், கூத்தர்

மண்டிக்கிடக்கும் யானை குதிரை சூழும் வீதி
சித்திரப் பாக்கமெனச் செப்பும் சீர்மலி
பட்டினப் பாக்கமாய்த் திகழ்ந்ததந்நாள்
வடநாட்டுப் படையெடுப்பில் சோழன் பெற்ற
புகழ்நாட்டும் பட்டிமன்றம், முத்துப்பந்தர்,
தோரணவாயில், தொல்புவியில் தமிழன் வெற்றி
நிலைநாட்டும் நெடுங்கல் மன்றம், இலஞ்சி மன்றம்,
கலைநாட்டம் கொண்டோரைக் கவர்ந்திழுக்கும் பாவை
மன்றம்

முருகன் கோட்டம், அதனருகே திருமால் கோட்டம்,
அருகன் கோட்டம், அதனருகே புத்தர் கோட்டம்,
முத்தமிழ் ஒலிக்கும் கோட்டம் நாள்தோறும்
சித்திரைத் திருநாள் கூட்டம்!
இதையெல்லாம் சித்தரிக்கும்
இளங்கோவின் குணவாயிற் கோட்டம்;
எல்லாமே அழிந்ததம்மா கடலாலும் காலத்தாலும்
என்றாலும்
சேரன் தந்த சிலம்புச் செல்வம் அழியாத கருவூலம்
அணையாத திருவிளக்கு!
அந்த,
விளக்கொளியில் விழிப்புற்று
மறக்கிவாண்ணா மொழிப்பற்றால்
விளைந்ததுதான் புதிய புகார் – வெறும்
வீணர்கள் தினம் எழுப்புகின்ற புகாரல்ல!
வெங்குருதி தனிற் கமழ்ந்து வீரஞ்செய்கின்ற தமிழ்
மூச்சால்

பொங்கிப் படைத்த புதிய புகார் – பூம்புகார்.
மனை விளக்குக் கண்ணகிக்கும் மாதரசு மாதவிக்கும்
பனைவர மார்பன் கரிகாற் சோழனுக்கும்
பாவரசு இளங்கோவின் பண்பார்த்த சிலம்புக்கும்
எழிலார்ந்த புத்துருவம் கொடுக்கச் செய்ய
எனைப் பெற்ற தமிழுக்கும் என் தாய் தந்தை

இருவர்க்கும் எவ்வாறு நன்றி சொல்வேன்? நமக்குச்
சிறப்பதிகாரம் பலவற்றை உரிமையாக்கத் - தன்னாட்சி
கோரி இறப்புவரினும்
அதனை உவந்தேற்போம் என்றும் - பதவி
துறப்புவரினும் பொருட்படுத்தோம் என்றும் - இந்தச்
சிலப்பதிகாரமன்றோ உணர்வூட்டல் கண்டோம்!
வஞ்சகர் வந்தவர் தமிழால் செழித்தார்
வாழ்வினில் உயர்ந்தார், நம் வரலாற்றை அழித்தார்!
இன்று
கொஞ்சுகின்ற சிலம்பன்றோ நம் சரித்திரத்தைக்
கொஞ்சமேனும் காட்டுகின்ற கோபுரத்துத் தீபம்.
சிலப்பதிகாரம் என்னும் பெயரால்
நாட்டுதும் யாம் ஓர் பாட்டுடைச் செய்யுளென
முடிகெழுவேந்தர் மூவர்க்கும் உரியதை
அடிகள் நீரே அருளுக என்றிட
எழுந்த காப்பியம் எழுச்சிக் காப்பியம் - அந்த
இலக்கியத்தில் விருந்தொன்றை அளிப்பதற்கு
இணையற்ற கவிஞர் எண்மர் இங்குள்ளார்.
"நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று
அப்பால் எட்டே மெய்ப்பாடென்ப
இலக்கணக் கிழவர் இயம்பிய வழியில்
எட்டுச் சுவையை இங்கே படைப்பர்
நகை, அழுகை, இழிவு, வியப்பு,
அச்சம், வீரம், வெகுளி, உவகை எனப்
பகை நோக்கமின்றிப் பாடுகின்ற போட்டி.
அழுகையினால் நகை கேட்டு அடையக் கூடும்
அச்சத்தால் அடங்குகிற அத்தானை மணந்து விட்டால்...!
இழிவு வந்தும் வெகுளாதார் நிலை கண்டு
வீரர்க்கு நெஞ்சில் வியப்புத் தோன்றும்!
உவகையும் அழுகையும் ஒரு தாய் மக்கள்
ஒருவரை ஒருவர் நிழல்போல் தொடர்வர்!"

இந்த எட்டுச்சுவை
பிட்டுத் தமிழ்
கட்டித் தயிர்
வட்டில் நிறை
கொட்டித் தர
பட்டுக் கொடி
கொற்றக் குடை
முத்துச் சர
சோழனூர் வருவீரே!
சுவை விளக்கம் தருவீரே!
என அழைத்தோம்; எண்மர் இதோ வந்துள்ளார்!
எட்டெழுத்துச் "சிலப்பதிகாரம் இயற்றியவர் – சுவை
எட்டெடுத்துச் சேர்க்காமல் விடுவாரோ?"
"எண்ணும் எழுத்தும் இயல் ஐந்தும் பண் நான்கும்
பண்ணின்ற கூத்துப் பதினொன்றும் – மண்ணின் மேற்
போக்கிய பூம்புகார்ப் பொற்றொடி மாதவி தன்னோடு
அணைவுறு வைகலின் அயர்ந்து மயங்கி
விடுதலரிய விருப்பின னாகிய கோவலன்
கெடுதலறியாக் கண்ணகியுடன் பகிர்ந்த இன்பம்
கணக்கிலதே!"
தும்பை மலர்க் கண்ணகியும் கோவலனும்
"தூமப் பணிகளொன்றித் தோய்ந்தாலென வொருவார்"
காமர் மனைவியெனக் கை கலந்து – நாமந்
தொலையாத இன்பமெலாம் துன்னினார்.... மண்மேல்
நிலையாமை கண்டவர் போல் நின்று
உவகையில் மட்டுமல்ல;
அழுகையிலும், ஆளன் தாள் பற்றித்
தொழுகையிலும் மாதவி, கண்ணகி பாத்திரங்கள்
போட்டி போடும்.
"காவா நாவிற் கனகனும் விசயனும்
விருந்தின் மன்னர் தம்முடன் கூடி
அருந்தமிழாற்றல் அறிந்திலராகிச்

செப்பிய மொழிகளைச் சேரன் கேட்டுக்
கொட்டுக முரசெனக் கூறிய சொல்லும்
கொடியவர் முடித்தலை ஏறிய கல்லும்
வீரச்சுவை விளக்குகிற காட்சி - தமிழன்
வெற்றிக் கொடி பறக்கவிட்ட மாட்சி!
தித்திக்கும் தேன்பாகைத் தெவிட்டாத தெள்ளமுதக்
கோவலனை
எத்திக்கும் புகழ் பாண்டியனோ திருடன்எனக்
கொன்றுவிட,
தீச்சுழலாய்ப் பெருகிவந்த கண்ணகியோ
தீர்ப்பளித்த மன்னவனைத் தலைகுனிய வைப்பதற்குச்
சிலம்பெடுத்து உடைத்தபோது - தன்
எலும்பெடுத்து உடைத்ததுபோல் வியப்புற்றான் மதுரை
வேந்தன்
உடன் வீழ்ந்திறந்தான்”
‘நீதி வழுவா நெறிமுறைப் பாண்டியன் நான் - அந்த
நெடுஞ்செழிய மன்னவனா நீதி தவறிவிட்டேன்?
என்ற கேள்வியில்தான் எத்துணை வியப்பு?
எத்துணை பதைப்பு?”
வியப்புறுதல், நகைத்தல், அழுதல், வெகுளல்,
வீரம், இழிவு, அச்சம், உவகை என்னும்
எட்டுவகைச் சுவையினிலே எதிலும்
ஒட்டுறவு இல்லாத பிறவிகளும் உலகிலுண்டு!
இடி முழக்கம் கேட்பது போல் அரங்கில்
வெடிச் சிரிப்பு நகைச் சுவையைக் கலைவாணர்
படித்தவர்க்கும் பாமரர்க்கும் வழங்கும்போது
இடித்து வைத்த புளிபோல் சிலபேர்
இளித்திடவும் விரும்பாமல் இருப்பதுண்டு!
அடுக்கடுக்காய்ச் சிறைவாசம்
அடக்குமுறை வனவாசம் என்றே
அருமைமிகு கொள்கைக்குத் தியாகம் ஏற்ற
பெருமைமிகு தலைவர்களும் மறைந்து விட்டால்

அழுகை நிறை அகத்தினராய்
ஆயிரம் பதினாயிரம் நூறாயிரமென மக்கள் கூட்டம்
இடுகாட்டுப் பொட்டலிலே ஏங்கி நிற்கும்
இறந்தவர்க்கு இறுதி வணக்கம் செய்வதற்கு; அப்போது
கோமாளிக் கூத்தாடும் ஓர் மனிதர் அங்குவந்தால்
ஏமாளிக் கூட்டமொன்று கூச்சல் போடும்!
கைதட்டு – ஆரவாரம் – களிப்புக்கூத்து – நம்
காதுகளும் கண்களும் தாமாக முடிக்கொள்ளும்!
அழுகைக்கும் உவகைக்கும் இடம் பொருள்
தெரியாதோர்;
கழுதைக்கும் கீழானோர் எனச் சொல்வேன்!
நூற்றிரண்டு மெய்ப்பாடாம் சுவை பிரித்துப் – பழ
நூற்புலவர் தொல்காப்பியர் கருத்து நெய்தார்.
அவற்றில் தலையான எண்சுவையும் கிளையான
பல்சுவையும்
கவிநயத்தில் காட்டுதற்கு இங்கே கவிஞருண்டு
அவிநயத்தில் காட்டுதற்கும் அணங்கு உண்டு.
ஆனாலும் சில பெண்கள் ஆட்டம் கண்டால் – நம்
வாணாளில் பெரும்பாவம் செய்தோர் ஆவோம்!
தீப்போலத் தகிக்கின்ற காமத்துக்கும்
தேள்போலக் கொட்டுகின்ற கோபத்துக்கும்
சினங்கொண்ட நாகமெனச் சீறுகின்ற "பாவத்துக்கும்
செம்மாதுளைக் கன்னங்கள் குவிக்கின்ற நாணத்துக்கும்
சிறிதளவு வேறுபாடும் ஏற்றத்தாழ்வும் இருப்பதில்லை.
அரிதாரப் பூச்சு முகத் தசையிலோர் அசைவுமில்லை.
அங்கங்களின் சேட்டையன்றித் தங்க மகள் சிலை
முகத்தில்
அணுவளவு மாற்றமேனும் அவிநயத்தால்
கண்டதுண்டோ?"
'திமி திமி' என ஆடுகின்றார் – அவை அதிர
'மிதி மிதி' எனச் சேறு மிதிக்கின்றார்
அவரெல்லாம் தொடர்ந்து ஆடிவந்தால் – குட்டிச்

சுவராகும் நடனமேடை! கொலையாகும் - கலை
என்பேன்
இறுதியிலே 'உவகை வைத்து எட்டுவகை
மெய்ப்பாட்டை
அறுதியிட்டு மாலை செய்தார் காப்பியனார் - இன்றோ
உவகையுடன் தொடங்கிடுவோம் கவியரங்கம்
உறுதிமிகு வீரத்தைக் கடையில் கேட்போம்
கடைச் சரக்கா வீரமெனக்
கண்மணியே கேட்காதே- சில
கட்சித் தலைவர்க்கு விலை கேட்கும் பொருளாய்த்தான்
போயிற்று வீரம்!'

போர் என்றால் நான் முந்தி நீ முந்தி
எனும் கூட்டம் நம் கூட்டம்-அக்கப்
போர் பேர்வழிகள் கூட்டமல்ல! வைக்கம்
போர் வீரர் வழி வந்தவர் நாம்! வைக்கோல்
போர் இந்தத் தீயுடனே விளையாடலாமா?
எதற்காக நல்லரங்கில் பிறர் நினைவு!
உவகையிலே தொடங்கி நம் கவியரங்கு உலகு புகழ்
வீரமுடன் முடியட்டும்.
கடையில் வீரம் கேட்கலாம் என நானிங்கு கழறியதின்
விளக்கம் புரிகிறதா நன்கு?
இடையழகு மணிமேகலையில் காட்டிச் சிலம்பில்
நடையழகு காட்டுகின்ற தமிழணங்கே! இதோ, கவிஞர்
படை வரிசை கிளம்பிற்றம்மா உனக்குப் பாவரிசை
வைப்பதற்கு!

நடக்கட்டும்
கை வரிசை! நானழைக்கின்றேன் கவிஞர்களை!

அன்புள்ள,
மு. க.
25-12-2001

2647. தனியே அவர்க்கோர் குணம் என்பது இதுதானோ?

உடன்பிறப்பே,

கண்ணகி சிலை பிரச்சினை, தெருவோரத்து சாதாரண மனிதனைத் தொடவில்லையென்று ஆங்கில ஏடு ஒன்று தனது தலையங்கத்திலே குறிப்பிட்டு, ஒன்று மில்லாத பிரச்சினைக்காக நிழல் யுத்தம் நடத்துவதாகக் கேலி புரிந்துள்ளது. பாவம்! இந்தப் பத்திரிகை நிறுவனத்தின் ஆங்கிலப் பதிப்பாயினும், தமிழ்ப் பதிப்பாயினும் அதுகளுக்கு எது நியாயம் என்று தெரிந்திருப்பினும் கூட, வேண்டுமென்றே திட்டமிட்டு தி.மு. கழகத்தையும் சேர்த்துத் தாக்குவதிலும் கேலி புரிவதிலும் ஒரு தனி இன்பம்!

மன்னிக்கவும்! இன்பத்துக்காக மட்டுமல்ல - தங்கள் இலட்சியத்திற்காகவும் இப்பணியில் ஈடுபட் டிருக்கின்றன.

கண்ணகி என்ற பெயரும், கண்ணகியின் பெருமையும், இன்று நேற்றல்ல - எத்தனையோ நூற்றாண்டுகளாகச் சாதாரண சாமானிய தெருவோரத்து மனிதர்களைக் கவர்ந்துள்ளவைகளாகும் என்பதை, ஏனோ மறந்து விட்டார் தலையங்கம் தீட்ட எழுதுகோல் எடுத்தவர்.

“கண்ணகியானால் கடுகிப் போ;
மாதவியானால் மடி மேல் வா!
கழுத்தில் விழுந்த மாலை
கழற்ற முடியலியே

என்று தெருக்கூத்துகளில் கண்ணகியைக் கர்ணகி என்றும், மாநாய்கன், மாசாத்துவான் ஆகியோரை மாணாக்கன்செட்டி, மாச்சோட்டான்செட்டி என்றும் பாடி மகிழ்ந்து, அழைத்து மகிழ்ந்து விடிய விடிய நடத்தப்பட்ட சம்பூர்ண கோவலன் கதையை பார்த்துக் களித்த பாமர மக்கள் இன்னமும் கிராமப் புறங்களில் இருக்கிறார்கள்.

எனவே கண்ணகி என்ற பெயரோ, அவள் கட்டிக் காத்த கற்பு நெறியோ, அவள் நீதி கேட்டு நெடுஞ்செழிய பாண்டியனின் அவைக்களத்தில் போராடியதோ, தெருவோரத்து சாதாரண மனிதனின் நினைவை விட்டு நெடுந்தொலைவு அகன்று விடவில்லை.

தெருக் கூத்துகளில், புராணக் கதை போல நடத்தப்பட்டு, சாதாரண மக்களின் இதயம் கவர்ந்த கண்ணகியின் கதைதான்; இலக்கிய மேதைகள், தமிழ் அறிஞர்களின் பெரு முயற்சியினால் நடுத்தர மக்கள், படித்த இளைஞர்கள், படிக்கும் மாணவர்கள் மத்தியிலும் ஒரு காவியப் பேழையாகப் போற்றப்படும் நிலை பெற்றது.

அடியேன்! என் பங்கிற்காக நான் ஆற்றிய தொண்டு தான் நான் எழுதிய சிலப்பதிகாரம் எனும் நாடகக் காப்பியமும், பூம்புகார் திரை ஓவியமுமாகும்.

அந்த நாடகக் காப்பியத்தின் ஆங்கில மொழி பெயர்ப்பு நூலுக்கு அறிஞர் அண்ணா எழுதிய அணிந்துரையில்;

புகழ்மிகு புலவராம் இளங்கோவடிகள் நம்மையும் - கண்ணகி, கோவலனையும் - மகிழ்ச்சி திரும்பிய புதுவாழ்விற்கு இட்டுச் செல்லவில்லை. ரத்தக் கண்ணீர் வடிக்கும் காட்சிக்கு நம்மை அழைத்துச் செல்கிறார். கோவலன் தலை கொய்யப்பட்ட போது - கடுங்கோபம் கொண்டெழுந்த கண்ணகியைச் சித்தரித்த கருணாநிதி, உணர்ச்சி இமயத்திற்கு மேலும் மேலும் எழுகிறார்.

எந்தப் பெண்தான் தன் கணவனின் சாவைத் தாங்கிட முடியும்? எந்தப் பெண் தான் தன் கொழுநனுக்கு இழைத்திட்ட கொடுமையை - இழிவைத் தாங்கிட முடியும்?

இதோ - கோவலன் தலையிழந்து - தவறாகக் குற்றம் சாட்டப்பட்டு - அவசரத்தில் நீதி வழங்கப்பட்டு - கல்லாக் களிமகன் ஒருவனால் கொல்லப்பட்டுக் கிடக்கிறான்.

ஆனால், ஆதரவற்ற ஒரு பெண்ணான கண்ணகியால் என்ன செய்ய முடியும்? இச்செயலுக்கு அரசர் குடிப் பிறந்த மன்னனே பொறுப்பு!

செயல் தவறானது! ஆனால் செய்தவன் சாதாரண மனிதனல்ல! கடும் வலியும் - கற்றறிந்த நெஞ்சுங் கொண்ட பாண்டியன் உத்தரவிட்டு நிகழ்ந்த செயல் இது!

ஏன்? எப்படி?

இக்கேள்விகள் கண்ணகி முன் எழுந்தன. அவளது கோபக் கனல் அனைவரையும் உலுக்கி விடுகிறது! அவள், இழந்ததை நினைத்து வருந்திட - வாளாயிருக்க மறுத்தாள்!

கோவலன் மீது பழிப் பெயர் ஏறிட அனுமதிக்க மறுத்தாள்! இல்லை! இல்லை! இந்நிலத்தில் நீதி நிலைத்திட வேண்டும்! நீதி - அதை நான் பெற்றே தீருவேன்! - இடி முழக்கமென முழங்கினாள். கொலு மண்டபம் நோக்கி நடை போட்டாள், நீதி கேட்டுப் பெற!

தனது வாதங்களை முன் வைத்தாள் கண்ணகி! அவளது எழுச்சி மிகு பேச்சையும், எச்சரிக்கையையும் கருணாநிதி எடுத்துரைக்கும்போது மயிர்க்கூச்செறிகிறது.

கண்ணகியோடு நாமும் சேர்ந்து அவள் காட்டும் சினத்திலும், பழிப்பிலும், குற்றம் சாட்டுதலிலும், எழுச்சியிலும் பங்கு கொண்டு பாராளும் மன்னன் முன் வாதாட வேண்டும் என்ற உணர்வை - உள்ளத்து எழுச்சியை அந்தக் காட்சி உருவாக்கி விடுகிறது.

வெடிக்கிறது எரிமலை - கொந்தளிக்கிறது கடல் - கூந்தல் மலர் இழந்த கைம் பெண் நீதி தேவதையாக மாறுகிறாள்.

மன்னனா! நீ! ஏ! பாண்டியனே! மன்னனும் நீயல்ல! வளநாடும் உன்னுடையதல்ல!

- என்று முழங்குகிறாள். பத்தினித் தெய்வம். அனைத்தும் அடங்கி ஆத்திரம் வெளிப்படுகிறது!

இத்தகு காட்சியை உணர்ச்சி உருவோடு அமைப்பது ஒரு எழுத்தாளனுக்கு எளிதான காரியமல்ல! ஆனால், கருணாநிதி யாரையும் விஞ்சுகின்ற அளவில் வெற்றி

கொண்டுள்ளார்! தான் ஒரு ஒப்புவமையற்ற நடையழகு காட்டும் எழுத்தாளர் என்பதால்!

உடன்பிறப்பே, நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் என்று பாரதி பாடிய இந்தக் காவியத்துடன் என் நெஞ்சம் எவ்வளவு ஒன்றிப் போய்க் கிடக்கிறது என்பதை நான் எழுதத் தேவையில்லை. அண்ணாவின் அணிந்துரையே எடுத்துக் காட்டுகிறது.

அந்தக் காவியத்தின் நாயகி கற்பரசி கண்ணகியின் சிலை அகற்றப்பட்டதைக் கண்டிக்க மனமில்லாதவர்கள், அந்தச் சிலையை அதே இடத்தில் அமைத்திட வேண்டுமெனக் குரல் கொடுப்போரைக் குறைத்து மதிப்பிட்டுக் குதர்க்கம் செய்வதுதான்,

"தமிழன் என்றோர் இனமுண்டு
தனியே அவர்க்கோர் குணமுண்டு"

என்றாரே, நாமக்கல் கவிஞர்! அந்த தனி குணம் இதுதானோ?

அன்புள்ள,

மு.க.

26-12-2001

2648. காளி சோதிடரும்; காழி சோதிடர்களும்!

உடன்பிறப்பே,

1940ஆம் ஆண்டு வாக்கில் என் 16வது வயதில், திருவாரூர் உயர்நிலைப்பள்ளியில் படித்துக் கொண்டிருந்தேன். முரசொலி சொர்ணம் இருக்கிறாரே, அவர் எனக்கு உறவு! அவரது தந்தை எனக்கு அண்ணன் முறையாவார்! அவர் பெயர் கிருஷ்ணன்! அவர்கள் வீட்டில் தங்கித்தான் நான் சுமார் ஓராண்டுக்கு மேலாகப் படித்துக் கொண்டிருந்தேன். அவர் பழுத்த வைதீகர்! மாலை ஆறு மணிக்கு துர்க்கை அம்மன் கோவிலுக்குப் போனால் இரவு 10 மணிக்குத்தான் வீடு திரும்புவார். அவ்வளவு பக்தி வழிபாடு!

பெரியாரைப் பற்றியோ, சுயமரியாதைக் கொள்கைகள் பற்றியோ நான் பேசினால் அவற்றைக் கடுகளவுகூட ஏற்றுக் கொள்ள மாட்டார். அ°தன்னியில் ரேகை சாஸ்திரம், சோதிடம், இவற்றில் அபார நம்பிக்கையுடையவர்.

ஒருநாள் அவர் என்னைப் பார்த்து, நாளைக் காலையில் பிரசித்தி பெற்ற ஒரு சோதிடர் நம் வீட்டுக்கு வருகிறார். அவர் கடந்த காலம், நிகழ்காலம், எதிர் காலம் பற்றிப் பிரமாதமாக சோதிடம் சொல்லக் கூடியவர். காளியின் அருள் பெற்றவர். நீ ஸ்கூலுக்குப் போய் விடாதே! உன்னைப் பற்றியும் அவரிடம் சோதிடம் கேட்கலாம் என்றார்.

நான் சிரித்துக் கொண்டே சொன்னேன். கடந்த காலத்தைப் பற்றியும், நிகழ் காலத்தைப் பற்றியும் சொல்ல, காளி அருள் பெற்ற சோதிடர் தேவையில்லையே! அதை நானே சொல்லி விடுவேனே என்று!

முட்டாள்தனமாகப் பேசாதே! முக்காலம் உணர்ந்தவர் அவர்! நாளைக்குப் பார் அவர் சக்தியை!

- என்று கிருஷ்ண அண்ணன் என்னைக் கடிந்து கொள்ளவே நானும் அமைதியாக இருந்து விட்டேன்.

அவர் சொன்னபடியே, மறுநாள் காலையில் சுமார் ஐம்பது வயதுக்கு மேல் மதிக்கத்தக்க கொழு கொழு என உடல்வாகு கொண்ட சோதிடரும், அவருடன் நாற்பது வயதுக்கும் குறைவாக மதிக்கக்கூடிய வயதுடைய அவரது மனைவியும் அந்த வீட்டுக்கு வந்தார்கள். அவர்களை வரவேற்று உபசரித்து வீட்டுத் தாழ்வாரத்தில் சிற்றுண்டி வழங்கப்பட்டது.

நான், வீட்டின் கொல்லைப்புறமுள்ள கிணற்றடிக்கு சென்று; குளிப்பதற்காக வாளியில் தண்ணீர் மொண்டு கொண்டிருந்தேன்.

அப்போது அந்த சோதிடரின் மனைவி கிணற்றடிக்கு வந்தார்! என்னைப் பார்த்து ஏன் தம்பி நீதான் அவருக்கு மூத்த மகனா? என்று கேட்டார்.

உடனே என் பகுத்தறிவு. வேலை செய்யத் தொடங்கி விட்டது: ஆமாம்! நான் மூத்த மகன்தான் என்று முதல் பொய்யைச் சொன்னேன்.

அம்மையாரின் அடுத்த கேள்வி, ஏன் தம்பி? இந்த வீடு சொந்த வீடா? வாடகை வீடா? சொந்த வீடென்று எனக்குத் தெரியுமென்றாலும், சொந்த வீடில்லை! இது வாடகை வீடுதான்! என்றேன்.

“நீ எந்த வகுப்பு படிக்கிறே தம்பி?”

நானா? நான் படிக்கவில்லை. சங்கீதம் கற்றுக் கொள்கிறேன்.

இப்படி அந்த அம்மாவின் பல கேள்விகளுக்கு நான் பொய்யாகவே பதில்களைச் சொன்னேன். இப்போது அவை எல்லாம் சரியாக நினைவு இல்லை. உண்மை சொல்லியிருந்தால் தானே நினைவில் இருக்கும்.

என்னிடம் தவறான தகவல்களைப் பெற்றுக் கொண்டு சோதிடரின் மனைவி, வீட்டுக்குள் நுழைந்து, சோதிடர் அமர்ந்திருந்த தாழ்வாரத்துக்கு எதிர் தாழ்வாரத்தில் அமர்ந்து கொண்டார்.

நானும் சிறிது நேரத்துக்கெல்லாம் வீட்டுக்குள் போய், காளி சோதிடர் எப்படிக் கதை விடுகிறார் என்பதைக் கவனிக்கத்

தொடங்கினேன். சோதிடர், தனக்கு எதிர் தாழ்வாரத்தில் அமர்ந்திருந்த அவரது மனைவியை உற்று நோக்கிக் கொண்டே, சுவடிகளைப் புரட்டியவாறு சோதிடம் சொல்லிக் கொண்டிருந்தார்.

அய்யனே! நீங்க இப்ப வாடகை வீட்டிலே குடி யிருக்கீங்க. கூடிய சீக்கிரம் சுக்கிர திசை ஆரம்பம் உங்களுக்கு - இதே ஊர்லே பெரிய பங்களாவைச் சொந்தமா வாங்குவீங்க!

இதுவே, சொந்த வீடு தானே? என்றார் கிருஷ்ண அண்ணன், முகமாற்றத்துடன்.

சோதிடர் சமாளித்துக் கொண்டு, இருக்கலாம் - இருந்தாலும் இன்னொரு பங்களா வாங்குவீங்கன்னு சோதிடத்திலே சொல்லுது! என்றார்.

"சோதிடர் தொடர்ந்தார்."

உங்க மூத்த பையன் இப்ப சங்கீதம் படிக்கிறான். எதிர்காலத்திலே பெரிய சங்கீத வித்வானாவான்.

அய்யா சோதிடரே! என் பையன்கள் யாரும் சங்கீதமே கற்றுக் கொள்ளவில்லை

"இதோ நிற்கிறானே! இந்தப் பையன் உங்க மூத்த பையன்தானே?"

"அட போங்கய்யா! இவன் எனக்குத் தம்பி முறை வேணும்!"

எனக்கு சிரிப்பு தாங்கவில்லை. நான் சிரிப்பதைக் கிருஷ்ண அண்ணனும் பார்த்து விட்டார். முக்கியமாக சோதிடரும் அவர் மனைவியும் பார்த்து விட்டு; அவர்கள் என்னால் ஏமாற்றப்பட்டு விட்டதைப் புரிந்து கொண்டார்கள்.

அதற்குள் என்னய்யா - உங்கள் சோதிடம்! மண்ணாங்கட்டி! இவன் சொன்னது சரியாத்தான் இருக்கு! சரி! சரி! மூட்டையை கட்டுங்க! என்று கிருஷ்ண அண்ணன் வேகமாக எழுந்து விட்டார்.

சோதிடரும் அவர் மனைவியும் ஆத்திரத்துடன் என்னைப் பார்த்தார்கள். நான் மெல்லப் புன்னகை புரிந்தது கண்டு, மேலும் சீற்றத்துடன் சோதிடர் சொன்னார்;

இதோ இந்தப் பையனுக்கு அற்ப
ஆயுசு! இருபது வயதுக்கு மேல்

இருக்க மாட்டான். அதற்குள் ஒரு பெரிய மரண கண்டம் சம்பவிக்கும்.

சொல்லிவிட்டு சோதிட ஜோடி புறப்பட்டு விட்டது.

என் சொந்த வாழ்வில் நிகழ்ந்த இந்தச் சம்பவத்தை ஏன் நினைவூட்டுகிறேன் என்றால், சோதிடம் என்ற நிலையில் வியாபார ரீதியாகப் பயன்படுத்தப்படும் இந்தக் கலை, ஒரு மேஜிக் வித்தை போல மட்டும் மக்களைக் கவர்ந்திடுவதற்கும் மேலாக ஒரு படி மேலே போய், பொதுப் பிரச்சினைகளிலும் தனது ஏமாற்றுக் கரத்தை நீட்டுவதை ஏற்றுக் கொள்ள முடியாது என்பதற்காகத்தான்!

அப்படித்தான் அறிஞர் அண்ணா அவர்களின் கருத்துப்படி 33 ஆண்டுகளுக்கு முன்பு கடற்கரையில் வைக்கப்பட்ட கண்ணகி சிலையினால் நாட்டுக்கே ஆபத்து - அரசுக்கே ஆபத்து என்று, அன்றொரு நாள் என் வீட்டுக்கு வந்த காளி சோதிடரைப் போல சில 'காழி சோதிடர்கள் இன்று புறப்பட்டிருக்கிறார்கள் புதிய உபதேசம் புரிய!

வாஸ்து என்பது கட்டிடங்கள் அமைக்கும்போது காற்று வீசும் திசை பார்த்து, மண்வாகு பார்த்து கட்டுவதற்காகக் கடைப்பிடிக்கப்பட்டால், அதில் எனக்குக் கருத்து மாறுபாடில்லை.

அதற்குச் சாத்திரரீதியாக வியாக்யானங்கள் செய்வதைத்தான் மறுக்க வேண்டியிருக்கிறது.

கழிப்பறையின் பக்கத்தில் கண்ணகி சிலை இருப்பதா? கலங்குகிறார்கள் காழி சோதிடர்கள்! அதற்காக? அதற்காக? கழிப்பறையை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டுமே தவிர, கண்ணகியையே மாற்றுவது என்பது என்ன வாதம்?

மாணிக்கம், முத்து கொண்ட சிலம்புகளை உடைக்க முயலுவது போல, சிலை இருப்பது நாட்டின் பொருளாதாரத்தையும் வாணிபத்தையும் அழித்து விடுமாம்! அள்ளி விடுகிறார்கள் பொருளாதார மேதைகள்!

காந்தியடிகளின் கையில் தடியிருப்பது போலவும், ஔவையின் கையில் கம்பு இருப்பது போலவும், பாரதியின் கையில் பிரம்பு இருப்பது போலவும், கட்டபொம்மன் கையில் வாள் இருப்பது போலவும் உள்ள சிலைகளினால், கலகம் விளையும் - களங்கள்

அமையும் - எனவே அந்தச் சிலைகளை அகற்றி விடுங்கள் என்று காழிகளை விட்டுச் சொல்லச் செய்ய எவ்வளவு நேரமாகும்? அல்லது எவ்வளவுதான் செலவாகி விடும்?

கோட்டையைச் சுற்றி அகழி இருப்பதால் கஜானா நிரம்புவதில்லை! தமிழக அரசியல் அலைக்கழிக்கப்படுகிறது! என்று ஒரு பிரச்சாரம் -

இதற்கு என்ன செய்யலாம்! கோட்டையையே தூக்கிக் கொண்டு போய் வேறிடத்தில் வைத்து விடச் சொல்கிறார்களா காழிகள்?

காளி சோதிடராவது பரவாயில்லை! வீட்டை ஏமாற்றுகிறார்!

காழிகள் நாட்டையே ஏமாற்ற முனைகிறார்களே! எப்படி ஏற்றுக் கொள்வது?

அன்புள்ள,

மு.க.

27-12-2001

2649. உள்ளம் பதறுகிறது!

உடன்பிறப்பே,

உலகமாந்தர்க்கு அன்பையும், அறவழியையும் போதித்து, அறமும், அன்பும் எங்கே விற்கப்படும் என்று விலாசம் தேடுகிற விஷக்கொடுக்கு மனம் படைத்தவர்களால் சித்ரவதைக்குள்ளாகி சிலுவையில் அறையப்பட்ட சீலராம் இயேசுநாதரின் பெருமை பேசும் கிறிஸ்துமஸ் தினத்தன்று, கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் நடைபெற்ற மிகக் கொடிய வெறியாட்ட நிகழ்ச்சியொன்றை தினகரன் ஏடு செய்தியாக வெளியிட்டுள்ளது.

ஏழு வயதே கொண்ட இளஞ்சிறுமி ஒருத்திக்கு நேர்ந்த துயரம் - கொடூரம் - பரிதாப முடிவு!

செய்தியைப் படித்தவுடன் பாவேந்தர் பாரதிதாசன், எழுதிய அந்தக் கவிதை வரிகள்தான் என் நெஞ்சுக் குள்ளிருந்து விழிகள் வழியாகக் கண்ணீர்த் துளிகளாக எட்டிப் பார்த்தன!

ஏழு வயதே எழிற் கருங்கண் மலர்!
ஒரு தாமரை முகம்! ஒரு சிறு மணியிடை!
சுவைத்தறியாத சுவை தருங் கனிவாய்!
இவற்றையுடைய இளம் பெண் - அவள்தான்,
கூவத் தெரியாக் குயிலின் குஞ்சு,
தாவாச் சிறுமான், மோவா அரும்பு!

பாரதிதாசன் கவிதையால் தீட்டிய அந்த ஓவியம், உயிர் பெற்ற ஷாலினி என்ற தங்கப் பதுமையாக கேரளத்தில் பூந்துறை எனுமிடத்தில் ஆண்ட்ரூஸ் என்பவரின் மகளாகப் பிறந்து, ஏழு வயதில் இரண்டாம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கும்போது தான், அந்தக் கவின் அரும்பைப் பறிக்க மட்டுமல்ல! கசக்கி எறிய ஒரு காமக் கயவனின் மூச்சே புயலாகத் தாக்கியிருக்கிறது.

இதோ, செய்தியைப் படித்துப் பார்! செந்தேள் ஆயிரம் சேர்ந்து நம் இதயத்தில் கொட்டுவது போல் இருக்கிறது!

தினகரனில் வந்தபடி செய்தி விபரம் வருமாறு:-

"கேரள மாநிலம் பூந்துறை என்னுமிடத்தைச் சேர்ந்தவர் ஆண்ட்ரூஸ். இவரது மகள் ஷாலினி (வயது ஏழு) 2-ம் வகுப்பு படித்து வந்தாள். ஆண்ட்ரூசின் மனைவி இறந்து விட்டதால் அவர் மற்றொரு திருமணம் செய்து கொண்டார். ஷாலினியும் அவளது சகோதரனும் பாட்டி வீட்டில் வளர்ந்து வந்தனர். இவர்களது பக்கத்து வீட்டைச் சேர்ந்த செபாஸ்டியன் (வயது 22). இவருக்கு சிறுமி ஷாலினி மீது ஒரு கண் இருந்தது. சிறுமியாக இருந்தாலும் ஷாலினி அழகாக இருப்பாளாம்.

இந்த நிலையில் கிறிஸ்துமஸ் பண்டிகை தினத்தன்று பூந்துறை தேவாலயத்தில் கிறிஸ்துமஸ் கொண்டாடப்பட்டது. தேவாலயத்திற்கு செபாஸ்டியனும் சென்றிருந்தார். குடும்பத்துடன் ஷாலினியும் தேவாலயம் சென்றிருந்தாள். அங்கு ஷாலினியிடம் தேவாலயத்தின் மேல் பகுதியில் உள்ள மணியை காட்டி தருவதாக செபாஸ்டியன் கூறினார்.

சிறுமியும் அவருடன் ஆலயத்தின் மேல் பகுதிக்கு சென்றாள். அப்போது அங்கு வைத்து சிறுமியை செபாஸ்டியன் கற்பழித்தார். சிறுமி தப்பியோட முயன்றாள். ஆனால் அந்தக் காமவெறியனின் இறுகிய பிடியில் இருந்து தப்ப முடியவில்லை. தொடர்ந்து மூச்சு பேச்சின்றிக் கிடந்தாள். அவள் செத்து விட்டதாக செபாஸ்டியன் நினைத்தார். ஆனால் உடலில் சில அசைவுகக் கூறி விடுவாள் என நினைத்த செபாஸ்டியன், ஒரு கயிற்றால் சிறுமியின் கழுத்தை நெரித்து கொலை செய்தார். பின்னர், பிணத்தைத் தேவாலயத்தின் மேல் பகுதியில் மறைத்து வைத்து விட்டு வந்தார்.

வெகுநேரமாகியும் சிறுமியைக் காணாததைத் தொடர்ந்து வீட்டினர் தேடினர். அப்போது சிலர் செபாஸ்டியனுடன் சிறுமியைப் பார்த்ததாகக் கூறினர். தொடர்ந்து பூந்துறை போலீசில் புகார் செய்யப்பட்டது. போலீசார் செபாஸ்டியனிடம் துருவித் துருவி விசாரித்ததில் உண்மைகள் தெரிய வந்தது. போலீசார் அவரைக் கைது செய்தனர்.

உயிரிழந்தவள் - அதற்கு முன்பு வெறியனின் பிடியில் சிக்கி - தேவாலயத்திலேயே தன் திருவிழந்தவள் பெயர் ஷாலினி!

அந்த மகிழம்பூவை மிதித்துத் துவைத்தவனுக்கோ செபாஸ்டியன் என்று பெயர்!

அதனால் மதம், விசுவரூபமெடுக்கவில்லை! மதச் சண்டைக்கு எள்ளின் மூக்களவு கூட இடமில்லாமற் போயிற்று. இருவரும் வெவ்வேறு மதங்களைச் சேர்ந்தோராக இருந்திருப்பின், பிரளயம் ஒன்றே ஏற்பட்டிருக்கும்! எரிமலையே வெடித்துச் சிதறி யிருக்கும்!

ஆம்! நாட்டு நிலையும், அரசியல் நிலையும், சமுதாய நிலையும் அப்படித்தானே இருக்கிறது!

பூந்துறை தேவாலயத்தில் மட்டுமல்ல! வசதியற்ற இடமாயினும், வாய்ப்பு மாத்திரம் கிடைத்து விட்டால், மனச்சாட்சியில்லாதவர்கள், தங்களின் பசி தீர்த்துக் கொள்ள, எந்தப் பாதகம் செய்யவும் தயாராக இருப்பார்கள் என்பதற்கு, பல எடுத்துக்காட்டுகளில் இதுவும் ஒன்று!

கயவன், கைது செய்யப்பட்டான் என்று செய்தி முடிகிறது!

இவர்களுக்கு விமோசனமே கிடையாது என்பார்கள் சான்றோர்கள்!

விடுதலையே கிடையாது என்கிற அளவுக்கு, இவர் போன்றோர் தண்டிக்கப்பட வேண்டுமே என்று செய்தியைப் படிக்கும் நமதுள்ளம் பதறுகிறது!

அன்புள்ள,

மு.க.

29-12-2001

2650. தாசர் புத்தி தலைக்கேறலாகுமா?

உடன்பிறப்பே,

தந்தை பெரியார், சமுதாயத்துக்கு, நாட்டுக்கு, ஏன், ஒவ்வொரு தனி மனிதனின் தன்மான வாழ்வுக்குத் தேவையான எத்தனையோ கருத்துகளைக் கூறி யிருக்கிறார்.

சுயமரியாதைத் திருமணங்களால் தமிழனுடைய மானம் மரியாதை எவ்வாறு காப்பாற்றப்படுகிறது என்று அவர் பல திருமணங்களில் சுட்டிக்காட்டிப் பேசியதைத் தான் எடுத்துக்காட்ட வேண்டுமேயல்லாமல்,

"திருமணம் என்பது குட்டி போடுற வேலைக்காக!"

என்று அவர் திருமண விழாக்களில் கிண்டலாகக் கூறியதை வைத்துக்கொண்டு, திருமணமே கூடாது என்ற முடிவுக்கு அவரது கட்சித் தொண்டர்கள் வந்து விட முடியுமா? அப்படி வந்து விட்டார்களா என்றால், இல்லை என்ற பதில்தான் கிடைக்கும்.

திருமணத்திற்குத் தலைமையேற்க ஒப்புக்கொண்டு, அதற்குரிய போக்குவரத்துக்கான வழிச் செலவும் பெற்றுக்கொண்டு மணவிழாவில் தலைமையேற்றுப் பேசும்போது, கல்யாணம் என்பது ஒரு முட்டாள்தனமான காரியம் என்றுதான் பெரும்பாலும் பெரியார் தன் பேச்சைத் தொடங்குவார். அதற்காகத் திருமண வீட்டார், உடனே திருமணத்தை நிறுத்தி விட வேண்டும் என்பது அவரது எண்ணமா? இல்லை! இல்லவே இல்லை!

சிலப்பதிகாரமும், ராமாயணத்தைப் போல, மகா பாரதத்தைப் போல ஒரு புராண இதிகாசம் என்ற கருத்தில் பெரியார் என்றைக்கோ எழுதியதை இன்றைக்கு சோவும், வீரமணி அவர்களும் ஜோடி சேர்ந்துகொண்டு எடுத்துக்காட்டி, எனவே கண்ணகி சிலையை மீண்டும் வைக்க வேண்டுமென்பதை மறுத்துரைக்கிறார்களே!

வீரமணி அவர்களை சிந்தித்துப் பார்க்குமாறு கேட்டுக்கொள்கிறேன். பெரியார் கண்ணகியைப் பற்றிக் கடுமையாகக் கூறியதை, கை தட்டி வரவேற்றுத் தனது பத்திரிகையில் படம் போட்டு வெளியிட்டுப் பரவசமடைகிற சோ அவர்கள், பெரியார் சீதையைப் பற்றியும், வால்மீகி ராமாயணத்தில் சீதையை இராவணன் எப்படித் தூக்கிச் சென்றான் என்பதைப் பற்றியும், சீதைக்கு, லவனும், குசனும் எப்படிப் பிறந்தார்கள் என்பதைப் பற்றியும் எழுதியிருப்பதையும், சொல்லியிருப்பதையும், தனது துக்ளக் ஏட்டில் வெளியிட்டு மகிழ்வாரா என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டாமா?

தமிழ் மக்களுக்கென்று வரலாறுகள் தொன்மைக் காலத்திலிருந்து எழுதப்பட்டதில்லை. அண்மையில் தி.மு.க. ஆட்சியில்தான் டாக்டர் மு.வ. போன்ற தமிழறிஞர்களைக்கொண்டு தொல் பழங்காலம் தொடங்கி, தொடர்ந்திடும் வரலாற்று ஏடுகளை உருவாக்குகிற முயற்சி மேற்கொள்ளப்பட்டது என்பதை நாடு நன்கறியும்.

இந்த நிலையில் நமது சங்க கால இலக்கியங்களும், சிலப்பதிகாரம் போன்ற காவியங்களும்தான் தமிழக வரலாற்றுக் குறிப்புகளை, ஏதோ ஒரு அளவுக்காவது வழங்கிக்கொண்டிருக்கின்றன.

திருக்குறளிலே கூட சில பகுதிகள் குறித்து கருத்து வேறுபாடுடைய பெரியார் அவர்கள், அவரே முன்னின்று குறள் மாநாடு நடத்தியதை மறந்து விட முடியாது.

இஸ்லாம் மதம், கிறிஸ்துவ மதம் போன்ற மதங்களைக்கூட பெரியார் அவர்கள் கடுமையாக விமர்சித்தது உண்டு. ஆனால் அதே நேரத்தில், அந்த மதங்களில் மனித நேயம் போற்றப்படுவதையும், சாதி வேறுபாடுகளால் சமத்துவநிலை பாதிக்கப் படாமலிருப்பதையும், அவர் சிலாகித்துப் பேசியும் இருக்கிறார். அவர்கள் அழைக்கிற விழாக்களுக்குச் சென்றுமிருக்கிறார்.

இன்னும் ஒரு படி மேலே சென்று, தன்னை ஒரு இந்து பகுத்தறிவுவாதி என்றும் கூறியிருக்கிறார்.

நமக்குச் சரியென்று படாத சில நம்பிக்கைகள் மற்றவர்களுக்குச் சரியென்று படும்போது, அவர்களாக உணர்ந்து திருந்திக்கொள்ளாத வரையில் வலியச் சென்று நமது கருத்தை

வற்புறுத்தித் திணிக்கக் கூடாது என்பதில் பெரியார் உறுதியாக இருந்தவர். அதற்காக தனது கருத்துக்குத் தாழ்போட்டு மூடிவைக்க வேண்டுமென்று அஞ்சுகிற நெஞ்சமும் படைத்தவரல்ல அவர்!

தமிழ் மக்களிடையே உலவுகிற பல்வேறு பழங் கதைகளில் அல்லது காவியங்களில் அல்லது இதிகாசங்களில் காணப்படும் பெண்களில் தனித்தன்மை வாய்ந்தவள் கண்ணகி - ஒரு நடுத்தரக் குடும்பத்திலே பிறந்து, நாடாண்ட பாண்டிய மன்னனையே நீதி கேட்டு முழக்கமிட்ட வீராங்கனை - அந்தக் கண்ணகி!

> "சிலப்பதிகாரம், காலத்தையும் கடந்த கருத்தமைதி கொண்டது. அதன் போதனை தமிழ்நாட்டில் மட்டும் முடங்கிக் கிடப்பதல்ல! அது வையகம் முழுமைக்கும் உரிய பாடம்! உயர்ந்த தரமுள்ள காவியம்! உலக மகா காவியங்களில் ஒன்றெனக் கருதப்பட வேண்டும்"

என்று அறிஞர் அண்ணா கூறியுள்ளது, பெரியார் கருத்துக்கு எதிரானதல்ல!

பாவேந்தர் பாரதிதாசன் எழுதியுள்ள பாண்டியன் பரிசு என்ற நூலில் - கதாநாயகன் வேலன், கதாநாயகி அன்னத்தைப் பற்றி இருவிதமாக வர்ணிப்பது போல இரண்டு பகுதிகள்!

அன்னம் மடிந்துபோய் மண்ணுக்குள் புதைக்கப் பட்டதாகக் கேள்வியுற்று, அதனைத் தோண்டி யெடுத்து, அழுகிய நிலையில் உள்ள அந்த உருவைக் கண்டு,

பேன்நாறி வீழ்குழலைத் தேனா றென்றும்
பீளைஒழு கும்விழியை நீல மென்றும்
மேல்நாறும் சளிமூக்கை எட்பூ என்றும்
வெறுங்குறும்பிக் காதை எழில் வள்ளை என்றும்
ஊன் நாறும் ஊத்தைப்பல் வாய்உ தட்டை
ஒளிமுல்லை செவ்வாம்பல் கோவை என்றும்
தோல் நாறும் கன்னம்கண்ணாடி என்றும்"
வேலன், மனம் வெறுத்துத் தூற்றுகிறான்.

(ஆனால் அங்கு அன்னமே உயிருடன் வந்து பின்னால் நிற்கிறாள்)

உடனே வேலன், அவளைப் பார்த்து -

“இரண்டுமுகில்! இரண்டுநிலா!
உனைநான் பெற்றேன்
புதுவையம்! புதுவையம் இதுதான் என்றான்!
பூவைநீ இலாவையம் விழலே என்றான்.”

வேலன், அந்தப் பெண்ணழகை அவள் பிணமான நிலையில் தாழ்த்திக் கூறியதற்கும் - அவள் உயிரோடு வந்த நிலையில் உயர்த்திக் கூறியதற்கும் - அவனது மனோநிலைதானே காரணம்! அதாவது ஓவியமாக ஒரு பெண்ணைப் பார்ப்பதற்கும், அவள் உடலை அறுத்து கூறுபோட்டுப் பார்ப்பதற்கும் இடையே எழும் இரு வேறு கருத்துக்களில், அவள் அழகை எள்ளி நகையாடும் கருத்தை மட்டுமே எடுத்துக்கொள்வோம் என்போர், கண்ணகி பற்றிய கடும் விமர்சனத்தைப் பயன்படுத்தி, கண்ணகி சிலை நாட்டுவதை மறுப்போராவர்! மறுப்பதற்கு அவர்களின் மனோநிலை மட்டும் காரணமில்லை! யாருக்கோ மண்டியிட்டு, தமிழ்ப் பண்பாட்டை யாருடைய காலடியிலோ விழச்செய்திடத் தங்களையுமறியாத தாசர் புத்தி தலைக்கேறியதுங் கூட முக்கிய காரணமாகும்.

அன்புள்ள,

மு.க.

30-12-2001

2651. “குற்றம் பார்க்கின் சுற்றமில்லை!

உடன்பிறப்பே,

1961ஆம் ஆண்டு வாக்கில், கழகத்தில் ஏற்பட்ட உட்பூசல் பற்றி அறிஞர் அண்ணா அவர்கள், 23.4.61 அன்று ‘‘திராவிட நாடு இதழில் தீட்டிய குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை என்ற ஒரு நீண்ட கட்டுரையை நேற்றிரவு நினைவுகூர்ந்தபோது, அந்தக் கட்டுரையின் முடிவுரையாக,

கொள்கை மறவாதீர்!
கோபத்துக்கு ஆளாகாதீர்!
கூடி வாழ்வது பொறுப்பான காரியம்

– அறிவீர்.

குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை!

என அவர் உருக்கமுடன் குறிப்பிட்டிருந்தது என் மனத்தில் பதிந்திருந்தபடியால், உனக்கு இந்தக் கடிதம் எழுத வேண்டுமென்று தோன்றியது.

அண்மையில் நடந்து முடிந்த உள்ளாட்சித் தேர்தலில் கழகத்தினர் ஆங்காங்கு செயல்பட்ட முறை குறித்தும், தோழமைக்கட்சிகளின் பங்குப் பணி குறித்தும், அறிந்து பரிந்துரைக்க தலைமைக் கழகம் ஆய்வுக் குழுக்களை அமைத்தது.

இதற்கு முன்பு பல தேர்தல்களில் அமைக்கப்பட்ட ஆய்வுக் குழுக்களைத் தொடர்ந்து தலைமைக்கழகம் நடவடிக்கை எதுவும் எடுத்ததில்லை.

ஆனால் இந்த முறை, உள்ளாட்சித் தேர்தலை முன்னிட்டு, நான்கு குழுக்களாக ஆய்வுக் குழுக்கள் அமைக்கப்பட்டு, அந்தக் குழுக்கள், எந்தெந்த மாவட்டங்களுக்கு, எந்தெந்தத் தேதிகளில் வருகிறார்கள் என்று அறிவிக்கப்பட்டு அவ்வாறே குழுக்கள் சென்று கலந்து, குறித்துக்கொண்டு வந்த புகார்களைத் தலைவர்

என்ற முறையில் என்னுடனும் பொதுச் செயலாளர், பொருளாளர் ஆகியோருடனும் கலந்து பேசி, கழகக் கட்டுப்பாட்டை மீறியோர் எவரோ, அவர் மீது விளக்கம் கேட்டல் அல்லது தற்காலிகமாக விலக்கி வைத்தல் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொண்டு அந்த விபரங்கள் முரசொலி, தினகரன் ஏடுகள் வாயிலாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப் பட்டுள்ளன.

ஆய்வுக் குழு தந்த புகார்கள் அடிப்படையில், தலைமை எடுத்துள்ள இந்த மென்மையான நடவடிக்கைகள்கூட, மறுபரிசீலனைக்கு உட்படவே முடியாது என்ற நிலையில் இறுதியானவை அல்ல!

ஏனெனில் சில ஆய்வுக் குழுக்கள், போன இடத்தில் புகார்களை மட்டும் பெற்றுக் கொண்டு அவற்றைப் பட்டியலிட்டுக் கோத்து எம்மிடம் அளித்திடும் கடமையைச் செய்திருக்கிறார்களே தவிர, புகார் கொடுத்தவர்களையோ, அல்லது யார் மீது புகாரோ, அவர்களையோ நேரில் அழைத்து விசாரித்தறிந்து ஆய்வுப்பணியை ஆற்றியதாகத் தெரியவில்லை. அதாவது குறிப்பிட்ட சில பகுதிகளில்!

ஒரு சில மாவட்டச் செயலாளர் சொன்னாலே போதும் - ஓரிரு மண்டலப் பொறுப்பாளர் சொன்னாலே போதும் - மற்றும் விருப்பு வெறுப்பு அடிப்படையில் புகார் கொடுத்தவர்கள் சொல்வதெல்லாம் உண்மையாகத் தானிருக்கும் என்ற முறையில், பழைய விரோதங்களைத் தீர்த்துக் கொள்ளும் வகையில் வீண்பழி போடப்பட்ட புகார்கள்கூட, சில ஆய்வுக் குழுக்களில் ஏற்றுக் கொள்ளப்பட்டு நடவடிக்கைக்கான பரிந்துரைக்கு உள்ளாகியிருக்கின்றன.

இவையனைத்தையும் மனத்திற்கொண்டுதான் நானும், பொதுச் செயலாளரும், பொருளாளரும் ஒவ்வொரு ஆய்வுக் குழுவினரிடமும் கலந்து பேசி, இடை நீக்கம் செய்து வைத்தல் - விளக்கம் கேட்டல் என்ற இருவகையான நடவடிக்கை அறிவிப்புகளைத் தலைமைக் கழகச் சார்பில் செய்துள்ளோம்.

தற்போது அமைக்கப்பட்டு ஆய்ந்து வந்த ஆய்வுக் குழு அறிக்கைகளையும், பரிந்துரைகளையும், புகார்களையும் வைத்து இந்த அளவுக்குத்தான் தலைமைக் கழகம் தீர்வு காண இயலும்.

இந்தத் தீர்வுகளினால் பாதிக்கப்பட்டுள்ள சிலர், கழகத்திற்கு விரோதமாகவோ, கட்டுப்பாட்டை மீறியோ, தாங்கள் எந்தத்

தவறும் செய்யவில்லை யென்று நேரிலும், கடித வாயிலாகவும் நெடுந்தூரத்தில் உள்ளோர் தொலைபேசி மூலமும் தெரிவித்து வருந்துகின்றனர்.

அவர்களின் முறையீடுகள் உண்மையாக இருக்கு மேயானால், வேண்டுமென்றே திட்டமிட்டு யாரும் பழி வாங்கப்படுவதற்கு தலைமைக் கழகம் துணை போகாது என்பதையும், அவர்கள் அளிக்கின்ற விளக்கங்களை அலட்சியப்படுத்தாமல் ஆய்வு செய்து, நியாயமிருப்பின், நீதி வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பத்து என்பதை பதினொன்று என ஆக்குவதுதான் எனக்கு மகிழ்ச்சி தருமே தவிர, பத்தை ஒன்பதாக்குவது என்பது எனக்குப் பிடித்த காரியமல்ல! என்று அண்ணா அவர்கள் அடிக்கடி சொன்னதை நானோ அல்லது தலைமையில் இருப்பவர்களோ மறந்தவர்களல்லர்!

அதே நேரத்தில் அண்ணா சொன்ன கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற மூன்று முழக்கங்களில் தி.மு.க., முக்கியமாகக் கடைப்பிடிக்க வேண்டியது மூன்றாவது முழக்கமான கட்டுப்பாடு என்பதுதான் என்று தந்தை பெரியார் ஒரு முறை கட்டளையிட்டது போல் சொன்னதையும், மறந்து விடாத காரணத்தால் தான், உள்ளாட்சி தேர்தலையொட்டிய இந்த ஆய்வுக் குழுக்கள் அனுப்பப்பட்டன.

ஆய்வுக் குழுவிலே இடம் பெற்றவர்களுக்கும் முதல் அனுபவம், அக் குழுக்களின் பரிந்துரை கேட்டு நடவடிக்கை மேற்கொள்வதும் தலைமைக் கழகத்திற்கும் முதல் அனுபவம். அதனால் ஏற்பட்டுள்ள குறைகளைக் களைவதென்பது கடினமான காரியமும் அல்ல!

அவ்வப்போது மேலமைப்புகளால் பரிந்துரைக்கப்படும் பிரச்சினைகளில் மட்டுமே தலைமைக் கழகம் ஆராய்ந்து நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. ஆனால், இந்தத் தடவை ஒட்டுமொத்தமாக மாநில அளவில் மாவட்டந்தோறும் ஒரே சமயத்தில் ஆய்வுக் குழுக்கள் மூலம் விசாரணை நடத்த முனைந்து, அவற்றில் புகார்களை மட்டுமே பெறும் குழுவாக ஒன்றிரண்டு இருந்து, அதனால் பாதிக்கப்பட்ட உடன்பிறப்புகளுக்கு மன உளைச்சல் ஏற்பட்டிருக்கிறது.

அந்த உளைச்சலைப் போக்கிடவும், உவகையுடனும், உற்சாகத்துடனும், உடன்பிறப்புகள் தொடர்ந்து கழகப் பணியாற்றிடவும் வழி வகை காணப்படும் என உறுதி அளிக்கிறேன். இந்த உறுதி, உள்ளொன்று வைத்துப் புறமொன்று நடந்து கொள்ளாத உண்மையான உடன்பிறப்புகளுக்கு மட்டுந்தான் என்பதையும் மறந்து விட வேண்டாம்.

1966-67 ஆம் ஆண்டு டிசம்பர் 29, 30, 31, ஜனவரி 1 ஆகிய நான்கு நாட்கள் சென்னை விருகம்பாக்கத்தில் அறிஞர் அண்ணா தலைமையில் மாநில மாநாடு நடத்திட, அங்கு மண்டியிருந்த காடுகளை யெல்லாம் அழித்துச் செப்பனிட்டோம் - மாநாட்டில் தலைமையுரை யாற்றிய அண்ணா அவர்கள்,

> "என் கூட்டுத் தோழர்கள் சிந்திய வியர்வை இந்தக் கழகம்! நான் வேறு, என் தோழர்கள் வேறு அல்லர்! அவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்தால் நான்! என்னைப் பிரித்துப் பார்த்தால் அவர்கள்! நிலம் போலும் பொறுமை உங்களிடையே வளரட்டும். இங்கிருந்த காட்டை அழித்தது பெரிதல்ல - தேவையற்ற எண்ணக்காடுகளை அழியுங்கள்! தன்னை வெல்வான்தான் தரணியை வெல்வான்! ஆத்திரத்தால் அல்ல - அடங்கிப் போவதால்தான் தரணியை வெல்ல முடியும்! அதற்குக் கழகம், நல்ல பயிற்சிக் கூடம்!

என்று குறிப்பிட்ட அந்த வாசகம்; உன் போன்ற ஒவ்வொரு உடன்பிறப்பின் நெஞ்சிலும் பதிந்திருக்குமேயானால்,

"நீர் இடித்து நீர் விலகாது என்ற பழமொழியை நிரூபித்துக் காட்ட முடியும்.

எனவே பேதத்தை மறந்து விட்டு, வா! உன் வாதத்தை எடுத்து வைத்து வாய்மைக்கு வாகை சூட இந்தக் கழகத்தின் வாசற்கதவு எப்போதும் திறந்திருக்கும்!

"தன்னை வெல்வான் தரணியை வெல்வான்!"

நான் தனிமையாக அடைக்கப்பட்டிருந்த பாளையங் கோட்டை சிறை வாசலில் பதிக்கப்பட்டிருந்த வாசக மல்லவா இது! இதை எத்தனை கூட்டங்களில் அண்ணா சொல்லியிருக்கிறார் - அதைத்தானே சென்னையில் மாநில மாநாட்டிலும் சொன்னார்

- அண்ணா வழியில் அயராது உழைப்போம்! என்பது வெறும் வார்த்தை அலங்காரமாக இராமல், உண்மையிலேயே ஒன்று பட்டு உழைத்திட சிற்றூர் பேரூர் முதல் தலைநகராம் சென்னை மாநகர் வரையிலே உள்ள உடன்பிறப்புகள் உறுதி எடுத்துக் கொள்வோம்!

உயர்த்திப் பிடிப்போம் ஒற்றுமைக் கொடியை!

தன் மானம் காத்திட!

தமிழர் கலாச்சாரம் காத்திட!

தமிழ்ப் பண்பாட்டுச் சின்னம் கண்ணகி சிலையை நிலைநாட்டும் மாபெரும் மாநாட்டில் சந்திப்போம். இப்போதே தயாராகிடு உடன்பிறப்பே! குடும்பத்துடன் சென்னைக்குப் பயணம் புறப்பட!

அன்புள்ள,

மு.க.

31-12-2001

2652. நாம் இளிச்சவாயர்களாகவே இருந்தால்!

உடன்பிறப்பே,

விலைவாசி விஷம் போல் ஏறி, சாதாரண, சாமானிய, நடுத்தர மக்கள் விழி பிதுங்கித் தவித்திடவும், ஒரு காசு என்ற அளவில் பேருந்துக் கட்டணத்தை உயர்த்தினாலே நூறு கோடி அதிகமாக வருமானம் வரும் என்ற நிலையில் ஒரேயடியாக ஆறு காசு கட்டணத்தை உயர்த்தி ஏழை எளியோர் இடுப்பையொடித்திடவும்; தி.மு.க. ஆட்சியில் விற்பனை வரி அறவே ரத்து செய்யப்பட்ட சமையல் எண்ணை, பின்னலாடை போன்ற பொருள்களுக்கு மீண்டும் இப்போது வரி விதித்து வணிகர்களின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்ளவும், விவசாயி பயன்படுத்தும் யூரியா உரத்துக்கு வரி உயர்த்தி அவன் வேதனையை அதிகப்படுத்திடவும்; பள்ளிக் கட்டணங்கள் உயர்வு என்றும், அரசு அலுவலர்க்கான சலுகைகள் ரத்து என்றும், பொங்கல் போனசேகூட கிடையாது எனக் கைவிரித்திடவும், நோயுற்றோரைக் காண மருத்துவ மனைக்குச் சென்றிடவே கட்டணம் செலுத்திடவும், கொசு வலை போலத்தான் இலவச வேட்டி சேலை யென்று தயாரித்து அவற்றையும் குறைத்துக் கொடுத்திடவும், மின் கட்டணத்தை கை வைத்தால் கூட அல்ல, காதால் கேட்டாலே ஷாக் அடிக்கிற நிலை ஏற்பட்டிடவுமான எத்தனையோ அநியாய அற்புதங்களை, இந்த ஆறேழு மாத காலத்தில் நடத்தியுள்ள அ.தி.மு.க. ஆட்சி, தமிழ் நாட்டு மக்களின் அன்றாட வாழ்க்கையைப் பிரச்சினையாக ஆக்கியது மட்டுமல்லாமல், தமிழனின் ஈடு இணையற்ற கலாச்சாரப் பெருமையையும் சீர் குலைக்க, கத்திக்குக் கூர் ஏற்றிக் கொண்டுவந்துவிட்டது என்பதற்கு அடையாளமாகத்தான் கற்புக்கரசி, சிலப்பதிகாரக் காவிய நாயகி, செந்தமிழ்ச் செல்வமாம் கண்ணகியின் சிலை மீதும் கை வைத்துவிட்டது.

அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைக்காக அலை மோதிக் கொண்டிருக்கிற தமிழனின் மீட்புக்காக குரல் கொடுத்துக்

கொண்டிருக்கிற கழகம், கண்ணகி சிலை அகற்றல் மூலம் அவன் மீது கலாச்சார எதிர்ப்பு யுத்தம் தொடங்கி விட்டவர்கள் வீசும் கணைகளையும் முனை முறித்தாக வேண்டுமென்பதற்காக, கட்சி வேறுபாடு களைந்து அமைகிற தமிழ் இன எழுச்சி அணி வகுப்பில் தன்னையும் இணைத்துக் கொண்டு களம் இறங்கிடத் தயாராகி விட்டது.

எத்தனை முனைகளில் நின்று போராட வேண்டு மெனினும், தமிழ் நாட்டு மக்களின் துன்ப துயரம் துடைப்பதற்கும், அவர்களின் மானம் மரியாதை, பழம் பெரும் பண்பாடு காப்பதற்கும், என்றும் தயார் நிலையில் இருப்பதுதான் கழகம்!

இது நாள் வரையில், அரசியல் ரீதியாகவும் - சமுதாய ரீதியாகவும் எதிர் கொண்டு வந்தவர்கள், இப்போது நமது கலாச்சாரத்தையே குழிதோண்டிப் புதைத்து, அதன்மீது கள்ளிச்செடி நடுவதற்கும் தயாராகி விட்டார்கள்.

இதனை இல்லையென்று மறுத்திடுவோர் யாராயினும் அவர்கள், தமது நெஞ்சில் கை வைத்துச் சொல்லட்டும்! லாரி மோதியது, பீடம் சேதமுற்றது என்றார்களே? லாரி மோதுகிற நிலையிலா கண்ணகி சிலை அமைந்திருந்த இடம் உள்ளது! இல்லை - இல்லவே இல்லை!

கடற்கரை காமராசர் சாலையில் காந்தியடிகள் சிலை தொடங்கி, உழைப்பாளி சின்னம் சிலை வரையில், ஒவ்வொன்றுக்கும் சாலையோரத்திற்கும் இடையே உள்ள நடைபாதையைத் தாண்டி அந்தச் சிலைகள் மீது, வேண்டுமென்று திட்டமிட்டு லாரியை ஓட்டி மோதினால் அல்லாது வெறும் விபத்து காரணமாக சிலையின் அடி பீடம் இடிபடுகிற வகையில் அவ்வளவு குறுகலான இடைவெளிதான் இருக்கிறதா?

அப்படியே பீடம் இடிபட்டிருந்தாலும், சிலையை அகற்ற வேண்டிய அவசியமென்ன?

அகற்றிய சிலையை செப்பனிட்டு, அதே இடத்தில் மீண்டும் அமைப்பதுதானே நியாயம்?

அப்படித்தானே பல சிலைகள், மாநிலத்தின் பல பகுதிகளில் சேதமுற்றபோது வைக்கப்பட்டுள்ளன!

சிலையை உடைத்து அகற்றியது மாத்திரமல்லாமல், கண்ணகிக்கே களங்கம் கூறி பேசுகிற பேச்சுகள் - எழுதுகிற எழுத்துகள் - இந்த நாச காரியத்துக்கும் தங்களைத் தமிழர்கள் என்று நாக்கூசாமல் கூறிக் கொள்கிற சிலர் பயன்படுகிறார்களே! அய்யகோ! என்னே வேதனை!

அண்மையில் தம்பி கவிஞர் வேழவேந்தனின் கவிதைத் தொகுப்பு ஒன்றுக்கு அணிந்துரை எழுதித் தந்தேன்.

என்னடா தமிழா; உன்னை
எண்ணியே நொறுங்கிப் போனேன்!
அன்னையின் பாலை உண்டே,
அவளையே மிதிப்போன் என்றால் உன்னைப்
போல் உலகில் உண்டா?
எனத் தொடங்கி; இறுதியாக,
என் இனிய தமிழ் நண்பா! அதனால் நீயும்
இழந்து விட்ட முதுகெலும்பைத் தேடு!
எனக் கதறியிருக்கிறார்!

அந்த நூலின் அணிந்துரையில் நான் குறிப்பிட்டிருக்கிறேன்;

> "பாவம்! சில தமிழர்கள், தம்பி வேழவேந்தன் குறிப்பிடுவது போல தமது முதுகெலும்பை இழந்து விடவில்லை - யானைத் தந்தம் போல் அதனை நல்ல விலைக்கல்லவா விற்று விட்டார்கள். விற்ற பொருள், திரும்பக் கிடைக்குமா என்ன!''

அதனால்தான், இன்று நமது கலாச்சாரத்திற்குக் கல்லறை எழுப்பிடப் பாசறை அமைத்திருப்போர்க்கு எதிராகக் களம் அமைத்திட வாரீர் என அழைக்கிறேன். கழக உடன்பிறப்புகளாம் உன் போன்றோரை மட்டுமல்ல!

இரு நாட்களுக்கு முன்பு சில தமிழ் அமைப்புகளின் சார்பாக கடற்கரையில் அதே இடத்தில் கண்ணகி சிலையை நாட்டிட அணி வகுத்து வந்து கைதானார்களே? அந்த மானமிகு தமிழர்களின் அமைப்புகளில் இருப்போர் அனைவருமே என் உடன் பிறப்புகள்தான்!

அவர்களையும் அழைக்கிறேன்!
அவர்கள் நூறு பேர்தானே என
எண்ண வேண்டாம்! -
நூறு லட்சம் பேர் கொண்டிடும்
உணர்வைக் கொண்டவர்கள் அந்த நூறு பேர்!

எவ்வளவு குறுகிய காலத்தில், ஒரு கண்ணகி சிலையுடன் பவனி வந்தனர் - அந்தச் சிலையின் கைகளை முறித்திடக் காவலர்க்கு எப்படித்தான் மனம் வந்ததோ - என் செய்வது? கண்ணகி சிலையை இழித்துரைப்போர், பழித்துரைப்போர், அகற்றித் தீருவோமெனக் கூறி, அகற்றிக் காட்டி அகமகிழ்வோர் - ஆட்சிக் கட்டிலில் அமர்ந்திருக்கும்போது,

நமது தமிழ்க் கலாச்சாரத்தையே
தரை மட்டமாக்கிடத் துணிந்து,
அன்றொரு நாள் நமது அருமை அண்ணா அமைத்த
சிலையை தூக்கி எறிந்தோர்,
இதுவும் செய்வர், இன்னமும் செய்வர் -
நாம் இளிச்சவாயர்களாகவே இருந்தால்!

அன்புள்ள,

மு.க.

2-1-2002

2653. கற்பரசி கண்ணகியின் புகழ் பாடி வா!

உடன்பிறப்பே,

கண்ணகி சிலை, ஒரு சிலையை அகற்றினார்கள். ஆம்! கலாச்சார யுத்தத்தை ஆரம்பித்தார்கள்.

"உதவாதினி ஒரு தாமதம்
உடனே விழி தமிழா!"

என்றுரைத்து ஊருக்கு ஊர் உணர்ச்சியுள்ள தமிழர்கள் எல்லாம் கண்ணகிக்கு சிலை வைக்கத் தொடங்கி விட்டார்கள். ஏன்? கோயில் கட்டக்கூடத் தொடங்கி விட்டார்கள்!

ஒரு செடியிருக்கிறது. அதைத் தொட்டால் போதும், தனது எதிர்ப்பைச் சிலிர்த்துக் காட்டும் - அந்தச் செடிக்குள்ள உணர்வுகூட இல்லாமல், தமிழன் தன்னைக் கிள்ளினால்கூடச் சொரணையற்றிருக்கிறானேயென்று வருந்திக் கொண்டிருக்கும் நமது ஏக்கத்தைப் போக்கிட, இதோ! நமது பண்பாட்டுப் பெருமையின் நெஞ்சிலேயே கட்டாரி கொண்டு தாக்கி, தமிழனைக் களம் காணத் தூண்டி விட்டு விட்டார்கள். அவர்களுக்கு ஆயிரம் கோடி நன்றி!

சரித்திர காலம் தொட்டு, தமிழனைத் தமிழனுக்குப் பகையாக்கி, தந்தைக்கு எதிராக மகனையும், அண்ணனுக்கு எதிராகத் தம்பியையும் உசுப்பி விட்டு, தமிழினத்தின் ஒற்றுமைக்கும் ஒன்றுபட்ட வலிமைக்கும் வேட்டு வைப்பதில் முனைந்திடுவோர், அவர்களின் செயலால் நெல்லிக்காய் மூட்டையாய் சிதறிக் கிடக்கும் தமிழ்க் குலத்தை, தாராளமாக மீன் பிடிக்கும் குழம்பிய குட்டையாகக் கருதி, நமது தன்மானத்துக்கே சவால் விடும் தைரியம் பெற்றுள்ளனர் என்பதன் அடையாளம்தானே, கண்ணகி சிலையை அகற்றியுள்ள காரியம்!

வஞ்சகத்தால், சதியால், சோதிட வலை விரிப்பால் எமைப் பிரித்து, முட்டிக் கொள்ளும் ஆடுகள், அப்போது கொட்டிப்

பெருகும் ரத்தத்தைக் குடிக்கலாமெனக் காத்திருந்த நரி போல நிமித்திகன் எனும் சோதிடன் ஒருவன், சொன்ன கூற்றைப் பொய்யாக்கி, எந்தச் சதியாலும் எமை மோத விட முடியாது என்று சகோதரப் பாசத்துடன் சவாலை எதிர் கொண்ட அரச குடும்பத்து அண்ணன் தம்பிகளாம் சேரன் செங்குட்டுவனும், இளங்கோ அடிகளும் உண்மையான உடன்பிறப்பு என்பதற்கு இலக்கணம் படைத்து, இடம் பெற்றுள்ள தமிழர் வரலாற்றுக் காவியமாம் - பண்பாட்டு ஓவியமாம் - கற்பரசி கண்ணகியும், உண்மைக் காதல் அரசி மாதவியும் உலவி ஒளிவிடும் இலக்கியக் கருவூலமாம் - சிலப்பதிகாரச் செல்வத்தை நினைவூட்டி நமது அண்ணன் வைத்த சிலை! அந்தச் சிலம்பின் புகழ் பாடவே தனது வாழ்நாளில் பெரும் பொழுதைச் செலவிட்ட, சிலம்புச் செல்வர் ம.பொ.சி. திறந்து வைத்த சிலை, கடற்கரை காமராசர் சாலையில் போவோர் வருவோர் அனைவரும் கண்டு களித்த அந்தக் கம்பீரச் சிலை, ஆறு கோடி தமிழர்களின் மானத்துக்கு மட்டுமல்ல, அயல் நாடுகள் பலவற்றில் வாழுகிற தமிழர்களின் மானத்துக்கும் அறைகூவல் விடுவது போல் அகற்றப்பட்டுள்ளது என்றால்,

''உன் தொடையில் கயிறு திரிக்கும்போதும் தூங்கிக் கொண்டிருப்பதா தமிழா? என்று எழுந்துள்ள கேள்விக்கு கிடைக்கின்ற விடைதான், ஆங்காங்கு ஆர்த்தெழுந்துள்ள தமிழ்வீரர் பட்டாளம், கண்ணகி சிலைக்காக அறப்போரில் ஈடுபட முன்வந்திருப்பது!

ஊருக்குஊர் கண்ணகி சிலைகள் அமையட்டும்!

சென்னைப் பேரணிக்கு வருவோர் வாகனங்களில் கண்ணகி உருவங்கள் ஒளிவிடட்டும்!

உடன்பிறப்பே, அண்ணா எழுதியதும் நடிப்பிசைப் புலவர் கே.ஆர்.ஆர். நடித்ததுமான ''சொர்க்க வாசல்'' படத்தில் உடுமலை நாராயண கவிராயர் எழுதிய ஒரு பாட்டு -

''ஆகும் நெறியெது? ஆகா நெறியெது?
அறிந்து கொள்வீரே! நன்றாய்ப்
புரிந்து கொள்வீரே!'' -

என்ற பாட்டு, அதை அந்தக் கதையில் வரும் அரசு, தடை விதித்து யாரும் பாடக் கூடாது எனத் தடுக்கும்!

ஆனால் அந்தப் பாடலை
இளைஞர் முதல்
முதியோர் வரை -
படித்தோர்
படிக்காதோர்
உழவர்
நெசவாளர்
ஆடவர்
பெண்டிர்

- என நாட்டு மக்கள் அனைவரும் பாடுவர் - அந்த ஒரு பாட்டே அந்த நாட்டைக் கலக்கும்!

அதுபோல

கண்ணகி சிலை!
கண்ணகி சிலை!
கண்ணகி சிலை!

இந்த முழக்கம் தமிழ்நாட்டு வீதிதோறும், வீடுதோறும் கேட்க வேண்டும்!

அதற்குத்தான்,

சென்னையில்,

தமிழ்ப் பண்பாட்டு மாநாடு!
வா! கற்கண்டுத் தமிழ் முழக்கி, வா!
கற்பரசி கண்ணகியின் புகழ் பாடி வா!

அன்புள்ள,

மு.க.

3-1-2002

2654. வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்!

உடன்பிறப்பே,

நீரார்ங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீரார்ரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்,
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே,
உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து
வாழ்த்துதுமே! வாழ்த்துதுமே! வாழ்த்துதுமே!

என்ற மனோன்மணியம் சுந்தரம் பிள்ளையின் பாடலை 1970ஆம் ஆண்டில் அரசு விழாக்களில் தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடலாக ஆக்கிய பெருமை நமக்கு என்றென்றும் உண்டு. தமிழர்களின் நலன் காக்க நாளும் பாடுபடும் கழக அரசு, தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் பாடுபடுவதை எந்த நிலையிலும் நிறுத்தாது என்பதற்கு உதாரணம்தான் நான்காவது முறையாக இந்த அமைச்சரவை பதவியேற்ற போது தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறைக்காக ஒரு தனி அமைச்சகத்தை உருவாக்கி அந்தத் துறை 13-5-1996 முதல் செயல்பட்டு வருகின்றது. அந்தத் துறையின் சார்பில், கழக ஆட்சியில் நிறைவேற்றப்பட்டுள்ள சாதனைகளின் பட்டியல்தான் இன்றைய கடிதத்தில் தொகுக்கப்பட்டுள்ளது.

* 1974 இல் அன்றைய கழக அரசில் செந்தமிழ்ச் சொற் பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் நிறுவப்பட்டு, மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்கள் அதன் முதல் இயக்குநராக நியமிக்கப்பட்டார். 1981 இல் பாவாணர் மறைந்தார். அதன்பின் 1985 ஜனவரியில் அவர் உருவாக்கிய முதல் தொகுதி நூல்

வெளியிடப்பட்டது. 1989இல் கழக அரசு அகரமுதலித் திட்டத்திற்கு அளித்த ஊக்கம் காரணமாக இரண்டாம் தொகுதி உருவாக்கப்பட்டது. 1991 ஜனவரியில் கழக அரசு கலைக்கப்பட்டதன் காரணமாக இப்பணியில் தொய்வு ஏற்பட்டு, இரண்டாம் தொகுதி நூல் 8.5.1992இல்தான் வெளியிடப்பட்டது. 13.5.1996 இல் கழக அரசு அமைந்த பிறகு அகரமுதலி உருவாக்கும் திட்டம் முடுக்கி விடப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், மூன்றாம் பாகம் உருவாக்கப்பட்டு, 25.2.1997இல் வெளியிடப்பட்டது. அ முதல் ஒள வரையிலான சொற்கள் தொகுக்கப்பட்டு நூல்களாகிவிட்டன. மேலும் நான்கு, ஐந்தாம் பாகங்களும் வெளிவந்து விட்டன.

* 58 வயது முடிந்த தமிழறிஞர்களுக்கு திங்கள் தோறும் 400 ரூபாய் என வழங்கப்பட்ட நிதியுதவி 500 ரூபாயாக உயர்த்தப்பட்டது.

* சென்னைப் பல்கலைக்கழகத்தின் வாயிலாக தமிழ்க் கல்வியை பயிற்றுவிப்பதற்கு மொரீசியஸ், ரீயூனியன், டர்பன், மடகாஸ்கர் ஆகிய பகுதிகளில் அஞ்சல் வழித் தமிழ்க் கல்வியைத் தொடரவும், மொரீசியசில் உள்ள மகாத்மா காந்தி நிலையம் இதன் தொடர்பகமாக விளங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

* 1869இல் தொடங்கப்பட்ட பழமையான அரசினர் கீழ்த்திசை ஓலைச்சுவடிகள் நூலகத்தில் தமிழ், தெலுங்கு, கன்னடம், வடமொழி, இசுலாமிய மொழிகளில் உள்ள 72,314 ஓலைச் சுவடிகளைப் பாதுகாப்பதற்கு 13.32 இலட்சம் ரூபாய் செலவில் 1996இல் குளிர்ப்பதன வசதி செய்யப்பட்டது. அனைத்துச் சுவடிகளையும் நுண்படச் சுருளில் கொண்டு வர 25 இலட்சம் ரூபாய் செலவில் நுண்படக் கருவி (Microfilm) வாங்கப்பட்டது.

* 13.5.1996க்குப்பின் பழநி, திருவாரூர், சிவகங்கை, காஞ்சிபுரம், நாகை, இராமநாதபுரம், கரூர் ஆகிய 7 இடங்களில் புதிய அருங்காட்சியகங்கள் தோற்று விக்கப்பட்டுள்ளன. கபிலர் எழுதிய குறிஞ்சிப்பாட்டு இலக்கியத்தில் கூறப்படும் 96 மலர்களைப் பற்றிய

காட்சி ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டு, அதன்படி இம்மலர்கள் தொகுக்கப்பட்டுப் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. தமிழக வரலாற்றில் இது முதல் முயற்சியாகும்.

* 1996க்கு முன் தமிழியல் ஆய்வுக்காகத் தமிழக அரசிடமிருந்து ஆசியவியல் நிறுவனம் பெற்ற தொகை ரூ.11 இலட்சம். 1996க்குப் பின் 1996-97இல் ரூ.19 இலட்சமும், 1997-98இல் ரூ.20 இலட்சமும், 1998-99இல் ரூ.20 இலட்சமும், 1999-2000இல் ரூ.22.50 இலட்சமும் இந்நிறுவனத்திற்கு கழக அரசு வழங்கியுள்ளது.

* 1996க்குப் பின், ஆண்டுக்கு 6 மாவட்டங்கள் எனும் அளவில், 29 மாவட்டங்களிலும் ஆட்சி மொழிக் கருத்தரங்குகள் நடைபெற்றுள்ளன. மாவட்ட அலுவலகங்களில் 100 விழுக்காடு தமிழை ஆட்சி மொழியாக்கிட இந்த முயற்சி பெரிதும் பயன்படுகிறது.

* 13.5.1996க்கு முன் சென்னை, மதுரை, கோவை ஆகிய 3 மாவட்டங்களில் மட்டுமே இசைப் பள்ளிகள் இருந்தன. 13.5.1996க்குப் பின் திருநெல்வேலி, தூத்துக்குடி, கரூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, திருவாரூர், சேலம், கடலூர், விழுப்புரம், பெரம்பலூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி, சீர்காழி, சிவகங்கை, இராமநாதபுரம், ஈரோடு ஆகிய 17 இடங்களில் இசைப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. திருவையாற்றில் தமிழிசை விழா நடத்திட ஒரு இலட்சம் ரூபாய் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. சீர்காழியில் மாரிமுத்தா பிள்ளை, முத்துத் தாண்டவர், அருணாசலக் கவிராயர் ஆகிய தமிழிசை மூவர்களுக்கு மணி மண்டபம் கட்டும் பணி தொடங்கப்பட்டது.

* 1999 பிப்ரவரியில் உலகத் தமிழ் இணைய மாநாடு தமிழக அரசினால் நடத்தப்பட்டு, கணினியின் விசைப்பலகை ஒரே சீராக்கப்பட்டதுடன், உலகத் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் அமைக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது. இணையத்தில் நான் அனுப்பிய தமிழ்

வாழ்த்துச் செய்தியே முதல் வாழ்த்துச் செய்தியாகும். இந்தியாவிலேயே இணையத்தில் அதிக பக்கங்களைக் (Home Page) கொண்ட மொழி தமிழ்தான் என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

* இந்திய ஆட்சிப்பணித் தேர்வுகளைத் தமிழில் எழுதினால் அதிகம் பேர் வெற்றி பெற வாய்ப்புள்ளது. இதற்கு ஏற்ப முந்தைய ஆட்சியில் தமிழில் நூல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. தமிழ் மொழி, இலக்கிய வரலாறு, புவியியல், வரலாறு போன்ற பாடங்களை தமிழில் தனித் தனியே தொகுத்து வெளியிட முடிவு செய்யப்பட்டு, முதல் முயற்சியாக தமிழ்மொழி வரலாறு நூல் கழக ஆட்சியில் வெளியிடப்பட்டுள்ளது.

* இயல் இசை நாடக மன்றத்திற்கு வழங்கப்பட்ட நல்கைத் தொகை 25 இலட்சம் ரூபாய் என்பது 1996க்குப் பின் 45 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. புகழ்பெற்ற கலைஞர்களின் மறைவுக்குப் பின் கலங்கும் குடும்பத்தாருக்கு நிதியுதவி அளிப்பதற்காக வைப்பு நிதி ரூ.4.70 இலட்சம் என்பது ரூ.10 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. நலிந்த கலைஞர்கள் எனும் முறையில் இதுவரை 4267 பேர் மாத உதவித்தொகையாக ரூ.500 வீதம் பெற்று வருகின்றனர்.

* தொல்காப்பியம், நன்னூல் ஆகிய இலக்கண நூல்களின் அடிப்படையில் இக்காலத் தேவைக்கேற்பவும், பள்ளி/கல்லூரி மாணவர்கள் பயன் கொள்ளத்தக்க வகையிலும் ஒரு புதிய இலக்கண நூலை எழுதி வெளியிடுவதற்காக வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்பட்டு கட்டுரைகள் தயாரிக்கப்பட்டன.

* உலகில் 36 நாடுகளில் வாழும் ஏறத்தாழ 87 இலட்சம் தமிழர்கள் இடையே, பலவகைகளிலும் உறவுகளை வலுப்படுத்த மொரீசியஸ், சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்குத் தமிழ்க்குழு நேரில் சென்று உரிய பணிகளைச் செய்துள்ளது. 22 நாடுகளுக்குச் சிறந்த நூல்களை அனுப்பும் திட்டத்தின்கீழ், யாழ்ப்பாணம், சிங்கப்பூர், மொரீசியஸ், ரீயூனியன் முதலிய நாடுகள்

ஒவ்வொன்றிற்கும் 100க்கும் மேற்பட்ட சிறந்த நூல்கள் அனுப்பி வைக்கப்பட்டன. சிங்கப்பூர், மலேசியா, துபாய், மொரீசியஸ், டர்பன், ரீயூனியன் ஆகிய நாடுகளுக்கு அஞ்சல் வழி பட்டவகுப்புப் பாடங்களும் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

* 1968இல் பேரறிஞர் அண்ணா அவர்களால் இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் அறிவிக்கப்பட்டு, 1970இல் பதிவு செய்யப்பட்டு இயங்கி வரும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1996க்கு முன் 29 இலட்சம் ரூபாய் உதவி பெற்றுவந்ததற்கு மாறாக, 1996க்குப் பின் 48.5 இலட்சம் ரூபாயாக பெற்று வருகிறது. கூடுதலாக மொழிப்பயிற்சிக்கூடம் (Language La), தமிழியல் இதழ் ஒலி நாடா வெளியீடுகள், நூலக விரிவாக்கம் ஆகிய பணிகளுக்காக மேலும் 19 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது.

* ஊர்திகளில் காணப்படும் பதிவெண் பலகைகளில் ஆங்கில எழுத்துகள் மட்டுமே பயன்படுத்தப்பட்டு வந்தன. அவற்றைத் தமிழில் எழுதிக் கொள்ளவும் அனுமதி வழங்கப்பட்டு ஆணையிடப்பட்டது.

* 13.5.1996க்கு முன் ஓவிய நுண்கலைக் குழுவிற்கு 5 இலட்சம் ரூபாய் மட்டுமே ஒதுக்கப்பட்டது. எனினும், 91 முதல் 96 வரையிலான ஆட்சிக் காலத்தில் இந்த அமைப்பே இயங்கவில்லை. 1996க்குப் பின் 15 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இதன் நிர்வாகக் குழு, நடிகர் சிவகுமார் தலைமையில் புதுப்பிக்கப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வந்தது.

* கருவூலங்கள் மற்றும் சம்பளக் கணக்கு அலுவலகங்களில் பட்டியையோ (Bill), கைச்சாத்தையோ (Voucher) தமிழில் தயாரிக்கலாம் என்ற நிலை உருவாக்கப்பட்டது.

* நாடகக் கலைக்களஞ்சியம், தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் வாயிலாக ஒரு தொகுப்பும், தமிழிசைக் கலைக் களஞ்சியம் - பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் வாயிலாக மூன்று தொகுப்புகளும், மருத்துவக் கலைக் களஞ்சியம் - தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் 5 தொகுப்புகளும் வெளிவந்துள்ளன. தமிழ் வளர்ச்சிக்

கழகத்தால் வெளியிடப்பட்ட குழந்தைகள் கலைக் களஞ்சியம் நூல் தயாரிக்கும் பணிக்கு 10 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது.

* 100 ஆண்டுகளுக்கு மேல் சிறந்து விளங்கும் சென்னை கலைத் தொழில் கல்லூரியில், முதன் முறையாக முதுகலை வகுப்பு (வண்ணக்கலை) தொடங்கப்பட்டது. மேலும் காட்சி வழித் தகவல் தொடர்புக் கலையில் முதுகலை வகுப்பும் தொடங்கப்பட்டது. குடந்தைக் கல்லூரியிலும் வண்ணக் கலையில் முதுகலை வகுப்பு தொடங்கப்பட்டது. இக்கல்லூரிகளின் வரலாற்றில் முதுகலைப் படிப்பு தொடங்கப்பட்டது 1996க்குப் பின்னர்தான்.

* 1996க்கு முன் மூன்றே மாவட்டங்களில் இருந்த ஜவகர் சிறுவர் இல்லம் கழக அரசில் 1996க்குப் பின் அனைத்து மாவட்டங்களிலும் தொடங்கப்பட்டுள்ளன.

* மெட்ராஸ் என்னும் பெயர் சென்னை என 30.9.1996 அன்று மாற்றப்பட்டு, இன்று ஆங்கிலத்திலும், பிற மொழிகளிலும் சென்னை என்றே உலகெங்கும் வழங்கப்படுகிறது.

* ஆட்சிமொழித் திட்ட விதிமுறைகளின்படி, தலைமைச் செயலகத்தில் 65 சதவீதம் தமிழ்த் தட்டச்சுகள் இருக்க வேண்டும். எனவே தலைமைச் செயலகத் துறைகளுக்கு 90 இலட்சம் ரூபாய் செலவில் 1000 தமிழ்த் தட்டச்சுகள் வழங்கப்பட்டன. தலைமைச் செயலகத்தில் எடுக்கப்பட்ட ஆங்கிலத் தட்டச்சுப் பொறிகளில் ஆங்கில விசைப் பலகைகளை தமிழில் மாற்றிட தலைமைச் செயலகத்திற்கு மேலும் 500 தமிழ்த் தட்டச்சுகள் வழங்கப்பட்டன. உயர்நீதிமன்றம், சார்பு நீதிமன்றங்கள் ஆகியவற்றில் நகல் எடுப்போர் அனைவரும் பயன்படுத்தும் வகையில் 65 இலட்சம் ரூபாய் செலவில் தமிழ்த் தட்டச்சுகள் வழங்கப் பட்டன.

* தமிழ்ச் சுருக்கெழுத்து நூலின் தேவையைக் கருத்திற் கொண்டு, நான்காம் பதிப்பாக 5000 படிகள் அச்சிட்டு 24.12.1998 அன்று வெளியிடப்பட்டது.”

* 13.5.1996க்கு முன் 3 உதவி இயக்குநர்கள், 8 தமிழ் ஆய்வு அலுவலர்கள், சில இடங்களில் மட்டும் உதவியாளர்கள், தட்டச்சர்கள் என 29 மாவட்டங்களில் தமிழ் வளர்ச்சித் துறையில் பணியாற்றினர். 1996க்குப் பின், தமிழ் ஆய்வு அலுவலர்கள் அனைவரும் பணிவரன்முறை செய்யப்பட்டு, உதவி இயக்குநர்கள் ஆயினர். இயக்குநர் அலுவலகத்தில் இருந்த தகுதியுடைய கண்காணிப்பாளர்களில் மூவருக்கு உதவி இயக்குநர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்டது. தமிழில் முதுகலைப் பட்டம் பெற்ற இத்துறையின் உதவியாளர்கள் இருவர் உதவி இயக்குநர்களாகவும் அமர்த்தப்பெற்றனர். தமிழில் முனைவர் பட்டம் பெற்றவர்கள் பட்டியல் வேலை வாய்ப்பகம் மூலம் பெறப்பட்டு, 13 பேர் உதவி இயக்குநர்களாக முறையான நேர் காணல் வழி மூலம் அமர்த்தப்பட்டனர். சேலம், திருநெல்வேலி ஆகியவற்றைத் தலைமை இடங்களாகக் கொண்டு இரண்டு மண்டலத் தமிழ் வளர்ச்சி துணை இயக்குநர் அலுவலகங்கள் தோற்றுவிக்கப்பட்டன.

* சென்னை அருங்காட்சியகப் பகுதியில் தமிழ் வளர்ச்சி வளாகம் ஒன்று அமைத்திட கழக அரசு முடிவு செய்து அனுமதிகளை வழங்கியது. இதில் தமிழ் வளர்ச்சி இயக்ககம், தொல்பொருள் ஆய்வுத்துறை, ஓலைச்சுவடி நூலகம், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் ஆகிய அனைத்தும் ஒரே இடத்தில் அமையுமாறும், இதனைப் பார்வையிட வரும் உள்நாட்டாரும், வெளிநாட்டாரும் ஒரே இடத்தில் தமிழ் தொடர்பான விளக்கங்களைப் பெறும் வகையிலும் ஏற்பாடுகள் நடைபெற்றன.

* வருங்காலத்தில் பொறியியல் கல்வியைத் தமிழில் பயில 15 பல்கலைக் கழகங்களுக்கு 64 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டு, அதனடிப்படையில் அனைத்து நூல்களும் வெளியிடப்பட்டன.

* 13.5.1996க்கு முன், ஆண்டுதோறும் வெளியிடப் பெறும் நூல்களில் சிறந்த நூல்களைத் தெரிவு செய்து முதற்பரிசு, இரண்டாம் பரிசு, மூன்றாம் பரிசுகள்

முறையே ரூ.5,000/-, ரூ.3,000/-, ரூ.1,000/- என வழங்கப்பட்டு வந்தன. பதிப்பகத்தாருக்கு பாராட்டுச் சான்றிதழ் மட்டுமே வழங்கப்பட்டது. கழக ஆட்சியில், முதற்பரிசு ரூ.10,000/- என்றும், இரண்டாம் பரிசு ரூ. 5,000/- என்றும், மூன்றாம் பரிசு ரூ.2,000/-என்றும் உயர்த்தி வழங்கப்பட்டது. பரிசுபெறும் நூல்களைப் பதிப்பித்துள்ள பதிப்பகத்தாருக்கும் பரிசுத் தொகை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

* மருந்துச் சீட்டுகள் அனைத்தும் தமிழில் எழுதப்பட வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்தது. அரசு வெளியிடும் மாத்திரைகளுக்கான உறைகளில் தமிழ் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

* தென்னக மொழிகளையும், அவற்றிடையே உள்ள உறவுகளையும், ஊடாடி நிற்கும் பண்பாட்டுக் கூறுகளையும் உறுதி செய்யும் வகையில் குப்பம் எனும் நகரில் திராவிடப் பல்கலைக் கழகம் தொடங்கப்பட்டது. நான்காவது முறையாக கழகம் ஆட்சிக்கு வந்தவுடன், தமிழக அரசின் சார்பில் ரூ.50 இலட்ச ரூபாயும், பின்னர் மேலும் 25 இலட்ச ரூபாயும் நன்கொடையாக வழங்கப்பட்டது.

* 1972 முதல் புதுப்பிக்கப்படாத அகராதிகளில் துறையின் புதிய சொற்கள் சேர்க்கப்பட்டு முதலில் 10 துறைகளுக்குரிய சிறப்புச் சொல் துணை அகராதிகளைப் புதுப்பித்து வெளியிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

* தமிழக அரசு எடுத்த முயற்சியின் விளைவாக, அனைத்து புகை வண்டிகளிலும் தமிழில் பெயர்ப் பலகைகள் வைக்கப்பட்டுள்ளன. கம்பன் விரைவு வண்டி, மலைக்கோட்டை விரைவு வண்டி, வேகத் தொடர் வண்டி முதலிய சொற்றொடர்களை புகை வண்டிகளில் காணலாம்.

* வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களில் அகழாய்வு மேற்கொண்டு அரிய தொல்பொருட்கள் அகழ்ந் தெடுக்கப்பட்டுள்ளன. இராமநாதபுரம் மாவட்டத்

திலுள்ள அழகன்குளம், நாகப்பட்டினத்திலுள்ள பூம்புகார், ஈரோடு மாவட்டம் கொடுமணல் ஆகிய இடங்களில் பெரிய அளவில் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டன. திருக்கோயிலூர், கோவலன் பொட்டல், கரூர் போன்ற இன்னும் பல்வேறு இடங்களிலும் அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. மறைந்த பூம்புகார் நகரின் சில கட்டடப் பகுதிகளும், இருநூறு ஆண்டுகளுக்கு முன்பாகக் கடலில் மூழ்கிப்போன ஐரோப்பிய நாட்டைச் சார்ந்த கப்பலும், பூம்புகார் ஆழ் கடலாய்வு மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பூம்புகாரில் நிலம் மற்றும் நீர் அகழாய்வு மூலம் சேகரிக்கப்பட்ட பொருள்களைக் கொண்டு ஆழ்கடல் தொல்லியல் அகழ் வைப்பகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. படி எடுக்கப்பட்ட 10,000 கல்வெட்டுகளை அச்சில் கொணர ரூ.8.25 இலட்சம் ஒதுக்கப்பட்டது.

* வினாத்தாள்கள் அனைத்தும் தமிழில் முதலிலும், ஆங்கிலத்தில் அடுத்தும் அமைய ஏற்பாடு செய்யப்பட்டது.

* விடுதலைப் போராட்ட வீரர் ஜமதக்கினி அவர்கள், காரல்மார்க்சின் மூலதனம் நூலைத் தமிழில் மொழி பெயர்த்து வெளியிட அரசு ரூ.5 இலட்சமும், தினத்தந்தி திரு. சண்முகநாதன் அவர்கள் ஒரு தமிழன் பார்வையில் இருபதாம் நூற்றாண்டு என்னும் நூலை வெளியிட ரூ. 3 இலட்சமும் நிதியுதவி வழங்கப்பட்டன.

* வரலாற்றுப் பேராசிரியர் மறைந்த திரு. கே.கே. பிள்ளை அவர்களின் தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் எனும் நூலை வெளியிட 77,800/- ரூபாயும், ஜே.பி. ராட்லர் அவர்களால் தொகுக்கப்பெற்ற தமிழ் - ஆங்கில அகராதியை மறுபதிப்பாக வெளியிட 2 இலட்ச ரூபாயும், இதுகாறும் வெளிவந்த தமிழ் இலக்கிய வரலாறு தமிழ் நாட்டு இலக்கியங்களை மட்டுமே சார்ந்து நிற்கும் நிலையை மாற்றி இலங்கை, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளின் இலக்கிய வரலாறுகளையும் ஒருங்கிணைத்து புதிய தமிழ் இலக்கிய வரலாற்றை உருவாக்க 3 இலட்ச ரூபாயும், கன்னியாகுமரியில் நடைபெற்ற திருவள்ளுவர்

சிலை திறப்பு விழாவையொட்டி வெளியிடப்பெற்ற குறளமுதம், திருக்குறள் - நூல்கள், திருக்குறள் - ஆங்கிலக் கட்டுரைகள், திருக்குறள் - ஆங்கில மொழிபெயர்ப்பு ஆகிய 4 நூல்களை அச்சிட்டு அளித்தமைக்காக அச்சுச் செலவுத் தொகையாக 1,60,420 ரூபாயும், திருக்குறளை மலையாள மொழியில் மொழி பெயர்த்து வெளியிட திரு.எஸ்.ரமேசன் நாயருக்கு 2 இலட்ச ரூபாயும், திரு.மணவை முஸ்தபாவிற்கு கணினிக் கலைச்சொல் களஞ்சிய அகராதி வெளியிட 2 இலட்ச ரூபாயும் நிதியுதவியாக உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டன.

* 1997-98ஆம் நிதியாண்டில் சேலம், தஞ்சாவூர், விருதுநகர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் மண்டலக்கலை பண்பாட்டு மையங்கள் தோற்றுவிக்கப்பட்டன. மேலும், இரண்டு மண்டலக்கலை-பண்பாட்டு மையங்கள் தோற்றுவிக்கப்பட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

* தமிழ்நாட்டில் தமிழ்மொழியை ஒரு பாடமாகச் சொல்லித்தரும் மழலையர், தொடக்க நிலைப் பள்ளிகளுக்கே அரசின் ஏற்பு வழங்கப்படும் என்றும், தாய்த்தமிழ் தொடக்கப் பள்ளிகளுக்குக் கட்டணங்களில் சலுகை வழங்கப்படும் என்றும், ஐந்தாம் வகுப்புவரை அனைத்துப் பாடங்களும் தமிழ் அல்லது தாய்மொழியிலேயே பயிற்றுவிக்கப்படும் என்றும், முதன்மை மொழியாக தமிழ் அல்லது தாய்மொழியே இருக்குமென்றும் கழக அரசு ஆணையிட்டது. இந்த ஆணைக்கு எதிராக உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதின்பேரில், கழக அரசு உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது.

* 1998இல் 387 பேருக்கும், 1999இல் 159 பேருக்கும் மொழிப்போர்க் காவலர்க்கான ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது. ரூ.400/-ஆக இருந்த ஓய்வூதியம் ரூ.500/- ஆகவும், பின்னர் ரூ.1,500/-ஆகவும், அதன்பின் ரூ.3,000/-ஆகவும் கழக ஆட்சியில் உயர்த்தப்பட்டுள்ளது. மருத்துவப்படி ரூ.15/-ம் சேர்த்து, 2055 பேர் மாதம் ரூ.3,015/-ம், மரபுரிமையர்

426 பேர் மாதம் ரூ.1,515/-ம் பெறுகின்றனர். அத்துடன் இவர்களுக்கு இலவசப் பேருந்துப் பயணச் சலுகையும் வழங்கப்பட்டது.

* இலங்கை அரசு வேண்டுகோளுக்கிணங்க யாழ்ப்பாணம் நூலகத்திற்கு 2,573 தமிழ் நூல்கள் அனுப்பப்பட்டுள்ளன.

* பல்லவர் - பாண்டியர் காலம் பகுதி-2, சோழப் பெருவேந்தர் காலம் பகுதி-1 மற்றும் பகுதி-2 ஆகிய நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. தமிழக வரலாறு முழுவதையும் ஒரே தொகுதியாக வெளியிடும் பணி நடைபெற்று வந்தது.

* 515 சொற்கள் அடங்கிய வணிக நிறுவனப் பெயர்ப் பலகைகளில் தமிழ் எனும் நூல் வெளியிடப்பட்டது. சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகம் இதனை இணையத்தில் வெளியிட்டுள்ளது. தமிழில் பெரிய எழுத்திலும், அடுத்து ஆங்கிலத்திலும், அடுத்து விரும்புகின்ற மொழியிலும் எழுதிட ஆணை பிறப்பிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

* கல்கத்தாவிலும், மும்பையிலும் தமிழ் மையம் அமைத்திட ரூ.12 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. திருவனந்தபுரம் பன்னாட்டுத் திராவிட மொழியியற் பள்ளியில் பேரா. பி. சுந்தரம்பிள்ளை நினைவாக நூலகக் கட்டடம் கட்டுவதற்குக் கழக அரசு ரூ.10 இலட்சம் வழங்கியது. 1998-99ஆம் ஆண்டு மானியமாக இந்நிறுவனத்திற்கு ரூ.10 இலட்சம் வழங்கப்பட்டது.

* மொரீசியசுத் தீவில் வாழும் தமிழாசிரியர்களுக்கும், இசையாசிரியர்களுக்கும் பயிற்சி அளிக்கத் தமிழ் நாட்டிலிருந்து தமிழ் ஆசிரியர் ஒருவரையும், இசையாசிரியர் ஒருவரையும் மொரீசியசுத் தீவிற்கு ஓராண்டு காலத்திற்கு அனுப்பவும், இத்திட்டத்தை மொரீசியசில் மகாத்மா காந்தி நிறுவனம் மூலம் செயல்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

* மலேயாப் பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை நிறுவிட ரூ.50 இலட்சம் ஒதுக்கப்பட்டது.

* தேர்ந்தெடுக்கப்பெற்ற வெளிநாடுகளுக்கு தமிழ் மொழி, இலக்கியம், பண்பாடு தொடர்பான நூல்களை அன்பளிப்பாக வழங்குவதற்கென கழக அரசு ரூ.5 இலட்சம் ஒதுக்கியது. இத்திட்டத்தின்கீழ், நூல்கள் வாங்கி 20 நாடுகளுக்கு அனுப்பத் திட்டமிடப்பட்டு இதுவரை மொரீசியசு, சிங்கப்பூர், யாழ்ப்பாணம், ரீயூனியன் ஆகிய நாடுகளுக்கு நூல்கள் அனுப்பப்பட்டுள்ளன. பிறநாடுகளுக்கும் அனுப்பிட ஏற்பாடு நடந்து வந்தது.

* 1-11-96 முதல் வானொலியில் நாளொன்று பிறக்கச் சொல் ஒன்று அறிவோம் எனும் நிகழ்ச்சி தொடங்கப்பட்டு நடைபெற்று வந்தது.

* திரைப்பட உரையாடலாசிரியர் மறைந்த திரு. இளங்கோவன் குடும்பத்திற்கு ரூ.2.25 இலட்சம், உ.வே.சா. நூலகத்தில் சிலையமைப்பில் பற்றாக் குறையை நிறைவு செய்ய ரூ.50,000, மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்கு ரூ.45 இலட்சம், திண்டுக்கல்லில் கலையரங்கம் கட்ட ரூ. 12 இலட்சம், தில்லித் தமிழ்ச் சங்கக் கட்டடத்திற்காக ரூ.10 இலட்சம், பெங்களூர்த் தமிழ்ச் சங்கம் தமிழ்வழி நடத்தும் காமராசர் உயர்நிலைப் பள்ளிக்கு ஆண்டுக்கு ரூ.10,000/-, மறைமலையடிகள் நூலகத்திற்கு வழங்கப்பட்டு வந்த ரூ.10,000/- உயர்த்தப்பட்டு ஆண்டு நல்கையாக ரூபாய் ஒரு இலட்சம், மும்பைத் தமிழ்ச் சங்கத்திற்குச் சங்கக் கட்டடத்தைப் புதுப்பிக்க ரூபாய் ஒரு இலட்சம், தென் மொழிகள் புத்தக நிறுவனம் கூரியர் இதழ் வெளியிட ரூபாய் ஒரு இலட்சம், தமிழில் தந்தி அனுப்பும் முறையைக் கண்டுபிடித்த புலவர் அ.சிவலிங்கனாரின் பணியைப் பாராட்டும் வகையில், அவருக்கு ரூ.50,000/-, ந.மு. வேங்கடசாமி நாட்டார் திருவருள் கல்லூரி வகுப்பறை கட்ட ரூ. 15 இலட்சம் நிதி உதவிகள் வழங்கப்பட்டன.

* 19-2-97இல் இ.மு. சுப்பிரமணியன் பிள்ளை, மே.வி.வேணுகோபால் பிள்ளை, 24.12.98இல் மங்கலங் கிழார், 4.8.97இல் மனோன்மணியம் சுந்தரனார், 30.10.1999இல் ராய சொக்கலிங்கம், 13.3.2000இல்

கி.ஆ.பெ.விசுவநாதம் ஆகியோரின் நூற்றாண்டு விழாக்கள் கொண்டாடப்பட்டன.

* 1 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் 1996ஆம் ஆண்டிற்குப் பிறகு தேவநேயப் பாவாணர் (20 இலட்சம் ரூபாய்), மறைமலை அடிகளார் (30 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய்), தமிழ்த் தென்றல் திரு.வி.க. (20 இலட்சம் ரூபாய்), பேராசிரியர் கல்கி (20 இலட்சம் ரூபாய்), சுதந்திரப் பொன்விழா நிறைவினையொட்டி, சுதந்திரக் கனலைப் பரப்பிய தமிழ்ச் சான்றோர்களாகிய கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, பா. ஜீவானந்தம், நாமக்கல் கவிஞர், வ.உ.சிதம்பரனார், சுத்தானந்த பாரதியார், ஏ.எஸ்.கே. அய்யங்கார், வ.ரா., கவி கா.மு.ஷெரீப், நாவலர் சோமசுந்தர பாரதியார், பரலி சு.நெல்லையப்பர், வ.வே.சு. அய்யர், காரைக்குடி சா. கணேசன், எஸ். டி.எஸ். யோகி ஆகிய 13 பேரின் நூல்களும் அரசுடைமையாக்கப்பட்டு அவர்களது குடும்பம் ஒவ்வொன்றிற்கும் 5 இலட்சம் ரூபாய், வெ.சாமிநாத சர்மா (5 இலட்சம் ரூபாய்), சாமி சிதம்பரனார் (பத்து லட்சம் ரூபாய்), மயிலை சீனி வேங்கடசாமி (பத்து இலட்சம் ரூபாய்), கவிஞர் முடியரசன் (பத்து இலட்சம் ரூபாய்) ஆகியோருக்கு பரிவுத் தொகை வழங்கப்பட்டது. பன்மொழிப் புலவர் கா.அப்பாத் துரையார் அவர்களின் நூல்கள் அரசுடைமையாக்கப்பட்டு, அவரின் குடும்பத்தாருக்கு பத்து லட்ச ரூபாய் பரிவுத் தொகை வழங்கப்பட்டது.

* ஏற்கெனவே இருந்த திருவள்ளுவர் விருது, திரு.வி.க. விருது, பாரதிதாசன் விருது ஆகியவற்றுடன் 1997 இல் பாரதியார் விருதும், 2000இல் கி.ஆ.பெ. விசுவநாதம் விருதும் நிறுவப்பட்டன. தமிழ் அறிஞர்களுக்கு வழங்கப்படும் இந்த விருதுத் தொகை ரூ.10 ஆயிரம் என்பது 1996இல் ரூ.20 ஆயிரமாகவும், 1998இல் ரூ.1 இலட்சமாகவும் கழக ஆட்சியில் உயர்த்தப்பட்டது.

* 1996 முதல் திருவள்ளுவர் விருது முனைவர் கு. மோகனராசு, இரா. சாரங்கபாணி, வா.செ. குழந்தை சாமி, த.சி.க.கண்ணன் ஆகியோருக்கும், திரு.வி.க. விருது டாக்டர் மா. நன்னன், மா.சு. சம்மந்தன்,

புலவர் மருதவாணன், யாழ்ப்பாணம் கா. சிவத்தம்பி ஆகியோருக்கும், பாரதிதாசன் விருது கவிப்பேரரசு வைரமுத்து, சரளாராஜ கோபாலன், மலேசியக் கவிஞர் முரசு நெடுமாறன், பாவலர் மணிவேலன் ஆகியோருக்கும், பாரதியார் விருது மதிவண்ணன், குமரி அனந்தன், கவிஞர் வாலி ஆகியோருக்கும், கி.ஆ.பெ. விருது கோ. முத்துப் பிள்ளைக்கும் வழங்கப்பட்டுள்ளன. 23 சிறார் சிறுமிகளுக்குக் குறள் பரிசு மாதம் ரூ.1000/- அவர்கள் வாழும் காலம் வரை வழங்க 8.1.2000 அன்று ஆணையிடப்பட்டு, 9.2.2000 அன்று முதல் வழங்கப்பட்டு வருகிறது. மத்திய அரசு ஞானபீட விருது வழங்குவதுபோல், தமிழ் எழுத்தாளர்களுக்குக் குறள்பீட விருது வழங்கிட, தமிழ்ச் சங்கப் பலகை அமைக்கப்பட்டது.

* சிறந்த படைப்பிலக்கியச் செம்மல் ஒருவர்க்கு அவர்தம் ஒட்டுமொத்த வாழ்நாள் சாதனைக்காக குறள்பீட விருது, தமிழ் இலக்கியச் சங்கப் பலகைக் குறள்பீடத்தின் சார்பில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. விருதுத் தொகை ரூ.2 இலட்சம்.

* தமிழ் மொழி, இலக்கிய வளர்ச்சிக்கு உதவும்படியாக, கவிதை, அறிவியல், நாட்டுப்புறவியல், மொழி பெயர்ப்பு, திறனாய்வு ஆகிய ஐந்து துறைகளில் சிறந்த நூல்கள் படைத்தும், தொண்டாற்றியும் வரும் ஐவருக்கு குறள்பீடப் பரிசாக தலா ரூ.25,000/- வழங்க முடிவெடுக்கப்பட்டது.

* தமிழ்மொழி, இலக்கிய வளர்ச்சிக்கு உதவும்படியான சிறந்த நூல்கள் படைத்த 30 வயதுக்குட்பட்ட இளம் எழுத்தாளர்கள் பத்துப் பேருக்கு குறள்பீடப் பாராட்டிதழ் வழங்க முடிவெடுக்கப்பட்டது. பாராட்டுத் தொகை ரூ.5,000/- ஆகும்.

* மக்கள் செய்தி ஊடகங்களிலும், பொது வகையிலும் தமிழ் உச்சரிப்பை நெறிப்படுத்தும் நோக்கில் பேச்சொலிப் பிழைநீக்கக் குறும்படம் தயாரிக்க வல்லுநர் குழு அமைக்கப்பட்டது. குறும்படத் தயாரிப்புப் பணி மேற்கொள்ளப்பட்டது.

* இருபதாம் நூற்றாண்டுக்குத் தமிழர்களின் பங்களிப்பை விளக்கி உரைக்கும் வகையில், இருபதாம் நூற்றாண்டுக்குத் தமிழர்களின் பங்களிப்பு என்னும் தலைப்பில் அரசியல், சமூகச் சீர்திருத்தம், விளையாட்டு, பொருளாதாரம், வரலாறு, கல்வி, நுண்கலைகள், இயல் அறிவியல், பொறியியல் தொழில் நுட்பம், மருத்துவம் ஆகிய பொருண்மைகளைக் கொண்ட நூலைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் தயாரித்து வெளியிடவும், கவிதை, சிறுகதை, புதினம், நாடகம், ஆய்வுகள் ஆகிய பொருண்மைகளில் தனித்தனியே ஐந்து நூல்களைத் தயாரித்து வெளியிடவும் ரூ.16,64,180/- ஒப்பளிப்புச் செய்யப்பட்டு, இதற்கென வல்லுநர் குழு ஒன்றும் அமைக்கப்பட்டு, உரிய முறையில் கட்டுரைகள் எழுதும் பணியும், படைப்புகளைத் தொகுக்கும் பணியும் நடைபெற்றன.

* அரசின் தலைமைச் செயலகத் துறைகளிலும், துறைத் தலைமை அலுவலகங்கள், தன்னாட்சி நிறுவனங்கள், வாரியங்கள், கழகங்கள், இணையங்கள் ஆகியவற்றின் தலைமை அலுவலகங்களிலும் ஆட்சிச் சொல் அகராதியில் உள்ள சொற்களில் நாள்தோறும் ஓர் ஆங்கிலச் சொல்லையும், அதற்குரிய தமிழ்ச் சொல்லையும், ஒரு திருக்குறளைப் பொருளுடனும் கரும்பலகையில் எழுதி வைக்க வேண்டுமென ஆணையிடப்பட்டது.

* திருக்குறளுக்குப் பண் அமைத்து, சுரம் அமைத்து 1958ஆம் ஆண்டிலேயே அறத்துப் பாலின் முதல் பகுதியை (கீர்த்தனையாக) வெளியிட்டுள்ள இசை வித்தகர் மயிலாடுதுறை விசுவநாத சாஸ்திரி அவர்களின் அரும் தொண்டினைப் போற்றி, அவரது இசைக் குறிப்புகளுடன் அறத்துப்பால், பொருட்பால் இரண்டையும் அச்சிட்டு இசைக் கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் பாடமாக வைக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

* நமது பண்பாட்டுப் பெருமையை நானிலமீது நிலைநாட்டிய பெருமகனார் விவேகானந்தர், சென்னையில் தங்கியிருந்த கடற்கரை மாளிகையில்

கலாச்சார கண்காட்சி ஒன்றினை நடத்திக்கொள்ள ராமகிருஷ்ண மடத்தினருக்கு ஓர் ஒப்பந்த அடிப்படையில் ஆரம்பக் கட்டமாக மூன்றாண்டு காலத்திற்கு கழக அரசு அனுமதி வழங்கியது.

* தமிழில் வெளிவரும் நாளிதழ்கள் மற்றும் இதழ்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம் உருவாக்கப்பட்டது. நாளிதழ்களுக்கு முதல் பரிசு ரூ.50,000/- இரண்டாம் பரிசு ரூ.30,000/- மூன்றாம் பரிசு ரூ.20,000/- கிழமை இதழ்களுக்கு முதற்பரிசு ரூ.20,000/- இரண்டாம் பரிசு ரூ.15,000/- மூன்றாம் பரிசு ரூ.10,000/- திங்கள் இதழ்களுக்கு முதற்பரிசு ரூ.20,000/- இரண்டாம் பரிசு ரூ.15,000/- மூன்றாம் பரிசு ரூ.10,000/- எனப் பரிசுகள் வழங்கவும், பரிசு பெறுவோரைப் பாராட்டவும் ரூ. இரண்டு இலட்சம் ஒப்பளிப்புச் செய்யப்பட்டது. பரிசுக்குரிய இதழ்களைத் தெரிவு செய்யும் பணியை மேற்கொள்ள நீதியரசர் கோகுல கிருஷ்ணன் தலைமையிலான குழு அமைக்கப்பட்டது.

* உடன்பிறப்பே, வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும் என்று முழங்கிடும் நமது இதய ஒலிக்கு எடுத்துக்காட்டாகத்தான் தமிழ் காத்திடும் போரிலும் - தமிழ் வளர்த்திடும் முனையிலும் - தளராது நடை போடுவது தி.மு.க. என்பதை கழக அரசின் வாயிலாக எடுத்துக் காட்டி, இப்போது தமிழ்ப் பண்பாடு காத்திடும் களத்திலும் நிற்கிறோம் என்பதை சுட்டிக்காட்டவே இந்தக் கடிதம்!

* பண்பாடு காத்திட பாசமுள்ள உடன்பிறப்பே! இன்று பயணமாகிடு! நாளை சென்னையில் சந்திப்போம்!

அன்புள்ள,

மு.க.

4-1-2002

2655. எங்குற்றான் என் தமிழன்?

உடன்பிறப்பே,

(1973ஆம் ஆண்டு ஏப்ரல் 12ஆம் நாள் பறம்பு மலையில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் முன்னின்று நடத்திய பாரி விழாவில் ''வழிநடைப் பயணம்'' என்ற கவியரங்கில் தலைமையேற்றுத் தலைவர் கலைஞர் பாடிய கவிதையில் சில பகுதிகள் வருமாறு:-)

''எட்டுவழி குறிப்பிட்டுப் பாடுகின்றீர்-தமிழர்க்கு
முட்டுவழி காட்டியவர் யார் என்பீர்?
குட்டுவழிப் பேர்வழிகள், நாம் குனியும் வரை
தட்டுவழி இல்லாமல் தர்பார்தான் நடத்திடுவர்!''

அதனாலே,

எட்டும்வழி இங்குநாம் கண்டிடுவோம்!
கபிலர் வழி, கவிஞர் வழி மட்டுமல்ல!
கண்போன்ற நட்புக்குச் சிறந்த வழி!
கருணை வழி!
சிவிகையொடு செங்கோலும் தேரும் படையும்
செருக்களத்தில் தோற்ற பாரி செத்து வீழ
செம்மாங்கனியிரண்டாம் அவன் மகளிர் வாழ
அம்மா (க்) கவி கபிலர் பட்டபாடு...
இறுதியிலே,
காரிமன்னன் செல்வர்க்குப்
பாரிமகளிர் துணையேயானார்,
கபிலரது முயற்சியினால்!
நாடாண்ட தன் தோழன் - தமிழ்
நாயகனாம் பாரிக்குத் தான் செய்யும்
தனிக்கடமை முற்றிற்றென்று

ஏடாண்ட பெருங்கவிஞர் கபில மேலோன்,
''என்றன் பாரியுடன் இனிச் சேரத் தடையில்லை
எனக்கருதி வடக்கிருந்து உயிர் நீத்தார்!
சாகின்றான் நண்பன் எனில், அவன் தலையில்
அவசரமாய்க் கல் ஒன்றைப் போடுகின்ற
ஆருயிர்த் தோழருண்டு இந்நாளில்!
அவரெல்லாம் வழிமாற்றி நடப்பதற்குக்
கபிலர்வழி... கற்கின்ற வழியன்றோ!
கோல்ஊன்றி நடக்கின்ற ஔவைப்பாட்டி -செங்
கோல்முறை சாயாமல் இருப்பதற்கு வழிகள்
சொன்னாள்!
வள்ளுவர் வழி நடந்தால் - நெஞ்சில்
உள்ளுவரோ பகைவர் நெருங்க!
இல்லறத்தைத் துறந்தவழி இளங்கோ வழி!
தமிழர்க்கு;
நல்லறத்தைத் தந்தவழி அவர்தந்த சிலம்புவழி!
அப்பரது வாழ்க்கைவழி அன்புவழி...!
அதுபோன்றே அடிகள் வள்ளலார்வழி!
முத்தனைய கொள்கைகளை வகுத்தவழி;
அறிஞர் அண்ணாவழி!..... அருமை அண்ணாவழி!
வழிநடைப் பயணமென வாகான தலைப்பீந்து
விழியொத்த தமிழினம்தான் வளர்வதற்கு
வகைசெய்தீர்! வாழ்க! வாழ்க!

இனம் வாழத் தினம் அயராப் பணிபுரிவோம்.
சினம் கொள்ளல் தீதன்று; தமிழர்க்குக் கேடு
வந்தால்!
சிங்கத்தின் கூட்டமன்றோ; சிறுநரிகள்,
ஊளைக்கா தலைவணக்கம்?
பொங்குற்ற புலிகள் முன்னே புல்லியர்க்கா
ஆர்ப்பாட்டம்?

எங்குற்றான் என் தமிழன்?
இங்குள்ள இழிவுகளை எதிர்ப்பதற்குத் துணிவின்றிச்
செங்குத்துத் தூணைப்போல் நிற்கின்றானா?
அங்கத்தில் துடிப்பின்றிக் கிடக்கின்றானா?
அய்யோ பாவம் அவனுக்குச்

சங்கத்தில் பாட்டெழுதி அரங்கேற்றுங்கள்!
தங்கத்தில் சிலையொன்று அமைத்திடுங்கள்!
உளி இரண்டை உதட்டின் மேல் வைத்தாற்போல்
ஒளிமிகுந்த பாண்டியர்க்கு மீசையுண்டு!
இளி வந்ததில்லை என்று இனமுழக்கம் செய்வது
போல் காதின்
வெளிவரையில் படர்ந்திருக்கும் சோழன் மீசை!
களிறாட்டுந் துதிக்கை போன்று
கண் நோக்கி வளர்ந்திருக்கும் - சற்று
நெளிகாட்டும் நீளமீசை சேரன் மீசை!
அன்றந்த மீசையெல்லாம் துடித்ததனால் - பகைக்
குன்றங்கள் பொடியான கதைகள் உண்டு
இன்றந்த வீரம் வேண்டும் - மிகவும் வேண்டும்!
இன்செயலில் வீரம் தேக்கி
வன்செயல்கள் அறவே போக்கி முன்பிருந்த
தமிழர்களின் உணர்வைப் பெறுக....
மான உணர்வைப் பெறுக....
தன்மான உணர்வைப் பெறுக...!''

அன்புள்ள,

மு. க.

5-1-2002

2656. குப்பனின் குமுறல்!

உடன்பிறப்பே,

ஓடி வா ராஜா! ஓடி வா! ஆளுக்கு ஐம்பது ரூபாய் ஒரு நாள் சம்பளம்! சாம்பார் பொட்டலம்! தயிர் சாத பொட்டலம்! காலை முதல் மாலை வரையில்தான் வேலை!

''செவிக்குணவில்லாத போழ்து சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும்'' என்ற குறளை அப்படியே மாற்றி அறிவியல் தமிழில் குறள் ஒன்றை எழுதிச் செயல்படுத்துகிறோம். அதைப் படித்துப் பயன் பெற வாரீர்! வாரீர்!

இதோ, அந்தக் குறள்! வயிற்றுக்குணவில்லாத போழ்து சிறிது செவி(ட்டு)க்கும் ஈயப்படும்.

இந்தப் புதுக் குறளையும் படித்து விட்டு, மேலும் பல புதிய இலக்கிய மாற்றங்களையும் காணலாம் என்ற அடங்காப் பசியுடன் (தமிழ்ப் பசியைத்தான் குறிப்பிடுகிறேன்) அந்த மண்டபத்துக்குள் எங்கே எலுமிச்சை சாதம்? எங்கே தயிர் சாதம்? எங்கே கிச்சடி? என்று கூவியவாறு நுழைந்த குப்பன், அந்த தலைப்புகளில் புத்தகங்கள் எங்கேயுள்ளன என்று தேடியலைந்தான்!

அவன் கண்களில் அந்த மண்டபத்தின் ஒரு மூலையில் சுமார் ஐம்பது பேர் ஒருவர் மீது ஒருவர் விழுந்தவாறும், ஒருவரை ஒருவர் பிடித்துத் தள்ளியவாறும் எதையோ ஒன்றைப் பெறுவதற்குத் துடியாய்த் துடிப்பது தெரிந்தது.

அது என்னவாக இருக்கும்? எதற்காக இவர்கள் இப்படி அலை மோதுகிறார்கள் என்று வியந்தவாறு, அவர்கள் மோதிக்கொண்டும், முழங்கிக் கொண்டுமிருந்த இடம் நோக்கி விரைந்தான் குப்பன்!

என்ன முழக்கம் அது?
அறிவோம் அறிவியல் தமிழை!
அறிந்தே தீருவோம் தமிழ்ப் பண்பாட்டை!

என்ற முழக்கமா? அது ஏன் அந்தத் தேவையற்ற முழக்கம்?

அடைந்தே தீருவோம் எலுமிச்சை சாதம்!
ஆமாம் எமக்கு வேண்டும் தயிர் சாதம்!
அது என் கிச்சடி! அதைத் தொடாதே!

இந்த இன்பத் தமிழ் முழக்கம்தான் அந்தக் கும்பலில் இடை விடாது கேட்டுக் கொண்டிருந்தது.

ஆகா! என்னே ஆர்வம்! அறிவியல் தமிழில் வெளி வந்துள்ள தயிர், எலுமிச்சை, கிச்சடி சாத(னை) நூல்களை வாங்கிப் படிக்க, ஏங்கித் தவிக்கும் என் தமிழர்களின் மொழிப்பற்றுதான் என்னே! என்னே!

என்று வாய் திறந்து போற்றிப் புலம்பியவாறு, கூட்டத்தின் இடுக்கில் நுழைந்து, எங்கே அந்த அறிவியல் தமிழ் ஏடுகள்? என்று விழிகளை அகல விரித்துத் தேடினான்.

ஒருவர் கையிலிருந்த பொட்டலத்தை இன்னொருவர் பிடுங்க, அதை மற்றொருவர் தடுக்க, அதைப் பார்த்த குப்பன், அடடே! புதிய நூல்கள் அல்லவா? அதனால் அட்டை சுற்றி மூடி வைத்து நூலால் கட்டியிருக்கிறார்கள் என்று எண்ணிக் கொண்டான்.

இறுதியில் அந்த நெருக்கடியில் அவன் கைக்கும் ஒன்று கிடைத்தது - வாழ்க, தமிழ் வரப்பிரசாதம்! என்று வாழ்த்தியவாறு அதை எடுத்துக் கொண்டு தலைக்கு மேலே தூக்கியவாறு கூட்டத்தை விட்டு வெளியே வந்தான் குப்பன்!

வரப் பிரசாதமல்ல! தயிர் சாதப் பொட்டலமென அறிந்து, இதுவும் பரவாயில்லையென்று ஒரு பிடி பிடித்தான்.

அதன் பிறகே மண்டபத்தை ஒரு நோட்டம் விட்டான். சுமார் இரண்டாயிரம் பேருக்கு இடமுள்ள அந்த மண்டபத்தில் நாலாவது தமிழை அறிய வந்தவர்கள் நானூறுக்கும் குறைவானவர்களே!

மேடையைப் பார்த்தான் - அங்கே உண்மைத் துறவிகள், ஆதினகர்த்தர்கள் அடக்கமாக வீற்றிருந்தனர். காவியுடை! கால்களிலோ மிதியடி கூட இல்லை. ஆம்! வெறுங்காலுடன் வீற்றிருந்தனர். அடக்கம் அமரருள் உய்க்கும் என்ற குறள்

உணர்ந்த ஆதினகர்த்தர்கள். சாதாரண நாற்காலிகளே அவர்களின் ஆசனங்களாக இருந்தன. ஒரு ஆதினகர்த்தர் மட்டும் இவர்களை விடப் பெரியவர் போலும்! ராஜ சிம்மாசனம் - மேடையில் கழற்றிவிட்ட தோல் செருப்புகள் வேறு காட்சி தந்து கொண்டிருந்தன! என்னே துறவு இலக்கணம் என்று குப்பன் தொழுது நின்றான்.

நாலாவது தமிழ் முழங்கத் தொடங்கியது - தமிழ் மொழி பெயர்ப்பு எவ்வளவு கேலிக்குரியது என எடுத்துக்காட்டி, தமிழையே கேலிக்குரியதாக்கியது தான் உச்ச கட்ட தமிழ் வளர்ச்சியாக இருந்தது.

சில நற்குண சீலர்களைத் தவிர, மற்றவர்கள் எல்லாம், தம்மெதிரே கடலைப் போல் திரண்டிருந்த (மன்னிக்கவும்) சிதறிய கடலைகள் போல் திரண்டிருந்த நானூறுக்குக் குறைவான தமிழ் ஆர்வலர்களிடம் அறிவியல் தமிழை அறிமுகப்படுத்தியும், நாலாவது தமிழ் என்ற பெயரால் நாலாந்தரத் தமிழில், கண்ணகியும் மாதவியும், இருவருமே கற்புடைய மகளிர் தான் என்பதை மறந்துவிட்டு, காம்போதி பாடி கதைத்ததையும், குப்பனால் காது கொடுத்துக் கேட்க முடியவில்லை.

மண்டபம் முழுமையும் அம்மா அம்மா என்ற குரல் ஒலித்தபடி இருந்தது.

குப்பன், வெளியே வந்தான். வாசலில் நூறு போலீசார் தடுத்து நிறுத்தி எங்கே போகிறீர்? என்றனர்.

சும்மா போகிறேன் என்றான் குப்பன்! அது போலீசார் காதில் அம்மா என விழுந்தது. அதனால் குப்பனுக்கு வழி விட்டனர்.

தப்பித்தோம் பிழைத்தோம் என்று அந்தத் தமிழோசை(?) யைத் தவிர்த்து, சீரணி அரங்கின் அருகே கடலில் அலையோசையுடன் இணைந்து ஒலித்த கண்ணகியின் புகழோசை கேட்கும் வாய்ப்பு பெற்றான். அவன் குமுறல் குறைந்தது!

அன்புள்ள,

மு.க.

8-1-2002

2657. இன முழக்கம் செய்திடுவோம்; இழிவுகளை அகற்றிடுவோம்!

உடன்பிறப்பே,

அண்ணா என்ற இளந்தென்றலுக்கு நாம் தம்பிகள்!
அதே நேரத்தில் பெரியார் என்ற
பெரும் புயலுக்கு நாம் பேரப் பிள்ளைகள்!
வடமொழி கலாச்சாரத்தார்
வரலாற்றை மறக்க வேண்டாம்!
அடலேறுத் தமிழ் இனத்தின் கால் மிதித்தால்
நம் கால்கள் தமிழ்ப் பகையின்
தலை மிதிக்கும் எச்சரிக்கை!
நாற்பதாண்டு கால மொழிப்போரின் சிப்பாய்கள் நாம்
நமது குலக்கொழுந்துகள் எல்லாம்
துப்பாக்கி வேட்டுக்குப் பலியாகி
நடுத்தெருவில் பிணங்களாக முளைத்த போதும்
தீக்குளித்து அணையாத விளக்குகளாய் ஆனபோதும்
நாடு தழுவிய மொழிப் புரட்சிப் பூகம்பத்தில்
பூக்களாய்ச் சிரித்தவர்கள் நாம்!
பூனைகளே சிறுத்தையைப் போல் உறுமும்போது
சிறுத்தைகள் நாம் சினந்தெழுந்தால்
புவி நடுங்கப் போர் நடக்காதா?
சிறைச்சாலை, சித்ரவதை இவையெல்லாம்
கழகத்துக்காரனுக்குப் பழைய கதை!
ஒரு தமிழன் மிச்சமாக உயிரோடிருக்கும் வரை
ஒப்ப மாட்டான்! ஒதிய மிலார் – முருங்கைக் கொம்புகள்
தப்பமாட்டா; இரும்புத் தூணுடன் மோத வந்தால்!
பெரியாரும் அண்ணாவும்
இல்லாததாலே – நம்
பிரியம் போல் நாட்டை
நடத்தலாம் என்றெண்ணி இறுமாப்பு கொள்ளாதீர்!

அவர்கள் இருந்திருந்தால் எங்கள் உணர்வென்னும்
நெருப்பாற்றுக்கு அணைகளாய் அமைந்திருப்பார்!

மெழுகு
மரங்களே! நீங்கள் உருகி வழியாமல் தப்பியிருப்பீர்!

மூக்கணாங் கயிறில்லா காளையின் முன்னே
முண்டா தட்டுவது முட்டாள்கள் வேலை!
பொறுமைக்கும் எல்லையுண்டு!
அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல
அமைதியாய் இருக்கச் சொன்ன அண்ணன்கூட
மறையாமல் இருந்திருந்தால்
பொங்கி எழுக தம்பீ! என்றே முழங்கிடுவார் வேறென்ன?
நாட்டாட்சியா நடக்கின்றது இப்போது --
காட்டாட்சி யன்றோ தொடர்கின்றது
எதிர்க்கட்சியை
எப்படி முடக்கலாம்
என்பதே சிந்தனை.
எந்த இடமானாலும்
நமைப் பற்றியே நிந்தனை.
கொடும் வழக்கு, கொலை வழக்கு என்று
கடும் வழக்குப் போடுவதால் கழகம் மிரளுமாம்!
கோழி குத்திக் கோபுரம் சாயுமாம் --
கங்கை யமுனை பெருக்கெடுத்து
வட புலத்தில் நுழைந்தது போல்
கள்ளமது பெருக்கெடுத்துத்
தமிழ் நிலத்தில் பாயுதய்யா!
மது அரக்கனை விரட்டுவேன் என மார்தட்டுகின்றார்
அவன் என்ன? அரக்கன் வடிவிலா இருக்கின்றான்!
விரட்டுவதற்கு?
ஆளுங்கட்சி அமைப்பாளனாகவன்றோ சிரிக்கின்றான்!
கற்பழிப்பு, கொலை, களவு,
கண்ணீர்ப் புகை, துப்பாக்கிப்
பிரயோகம் - லஞ்ச ஊழல்
நிர்வாகக் குறுக்கீடு - நீதியிலும்
தலையீடு -- ஆள் கடத்தல்
ஆயிரம் சான்றுண்டு - அதற்கெனத்

தனியாக ஒரு பேச்சரங்கம் நடத்த வேண்டும்.
அத்தனையும் மறைத்து விட்டுப்
புத்தனைப் போல், ஏசுவைப் போல்,
நடிக்கின்றார் நம்பச் சொல்லி!
நெல்லிக்காய் மூட்டையென்று தமிழர்களை
நினைத்து விட்ட காரணத்தால்
நெஞ்சமுத்தம் வளர்கிறது; அடக்க வேண்டும்!
எல்லாத் தமிழர்களும் எப்போது கூடுவது?
பொல்லாதார் ஆதிக்கம் எப்போது புறங்காணச் செய்வது?
எழுந்திடும் கேள்வி, எனக்குத் தெரியும்.
கரிசல் உண்டு மண்ணிலே
களைகள் உண்டு கழனியில்
பதர்கள் உண்டு நெல்லிலே
துரோகி உண்டு தமிழரில்
தொலைவில் இல்லை அருகிலே!
பதவிகள் வேண்டும்; தினம்
பல்லக்கு சவாரி வேண்டும் -- அதற்காகப்
பகைவரின் பாதத்தைக் கழுவிட வேண்டும் - எனில்
பாய்ந்தோடி முந்திக் கொள்ளும் வீடணர்கள் காணும்
சுகம்

பரத்தையர்கள் ஆடவரின் பிணத்தைத் தழுவி
காசு பெறும் சுகம் போல் தானே
-- அதனால் --
தமிழ்த் துரோகிகளைக் கண்டு
அஞ்ச வேண்டாம் - அவர்கள்
துருப்பிடித்த ஆணிகள்!
அண்ணா பெரியார் படங்களைக் கூட
அந்த ஆணிகள் தாங்கமாட்டா!
அவர்தம் கொள்கைகளை எங்ஙனம் தாங்கிடுவார்!
கோழைகள் விலகட்டும்
வீரர்கள் தொடரட்டும்
கொட்டுக முரசென்று
இனமுழக்கம் செய்திடுவோம்; இழிவுகளை
அகற்றிடுவோம்.

அன்புள்ள,
மு.க.

9-1-2002

2658. களம் சென்றவனை நினைத்து கடலுக்குள் சென்றாள்!

உடன்பிறப்பே,

(தந்தை பெரியார் அவர்களால் திராவிடத் தளபதி என்று பெருமிதம் பொங்கிட அழைக்கப்பட்ட தூத்துக்குடியின் தென்பாண்டிக் கடல் முத்து என்னருமைத் தோழன் கே.வி.கே. சாமி 20-9-1956 அன்று கொலையுண்ட நிகழ்ச்சியை அடிப்படையாக வைத்து அப்போது எழுதியது இது.)

‘‘சோலையிலே தென்றலிலே இன்பம் பின்னர்-
சொந்த நாட்டைக் காப்பாற்றச் சுழற்றுவேன்
வாளை”
என முழங்குகின்ற காளை!
மொட்டவிழாப் பருவ மலராயிருக்கும்போதே
சுட்டெரிப்பேன் பகையை என்று
சுடர் முகந்தூக்கி நின்ற குத்துவிளக்கு! அவன்
கட்டவிழா மேனிதனைக் கரந்தொட்டுத்
தழுவியாடக்
காத்திருந்தாள் பூவையெனும் பாவை
தொழிலாளக் குலத்துக்கோர் முத்தென்பார்
அவனை! - எழிற்
சத்து மிகும் கனியென்பார்;
பனி நனைந்த மலரென்பார் அவளை!

இருவருமே ஒருவராய் ஆவதெப்போது?
உருவிய வாளைச் சற்று உறையிலே போடுமே
அத்தான்
என்று முரசு உறுமுகின்ற களம் நோக்கி வாள்
தூக்கிப்
பாய்கின்ற காதலனைத் தடுத்து நின்றாள்.

“விடுதலைக்குத் தாவுகின்ற என்னை உன்றன்
காதலுக்குக் காவு கொடுக்க எண்ணாதே
பெண்ணே!’’
கெடுதலைக்கு ஆளாக்கிக் கீழோரால் கீழ்
என்று இகழப்பட்ட
என்றன் செந்தமிழர் திரு நாட்டை வாழ்விக்க
எழுந்திருக்கும்
அணிவகுப்பில் நிற்பேன்
மணிமாடம் –
கனிப் பேச்சு – வேண்டேன் என்றான்.

“முற்றிலுமே வெறுத்தீரோ?” என்றாள்
“பற்றில்லை உன் மீது’’ என்றுரைக்கமாட்டேன்
பாம்புப்
புற்றில்லை தென் தமிழர் தோட்டத்தில்
எனும் நிலை வரும் வரையில்
கற்றிட முடியாதடி காதல் படிப்பு என்றான்;
அவள் துடித்து நின்றாள்.

“இருவருமே போர்க்களத்தில் இணைந்து
நிற்போம்
அணைந்து விட்டாலும் அப்படியே ஆகட்டும்
இருவருக்கும்
இதற்கென்ன பதில் அத்தான்?’’

“இஃதோர் முறை காதலர்கள் கடைப்பிடிப்பதுண்டு!
ஆயின்.....எனக்கது சரிப்பட்டு வராது தங்கம்!’’
களம்புகுந்து வருகின்ற பகையைச் சாடுகின்ற நேரம்
என்
உளம் புகுந்த நேரிழையாளுக்கு ஏது நேர்ந்ததோ
என நெஞ்சம்

ஒருக்கணம் தயங்கும்;
அதற்குள் என் படை மயங்கும்.
வேண்டாமடி பெண்ணே! விடை கொடடி
என் கண்ணே!
“மணத்திற்குத் தான் இசைய மறுக்கின்றீர்;
மங்கையென்னை

உண்பதற்குப் போட்டு வைத்த இலை போலப்
பூப் படுக்கை உண்டே அங்கு வாரீர்!''
பால் சோறு பானையிலே இருக்கட்டும்;
பசியுண்டு இப்போது என்றாலும்
உன்னைப் பாழாக்கிப் போக மாட்டேன்!
அட்டியின்றி விடை தருவாய், அன்னமே!

"மாம்பழக் கன்னத்தின் அழைப்புக்கும்
தடையுண்டா?"

"தடையுண்டு; படை கொண்டு செல்கின்ற நான்
பிணமாகி விட்டாலும், உனக்கு மணமாகித்
தீரவேண்டும்
என் அன்பே!
உன்னை எச்சில்படுத்தி விட்டால்
எனக்கென்ன லாபம்?
உனக்குத் தான் பெரு நஷ்டம்!

முடியாது! ஒரு முத்தம்...!

"வேண்டாம்...! திரும்பியபின் மொத்தமாக!"

அழவிட்டுப் போகாதீர்கள் அத்தான்....

காலமெல்லாம் மகிழ்ந்திருப்போம்! கவலை விடு!"

''நீங்கள் கள வெற்றி பெற்றவுடன்,
நான் காதல் வெற்றி பெற்றதாய்
மகிழ்வதற்கு இசைவு தாரும்!"

"அசைவொன்றில் ஆயிரம் வண்ணங்கள்
காட்டுகின்ற அழகு மயிலே!
பசையற்ற தென்புலத்தார்
திசை கெட்டு வாடுவதை மாற்றிய பின்,
நாம் மாலை மாற்றிக் கொள்வதில் தடையில்லை,
அறிவாய்!"

"வெற்றி பெற்று விரைவில் வாரீர்
கத்து கடல் விளைகின்ற முத்தெடுத்து
மாலை தொடுத்து வைக்கிறேன்!
என்றன் தென் பாண்டித் தேவா!
நீர் திரும்பும் வரை இங்கேயே நிற்கின்றேன்

இல்லையேல் இக்கடற்கரையே எனக்கமைந்த
கல்லறையாம்!”

“சிப்பியிலே விளையாத சிரிப்பு முத்துக்
காட்டிடுவாய்;
என் சிந்தையிலே உறவாடும் செந்தமிழின்
நலம்பாடித்
திரும்புகிறேன் எனப் பிரிந்தான் –
கடற்கரையின் வெண்மணலில் காரிகையைத்
தனி விடுத்து!

அழகு சிப்பிகளால் முத்தளித்து;
ஆடும் அலைகளால் உப்பளித்து
உயர்வளிக்கும் பெருங்கடல் நீர் – வாய்
கொப்பளிப்பதற்கும் பயனில்லை என்பதற்காக
வெறுப்பாருண்டோ?’’

அஃதே போல்
நாட்டிற்கு உழைக்கின்ற உத்தமனாம் பெரு
வீரன் தன்னை
உடனே தழுவிடவில்லையென்று வெறுக்கவில்லை
அந்த வேல் விழியாள்!
விடைபெற்றுப் போன சிங்கம், தலைவனைக்
கண்டு பேசி
நிலைதனை அறிந்து தேர்ந்து,
நீதிக்குத் தொடுக்கும் யுத்த தளபதியாக
நின்றிருந்தான்.
பெருஞ்சேனை முகப்பதனில்
நாடளிக்கும் குணக்கேடர்களைக் கூடி
யெதிர்ப்பதற்குக்
கூவுகிறான், நல்வீரன்! தெருவெல்லாம்
பாசறைகள்;
தென்பாண்டி மண்டலத்தில் பாடி வீடு அமையாத
பகுதியில்லை

போருக்கு நாள் பார்க்க வேண்டியதுதான் பாக்கி.
தோளுக்கு நிகரானவரில்லை, எம் வாளுக்கு வழி
சொல்வீர்!

எனச் சொல்லித் தொகை தொகையாய்க்
குவிந்துவிட்டார்
தொல்புவியில் முதன் முதலாய்த் தோன்றி நின்ற
தமிழ்க் குலத்தார்
தென் புலத்தார் எழுந்து விட்ட சேதி கேட்டுத்
திக்கெல்லாம் திகைப்பு காட்டும் இன எழுச்சி
பெற்ற வெள்ளம்
இளைஞரது பட்டாளம், பாட்டாளிப் படை வரிசை
இத்தனையும் அணி வகுப்பில் சேர்ந்து கொண்டு
நாள் குறிப்பீர் என ஓலை விடுத்தார் தலைமைத்
தளபதிக்கு,
தன் வலியும் மாற்றான் வலியும் அறிந்து
செயலாற்றுதலே
குறள் வகுக்கும் இலக்கணமெனக் கொண்டிருக்கும்
தலைவனவன்
விரைவில் போர் துவங்கும், பொறுத்திருங்கள்
எனப் பதில் இறுத்தான்.
படைகொண்டு செல்வதற்கு இன்னும் சில நாட்களே
எனக் கண்டு சிந்தை மகிழ்ந்தான்....அதற்குள்
கொடும் விந்தையொன்று உருவாகும் என
யார் கண்டார்?...

பாசறைக்குப் பக்கத்தே படை நடத்தும் விதம் பற்றித்
தனிமையிலே நின்று யோசனைக்கு அடிமையானான்
அப்போது –
ஆறேழு நரிக் குணத்தார் அவன் மீது பாய்வதற்கு
ஓடிவந்தார்
ஒதிய மிலார்களே! ஒன்றுக்கும் பயனற்ற
பிறவிகளே!
என்ன வேண்டும்? எனக் கேட்டான்.
உன் உயிர் வேண்டும் எனச் சொன்னார் –
“உருவத்தால் மனிதராய்த் திரிகின்ற நாய், நரிகாள்!”
கழுகுக்கும், பருந்துக்கும் இவ்வுடலைக்
கொடுப்பதற்கே,
களம் செல்ல இருக்கின்றேன்
அதற்குள்ளே உமக்கு ‘முடை’ என்றால்
எடுத்துச் செல்வீர்!

ஆயின் ஒன்று, என்னொருவன் உயிர் பறித்தல்
மட்டுந்தான் உம்மாலே ஆவதன்றி
நான் வளர்த்த உணர்ச்சிகளை - உண்மை வீரர்களை-
அழித்துப் போடல் ஆகாதென அறிவீர் என்றான்.

தமிழ் கேட்கும் செவியில்லாப் பாம்பு மனிதர்
படபட எனச் சுற்றிக் கொண்டார்.
படைவீரன் அங்கங்களை ஆலமரத்து விழுதுபோல்
அறுத்தெறிந்தார்.
வாள் தடுக்க எழுந்த கரத்தினிலே விரல்களெல்லாம்
பொல பொல வென உதிர்ந்தன தரையில்!
மலை பிளக்க வெடி வைத்தது போல் மாவீரன்
மண்டையைப் பிளப்பதற்கும் துணிந்து விட்டார்.
தலை நொறுங்கித் தரையில் சாய்ந்தான்.
அத்தை மகள் முத்தமிடத் துடித்த இதழில்
அரிவாள் வீச்சு! மலர் முகம் புதைத்திருக்க அவள்
தேர்ந்தெடுத்த மணி மார்பில்
உதிர வெள்ளம்!
ஓடிவிட்டார் உயிர் எடுக்க வந்த கொடியோர்!
உத்தமனும் கடைசி மூச்சை நாட்டுக்கே
அளித்துவிட்டு
துயில் நீங்காத் தொட்டிலில் படுத்துக் கொண்டான்.
சித்திரம் சிதைந்தது எனக் கேள்வியுற்றாள்;
முத்து மாலை கட்டிக் கொண்டு
கடல் அலையின் ஓரம் நின்ற கட்டழகி!
மாலைதனை அறுத்துவிட்டார் மாபாவிகள்!
சேனைதனை நடத்திச் செல்லும் சிங்கம் -
அங்கம் அறுபட்டுத் துரோகிகளால் துடித்து வீழ்ந்த
காட்சி -
அம்மவோ! கேட்பதற்கு இத்தனை நாள்
வாழ்ந்தேனோ?
வெண்மணலில் நின்றிருப்பாய் பெண்ணே!
விரைந்து வந்து மணந்திடுவேன் உன்னை
எனச் சொன்ன வாய் மூடிற்றாமே?
கம்பீர நடைபோடும் கால்கள் சோர்ந்து விட்டனவோ?
கனல் பொழியும் கண்களிலே எனை மணக்கும்போது

குளிர் பொழியும் எனச் சொல்லி வாழ்ந்தேனே,
என் நறுந்தேனே!

உன்னை சாவுச் சகதியில் ஊற்றி விட்டார்களாமே
சண்டாளப் பிறவிகள்!
இனி எனக்கேன் வாழ்வு? என்றாள்
முத்து மாலையைக் கடலில் வீசி எறிந்தாள்
அதைத் தொடர்ந்து தானும்
அத்தானை நினைத்தவாறு ஆழ்கடலின்
அடியிற் சென்றாள்.

அன்புள்ள,

மு.க.

12-1-2002

2659. பொங்கல் வாழ்த்து!

உடன்பிறப்பே,

ஞாயிறு போற்றுதும்;
ஞாயிறு போற்றுதும்!
சிலம்பொலி கேட்குது;
சிந்தையில் இனிக்குது!
ஆயிரம் நிலவுகள் ஆயிரம் மாதர்கள்;
ஆயிரம் கதிரவர் ஆயிரம் ஆடவர்;
ஞாயிறு போற்றினர்!
ஞாயிறு போற்றினர்!
ஆயிரம் கோடியாய் ஆயினர் தமிழர்;
பாயிரம் பலப்பல பாடினர் தமிழர்!
ஞாயிறு போற்றியே கூடினர் பொங்கலில்!
ஞாயிறு போற்றியே ஆடினர் பொங்கலில்!
மாவிலை தோரணம் மஞ்சள் வாழை
கோயிலின் முரசம் கோலம் கண்டனர்!
பொங்கலோ, பொங்கல்
பொங்கலோ பொங்கல்
குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதம், பாலை
நிலமெனப்
பிரிந்து வாழினும் தமிழர் பண்பைப் புரிந்து வாழ்ந்தனர்!
கல்தோன்றி மண் தோன்றாக் காலத்து
முன்தோன்றி முத்தகுடி எனினும்
காடு கொன்று நாடாக்கக்
குளம் தொட்டு வளம் பெருக்கக் கற்றனர் அன்னார்!
வில் தோன்றும், தோள்களிலே – அது
வீரம் காட்டும்.

நெல் தோன்றும், வயல்களிலே - அது
வேளாண் திறத்தைக் காட்டும்.
சொல் தோன்றும் புதிது புதிதாக - அது
மொழியின் வளத்தைக் காட்டும்.
எழுத்து, சொல், இரண்டேயன்றிப்
பழுத்த நல் தொல்காப்பியன் - தமிழர்தம்
செழிப்பு மிகு வாழ்வுக்கும்
தொகுத்தளித்தான் இலக்கண நூல்!
கொய்யாக் கனித் தமிழால் - குறள்
நெய்தான் உலகுக்கு வள்ளுவனும்!
பெய்யாமழை பெய்தது போல் மகிழ்ச்சி
கொள்வோம் - அவன்

பொய்யாமொழிக் கவி கேட்டு!
சிலம்பு வளையும் சீர் மேகலையும்
சிந்தாமணியுடை குண்டலகேசியும்
அன்னைத் தமிழின் அணிகளாய் ஆயின;
அந்நாள் புலவர் கம்பரும் கூத்தரும் ஆற்றிய
பணிகளால்,

எத்துணை நூல்கள் எத்துணைப் புலவர்
கற்றுணர் மக்கள் உற்றுணர் பெட்டகம்
பெற்றுநம் தமிழர் வாழ்ந்தனர் அந்நாள்!
பல் முனைத்திடா மழலையருடன் பருவக்
கிள்ளைகளுடன்
பண்பார் பிள்ளைகளுடன் பொங்கலோ
பொங்கலெனப்
பொங்கும் மகிழ்வுடன் ஆடிப்பாடிடும் அழகுத் திருநாள்!
அன்புத் திருநாள்! அமுதத் திருநாள்! ஆம்;
அன்றொரு நாள்!

தேள்கள் எனக் கணக்கின்றிக் கவலைகள் கொட்டிய போதும், தேன் ஒரு துளியென இனிக்கும் சொல்லன்றோ இன்றைக்கும் பொங்கல் என்பது!

ஆயமகன் குழலூதவும் - அதற்கு ஆயமகள் குழைந்தாடவும், என் தோளைத் தழுவுதற்கு முன் காளைதனை அடக்கி வா எனக் கைவளை குலுங்கிடக் காதலியர் காதலர்க்குக் கடைக்கண்ணால் கட்டளை யிடவும், கண்ணின் கடைப்பார்வை காதலியர் காட்டி விட்டால் மண்ணில் குமரருக்கு மாமலையும் ஓர் கடுகாமெனப் பாவேந்தரின் பாடல் வரியை செயல்படுத்திச் சிலிர்த்து நிற்கும் சிங்க ஏறுகளாகப் பொங்குற்ற தமிழர் உலவிய பூமியன்றோ இந்தத் தமிழ் பூமி!

இந்தப் பூமியில் ஈட்டியின் பாய்ச்சல் கண்டு இமை கொட்டியவன் கோழை என்றல்லவா வீரத்திற்கு இலக்கணம் தீட்டப் பட்டிருந்தது!

இன்றோ; இந்தத் தமிழ் நிலத்தில் வீரம், விலை கேட்கும் பொருளாகவும் - தீரம், திக்கற்ற குழந்தை போலவுமன்றோ ஆகி விட்ட அவலம் காண்கிறோம். அகழ்வாரைத் தாங்கும் நிலமாய் இருக்கலாம். அதற்காக, நம்மை, நமது பண்பாட்டை இகழ்வாரைத் தாங்கும் நிலைப்பாடு இருக்கலாமா?

கொதித்தெழு! பிறரை வதைத்தெழ! என்று கூறமாட்டேன் - நம்மையே நாம் பலியாக்கிக் கொள்ள நேரிடினும் பரவாயில்லை, நமது பழம் பெருமைக்கு ஊறு நேரிடுகிறது எனக் காணும்போது, நமது வரலாறு மாய்க்கப்படுகிறது என்கிறபோது, ஆமைகளாய், ஊமைகளாய் அடங்கிக் கிடக்காமல் அதற்கென அமையும் களத்தில் உயிரைச் சாவில் நட்டு உரிமைகளை வாழ வைப்போம் எனும் வீரம் கொள்வோம் என்றே இப்பொங்கல் நாளில் சூளுரையேற்க அழைக்கிறேன்!

மறு பிறப்பு என்பதில் எனக்கு நம்பிக்கையில்லை!

ஆனால், தமிழினத்தின் மானத்திற்கு - வீரத்திற்கு - மறுபிறப்பு வேண்டுமென மன்றாடுகிறேன்!

யாரிடம்?
தமிழன்; தமிழனிடம்தான் மன்றாடு கிறேன்!
என் கோரிக்கை நிறைவேறிட,
இந்தப் பொங்கல் இனிதே பொங்குக!

அன்புள்ள,
மு.க.
13-1-2002

2660.வீரத்திருமகன்தான்;
வெற்றித் திருமகன்!

உடன்பிறப்பே,

இந்த மடல் உன் மணிக்கரங்களை அலங்கரிக்கும் போது, நீ பொங்கல் விழா நாள் மகிழ்ச்சியில் திளைத்திருப்பாய். என் தோளிலும், தலையிலும் தூக்கிச் சுமந்து திருவாரூர் விஜயபுரம் ஜமால் அச்சகத்திலிருந்தும், கிருஷ்ணா அச்சகத்திலிருந்தும் முதலில் துண்டு அறிக்கைத்தாள் போலவும், பின்னர் வார இதழாகவும், அதன் பிறகு சென்னைக்குக் குடி பெயர்ந்து ராயப்பேட்டை பகுதியிலிருந்து வண்ணக் கிழமை ஏடாகவும், பின்னர் அன்றைய மௌண்ட் ரோடு இன்றைய அண்ணா சாலை ஆயிரம் விளக்குப் பகுதியில் இயந்திர வசதிகளுடன் நாளிதழாகவும், எத்தனையோ அடக்குமுறைகள், தடைக்கற்கள், தாக்குதல்களைத் தாண்டி இப்போது கோடம்பாக்கம் பாலத்திற்கருகே நவீன இயந்திர வசதிகளுடன் அறக் கட்டளை வெளியிடும் அறிவுக் கருவூலமாக - சமுதாயச் சுடரொளியாக - பகுத்தறிவு பரப்பிடும் முரசமாக - இலக்கியச் செல்வமாக - விஞ்ஞானப் பூங்காவாக - அரசியல் சங்கநாதமாக - இத்தனையும், இவற்றுக்கு மேலான சிறப்புகளும் கொண்டு, வளர்ந்து விரிந்த முரசொலிதான் இன்றைக்கு உன் கைகளில் பொங்கல் மலராகப் பூத்துக் குலுங்குகிறது என்பதை மறந்துவிட மாட்டாய் என்றே நம்புகிறேன்.

திராவிட இயக்கத்தார் நடத்திய வார இதழாயினும், நாளிதழாயினும் அவை பொங்கல் மலர் என்று வெளியிடுவது அரிதான காரியமாக இருந்த அந்நாட்களில், அப்படியே பொங்கல் மலர் என வெளியிட்டாலும், அந்த மலர்கள் ஏனைய இதழாளர்கள், ஆம்! நம் இயக்கத்தைச் சாராதோர் - அல்லது இயக்கம் கண்டு எரிச்சலடைவோர் வெளியிடும் பொங்கல் மலர்களுடன் போட்டியிட முடியாமல், ஒரு நிலை இருந்ததை மாற்றி, அந்த மலர்களுக்கு ஈடான, இணையான மலர்களை முதன்முதலாக

வெளியிட்ட பெருமையும் உங்கள் முரசொலிக்கேயுண்டு என எத்தனையோ முறை உவகை பொங்க எழுதியிருக்கிறேன் - பேசியுமிருக்கிறேன்.

பொங்கல் மலர்களை வெளியிட்டு மட்டுமல்ல, பொங்கல் திருநாளையொட்டி, ஒரு நாளில் முரசொலி அறக் கட்டளை சார்பில், வித்தகர்க்கும், சான்றோர்க்கும் விருதுகள் வழங்கிட வேண்டுமென தம்பி முரசொலி மாறன் திட்டம் தீட்டி, அதைச் செயல்படுத்தும் அறக் கட்டளைத் தலைவராக தம்பி மிசா கணேசனும், அறக் கட்டளை உறுப்பினர்களான தம்பி குப்புசாமியும், தம்பி உசேனும் முன்னின்று இந்த ஆண்டும் கடந்த ஆண்டுகளைப் போலவே முரசொலி அறக்கட்டளை கலைஞர் விருது வழங்கும் விழாவை இனமானப் பேராசிரியர் தலைமையில் எழுச்சி மிகு விழாவாக எடுத்து நம்மையெல்லாம் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியுள்ளனர்.

சிந்தை அணு ஒவ்வொன்றும் தேன் பாய்ச்சிச் செந்தமிழ் இசை வழங்கி மறைந்த சீர்காழியின் செல்வன் தம்பி சிவசிதம்பரம், தந்தையின் குரலை அப்படியே தத்து எடுத்துக்கொண்டு தமிழ் வாழத் தமிழர் வாழ்வார் எனத் தொடங்கி வைத்த இசை விழாவைத் தொடர்ந்து,

கவிக்கோ நண்பர் அப்துல் ரகுமானும், கவிப்பேரரசு தம்பி வைரமுத்துவும், நானும், பேராசிரியரும் வாழ்த்திட, பெருங்கவிக்கோ வா.மு.சே. அவர்களும், பெருங் கவிஞர் வாலி அவர்களும், பிள்ளைப் பருவ முதல் பெரியார், அண்ணா, காயிதேமில்லத் கட்டிக்காத்த திராவிட இயக்கப் பாசறையின் போர் முரசு இசைமுரசு அனீபா அவர்களும் விருதுகளைப் பெற்றுக் கொண்ட அந்தக் காட்சி கண்டு அரங்கில் நிறைந்திருந்தோர் களிப்பிலாடினர்!

1942 ஆம் ஆண்டு ஆகஸ்டு 10ஆம் நாள் பிறந்த முரசொலிக்கு, இது மணி விழா ஆண்டு!

ஏயப்பா! இந்த அறுபது ஆண்டுகளில் முரசொலியின் பாதையில் எத்தனை எத்தனை சோதனைகள்! சோதனைகளுக் கிடையிலேயும் எத்துணை மகத்தான சாதனைகள்!

என் பிள்ளைகளை வளர்க்கக் கூட நான் இந்தப் பாடு பட்டதில்லை - அவர்கள் வழியில் அவர்களாக தங்களை வடிவமைத்துக்கொண்டார்கள். ஆனால் நான் முரசொலியின் மீது கொண்டுள்ள பற்றும், பாசமும், இன்றைக்கு மடல் எழுதி வெளியிடுவதுடன் முடிந்து விடுகிறது, ஆனால் அன்றைக்கு ஆரம்ப காலத்திலிருந்து, முரசொலி முறுக்கேறி, வலிவும், பொலிவும் கொண்டு திகழும் வரையில் ஒவ்வொரு எழுத்திலும் முரசொலியில் என் உயிர் மூச்சு ஒட்டிக் கிடந்த காலம் ஒன்றுண்டு!

இன்றைக்கு அறக்கட்டளை - அதன் உறுப்பினர்கள் - ஆசிரியராக தம்பி செல்வம் - ஆனால் அன்றைக்கு? முரசொலி அலுவலகத்திலிருந்து அண்ணா மலர் வருகிறதென்றால், பொங்கல் மலர் வருகிறதென்றால் தமிழ்ப் புலமை பெற்ற கழகத்தினர், தளராதுழைக்கும் கழகச் செயல்மறவர்கள், இரவென்றும் பகலென்றும் பாராது ஊண் உறக்கமின்றி, மலர் முழுமை பெற்று விற்பனைக்கு அனுப்பப்படும் வரையில்,ஊதியம் பெறாத உழைப்பாளிகளாகவே உழன்று ஓய்வின்றிப் பணியாற்றுவர்!

உடன்பிறப்பே,

எத்தனையோ இன்னல்கள்
அடுக்கடுக்காக எம்மை
முட்டி மோதிய போதிலும்,
முரசொலிப் பாசறையில்
அன்றைக்கு அமர்ந்து,
எழுதுகோலை ஈட்டிமுனையாக்கி
வாய்மைப் போருக்கு வலிமை
சேர்த்த அந்தக் காலம்
என்னவோ; என்னைப்
பொறுத்தவரையில்
வசந்த காலம் தான்!

அக்கால நிகழ்வுகளையெல்லாம் அசை போடவும் - திசை மாறும் கப்பலாகும் தமிழகத்தைச் சரியான திக்கு நோக்கிச் செலுத்திடவும் - விசை யொடிந்த தமிழினத்தில் வன்மை சேர்த்திடவும் -

கடமை யாற்றிடும்
கழகத்தின்
உடன்பிறப்புகள் நாம்!
உட்பூசல் எனும்

நச்சரவுக்கு
இடம் கொடுக்காமல்,
ஒற்றுமையே நாம்
காணும் வாய்மையென
உறுதி பெறுவோம்.

மணிவிழா காண இருக்கும் முரசொலியின் இலச்சினையை, உற்றுப் பார்த்தால் புரியும் - உயிர் வாங்க வரும் முரட்டுக் காளையின் கொம்பொடிக்கும் வீரத்திருமகனாக சித்தரிக்கப்பட்டிருப்பது நமது கழகம் தான் என்ற உண்மை! வீரத் திருமகன் தான் வெற்றித் திருமகனாய் விளங்கிடுவான்!

அன்புள்ள,

மு.க.

14-1-2002

2661.சமுத்திரக் கரையிலிருந்து சங்கீத சபாவுக்கு!

உடன்பிறப்பே,

சோ.இராமசாமி அவர்கள், தனது பத்திரிகை ஆண்டு விழாக்களை சமுத்திரக்கரை மணல் வெளியில் மாபெருங்கூட்டங்களாக ஒரு காலத்தில் நடத்திப் பேசியவர். பின்னர் காமராஜர் அரங்கில் பேசுவது என்ற அளவுக்கு வந்து - இன்றைக்கு சங்கீத சபை ஒன்றின் அளவுக்கு மக்களைச் சந்திக்கிற நிலையில், முன்பு நாம் நடத்திய நானே அறிவாளி என்ற நாடகத்தின் கதாநாயகன் பாணியில் அதிகப் பிரசங்கம் செய்திருக்கிறார்.

அவருக்கெல்லாம் பதில் சொல்லிக் கொண்டிருக்க வேண்டுமா என்று நீ கேட்பாய் என்று எனக்குத் தெரியும்! விஷமம் செய்வதைக்கூட வேடிக்கை யெனத் தள்ளி விடலாம், ஆனால் விஷம் கலக்கப்படும் போது, விழிகளை மூடிக் கொண்டு அனுமதிப்பது என்பது ஏற்றுக் கொள்ளக்கூடிய அறிவுரையாக அமைய முடியாதே!

பொங்கல் நாளில் அவர் சிந்தியுள்ள விஷத் துளிகள் குறித்து சில விளக்கங்கள். ஏனெனில் ஒரு பொய்யைத் திரும்பத் திரும்பச் சொன்னால் நம்பி விடுகிற மக்கள் இன்னமும் இருக்கிறார்களே! அவர்களுக்கு உண்மையைத் தெளிவுபடுத்த வேண்டுமல்லவா?

முதலில் அவர் முரண்பாட்டின் மொத்த உருவம் என்பதற்கு ஒரு சான்று -

1981ஆம் ஆண்டு மீனாட்சிபுரம் என்ற ஊரில் தலித்துகள் மதம் மாறிய நிகழ்ச்சியொன்று நடைபெற்று அது பெரும் பரபரப்பாகப் பேசப்பட்ட போது, இதே சோ. இராமசாமி அவர்கள், சண்டே என்ற பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தி.மு. கழகமும், திராவிடர் கழகமும் செய்த அழிவு வேலையின் அத்தாட்சிதான்

மீனாட்சி புரத்தில் தலித்துகளின் மத மாற்றம் என்று கூறி யிருந்தார். அதை அப்போதே நான் மறுத்து எழுதியிருக்கிறேன்.

ஆனால் அதே சோ ராமசாமிதான், அண்மையில் (28-11-2001) அவரது துக்ளக் ஏட்டில் ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கும்போது, இந்து மதத்தில் தலித் மக்கள் கேவலமாக நடத்தப்படுவதுதான், மத மாற்றத்துக்கு அடிப்படைக் காரணம் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

மத மாற்றத்துக்கு தி.க., தி.மு.க., அழிவு வேலை தான் காரணம் என்று இருபது ஆண்டுகளுக்கு முன்பு அவர் விஷங்கக்கியபோது, அதனை மறுத்து நான் அளித்த விளக்கங்களை ஏற்றுக்கொண்டு, அவர் கக்கிய விஷத்தை அவரே விழுங்கி விட்டு இப்போது, தலித் மக்களை இந்து மதம், கேவலமாக நடத்துகிற படியால்தான் அவர்கள் மதம் மாற வேண்டியுள்ளது என்று உண்மையைப் போட்டு உடைக்கிறார் என்றால் அவ்வப்போது இவர்களுடைய நச்சு வாதங்களை நசுக்கித் தீர வேண்டிய கடமையை நாம் தவறாது செய்ய வேண்டியிருக்கிறது என்பது புரிகிறதல்லவா?

இப்படிப்பட்டவர்தான் பொங்கலன்று சங்கீத சபையில் எனது நண்பர் சூப்பர் ஸ்டார் ரஜினி அவர்களையும் எதிரே உட்கார வைத்துக் கொண்டு, ரஜினிக்கு நேரடியாகவே தெரிந்த உண்மையையும் திரை போட்டு மறைத்து விட்டு என்னைப் பற்றிப் பேசியுள்ளார்.

கருணாநிதியின் தீவிரவாதப் பற்று பற்றி எனக்கு ஏற்கெனவே தெரிந்த காரணத்தினால்தான், இந்த சட்ட மன்றத் தேர்தலின்போது தி.மு.க. ஆட்சிக்கு வரக் கூடாது என்று கூறினேன். தி.மு.க. ஜெயிக்கக் கூடாது என்பதற்காகவே 3வது அணி வராமல் நான் தடுக்கவும் முயற்சி செய்தேன் இது சோவின் பேச்சு! உடன்பிறப்பே, பூனைக் குட்டி வெளியே வந்து விட்டது என்று பெரியார் அடிக்கடி சொல்வாரே, அதுதான் இது!

நடந்து முடிந்த சட்டமன்றப் பொதுத் தேர்தல் நேரத்தில் ஜெயலலிதா அம்மையாரும், சோ ராமசாமி அவர்களும் இவர் வீட்டில் அவரும், அவர் வீட்டில் இவருமாக சந்தித்து உரையாடிய செய்திகள் வந்த போது நாங்கள் பால்ய நண்பர்கள் என்ற முறையில் பார்த்துப் பேசினோமே தவிர, அரசியல் பேச்சோ, தேர்தல் பேச்சோ அறவே இல்லவே இல்லை என்று இதே நண்பர்தான் பேட்டிகள்

கொடுத்தார். அதைப் போல திரு. மூப்பனார் அவர்களை ஓடியோடி சந்தித்துப் பேசி விட்டு, அரசியல் பேசப் போகவில்லை; அவரது உடல் நலம் விசாரிக்கச் சென்றேன் என்று நிருபர்களிடம் கூறினார்.

இப்போது மூன்றாவது அணி உருவாகாமல் முயற்சி செய்து நான் தடுத்து விட்டேன். காரணம் தீவிரவாதிகளை ஆதரிக்கும் தி.மு.க.வைத் தோற்கடிக்க வேண்டும் என்பதற்காக! என்கிறார். இதிலிருந்து தேர்தலின் போது நட்பு முறைப் பேச்சு என்று இவர் ஆடிய நாடகம் இப்போது அவர் வாயினாலேயே அம்பலத்திற்கு வந்து விட்டதல்லவா?

அது போகட்டும்! கருணாநிதிக்கு தீவிர வாதப் பற்று - அதனால்தான் அவரைத் தோற்கடிக்க முயற்சி செய்தேன் என்கிறாரே! இதை அவர் அந்த சபாவில் சொன்ன போது சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த், தனது மனத்துக்குள் என்ன எண்ணியிருப்பார்.

1996 ஆம் ஆண்டு, இந்த சோ தானே அண்ணா அறிவாலயத்துக்கு ஓடிச் சென்று, கலைஞரிடம், தி.மு.க. - த.மா.கா. கூட்டணிக்கு முயற்சி எடுத்தார்! என்னிடம்கூட அதற்காகப் பேசியிருக்கிறாரே? அப்போதெல்லாம் கலைஞரின் தீவிரவாதப் பற்று இவர் ஞானக் கண்களுக்கு (?) தெரியாமல் போய் விட்டதா? 1996 வரையில் கலைஞருக்கு இல்லாத தீவிரவாதப் பற்று இப்போது திடீரென்று எங்கிருந்து வந்தது?

இவ்வாறு நினைத்து தன் மனதுக்குள் சிரித்துக் கொண்டிருந்திருப்பார் ரஜினிகாந்த்!

உடன்பிறப்பே,

தீவிரவாதிகளாகவும், போராளிகளாகவும் தமிழகத்தில் உலவிய ஈழ விடுதலைப் போராளிகளை பிரதமர் இந்திரா காந்தி அம்மையாரே ஆதரித்து, அவர்களுக்கு முகாம்கள் அமைத்துக் கொடுத்து - ஆயுதங்களும் வழங்கியதற்கு எத்தனையோ ஆதாரங்கள் உண்டு - அருமை நண்பர் எம்.ஜி.ஆர். - முதல்வராக இருந்த போது விடுதலைப் புலிகளுக்கு பல கோடி ரூபாய் காசோலையாகவே தரப்பட்டதற்கும், அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட 40 கோடி ரூபாய் மதிப்புள்ள ஆயுதங்களைத் திருப்பிக் கொடுத்ததற்கும் மறுக்க முடியாத ஆதாரம் உண்டு - நானும், வீரமணி அவர்களும், நெடுமாறன் அவர்களும் முன்னின்று

மதுரையில் நடத்திய டெசோ என்ற ஈழ விடுதலைப் போராளிகள் ஆதரவு மாநாட்டில், இந்தியத் தலைவர்கள் குறிப்பாக, அடல் பிகாரி வாஜ்பய், என்.டி.ராமராவ், எச்.என். பகுகுணா, ராம்வாலியா, உபேந்திரா, அப்துல் ரஷீத் காபூல், ஜஸ்வந்த் சிங், ராச்சையா, உன்னிகிருஷ்ணன், சுப்பிரமணியம் சுவாமி போன்றவர்கள் கலந்து கொண்டதும் உண்டு. 1989-90இல் தி.மு.க. ஆட்சியின் போது, கருணாநிதி அரசு, விடுதலைப் புலிகளை ஆதரிக்கத் தயங்குகிறது. விடுதலைப் புலிகளின் வெற்றிதான் இலங்கைத் தமிழர்களின் வெற்றி. கருணாநிதி, தனது முதல்வர் பதவியைக் காப்பாற்றிக் கொள்வதற்காக விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தரத் தயங்குகிறார் என்று ஜெயலலிதா, முக்கியமான ஆங்கில ஏடுகளுக்கு சிறப்புப் பேட்டி கொடுத்து, விடுதலைப் புலிகளை தமிழ் நாட்டு மக்கள் ஆதரித்திட வேண்டும் என்று சொன்னதற்கும் சான்று உண்டு!

இவற்றையெல்லாம் நான் எடுத்துக்காட்டுவதற்குக் காரணம், இந்தியாவில் பெரும்பாலான கட்சிகள், பெரும்பாலான தலைவர்கள், ஏதோ ஒரு வகையில் விடுதலைப் புலிகளை அல்லது ஈழப் போராளிகளை ஆதரித்தே வந்தனர்.

ஆனால் ராஜீவ் காந்தி படுகொலைக்குப் பிறகு, அந்த நிலைமை தலைகீழாக மாறி விட்டது.

இருப்பினும் அதற்குப் பிறகும்கூட, அந்த ஆதரவைத் தொடர்ந்து கொண்டிருந்தவர்கள் யார் யார் என்பதையும், அவர்கள் இப்போதுகூட சோ அவர்களின் அருளாசி பெற்றுள்ள தலைவியின் பக்கம் சார்ந்துள்ளார்கள் என்பதையும் சோ அவர்கள் வாயளவில் மறுத்தாலும், அவரது மனச்சாட்சி அளவில் மறுக்க முடியாது என்று நான் திட்டவட்டமாகக் கூற முடியும்.

எனவே, உதட்டில் புன்னகையைத் தேக்கி, உள்ளத்தில் சிந்தனையைத் தேக்கி உரத்த குரலில் இல்லாவிடினும், மென்மையான தொனியில் சோ ராமசாமி அவர்களைப் பார்த்துக் கேட்க வேண்டிய கேள்வி:-

அய்யா அறிவு ஜீவியே! கருணாநிதி என்பவர் தீவிரவாதப் பற்றாளர் - என்பது 2001 தேர்தலின் போதுதான் தெரிந்ததா? 1996 தேர்தல் கூட்டணிக்காக அண்ணா அறிவாலயத்துக்கு அலையாய் அலைந்தீரே! அப்போது தெரியவில்லையா?

இன்னொரு கேள்வி :- சோ அவர்களே! இலங்கை அரசுடன் விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை எங்கே நடப்பது என்பது பற்றி இந்திய மத்திய அரசுதான் முடிவு எடுக்க வேண்டுமென்று கூறி கருணாநிதி உயிருக்குப் பயந்து நழுவப் பார்க்கிறார்.

என்று பேசியிருக்கிறீர்களே? தீவிரவாதப் பற்றாளர் என்கிறீர் - பிறகு அவர் உயிருக்குப் பயப்படுகிறார் என்கிறீர் - தீவிரவாதி உயிருக்குப் பயப்படுவானா? என்னய்யா இது புதிய வியாக்யானம்?

உடன்பிறப்பே, ஒருவேளை எந்த தியாகத்திற்கும் தயாராக இருக்கக் கூடிய நமது திட நெஞ்சத்தைத் தான், எமர்ஜென்சிக்கு பயந்து தன் பத்திரிகையையே பல மாதங்கள் நிறுத்தி வைத்து விட்ட தியாகச் செம்மல்(?) தீவிரவாதம் எனக் கூறி திசை திருப்புகிறாரோ?

அன்புள்ள,

மு.க.

17-1-2002

2662. இடைத்தேர்தல் மூன்று அதில் இவர்கள் இஷ்டப்படி ஒன்று!

உடன்பிறப்பே,

பொதுத் தேர்தலாயினும், இடைத் தேர்தலாயினும், வாக்காளர்களைச் சேர்ப்பது - நீக்குவது என்ற பணிகளில் வேண்டுமென்றே திட்டமிட்டு ஜனநாயக விரோதமான சதி நடந்து விடக் கூடாது என்பதிலும், அப்படி எதுவும் நடக்காமல் பார்த்துத் தடுத்து நிறுத்துவதிலும் உன் போன்றோர் கண்ணும் கருத்துமாக இருந்திட வேண்டுமென்று நமது தலைமைக் கழகம் அவ்வப்போது எச்சரித்து வேண்டுகோள் விடுத்தவாறு இருந்த போதிலும், ஒரு சில உடன்பிறப்புகளே செயலாற்றுவதில் அக்கறை காட்டுகின்றனர் என்பதை நான் வருத்தத்துடன் குறிப்பிட வேண்டியவனாக இருக்கிறேன். இதை நான் வெளிப்படையாகத் தெரிவிப்பதற்குக் காரணம், எதிர் காலத்திலாவது நமது கழக அமைப்புகளின் நிர்வாகிகள், வாக்காளர் சேர்த்தல், நீக்குதல் எனும் பணி தூய்மையாகவும், வாய்மை தவறாமலும் நடைபெறுவதற்கான விழிப்புணர்வுடன் இருந்திடல் வேண்டும் என்பதற்காகத்தான்.

இப்போது சைதாப்பேட்டை தொகுதியிலும், வாணியம் பாடியிலும், இடைத் தேர்தல்கள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

சைதாப்பேட்டையில் ஆளுங்கட்சியினரும், அவர்களின் வற்புறுத்தலை மறுக்க முடியாமல் அதிகாரிகளும் நடத்தியுள்ள தேர்தல் தில்லுமுல்லுகளை, அதிலும் குறிப்பாக போலி வாக்காளர்கள் எப்படி விதி முறைகளை மீறிச் சேர்க்கப்பட்டனர் என்ற விபரீதக் கதையை, தென் சென்னை மாவட்ட செயலாளர் தம்பி சைதை கிட்டு, ஓர் அறிக்கை வாயிலாகத் தெளிவு படுத்தியிருக்கிறார்.

சைதாப்பேட்டை தொகுதியில் இறுதியாக டிசம்பர் 24ஆம் தேதி அளித்த பட்டியல்படி, மொத்த வாக்காளர்கள் 2,23,248. 31ஆம் தேதி மாலை 5 மணி வரை புதிய வாக்காளர்களை தனித்தனியாகச் சேர்க்கலாம் என்று சொல்லியிருந்தார்கள். ஒட்டு மொத்தமாக ஒரே குவியலாக கொடுக்கக் கூடாது என்று விதி இருக்கிறது. ஆனால் இந்த இரண்டு விதிகளும் ஆளுங்கட்சியினரால் மீறப்பட்டுள்ளது. 31ஆம் தேதி மாலை 5.30 மணி வரை நமது கழகத்தின் சார்பில், தம்பி மா.சுப்ரமணியம், அந்த அலுவலகத்திலே இருக்கிற வரை 3000 வாக்காளர்கள்தான் இப்படி தனித்தனியாக சேருவதற்காக மனு கொடுக்கப்பட்டிருந்தது. 5.30 மணிக்குப் பிறகு அ.தி.மு.க. சார்பில் ஒட்டு மொத்தமாக 18 ஆயிரம் வாக்குகளைக் கொடுக்க முயற்சித்த போது நமது கழகத்தின் சார்பில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதின் பேரில், அதை அதிகாரிகள் வாங்க மறுத்து திருப்பி அனுப்பி விட்டார்கள்.

ஆனால் இரவு 7.30 மணி அளவில் மாநகராட்சிக்குச் சொந்தமான ஜீப் ஒன்றில் அ.தி.மு.க. வைச் சேர்ந்த முக்கிய பிரமுகரின் அலுவலகத்திற்கு வந்து, அந்த 18 ஆயிரம் வாக்குகளைச் சேர்ப்பதற்காக அதிகாரிகளே வாங்கிக் கொண்டு சென்றிருக்கிறார்கள்.

அந்த 18 ஆயிரம் வாக்குகளை நிராகரிக்க வேண்டு மென்று மத்திய தேர்தல் அதிகாரிக்கு பேக்ஸ் மூலமாக புகார் கொடுக்கப்பட்டது. மாநில துணைத் தேர்தல் அதிகாரியைச் சந்தித்து புகார் கூறியிருக்கிறோம்.

காலம் தவறி கொடுத்தது ஒரு தவறு, ஒட்டு மொத்தமாக 18 ஆயிரம் மனுவையும் சேர்த்துக் கொடுத்ததும் ஒரு தவறு. தேர்தலுக்கு முன்பாகவே இந்த அளவிற்கு போலி வாக்குகளைச் சேர்ப்பதற்கான முயற்சியிலே ஈடுபட்டு விட்டார்கள் என்பதற்கு இது ஒரு எடுத்துக் காட்டு.

தேர்தல் ஆணையத்தினால் அனுப்பி வைக்கப்பட்ட அதிகாரி, சைதை, வாணியம்பாடி இரு தொகுதிகளில் மட்டும் விரிவாக விசாரணை நடத்தி, தவறு நடந்திருப்பதைக் கண்டுபிடித்து, தேர்தல்களை ஒத்தி வைப்பதற்குப் பரிந்துரை செய்து, முக்கிய

அதிகாரிகள் மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுத்திட உரிய வழி வகுத்துள்ளார்.

என்னுடைய பத்தாவது வயதில் கன்னையா கம்பெனியார் நடத்திய பகவத் கீதை என்ற நாடகம் பார்த்திருக்கிறேன்.

அதில் மேடையிலேயே ஒரு மோட்டார் கார் வரும். காரிலிருந்து ராஜாவும் ராணியும் இறங்கி, மாளிகை பால்கனிக்குப் போய் அமருவார்கள். மகாராஜா மகாராணிக்கு ஆரஞ்சுப் பழம் உரித்து சுளைகளை அவள் வாயில் கொடுப்பார். பழத்தோலை, பால்கனியிலிருந்தவாறு தெருவில் தூக்கி வீசுவார்கள்! ஒரு பிச்சைக்காரன் அந்தத் தோலை எடுத்துத் தின்பான். மகாராணிக்குக் கோபம் வந்து விடும். நான் சாப்பிட்ட பழத்தின் தோலை பிச்சைக்காரன் சாப்பிடுவதா? என்று கேட்பாள். உடனே மகாராஜா, தனது சேவகனை விட்டு அந்தப் பிச்சைக்காரனை சவுக்கால் அடிக்கச் சொல்வார். பிச்சைக்காரன் அடிகளை வாங்கிக் கொண்டு சிரிப்பான். ''என்னடா, அடிக்கிறேன்! சிரிக்கிறாய் என்று சேவகன் கேட்பான். தோலைத் தின்ற எனக்கே இந்தத் தண்டனை என்றால், பழத்தையே தின்றவர்களுக்கு என்ன தண்டனையோ?'' - என்று நினைத்துச் சிரித்தேன் என்று பிச்சைக்காரன் பதில் சொல்வான். அதைப் போல அ.தி.மு.க.வின் உற்சவ விக்கிர கங்கள் போட்டியிடக் கூடிய தொகுதிகளிலேயே இவ்வளவு போலி வாக்காளர்கள் என்கிற போது, மூல விக்கிரகமே போட்டியிடுகிற ஆண்டிப்பட்டித் தொகுதியில் எத்தனை எத்தனை விதி முறை மீறல்கள், போலி வாக்கு சேர்த்தல், உண்மை வாக்காளர்களை நீக்குதல் போன்ற ஜனநாயகத்தைக் குழி தோண்டிப் புதைத்திடும் காரியங்கள் நடைபெற்றிருக்கும் என்பதை சாதாரண அறிவு படைத்த ஒரு சாமான்யன் கூட சரியாகக் கணித்து விட முடியும்.

இன்னும் சொல்லப் போனால், அங்குள்ள மாவட்ட ஆட்சித் தலைவர், அ.தி.மு.க. வின் மாவட்டச் செயலாளராகவே செயல்படுகிறார் என்றும், பிற கட்சிகளுக்கு முறைப்படி தந்திருக்க வேண்டிய வாக்காளர் பட்டியலைக்கூட மிக மிகக் காலந்தாழ்த்தியே தந்திருப்பதாகவும், நடைபெற்றுள்ள தவறுகளை மறைத்திடவும், தப்பித்துக் கொள்ளவும் இந்தத் தந்திரம் கையாளப்பட்டிருக்கிறதென்றும் திட்டவட்டமாகவும், தெளிவாகவும் தெரிகிறது.

ஆண்டிப்பட்டித் தொகுதி தேர்தலையும் தள்ளி வைத்து, சைதை, வாணியம்பாடியுடன் சேர்த்து நடத்துக என்ற நமது கோரிக்கையை நாம் திரும்பப் பெறவில்லை.

தேர்தல் நடந்தேதான் தீருமென்றால், அதைச் சந்திப்பது ஜனநாயகக் கடமை என்பதை நாம் மறந்து விடவுமில்லை!

அந்தக் கடமையை நிறைவேற்றிட என் கண்மணிகளாம் உன் போன்ற கழக உடன்பிறப்புகள் அனைவரும் தயாராக இருந்திடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

18-1-2002

2663. இறந்தும் வாழ்தலே இறவா சொர்க்கம்

உடன்பிறப்பே,

அடக்கத்தின் விளைநிலமாய் அறிவே நிற்கும்; அது
முடக்கத்தான் துவையலைப் போல் நோயும் தீர்க்கும்
ஆணவ நோயும் தீர்க்கும்
நடக்கத்தான் கால் என்போம்; உதைக்க அல்ல!
மடக்கத்தான் கத்தி என்றால் தேவையில்லை - பழம்
அறுக்கத்தான் கத்தி வேண்டும், உயிர் பறிக்க அல்ல!
அடக்கத்தில் எழும் வீரம் உண்மை வீரம்.
வழக்கத்து வாய்வீரம் போலி வீரம்.
ஆமைபோல் ஐம்பொறியும் அடக்க வேண்டும்,
அதற்காக,

ஊமைபோல் குருடு போல் செவிடு போல்
ஊர் நடுவே திரிதல் வேண்டாம்!
கண் அடக்கம் இமைக் கதவில்
நா அடக்கம் வாய்ச் சிறையில்
மூச்சு அடக்கம் காற்றினிலே
மெய் அடக்கம் கல்லறையில் நல்ல
மன அடக்கம் அறிவொளியில்

எனைத் தலைமை தாங்க ஆணையிட்ட
அவையோர்க்கு நன்றியெனல் அவையடக்கம்.
எனைத் தலைமை தாங்க மன்றாடிக்
கேட்டுக்கொண்ட
மன்றத்தார்க்கு ஆசியெனல் மண்டை வீக்கம்.
யாகாவாராயினும்
நாகாத்தல் அடக்கத்தின் முதற்படியாம்,
வாய்க்குள் ஒரு வெறி நாய்
காத்தல் ஆணவத்தின் மேற்படியாம்! அங்கிருந்து
உருண்டு விட்டால் உருவின்றிச்
சுருண்டு போகும் நெஞ்சழுத்தம்.

பிறையொன்று பொறுத்திருந்து நிலவாகும்,
பொறை கொண்டார் பொறுத்திருந்து நிலமாள்வார்!
இரையொன்று வருமட்டும் காத்திருக்கும் கொக்கு;
அதனைப்

பொறை யென்று சொல்லாதீர்
தரை மீது அப்பறவை கற்ற சூழ்ச்சி!
இகழ்வார்ப் பொறுத்தல் தலையாய்க் கொண்டோன்
அகழ்வார் தாங்கும் நிலமென நவின்றார்.
இகழ்வார்க்கிருப்பது தலையும் அல்ல!
ஏசிக் கிறுக்குதல் கலையும் அல்ல!
புகழ்வார் பின்னே போதலும் தீது!
இகழ்வார் எதிர்த்தல் அதனிலும் தீது!
பொறையுடை மேலோன்
திரை கடல் இதயம்;
கறை படு விதமாய்த் தாக்கி மகிழ்வோர்,
தரை படு மீனாய்த் தவிப்பது உண்மை.

தன்னையே கொல்லும் சினம் என்று
தமிழ் ஞானி வள்ளுவரும் குறள் தந்தார்
சினந்தவர்கள் ஆர்த்தெழுந்து, கண்
சிவந்தவராய் ஆடுவதும், குடியில்
மிதந்தவர்கள் தடுமாறி, கண்
சிவந்து தள்ளாடுவதும் ஒன்றேயாம்!
ஆமையிலே பொறாமை நல்லதல்ல
இயலாமை ஏற்றதல்ல
அறியாமை நாடழிக்கும்
கொல்லாமை போல நல்லாமை
வெகுளாமை !

வெகுளலுக்கு முகம் நூறு
பல் நெரித்தல்
உதடழுத்தல்
கண் பிதுக்கல்
இப்படி
வெகுளலுக்கு முகம் நூறு
பொருளுடையார்க் கிவ்வுலகம்
அருளுடையார்க் கவ்வுலகமென்று

இருளுடையார் நெஞ்சத்தில் விளக்கேற்றி
வைத்தார்
அவ்வுலகம் எவ்வுலகம் என்பதிலே ஆராய்ச்சி
பல் உயிரில் சில உயிர்கள் போகின்ற
நல் உலகம் அவ்வுலகம் என மொழிவாரை
நாமறிவோம்.
கல் உரித்த நாரென்றால் நம்புவதா?
சொல் உரித்தார் சொர்க்கமென்று நரகமென்று
எள் உதிர்த்து ஏகலாம் அங்கே என்றார்
முள் உதித்த ரோஜா போல் முழு உண்மை
மலரட்டும்.
ஏட்டில் எழுத்தில் இருக்கும் சொர்க்கம்
ஏழைக்குதவுதல் இங்கே சொர்க்கம்
எளிமை பழகுதல் இனிய சொர்க்கம்
இறந்தும் வாழ்தலே இறவா சொர்க்கம்

அன்புள்ள,

மு. க.

19-1-2002

2664. மூச்சிருக்கும் வரையில் முத்தமிழுக்குத் தொண்டு செய்வோம்!

உடன்பிறப்பே,

(24.3.1968 அன்று வாணியம்பாடி இஸ்லாமியா கல்லூரியில் ஐம்புலன் என்ற தலைப்பில் நடைபெற்ற கவி யரங்கத்தில் தலைவர் கலைஞர் அவர்களின் தலைமைக் கவிதை)

பகைவர்க்குத் தாழாமல் படைகண்டு வீழாமல்
பல்லூழி வாழ்கின்ற தமிழ் எடுத்துப் பாடவந்த
கல்லூரிப் பெருமன்றில் இருக்கின்ற பெரியோரே!
பேரன்பு கொண்டோரே! நல்இளஞ் சிங்கங்காள்!
தாயன்பு தழைக்கின்ற நெஞ்சோடு ஏற்றிடுவீர் என்
வணக்கம்!

மெய்வாய் கண் மூக்குச் செவியென்று
ஐம்புலன் பற்றிக் கவியரங் கொன்று
அமைக்கின்றோம். ஐய நீ வருக! என்று
அப்துல் ரகுமான் அழைத்திட்டார்.....
வாயால் சொன்னார் கவியரங் கென்று
எனைக் கவியெனக் கொண்டாரே யென்று
மெய்யெலாம் சிலிர்க்க, மெய்யா என்றேன்.
கண் சிமிட்டி ஆமென்றார். கேலியோ என்னவோ?
பின்னர் அவர் போட்ட கடிதமொன்று
படித்துப் பார்த்தேன், கண்ணால் தான்!
பாடுதற்கு வா என்றே மீண்டும் அழைப்பு.

கார் விபத்தில் அடிபட்ட மூக்கினிலே சிறுசிகிச்சை,
போவதற்கு ஆமோ என்று பேசாதிருந்தேன்....
விடவில்லை என் தோழர்!
விடுவிடெனத் தொலைபேசி மணி அடிக்கச்
செவியினிலே ரகுமானின் குரல் கேட்டேன்.

வாயால் அழைத்து மெய்சிலிர்க்க வைத்துக்
கண் பார்க்கக் கடிதம் அனுப்பி
மூக்கினிலே நோய் எனினும் முக்காலும்விடமாட்டேன்
எனச் செலவு
நோக்காமல் செவிகுளிரத் தொலைபேசிக் கூப்பாடு
போட்ட பின்னர், நான் வராவிட்டால்
தாக்காமல் இருப்பீரோ நீவிர் எனப் பயந்து
பூக்காமல் இருக்கின்ற கவியரும்பு கட்டிக்கொண்டு
ஓடி வந்தேன்.

காலை யரும்பு என் கவியரும்பு
மாலைவந்தால் மலருமென்றே நம்பி வந்தேன் –
மாலையிலே!
அழகு நிலா ஒன்றிருந்தால் அல்லிமொட்டு
மலருமென்பர்; இங்கு
ஐந்தாறு நிலா அழகுக் கவி நிலாக்கள் இருப்பதாலே
நான் அள்ளிவந்த அரும்புகூட மலருமன்றோ?
மலராவிட்டால் நிலவின் குற்றம்!
எனைக் கவியென்று நினைத்தோர் குற்றம்!
வண்ணமிகு குன்றங்கள் இருக்கின்ற வடார்க்காட்டில்
– என்
எண்ணமெலாம் இனிக்கின்ற நட்புக் காட்டும்
முல்லைக் கொம்மை

இன்னலொன்று எனக்கென்றால் துடித்திட்ட
தோழருண்டு அந்தக்

கன்னல்நிகர் முல்லைக்கு! வருவதென்றால்
அடங்காத ஆவலுண்டு
அதனாலே அருகில் வந்தேன்.

ஆடி அடங்கிடும் மெய்யென்பார்
பாடி அடங்கிடும் வாய் என்பார்
தேடி அடங்கிடும் கண் என்பார்
வாடி அடங்கிடும் மூக்கென்பார்
நாடி அடங்கிடும் செவியென்பார்

இந்த ஐம்புலன் அடக்குதல் நன்றென்பார்!
அஃதெங்ஙனம் முடியும்?

பைம்புள் பாட்டை மறுக்குமோ செவியும்?
பைங்கிளித் தழுவலை மறுக்குமோ மெய்யும்?
பழந்தமிழ் பேச மறுக்குமோ வாயும்?
பலாச்சுளை நிலவை மறுக்குமோ கண்ணும்?
பனிமலர் நறுமணம் மறுக்குமோ மூக்கும்?

ஐம்புலனை அடக்குதற்குத் தவம் புரிந்த
அண்டமா முனிவரெல்லாம் அப்பாடா!
எப்பாடு பட்டு விட்டார்!
அரசுக் கட்டில், மணிமகுடம்
அனைத்தும் துறந்து
அடவியிலே துறவியாக இருந்திட்டார்,
விசுவாமித்திரர்;
அவர் மேனகையின் விசுவாச மித்திரராய்
ஆனகதை அறியீரோ? அது போலக்

கண், செவி, மூக்கு, வாய், மெய் புலன் ஐந்தும்
கடிவாளமில்லாத குதிரைகளாய்க்
காட்டாற்று வெள்ளமாய்ப் பெருகியோடக்
கண்ணிருந்தும் குருடாய்க் - காதிருந்தும் செவிடாய்ப்
புண்பெற்ற மெய் - புலம்புகின்ற வாயோடு
போக்கற்று நின்றிருந்த அருணகிரி வரலாறும்
அறிந்திடுவீர்.
எதுவும் ஓர் அளவாக இருத்தல் வேண்டும்;
அதுவும் மிக நிலையாக இருக்க வேண்டும்;
என்பதற்கு இரண்டு கதை சொன்னேன்.
கத்தியுளது கரத்தில் என்று, குத்திடவும் செய்யாதே!
புத்தியுடன் அதனாலே பழமறுத்துத் தின்றிடவும்
தயங்காதே!
முத்தியடைவேன் என்று
ஐம்புலனை இயக்காமல் இருப்பது போல்
நடிப்பதும் சூது
ஐம்புலனை அவிழ்த்து விட்டுக் கோயில்மாடாய்த்
திரிவதும் தீது! அது கிடக்க
ஐம்புலனில் ஆளுக் கொரு புலன் எடுத்து
அரங்கேற வந்தவரே ஒரு வார்த்தை!
இந்தக் கல்லூரி அரங்கினில் கவியை ஏற விடுவோர்

அவர்தம் பொருளே பெரிதென்பீர்!
கவிஞர்களே! நீங்கள்
எடுத்த பொருளே பெரிதென்று வாதிடும்போது
ஓர் எச்சரிக்கை!

மெய் பெரிதானால் ஊரார் யானை என்பர்
கண் பெரிதானால் கோட்டான் என்பர்
மூக்கு பெரிதானால் குடமிளகாய் அன்றோ
வாய் பெரிதானால் வாயாடிப் பட்டமுண்டு
செவி பெரிதானால் முறம் என முனகிடுவர்

அதனாலே

அளவறிந்து அவரவர் பொருளைப் பேசிடுவீர்
வம்பென்றால் விலக்கிடுவேன் – கவிஞரிடை
வம்பென்றால் களித்திருப்பேன் – தமிழ்க்
கம்பெடுத்துச் சொற்சிலம்பம் ஆடிடுவீர்! கவி
அம்பெடுத்துத் தாக்கிக் கொள்வீர்!
அதே நேரம் கனிந்த
அன்பெடுத்துத் தாங்கிக் கொள்வீர்!
சுவை ஒளி ஊறு ஓசை நாற்றமென்று ஐந்தின்
வகை தெரிய விரித்துரைப்பீர்
பகை பழி வெட்டி வீம்பு பாட்டினிலே வைத்து

நகை நட்பு நாம் என்ற உணர்வு நெஞ்ச
ஏட்டினிலே வைத்து

எழுந்திடுவீர் போருக்கு!
சின்னச்சேவல் சண்டை; காசுக்கு
மன்னர் போடும் சண்டை; நாட்டுக்கு
நீங்கள் போடும் சண்டை; பாட்டுக்கு
நாங்கள் காணும் சண்டை; தமிழுக்கு

முதலில்

மெய் எனும் பொருள் பற்றி
நெய்யொழுகும் கவியொன்று
பெய்திடுவார் சாகுல் அமீது
அவர் என்ன சொல்வார்?
மெய்யின்றிக் கண்ணில்லை மூக்கில்லை
வாயில்லை செவியில்லை....

மெய்தானே அனைத்துக்கும் ஆதாரமென்பார்!
அது மெய் தானே?

அதாவது அவர் அப்படிச் சொல்லப் போவது
மெய்தானே?

அவர்க்குத் துணையாக வள்ளுவரும்
மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம்
என்றார்
மெய்யா பொய்யா எனும் வாதத்திடையே
கொய்யாக் கனி சுவைப்போம்.
சற்றுக் காத்திருப்போம்.
சாகுல் அமீதின் தமிழ் கேட்போம்.

அடுத்து, முருகுசுந்தரம் வருகின்றார்....
வாயின்றிப் பாடுதல் முடியாதென்று வழக்குரைப்பார்
முடியுமா என்று என்னைத் தீர்ப்புக் கேட்பார்....
நான் திகைப்பேன்! தீர்ப்பையும் வாயால் தானே
சொல்ல வேண்டும் என்பார்!

ஏன்? தீர்ப்பைக் கையாலும் எழுதிக் காட்டலாம்
என்பேன்
நிரந்தினிது சொல்லுதல் வல்லார்ப் பெறின்
விரைந்து தொழில் கேட்கும் ஞாலம்
எனும் வள்ளுவர் கருத்தை நண்பரின்
வாய்க்கு அவலாய்த் தருவேன்
அவர் வாய் பற்றிப் பாடிடுவார்; நாம்
வாய் பொத்திக் கேட்டிடுவோம்,
வாய்தானே உணவருந்தும் வாசல் என்று!

அடுத்து,
கண் பற்றிப் பாட அரங்கின் கண்
வருகின்றார் ராசேந்திரன்
என் கண் இவர் கவிதை கண்டதுண்டு
அது, தேன் சீனி கற்கண்டு.
வாய்ச் சொற்கள் என்ன பயனுமில
கண்ணோடு கண்ணினை நோக்கொக்கின்

என வாதாடப் போகின்றார்.
வள்ளுவரும் அவர் குறளில் கண் என்ற சொல்லுக்கே

மிகுந்த இடம் தந்துள்ளார்;
கூற்றமோ? கண்ணோ? ஒரு குறளில் -
கொடும்புருவம் எனத் தொடங்கி
இவள்கண் என முடியும் ஒரு குறள் -
இருநோக்கு இவளுண்கண் உள்ளது
எனப் பறைசாற்றும் பிறிதோர் குறள் -
மலரன்ன கண்ணாள் மற்றோர் குறள்
கண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை
உண்மையான் உண்டிவ் வுலகு
இப்படிப் பல்வேறு குறட்பாக்கள் இவர்பக்கம்
இருப்பதால்
எப்படித் தீர்ப்பு நான் கூறுவேன் என்று நினைக்காதீர்!
இந்த ஐம்புலனிலும் சிக்காத மூளையாலே
சிந்தித்துக் கண்திறந்து தீர்ப்பளிப்போம்
அதுவரையில் கண்மூடி இவர் கவிதை
இன்பத்தில் மயங்கி நிற்போம்.

அடுத்து,

தமிழன்பன் மூக்குடைக்கப் போகின்றார்
இரு கண்ணுக்குத் தேவையுள்ள
கண்ணாடியை
இடையிலுள்ள மூக்குதான் சுமந்த போதும்
மூக்காடி என்று பெயர் வேண்டாம்.

கண்ணாடி என்றே இருக்கட்டும் என்று விட்டுத் தந்த
பரந்த உள்ளம்,
ஆத்தாடி எப்படித் தான் வந்ததுவோ மூக்கிற்கென்று
முரசறைவார் போருக்கு!
மோப்பத்தால் அனிச்சமலர் குழைய வைக்கும்
மூக்கென்றார் வள்ளுவரும்
மூக்கின்றி மூச்சில்லை; அதனாலே தன் பக்கம்
தீர்ப்பளிக்க வேண்டுமென்று நண்பர் கேட்டால்
நான் வாயாலே மூச்சு விட்டுக் காட்டிடுவேன்....
மூக்கு பற்றிப் பாடுகின்ற தோழருக்கு முன்னாலே
நிற்காமல் அவர் கவிதைப்
போக்கு பற்றி எண்ணிடுவோம் -
பாக்கு வைத்துத் திருமண அழைப்புத்தான்
தந்திடுவர்;இங்குப்

பாக்கு வைத்துத் தமிழ் மணம் பருகவன்றோ
அழைத்துள்ளார் - பருகிடுவோம்!

அடுத்து,

அலைபாடுங் கடல் போலக்
கலைபாடும் மாமல்லபுரம் போலக்

கவி பாடும் பொன்னிவளவன் இருக்கின்றார்...
காவிரியின் வளவன் கரிகால் வளவன்
கரிமேனி வளவன் இவர்; ஆனால்
கம்பீரத் திருமேனி வளவன்.....

செவி பற்றிச் செப்பிடவே வருகின்றார்
செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம் அச்செல்வம்
செல்வத்து ளெல்லாம் தலை
என்ற குறள் காட்டி வெற்றிப் பரிசு கேட்டிடுவார்
உண்மையது; வாதத்துக்காக! ஆனால்....
கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப; வாய்
மொழிந்தால்தானே செவியேறி அது செல்வமாகும்
என

நான் கூறிப் பிழைத்துக் கொள்வேன்
நடக்கட்டும் அவர் வாதம்
நம் செவியேறி இனிக்கட்டும் செந்தமிழ் கீதம்!
செவிமடுப்போம் உம் கவிதை;
வருவீர் ஐயா! வந்து விட்டார் வளவன்
நான் சொன்ன நிறம் காண்பீர்
கவித்திறம் காண்பீர்

எம் இருவரையும் இணைத்துப் பார்ப்பின்
இருவண்ணக் கொடி காண்பீர்....

தலைவர் கலைஞர் முடிவுரை :-

பாவலர்க்குப் பட்டாடை போர்த்தும் நாட்டில்
மெய் வாய் கண் மூக்குச் செவியென்று - தமிழ்

நெய்து நமக்கெல்லாம் பட்டாடை போர்த்திவிட்டார்
ஒன்றையொன்று தாக்கி உறுமுகின்ற பாட்டெல்லாம்
கேட்டிருந்தோம்.

கொன்றையணி செஞ்சடையில் சந்திரனும்
கங்கையுமே சண்டையிட்டால்

சிவனார்க்குத் தலைவலி தான்
ஆனால் என் தலை(மை)யில்
கவிச் சண்டை களச்சண்டை; தமிழ்க்
கற்கண்டை இணைத்த சண்டை!

மெய் பெரிது என்றவரோ
வாயின்றி வாழ எண்ணார்
வாய் பெரிது என்றவரோ
செவிடாக இருக்க ஒண்ணார்
கண்ணழகு என்றவரோ
மூக்கழகு குறைக்கத் துணியார்
மூக்கழகு என்றவரும்
கண்ணின்றி முட்டிக் கொள்வேன் என்பாரா?
இவை அத்தனையும் அமைந்தவரே
அவையேறிப் பாடி நின்றார்
ஆகையினால் இது வீண் வம்பா என்றால்,
இல்லை

வீணைத் தமிழ் வம்பு; அறிவைச்
சாணை பிடிக்கின்ற வம்பு
இந்த வம்பு நாடெங்கும் நடைபெற்றால்
புலமை மிகும்; புதுமை தோன்றும்;
தமிழுக்குப் புதிய வாழ்வு வரும்;
தொடர்ந்து செய்வீர் இந்தத் தூய பணி!

மூக்கினிலே மூச்சு போகும் வரையினிலே
முத்தமிழ்க்குத் தொண்டு செய்வீர்!
போனபின்னும் புகழாலே தமிழ் காப்பீர்
கண்கொண்டு காண்பதனைத்தும் கவிதையாக்குவீர்
எழுச்சிக் கவிதையாக்குவீர் அதனைச் செயல்படக்
கடமை தொடக்குவீர் கடமை தொடக்குவீர்!
செவியில் நல்லது கேட்டு, அல்லது விடுத்துச்
செந்தமிழர் நலம் பாட வாய் திறப்பீர்!

ஒன்று சொல்வீராயினும் நன்று சொல்வீர்! நான்
உரைத்திட்ட இவையேதுமின்றி இருப்பதற்கே,
உடல் என்றால், அது மெய்யல்ல பொய்யே ஆகும்.

அன்புள்ள,

மு.க.

20-1-2002

2665. விழுப்புண் படாத நாளெல்லாம் வீணான நாள் என்பான் வீரன்!

உடன்பிறப்பே,

(10-8-1968 அன்று தமிழ் வட்டத்தின் சார்பில் சென்னையில் அருமறையில் அறுவர் என்ற தலைப்பில் கவிஞர் பெரியசாமித் தூரன், கவிஞர் கம்பரடிப்பொடி சா. கணேசன், கவிஞர் நா. பார்த்தசாரதி, பேராசிரியர் எழில்முதல்வன், சந்தக்கவிமணி தமிழழகன், கவிஞர் திருச்சிற்றம்பலம் ஆகியோர் கலந்து கொண்ட கவியரங்கிற்கு தலைமை வகித்து தலைவர் கலைஞர் பாடிய கவிதை.)

அவை நடுவில் வீற்றிருக்கும் ஆன்றோரே
அறிவுசால் பெரியோரே
அன்புத் தாய்மாரே
அருமறையாம் திருக்குறளில் அறுவர் காட்ட - தமிழ்த்
திருமலியும் கவிதையுடன் வந்திருக்கும்
பெருமைமிகு புலவர்களே! வணங்குகின்றேன்!

தமிழ் வட்டம் அமைத்திங்கே
தமிழ் விழா நடத்துகின்ற
தகைசால் வி.கே.சி. நடராசன்
தந்திடுக வருகை என்றார்

வட்டமெனில் வகைப்படுத்தும் பேராம் - ஒரு
திட்டமுடன் செயலாற்றும் கூறாம்
பொட்டிடும் பாவைக்கு நெற்றியிலே வட்டம்
கொட்டிடும் ஒளிமழை நிலவுமோர் வட்டம்
மட்டில்லாத் தொலைவுகொள் கதிருமொரு
வட்டம்; சில
மாணவர்கள் வாங்குகின்ற எண்களோ முழுவட்டம்!

காதல் செயலுக்குக் கட்டிலொரு வட்டம்
கனிமொழிப் பிள்ளைக்குத் தொட்டிலொரு வட்டம்
மாந்தர் வாழ்வுக்குக் கற்புநெறி வட்டம்
மறவர் பெருமைக்குப் போர்க்களமே வட்டம்
உழவர் ஏருக்கு விளைநிலமே வட்டம்
நண்பர் உறவுக்கு அன்பகமே வட்டம்
துறவோர் தூய்மைக்கு மனக்கூண்டே வட்டம்
கயவர் வாழ்வுக்குத் தெரியாது வட்டம்
கண்டபின்னர் அமைவதுதான் கயவர் எனும் பட்டம்
முதலில் வீரன் எனும் தலைப்பினிலே
முரசறைவார் கணேச நல்லார்!
''இறந்திடுவேன் எதிர்ப்பினிலே

என் தலைவன் இருவிழியும் நீர் பொழிய!
அச்சாவை
இரந்திடுவேன்.....''

மறந்திடுமோ திருக்குறளும்? மறக்கவில்லை!
மானினத்தார் வீரங்காட்டி
ஆண் இனத்தைப் புறங்காணும் புறப்பாடல்
பழைய திறப்பாடல்!
விழுப்புண் படாத நாள் எல்லாம் - வீரன்
வீணான நாள் என்பான் என்ற குறட்பாடல்!
துள்ளிவருகுது வேல் என்று
துடித்து நின்றது இமையென்றால்
எள்ளி நகைப்பான் வள்ளுவனும்!
ஏறு தழுவுதல் வீரர்க்கழகு - அவர்வாயில்
வெற்றிலைச்
சேறு தடவுதல் மகளிர்க்கழகு.

(கவிஞர் கம்பன் அடிப்பொடி சா. கணேசன் வீரன் பற்றிப் பாடி முடிக்கிறார்.)

தலைவர் கலைஞர் :

மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர் நீப்பர் மானம் வரின் என்றே
மறவர்க்கிலக்கணம் வரைந்தது குறளும்!
அதை

மறந்தவர் சிலரோ வரியை மாற்றி

உயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
மயிர் நீப்பர் மானம் வரின் என்று
மொட்டையடிக்கின்றார் தேர்தல் பந்தயத்தில்!

“யானையினைக் குறி பார்த்துத் தவறும் வேல்
கானமுயல் கொன்றெறியும்’’ அம்பின் மேல் இந்த
மானமொழி வழங்குகின்றான் “குறள் வீரன்’’

இன்று,

பூனை குறுக்கானால் போச்சுதடா உயிர் என்று
ஞான மொழி பேசுகின்றான் தமிழ் வீரன்!
களம் காண்பான் வீரன் என்றால் நெற்
களம் காண்பான் உழவர் மகன்!
போர் மீது செல்லுதலே வீரன் வேலை – வைக்கோற்
போர் மீது உறங்குதலே உழவன் வேலை!பகைவர்
முடி பறித்தல் வீரன் நோக்கம் – நாற்று
முடி பறித்தல் நடவின் நோக்கம்
உழவனுக்கும் வீரனுக்கும் ஒற்றுமைகள் பல உண்டு.
வேற்றுமையோ ஒன்றே ஒன்று!
உழவன் வாழ வைப்பான்
வீரன் சாக வைப்பான்!
உழவனது பெருமையெலாம் உரைப்பதற்கு
உழுவலன்பர் சாரதியும் வருகின்றார்.

(கவிஞர் நா. பார்த்தசாரதி உழவன் பற்றிப் பாடி முடிக்கிறார்)

தலைவர் கலைஞர் :

“இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்’’
எதுவுமில்லையென ஏங்கியிருப்பாரைக் கண்டு
எது இல்லை என் மகனே?
வெடித்திருக்கும் என் வயிற்றில் மண்வளம் பார்
வெட்டியெடுத்தாலோ நீர் வளம் மிகுந்து விடும்.
வெகுதூரம் அகழ்ந்திட்டால் வைரமணி
வழங்கிடுவேன்

வெகுளியாய் வாழாமல் வேளாண்குடி
பெருக்கிடுக!

எனச் சிரித்து நிலமடந்தை நிற்கின்றாள்
உழவர் திருமகனே உணர்ந்திடுக புவிச் சிரிப்பு
உழைத்துப் பெற்றிடுக உடனடியாய்ப் புதுச்
செழிப்பு!

அடுத்து,

நண்பர் பற்றிப் பாட வருகின்றார்!
அடுத்து வரும் நண்பர்களை ஆதரித்து அன்புகொண்டு
படுத்துறங்கும் வேளையிலும் அவர் நினைவாய்
நானிருந்து எனைக்
கெடுத்திடவே துணிந்த போதும் நட்புடனே
அணுகி நைந்து இனித்
தடுத்திடவே முடியாது அவர் வீழ்ச்சி என்பதாலே,
முடித்து விட்ட கேண்மையெலாம் பெரிய கதை!
எதில் முதல்வனாய் இருக்க வேண்டும் நண்பன்?
இன்ப விளையாட்டிலா?
இடித்துரைக்கும் பண்பாட்டிலா? இதில்
எதில் முதல்வனாய் இருக்க வேண்டும் நண்பன்
என்று
எழில் முதல்வன் எழுத்தாரம் சூட்டுகின்றார்.

(பேராசிரியர் எழில் முதல்வன் நண்பன் பற்றிப் பாடி
முடிக்கிறார்)

தலைவர் கலைஞர் :

நட்புக்கோர் அதிகாரம்
நட்பாராயப் பிறிதோர் அதிகாரம்
பழகுதலுக்கோர் அதிகாரம்
பாங்குடனே தீ நட்பு கூடா நட்பு எனப்
பகுத்து ஒவ்வொன்றுக்குமோர் அதிகாரம்,
வகுத்தளித்த வள்ளுவனும்
நண்பர்களால் மெத்தப் பாடுபட்டானோ
நம்மைப் போல!
நண்பர் எனில் நமது எழில் முதல்வன்
சொன்னது போல்

நட்புக்கோர் அடையாளம்
பிசிராந்தை - கோப்பெருஞ்சோழனன்றோ!
திருமணத்தில் போர் ஓலை வந்தவுடன்
தேனமுதைப் புறம் விடுத்துத்
தேசிங்குப்படை சேர்ந்த மகமத்கான்
சரித்திரத்துப் புத்தகத்தில் சரியாத ஏடானான்.
ஆண்களிடை அதிக நேரம் நின்று விட்டோம்
வீரன் என்றும், உழவன் என்றும், நட்பு
விதைக்கின்ற தோழன் என்றும் வெகு நேரம்
ஆனதனால்
களைப்பாறப் பெண் வருகின்றாள்!
பெற்றுக் கொடுக்கவொரு புலவர் வருகின்றார்!

(சந்தக் கவிமணி தமிழழகன் பெண் பற்றிப் பாடி முடிக்கின்றார்)

தலைவர் கலைஞர் :

பெண்கள்
பெய் என்றால் பெய்து விடும் மழை என்றார் கவிஞர்
கற்புநிறை பெண்ணை அந்தக் கடுஞ்சோதனைக்கு
ஆளாக்கி
மழை பெய்யா விட்டாலோ மாசு தூவிடல்
முறையன்று
பெய்யெனப் பெய்யும் மழை என்று பெண்ணைப்
பெருமையாய்ச் சொன்ன குறள் - நல்ல
பெண்ணொருத்தி பெய்யெனப் பெய்கின்ற மழை
போன்றாள்
எனும் கருத்தை நிலை நாட்டும்!
பழங்கருத்து தலை காட்டும்! துரத்த வேண்டும்.

அடுத்து,

பெண்ணைத் தொடர்ந்து துறவு வருவானேன்? நம்
கண்ணையெலாம் காவி மறைப்பானேன்?

பெண் வந்தால் துறவு வரும். சில துறவிகட்குத்
துறவுக்குத் துறவு வரும்.
இரு துறவு ஏற்றவர்கள் இந்தத் தமிழகத்தில்
பலருண்டு

இனியதாம் இல்லறத்தை முதலில் துறந்து
கனிரசம், பால், தயிர், கமண்டலம் என்றிருந்து
கன உடல் கொழுத்தவுடன்
துறவறத்தைத் துறக்கின்றார் வெளிப்படையாய்!
இலைமறை காயாக இருக்கின்றார் கெட்டிக்காரர் இந்தத்
தலைமறைவு வேலையெல்லாம் தகுமா என்று
கலைமிகு பாவாணர் தூரனாரும்
நெருங்கி வந்து நெஞ்சம் திறக்கின்றார்!

(கவிஞர் பெரியசாமித் தூரன் துறவு பற்றிப் பாடி முடிக்கிறார்)

தலைவர் கலைஞர் :

துறவு நன்றெனினும்
தூய்மையாய் இருத்தல் வேண்டும்
வேடமாய்த் தொடர்தல் தீது; தீயிற்
சூடமாய்ப் பற்றிக் கொள்ளும் நெஞ்சுக்குத்
துறவு நிலை ஆடிக்காற்றுப் பஞ்சாம்
நஞ்சாம் வாழ்க்கை என்பார் பகலில்!
பஞ்சாமிர்தம் தேவையென்பார் இரவில்! அதனை
அஞ்சாமல் கண்டிக்கும் உரம் வேண்டும் நம்
நெஞ்சுக்கு!
மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம் பழித்தது
ஒழித்து விடின்
இதை மறுப்பார் கயவரிலே ஒருவகையாம்; அதில்
பலவகையும் பாடுதற்குத்
திருச்சிற்றம்பலம் வருகின்றார்
தித்திக்கும் தமிழ் தருகின்றார்.

(கவிஞர் திருச்சிற்றம்பலம் கயவர் பற்றிப் பாடி முடிக்கிறார்)

தலைவர் கலைஞர் :

மொழிந்த கவி அத்தனையும் முகமலர்ந்து
கேட்டிருந்த நல்லோரே!
முடிவுரையை நிகழ்த்துகின்றேன் முடிந்த பின்னர்
சென்றிடுவீர்!
ஆண்மை கொள் வீரனையும்
அன்பு சால் பெண்ணினையும்
கேண்மை மிகு நண்பனையும்

கேடு சூழ் கயவனையும்
பழகு தவத் துறவியையும்
உழவு செய் மனிதனையும்
அருமறையில் அறுவராய்த் தேர்ந்தெடுத்து
அளித்திடுக விளக்கமென்றார்
அமைச்சனைத் தான் விட்டு விட்டார்.
அருகில் வைத்துக் குறை கூறக் கூடாதென்ற
எண்ணம் போலும்!
கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அமைச்சு
தெரிதலும் தேர்ந்து செயலும் ஒரு தலையாச்
சொல்லலும் வல்லது அமைச்சு
பழுதெண்ணும் மந்திரியின் பக்கத்துட்
தெவ்வோர் எழுபது கோடி உறும்
இழிவினைத் தேடும் அமைச்சனை விடவே
எழுபது கோடிப் பகைவர்கள் மேலாம்
இவ்வாறு அமைச்சு பற்றிச்
செவ்வாழைக் குறள் கருத்தில்
ஒவ்வாமல் போனவர்கள்
எவ்வாறு சிறப்புறுவர்?
அமைச்சனுக்குத் தனியாக விளக்கம் ஏன்? பகை
அஞ்சாமை கொண்டிருந்தால் வீரனாவான்! பழி
அஞ்சாமை கொண்டிருந்தால் கயவனாவான்!
அன்புடைமை காட்டுவதில் பெண்ணாவான்!
நல்லோர் உழுவதிலும் சிறப்பாகச்
சொல்லோர் உழுவதிலும் செம்மை சால் உழவனாவான்!
வாய்ப்பதிகம் எனினும் வருகின்ற
வசதிகளை இழப்பதிலே துறவியாவான்!
நகுதற் பொருட்டன்று நட்டல்
மேற் சென்றிடித்தல் பொருட்டெனும்
குறள் உணர்ந்த தன்மையினால்
திறன் வாய்ந்த நண்பனாவான்.

அன்புள்ள,

மு.க.

22-1-2002

2666. எனக்கும் உனக்கும் எதற்காக அயர்வு?

உடன்பிறப்பே,

ஆண்டிப்பட்டி தேர்தலில் தி.மு.க. வேட்பாளராக வைகை சேகர் என்ற பாலசுந்தரம் நிறுத்தப்படுகிறார் என்று அறிவித்ததும், ஜல்லிக்கட்டில் காளையடக்கத் தயாராகி விட்ட வீர இளைஞனைப் போல ஜனநாயகம் காத்திடும் அறப்போரில் குதித்திட நீ ஆர்த்தெழுந்து கிளம்பிடுவாய் என்பது எனக்கு நன்றாகத் தெரியும்.

வேட்பாளர் அறிவிக்கப்பட்டபோது, செய்தியாளர்கள் என்னைப் பார்த்து, ''தேர்தலில் போட்டியிடாத கட்சிகளின் ஆதரவைக் கோருவீர்களா?'' என்று கேட்டனர்.

கோருகிறோம், விரும்புகிறோம் என்று இரண்டே வார்த்தைகளை மட்டும்தான் பதிலாகச் சொன்னேன்.

அந்தக் கட்சிகளின் தொண்டர்களை அழைப்பீர்களா?

என்றும் கேட்டனர்.

நான் சொன்ன கோருகிறோம், விரும்புகிறோம் என்ற இரண்டு வார்த்தை பதிலில் எல்லாமே அடங்கியிருக்கிறது.

என்று மீண்டும் விடையளித்தேன்.

அரசியலில் மற்ற கட்சிகளையும் மதிக்கிற மனப் பக்குவம் பெற்ற ஒரு அரசியல்வாதி, வேறு எப்படிப் பதில் சொல்லியிருக்க முடியும்?

யார் தயவும் தேவையில்லை. எந்தக் கட்சி ஆதரவையும் கேட்கப் போவதில்லை!

என்று பதில் சொல்லியிருந்தால், ஊரார் என்ன சொல்லியிருப்பார்கள்? எவ்வளவு ஆணவம் பார்த்தாயா இவனுக்கு? மக்கள் விரோதமான - ஜனநாயக விரோதமான - ஒருதலைப்பட்சமாக தேர்தல் ஆணைய இசைவைப் பெற்று கொட்டமடிக்கும் ஓர் எதேச்சாதிகார ஆட்சியை எதிர்த்து நடக்க

இருக்கும் தேர்தல் போராட்டக் களத்தில், தன்னுடன் இருக்கிற தோழமைக் கட்சிகள் மாத்திரமல்லாமல், ஒதுங்கி நிற்கிற கட்சிகளும் துணை நின்றால் கூடுதல் பலம்தானே என்பதை இந்தக் கருணாநிதி எண்ணிப் பார்க்காமலே, எடுத்தேன் கவிழ்த்தேன் என்ற பாணியில், யார் ஆதரவையும் கோரப் போவதில்லையென்று அலட்சியமாகச் சொல்லி விட்டானேயென்றுதானே என்னைக் கடிந்து கொண்டிருப்பார்கள்.

இப்படி ஊரார் சொல்வார்களே என்று பயந்துகூட அல்ல, உளப்பூர்வமாகவே எல்லோருடைய ஆதரவும் தேவை என்ற அவசியத்தைக் கருதியும்தான் நான் அவ்வாறு பதில் அளித்தேன்.

ஆனால், ஆதரவு தருவதற்கு வாய்ப்பில்லையென்று சில கட்சித் தலைவர்கள், நாகரிகமாகவும், மென்மையாகவும் செய்தியாளர்களிடத்திலே சொன்னதைக்கூட, சில பத்திரிகைகள், அவைகள் ஆவலுடன் எதிர்பார்த்த செய்தியைப் போல மிகுந்த பரபரப்புடன் வெளியிட்டிருப்பதுதான் விந்தையாக இருக்கிறது.

நாமும், நம்முடைய தோழமைக் கட்சிகளின் செயல்வீரர்களும் இந்த ஜனநாயகம் காத்திடும் அறப்போரில், களம் இறங்குகிறோம்.

இடைத் தேர்தல் அறிவிக்கப்பட்ட மூன்று தொகுதிகளிலும் ஆளுங் கட்சியினரின் முறைகேடுகள் சுட்டிக் காட்டப்பட்டு, தேர்தல் ஆணையம் இரண்டு தொகுதித் தேர்தல்களைத் தள்ளி வைத்து விட்டு - ஆண்டிப்பட்டியில் மட்டும் எல்லாமே அறவழியில் நடைபெற்றிருப்பதாகச் சாதித்தவாறு, தேர்தல் தேதியை ஒத்தி வைக்க முடியாது என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டது.

உற்சவ விக்ரகங்கள், ஆளுங்கட்சி சார்பில் போட்டியிடுவதாக இருந்த சைதாப்பேட்டையிலும், வாணியம்பாடியிலும் - இவ்வளவு பெரிய வாக்காளர் பட்டியல் மோசடி நடைபெற்றிருந்தால், மூல விக்ரகமே போட்டியிடும் ஆண்டிப்பட்டி தொகுதியில் எந்த அளவுக்கு அந்த மோசடிகள், தேர்தல் விதி மீறல்கள் நடைபெற்றிருக்கும் என்பதை ஒரு சாதாரண மனிதன் கூட யூகித்துத் தெரிந்து கொள்ள முடியும் என்கிற போது - எல்லாக் கட்சிகளும் எடுத்துச் சொல்லியும்கூட, ஆதாரங்களைக் காட்டியும்கூட, அறிவுச் செறிவும், அனுபவமும் கொண்ட தேர்தல் ஆணையம், தெரிந்து கொண்டும் தெரியாதது போல் நடிப்பதை

ஆதங்கத்துடன் சுட்டிக்காட்டினால், அதை ரசக் குறைவான விஷயம் என்று சுடுசொல் கூறித் தாக்குவது, சுருதி தவறி இசைப்பது போலன்றோ இருக்கிறது!

உடன்பிறப்பே, பாரபட்சமின்றி செயல்பட வேண்டிய கடமையுணர்வின் கருவூலங்களே களவு போய் விடுவதைக் கண்டு கலங்காமல் இருக்க முடியவில்லை. துடிக்காமல் இருக்க முடியவில்லை.

பசும்பொன் தேவர் திருமகனார் அவர்கள் அவரது பாணியிலே அடிக்கடி சொல்லிக் காட்டியது போல,

மங்கை சூதகமானால் கங்கையிலே முழுகலாம்.

கங்கையே சூதகமானால் எங்கே முழுகுவது?

என்பதை நினைத்துத்தான் பெருமூச்சு விட வேண்டியுள்ளது.

அந்தோ! தலைவன் அயர்ந்து விட்டான் போலிருக்கிறதே! பெருமூச்சு விடுகிறானேயென்று நினைத்து நீ அயர்ந்து விடாதே! நீ இருக்கும்போது, உன் நெஞ்சில் நான் இருக்கும்போது எனக்கும், உனக்கும் எதற்காக அயர்வு!

பெரு மூச்சையும் புயல் மூச்சாக்கிக் கொண்டு களம் புகும் காளையல்லவா நீ!

அயர்வு என ஒன்று என்னை வருடிப் பார்ப்பதெல்லாம், என் உடன்பிறப்புகள் சிலரிடையே சில இடங்களில் சில்லென்று பூத்திடும் சிறு நெருஞ்சி போன்ற ஒற்றுமையின்மையைக் காணும்போதுதான்!

அதுகுறித்து அடிக்கடி சுட்டிக்காட்டி வருகிறேன். யாருக்கோ சொன்னது என்று அலட்சியப்படுத்திவிட்டு - எதிரியிடமும் காட்டாத ஆத்திரத்தை, கழகப் பாசறைகளில் உள்ள உடன்பிறப்புகளுக்குள் காட்டுகின்ற காட்டுப்போக்கே எனக்குத் தொடர் கவலையளித்து வருகின்ற செய்தியாகும்.

என் செய்வது, ஒன்றுபடுத்த உழைக்கிறேன் நான் - துண்டுபடுத்துவதற்கென்றே சிலர் தோள் தட்டி நிற்கிறார்கள்!

மக்கள் விரோத அரசின் அராஜகங்களை எடுத்து விளக்கி, ஏழை எளியோர் இன்று ஏற்றப்பட்டுள்ள கட்டண உயர்வு, வரி உயர்வுகளால் ஏங்கித் தவிப்பதை விரித்துரைத்திட நடத்தப்படும்

கூட்டங்களில் கலந்து கொள்ளும் கழகச் சொற்பொழிவாளர் சிலர் கூட, அங்குள்ள உட்கட்சிப் பூசலில் ஒரு பக்கம் சேர்ந்து கொண்டு, ஏற்கெனவே இருக்கும் சிறு பூசலைப் பெரும் புயலாக மாற்றி மகிழ்கின்றனர் என்ற செய்திகளும் எனக்கு வந்து கொண்டுதானிருக்கின்றன.

இதனை நான் வெளிப்படையாகவே தெரிவிப்பது; மூடி மறைக்கப்படும் நோய், பின்னர் அறுவை சிகிச்சை அளவுக்குப் போய் விடும் என்ற அச்சத்தின் காரணமாகத்தான்! அதுவும் தேவைதான் எனில், தயக்கம் காட்டிப் பயனில்லை என்பதையும் தலைமை உணர்ந்தேயிருக்கிறது!

இந்த எச்சரிக்கைக்குப் பிறகாவது ஒற்றுமையைக் கட்டிக் காத்திட உன்போன்ற உடன்பிறப்புகள், உட்பூசலில் ஈடுபடும் உடன்பிறப்புகளுக்கு அறிவுரை வழங்கி, நாமனைவரும் ஒரே அணி - அண்ணா உருவாக்கிய கழகத்தின் அணி - இங்கேயில்லை உட்பூசல் எனும் பிணி! ஒன்று பட்டு ஆற்றிடுவோம் இலட்சியப் பணி! - என்ற நிலையை ஏற்படுத்த வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

நமது ஒற்றுமைக்கும், உழைப்புக்கும், உடன்பிறப்புகள் என்ற பாச உணர்வுக்கும் ஓர் அறைகூவலாக ஆண்டிப்பட்டி இடைத் தேர்தல் அமைந்திருக்கிறது என்பதை மறந்து விடக் கூடாது!

இப்போதே ஆரம்பித்து விட்டார்கள் பொய்ப் பிரச்சாரத்தை! சென்ற சட்டமன்ற பொதுத்தேர்தலைப் போல!

நாலு இடங்களில் வேட்பு மனு போட்டால், அந்த நாலும் செல்லாது. அது தண்டனைக்குரிய குற்றம்.

அன்புள்ள,

மு.க.

23-1-2002

2667. நல்லவேளை!
நறுக்கென்று பதில் கிடைத்தது!

உடன்பிறப்பே,

இன்று காலை, படுக்கையில் சாய்ந்தவாறு (சன்-டி.வி.) தமிழ் மாலை தொலைக்காட்சியில் வணக்கம் தமிழகம் பார்த்துக் கொண்டிருந்தேன். காலை வேளையில் திரு.சாலமன் பாப்பையா அவர்களின் திருக்குறள் நிகழ்ச்சியும், தம்பி வலம்புரிஜான் நிகழ்த்தும் இனிய நாள் உரையும், திரு. சுகி. சிவத்தின் கருத்துச் சித்திரமும் எனக்கு உடன்பாடானவை, உடன்பாடற்றவை எவையாயினும் சுவைத்துக் கேட்பது வழக்கம். மதுரத் தமிழோசையல்லவா? அதில் மாற்றுக் கருத்து இருப்பினும், அதனை மனத்திற்கொள்ளாமல் சில மணி நேரம் தமிழுடன் தோய்ந்திட முடிகிறதல்லவா!

இன்று காலை நான் கண்ட வணக்கம் தமிழகம் பற்றி நான் கொண்ட உணர்வை வெளிப்படுத்தாம லிருக்க முடியவில்லை.

கலா என்கிற சர்மிஷ்டா எனும் பெண்மணி கலந்து கொண்ட நிகழ்ச்சி அது!

அந்தப் பெண்மணி ஆந்திர மாநிலத்தவர் என்றும் தமிழ்நாட்டில் வாழ்கிறார் என்றும், சிறு கதை, நாடகம், நகைச்சுவைத் துணுக்குகள் தமிழ் மொழியில் எழுதுவதில் திறமையுடையவர் என்றும் தெரிய வந்தது.

தொலைக்காட்சி நிலையத்தின் சார்பில் ரமேஷ் பிரபா, சந்தானலட்சுமி ஆகிய இருவரும் மாறி மாறி எழுப்பிய பல கேள்விகளுக்கு அந்தப் பெண்மணி விடையு மளித்து, விளக்கமும் அளித்துக் கொண்டிருந்தார். அவரது விரிவுரையில் மனித வாழ்க்கையின் கடினமான பாதைகளைக் கடந்து பயணம் நடத்துவதற்கு நகைச்சுவை என்பது ஒரு சிறந்த வழித்

துணையாகும் என்ற கருத்தை வலியுறுத்திய வண்ணமிருந்தார். தனது கருத்திற்கு வலிவு சேர்த்திட அண்ணல் காந்தியடிகளும், அறிஞர் அண்ணாவும், கலைவாணர் என்.எஸ்.கே.யும் நகைச்சுவை பற்றிக் கொண்டிருந்த ஆழமான எண்ணத்தை ஆதாரமாகக் காட்டிய போது எனக்கு அளவற்ற மகிழ்ச்சியாக இருந்தது!

மறைந்த அன்பு நண்பர் ஆசிரியர் சாவியும், அருமைத் தம்பி வைரமுத்துவும், நான் கடுஞ்சோதனைகளுக்கு மத்தியிலும் கலகலப்பாகப் பேசிக் கொண்டு, கூட இருப்போரை சிரிக்க வைப்பதைப் பார்த்து இந்த நகைச்சுவைதான் உங்கள் பொது வாழ்க்கையின் வெற்றி ரகசியம் என்று அடிக்கடி சொல்லி யிருக்கிறார்கள்! அவர்கள் குறிப்பிட்டது போல வெற்றிப் படிக்கட்டுகளில் ஏறிக் கொண்டேயிருப்பது மட்டும் பொது வாழ்க்கை இலக்கணமல்லவே! தோல்வியையும் தாங்கிக் கொண்டு, அப்படியொன்று ஏற்படவே இல்லை என்று, நல்வழியெதுவோ அதுவே நம்வழி யெனத் தொடர்வதுதானே பொது வாழ்க்கை. ஆம், பூரணமான பொது வாழ்க்கை!

கிணற்றுக்குள் விழுந்து விடுகிறான் ஒருவன் - நீச்சல் தெரியாது - ஒரு கொடி மேலிருந்து கீழே தொங்குகிறது - அதைப் பிடித்துக் கொண்டு மேலே ஏற முனைகிறான். அந்தக் கொடி, தன்னைத் தாங்காது என்று தெரியும் - ஆனாலும் ஒரு நம்பிக்கை - ஏறிட முயற்சி செய்கிறான் - அப்போது கிணற்றுச் சுவரின் ஒரு பொந்துக்குள்ளிருந்த தேனடையில் கொடி பட்டு தேனடை சிறிது உடைந்து, கொடி வழியே தேன் சிந்தி - அப்படிச் சிந்திய தேனின் ஒரு துளி அவன் உதடுகளுக்கிடையே விழுகிறது - சே! சாவின் முனையில் தேன் துளி என்ன வேண்டிக் கிடக்கிறது என்று அவன் அதை வெறுத்து ஒதுக்கி விடுவதில்லை - நாவின் நுனியால் உதடுகளைத் தடவி தேனின் இனிப்பைச் சுவைக்கிறான் அல்லவா? அது போலத்தான் கடினமான பொது வாழ்வுச் சோதனையின்போதுகூட, நகைச்சுவை என்பது உதட்டில் விழுந்த தேன் துளி போல் அமைந்து விடுகிறது! இப்படியெல்லாம் எண்ணிக் கொண்டே நான் வணக்கம் தமிழகம் நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்த போது, சில வார்த்தைகள் என் காதில் மோதிய சூழ்நிலையில் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து உட்கார்ந்தேன்.

சர்மிஷ்டா (கலா)வைப் பார்த்து ரமேஷ் பிரபாவும் சந்தான லட்சுமியும் கேட்டார்கள், தற்போது கண்ணகி சிறந்தவளா? பாஞ்சாலி சிறந்தவளா? என்று ஒரு கருத்துப் போர் நடக்கிறதே? அதைப் பற்றி உங்கள் எண்ணம் என்ன? இருவரில் யார் சிறந்த பெண்? இந்தக் கேள்வி என்னை அதிர வைத்து விட்டது; என்ன பதில் வரப் போகிறதோ என்ற அச்சத்தினால் ஒரு பதற்றம் எனக்கு! ஏனெனில் இளமைப் பருவ முதல் சிலப்பதிகாரம் என் குருதியோட்டத்துடன் கலந்த தமிழ்ப் பண்பாட்டு இலக்கியச் சித்திரம் - சில பட்டி மன்றங்கள்கூட நடப்பதுண்டு, கற்பில் சிறந்தவள் கண்ணகியா? மாதவியா? என்று!

அதையே நான் விரும்பாதவன்! இருவருமே கற்பிற் சிறந்த மங்கையர்தான் என இளங்கோவடிகளின் சிலம்பு கூறுகிறது. கணவனை இழந்த கண்ணகி நீதி கேட்டு, மதுரையை எரித்து மாய்ந்து போகிறாள். மாதவியோ, கணவனைப் பிரிந்ததும் இல்வாழ்வை வெறுத்துத் துறவியாகிறாள். எனவே இந்த இருவருக்குள் எதற்காக இந்த ஒப்பாய்வு? என்பது தான் என் கேள்வி!

நல்லவேளை! அப்படியொரு கேள்வி கேட்காமல் கண்ணகி சிறந்த பெண்மணியா? பாஞ்சாலி சிறந்த பெண்மணியா? என்று கேட்டார்கள்.

தேவையற்ற கேள்வி - எல்லோருக்கும் தெரிந்த பதில் என்பதால்! - எனினும் திடுக்கிட்டேன். என்ன விடை வெளிப்படப் போகிறதோ என்று! சட்டென்று சர்மிஷ்டாவிடமிருந்து பதில் வந்தது; ''நிச்சயமாகக் கண்ணகிதான் சிறந்த பெண்மணி - பாஞ்சாலி ஐந்து பேரைக் கணவனாகக் கொண்டவள். அவள் எப்படி கற்புக்கரசியாக இருக்க முடியும்?'' என்று!

இந்தப் பதிலைச் சொல்லி விட்டு, அவர் மேலும் சொன்னார். ஐந்து பேர் கணவர் எனினும், பாஞ்சாலிக்கு அர்ச்சுனன் மீதுதான் அதிகக் காதல்! என்று!

அந்தப் புராணத்தை இன்னும் கொஞ்சம் புட்டுப் பார்த்தால், அதே பாஞ்சாலி, பரமாத்மா கிருஷ்ணனிடம் ஓர் உண்மையை ஒத்துக் கொள்கிறாள். அதாவது ஐந்து பேரை அன்னியில் தனக்கு ஆறாவதாகக் கர்ணன் மீதும் காதல் உண்டு என்பதாக!

பாரதக் கதையில் சொல்லப்பட்டதைத்தான் குறிப்பிடுகிறேன். என் சொந்தக் கற்பனையல்ல!

உடன்பிறப்பே, கண்ணகி சிலையை தூக்கி எறிந்து தமிழர்கள் கண் போல் காத்திடும் பண்பாட்டுக்கு அறை கூவல் விடுத்தது மட்டுமல்லாமல், கண்ணகியையும், பாஞ்சாலியையும் ஒப்பிட்டுப் பேசுகிற அளவுக்கு தமிழகத்தில் சில பேர் கைக்கூலிகளாக ஆகியிருப்பதால்தானே,

வணக்கம் தமிழகத்தில் இந்தக் கேள்வி எழுந்திடும் சூழ்நிலை ஏற்பட்டது!

நல்லவேளை, நறுக்கென்று சரியான பதிலும் கிடைத்தது!

அன்புள்ள,

மு.க.

24-1-2002

2668. நான் கண்ட மூலிகை நஞ்சுதனை முறிக்கும்!

உடன்பிறப்பே,

பெரியார் திடலில் பெரியார் முன்னிலையில் நான் கலந்து கொண்ட ஒரு நிகழ்ச்சி. அப்போது நான் ஆட்சிப் பொறுப்பில் இருக்கிறேன். குன்றக்குடி அடிகளாரும் கலந்து கொண்ட நிகழ்ச்சி. அந்த நிகழ்ச்சியில் என்னுரையில் குறிப்பிட்ட ஒரு பகுதி வருமாறு :- கீரிக்கும், பாம்புக்கும் கடுமையான சண்டை நடக்கும். இறுதியாகக் கீரி, பாம்பைத் துண்டு துண்டுகளாக்கி விடும். பாம்பு இறந்து விட்ட போதிலும், சண்டையின் பொழுது அதன் நச்சுப் பல்லில் இருந்து வெளிப்பட்ட விஷம் கீரியின் உடலில் பரவி ஆபத்து விளைவித்து விடும் என்பதால் அந்த விஷத்தைப் போக்கிக்கொள்ள கீரி, ஒரு மூலிகையைத் தேடிச் சென்று அந்த மூலிகையின் மீது படுத்துப் புரளும். விஷம், வலிமையிழந்து விடும். அந்தக் கீரிப்பிள்ளையைப் போலத்தான், பெரியாரின் பிள்ளைகளில் ஒருவனாகிய நான் பகைவர் கக்கிடும் விஷத்தினால் பாதிக்கப்படாமல் இருக்க, பெரியார் எனும் இந்த மூலிகையைத் தேடி அடிக்கடி வருகிறேன்.

இப்போதும் பல்வேறு வகையான நச்சுப் பாம்புகளின் விஷப் பற்களாலும், விஷமப் பற்களாலும் நான் தாக்குண்டு வேதனையுறும் போதெல்லாம், தந்தை பெரியார் அவர்கள் என்னைப் பற்றிச் சொன்னது - எழுதியது அனைத்தையும் விஷத்தை முறிக்கும் மூலிகைகளாகக் கரு, அவற்றை நானும் நினைவு படுத்திக் கொண்டு உன்போன்ற உடன்பிறப்புகளுக்கும் நினைவுபடுத்துகிறேன்.

1969-ல் அண்ணா மறைந்தவுடன், அடுத்து யார் என்ற கேள்வி எழுந்து, நாவலர் அவர்கள் அந்தப் பொறுப்புக்குப் போட்டியிட விரும்பிய நிலையில், கழகச் சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட மிகப் பெரும்பாலோர், கழகத்தில் என்னைத் தேர்வு செய்திட

முன்வந்தனர். அது ஒரு பிரச்சினையாக உருவெடுத்த போது, பெரியார் அவர்கள் 11-2-69 தேதியிட்ட ''விடுதலை" இதழில், பெரியார் அவர்களே கையெழுத்திட்டு ஒரு நீண்ட தலையங்கமே எழுதினார்''. அதில் சில பகுதிகள்:-

''அண்ணா அவர்கள் மறைந்தவுடன் நடக்கக் கூடாதது நடந்து விட்டது. எதிர்காலம் இருட்டாகியிருக்கிறது என்று கூறி மனவேதனை அடைந்தேன். என்றாலும், இன்று அண்ணா மறைவு தவிர்க்க முடியாதது என்றும், இருட்டு நிலை நீங்கி வெளிச்சம் ஏற்பட்டு வருகிறது என்றும் கருதத்தக்க அளவுக்கு நிலைமை ஏற்பட்டு வருகிறது. அமைதி அடைகிறேன்''.

காரணம், அண்ணாவின் மறைவு அண்ணாவின் இரண்டு ஆண்டு ஆட்சிக்கு நம் நாட்டில் எந்த ஆட்சிக்கும் கிடைத்திராத ஒரு மகத்தான பெருமையை அளித்திருக்கிறது என்பதேயாகும். அப்படிப்பட்ட பெருமையான ஆட்சிக்கு அண்ணாவுக்குப்பின் அந்த ஆட்சிப்பீடத்தில் அமர, கலைஞர் கருணாநிதி அவர்களை ஆட்சிக் குழுவினர் ஏகமனதாகத் தேர்ந்தெடுத்து இருக்கிறார்கள். கலைஞரும் பதவி ஏற்றுக் கொண்டுவிட்டார். அதுமட்டுமல்லாமல் ''நான் அண்ணாவின் அடிச்சுவட்டைப் பின்பற்றியே நடந்து கொள்வேன்'' என்று உறுதி கொடுத்தே பதவியில் அமர்ந் திருக்கிறார்.

இதுதான் நான் ''இருட்டு வெளிச்சமாகிறது'' என்று சொன்னதின் பொருளாகும். கலைஞரின் ஆட்சி, மக்களுக்கு அண்ணாவின் ஆட்சி போலவே பாராட்டுதலுக்குரிய ஆட்சியாகவே நடந்துவரும் என்றே நான் நம்புகிறேன்.

அதனாலேயே தமிழ் மக்கள் அனைவரையும் கலைஞரது ஆட்சிக்கு நிபந்தனையற்ற ஆதரவுதர வேண்டுமென்று வேண்டிக் கொண்டேன்... வேண்டிக் கொள்கிறேன்... கலைஞர், அண்ணாவை விட யோசனையாளர் ஆனதால், அவர் தமிழர் நலனை - உரிமையை எந்த நிலையிலும் விட்டுக் கொடுக்க மாட்டார் என்று எதிர்பார்த்தே தமிழருக்கு உறுதி கூறுகிறேன்.

இந்த நிலையில் நமக்கு ஏற்பட்ட - ஏற்படக்கூடாத கெட்ட வாய்ப்பு என்ன வென்றால், நாவலர் அவர்களுடைய ஊடலேயாகும். இந்த ஊடல் முற்றினால் கேடாக - பகையாக முடியுமே என்று கருதித்தான் ஏற்படக் கூடாத காரியம் என்கிறேன்.

அது மட்டுமல்ல உடன்பிறப்பே, 1968ஆம் ஆண்டு எனது 45வது பிறந்த நாளையொட்டி வெளியிடப்பட்ட சிறப்பு மலரில், பொதுமக்களுக்காகப் பொதுத் தொண்டு செய்தவர்கள் என்பது மாத்திரமல்லாமல், பொதுமக்கள் பாராட்டுதலுக்குரிய எந்தக் காரியத்தை யார் செய்தாலும் அவர்களைப் பாராட்ட, பெருமைப்படுத்த பொது மக்கள் முயற்சிப்பது இயற்கையே ஆகும். கலைஞர் கருணாநிதி விஷயத்தில் பாராட்டத் தகுந்த பல நன்மைகள் இருக்கின்றன. கலைஞர் அவர்கள், தனது பள்ளி மாணவப் பருவத்தில் இருந்து, இன்றைக்கு சுமார் 45 வயது வரை 25 - 30 ஆண்டுகளாகப் பொதுத் தொண்டு செய்து வருகிறார். தியாகிகள் அடையாளமாகிய சிறை செல்லும் தன்மையில் பல முறை சிறை சென்றிருக்கிறார். இவ்வளவு மாத்திரமல்லாமல் ஒரு கட்சியை ஆரம்பித்து, ஆரம்பித்த முக்கியஸ்தர்களில் ஒருவராய் இருந்து, அந்தக் கட்சிக்கு உண்டான எதிர்ப்புகளை எல்லாம் சமாளித்து, அந்தக் கட்சியை நல்ல வண்ணம் உருவாக்கி, அந்தக் கட்சியை நாடாளும் ஸ்தாபனம் ஆக்கி, இன்று மகா வன்மை படைத்த காங்கிரசை எதிர்த்துத் தோல்வியடையச் செய்த முக்கியஸ்தர்களில் ஒருவராயும் இருக்கிறார். கலைஞர் அறிவில் சிறந்தவர், நிர்வாகத்தில் சிறந்தவர், பொதுத் தொண்டுக்காகத் தியாகம் செய்வதில் சிறந்தவர்.

என்று 1968ஆம் ஆண்டிலேயே எழுதி, என்னை வாழ்த்தியவரும், 1945ஆம் ஆண்டு ஈரோடு குருகுலத்தில் குடியரசுப் பாசறையில் என்னைத் தனது மாணவனாக ஏற்றுக் கொண்டு பயிற்சி தந்தவரும், அந்தப் பகுத்தறிவுத் தந்தை பெரியார்தான்!

ஆட்சிப் பொறுப்பேற்று அடுத்து நடைபெற்ற 1971ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றி பெற்ற நிலையில், எனது 48வது பிறந்த நாள் வாழ்த்துக் கூறி மலரில் கட்டுரை தீட்டிய பெரியார் அவர்கள், கலைஞர் அவர்கள், நமக்குக் கிடைத்திருக்கிற அரிய பொக்கிஷமாகும். மற்ற மாநிலங்களை விட நமது தமிழகத்தின் பெருமை போற்றப்படுவதற்குக் காரணம் நமது முதல்வரின் தனித் திறமையாகும். கலைஞர் அவர்கள் நமக்குக் கிடைத்தற்கரிய வாய்ப்பு என்று சொல்ல வேண்டும். இதற்கு முன் ஆட்சியில் இருந்த கட்சிக்காரர்களை விட பகுத்தறிவாளராவார். அவருக்கு பிறந்த நாள் மலர் வெளியிடுவது அவரது கொள்கைகளைப்

பின்பற்ற வேண்டும் என்பதற்காகும். மனிதர்களை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அதாவது நம்பிக்கையாளர்கள், பகுத்தறிவாளர்கள் என்பதாகும். முன்னோர்கள் சொன்னது, பழைய காலம் முதல் இருந்து வருவது என்பதற்காக எதையும் சிந்திக்காமல், கடவுள் - மதம் - ஜாதி - சாஸ்திரம் என்ற பெயரால் பல மடைமைகளைச் சிந்திக்காமல் ஏற்றுக் கொள்பவர்கள் நம்பிக்கையாளர்கள் ஆவார்கள். அறிவைக் கொண்டு ஆராய்ந்து, அறிவிற்கு ஏற்றதை ஏற்றுக் கொண்டு, மற்றதைத் தள்ளிவிடக் கூடியவர்கள் பகுத்தறிவாளர்கள் ஆவார்கள். இதில் நம் நாட்டில் நம்பிக்கையாளர்கள் என்பவர்கள்தான் அதிகம். பகுத்தறி வாளர்கள் இருப்பது மிக மிகக் குறைவேயாகும். நமது முதல்வர் கலைஞர் அவர்கள் தலை சிறந்த பகுத்தறிவுவாதி ஆவார். இந்தியாவை எடுத்துக் கொண்டால் இந்த ஒரு நாட்டைத் தவிர, மற்ற நாடுகளில் நடைபெறுகிற ஆட்சியாவும் நம்பிக்கையாளர் ஆட்சியாகும். நம் நாட்டில் மட்டும் தான் பகுத்தறிவாளர் ஆட்சி நடக்கிறது. தி.மு.க. ஆட்சியின் கொள்கை நமது மக்களுக்கு நன்மை செய்வதேயாகும். இந்தியாவில் எந்த நாடு அமைதியோடு இருக்கிறது? தி.மு.கழகத்திற்குப் பெரு வெற்றி என்றால் அது கலைஞர் அவர்கள் தனது சாதுர்யத் திறமையால் பெற்றதாகும். இத்தகைய பகுத்தறிவாளராகவும், ஆட்சிக் கலையில் அரிய ராஜதந்திரியாகவும், முன் யோசனையுடனும் அவர் நடந்து வருவதின் மூலம் தமிழர்கட்குப் புது வாழ்வு தருபவர் ஆகிறார் நமது முதல்வர். அவர் பல்லாண்டு வாழ்ந்து, அவர் பணி வெற்றியடைய வேண்டுமென ஆசைப்படுகிறேன்.

தந்தை பெரியார் அவர்கள் என்பால் கொண்டிருந்த அன்புக்கும், நம்பிக்கைக்கும் இவையனைத்தும் ஒரு துளி சான்றுதான்! விஷத்துளிகளின் வன்மையை வீழ்த்தும் அந்த மூ லிகை, இதுவரை என்னைத் தீண்டிய பாம்புகளையும், இனியும் தீண்ட வரும் விஷ நாகங்களையும் விரட்டியே தீரும் என்ற உறுதியுடன் காட்டுப் பாதையாயினும் - கடும் புயலானாலும் - என் பயணம் தொடரும். உறுதி மிக்க உடன்பிறப்புகளான உங்களுடன் இணைந்து!

அன்புள்ள,

மு.க.

25-1-2002

2669. சேர்ந்து கரம் குவித்து, சிரம் தாழ்த்துகிறேன்!

உடன்பிறப்பே,

1916ஆம் ஆண்டு நாயரும், தியாகராயரும், நடேசனாரும் திராவிட இயக்கத் தரு வளர விதை ஊன்றிய போது நான் பிறக்கவில்லை.

1938 இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து பெரியாரைத் தலைவராகவும், அண்ணா அவர்களைத் தளபதியாகவும் கொண்டு நடைபெற்ற போராட்டத்தின்போது, திருவாரூர்ப் பள்ளி மாணவர்களுடன் இணைந்து அந்தப் போராட்டத்தில் நானும் ஈடுபட்ட நாட்களில், உன் போன்ற உடன் பிறப்புகள் பலர் பிறந்திருக்க மாட்டீர்கள்.

மொழிப் புரட்சித் தீ, படிப்படியாகப் பொங்கி 1965ஆம் ஆண்டு எரிமலை நெருப்பாக வெடித்துச் சிதறிய ஜனவரி 25ஆம் நாள் என்பது, மொழிப் போர்த் தியாகிகளுக்கு வீர வணக்க நாள் என்று போற்றப்படுமளவுக்கு போர்க்கொடி உயர்ந்தபோது அந்தக் களத்தில் அணி வகுத்தவர்களில் இன்று உயிரோடி ருக்கும் உடன்பிறப்புகள், அவர்கள் இப்போது எங்கிருந்தாலும் அவர்களுக்கு என் வாழ்த்தும், பாராட்டும் குவிக்கிறேன்.

அந்த மாவீரர்களில் மறைந்தும் மறையாமல் நம் நினைவில் வாழும் மாணிக்கங்களுக்கு, அவர்கள் உலவிய திசை நோக்கி வணங்கித் தொழுதிடுகிறேன்.

மொழிப் போர் தியாகிகளுக்கான வீர வணக்க நாளை தம்பி சிவா எடுத்த முயற்சி காரணமாக தமிழகமெங்கும், தன்மானச் சிங்கங்களாம் நமது தமிழ் மறவர் பட்டாளத்தினர், கழக அமைப்புகளின் சார்பாக எழுச்சியுடன் நடத்தியுள்ளனர்.

உடன்பிறப்பே,

என் இலட்சியப் பாதையில் நான் மறக்கமுடியாத நிகழ்வுகளில் இந்த மொழிப் புரட்சி தொடர்பான ஒரு நிகழ்வுதான்,

நான் எழுதியுள்ள நெஞ்சுக்கு நீதி முதல் பாகத்தில் இடம் பெற்றுள்ள மறக்க முடியுமா? என்ற அத்தியாயத்திலும், புனித பூமி பாளையங்கோட்டை என்ற அத்தியாயத்திலும் இடம் பெற்றுள்ளதாகும்.

மொழிப் புரட்சி வீர வணக்க நாள் கொண்டாடி முடித்திருக்கும் என் அன்பு உடன்பிறப்புகளான உன் போன்றோர்க்கு, அந்த அத்தியாயங்களின் சில பகுதிகளை இப்போது நினைவூட்டுகிறேன்! இதோ அது:

என் வாழ்க்கைப் பாதையில் மறக்க ஒண்ணாத திருப்பு முனைகளில் ஒன்று தான் 1965 பிப்ரவரி பதினாறு.

மறுநாள் காலையிலே மலர்ந்திட வேண்டிய நாளேட்டுக்குரிய என் சம்பந்தப் பட்ட வேலைகளை விரைந்து முடித்து விட்டு முரசொலி அலுவலகத்திலிருந்து நான் வெளியே வந்த பொழுது -

நள்ளிரவை நோக்கி நகர்ந்த வண்ணம் இருந்தது சென்னை மாநகர்.

விடிந்தால் என்னென்ன இடிச் செய்திகள் இதயத்தைப் பிளந்திடுமோ? எங்கெங்கே துப்பாக்கிச் சூடுகள் நடந்திடுமோ? எத்தனை மங்கல மங்கையர் குங்குமம் இழப்பரோ? எத்தனை காளையர் காராக்கிரகம் ஏகுவரோ? - என்றெல்லாம் எண்ணங்கள் சுழன்றிட என் இல்லம் நோக்கிச் சென்றேன் உள்ளம் கனத்திட!

அங்கே....! எனக்கே காத்திருந்தது அரசாங்க அழைப்பு!

வேறு சில காவல்துறை அதிகாரிகளுடன் தம்முடைய கடமையினை ஆற்றிட வந்திருந்தார் சென்னை நகர உதவிப் போலீஸ் கமிஷனர்! என்னிடம் சில கேள்விக் கணைகளையும் அவர் தொடுத்தார். மறுநாள் காலை முரசொலியில் வெளிவருவதற்கென்று ஒரு கண்ணில் சுண்ணாம்பு என்னும் தலையங்கத்தையும், நீட்டோலை என்னும் அரசியல் மடல் ஒன்றையும் நான் தீட்டியிருந்தேன். அவற்றின் புரூப்களைத் தந்திட வேண்டுமென்று அவர் வற்புறுத்தினார். எழுத்து வடிவில் கேட்டாலன்றி அவற்றை அளித்திட இயலாது என்று நான் மறுத்து விட்டேன். உடனே தம்மோடு வர வேண்டும் என்றார்.

பெட்டி, படுக்கைகளுடனேயே நான் புறப்படலாமா? என்று வினவினேன் சிரித்துக் கொண்டே.

அவரும் அதற்குச் சரி என்று தலையசைத்தார் முறுவலுடன். பின்னர் வீட்டினுள் சென்று பெட்டி, படுக்கைகளை எடுத்துக்கொண்டு வெளியே வந்தேன்.

போகலாமா? என்றேன் காவல் துறை அதிகாரிகளை நோக்கி.

போகலாம் - என்றனர்.

அழுகை வெள்ளத்துக்கு அணை போட்டு நின்றிருந்த குடும்பத்தாரிடம் விடைபெற்றுக்கொண்டு போலீஸ் வண்டியிலே ஏறிக் கொண்டேன்.

எழும்பூரில் உள்ள காவல் துறை கமிஷனர் அலுவலகத்துக்குக் கொண்டு செல்லப்பட்டேன். அப்பொழுது இரவு மணி பன்னிரண்டு.

அங்கும் அந்த உயர் அதிகாரி - முரசொலி ஏட்டிலே நான் தீட்டிய தலையங்கங்கள் பற்றியும், வெளியிட்ட செய்திகள், கட்டுரைகள் பற்றியும் விடாமல் வினா அம்புகளைத் தொடுத்தார். இரவு மணி 1-30 வரை விசாரணை நீடித்தது. பிறகே உறங்குவதற்கு இடம் கொடுத்தனர்.

16-2-65 அன்று இரவே, நான் கைது செய்யப்பட்டுவிட்ட தகவலை அப்போது காஞ்சியிலிருந்த அண்ணா அவர்களுக்குத் தொலைபேசி மூலம் தெரிவிக்கப்பட்டது.

மூன்று மணி நேரங்கூடச் சரியாகத் தூங்கிடவில்லை. மீண்டும் எழுப்பிப் போலீஸ் லாரியிலே என்னை ஏற்றினர்.

அப்போது விடியற்காலை 4-30 மணி கூட ஆகியிராது.

என்னைச் சுமந்து கொண்ட வாகனம் சென்னையைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு எங்கோ பறந்தது வேகமாக.

பனி கொட்டியது.

குளிர் நடுங்க வைத்தது.

தெற்குத் திக்கினை நோக்கியே லாரி ஓடிக் கொண்டிருந்தது. எந்தச் சிறையிலே தள்ளப்போகிறார்கள் என்றே எனக்குத் தெரியவில்லை. தெரிவிக்கவும் இல்லை காவல் துறையினர். 17-2-65 காலை சுமார் 8 மணி அளவில் திண்டிவனம் தென்பட்டது. உளுந்தூர்ப் பேட்டையும் தாண்டியாயிற்று.

ஒரு வேளை திருச்சி சிறைக்குத்தான் கொண்டு செல்வார்களோ?

பழைய நினைவுகள் - நிகழ்ச்சிகள் படமாய் விரிந்தன மனத் திரையில்.

இதற்கு முன்னர் பெரும்பாலும் நெடுநாட்கள் சிறைப் பறவையாய் நான் அடைபட்டுக் கிடந்ததும் திருச்சியிலே தான்.

மும்முனைப் போராட்டம் -
கல்லக்குடி -
தண்டவாளத்திலே தலை -
அதற்காக ஆறு மாதச் சிறை -
- இப்படிப் பொங்கிப் புரண்டன நெஞ்சின் அலைகள்.

ஏன், இருபது நாட்களுக்கு முன்னர், குடியரசு நாளைத் துக்க நாளாகக் கொண்டாடக் கழகம் எடுத்திட்ட முடிவினையொட்டிக் கைதான போது கூடத் திருச்சிக்குத்தான் கொண்டுவந்து சப்-ஜெயிலிலே என்னைத் தள்ளினார்கள்.

இப்போதும் அப்படித்தான் இருக்கலாமோ? - என்றுதான் எண்ணிடத் தோன்றியது எனக்கு.

ஆனால், நான் நினைத்தவாறு திருச்சி சிறை எனக்குக் கிட்டவில்லை இந்த முறை.

நடுப்பகல் 12 மணி அளவில், திருச்சியில் நுழைந்திட்ட போலீஸ் லாரி நேரே ஆயுதப்படைப் போலீஸ் முகாமிற்குச் சென்றது. அங்கே எனக்கு மதிய உணவு வழங்கினார்கள். பின்னர் தொடங்கிற்றுப் பயணம்.

நேரம் செல்லச் செல்ல எனக்கு நெஞ்சிலே வலிகண்டு தாங்கொணாத அளவுக்கு அதிகரித்துக்கொண்டே போயிற்று. அதற்கு லாரிப் பயணமும் ஒரு காரணம், முந்திய இரவில் உறக்கமும் சரியானபடி இல்லையல்லவா?

ஒருவர் நீண்ட நெடுந்தொலைவு பேருந்துப் பயணம் புரிந்தாலே உடல் வலி வாட்டி வதைத்திடும். குலுங்கக் குலுங்க உடம்பைத் தூக்கிப் போடும் லாரிப் பயணம் என்றாலோ கேட்க வேண்டுமா அவதிக்கு?

எனக்கு நெஞ்சு வலி கண்டதற்குக் கிஞ்சிற்றும் இரக்கமற்ற முறையிலே குதித்துக் குதித்து ஓடிக் கொண்டிருந்த லாரியையே நான் குறை கூறிட வேண்டும்.

இதைப் பற்றி நண்பர் ப.உ. சண்முகம் பின்னர் சட்டமன்றத்திலே இப்படிக் கேள்வி எழுப்பியிருக்கிறார்.

.....இங்கே (சென்னையில்) கைது செய்யப்பட்ட கலைஞர் கருணாநிதி, நெஞ்சு வலியுடன் போலீஸ் லாரியில் அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார். நான் கேட்கிறேன், அவரை அழைத்துச் செல்லப் போலீஸ் லாரி தான் உங்களுக்குக் கிடைத்ததா? அவர் தி.மு.கழகத்தைச் சேர்ந்தவர் என்பதற்காக நான் கேட்கவில்லை. எங்கள் கட்சியிலே அவர் ஒரு முக்கியமான தலைவர் என்பதற்காகக்கூடக் கேட்கவில்லை. சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் என்ற முறைக்காவது, அவரை ஒரு காரிலே அழைத்துச் செல்லக் கூடாதா? அப்படியென்ன இந்தச் சர்க்காருக்கு வசதி வாய்ப்பு அற்றா போய் விட்டது? இதயமற்றவர்களே, இந்த நிலைமை ஏன்? நானூறு மைல்களுக்கு அப்பால் உள்ள ஒரு சிறைச்சாலைக்கு, நெஞ்சு வலியோடு போலீஸ் லாரியிலே அழைத்துச் செல்வது எந்த வகையிலே நியாயம்?

என்னைப் பொறுத்தவரை, சிறைக்குள்ளே தங்குகின்ற வரையிலாவது இத்துணைக் கொடுமையான வலி ஏற்படாத வகையிலே கொண்டு போகக் கூடாதா என்றுதான் நான் எண்ணினேன். எம்பி எம்பிக் குதிக்காதபடி லாரியை மெதுவாகவேனும் ஓட்டியிருக்கலாம்.

மற்றபடி, துன்பத்தைத் தூக்கிச் சுமக்கத் துணிந்திட்ட ஒரு தொண்டனுக்கு, அவன் ஏறிச் சென்றிடும் வாகனம் காராய் இருந்தால் என்ன? லாரியாய் இருந்தால் என்ன? கட்டை வண்டியாய் இருந்தால் என்ன? ஜட்கா வண்டியாய் இருந்தால் என்ன? எல்லாம் ஒன்றுதான். வாகனம் எதுவாக அமைந்த போதிலும், அவனுடைய பாதை மாறிடப் போவதில்லை! பயணமும் நின்றிடப் போவதில்லை!

என்னை ஏற்றிச் சென்றிட்ட லாரி மதுரையை அடைந்த பொழுது மாலை 4-30 மணி இருக்கலாம். ஆயுதப் படைப் போலீஸ் முகாமுக்கே என்னை முதலில் கொண்டு சென்றார்கள்.

நூற்றுக்கணக்கான போலீஸ்காரர்களுக்கு மத்தியிலே நான் காவலில் வைக்கப்பட்டேன்.

நெஞ்சுவலியோ நிமிடத்திற்கு நிமிடம் என்னை துடியாய்த் துடிக்கச் செய்தது. எனவே, எனக்கு சிகிச்சை அளிக்கும் பொருட்டு, அரசாங்க மருத்துவமனையிலிருந்து டாக்டர் ஒருவர் வரவழைக்கப் பட்டார்.

அவரோ என் நிலைமையைப் பார்த்து விட்டு, மேற்கொண்டு என்னைப் பயணத்தில் ஈடுபடுத்துவது என் உடல் நலனுக்கு உகந்தது அல்லவென்று உறுதியாகக் கூறி விட்டார். அவருடைய அறிவுரையைப் புறக்கணிக்க முடியாத நிலையில், என்னை மதுரை மத்தியச் சிறைச்சாலைக்கு இட்டுச் சென்றனர்.

இரவிலோ மேலும் கடுமையாயிற்று வலி. மார்பை இறுக்கிப் பற்றிக் கொண்டு நான் தவித்த தவிப்பு - துடித்த துடிப்பு - கொஞ்சம் நஞ்சமல்ல. வேதனையின் விளிம்பிற்கே நான் விரைந்த வண்ணம் இருந்தேன்.

மறுபடியும் அரசாங்க மருத்துவமனையிலிருந்து இரண்டு டாக்டர்கள் அழைத்து வரப்பட்டார்கள், எனக்குச் சிகிச்சை அளித்திட! உறக்கம் வருவதற்கென்றே ஊசியும் போடப்பட்டது.

நான் இப்படி நெஞ்சு வலியோடு போராடுவதை நேரிலே கண்டும்கூட, என்னை மதுரைச் சிறையிலேயே வைத்திட மனம் வரவில்லை காவல் துறையினருக்கு.

18-2-65 விடியற்காலை மறுபடியும் என்னை லாரியிலே ஏற்றினர். மதுரையை விட்ட பிறகும் தென் திசையை நோக்கியே தீராத பயணம்.

ஆனால், இப்போது புதிய தகுதிகள் சில, என் பயணத்திற்குப் பொலிவேற்றின. என்னுடைய லாரிக்கு முன்னே ஒரு ரிசர்வ் போலீஸ் லாரியும், பின்னே ஒரு ரிசர்வ் போலீஸ் லாரியும் அணி வகுத்து வந்தன.

அண்ணாவின் மூன்று தாரக மந்திரங்களில் ஒன்றான கட்டுப்பாட்டினைக் கண்ணே போல் கருதக் கூடியவன் - அதனைக் கடுகளவுகூட மீறத் துணிவில்லாதவன் - என்கிற உண்மை காவல் துறையினருக்குப் புரிந்திட வில்லையோ என்னவோ? எனக்குரிய

கட்டுக் காவலை மிகுதிப்படுத்தியிருந்தனர், தங்களுடைய கடமை உணர்வின் காரணமாக.

வழியிலே கயத்தாறு; கட்டபொம்மனின் காலடிச் சுவடு பதிந்திட்ட வீரஞ்செறிந்த மண். நெல்லை நகரின் எல்லையை அடைந்திட்டபொழுது இன்னொரு ஏற்பாடும் என்னை வியப்புக் கடலிலே வீழ்த்தியது. அங்கிருந்து நகர் நெடுகிலும் பாளையங் கோட்டைச் சிறை வரையிலும் இரும்புத் தொப்பி அணிந்த போலீசார் இருமருங்கிலும் சுவர் எழுப்பியது போல் வரிசையாக நின்றனர்.

ஓர் எதிர்க் கட்சித் தொண்டனுக்குக் கூட, இவ்வளவு கோலாகல வரவேற்பா? அரசாங்க அணிவகுப்பு மரியாதையா? என்று உள்ளூற எண்ணிச் சிரித்துக் கொண்டேன் நான்.

வேளா வேளைக்கு உணவு அருந்தாமல் கூட, என்னால் வெறும் வயிற்றோடு இருந்திட முடியும். ஆனால், நாளைக் கடத்திடவே முடியாமல் தவியாய்த் தவிப்பேன், நண்பர்கள் முகங்காண முடியாவிட்டால்!

அதனால்தான் பாளையங்கோட்டைத் தனிமைச் சிறை படுமோசமான மனத் துயரத்தையே விருந்தாகப் படைத்தது எனக்கு!

என்றாலும், அந்தக் கூண்டுக்கிளி வாழ்க்கையும் பெருமிதத்தையே கொடுத்தது ஒரு விதத்தில்.

நான் அடைக்கப்பட்டிருந்த சிறைச் சாலைக்கு வரலாற்றுப் பெருமை நிரம்ப உண்டு.

இதே பாளையங்கோட்டையில்தான் வெள்ளையருக்கு எதிராக விடுதலை முழக்கம் எழுப்பிய ஊமைத்துரையும், அவரது தோழர்களும் சிறை வைக்கப்பட்டிருந்தனர்.

தங்கத்தரணி என்று பெயர் பெற்ற வங்காள மண்ணிலே, விடுதலை இயக்கம் வேர் விட்டுச் செழித்திடப் பாடுபட்ட தலைவர்களிலே முன்னணி வீரராய்த் திகழ்ந்திட்டவர் தேசபந்து சித்தரஞ்சன் தாசர். அந்த மூதறிஞர் ஒரு காலத்தில் முடக்கிப் போடப்பட்டதும் இதே பாளைச் சிறையிலேதான்.

கனல் தெறித்திடச் சுதந்திர உணர்ச்சிகளைக் கம்பீரமாகப் பரப்பி - முதன் முதல் கப்பலோட்டிய தமிழன் என்னும் ஒப்பரிய

புகழ் மகுடமும் புனைந்து - செக்கிழுத்த செம்மலாய் ஒளி வீசியவர் வ.உ. சிதம்பரனார். அவர் ஒரு சமயம் சிறைபட்டுக் கிடந்ததும் இதே பாளையங்கோட்டை மண்ணில் தான்.

பிற்படுத்தப்பட்டுப் பெரும் பள்ளம்தனில் கிடந்த எல்லோரும் முன்னேற்ற நிலையடைய, தம்முடைய தூய்மைமிகு தொண்டால் - சொல்லாற்றலால் - எழுச்சி யூட்டிய ஏந்தல் பசும்பொன் முத்து ராமலிங்கத் தேவர். அவர் சிறைபட்டுக் கிடந்ததும் இதே ஊரில்தான்.

இவ்வாறு இமயம் நிகர்த்த பெரு மனிதர்கள் - ஏகாதிபத்தியக் காரிருளை விரட்டிய எழு ஞாயிறுகள் - குகைப் புலிகளாக உலவிய கொட்டடிப் பகுதிக்குத் தான் நாமும் கொண்டு வந்து சேர்க்கப்பட்டிருக்கிறோம் என்று எண்ணிய மாத்திரத்தில் என் உள்ளம் பூரித்தது. உடல் புல்லரித்தது.

ஐந்தாவது நாள் வழக்கறிஞர்கள் திரு.நாராயணசாமி முதலியார், திரு.ரத்தின வேல் பாண்டியன் ஆகியோர் என்னைச் சந்திக்க வந்தனர்.

பாளைச் சிரிப்பு -
பார்ப்பதற்கு அழகானது!
பளபளப்பாய் - பல அடுக்கு
மணிச்சரமாய் -- ஒளி வீசுவது!
நான் இருந்த --
பாளைச் சிறை --
தென் பாண்டிப் பாளைச் சிறை --
பார்ப்பதற்கு அழகானதல்ல!
பார்வைக்கும் வேலை தருவதல்ல --

-- வார்டர் ஒருவரைத் தவிர, வேறு மனித முகங்களையே பல நாட்களுக்குக் காட்டாததால்!

இந்த இரு அத்தியாயங்களும் எதிர்க்கட்சியாக நாம் இருந்த போது போர்க்களம் சென்றிட, நமது கழகம் பூண்டிருந்த கவசத்தில் இரண்டு குமிழ்கள்தான்!

இப்போது கவசமணிந்து மட்டுமல்ல, கரத்தில் கட்கமேந்தி, நம் மீது கடும் பாய்ச்சல் நடத்த வரும் அராஜகத்தை, அற வழியில் சந்தித்து அடக்குவதற்கு அமைந்துள்ள இந்த அணி வகுப்பில்

உன்னோடு இணைந்து நிற்பதில்தான் எனக்கு எவ்வளவு மகிழ்ச்சி தெரியுமா?

அந்த மகிழ்ச்சியுடன், அதே நேரத்தில் மொழிப் புரட்சியில் ஈடுபட்டோர் பல்லோர் இன்றில்லையே என்ற மனச் சுமையுடன், உன்னுடன் சேர்ந்து கரம் குவித்து, சிரம் தாழ்த்துகிறேன். அவர்களுக்கு வீரவணக்கம் செலுத்திட!

அன்புள்ள,

மு.க.

26-1-2002

2670. யோசித்துப் பார்த்தால் உண்மை புலப்படும்!

உடன்பிறப்பே,

பெரிய மனிதர் ஒருவரிடம் பெருமாள் என்பவர் ஊழியம் புரிந்து வந்தார். பழைய சபாபதி திரைப்படத்தில் வரும் காளி.என். ரத்தினம் கதாபாத்திரம் போல், அளவுக்கு மீறிய அறிவு ஜீவி அவர்! பரமார்த்திக குருவின் சீடர்கள் நால்வர் ஊசி வாங்கி வரப்போய், வாங்கிய ஊசியை நாலு பேரும் கொண்டு வந்து குருவிடம் கொடுக்க வேண்டும் என்பதற்காக, அந்த ஊசியை ஒரு பனைமரத் துண்டில் குத்தி, அந்த பனைமரத் துண்டை நாலு பேரும் தூக்கி வந்ததாகச் சொல்வார்களே! அத்தகைய சீடர்தான் இந்த ஊழியர் பெருமாள்!

ஒரு நாள் அவர், வீட்டில் வேலை பார்க்கும்போது, முதலாளியின் முதுகில் உட்கார்ந்த ஒரு பூச்சியை அடிக்கிறேன் என்று, ஒரு கம்பு கொண்டு தாக்கி முதலாளியையே துடிக்க விட்டு விட்டார்.

டே! மடையா! முட்டாள்! தடிப்பயலே!

இப்படி அர்ச்சனை செய்து வசைபாடிக் கொண்டிருந்த முதலாளியைப் பார்த்து அவரது மனைவி, என்னங்க! அவர் பேரு பெருமாளு! சாமியோட பேரு! அவரைப் பார்த்து இப்படித் திட்டலாமா? சாமியைத் திட்டுற மாதிரி ஆகாதா? என்று பயங்கலந்த சந்தேகத்துடன் கேட்கவே, முதலாளி சற்று நிதானித்து யோசனை செய்து விட்டு - அந்த ஊழியரைப் பார்த்து, ஓய்....பெருமாள்! அம்மா சொல்றதும் நியாயம்தான்! நீர் இனி மேல் இங்கே வேலை செய்ய விரும்பினால், முதலில் பெருமாள் என்கிற உமது பெயரை மாற்றிக் கொண்டு வாரும்! உமக்குப் பத்து நாள் கெடு தர்ரேன்; திருப்பதிக்கு போயி சாமியை வேண்டிகிட்டு வேறு பெயர் வைத்துக் கொண்டு வாரும்! என்று ஆணை பிறப்பித்தார்.

பத்துநாள் கழித்துத் திரும்பிய ஊழியர், முதலாளியை வணங்கியவாறு வீட்டுக்குள் நுழைந்தார்.

என்னய்யா! பேரு மாத்தியாச்சா?

ஓ! மாத்தியாச்சு எஜமான்!

என்ன பேரு?

பெத்த பெருமாள்!

முதலாளியும் அதை உடனே ஆமோதித்துத் தலையசைத்து சபாஷ் போட்டு, தன்னையும் மற்றொரு அறிவு ஜீவி யாகக் காட்டிக் கொண்டார்.

இது கதை! இப்போது செய்திக்கு வருவோம்.

தேர்தல் ஆணையம் தமிழக அரசின் தலைமைச் செயலாளருக்கு இந்தத் திங்கள் 16-ந் தேதியன்று ஒரு கடிதம் அனுப்பியிருந்தது. அந்தக் கடிதத்தின் முதல் வாசகமே தேர்தல் விதிமுறைகளை மீறி தமிழகத்தைச் சேர்ந்த 16 அதிகாரிகள் செயல்பட்டிருக்கிறார்கள் என்பதாகும். ஒரு அதிகாரி, இரண்டு அதிகாரி அல்ல, தமிழகத்தைச் சேர்ந்த 16 அதிகாரிகள் தேர்தல் விதிமுறைகளை மீறி செயல்பட்டிருக்கின்றார்கள் என்று தேர்தல் ஆணையமே குற்றம் சாட்டியது. அதில் சென்னை மாநகராட்சி கமிஷனர் சம்பத் ஒரு முக்கிய அதிகாரி ஆவார். அவர் உட்பட 8 அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட வேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது தேர்தல் விதிமுறைகளை மீறிய அதிகாரிகளில், சென்னை மாநகராட்சி கமிஷனர் ஒரு முக்கிய அதிகாரி என்றே தேர்தல் கமிஷன் குறிப்பிட்டு விட்டு, ஆனால் அவர் இடமாற்றம் செய்யப்பட்டால் போதும் என்று தெரிவித்திருந்தது. சைதை வாக்காளர் பட்டியல் பராமரிப்பு மற்றும் மேம்படுத்துதல் பணியின் ஒருங்கிணைப்பாளராக பணியாற்றிய சம்பத், தேர்தல் கமிஷன் விதிமுறைகளை மீறியுள்ளார், மொத்தமாக வாக்காளர் படிவங்களை அவர் வாங்கியிருக்கிறார் என்றெல்லாம் தேர்தல் கமிஷனால் அந்த அதிகாரி சுட்டிக்காட்டப்பட்டுள்ளார். ஆனால் அவ்வாறு தேர்தல் விதிமுறைகளை மீறியதற்காக, தேர்தல் ஆணையத்தினால் குற்றஞ்சாட்டப்பட்ட அதிகாரியை இடமாற்றம் செய்து தண்டனைக்குரிய இடங்கள் என்று கூறப்படும் பொறுப்பிலே நியமிப்பதற்கு மாறாக, தற்போது அவர் வகித்து வந்த

சென்னை மாநகராட்சி ஆணையர் பொறுப்பை விட, மேலும் அதிக அளவிற்கு அதிகாரமும், பொறுப்பும் உள்ள பதவியில் சென்னை மாநகர வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலாளராக அவர் நியமிக்கப்பட்டிருக்கின்றார். அவரது நியமனம் பற்றி செய்தி வெளியிட்ட ஆங்கில இதழ் (இந்து) ஒரு முக்கியமான பொறுப்பில் (Significant place) நியமிக்கப்பட்டிருப்பதாக எழுதியிருக்கின்றது. மற்றொரு ஆங்கில இதழிலே கூட (இந்தியன் எக்ஸ்பிரஸ்) He as ow bee awarded wit the plum post of member secretary of the Cena Metropolita Development Authority. A reward for is loyalty என்று எழுதியிருந்தது. அதாவது சென்னை மாநகர வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலாளர் என்ற கொழுத்த பதவி அளிக்கப்பட்டுள்ளது. அவருடைய விசுவாசத்திற்குத் தரப்பட்ட விருது என்று குறிப்பிட்டுள்ளது. இதற்குப் பெயர் தண்டனையா? அல்லது பெருமாள் பெத்த பெருமாள் ஆன கதையா? தேர்தல் கமிஷன் ஆணைப்படி 8 பேரை பணிநீக்கம் செய்ய வேண்டும். ஆனால் இவர்கள் பணிநீக்கம் செய்தது யாரைத் தெரியுமா? சைதாப்பேட்டை தொகுதியில் மேற்பார்வையாளர்களாக, கணக்கெடுப்பாளர்களாக பணியாற்றிய பரிதாபத்திற்குரிய ஏழு ஆசிரியர்கள் (அதிலும் ஆறு பேர் மகளிர்), ஒருவர் சுகாதார ஆய்வாளராகும். மேல்மட்ட நிலையிலே ஆளுங்கட்சியினர் ஆணைப்படி தவறுகளுக்குக் காரணமாக இருந்தவர்களுக்கோ வெறும் இட மாற்றம்தான்.

தவறு செய்தவர்களுக்கும், ஆளுங்கட்சிக்கு சார்பாக வெண்சாமரம் வீசுபவர்களுக்கும் உயர்ந்த பதவிகளை வாரி வழங்கும் இந்த அரசு, நேர்மையான அதிகாரிகளையெல்லாம் உள்நோக்கத்தோடு எவ்வாறு தண்டிக்கின்றது தெரியுமா?

கழக அமைச்சரவையிலே ஒருவராக இருந்த தங்கபாண்டியன் மகளைத் திருமணம் செய்து கொண்டார் என்ற ஒரே காரணத்திற்காக சந்திரசேகர் என்ற அதிகாரி மணிமுத்தாறு பட்டாலியனுக்கு மாற்றப்பட்டார்.

அடிஷனல் டி.ஜி.பி. அந்தஸ்திலே இருந்த ஆர்.வி.கோபாலன் என்ற திறமையான அதிகாரியை, சாதாரணமான ஒரு பொறுப்பிற்கு மாற்றினார்கள். அலெக்ஸாண்டர் என்ற மிகத் திறமையான அதிகாரி - மண்டபம் அகதிகள் முகாமிற்கு மாற்றப்பட்டு ஆறு மாதங்களாகின்றன. ஒரு சப் இன்ஸ்பெக்டர் வகிக்க வேண்டிய

பதவியில், அடிஷனல் டி.ஜி.பி. அந்தஸ்திலே உள்ள அவர் பணியாற்றி வருகிறார்.

ஊழல் ஒழிப்புத் துறை இயக்குநராக இருந்த கணபதி அவர்கள், டி.ஜி.பி. அந்தஸ்துள்ள அதிகாரி. அவரும் சாதாரணமான ஒரு பொறுப்பிலே நியமிக்கப்பட்டார்.

மேலும் ராமானுஜம், பாலச்சந்திரன், பாஸ்கர், சேகர், ராதாகிருஷ்ணன் போன்ற பல திறமையான காவல் துறை அதிகாரிகள், கழக ஆட்சியிலே முக்கிய பொறுப்பிலே இருந்தார்கள் என்ற ஒரே காரணத்திற்காகப் பழி வாங்கப்பட்டு, மிகச் சாதாரணமான இடங்களிலே நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

ஐ.பி.எஸ். அதிகாரிகள் மாத்திரமல்ல. மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பாவம்! என்னிடம் செயலாளர்களாக பணியாற்றினார்கள் என்ற ஒரே காரணத்திற்காக, அத்தனை பேரும் பல நாட்கள் காத்திருப்போர் பட்டியலிலே வைக்கப்பட்டு, பின்னர் ஒழுங்கு கண்காணிப்புத் துறை ஆணையர்களாக ஒவ்வொரு மாவட்டத்திலும் நியமிக்கப்பட்டு பல மாதங்களாக அந்தப் பணியிலே இருந்து வருகிறார்கள்.

ஆனால், இரண்டு தொகுதிகளில் தேர்தல்களைத் தள்ளி வைக்கக் கூடிய அளவுக்குத் தவறு செய்தவர்களுக்கு வெறும் பெத்த பெருமாள் தண்டனை!

இதிலே கூட, ஆண்டிப்பட்டி தொகுதியில் எந்த அதிகாரியும் ஆளுங்கட்சிக்காரருடன் சேர்ந்து கொண்டு தேர்தல் முறைகேடு எதுவும் செய்யாதது போல ஒரு பாவனை!

சைதையிலும், வாணியம்பாடியிலும் தவறுகளை கண்டுபிடித்தது போல ஒரு பாவலா!

மூன்று தொகுதியிலும் பெரிய இடங்களின் சதி கலப்படம்!

கொஞ்சம் யோசித்துப் பார்த்தால் உண்மை புலப்படும்!

அன்புள்ள,

மு.க.

28-1-2002

2671. பிறர் சூழ்ச்சி கழகத்தை அழிப்பதுண்டோ?

உடன்பிறப்பே,

காரிருளால் சூரியன்தான்
மறைவதுண்டோ?
கறைச்சேற்றால் தாமரையின்
வாசம் போமோ?
பேரெதிர்ப்பால் உண்மைதான்
இன்மை யாமோ?
பிறர் சூழ்ச்சி செந்தமிழை
அழிப்பதுண்டோ?

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் இந்தக் கவிதை வரிகள், நமது எதிர்ப்பாளர்களின் இருட்டடிப்பு வேலைகளும், எரிச்சலூட்டும் எழுத்துக்களும், பேச்சுக்களும் நம்மைச் சூழ்ந்து கொண்டு பகை கக்கும் போதெல்லாம் என் நினைவுக்கு வரத் தவறுவதில்லை.

பேரெதிர்ப்பால் உண்மைதான்
இன்மையாமோ?
பிறர் சூழ்ச்சி செந்தமிழை அழிப்ப- துண்டோ?

என்பதை மட்டும் சற்று மாற்றி பிறர் சூழ்ச்சி கழகத்தை அழிப்பதுண்டோ? என நினைத்து நெஞ்சை நிமிர்த்தியவாறு ஆறுதல் கொள்வேன். நாலு பேர் உரையாடலுடன் நமது செய்திகள் நின்று விடக்கூடிய நிலையிலேயிருந்து, நாற்பது பேர் கொண்ட கூட்டங்களில் பரப்புகிற அளவுக்கு மட்டுமே விரிவடைந்து, பின்னர் மெல்ல மெல்ல அந்த நாற்பது பேர் நானூறு பேராகி - நானூறு பேர் நாலாயிரம் பேராகப் பெருகத் தொடங்கி - இன்றைக்குப் பல்லாயிரம், பல லட்சம் மக்கள் கொண்ட பேரணி - மாநாடு - எனும் மகத்தான வளர்ச்சியைப் பெற்றிருக்கிறோம்.

முளைக்கும்போதே கிள்ளியெறிய முயற்சி நடத்தினார்கள்.

விஷத் தருவல்ல இது! விசையொடிந்த சமுதாயத்திற்கு வேகமும், விவேகமும் அளிக்கின்ற மூலிகைக் கொடி! இது படர்ந்து பரவினால்தான், பகுத்தறிவுக் குருதியோட்டமும், இன உணர்வுச் சுவாசமுமின்றித் தள்ளாடித் தடுமாறும் தமிழ்ச் சமுதாயம், தன்மானச் சமுதாயமாகத் தலை நிமிர்ந்து நடக்க முடியுமென்பதைத் தாமதமாகவாவது அறிந்த தமிழர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தங்கள் வீட்டு விளக்காக ஆக்கிக் கொண்டனர்.

இந்த விளக்கு எரியத் திரியாகத் தங்கள் நாடி நரம்புகளையும், எண்ணையாகத் தங்கள் குருதியையும் வழங்கியவர்கள், என்றும் நமது வணக்கத்திற்குரியவர்கள்! என்றும் என்று நான் அழுத்திக் கோடிட்டு எழுதுவதற்குக் காரணம் உனக்குத் தெரியுமென்றே நம்புகிறேன்.

தேர்தல் நேரத்தில்தான் சிலருக்குத் திடீரென்று அண்ணா நினைவு வரும் - அண்ணா அவர்கள் நமை விட்டுப் பிரிந்து இந்த 33 ஆண்டுகளில், ஓராண்டு கூட அவரது நினைவிடம் சென்று அமைதியான முறையில் அஞ்சலி செலுத்திடத் தவறியதில்லை நாம்!

ஆனால் ஒருசில அதிசயமான தலைவர்களுக்கு அண்ணா பிறந்த நாள், நினைவு நாள், பெரியார் பிறந்த நாள், நினைவு நாள், காயிதே மில்லத் பிறந்த நாள், நினைவு நாள் இவையெல்லாம் பொதுத் தேர்தலோ அல்லது இடைத் தேர்தலோ வரும்போதுதான் நினைவுக்கே வரும்!

அடடா! அதற்கு ஏடுகளில் ஏக அமர்க்களமாகச் செய்திகள் என்ன! கொட்டை எழுத்துத் தலைப்புகள் என்ன? என்ன? என்ன? என்று கொடுமுடிக் கோகிலம் சுந்தராம்பாள் அம்மையார்போலப் பாடுகிற அளவுக்கு எக்கச்சக்கமாகப் பக்கத்துக்குப் பக்கம் செய்திகள் -

ஆனால் நமக்கோ! மறைந்த நமது தலைவர்களுக்கும், நமக்குமிடையேயுள்ள தொடர்பும், தொடரும் அன்பும், பாசமும் தாய்க்கும், பிள்ளைகளுக்குமுள்ள பாசம் போன்றது! எந்த விநாடியும் அகலாத பாசம்! தேர்தல் நேரத்திலே மட்டும் தேன்தடவிக் காட்டுகிற பாசமல்ல!

தேர்தல் வரும்! போகும்! ஆட்சியும் வரும் போகும்! அதே போல ஆட்சியிலிருக்கும் போது வருவோரும், இல்லாத போது போவோரும்; யார் எவர் என்பதை என்னுடைய இந்த

அறுபத்தி நான்கு ஆண்டுக் காலப் பொது வாழ்வில், அதிலும் ஒரு பதினான்கு ஆண்டுக் காலம் முதலமைச்சராகவும் இருந்த அனுபவத்தில், இப்போது ஆட்சியில் இல்லாத சூழ்நிலையில் மட்டுமல்ல! இடையிடையே சிறிது காலங்கள் ஆட்சிப் பொறுப்பில் இல்லாத சூழ்நிலையிலும், பல மனிதர்களை மிகத் துல்லியமாகவே உணர்ந்து வைத்திருக்கிறேன்.

இனியும் வாழப் போகும் எஞ்சியுள்ள சொற்ப காலத்திலும் மேலும் உணர்ந்திடக் கூடிய வாய்ப்பும் இருக்கத்தான் செய்கிறது.

உடன்பிறப்பே, தத்துவம் பேசுவதாக நீ எண்ணிக் கொள்ள மாட்டாய். தமிழ் மறையாம் குறள் பேசுவதைக் கேட்போம்!

"கேட்டினும் உண்டோர் உறுதி கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல்"

அதாவது, நமக்கு ஒரு தீமை வருவதும் ஒருவகையில் நன்மைக்கே என்பதும், அதுதான் உண்மையான நண்பர் யார் என்று அளந்து காட்டும் கோலாகும் என்பதும் இந்தக் குறளுக்குப் பொருள்!

இந்தக் குறள் மொழி எனக்குப் பலமுறை பயன் பட்டிருக்கிறது என்பது மட்டுமல்ல! இன்னமும் எனக்குப் பாடம் போதித்துக் கொண்டுமிருக்கிறது!

பல துறையில் எனக்கு நண்பர்கள் உண்டு - நண்பர்கள் நிரம்ப இருப்பதே ஒரு பெரும் செல்வம்! ஆனால் அச்செல்வத்தில் சில, செல்வோம் என்றும் போய் விடுகின்றனவே! அதையும் கண் எதிரே காண்கின்றேனே!

அதிலும், இந்தப் பத்திரிகைத் துறை நண்பர்கள் இருக்கிறார்களே! அவர்களை நான் அதிபர்கள் என்றோ, பத்திரிகை முதலாளிகள் என்றோ, பத்திரிகை ஆசிரியர்கள் என்றோ குறிப்பிடாமல் - நண்பர்கள் என்று குறிப்பிடுவதற்குக் காரணம், முதலீடு செய்து பத்திரிகை நிறுவனம் தொடங்கியவர்களிலிருந்து அந்த நிறுவனத்தில் பணியாற்றும் ஆசிரியர்கள் உள்ளிட்ட அனைத்து அலுவலர்களும், செய்தி சேகரிப்போர் உட்பட அனைவரையும், நான் அன்று முதல் இன்று வரை நண்பர்களாகவே கருதுபவன் என்பதால்தான்!

துண்டு அறிக்கையாக 1942-ல் தொடங்கிய முரசொலியையும், அது நாளேடாக வளர்ந்து அதன் நிறுவனர் என்ற பழம்

பெருமையை எண்ணி நான் மகிழ்வதும், அதன் அடிப்படையில் பத்திரிகையாளர்களை நான் நண்பர்களாகவே என்றைக்கும் எண்ணுவதும் இயல்பான ஒன்றுதானே!

அந்த நட்பு முறையிலேதான் எண்ணிப் பார்த்திடும் போது, பல பத்திரிகையாள நண்பர்கள், நட்பு பற்றிய குறளை நினைவூட்டுபவர்களாக இருக்கிறார்களே என்று கவலைப்படுகிறேன்.

அருமை நண்பன் - ஆருயிர் நண்பன் - ஆத்மார்த்த நண்பன் என்றெல்லாம் கூட வேண்டாம். அது ஆட்சியில் இருந்தால் அல்லது வந்தால் அப்போது பார்த்துக் கொள்ளலாம்.

கழகம் ஆட்சியிலிருந்த போது, எதிர்க்கட்சிகளின் செய்திகளை இருட்டடிப்புச் செய்யுமாறு என்றைக்கும், எந்தப் பத்திரிகை நண்பர்களையும் நாம் அச்சுறுத்தியது மில்லையே! எச்சரித்ததும் கிடையாதே!

ஆனால் இன்றைக்கு, ஒரு பிரதான எதிர்க் கட்சியான தி.மு.கழகத்தின் செய்திகளை அந்த இதழாளர்கள் இருட்டடிப்பு செய்வது ஏன்?

16 ஆண்டுகள் ஆட்சி பரிபாலனம் செய்த கட்சிக்குத் தரும் மதிப்பும், மரியாதையும் இதுதானா?

கழகம் ஆட்சியிலிருந்த போது, எதிர்க் கட்சியின் அறிக்கைகளை பக்கம் பக்கமாக வெளியிட்ட ஏடுகள், இன்று நான் அனுப்பும் அறிக்கைகளைக் குப்பைக் கூடைக்கு அனுப்பி விட்டு, கழகச் செய்திகளைத் திரித்தும், குறைத்தும், கலகமூட்டும் வகையிலும் வெளியிடுவதற்குப் பெயர்தான் பத்திரிகா தர்மம் என்கிறார்களே! அதனை அவர்களின் மனச்சாட்சி ஏற்றுக் கொள்கிறதா?

உடன்பிறப்பே, நமது செய்திகளை, அறிக்கைகளை, நமது கழக நிகழ்ச்சிகளை முழு அளவில் வெளியிடக் கூடிய வகையில் முரசொலி இதழும், தினகரன் இதழும் மட்டுமே இன்றைக்கு இருக்கின்றன.

தொலைக்காட்சிகளில் கூட, நமது தொந்தரவுக்காக சன் டி.வி.யில் என்றைக்காவது வந்தால் உண்டு. அந்த அளவு நடுநிலை கடைப்பிடிக்கிறார்கள் அவர்கள்!

எனவே, நாம் தோன்றும் பொழுது எந்த அளவு பிரச்சார வசதியுடன் தோன்றினோமோ, எந்த வசதியை மட்டும் வைத்துக் கொண்டு வளர்ந்தோமோ, அதை விட சற்றுக் கூடுதலாக பிரச்சார வசதி பெற்றிருக்கிறோமே யல்லாமல், முழுமையானது, விரிவானது என்று மகிழத் தக்க அளவில் இல்லை!

நம் கையை ஊன்றித்தான் கர்ணம் போட வேண்டும் என்று கிராமியப் பழமொழி உண்டல்லவா? கர்ணம் போட்டுக் கட்சி மாறி வெறும் வியாபாரிகளாகவே மாறி விட்டவர்கள் மத்தியில், நாம் நமது கையை ஊன்றி என்று நான் கூறுவது, உன் போன்ற உடன்பிறப்புகள் ஒவ்வொருவரும் முரசொலி, தினகரனைப் படித்து விட்டு, நீங்களே செய்தி அறிவிக்கும் இதழாளர்களாகத் திண்ணைக்குத் திண்ணை, தெருவுக்குத் தெரு, ஊருக்கு ஊர் பிரச்சாரப் பணியில் ஈடுபட வேண்டும்.

நடுநிலை ஏடுகள் நம் செய்திகளை அதிகம் வெளியிட மாட்டா!

கெடுநிலை ஏடுகளோ இருட்டடிப்பும், எதிர்ப் பிரச்சாரத்திலும் ஈடுபடும்! எனவே,

ஒரு நிலை எடு நீ! அதுதான்
உயர் நிலை!
ஒவ்வொரு உடன்பிறப்பும்
ஒரு பிரச்சார பீரங்கி!

முழங்கட்டும் என் உடன்பிறப்பின் ஒலி முழக்கம்!
மூலை முடுக்கெல்லாம் முழங்கட்டும்!
முகில் கிழித்து வான் வெளியை எட்டட்டும்!

"அண்ணாதுரையும் அந்தக் கூட்டத்தில் பேசினார்"

என்றுதான் அன்றைக்கு ஏடுகள் செய்தி வெளியிட்டன. அந்த அண்ணா தான் வளர்ந்தார், கழகத்தை வளர்த்தார்! நம்மையும் வளர்த்தார்! நாமும் பல நண்பர்களை வளர்த்தோம்! வளர்த்த கடாக்கள் மார்பில் பாய்ந்திடும்போதும், நமது வல்லமையைக் காட்டி வளர்வோம்!

அன்புள்ள,

மு.க.

29-1-2002

2672. இந்த நாரதர் கலகமும் நன்மையில் முடிந்திட!

உடன்பிறப்பே,

இந்தப் பூனையும் இந்தப் பாலைக் குடிக்குமா என்று பம்மாத்து செய்வது போல, ஜெயலலிதா அவர்கள், தன்னுடைய கட்சிக்காரர்களுக்கு, ஆண்டிப் பட்டி தேர்தலில் கடைப்பிடிக்க வேண்டிய அடக்கம், ஒடுக்கம், ஆடம்பரமற்ற எளிமை, அகிம்சை, தேர்தலுக்கான நியாயமான சிக்கன செலவு, அதிகாரத்தைப் பயன்படுத்தாத தேர்தல் தர்மம் போன்ற பல நூறு உபதேசங்களை வாரியிறைத்து, பத்திரிகைகளில் முதல் பக்கம் - முழுப் பக்கமென்று கொட்டையெழுத்து வேண்டுகோளை எட்டுக் கலம் செய்தியாக வழங்கி, அவருடைய இந்த உபதேசங்களுக்கு மாறாக, தி.மு.க. நடந்து கொள்ளும், எச்சரிக்கையாயிருங்கள் என்றும், தன்னுடைய கூட்டத் தாருக்குச் சொல்வது போல போலீஸ் அதிகாரிகளுக்கு ஜாடை காட்டியுமுள்ளார். எதிர்க்கட்சிகளின் தொண்டர்கள் அல்லது முன்னணியினர் மீது பொய்யான குற்றங்களை ஜோடித்து நசுக்கப் பாருங்கள்! அடக்கப் பாருங்கள்! அல்லது விரட்டப் பாருங்கள் என்று! வெள்ளாட்டுத் தோலைப் போர்த்திக் கொண்டு ஓநாய் மந்தைக்குள் நுழைவது போல இருக்கிறது இந்த உபதேசம், என்பதற்கு இதோ சரியான சான்றாக ஆனந்தவிகடன் வார இதழில் போயஸ் தோட்டத்தை மிரட்டுது ஒரு குடிசை என்ற கட்டுரை அமைந்திருக்கிறது.

> ஆண்டிபட்டி எம்.எல்.ஏ., தங்கத் தமிழ்ச்செல்வன் ராஜினாமா செய்ததில் இருந்தே, அந்தத் தொகுதிக்கு ஒரு ஹீரோயின்(!) இமேஜ் கிடைத்து விட்டது! மொத்த அரசாங்க இயந்திரமும் ஒரு ரெட் மார்க் செய்து கொண்டு ஆண்டிப்பட்டியை ஸ்பெஷலாகக் கவனிக்கத் தொடங்கியது. குண்டும் குழியுமான சாலைகள்

சமதளமாயின. திரும்பிய பக்கமெல்லாம் சமுதாயக் கூடங்கள், நிழற்குடைகள், நவீனக் கழிப்பிடங்கள், சத்துணவுக் கூடங்கள் எனப் பளிச் சுண்ணாம்பில் கான்கிரீட் கட்டடங்கள் முளைத்தன. ஆண்டிப்பட்டி அருகில் தேனி என்.ஆர்.டி. நகரில் ஜெயலலிதா தங்குவதற்கென ஒரு பங்களா தயார்!

இந்தச் செய்தியைத் தொடர்ந்து ஆனந்த விகடன், அமைதிப் பிரச்சாரத்தில் நிற்கிறது தி.மு.க.! நான் ஒன்றும் பெரிய நிலச்சுவான்தார் அல்ல. நான் ஆண்டிப்பட்டி மண்ணின் மைந்தன் என்று பிரச்சாரத்தில் இறங்கியிருக்கிறார் தி.மு.க. வேட்பாளர் வைகை சேகர். போயஸ் தோட்டத்தை எதிர்ப்பது வைகைப் புதூர் கிராமத்தில் உள்ள ஒரு குடிசை வீடு என்பது ஆச்சரியம்.

நான் படிச்சது எல்லாம் ராயப்பன்பட்டி பள்ளியில்தான். ஏழாம் வகுப்பு படிக்கும் போது, பெரியகுளம் சட்டமன்றத் தேர்தலிலே உங்கள் வோட்டு உதய சூரியனுக்கே என்று சொல்வேன். அப்பவே ஆரம்பிச்சாச்சு அரசியல் என்று சிரிக்கும் வைகை சேகர், மதுரை தியாகராயர் கல்லூரியில் பி.ஏ. படித்தவர்.

கடனாளியான என்னை நம்பி தலைவர் கலைஞர் இந்தப் பொறுப்பை ஒப்படைச்சிருக்கார். அவர் நம்பிக்கையைக் காப்பாத்திக் காட்டுவேன் என்கிறார் வைகை சேகர்.

என்று தி.மு.க. வேட்பாளருக்கும், அ.தி.மு.க. வேட்பாளருக்கு மிடையே ஓர் ஒப்பீட்டைச் செய்து காட்டியிருக்கிறது ஆனந்த விகடன்!

உடன்பிறப்பே, இந்தக் கட்டுரையின் முதற்பகுதியின் வாயிலாக, ஜெயலலிதா அவர்களின் ஆண்டிப்பட்டி தேர்தல் பற்றிய அறிவுரைகளுக்கும் - அங்கே நடந்தவை, நடப்பவைகளுக்கும் மலைக்கும் மடுவுக்குமுள்ள வேறுபாடு, நடுநிலையாளர்கள் மலைக்குமளவுக்கு இருப்பதை எளிதில் புரிந்து கொள்ள முடிகிற தல்லவா?

ஏழைதான் சேகர், ஆனால், கொடுமைகளை எதிர்க்க அஞ்சிடும் கோழையல்ல!

இளைய வயதிலேயே இலட்சியப் பிடிப்புடன் இரு வண்ணக் கொடி ஏந்திய காளை!

தோட்டத்தை எதிர்க்கும் குடிசை என்று வார ஏடு விகடன் வியப்புற்று எழுதும்போது, சில நாளேடுகள், என்ன இருந்தாலும் அவர் சென்று வந்தவர்தானே என்று, தி.மு.க.விலே முணுமுணுப்பு இருப்பதாகச் சிண்டு முடியும் வேலையில் இறங்கித் தங்களின் அபூர்வப் பண்பை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றன. ஆண்டிப்பட்டியில் தி.மு.க.வில் அதிருப்தியோ அதிருப்தி வைகை சேகர் மீது!

எனத் தலைப்பிட்டு, அவர் சில காலம் ம.தி.மு.க. வுக்குச் சென்றிருந்ததை ஓர் ஏடு சுட்டிக் காட்டவில்லை. குத்திக் காட்டுகிறது!

பாவம்! இன்றைய முதலமைச்சராக இருக்கிற பன்னீர் அவர்களே, மோரிலே விஷமா? பாலிலே விஷமா? என்று எம்.ஜி.ஆர். மறைவு பற்றிய சொற்போரிலே இரு அம்மையார்களும் ஈடுபட்டிருந்த போது, இவர் ஜானகி அணியிலே சல்லடம் கட்டிக் கொண்டு ஜெயலலிதாவை எதிர்த்தவர்தான்! இன்று அந்தப் பன்னீர் முதலமைச்சராக இருக்கிறார்!

ஏன்? எல்லோருக்கும் மேலே உயர்ந்த ஆசனத்தில் வீற்றிருக்கும் சபாநாயகர், ஒரு முறையல்லவே, ஒரு முறைக்கு இருமுறை சென்று சென்று வந்தவர்தானே! அவர் வாய் உதிர்த்த வசனக் கவிதை வசைவுகளுக்குப் பிறகும்தானே அந்தப் பதவியில் அவர்!

அப்போதெல்லாம் அலட்டிக் கொள்ளாத அந்த ஏடுகள், கழகத்திலேயே இருந்து வெளியே சென்று கடுமையான விமர்சனங்கள், விரசமான ஆர்ப்பாட்டங்கள் விளைத்தோர் இன்று இந்தக் கழகத்தில் பெரும் பொறுப்புகளில் உள்ளனரே?

எல்லாக் கட்சியிலும் இந்த நிலை, தவிர்க்க முடியாதது எனினும் - அதனை உணர்ந்திருந்தும் இல்லாத ஒன்றை இட்டுக்கட்டி, அதிருப்தியோ அதிருப்தி! என்று எழுதுவதில்தான் இவர்களுக்கு எவ்வளவு ஆத்ம திருப்தி பார்த்தாயா?

கடமையாற்றிட நாம் கட்டுப்பாட்டுடன் களம் புகுந்திடும் வேளையில், கலகம் புகுத்திட நாரதர்கள் கிளம்புவர்!

நாரதர் கலகம் நன்மையில் முடியும் என்பார்கள், புராணக் கதைகளில்!

இந்த நாரதர்களின் கலகமும் நன்மையில் முடிவது! நம் கைகளில்தானிருக்கிறது என்ற உறுதியுடன் நடந்திடுக, நமதே வெற்றி என்ற ஒலி முழக்கமுடன்!

அன்புள்ள,

மு.க.

30-1-2002

2673. அறவழியே நிலைத்திட ஆவன செய்வோம்!

உடன்பிறப்பே,

பஸ் கட்டணம் மிக அதிகமாக ஏறியது!
மின் கட்டணமோ மென்னியை இறுக்குகிறது!
உழவர் பயன்படுத்தும் உரத்துக்கும் வரி உயர்வு!
ஆவின் பால் விலை உயர்வு!
சமையல் எண்ணெய்களுக்குப் புதிதாக வரி விதிப்பு!
பின்னலாடைக்கு இனி வரி கட்ட வேண்டும்!
மாணவர் கல்விக் கட்டணம் உயர்வு!
மருத்துவமனைப் பார்வையாளர்க்குப் புதிய கட்டணம்!
ஏழைகளுக்கு இலவச வேட்டி – சேலை இல்லை!
வாகனங்களுக்கு வரி உயர்வு!

அரிசி விலை கிலோ மூன்றரை என்பது ஆண்டிப்பட்டி தேர்தல் முடிந்ததும் கிலோ ஒன்பது ரூபாய் ஆகும்!

இலவச மின்சாரத்துக்கும் இறுதி அஞ்சலி செலுத்திட மலர் வளையம் தயாரிக்கப்படுகிறது!

பல துறை அலுவலர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் சலுகைகள் ரத்து, பண்டிகை முன் பணம் கிடையாது, போனசுக்கும் நாமம்!

இந்த மக்கள் விரோத செயல்களையெல்லாம் மறந்து விட்டது போல சில பத்திரிகையாளர்கள் ஆண்டிப்பட்டி தொகுதி தேர்தல் பணிக்கென அதிகம் பேர் அ.தி.மு.க. வினர் வர வேண்டாம் என்று அம்மையார் ஜெயலலிதா விடுத்த ஓர் அறிக்கையை பிரமாதப்படுத்தி, பேஷ்! பேஷ்! அபூர்வமான அறிவுரை - இதை எல்லாக் கட்சிகளும் பின்பற்ற வேண்டுமென்று பக்கமேளம் கொட்டிக் கொண்டிருக்கும்போதே, சொல் ஒன்று! செயல் ஒன்று! என்பதற்குச் சான்றாக - ஆண்டிப்பட்டியில்

மாத்திரமல்ல, ஆண்டிப்பட்டிக்குப் போகும் அனைத்து வழிகளிலுமுள்ள ஓட்டல்கள், தனியார் வீடுகள் எல்லாமே ஆளுங்கட்சியினரால் ஆக்ரமிக்கப்பட்டு விட்டன என்ற செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன.

"ஆர்வமிகுதியால் தன்னுடைய கட்சித் தொண்டர்களின், உணர்ச்சி வெள்ளம் கரை புரண்டு விடாதபடி முன்னெச்சரிக்கை நடவடிக்கை யெடுப்பதில் ஜெயலலிதா சிரத்தை காட்டியிருப்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது"

என்று ஒரு இதழ் (தினமணி) தலையங்கம் எழுதி, தனது அபிலாஷையை வெளிப்படுத்துகிற அதே நேரத்தில்,

"Reports from Te and Andpatt say AIADMK fuctonaries ave take up most of the otels, lodges and other accommodato the area and the leadershp does ot want to add to the crowds or ostentato."

என்று ஜனவரி 30ஆம் நாள் (இந்து) ஆங்கில இதழில் செய்தி வெளியாகியுள்ளது.

அதாவது அ.தி.மு.க. தலைமை பெரும் கூட்டத்தைக் கூட்டுவதையோ, வீண் ஆடம்பரம் செய்வதையோ விரும்பவில்லை என்று சொல்லியிருந்தும்கூட அங்குள்ள ஓட்டல்கள், விடுதிகள், தங்குமிடங்கள் அனைத்தும் முன்கூட்டியே ஆளுங்கட்சியினரால் எடுத்துக்கொள்ளப்பட்டு விட்டன என்று தேனி மற்றும் ஆண்டிப்பட்டி பகுதிகளிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதிலிருந்து என்ன புரிகிறது? வராதே என்று சொல்வேன், வந்து குவிந்திடு என்று அதற்கு அர்த்தம் என்ற உண்மைதானே புரிகிறது!

இப்போதே கழகச் சார்பில் எழுதப்படும் விளம்பரங்கள் ஆளுங்கட்சியினரின் அச்சுறுத்தல்களால் அழிக்கப்படுவதும், தடுக்கப்படுவதும் போன்ற அராஜகங்கள், அளவை மீறுகின்றன என்ற செய்திகள் வந்தவண்ணமிருக்கின்றன.

தி.மு.க. அணிக்கு எதிராகச் செயல்படும் எரிச்சல் கொண்டோர் எத்தனையோக் கதைகளை இட்டுக் கட்டுகின்றனர். இவருக்கும்

அவருக்கும் தகராறு - மோதல் - கசப்பு - காழ்ப்பு - இப்படி ஒன்று மில்லாததையெல்லாம் ஊதி விடுகின்றனர்.

மெய் வருத்தம் பாராார்
பசி நோக்கார்
கண் துஞ்சார்
கருமமே கண்ணாயினார்

என்பது போல, நமது கழக உடன்பிறப்புகள் இந்தப் பொய்க் கூற்றுகளைக் கேளாது,

புனைந்துரைகளை பொருட்படுத்தாமல்,
கருமமே கண்ணாக
கடமையாற்றிடுவர்
என்ற நம்பிக்கை எனக்கு உண்டு!
இந்தக் கொடியை எங்கே கட்டலாம் -
இந்தத் தோரணம் எந்த வீதியில்?
இந்த விளம்பரம் எந்த இடத்தில்?
இந்தக் கூட்டம் எந்த ஊரில்?

இவற்றில் வேண்டுமானால் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கருத்து இருக்கலாமே தவிர, எங்கே கொடி கட்டினாலும், எங்கே கூட்டம் நடத்தினாலும் அது கழக வெற்றிக்காகத்தான் என்ற குறிக்கோளுக்கு மாறுபட்டதாக இருக்காது என்பதை இடையிற் கலகம் செய்து ஏதாவது தேடலாமா எனக் கருதும் எத்தர்கள் உணர வேண்டும்! நமது உடன்பிறப்புகள் அவர்களை உணரச் செய்திடல் வேண்டும்!

விஷமப் பிரச்சாரம் இத்துடன் நிற்கவில்லை. விலை கொடுத்துக் கூட கழகச் செயல்வீரர்களைத் தமது பக்கம் இழுத்துக்கொள்ள, ஆளுங்கட்சி பகீரத பிரயத்தனத்தில் ஈடுபட்டிருப்பதாகவும் செய்திகள் பரப்பப்படுகின்றன.

இதிகாச காலத்தில் விபீஷணர்களும், இந்திய வரலாற்றில் மீர்ஜாபர்களும், எட்டப்பர்களும் முளைத்ததையும், அவர்கள் சரித்திரத்தில் செல்லரித்த பக்கங்களாக மட்டுமே இருந்திட முடிந்ததையும் ஓரிருவர் மறந்துவிட்டு எதிரியிடம் மண்டியிட்டு விடுவதாலேயே, கையளவு தண்ணீரை அள்ளி விட்டால் கடலே வற்றிப்போய் விடும் என்ற முடிவுக்கு ஒரு முட்டாள் கூட வர மாட்டான்.

கழகம், காணாத சோதனை இன்னும் என்ன மிச்ச மிருக்கிறது?

காய்த்த மரமே கல்லடிபடும் என்பதற்கேற்ப, கால மெல்லாம் காழ்ப்புணர்ச்சி கொண்டவர்களாலும் - பாதாதிகேசம் வரையில் பாஷாணத்தையே குருதியோட்டமாகக்கொண்ட நமது ஜென்மப் பகைவர்களாலும் - திட்டமிட்டப் பிரச்சாரங்களும், திரை மறைவுப் பிரச்சாரங்களும் நமக்கெதிராக நடைபெற்றுங்கூட, 1950களிலேயே நாம் முற்றாக அழிந்து விடுவோம் என்று கணிக்கப்பட்ட சோதிடங்களையெல்லாம் சுக்குநூறாக்கிச் சுழலும் போர் வாளாக தமிழ் இனத்தின் கரங்களிலே மின்னிக் கொண்டிருப்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகம்.

1991-ல் தமிழ்நாட்டில் ஒரே ஒரு இடத்திலேதான் வெற்றி பெற்றோம் என்கிற போதும், தமிழ்த்தாய் நாம் பெற்ற விழுப்புண்ணுக்கு மருந்திட்டு அது காய்ந்து வடுவாக மாறிய அந்த வட்டத்தையே வானத்துக் கதிரவனாய் எண்ணி உச்சிமோந்து முத்தமிட்டு, நம்மை வாழவைத்திருக்கிறாள். இந்தத் தமிழ் வையத்துக்கு நாம் ஆற்ற வேண்டிய பணி பற்பல உண்டு என்பதால்!

அப்பணி இனமானம் போற்றும் பணி, இங்குள்ள தமிழர்களை ஏற்றமுறச் செய்யும் பணி, அய்யா அண்ணா வழியில் ஆற்றிடும் பணி, அப்பணிகளுக்கிடையே வந்து போவதுதான் தேர்தல்கள்!

அவற்றில் ஒன்றுதான் ஆண்டிப்பட்டி! அறவழியில் தேர்தல் நடந்தால், நாம்தான் வெற்றி பெறுகிறோம்!

அறவழியே நிலைத்திட ஆவன செய்வோம்;
அதற்கு இடம் தர மறுப்பாரெனில்; எதையும்
எதிர்கொள்ள எதையும் தாங்கும் இதயம்
வேண்டும் என்று அண்ணன் சொன்ன
பொன்மொழியை செயலில் காட்டுவோம்!

அன்புள்ள,

மு.க.

2-2-2002

2674. "தீவிரவாதப் பாிவு" எனத் திரிப்பதோ கயிறு?(1)

உடன்பிறப்பே,

சர்வதேச அளவில் தீவிரவாதம் ஒழிக்கப்பட வேண்டுமென்று உலகத்தின் பல்வேறு நாட்டுத் தலைவர்கள் முனைந்து செயல்படும் இந்தக் கால கட்டத்தில் சென்னை சங்கீத சபையில் தனது வார இதழின் ஆண்டு விழாவைக் கொண்டாடிய சோ. இராமசாமி அவர்கள் என்னைத் தீவிரவாதிகளின்பால் பற்றுக்கொண்டவன் என்று குற்றம் சாட்டியது மட்டுமல்லாமல், அதற்கு மேலும் விளக்கம் அளிப்பதாகக் கூறிக்கொண்டு மீண்டும் அவரது பத்திரிகையில் வீரப்பன் விவகாரம் தொடங்கிய பிறகு கருணாநிதியின் தீவிரவாதப் பரிவு பற்றி என் சந்தேகம் வலுக்க ஆரம்பித்தது என்று குறிப்பிட்டுவிட்டு, விடுதலைப் புலிகள் ஆதரவு என்ற காரணத்தை விட, என் மனதில் தலைதூக்கி நின்றது தமிழக (தி.மு.க.) அரசின் தீவிரவாதப் பரிவு நிலைதான் என்று மேலும் தனது வாதத்தை அழுத்தமாக்கி, முஸ்லீம் தீவிர வாதமாக இருந்தாலும் சரி, தமிழ்த் தீவிரவாதமாக இருந்தாலும் சரி, தீவிரவாதம் என்றாலே முதல்வருக்கு (கருணாநிதிக்கு) ஒரு கருணை பிறக்கிறது.

என்று அவர் 21-2-2001-ல் எழுதியதை நினைவூட்டி யிருக்கிறார். கடத்தப்பட்ட கன்னட நடிகர் ராஜ்குமாரை விடுவிக்க நக்கீரன் திரு. கோபால் மாத்திரமல்லாமல், திரு.பழ நெடுமாறன் சென்றதும் சோ.இராமசாமிக்கு கோபத்தை உண்டாக்கி விட்டதாம்!

முதலில் வீரப்பன் விவகாரத்தை எடுத்துக் கொள்வோம். அந்த விவகாரம், தி.மு.க. ஆட்சியில் தான் புதிதாகத் தொடங்கப்பட்டதல்ல. 14-7-1987 அன்று வீரப்பன் குழுவினர் சத்தியமங்கலம் வன அலுவலர் சிதம்பரம் என்பவரை சுட்டுக் கொன்றார்களே, அப்போது நடைபெற்றது அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சி!

அதற்கு முன்பே 1986-ல் வீரப்பன், கர்நாடக மாநிலக் காட்டில் பிடிபட்டு, வனத்துறை பயணியர் இல்லத்தில் சில நாட்கள் கைதியாக அடைக்கப்பட்டிருந்தபோது, தப்பி ஓடிவிட்ட நிகழ்ச்சியும் நடந்தது. அப்போதும் இங்கே அ.தி.மு.க. ஆட்சிதான் நடைபெற்றது. நல்ல வேளை! அப்போது நம்முடைய கழக ஆட்சி இங்கே நடைபெற்றிருந்தால், நாம்தான் தீவிரவாதி மீதுள்ள பரிவு காரணமாக வீரப்பன் தப்பி ஓடுவதற்கு உதவி செய்ததாக சோ. இராமசாமி கூறியிருப்பார்.

அதற்கு முன்பே 1978ஆம் ஆண்டு கர்நாடக மாநிலம் இராமாபுரம் காவல் நிலைய எல்லையில் பரமசிவம் என்பவரைக் கொலை செய்ய குருப்பன் என்பவருக்கு துணைபுரிந்ததிலே தொடங்கி வீரப்பன் செய்த கொலைகள் தொடர்பான வழக்குகளும் வரிசைப் படுத்தப்பட்டு நூற்றுக் கணக்கில் பட்டியலிடப்படுவதில் அ.தி.மு.க. ஆட்சிக் காலமும் பெரும் பகுதி அடங்கியுள்ளது என்பதை சோ. இராமசாமி போன்றவர்கள் மறைத்து விட முடியாது. செல்வி ஜெயலலிதா ஆட்சிக் காலமான 1991 ஜூலை மாதத்தில் பெண்ணாகரத்திலே வீரப்பன் கோஷ்டியினர் வீரப்பன் தலைமையில் போலீசாரை எதிர்த்து ஒரு போலீஸ்காரரைச் சுட்டுக் கொன்று விட்டு, துப்பாக்கியையும் பறித்துக்கொண்டு போன நிகழ்ச்சி நடைபெற்றது. அப்போது இதே சோ. இராமசாமி அன்றிருந்த ஆட்சியாளரைப் பார்த்து தீவிரவாதப் பரிவாளர்கள் என்று விமர்சிக்கவில்லை.

அதே ஜெயலலிதா ஆட்சியில் 1993-ல் வீரப்பன் கும்பலால் சுரைக்காய்மடு என்ற இடத்தில் வைக்கப்பட்டிருந்த கண்ணி வெடிகளுக்கு ஐந்து போலீசார் உட்பட 22 பேர் மாண்டு மடிந்து பலியானார்களே, அப்போதும் சோ. இராமசாமி அவர்கள் இந்த நாட்டில் தான் இருந்தார்! ஆனால் அவர் ஜெயா ஆட்சியைப் பார்த்து இது தீவிரவாதப் பற்றாளர் ஆட்சி என்று கூற வில்லை!

1994-ல் ஜெயலலிதா ஆட்சியிலேதான் காவல் துறை கண்காணிப்பாளர் சிதம்பரனாதன் உட்பட மூன்று பேர் வீரப்பனால் கடத்தப்பட்டார்கள்.

அப்போது வீரப்பன் விதித்த நிபந்தனை:- அதிரடிப்படை போலீசை வாபஸ் பெற வேண்டும் - வீரப்பனைத் தேடும் பணியைக் கைவிட வேண்டும் - என்பன போன்றவைகளாகும்!

அவற்றில் இரு நிபந்தனைகளான அதிரடிப்படை வாபஸ், வீரப்பனைத் தேடும் பணி நிறுத்தம் இவை ஏற்றுக் கொள்ளப்பட்டன.

வீரப்பனால் கடத்தப்பட்டவர்களின் உயிரைக் காப்பாற்றுவது தான் முக்கியம். எனவே வீரப்பன் நிபந்தனைப்படி வீரப்பனை தேடும் பணி நிறுத்தப்பட்டு விட்டது என்று அன்றைய கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அரசின் சார்பாக அறிவிப்பே வெளியிட்டாரே. அதுமட்டுமன்றி, வீரப்பன் ஆட்கள் துப்பாக்கியுடன் வந்து தன்னை சந்திப்பதற்கும் அனுமதியுண்டு என்று தெரிவித்தாரே! இதற்கெல்லாம் காரணம் ஜெயலலிதாவின் தீவிரவாதப் பற்றுதான் என்று சோ.இராமசாமி மட்டுமல்ல, வேறு யார்தான் வாய் புளித்ததோ - மாங்காய் புளித்ததோ என்ற பாணியில் குற்றம் சாட்டிவிட முடியும்?

கடத்தப்பட்டவர்களை உயிரோடு மீட்பதற்கு இப்படிச் சில நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வது என்பதற்கு, தமிழ் நாட்டில் மட்டுமல்ல - அகில இந்திய அளவில், அகில உலக அளவில் பல சம்பவங்கள் சான்றாக விளங்குகின்றன.

காட்மாண்டிலேயிருந்து 181 பயணிகளோடு புறப்பட்ட இந்தியன் ஏர்லைன்ஸ் விமானம் 5 தீவிரவாதிகளால் கடத்தப்பட்டது. அதில் 41 பேர் தமிழர்கள் இருந்தார்கள். மொத்தப் பயணிகளில் 27 பேர் விடுவிக்கப்பட்டார்கள். 4 பேர் கொல்லப்பட்டார்கள். கடத்தப்பட்ட விமானம் இறுதியாக ஆப்கானிஸ்தானத்தில் இருந்த காந்தகார் விமான நிலையத்தில் தரை இறங்கியது. விமான கடத்தல்காரர்களோடு ஐக்கிய நாடுகளின் தூதுக் குழுவே பேச்சுவார்த்தை நடத்தியது. அப்பொழுது காஷ்மீரில் சிறை வைக்கப்பட்டிருந்த பாகிஸ்தானுடைய மதத் தலைவர் மவுலானா மசூத் அன்சாரையும், வேறு சில தீவிரவாதிகளையும் விடுதலை செய்யாத வரையில் பயணிகளை விடுவிக்க முடியாது என்று கடத்தல்காரர்கள் திட்டவட்டமாகக் கூறி விட்டனர். பயணிகளை விடுவிக்குமாறு தூதுக் குழு விடுத்த வேண்டுகோளைக் கடத்தல்காரர்கள் ஏற்க மறுத்து விட்டார்கள். தங்கள் கோரிக்கை நிறை வேற்றப்படாத நிலையில் பயணிகளை விடுவிக்க முடியாது என்று கூறிவிட்டதால் பேச்சுவார்த்தை தோல்வி அடைந்தது. தூதுக்குழு திரும்பி விட்டது. விமானக் கடத்தலுக்குக் காஷ்மீர் தீவிரவாத அமைப்பான இஸ்லாமிய மீட்பு முன்னணி

பொறுப்பேற்றுக்கொண்டது. மவுலானா மசூத் அன்சார் உள்ளிட்ட தீவிரவாதிகளை விடுவிக்கக் கூடாது என்று இராணுவத் துறை நிபுணர்களெல்லாம் வற்புறுத்தியும் கூட கடத்தல்காரர்களோடு பேச்சு வார்த்தை நடத்த இந்தியத் தூதுக்குழு ஒன்று, சென்று பேச்சுவார்த்தை நடத்தியது. இறுதியாக 8 நாட்களுக்குப் பிறகு உடன்பாடு ஏற்பட்டு, சிறைகளிலே அடைக்கப்பட்டிருந்த 3 தீவிரவாதிகள் விடுதலை செய்யப்பட்ட பிறகுதான் பயணிகள் விடுவிக்கப்பட்டார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒரு செய்தி.

இந்த நிபந்தனைகளை நிறைவேற்றியவர்கள் தீவிர வாதப் பற்றாளர்கள் என்று சோ. இராமசாமி தீர்மானிக்கிறாரா?

ஏன், 1989லே கூட, வி.பி. சிங் அவர்கள் பிரதமராக இருந்த போது மத்திய உள்துறை அமைச்சராக இருந்த முப்தி முகம்மது சையத் அவர்களுடைய மகள் ரூபையா சையத் அவர்களைக் காஷ்மீர் தீவிரவாதிகள் கடத்திச் சென்று விட்டார்கள். அவரை விடுவிக்க டிசம்பர் 13, 1989 அன்று ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணி - ஜெ.கே.எல்.பி. என்ற தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்த 5 தீவிரவாதிகள் விடுவிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

மீண்டும் மார்ச் 1991இல் காஷ்மீர் அரசியல் தலைவர் சைபுதீன்சோஸ் அவர்களின் மகள் நாஹீது என்பவர் தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்ட போது அவரை விடுவிக்க காஷ்மீர் தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்த 3 தீவிரவாதிகள் விடுவிக்கப்பட்டார்கள்.

அதே 1991இல் இந்தியன் ஆயில் கம்பெனியின் மூத்த அதிகாரி துரைசாமி என்பவர் காஷ்மீர் தீவிர வாதிகளால் கடத்திச் செல்லப்பட்ட பொழுது அவரை விடுவிக்க ஆகஸ்ட் 20 அன்று 11 காஷ்மீர் தீவிரவாதிகள் விடுதலை செய்யப்பட்டார்கள்.

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். திரு.பழ. நெடுமாறனும், வேறு சிலரும் கன்னட நடிகர் ராஜ்குமாரை மீட்பதற்கு சென்றது தவறு என்று சோ.இராமசாமி கூறுகிறாரெனில், பல மாதங்களுக்கு முன்பு ஆந்திராவில் நான்கைந்து ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை நக்ஸலைட்டுகள் கடத்திக் கொண்டுபோய் விட்டார்கள். அவர்களிடம் பேசி அதிகாரிகளை மீட்க யாரை அனுப்புவது என்ற கேள்வி எழுந்தது. நக்ஸலைட்டுகளால்

கடத்தப்பட்ட ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை விடுவிக்க நக்ஸலைட் இயக்கத்திற்காக வாதாடிக் கொண்டிருந்த வழக்கறிஞர் கண்ணபிரானை அனுப்பலாம் என்று ஒரு கருத்து வந்தது. இந்தக் கருத்தை ஆந்திர ஐ.பி.எஸ். அதிகாரிகள் கடுமையாக எதிர்த்தார்கள். ஆனால் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் சங்கம் கூடி, எங்களைச் சேர்ந்த நான்கைந்து அதிகாரிகள் நக்ஸலைட்டுகளால் கடத்தப்பட்டிருக்கும்போது அது பற்றி விவாதமா? எனவே, அவர்களை மீட்க, வழக்கறிஞர் கண்ணபிரானைக் கட்டாயம் காட்டுக்கு அனுப்ப வேண்டுமென்று தீர்மானமே நிறை வேற்றினார்கள். பிறகு ஆந்திர அரசு, வழக்கறிஞர் கண்ணபிரானை அனுப்பி அந்த நான்கைந்து ஐ.ஏ.எஸ். அதிகாரிகளையும் மீட்டு வந்தது.

இவற்றில் எதுவும் தீவிரவாதத்தின் மீதுள்ள பற்றினால் நடத்தப்பட்டதல்ல. முள்ளில் விழுந்த துணியை, துணி கிழிந்துவிடாமல் பத்திரமாக எடுத்திடும் பக்குவத்தையே குறிப்பிடுவதாகும்.

எந்தவொரு தீவிரவாத இயக்கத்திற்கும் நடவடிக்கைக்கும் தி.மு.க. வோ, தி.மு.க. ஆட்சியோ துணை போனதில்லை என்பதையும், அவற்றை அடக்கிடவும் தடுத்திடவும்தான் முனைந்து நின்றோம் என்பதையும் தி.மு.க. ஆட்சியில் மட்டுமல்ல, அ.தி.மு.க. ஆட்சியிலும் தீவிரவாத வன்முறைகள் தலைகாட்டிய நிகழ்வுகளும், அவை அடக்கப்பட்ட நிகழ்வுகளும் உண்டு என்பதை நாளைய கடிதத்தில் புள்ளி விபரத்துடன் விளக்குகிறேன்.

அன்புள்ள,

மு.க.

3-2-2002

2675. "தீவிரவாதப் பாிவு" எனத் திரிப்பதோ கயிறு?(2)

உடன்பிறப்பே,

நேற்றைய கடிதத்தில் எந்தவொரு தீவிரவாத இயக்கத்திற்கும் தி.மு.க.வோ, தி.மு.கழக ஆட்சியோ துணை போனதில்லை என்றும், வன்முறைக்கு இடமளித்ததில்லையென்றும் அவற்றை அடக்கிடவும் தடுத்திடவும்தான் முனைந்து செயல்பட்டிருக்கிறோம் என்றும் ஆதாரங்களுடன் தேதி வாரியாகக் குறிப்பிட்டிருந்தேன்.

அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலே 1991 ஆகஸ்ட் முதல் 1996 மே திங்கள் வரையிலே வீரப்பனைச் சேர்ந்தவர்கள் 121 பேர் கைது செய்யப்பட்டிருக்க, 1996 ஜூன் திங்கள் முதல் 13-11-2000 வரை தி.மு.கழக ஆட்சியிலே வீரப்பனைச் சேர்ந்தவர்கள் 135 பேர் கைது செய்யப்பட்டார்கள். ஜெயலலிதாவின் அ.தி.மு.க. ஆட்சியிலே தமிழக எல்லையிலே மாத்திரம் வீரப்பனால் கொலை செய்யப்பட்டவர்கள் 60 பேராகும். ஆனால் தி.மு. கழக ஆட்சியில் வீரப்பனால் கொலை செய்யப்பட்டவர்கள் மூன்று பேர்தான் என்பதும் சோ.இராமசாமி அவர்கள் குறித்து வைத்துக்கொள்ள வேண்டிய புள்ளி விபரமாகும்.

திரு. அத்வானி வருகையின்போது கோவையிலே பயங்கரமான குண்டு வெடிப்புச் சம்பவம் நடைபெற்ற சில மணி நேரங்களிலேயே ராணுவத்தையும், சி.ஆர்.பி. படையையும் வரவழைத்து அங்கே வன்முறையைக் கட்டுக்குள் கொண்டு வந்ததும் கழக அரசுதான்! கோவை திருமால் வீதியில் ஒரு வீட்டில் தீவிரவாதிகள் தஞ்சம் அடைந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டு, 14.2.1998 அன்று இரவே போலீசார் அந்த வீட்டைச் சுற்றி வளைத்தனர். மோதுதலின்போது தீவிரவாதிகள் வைத்திருந்த குண்டு வெடித்ததில் தீவிரவாதிகள் 6 பேர் இறந்தனர். எஞ்சியிருந்த 8 பேர் கைது செய்யப்பட்டனர். கோவை குண்டு வெடிப்பு நடைபெற்ற இரண்டு மணி நேரத்திற்குள் மூப்பனார்,

நல்லக்கண்ணு ஆகியோருடன் நேரிலும், சங்கரய்யா, அப்துல் சமத், அப்துல் லத்தீப் ஆகியோருடன் தொலைபேசியிலும் கலந்து பேசி, அல் உம்மா இயக்கமும், அகில இந்திய ஜிகாத் கமிட்டி இயக்கமும் கழக அரசினால் தடை செய்யப்பட்டன. அல் உம்மா இயக்கத் தலைவர் எஸ்.ஏ. பாட்சா மற்றும் அவருடன் இருந்த 12பேர் உடனடியாக கைது செய்யப்பட்டனர். அந்த அலுவலகங்களுக்கு சீல் வைக்கப்பட்டது. வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டன. அல் உம்மா இயக்கத்தைச் சேர்ந்த 53 பேரும், அகில இந்திய ஜிகாத் கமிட்டியைச் சேர்ந்த 66 பேரும் கைது செய்யப்பட்டனர். இந்த நடவடிக்கைகள் எல்லாம் சோ. ராமசாமிக்கு தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளாக தெரியாமல் 'பரிவு' நடவடிக்கைகளாக தெரிகின்றன போலும்!,

சென்னை மாநகரில் மேற்கொள்ளப்பட்ட தீவிரவாத தடுப்பு நடவடிக்கைகள் காரணமாக வெடிகுண்டுகளும், வெடி மருந்துகளும் கைப்பற்றப்பட்டதோடு, பல தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டனர். 1042 எலெக்ட்ரிக் டெடனேட்டர்கள், 1022 சாதாரண டெடனேட்டர்கள்,5 நாட்டு வெடிகுண்டுகள், 37 பெட்ரோல் குண்டுகள், 187 ஜெலட்டின் குச்சிகள், குறித்த நேரத்தில் வெடிக்கும் குண்டு ஒன்று, 2 டின் குண்டுகள், 12 பெட்டி குண்டுகள், உரிமம் இல்லாத 3 ரிவால்வர்கள், 3 பைப் வெடிகுண்டுகள் கழக ஆட்சியிலே கைப்பற்றப்பட்டன.

எம்.ஜி.ஆர். ஆட்சியிலே 1984-85லிருந்து தமிழ் தேசிய மீட்புப் படை (டி.என்.ஆர்.டி.), தமிழ்நாடு விடுதலைப் படை (டி.என். எல்.ஏ.) ஆகிய இரண்டு தீவிரவாத இயக்கங்கள் தமிழ்நாட்டில் இயங்கி வந்தன. அந்த இரண்டு தீவிரவாத இயக்கங்களையும் தடை செய்ய வேண்டுமென்று கழக அரசு மத்திய அரசுக்கு 16-12-2000 அன்று கடிதம் எழுதியது. அதுகுறித்து 3.1.2001 அன்று மத்திய அரசு சில விளக்கங்களைக் கேட்ட போது அந்த விபரங்களையும் கழக அரசு மத்திய அரசுக்கு அனுப்பிவைத்தது.

நேற்றைய என் கடிதத்தில் அ.தி.மு.க. ஆட்சியிலும் தீவிரவாத வன்முறைகள் தலைகாட்டிய நிகழ்வுகளும், அவை அடக்கப்பட்ட நிகழ்வுகளும் உண்டு என்று எழுதியிருந்தேன். அதற்கான சான்றுகள் வருமாறு:-

தீவிரவாத இயக்கங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்று குறிப்பிடும்போது ஜெயலலிதா ஆட்சியிலே 1991இல்

4 பேரும்,1992இல் 2 பேரும், 1993இல் 3 பேரும், 1994இல் 3 பேரும், 1995இல் 2 பேரும், 1996இல் 3 பேரும் ஆக மொத்தம் 17 பேர் தமிழ்நாடு விடுதலைப் படையைச் சேர்ந்தவர்கள் கைது செய்யப்பட்டார்கள். அதைப் போலவே மக்கள் யுத்தப் பிரிவைச் சேர்ந்தவர்கள் ஜெயலலிதா ஆட்சியில் 2 பேர் கைது செய்யப்பட்டார்கள்.

1996 முதல் 2001 வரை நடைபெற்ற தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் 1996இல் 4 பேரும், 1997இல் 28 பேரும், 1998இல் 30 பேரும், 1999இல் 34 பேரும், 2000இல் 47 பேரும், 2001இல் 3 பேருமாக மொத்தம் 146 பேர் தமிழ்நாடு விடுதலைப் படையைச் சேர்ந்தவர்கள் கைது செய்யப்பட்டார்கள். அதைப் போலவே மக்கள் யுத்தப் பிரிவைச் சேர்ந்தவர்கள் 16 பேர் கழக ஆட்சியிலே கைது செய்யப்பட்டுள்ளார்கள். இந்தப் புள்ளி விவரங்கள் எல்லாம் தீவிரவாதப் பரிவு நடவடிக்கைகளாக சோ. ராமசாமிக்கு தோன்றுகிறதா? தலைமறைவாக இருந்த தமிழ்நாடு விடுதலைப் படையினரில் முக்கியமானவர்கள் எல்லாம் கழக ஆட்சியில் கைது செய்யப்பட்டார்கள். குறிப்பாக 13 ஆண்டுகளாக தலைமறைவாக இருந்த பொன்பரப்பி இராஜேந்திரன் கைது செய்யப்பட்டு, அவரிடமிருந்து கைத்துப்பாக்கி ஒன்று பறிமுதல் செய்யப்பட்டது. 8 ஆண்டுகளாக தலைமறைவாக இருந்த ரேடியோ வெங்கடேசன் கைது செய்யப்பட்டு, அவரிடமிருந்து ஆண்டி மடம் காவல் நிலையத்தில் கொள்ளை அடிக்கப்பட்ட 5 துப்பாக்கிகள் மற்றும் ஒரு கைத்துப்பாக்கி கைப்பற்றப்பட்டது. 27 ஆண்டுகளுக்கு மேலாக தலை மறைவாக இருந்த சூ என்கிற சுந்தரம் பல வழக்குகளிலே சம்பந்தப்பட்டவர் கைது செய்யப்பட்டார். 5 ஆண்டுகளுக்கு மேலாக தலைமறைவாக இருந்த கலை என்கிற ரவிச்சந்திரன் கைது செய்யப்பட்டார். 11 ஆண்டுகளுக்கு மேலாக தலைமறைவாக இருந்த தமிழ்நாடு விடுதலைப் படை தலைவர் மாறன் கைது செய்யப்பட்டார். நடிகர் ராஜ்குமார் கடத்தலில் சம்பந்தப்பட்ட தமிழ்நாடு விடுதலைப் படையைச் சேர்ந்த கோவிந்தராஜ் மற்றும் செழியன் ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டனர். 7 ஆண்டுகளாக தலை மறைவாக இருந்த தடா கைதிகள் வரதராஜன், புண்ணிய மூர்த்தி மற்றும் பீட்டர் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் 45 தமிழ்நாடு விடுதலைப் படையினரும், குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின் கீழ் 78 பேரும் சிறையிலே அடைக்கப் பட்டனர். 15

ஆண்டு காலத்திற்கு மேலாக தலைமறைவாக இருந்த மக்கள் யுத்தப் பிரிவைச் சேர்ந்த பச்சையப்பன், 1976ஆம் ஆண்டு முதல் தலைமறைவாக இருந்த கே.சி.செல்வம், விந்தை வேந்தன் ஆகியோர் கைது செய்யப்பட்டதும் கழக ஆட்சியிலேதான். 28.2.2000 அன்று மக்கள் யுத்தப் பிரிவைச் சேர்ந்த காளிதாஸ் மற்றும் 4 தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டு அவர்களிடமிருந்து 4 பைப் வெடி குண்டுகள் மற்றும் நான்கு தோட்டாக்கள் கைப்பற்றப்பட்டு, அந்த நால்வரும் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டனர். 17.4.2001 அன்று இதே பிரிவைச் சேர்ந்த பெண் தீவிரவாதி சந்திரா என்பவர் கைது செய்யப்பட்டு அவரிடமிருந்து 2 நாட்டுத் துப்பாக்கிகள், 3 பைப் வெடி குண்டுகள் மற்றும் 5 தோட்டாக்கள் கைப்பற்றப்பட்டன. இந்த நடவடிக்கைகள் எல்லாம் சோ.ராமசாமியின் கண்களுக்கு தீவிரவாதப் பரிவு நடவடிக்கைகளாகவா தோன்றுகின்றன?

இதைப் போலவே இலங்கைப் போராளிகள் வன்முறைகளில் ஈடுபட்ட போது கழக ஆட்சியிலே எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையா?

1996 முதல் 2001 வரை கழக ஆட்சிக் காலத்திலே விடுதலைப் புலிகள் மற்றும் அவர்களது ஆதரவாளர்கள் கைது செய்யப்பட்டவர்கள் 19 விடுதலைப் புலிகள் உட்பட 247 பேராகும். 1998ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ராமநாதபுரம் மாவட்டத்தில் டெலோ இயக்கத்தைச் சேர்ந்த 2 போராளிகள் கைது செய்யப்பட்டு, அவர்களிடமிருந்து இரண்டு ஏ.கே. 47 ரக துப்பாக்கிகள் மற்றும் 216 தோட்டாக்கள் கைப்பற்றப்பட்டன. 12.1.2000 அன்று ராமநாதபுரம் மாவட்டத்தில் ஈ.பி.டி.பி. இயக்கத்தைச் சேர்ந்த 5 போராளிகள் கைது செய்யப்பட்டு, எல்.எம்.ஜி. 2, ஏ.கே. 56 துப்பாக்கிகள் 4, எம் 70 துப்பாக்கி 1, டி.81 துப்பாக்கி 1, தோட்டாக்கள் 2281, வாக்கி டாக்கி 1, துப்பாக்கி மெகஸின்கள் 27 கைப்பற்றப்பட்டன. 2000 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இராமநாதபுரம் மாவட்டத்தில் 6 ஈ.பி.டி.பி. போராளிகள் கைது செய்யப்பட்டார்கள்.

1996ஆம் ஆண்டு முதல் விடுதலைப் புலிகள் மற்றும் அவர்களது ஆதரவாளர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டவை என்று எடுத்துக் கொண்டால் பிஸ்டல் 3, எம்.பி. 5 துப்பாக்கி 1, தோட்டாக்கள் 189, தொலை தொடர்பு சாதனம் 4, வாக்கி டாக்கி

8, ஜிபிஎஸ் 1, கோட் ஷீட்ஸ் 200, மோர்ஸ் கீ 5, தங்கக் கட்டிகள் 23, செல்போன் 10, எச்.எம்.ஜி. 1 மற்றும் 320 தோட்டாக்கள், நாட்டுப் படகு, 60 லட்சம் ரூபாய் மதிப்புள்ள இலங்கை கள்ள நோட்டுக்கள் ஆகும்.

96ஆம் ஆண்டு நவம்பர், டிசம்பர் மாதங்களில் மதுரை, ராமனாதபுரம் மற்றும் திருச்சி மாவட்டங்களில் ஆபரேஷன் டைகர் என்னும் தேடுதல் வேட்டை நடத்தி 8 விடுதலைப் புலிகள் மற்றும் 2 இலங்கைத் தமிழர்கள் மற்றும் 10 உள்ளூர்வாசிகள் கைது செய்யப்பட்டனர். 8.2.1997 அன்று பாண்டியன் என்கிற முரளீதரன் மற்றும் பல ஆதரவாளர்களும் கைது செய்யப்பட்டனர். 20.1.1998 அன்று விசாகரத்தினம் என்ற விடுதலைப் புலியும் மற்றும் மூவரும் கைது செய்யப்பட்டனர். 28.12.1998 அன்று கண்ணன் என்கிற விடுதலைப் புலியும் மற்றும் மூவரும் கைது செய்யப்பட்டனர். 23.8.1999 அன்று விடுதலைப் புலிகள் அரசநாயகம் மற்றும் ரஜிகரன் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

இந்த நடவடிக்கைகள் அனைத்தும் தி.மு.க. ஆட்சியில் தீவிரவாதிகளுக்குக் காட்டப்பட்ட பற்று, பரிவு என்பது சோ. இராமசாமி அவர்களின் வாதமாக இருப்பின், அதற்குப் பெயர்தான் விதண்டாவாதம் என்பதாகும்!

எம்.ஜி.ஆர். ஆட்சியில் 1984-ல் மீனம்பாக்கம் விமான நிலையத்தில் நடைபெற்ற குண்டு வெடிப்பில் 25 வெளி நாட்டுக்காரர் உள்ளிட்ட 30 பேர் மரணமடைந்ததற்கும், 1987-ல் அரியலூரில் மருதையாற்றுப் பாலத்தில் குண்டு வெடித்து ரயில் கவிழ்ந்து 26 பேர் பலியானதற்கும் எம்.ஜி.ஆரின் தீவிரவாதப் பரிவோ அல்லது பற்றோதான் காரணம் என்று கதைப்பது எவ்வளவு பைத்தியக்காரத்தனமோ, அதைப் போன்றதுதானே கழக ஆட்சியின் மீது சோ. இராமசாமி தீவிரவாதப் பரிவு என்ற விஷத்தைக் கக்குவதும் ஆகும்!

எனவே விடுதலைப் புலிகள் உள்ளிட்ட எந்த தீவிர வாத இயக்கமானாலும் அவற்றின் வன்முறைச் செயல்களுக்கு தி.மு.க. ஆதரவுக் கரம் நீட்டியதில்லை! பரிவு காட்டியதில்லை! அச்செயல்களின்பால் பற்று வைத்தது மில்லை!

கர்நாடக நடிகர் ராஜ்குமார், வீரப்பனால் கடத்தப்பட்ட போது ராஜ்குமார் உயிருக்கு ஏதாவது ஆபத்து ஏற்படின் கர்நாடகத்தில்

வாழுகிற தமிழர்கள் வாழ்வு கேள்விக் குறியாகி விடுமே என்ற கவலை, சோ. இராமசாமி அவர்களுக்கு ஏற்படாமலிருக்கலாம் - அது அவரது இயல்பு! ஆனால் தமிழகத்திலேயுள்ள என்னைப் போன்றவர்கள், ஏன் சோ. இராமசாமி அவர்களே தனது நெருங்கிய நண்பர் என்று அடிக்கடி கூறிக் கொள்கிற சூப்பர் ஸ்டார் தம்பி ரஜினிகாந்த் அவர்கள் உள்ளிட்ட கலையுலகினர், எந்த அளவுக்கு அந்த நேரத்தில் தவித்துப் போனார்கள் என்பதை அவரைக் கேட்டே திரு. சோ. இராமசாமி தெளிவு பெற்றுக் கொள்ள வாய்ப்பு இருக்கிறதே!

எனவே இவ்வளவு விளக்கங்கள் - ஆதாரங்கள் - புள்ளி விபரங்கள், இவற்றுக்குப் பிறகும் தீவிரவாதப் பரிவு என்ற அறுந்துபோன நூலில் தி.மு.க. மீது அவதூறு என்ற பட்டத்தைக் கட்டி பறக்க விட நண்பர் சோ. இராமசாமி முயற்சிப்பது நேர்மையின் பாற்பட்டதாகாது.

அன்புள்ள,

மு.க.

4-2-2002

2676. இதுதான் மங்களகர மகிழ்ச்சிகர ஆட்சியா?

உடன்பிறப்பே,

கடந்த ஆண்டு மே திங்கள் 14 ஆம் நாள் முதல் தமிழ் நாட்டில் ஜெயலலிதா ஆட்சி இரண்டாவது தடவையாகத் தொடங்கியது. இதுவரை ஒன்பது மாதமாகிறது. இடையில் பன்னீர் செல்வம் முதலமைச்சராக தற்காலிகப் பொறுப்பு வகித்த போதிலும் செல்வி ஜெயலலிதாவின் ஆட்சிதான் நடைபெறுகிறது என்பதற்கும் அவரேதான் முதலமைச்சராக இயங்கிக் கொண்டிருக்கிறார் என்பதற்கும் அசைக்க முடியாத ஆதாரங்கள் எத்தனை எத்தனையோ உண்டு!

உதாரணமாக, பத்தினித் தெய்வம் எனப் போற்றப் படும் கண்ணகி சிலையை அகற்றித் தூக்கி எறிவதற்குப் பன்னீர் செல்வத்துக்கு மனம் வந்திருக்குமா? துணிச்சல் ஏற்பட்டிருக்குமா? அந்த அளவுக்குத் தமிழ் உணர்வுதான் மங்கிப் போயிருக்குமா? முதல் அமைச்சர் என்ற பட்டம் இல்லாவிட்டாலும், முதலமைச்சரையே தனது சுட்டு விரல் நுனியில் ஆட்டிப் படைக்கிற அதிகாரமும் அந்தஸ்தும் உடையவராக அம்மையார் இருப்பதால்தான், அயல்நாட்டுத் தூதரக அதிகாரிகளாயினும், அகில இந்திய நிறுவனங்களின் தலைவர்களாயினும், அண்மையில் துணை வேந்தர்களாக ஆக்கப்பட்டவர்களாயினும் பன்னீர் செல்வம் இருக்கும் பக்கம் திரும்பாமலேயே ஜெயலலிதாவுக்கு மலர்ச்செண்டுகள் அளித்து மரியாதை சந்திப்புகள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்ற உண்மை, உள்ளங்கை நெல்லிக்கனி போல் அனைவருக்கும் தெரிகிறது.

திராவிட இயக்கக் கலைஞன் தம்பி முத்துக்கூத்தன் நடத்துகிற பொம்மலாட்டக் காட்சிகளைக் கண்டிருக்கிறோமே! மேல் தோற்றத்திற்கு ஓர் அழகான மேடை - முப்புறமும் பட்டுத் திரைகள் பளபளக்கும் - உழவன் உழத்தி என்று இரண்டு பொம்மைகள்

வரும் - இரண்டும் ஊர்க்கதைகள் பேசுவது போல கை கால்களை அசைக்கும்! ஏன், பாடக் கூடச் செய்யும்!

அது முடிந்தவுடன், ஆஜானுபாகுவாக - ஜொலிக்கும் கிரீடத்துடனும் - பளபளக்கும் உடைவாளுடனும் - பின்னாலிருந்து ராஜாதி ராஜ, ராஜ மார்த்தாண்ட, ராஜ பராக்ரம, அய்ம்பத்தாறு தேசத்து ராஜாக்களையும் அடிபணிய வைக்கும் நமது மண்டிலமாளும் மகாராஜன், அசகாய சூரர், சீர்த்தியும் கீர்த்தியும் கொண்ட மன்னாதி மன்னன், மனு நீதிச் சோழனின் மைந்தர்க்கு மைந்தன் தர்பாருக்கு வருகிறார் - வருகிறார் - பராக்! பராக்! என்று உரத்த குரல் கேட்டுக் கொண்டேயிருக்கும்.....

பொம்மை உருவில் இருக்கும் மகாராஜாவின் கையிலிருந்து கண்ணுக்குத் தெரியாத மெல்லிய நூல் கட்டப்பட்டு, அந்த நூல் மேடைக்குக் கீழேயுள்ளவர்களின் விரல்களுடன் பிணைந்திருக்கும்.

மந்திரி நமது மாநகர் தன்னில் மாத மும்மாரி பொழிகிறதா? குரல் அதிகாரமாக ஒலிக்கும்.

அதற்கேற்ப மகாராஜாவின் தலையும் கையும் அசையும்!

அமைச்சரே! நமது அரசு ஊழியர்கள் எல்லாம்

கூச்சல் போடுவது போலத் தெரிகிறதே?

அமைச்சர் பொம்மை, ஒரு நூலின் திடீர்ச் சுண்டுதலால் குதித்தோடி வந்து,

அது ஒன்றுமில்லை மகாராஜா! அது ஆண்டிப்பட்டிக்கு அம்மாவுக்கு பிரார்த்தனை செய்து கொண்டு யாத்திரை போகிறவர்களின் ஜே கோஷம்! மேடையிலே ராஜா பொம்மை! மேடைக்குக் கீழே திரை மறைவிலே நூலை விரலில் மாட்டிக் கொண்டு ஆட்டி வைக்கும் கலை நிபுணர்கள்!

அதேதான் இப்போது தமிழக அரசின் நிலை யென்பதால் ஆட்சி செய்வதாகவும் முதலமைச்சராக இருப்பதாகவும் காட்டிக் கொள்ள வேண்டியது மட்டுமே பொம்மைக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பாகும்! மற்றபடி இந்த மாநில நிர்வாகத்தில் ஒரு துரும்பு அசைவதாக இருந்தாலும், அது ஜெயலலிதாவின் ஆணைப்படிதான் நடந்து வருகிறது!

அதனால்தான் இப்போது நடப்பதே ஜெயலலிதாவின் ஆட்சிதான் என்று அறுதியிட்டுக் கூறி இந்தக் கடிதத்தை தொடங்கியிருக்கிறேன்.

கடந்த ஒன்பது மாதங்களில் செல்வி ஜெயலலிதா நேரடியாகவும் - மறைந்திருந்தும் நடத்துகிற அ.தி.மு.க. ஆட்சியில்; நாள் தவறினாலும் விபத்துகள் தவறுவதில்லை யென்பது போல 136 விபத்துகள் நடைபெற்றிருக்கின்றன. அவற்றில் பலியானோர் எண்ணிக்கை 354.

இந்த ஒன்பது மாதத்தில் கொலைகளின் கணக்கு மட்டும் 66. (இன்று ஒரு அரசு ஊழியர் கொலை உட்பட)

கொள்ளையும் திருட்டும் 97 நிகழ்வுகள்.

கற்பழிப்புக் கொடுமைகள் - 4

மோசடிச் சம்பவங்கள் - 4

கடத்தல் - 3

சாராய சாவு நிகழ்வுகள் - 4 இதில் பலியானோர் எண்ணிக்கை - 113

வெறும் எண்ணிக்கை மட்டுமல்ல, ஒவ்வொன்றுக்கும் சம்பவம் நடைபெற்ற இடம், நாள், பெயர்கள் உட்பட அனைத்தும் விரிவான அளவுக்கு விபரங்கள் சேகரிக்கப்பட்டு கைவசமிருக்கின்றன.

இவற்றுக்கு நேரடியாக ஆட்சியாளரைக் குற்றம் சாட்ட முனையவில்லை நான்!

இது போன்ற சம்பவங்கள் இனியும் தொடராமல் இருப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்தோ - நடந்தவை குறித்து என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டன என்பது குறித்தோ, கவலைப் படாமலிருக்க அரசுக்கு உரிமையுண்டு என எவரும் விவாதித்திட முடியாது!

மற்றவர் யாருடைய ஆட்சியைக் காட்டிலும் மங்களகரமாக நடக்கப் போகிற ஆட்சி இதுதான் என்றும் யாகங்கள் என்ன! க்ஷேத்திராடனங்கள் என்ன! ஓமங்கள் என்ன! உபயங்கள் என்ன! யானை பூனையென்று காணிக்கை உற்சவங்கள் என்ன! என்றெல்லாம் ஆரவாரித்து அம்மை ஆட்சியில் அமங்கலம்

தோன்றாது என்று குதியாய்க் குதித்தவர்கள், இந்த ஒன்பது மாத விபத்துக்கள், கொலைகள், சாராய சாவுகளுக்கு, என்ன சமாதானம் சொல்லப் போகிறார்கள்?

வைதீக மனப்பான்மை அடிப்படையில் பார்த்தாலும், இதனை மங்களகரமான, மகிழ்ச்சிகரமான ஆட்சியென்று எவர்தான் ஏற்றுக் கொள்ள இயலும்?

அன்புள்ள,

மு.க.

5-2-2002

2677. 16வது இடமாவது பாடம் புகட்டுமா?

உடன்பிறப்பே,

16ம் பெற்று பெரு வாழ்வு வாழ்க என்று வாழ்த்துவது 16 பேறுகளைப் பெற்று என்பதைத்தான் குறிக்கும் எனப் புலவர் புகல்வர்! அறிவாய் நீ!

16 வயதினிலே என ஒரு வெற்றிப் படம் கலைஞானி கமல்ஹாசன் நடித்து, இயக்குநர் சிகரம் தம்பி பாரதிராஜா இயக்கியதையும் கண்டு களித்திருப்பாய்!

என்றும் 16 வயது மார்க்கண்டேயனாக வாழ்க என வாழ்த்துவதையும் கேட்டுள்ளாய்!

16 கதையினிலே என்று என் சிறுகதைகளின் தொகுப்பு ஒன்றும் புத்தகமாக வெளிவந்துள்ளது படித்திருப்பாய்!

இப்படி 16க்குள்ள தனிச்சிறப்பு, தமிழ்நாட்டில் மகிழ்ந்து வரவேற்கப்பட்ட ஒன்று!

ஆனால் இன்று அந்த 16 என்பது நமது தமிழக முதலமைச்சரின் வரிசை எண்ணாகவன்றோ வாய்த்திருக்கிறது!

மார்க் நிறுவனத்துடன் இணைந்து இந்தியா டுடே நடத்தியுள்ள கருத்துக்கணிப்பு, நாடு முழுதும் பரவிடும் அளவுக்கு வெளியாகியுள்ளது. இந்தியாவில் உள்ள முதலமைச்சர்களின் வரிசையில் முதலிடத்தில் கர்நாடக முதல்வர் எஸ்.எம். கிருஷ்ணா என்றும்; 16வது இடத்தில் தமிழக முதல்வர் பன்னீர்செல்வம் என்றும் பட்டியலிடப் பட்டுள்ளது.

நேற்றைய கடிதத்தில் நான் குறிப்பிட்டுள்ளது போல, உண்மையான முதலமைச்சர் பன்னீர்செல்வமல்ல, ஜெயலலிதாதான் என்பதற்கேற்ப தூதரக அதிகாரிகள், துணைவேந்தர்கள், மாலை மரியாதை சந்திப்புகள் - போலீஸ் அணிவகுப்புகளின் ஆர்ப்பாட்டங்கள் - அனைத்துக்குமே இப்போது

எப்படி ஜெயலலிதா அவர்கள் உரிமை கொண்டாடுகிறாரோ, அதன்படி இந்த 16வது வரிசை எண்ணுக்கும் அவரே தான் பாத்தியப்பட்டவராகிறார். எனவே, பன்னீர் அவர்கள் இதுபற்றி நிருபர்கள் கேட்ட போது அது என்னை ஒன்றும் பாதிக்காது என்று பதில் அளித்திருப்பதற்குக் காரணமே, அது உண்மையான முதலமைச்சராக இருக்கிற ஜெயலலிதாவைத்தான் பாதிக்கும் என்பதை மறைமுகமாகச் சுட்டிக் காட்டுவதற்காகத்தான்!

எனவே, இரண்டொரு நாட்களுக்கு முன்பு உழவர் சந்தைகளை இந்த அரசு ஒடுக்கி ஒழிப்பது குறித்து கேட்கப்பட்ட கேள்விக்கு பன்னீர் அவர்கள் அளித்துள்ள பதிலும் ஜெயலலிதாவின் ஆணைப்படி அளிக்கப்பட்டது என்றே தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.

இதோ உழவர் சந்தையைப் பற்றி அவர் தந்துள்ள விளக்கம் வருமாறு:-

அரசின் சார்பாக ஏதாவது ஒரு திட்டம் தொடங்கப்படுமானால் அது வெற்றிகரமாக நடக்குமா என்று ஆய்வு செய்த பிறகே நடைமுறைப்படுத்த வேண்டும். உழவர் சந்தையைப் பொறுத்தமட்டில் அது முதலில் ஓரிரண்டு இடங்களில் ஆரம்பிக்கப்பட்ட போதே அது உழவர்களுக்கு பயன்படாமல் அந்தப் பகுதி வியாபாரிகளின் பிடியில் சிக்கிக் கொண்டு இருக்கிறது என்று ஆரம்பத்திலேயே அம்மா சுட்டிக் காட்டினார்கள். ஆனால் அதையும் மீறி கடந்த கால கருணாநிதி அரசு, அவர்கள் கொண்டு வந்த திட்டம் என்பதற்காகப் பல இடங்களில் திறந்தது. 100க்கு 99 உழவர் சந்தைகள் முழுக்க முழுக்க தோல்வியையே தழுவியது. அதில் உள்ளவர்கள் அனைவரும் வியாபாரிகள்தான். உழவர்கள் யாரும் கிடையாது. அது வெற்றிகரமாக நடைபெறுமா என்றும் ஆராயாமல் வெறும் விளம்பரத்துக்காக தொடங்கி கடந்த கால அரசு பெருமளவு நிதியை விரயமாக்கியுள்ளது.

முதலமைச்சர் பன்னீர்செல்வத்தின் இந்தக் குற்றச்சாட்டுகள் உண்மைதானா? உண்மையிலேயே இந்தத் திட்டம் வெற்றிகரமான திட்டம் இல்லையா?

14-11-1999 அன்றுதான் முதன்முதலாக இத்திட்டம் மதுரை மூதூரில் தொடங்கப்பட்டது. தொடங்கப்பட்ட நாளன்றே 4,500 கிலோ காய்கறிகள் 115 விவசாயிகள் மூலம் கொண்டு

வரப்பட்டு அவை அனைத்தும் பிற்பகல் 4 மணி அளவிலேயே விற்கப்பட்டு விட்டன. அந்தக் காய்கறிகளின் மொத்த மதிப்பு 36 ஆயிரம் ரூபாயாகும். 4000 பொது மக்கள் நேரடியாக வந்து அந்தக் காய்கறிகளை விலைக்கு வாங்கிச் சென்றார்கள். வியாபாரிகளுக்கு பயனளிக்கும் திட்டம் என்று அம்மா ஆரம்பத்திலேயே தெரிவித்ததாகவும் பன்னீர் சொல்லியிருக்கிறார். இந்தத் திட்டத்தைப் பற்றி நெல்லை விழாவிலே பேசும்போதே இதற்கு நான் பதில் அளித்திருக்கிறேன். அது வருமாறு :-

தாங்கள் விளைவித்த பொருட்களை இடைத் தரகர்கள் இல்லாமல் தாங்களே நுகர்வோருக்கு வழங்குகின்ற இந்த முறைதான் இந்தத் திட்டத்தின் சிறப்பு அம்சமாகும். இந்த அடிப்படை அம்சம் இல்லாத காரணத்தால் யாரோ எங்கேயோ விளைவித்து அதை இடையிலே உள்ள வியாபாரிகள் வாங்கி எந்தவிதமான உழைப்பும் இல்லாமல் வியர்வை சிந்தியவனுக்கு கிடைக்கவேண்டிய அனைத்து இலாபத்தையும் இடையிலே உள்ள தரகர்கள் பெற்று விவசாயி வேதனையும் விழிநீரும் வியர்வை சிந்தியதும்தான் மிச்சம் என்கிற ஆறுதல் பெருமூச்சும் கொண்டவனாக திரும்பிச் செல்வதும், நுகர்வோரும் அதிக விலை கொடுத்து அந்தப் பொருட்களை வாங்கக் கூடிய நிலை இருப்பதும் மாற்றப்பட வேண்டும் என்பதற்காகத்தான் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டு நேரடியாக விவசாயிகள் தாங்கள் விளைவித்த பொருளை உழவர் சந்தைக்குக் கொண்டு வந்து விற்கின்ற ஒரு முறையையும், அதை நேரடியாக பொதுமக்கள் சென்று வாங்குகிற முறையையும் உருவாக்கியிருக்கிறோம் என்று விளக்கமாகப் பேசியிருக்கிறேன். மேலும் இந்தத் திட்டத்திலே பேருந்துகளிலே காய்கறிகளை ஏற்றி வருவதற்கான லக்கேஜ் கட்டணம் கிடையாது. விவசாயிகள் உழவர் சந்தைகளிலே தங்கள் பொருட்களை வைத்து விற்பதற்கு வாடகை கிடையாது. தராசு எடைக் கற்களைக் கூட அரசே இலவசமாக வாங்கி வழங்கும். முதல் உழவர் சந்தை 14-11-1999 அன்று மதுரையிலே தொடங்கப்பட்டு 100வது உழவர் சந்தை 14-11-2000 அன்று காஞ்சிபுரம் மாவட்டம் பல்லவபுரத்திலே திறந்து வைக்கப்பட்டது. ஒரே ஆண்டில் 100 உழவர் சந்தைகள் திறந்து வைக்கப்பட்டது என்ற ஒன்றிலிருந்தே அந்தத் திட்டத்திற்கு எந்த அளவிற்கு வரவேற்பு இருந்ததைத் தெரிந்து கொள்ளலாம். அத்திட்டம் தோல்வியென்றால் மேலும் மேலும் உழவர் சந்தைகள் திறந்து வைக்கப்பட்டிருக்குமா?

100வது உழவர் சந்தை திறக்கப்பட்ட நாளன்று நடைபெற்ற விழாவிலே நான் பேசும்போது அதுவரை எந்த அளவிற்கு உழவர் சந்தைகள் மூலமாக காய்கறிகள் விற்கப்பட்டன என்பது பற்றியும் குறிப்பிட்டிருந்தேன். அந்தப் புள்ளி விவரம் வருமாறு:-

கடந்த ஓராண்டில் மட்டும் 99 உழவர் சந்தைகளின் மூலம் விற்கப்பட்ட காய்கறிகளின் அளவு 16 கோடியே 93 இலட்சத்து 36 ஆயிரத்து 963 கிலோ. இந்தக் காய்கறிகளின் மதிப்பு 112 கோடியே 85 இலட்சத்து 35 ஆயிரத்து 326 ரூபாய். உழவர் சந்தைகளின் மூலம் விவசாயிகள் தங்கள் காய்கறிகளை விற்றதன் காரணமாக அவர்களுக்கு ஏற்கெனவே கிடைத்த லாபத்தை விட எவ்வளவு அதிகமாக இலாபம் கிடைத்திருக்கிறது என்ற கணக்கைப் பார்த்த போது, 22 கோடியே 72 இலட்சம் ரூபாய் என்று புள்ளி விவரம் கூறுகிறது. அது போலவே அந்தக் காய்கறிகளை வாங்கிப் புசிக்கும் பொது மக்களுக்கு ஏற்கெனவே அவர்கள் வியாபாரிகளிடம் வாங்கியதை விட உழவர் சந்தைகள் மூலமாக வாங்கியதன் காரணமாக எவ்வளவு இலாபம் கிடைத்தது என்ற கணக்கைப் பார்த்த போது 34 கோடி ரூபாய் என்று தெரிய வந்தது. இந்தப் புள்ளி விவரங்களிலிருந்து உழவர் சந்தை திட்டம் எத்தனை உயர்வான வளரக் கூடிய திட்டம் என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

தேர்தலுக்கு முன்பு வரை அதாவது 8-4-2001 வரை (சுமார் ஒன்றரை ஆண்டுகளில்) விற்கப்பட்ட காய்கறிகளின் மதிப்பு 211 கோடியே 93 இலட்சத்து 86 ஆயிரம் ரூபாய் ஆகும். இதனால் பயனடைந்த விவசாயிகள் 25 லட்சத்து 5 ஆயிரத்து 469 பேர்களாகும். இவைகளை வாங்கிப் பயனடைந்தவர்களின் எண்ணிக்கை 8 கோடியே 36 லட்சத்து 9 ஆயிரத்து 26 பேராகும். இந்தப் புள்ளி விவரங்களைப் பார்க்கும்போது இது வெற்றிகரமான திட்டமா? தோல்வித் திட்டமா என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

ஆனால், அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும் வராததுமாக உழவர் சந்தைகளை மூடுவோம் என்று அறிவித்ததும், பின்னர் விவசாயிகளே அதை எதிர்த்துக் குரல் கொடுத்த பிறகு செயல்படாத உழவர் சந்தைகளை மட்டும் மூடுவோம் என்று மாற்றிக் கொண்டதோடு, செயல்பட்ட சந்தைகளையெல்லாம்

செயல்படாத சந்தைகளாக செயற்கையாக மாற்றுவதற்கான அனைத்து வழிகளிலும் இறங்கியுள்ளதைத் தமிழ்நாட்டு விவசாயிகள் நன்கறிவார்கள்.

உழவர் சந்தைகள் திட்டம் தொடங்கப்பட்ட பிறகு அதுபற்றி ஆய்வு செய்த வேளாண்மைப் பல்கலைக் கழக துணை வேந்தர் பேராசிரியர் கண்ணையன் அவர்கள் கூறும்போது வரும் நூற்றாண்டில் நுகர்வோர், விவசாயிகளுக்கான மகத்தான பரிசு உழவர் சந்தை திட்டம். இச்சந்தைகளில் உள்ள வசதிகள் விவசாய விற்பனையாளர்களைத் திருப்தி செய்வதாக உள்ளன. தரமான காய்கறிகள், நிர்ணயம் செய்யப்பட்ட விலை, சரியான எடை போன்றவை சந்தை வெற்றிகரமாக நடைபெற முக்கிய காரணங்களாக அமைந்துள்ளன என்றார். உழவர் சந்தை திட்டத்தைப் பற்றி 2-2-2000 தேதியிட்ட பிசினஸ் ஸ்டாண்டர்டு ஏடு, வேகமான முன்னேற்றப் பாதையில் தமிழகம் என்ற தலைப்பில் உழவர் சந்தை உட்பட பல்வேறு புதிய திட்டங்களுக்குத் தனது பாராட்டினைத் தெரிவித்திருந்தது.

ஆனால், பன்னீர் அவர்கள் திரைப்படத்தில் சில நடிகர்கள் உதடு அசைப்பது போல அசைக்கிறார். அவரது பாஷைப்படி அம்மா, பின்னணியில் இருந்து பேசுகிறார்.

16வது இடம் என்று ஆன பிறகாவது பாடம் பெற வேண்டாமா என்பதே நமது கேள்வி!

அன்புள்ள,

மு.க.

6-2-2002

2678. ஆட்சியை மாற்றுவதற்கல்ல; திருத்துவதற்கு!

உடன்பிறப்பே,

என்றைக்கு ஆண்டிப்பட்டி தொகுதியில் அ.தி.மு.க. சட்டப் பேரவை உறுப்பினர் பதவி விலகிக் கொண்டு செல்வி ஜெயலலிதாவுக்கு வழி விட்டிருப்பதாக அறிக்கை விடுமாறு ஆணையிடப்பட்டாரோ, அன்றைக்கே நிதிப் பற்றாக்குறை என்று புழுதி மாயம் செய்ததையெல்லாம் மறந்து விட்டு, பூனைக்குட்டி வெளியே வந்தது என்ற பழமொழிக்கொப்ப, அந்தத் தொகுதி மட்டுந்தான் தமிழ்நாடு என்ற அளவுக்கு திட்டங்கள் அறிவிக்கப்பட்டும், சில திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டும், சாலைகள் புதுப்பிக்கப்பட்டும், புதிதாக அமைக்கப்பட்டும் தேர்தல் விதிமுறைகளை தெரு வீதியில் தூக்கி வீசும் துணிவுடன் காரியங்கள் தொடங்கப்பட்டுவிட்டன.

ஏதோ, கடந்த கழக ஆட்சியில் அந்தத் தொகுதியின் அடிப்படை வசதிகள் கவனிக்கப்படாமல் இருந்ததைப் போலவும் - பிள்ளைகளுக்குக் கல்வி வசதிகள் செய்யப்படாமல் இருந்ததைப் போலவும், இவர்கள்தான் அவற்றைச் செய்து கொடுத்திருப்பதைப் போலவும், இனியும் விரிவாக செய்ய இருப்பதைப் போலவும் தேர்தல் நேரத்து தெருக்கூத்து நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

தம்பி வைகை சேகரை அறிமுகப்படுத்திய நமது அணியின் செயல்வீரர்கள் கூட்டத்தில் கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள் குறிப்பிட்டுள்ளதைப் போல தம்பி ஆசையன், சட்டப் பேரவை உறுப்பினராக இருந்த போது அந்தத் தொகுதிக்கு எத்தனை சாதனை புரிந்துள்ளார் என்பதை அத்தொகுதியில் வாழும் நன்றியுள்ள வாக்காளப் பெருமக்கள் எவரும் மறந்திருக்க மாட்டார்கள்.

ஒருவேளை அ.தி.மு.க.வினரின் அகட விகட சாமர்த்தியத்தினாலும், அதிகாரிகள் சிலரின் அடியேன் தாசன்

என்ற மனப்பான்மையினாலும் - அதிரடியாகச் சேர்க்கப்பட்ட போலி வாக்காளர்களும், அடுத்த தொகுதியிலிருந்து இந்தத் தொகுதி பட்டியலில் இணைத்துக் கொள்ளப்பட்ட இரட்டை வாக்காளர்களும் வேண்டுமானால் மறந்திருப்பார்கள்! அல்லது மறுத்துரைப்பார்கள்!

ஆண்டிப்பட்டி தொகுதியிருக்கும் தேனி மாவட்டத் திற்குத்தான் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் மாளிகை போலக் கட்டப்பட்டு அதனைத் திறந்து வைத்திட நான் வந்தேன். ஐந்தாண்டு காலம் 1996 முதல் நடைபெற்ற கழக ஆட்சியில் மாற்றுக் கட்சிக்காரர்களும் மேடைகளில் மனந்திறந்து பாராட்டுமளவுக்கு எத்தனையோ முறை தேனி மாவட்டத்திற்கு வந்திருக்கிறேன்.

தேனி மாவட்டம் கோம்பையில் 100 ஆண்டுக் காலக் கோரிக்கையான 18ஆம் கால்வாய்த் திட்டம் 26 கோடியே 52 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 1999ஆம் ஆண்டு தொடங்கி வைக்கப்பட்டதையும்,

தேனி மாவட்டத்தில் முழுமை பெறாமல் கிடப்பில் போடப்பட்டிருந்த சோத்துப்பாறை நீர்த் தேக்கத் திட்டத்தை முடியும் தருவாய்க்குக் கொண்டு வந்ததையும்,

தேனி மாவட்டத்தை ஒட்டியுள்ள மதுரை உசிலம்பட்டி யில் 58 கிராமங்களுக்கு பாசன வசதி வழங்கும் திட்டத்தைத் தொடங்கியதையும்,

அந்தப் பகுதி மக்கள் அறியாதவர்கள் அல்லர்! அறிந்தும், அனுபவத்தில் உணர்ந்திருந்தும் என்ன பயன்?

தேர்தல் நேரத்தில் திடுமெனக் கூறப்படும் பொய்கள் மூலம் அனுதாபத்தைத் தமிழ் நாட்டு மக்களிடம் எளிதாகப் பெற்றுவிட முடியுமென எண்ணுகிறவர்கள் தானே வெற்றி பெற்று விட முடிகிறது!

தேர்தல் விதிமுறை - சட்டம் இவையனைத்துமே தெளிவாகச் சொல்லுகின்றன. ஒருவர் இரண்டு தொகுதிகளுக்கு மேல் வேட்பு மனு தாக்கல் செய்தால், எல்லா வேட்புமனுக்களுமே செல்லாமல் போய்விடுமென்று!

கடந்த தேர்தலில் செல்வி ஜெயலலிதாவுக்கு இந்தத் தேர்தல் விதிமுறை நன்றாகத் தெரிந்திருந்தும், நம் மீது பழி

கூறுவதற்காகவே, திட்டமிட்டு, வேண்டுமென்றே நான்கு இடங்களில் வேட்பு மனு தாக்கல் செய்து, அந்தந்த மாவட்ட அதிகாரிகளும் அவை செல்லாது என்று அறிவித்ததும், அந்த உண்மையை அந்தகார இருளில் மறைத்து விட்டு, அழுது, புலம்பி - அய்யோ! இந்தக் கருணாநிதி, என்னுடைய நாலு வேட்பு மனுவையும் தள்ளுபடி செய்யச் சொல்லி, என்னைத் தோ்தலில் நிற்க முடியாமல் தடுத்து விட்டாரே என்று இந்த அம்மையார் அருவியெனக் கண்ணீர் கொட்டியது கண்டு, வாக்காளப் பெருமக்கள் வகையாக ஏமாந்து போய் அவரது கட்சிக்கு வெற்றி வாய்ப்பை அளித்தனரே அல்லாமல் வேறென்ன 1991 முதல் 1996 வரையிலான சாதனைகளைப் பட்டியலிட்டா அவற்றுக் காகத் தமது வாக்குரிமையை வாரி வழங்கினர்?

இல்லை! இல்லவே இல்லை! இன்றைக்கு இந்த வகையில் சிம்மாசனத்தைப் பிடித்தவர்கள், ஆட்சிக்கு வந்த ஒன்பது மாத காலத்திலேயே விபத்துக்களிலும் - கொலை நிகழ்வுகளிலும் - எவ்வளவு நூற்றுக்கணக்கான உயிர்கள் பலி கொள்ளப்படுகிற ஆட்சியை மங்களகரமாக நடத்தியுள்ளனர் என்று நேற்றைய தினம் என் கடிதத்தில் அந்த எண்ணிக்கை கணக்கை எழுதி, அதை உன் போன்றோர் படிப்பதற்குள்ளாக பத்திரிகைகளைப் பார்த்தால் மேலும் பத்துப் பதினைந்து உயிர்கள் இரண்டே நாட்களில் பலியாகியுள்ளதையும், வழிப்பறி, கொள்ளை, பட்டப் பகலிலேயே, மக்கள் நடமாட்டமுள்ள வீதிகளிலேயே நடந்துள்ளதையும் கண்டு பதைத்திட வேண்டியுள்ளது.

எனவே, ஆண்டிப்பட்டி தோ்தலில் இந்த ஆட்சியை மாற்றிப் புது ஆட்சி அமைத்திட அல்ல இருக்கிற ஆட்சியாளருக்கு, வாக்களித்த மக்கள் எவ்வளவு வருத்தத்தில் இருக்கிறார்கள் என்பதை உணர்த்துவதற்காக!

ஆட்சியாளர் செல்லும் வழி, சரியான வழியல்ல என்று சுட்டிக்காட்டி நல்வழி நடக்கச் செய்வதற்காக!

மக்கள் விரோத நடவடிக்கைகளை விடுத்து, இந்த மாநிலத்தில் மக்களாட்சியின் மாண்பு கெடாமல் பாதுகாப்பதற்காக! ஓர் எச்சரிக்கைப் பலகை தொங்க விடுவது போலத்தான் வைகை சேகருக்கு வெற்றியினைத் தர வேண்டுமென்று தொகுதி மக்களைத் தொழுது வணங்கிக் கேட்டுக் கொள்கிறோம்!

புதிய திருப்பம் காண்பதற்கும்
புண்ணியர் வேடம் கலைப்பதற்கும்
பொல்லாச் செயல்கள் வீழ்வதற்கும்
போர்க்கோலம் பூண்டுள்ளோம்!
அதில் ஒரு கட்டமே இந்தத் தேர்தல்!
அள்ளிப் பொழிவார் பணத் தோட்டா!
கருப்புப் பணத்தால் கடலையே மூடுவர்
கண்மணி நீயோ கவலைப்படாமல்,
கழகக் கொடியைக் கையினில் ஏந்து!
உதய சூரியனை உடையினில் பொறித்திடு!
வீதிக்கு வீதி சென்றிடுக; வீட்டுக்கு வீடு வாக்குத்
திரட்டிடுக!
புண்ணான தமிழகத்தின் துயரம் போக்கி
மண்ணாளும் மமதையாளர் கொடுமை நீக்கி
புதிய நிலை உருவாக்கப் புயலே! எழுக!
புலிப் போத்தாய்ச் செயல்பட உடனே எழுக!

அன்புள்ள,

மு.க.

7-2-2002

2679. வந்திடவுமில்லை; என்னை வென்றிடவுமில்லை!

உடன்பிறப்பே,

அயோத்தி இராமர் கோயில் பிரச்சினையில் தி.மு.க.வின் நிலை என்ன என்பதை 1992ஆம் ஆண்டிலேயே தெளிவுபடுத்தியிருக்கிறோம்.

பாபர் மசூதி இடிக்கப்படுவதற்கு முன்பே, அப்படி ஒரு நிகழ்ச்சி நடைபெறாமல் தடுத்திட வேண்டுமென்று கூட்டங்கள் வாயிலாகவும், மாநாடுகளில் நிறைவேற்றிய தீர்மானங்கள் மூலமாகவும், கடைசிக் கட்டமாக சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் தி.மு.க. முன்னின்று நடத்திய அனைத்துக் கட்சிக் கூட்டத்தின் சார்பாகவும் திரு.நரசிம்மராவ் தலைமையில் இருந்த மத்திய காங்கிரஸ் ஆட்சியை வலியுறுத்தியிருக்கிறோம்.

எதையும் பொருட்படுத்தாமல் நரசிம்மராவ் ஆட்சியின் இராணுவம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த நிலையில், பாபர் மசூதி இடிக்கப்பட்ட கொடுமை நிகழ்ந்துவிட்டபோது, தி.மு.க. தனது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறது.

திரு.வாஜ்பய் அவர்கள் தலைமையில் அரசியல் ரீதியாக அமைந்த தேசிய ஜனநாயகக் கூட்டணியில் தி.மு.க. இடம் பெற்றபோது, அயோத்தி இராமர் கோயில் - பாபர் மசூதி பிரச்சினையில் உச்சநீதிமன்ற தீர்ப்புக்குக் கட்டுப்படுவோம் என்று அவர் வெளியிட்ட உறுதிமொழியை நாடாளுமன்றத்திலும் திட்டவட்டமாகத் தெரிவித்து, இன்றைக்கும் அதே நிலையில் உறுதியாக இருப்பதை நாடு நன்றாகவே உணர்ந்திருக்கிறது.

மீண்டும் இப்போது விசுவ இந்து பரிஷத் போன்ற இயக்கங்கள், திரு.அசோக் சிங்கால் போன்ற தலைவர்கள், இந்தப் பிரச்சினையைக் கிளப்பி, காலக்கெடு விதித்துக் குரல் எழுப்பிய

போதிலும் பிரதமர் வாஜ்பாய் அவர்கள் முதலில் காட்டிய அதே நிதானத்துடன் அவர்களுக்கு பதில் அளித்துள்ளார்.

அதையொட்டித்தான் என்னைச் செய்தியாளர்கள் கேட்டபோதுகூட,

தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆரம்பிக்கப்பட்ட போது ராம ஜென்ம பூமி பிரச்சினையிலே என்ன முடிவு எடுக்கப்பட்டதோ, அந்த முடிவிலிருந்து மாற மாட்டார்கள் என்று 27-1-2002 அன்று கூறினேன். மீண்டும் 2-2-2002 அன்று அதே பிரச்சினை குறித்து செய்தியாளர்கள் அயோத்தி பிரச்சினையிலே தெலுங்கு தேசம் மட்டும்தான் எதிர்க்கிறது என்று சொல்கிறார்கள். ஆனால் நீங்கள் வி.எச்.பி. தலைவர், அசோக் சிங்கால் சென்னை வந்தபோதுகூட சந்திக்கவில்லையே? என்று கேட்டபோது, வி.எச்.பி.யின் தலைவர் அதைப் பற்றி பேசுவதற்காக வந்தார். என்னை நேரம் கேட்டபோது நான் பார்க்கவில்லை. பார்க்க இயலாது என்று கூறி விட்டேன். அயோத்தி ராமர் கோயில் பிரச்சினையானாலும் சரி, மொழிப் பிரச்சினையானாலும் சரி, தி.மு. கழகத்திற்கு என்று ஒரு கொள்கை உண்டு. அதில் எப்போதும் உறுதியாக இருப்போம் என்று பதில் அளித்திருக்கிறேன். இந்த பதில் எல்லா ஏடுகளிலும் வெளிவந்துள்ளது. தொலைக்காட்சிச் செய்திகளிலும் சொல்லப்பட்டுள்ளது.

நிலைமை இவ்வாறிருக்க, இன்று செய்தியேடுகளில் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு விதமாக இந்தச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இரண்டு நாட்களுக்கு முன்பு மீண்டும் சென்னைக்கு வந்த திரு. அசோக் சிங்கால் தி.மு.க. தலைவரைச் சந்தித்ததாகவும், அவருக்கு நண்பர் மதன் எழுதிய வந்தார்கள்! வென்றார்கள்! என்ற புத்தகத்தை தி.மு.க. தலைவர் கொடுத்ததாகவும் ஒரு செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

அசோக் சிங்கால் அவர்களையே நான் சந்திக்காத போது, வந்தார்கள்! வென்றார்கள்! என்ற நூலை நான் எப்படி அவருக்கு வழங்கியிருக்க முடியும்?

இடையே அந்த நூலைப்பற்றி ஒரு விளக்கம் தந்து விடுகிறேன்.

முஸ்லீம் மன்னர்கள் இந்தியாவுக்குள் வந்தது குறித்தும் அவர்கள் ராஜ்யங்களை நிறுவியது பற்றியும் மதனின் அந்த நூல் விவரிக்கிறது.

பெரும்பாலும் முஸ்லீம் மன்னர்கள், அவர்களுக்குள்ளேயே பெரும் யுத்தங்கள் நடத்தி இஸ்லாமிய வீரர்களின் இரத்தமே ஆறாகப் பெருக்கெடுத்தோடிய பல வரலாற்றுச் செய்திகள் அந்த நூலில் காணப்படுகின்றன. இந்து மன்னர்கள் முஸ்லீம் மன்னர்கள் என்றில்லாமல் முஸ்லீம் மன்னர்களே ஒருவருக்கொருவர் மோதிக்கொண்ட போர்கள்தான் அதிகம் எனலாம்.

இதோ ஒரு நிகழ்ச்சி, தேதிக் குறிப்புடன்:- கங்கை நதிக் கரையோரமாக மிதந்து வந்து நின்ற ஒரு அழகிய பெரிய படகிலிருந்து உற்சாகக் குரலுடன் இறங்கினார் சுல்தான் ஜலாலுதீன் கில்ஜி. தேதி: ஜூலை 19, 1926.

விதி மேலும் விளையாடியது....

மருமகன், கலவரப்படப் போகிறான் என்று நெகிழ்ச்சியுடன் நினைத்த அப்பாவி சுல்தான் ஜலாலுதீன், தன்னுடன் படை வீரர்களைக்கூட அழைத்துச் செல்ல வில்லை. நெருங்கிய ஆலோசகர்கள், சில அமைச்சர்கள் மட்டுமே கூட இருந்தார்கள். அவர்களையும் படகிலேயே இருக்கச் சொல்லிவிட்டு இரு கைகளையும் நீட்டியவாறு அலாவுதீன்! என்று சொல்லிக்கொண்டே முன்னேறினார், அந்த எண்பத்திரண்டு வயதான சுல்தான்!

கூடாரத்திலிருந்து வெளியே வந்து அவரை எதிர்கொண்ட அலாவுதீன், சுல்தானை நெருங்கியவுடன் உணர்ச்சி கரமாகக் குனிந்து அவர் பாதங்களைத் தொட்டு வணங்கி....ஓரக் கண்ணால் தன் தளபதிகளைப் பார்த்துத் தலையசைத்தார். மன்னரும் மிகுந்த அன்புடன் குனிந்து அலாவுதீனின் தோளைத் தொட்டுத் தூக்க, முகமது பின் சலீம் என்னும் அலாவுதீனின் மெய்க் காவலன் பின்னாலிருந்து வாளை உயர்த்தி சுல்தான் முதுகில் பாய்ச்சினான்!

எனவே இஸ்லாமியருக்கு எதிராகவோ, இந்துக்களுக்கு எதிராகவோ அல்லது இருவரிடையே மோதுதலை ஏற்படுத்தத் தூண்டும் வகையிலோ எழுதப்பட்ட நூல் அல்ல அது!

இருப்பினும் அந்த நூலை நான் அசோக் சிங்காலிடம் கொடுக்கவில்லை. அப்படிக் கொடுத்ததாக ஆங்கில இதழ்

(இந்தியன் எக்ஸ்பிரஸ்) ஒன்றில் வந்த செய்தி தவறானது. அவரையே நான் சந்திக்காத போது நூல் வழங்கல் எப்படி நடைபெற்றிருக்க முடியும்?

அசோக் சிங்காலே சொன்னதாக சில தமிழ் தினசரிகளில் ஒரு செய்தி!

நான் முதலில் ஜெயலலிதாவை சந்தித்ததால்தான் கருணாநிதி என்னைச் சந்திக்க மறுத்து விட்டார்.

இப்படி திரு. சிங்கால் சொல்லியிருந்தால்; அது மிகவும் வருந்தத்தக்கது!

அவ்வளவு நாகரீகம் தெரியாத பண்பாடற்ற அரசியல் வாதியல்ல நான்!

எத்தனையோ தலைவர்கள், செல்வி ஜெயலலிதாவையும் சந்தித்திருக்கிறார்கள். என்னையும் சந்தித்திருக்கிறார்கள் - அப்போதெல்லாம் இதுபோன்ற காரணத்தைச் சொல்லாமல் இப்போது மட்டும் சொன்னேன் என்பது அகில இந்திய அளவில் பிரபலமான ஒரு தலைவருக்கு அழகல்ல!

அதாவது, கருணாநிதிக்கு இராமர் கோயில் கட்டுவதில் பிரச்சினையில்லை. ஜெயலலிதாவை சந்தித்ததில்தான் பிரச்சினை என்று அசோக் சிங்கால், தனது கருத்துக்கு ஆதரவாக என்னையும் இழுத்து வலு சேர்க்க முனைகிறார்.

எனவே உடன்பிறப்பே,

அயோத்தி பிரச்சினைக்காக
அசோக் சிங்கால் சந்திப்பை
நான் விரும்பவுமில்லை -
ஆகையால் அவர் வந்திடவுமில்லை -
என்னை வென்றிடவுமில்லை!
அதனால் வந்தார்கள் வென்றார்கள்
என்ற நூலை அவருக்கு
கொடுத்திடும் வாய்ப்புமில்லை!

அன்புள்ள,

மு.க.

8-2-2002

2680. மன வேதனையை இந்த மடல் மூலம் அறிக!

உடன்பிறப்பே,

ஆண்டிப்பட்டி இடைத் தேர்தலில் நான் திருவோடு ஏந்தி நிற்பதாக ஒரு வார இதழில் வந்துள்ள கேலிச் சித்திரத்தையும் இணைத்து இந்தக் கடிதம் உனக்கு எழுதுகிறேன்.

கோடிக்கணக்கில் அரசுத் திட்டங்களை அறிவித்தும் தேர்தல் விதிமுறைகளை எட்டி உதைத்து விட்டு புதிய பணிகளை நிறைவேற்றிக்கொண்டும் பணத்தைத் தண்ணீராக வாரி இறைத்துக்கொண்டு, வாக்காளர்களை விலை பேச வரிந்து கட்டிக்கொண்டு அலைந்து திரியும் அ.தி.மு.க. வின் ஐஸ்வர்யச் சீமான்களின் முன்னால் நாம் திருவோடேந்திகளாகத்தான் காட்சியளிக்கிறோம் என்பது வெறும் கற்பனை அல்ல!

உண்மை! முற்றிலும் உண்மை! ஆனால் இந்த உண்மையை உணர்ந்தும்கூட ஏதோ நம்மாலான உதவியை சிறு நிதி வழங்கியோ, அல்லது பெரும் உழைப்பை நல்கியோ ஆண்டிப்பட்டியில் கழக வேட்பாளர் ஏழைத் தொண்டன் வைகை. சேகர் வெற்றி பெறத் துணை நிற்போம் என்ற முனைப்பு, ஆட்சி அதிகாரத்தையும் பதவிகளையும் அனுபவித்த கழகத்தினர் ஒரு சிலருக்கு மட்டுமே ஏற்பட்டிருப்பதையும் - சட்டப்பேரவை உறுப்பினர்களாக, பாராளுமன்ற உறுப்பினர்களாக, அமைச்சர்களாக, உள்ளாட்சி மன்றங்கள், நகராட்சி, மாநகராட்சி மன்றங்களில் பொறுப்பு வகித்தவர்களாக - இப்போதும் வகிப்பவர்களாக - அவர்கள் முன்னாள் என்றிருந்தாலும் இந்நாள் என்றிருந்தாலும் தாங்கள் அந்தப் பொறுப்பில் அமர்ந்திட எத்தனை கழகத் தோழர்கள் ரத்தம் சிந்தினர் - வியர்வை கொட்டினர் - தலைமை எப்படி அலையாய் அலைந்து, திருவோடு ஏந்தாத குறையாக நிதிப் பிச்சை எடுத்துப் பொருள் சேர்த்து, தமக்காகத் தவங்கிடந்து கொடுத்தது என்ற கடந்த காலத்தை மறந்து விட்டுப் பலர் இருந்த இடத்திலிருந்தே

எப்படி யிருக்கிறது ஆண்டிப்பட்டி? என்று குசலம் விசாரிப்பது மட்டுமே, கழகத்தின் மீது தாங்கள் கொண்டுள்ள அக்கறையெனக் காட்டிக்கொள்வதும், ஏதோ எங்க ஆத்துக்காரரும் கச்சேரிக்குப் போனார் என்பது போல தொகுதியின் பக்கம் ஸ்பெஷல் விசிட் செய்வதும் என் செவிக்கு எட்டாத செய்திகள் அல்ல!

ஆளுங்கட்சிக்காரர்கள், ஆள், அம்பு, அதிகார வர்க்கம் இவற்றுடன் ஆண்டிப்பட்டிக்கு கனகாபிஷேகம் செய்து கொண்டிருக்கும் நேரத்தில், நமது தேர்தல் பணிக் குழுவினர் நாங்கள் மாசற்றவர்! எனினும் கையில் காசற்றவர் என்ற பல்லவியை யன்றோ பாடிக்கொண்டிருக்கிறார்கள்.

தொலைபேசி மணி அடித்தால் தூக்கி வாரிப் போடுகிறது. எங்கிருந்து பேசுகிறார்களோ? யார் பேசுகிறார்களோ? பணம் எதுவும் கேட்பார்களோ? என்ற பதைப்புடனும், பதற்றத்துடனும் தான் பேசத் தொடங்குகிறேன்!

எதிர்பார்த்தபடிதான்! ஏதாவது கொஞ்சம் காசு அனுப்ப முடியுமா? என்ற கெஞ்சல்!

எல்லாம் நன்றாகத்தானிருக்கிறது, தேர்தல் ஆணையம் நிர்ணயித்துள்ள வரையறைக்குள் செலவழிக்கக் கூட வழியில்லை! வகையில்லை!

இப்படி ஏக்கக் குரல் ஒலிக்கிறது ஆண்டிப்பட்டியிலிருந்து வரும் தொலைபேசிகளில்!

ஏனய்யா! அந்த எம்.பி. வந்தாரா? இந்த எம்.எல்.ஏ. வந்தாரா? வர வில்லையா? வராவிடினும் ஏதாவது நிதி தர வேண்டும் என்ற நினைப்பு கூட அவர்களுக்கு வரவில்லையா? . . . . . இவர்களுக்கு கட்சி மட்டும்தான் கடமைப்பட்டிருக்க வேண்டுமா?

. . . . . .

இவர்கள், தங்கள் கடமையை கருதியும் பார்க்க மாட்டார்களா?

. . . . . .

இவர்களை உயர்ந்த இடத்தில் உட்கார வைக்க ஓடியாடி உயிரையும் கொடுத்து உழைத்திட்ட ஓய்வறியா என் உடன் பிறப்புக்களுக்கு மட்டுந்தான் தலையில் எழுதியிருக்கிறதா?

. . . . . .

இடையிடையே புள்ளிகள் வைக்கப்பட்டுள்ள தெல்லாம் தொலைபேசியின் மறு முனையில் மௌனம் தான் பதில் என்பதைக் குறிப்பிடுபவை ஆகும்!

நமக்குழைக்க வேண்டும், நம்மைப் பதவியில் அமர்த்த வேண்டும் என்று கழகத்தின் தலையில் எழுதியிருக்கிறது. நாம் அதை அனுபவித்தால் மட்டும் போது மென்று நம் தலையில் எழுதியிருக்கிறது என நினைத்திருப்போர் ஒரு புறம்!

அவர்கள் என் வேதனையை இம்மடல் வாயிலாக அறிந்த பிறகாவது, தங்களை ஒரு முறை திரும்பிப் பார்த்துக்கொண்டு - தி.மு.க. வேட்பாளர் வெற்றிக்கு உழைத்திடத் தம்மால் ஆனதைச் செய்திட முனையட்டும்!

இப்போது களத்தில் நின்று கடமையாற்றிடும் கழக முன்னோடிகள், உடன்பிறப்புக் கண்மணிகள் அனைவருக்கும் என் மனமார்ந்த பாராட்டுகள்!

தடைக்கற்கள் உண்டெனினும் தடந்தோள் உண்டெனச் சிரிப்போம் என்ற புரட்சிக் கவிஞரின் கவிதை வரிகளும்,

தம்பியுடையான் படைக்கஞ்சான்! இப்படை தோற்கின் எப்படை வெல்லும்?

என்ற அறிஞர் அண்ணாவின் வீர மொழியும்,

நமக்கு அழியாச் செல்வமாக - ஆற்றல் வழங்கும் அற்புத ஒளடதமாக இருக்கும்வரை, நமக்கே வெற்றி! நமக்கே வெற்றி! எனப் பீடுநடை போடுவோம்!

அன்புள்ள,

மு.க.

9-2-2002

2681. ஏறுது ஏறுது விலைவாசி!
ஏமாறாமல் நீ யோசி!

உடன்பிறப்பே,

ஆடவே தெரியாமல் நாட்டிய மேதை என்ற பட்டம் மட்டும் பெற்று விட்டவர், ‘‘ஆடுகிற மேடை கோணல் என்று குற்றம் சாட்டியது போல், நாலாயிரம் கோடி ரூபாய் அதிக வருமானம் வரக் கூடிய அளவுக்கு பஸ் கட்டணம், மின் கட்டணம் போன்றவைகளை உயர்த்தியும், வரிகளைப் புதிதாக விதித்தும், ஏற்கெனவே இருந்த வரிகளை அதிகப்படுத்தியும் வெளியிட்ட மினி பட்ஜெட் மூலம் தொழிலாளர்கள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், விவசாயிகள் ஆகிய சகல பிரிவு மக்களின் விரோத அரசாக ஆகிவிட்ட அ.தி.மு.க. அரசு, தி.மு.க. ஆட்சி மீது பழிபோடுவது மட்டுமல்லாமல், தி.மு.க. ஆட்சியென்றாலே விலைவாசி ஏறி விடும் என்ற ஒரு பல்லவியைப் பாடிக்கொண்டேயிருக்கிற தென்பதை நீயும் அறிவாய். இந்த நாடும் நன்கறியும்!’’

இதோ, தி.மு.க. ஆட்சியின் விலைவாசிக்கும் அ.தி.மு.க. ஆட்சியின் விலைவாசிக்குமான ஒரு ஒப்பீட்டை கவனமாகப் பார்த்து, நடுத்தர, சாதாரண, சாமான்ய மக்களுக்கு விளக்கிடும் கடமையைச் செய்திடு!

விலைவாசி குறித்து நான் இக்கடிதத்தில் இணைத்துள்ள பட்டியலைப் பார்த்தால் - அ.தி.மு.க. ஆட்சியில்தான் விலைவாசி அதிகமென்பதையும்; தி.மு.க. ஆட்சியில் விலைவாசி குறைந்து, மீண்டும் அ.தி.மு.க. ஆட்சியில் விலைவாசி என்ற வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிக்கொள்கிறது என்பதையும் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடியும்.

1996 மார்ச் 30 அன்று ஜெயலலிதா ஆட்சியில் ஒரு கிலோ மஞ்சள் விலை ரூபாய் 46 - அதே மஞ்சள் ஒரு கிலோ விலை தி.மு.க. ஆட்சியில் 2001 மே 14ஆம் தேதியன்று ரூபாய் 37. ஆனால் அ.தி.மு.க. ஆட்சியில்

2002 பிப்ரவரி 5-ந் தேதி அந்த மஞ்சளின் விலை 1 கிலோ ரூபாய் 40.

பட்டியலை முழுதும் படித்து, பட்டிக்காடு முதல் பட்டினக்கரை வரையில் தெருமுனைப் பிரச்சாரத்தின் வாயிலாகவும், துண்டு அறிக்கை வாயிலாகவும் மக்களை விழிப்பு கொள்ளச் செய்திடு!

துவரம் பருப்பு (நம்பர் 1) ஜெயலலிதா ஆட்சியில் கிலோ ரூபாய் 36. தி.மு.க. ஆட்சியில் கிலோ ரூபாய் 29. மீண்டும் இப்போது ஜெயலலிதா ஆட்சியில் கிலோ ரூபாய் 32.

துவரம் பருப்பு (நம்பர் 2) ஜெயலலிதா ஆட்சியில் கிலோ ரூபாய் 28. தி.மு.க. ஆட்சியில் கிலோ ரூபாய் 22. மீண்டும் இப்போது ஜெயலலிதா ஆட்சியில் கிலோ ரூபாய் 30.

கடலைப் பருப்பு ஜெயலலிதா ஆட்சியில் கிலோ ரூபாய் 26. தி.மு.க. ஆட்சியில் கிலோ ரூபாய் 24. மீண்டும் இப்போது ஜெயலலிதா ஆட்சியில் கிலோ ரூபாய் 30.

உளுத்தம்பருப்பு (நம்பர் 1) ஜெயலலிதா ஆட்சியில் கிலோ ரூபாய் 36. தி.மு.க. ஆட்சியில் கிலோ ரூபாய் 30. மீண்டும் இப்போது ஜெயலலிதா ஆட்சியில் கிலோ ரூபாய் 34.

உளுத்தம்பருப்பு (நம்பர் 2) ஜெயலலிதா ஆட்சியில் கிலோ ரூபாய் 33. தி.மு.க. ஆட்சியில் கிலோ ரூபாய் 26. மீண்டும் இப்போது ஜெயலலிதா ஆட்சியில் கிலோ ரூபாய் 32.

நல்லெண்ணெய் ஜெயலலிதா ஆட்சியில் கிலோ ரூபாய் 58. தி.மு.க. ஆட்சியில் கிலோ ரூபாய் 45. மீண்டும் இப்போது ஜெயலலிதா ஆட்சியில் கிலோ ரூபாய் 52.

ரேடியோ ஆயில் ஜெயலலிதா ஆட்சியில் கிலோ ரூபாய் 48. தி.மு.க. ஆட்சியில் கிலோ ரூபாய் 40. மீண்டும் இப்போது ஜெயலலிதா ஆட்சியில் கிலோ ரூபாய் 51.

கடலெண்ணெய் ஜெயலலிதா ஆட்சியில் கிலோ ரூபாய் 43. தி.மு.க. ஆட்சியில் கிலோ ரூபாய் 36. மீண்டும் இப்போது ஜெயலலிதா ஆட்சியில் கிலோ ரூபாய் 44.

பாமாயில் ஜெயலலிதா ஆட்சியில் கிலோ ரூபாய் 32. தி.மு.க. ஆட்சியில் கிலோ ரூபாய் 21. மீண்டும் இப்போது ஜெயலலிதா ஆட்சியில் கிலோ ரூபாய் 35.

தேங்காயெண்ணெய் ஜெயலலிதா ஆட்சியில் கிலோ ரூபாய் 60. தி.மு.க. ஆட்சியில் கிலோ ரூபாய் 48. மீண்டும் இப்போது ஜெயலலிதா ஆட்சியில் கிலோ ரூபாய் 60.

பூண்டு ஜெயலலிதா ஆட்சியில் கிலோ ரூபாய் 43. தி.மு.க. ஆட்சியில் கிலோ ரூபாய் 28. மீண்டும் இப்போது ஜெயலலிதா ஆட்சியில் கிலோ ரூபாய் 55.

சீயக்காய் ஜெயலலிதா ஆட்சியில் கிலோ ரூபாய் 34. தி.மு.க. ஆட்சியில் கிலோ ரூபாய் 22.50. மீண்டும் இப்போது ஜெயலலிதா ஆட்சியில் கிலோ ரூபாய் 40.

மிளகாய் (நம்பர் 1) ஜெயலலிதா ஆட்சியில் கிலோ ரூபாய் 55. தி.மு.க. ஆட்சியில் கிலோ ரூபாய் 30. மீண்டும் இப்போது ஜெயலலிதா ஆட்சியில் கிலோ ரூபாய் 50.

மிளகாய் (நம்பர் 2) ஜெயலலிதா ஆட்சியில் கிலோ ரூபாய் 50. தி.மு.க. ஆட்சியில் கிலோ ரூபாய் 32. மீண்டும் இப்போது ஜெயலலிதா ஆட்சியில் கிலோ ரூபாய் 48.

அரிசி பொன்னி (நம்பர் 1) ஜெயலலிதா ஆட்சியில் கிலோ ரூபாய் 19. தி.மு.க. ஆட்சியில் கிலோ ரூபாய் 15. மீண்டும் இப்போது ஜெயலலிதா ஆட்சியில் கிலோ ரூபாய் 21.

அரிசி பொன்னி (நம்பர் 2) ஜெயலலிதா ஆட்சியில் கிலோ ரூபாய் 17. தி.மு.க. ஆட்சியில் கிலோ ரூபாய் 13. மீண்டும் இப்போது ஜெயலலிதா ஆட்சியில் கிலோ ரூபாய் 18.

அரிசி பொன்மணி (இட்லி அரிசி) ஜெயலலிதா ஆட்சியில் கிலோ ரூபாய் 10.50. தி.மு.க. ஆட்சியில் கிலோ ரூபாய் 9. மீண்டும் இப்போது ஜெயலலிதா ஆட்சியில் கிலோ ரூபாய் 12.

அரிசி சிறுமணி ஜெயலலிதா ஆட்சியில் கிலோ ரூபாய் 12.50. தி.மு.க. ஆட்சியில் கிலோ ரூபாய் 10. மீண்டும் இப்போது ஜெயலலிதா ஆட்சியில் கிலோ ரூபாய் 13.

இந்த விலைவாசி ஒப்பீட்டுப் பட்டியலைக் காணும் மக்களை ஏமாற்றுவதற்கு, அவர்களின் வாக்கு களையே விலை கொடுத்து வாங்கி விடலாம் என்று திட்டமிட்டுக்கொண்டிருக்கிறார்கள் ஆளுங்கட்சியினர்!

ஒருவேளை யாராவது, நீட்டப்படும் நோட்டுக்கு தலையாட்டித் தடுமாறிவிட்டால் அதன் விளைவு என்ன ஆகும் தெரியுமா?

அவர்கள் கை நீட்டி வாங்குகிற அந்தப் பணம் இன்னும் சுமார் ஐந்தாண்டுகளுக்கு அவர்கள் வாங்கப் போகிற பொருள்களுக்கு அதிகமாகக் கொடுக்கப் போகிற அந்தப் பணத்துடன் கணக்கிட்டு, கூட்டிக் கழித்துப் பார்த்தால், அதுவே பெருந்தொகையாக இருக்கும் என்பதை மறந்து விடக்கூடாது.

எனவே உடன்பிறப்பே, அன்னை, தந்தை, அக்காள், தங்கை, அண்ணன், தம்பியென நீ கருதுகிற அனைவரையும் அணுகி; ''ஏறுது! ஏறுது! விலைவாசி! ஏமாந்து போகாமல் நீ யோசி! என எச்சரித்திடத் தவறாதே!''

அன்புள்ள,

மு.க.

10-2-2002

குறிப்பு:(ஆர்வமுள்ளவர்கள் இதனைத் துண்டு அறிக்கையாக அச்சிட்டு, தங்கள் பகுதிகளில் வழங்கலாம்)

2682.அண்ணல் வகுத்த வழி அயராதுழைத்த சிங்கம்!

கலையுலகில் நான் அடியெடுத்து வைத்த காலத்தில் சேலத்திலிருந்து என்னுடன் சேர்ந்து நட்பு வளர்த்த நண்பரும் ஒரே நிலைப்பாட்டில் உறுதிகொண்டவரும் எழுத்தாற்றல் மிக்கவருமான திரு. முக்தா சீனிவாசன் அவர்கள் எழுதிய இணையற்ற சாதனையாளர்கள் என்ற நூல் இரண்டு பாகங்களை அவரே நேரில் வந்து எனக்கு வழங்கினார். மறைந்த தலைவர்கள், பல துறை விற்பன்னர்கள் இரண்டு பாகங்களிலும் இரு நூறு பேர் இடம் பெற்றிருக்கிறார்கள்.

அப்போது உரையாடிக்கொண்டிருந்தபோது, நீங்கள் அண்ணா கவிதாஞ்சலி எழுதினீர்கள். அது போல் நேருவுக்கு எழுதவில்லையே என்றார். நான் வியப்புற்று நேருவுக்கு மட்டுமல்ல! தந்தை பெரியார், காமராஜர், கலைவாணர், ஜீவானந்தம், கண்ணதாசன், ஏ.டி. பன்னீர் செல்வம், சௌந்தரபாண்டியனார், மூப்பனார் என்று பலருக்கும் அவர்கள் மறைவை யொட்டிக் கவிதாஞ்சலி எழுதியுள்ளேன். அண்ணா மறைவுக்கு பூ விலே தொடங்கி நீண்டதொரு கவிதாஞ்சலி எழுதியதுபோல நேரு பிரானுக்கும் நீண்ட கவிதாஞ்சலி பூ விலே தொடங்கி எழுதியிருக்கிறேன் எனக் கூறி, அதை அவருக்குப் படித்தும் காட்டினேன். நண்பர் முக்தா சீனிவாசன்; கண்ணீர் அருவியெனப் பொழிய என்னைக் கட்டியணைத்துக் கொண்டு - இந்தக் கவிதாஞ்சலியை என்னைப் போலவே பலரும் படிக்காமல் இருந்திருக்கக் கூடும். எனவே இதை மீண்டும் வெளியிடுமாறு வேண்டினார்.

அதனையேற்று 1970ஆம் ஆண்டு நவம்பர் 14 அன்று சென்னைக் கவியரங்கில் நான் பாடிய தலைமைக் கவிதையைத் தாங்கி இந்த இதழ் வெளிவருகிறது.

பூத்திருக்கும் தோட்டத்தில் புகுந்துவிட்ட
என்றனுக்குக்
காத்திருந்த காட்சியொன்றைக் கவியாக்கித்
தருகின்றேன்.
சிரிக்கின்ற 'மல்லிகையின் காதுகளில்
செண்பகம்தான்
ஏதோ சேதி தனைச் சொல்ல,
சேர்ந்திருவர் 'சாமந்தியிடம் ஓடி
அவள் செவியில் வாய் வைத்தார்; பின்னர்
மூவருமே முல்லையிடம் முனகிவிட்டு அவளோடு
நால்வருமே நந்தவனம் முழுவதும்
நடைபோடத் தொடங்கி விட்டார்.
யாரைத்தான் தேடுகின்றார் பூப்பெண்கள்?' கட்டுதற்கு
நாரைத்தான் தேடியலைகின்றாரோ - என எண்ணி
நான் வியந்தேன்.
தென்றலிலே மணம் பரப்பித் தேடுகின்றார்
தேடுகின்றார்
தெரியவில்லை யாரை என்று!
முழுங்காலை வலிக்குதடி என்றாள் முல்லை.
சிவந்ததடி என் பாதம் எனச் செண்பகம் இளித்தாள்
பல்லை!
சாமந்தி மல்லிகை இருவர்க்கும் பெருந்தொல்லை
பூங்காவின் முலையொன்றில் புலம்பல் ஒலி
கேட்டவுடன்
பூப்பெண்கள் அதோ அதோ! எனச் சொல்லி
அந்த இடம் பறந்திட்டார்.
பூமானே! புகழ்க்குன்றே! போனாயோ என் தலைவா?
கோமானே! கொள்கை வேந்தே! உன்னைக்
கொள்ளையிட்ட கூற்றெங்கே?
எனையெடுத்து முத்தமீந்து இதயத்தில் ஏற்றிக்
கொண்டாய்; இன்று,
எனைவிடுத்து நீ மட்டும் நெடுந்தொலைவு போய்

விட்டாய் என்ன நியாயம்?
இதழுக்குத் தேன் தருவாய் - பதிலுக்கு
நான் தருவேன் மறந்தா விட்டாய்?
மார்பகத்தில் அணைத்திருப்பாய்
மகிழ்ச்சி வெள்ளம் கரை புரளும்
மங்கையென்னைப் பிரிவதற்கு உன் மனம்தான்
கல்லோ?

எனக் கதறும் ஒலி கேட்டு
இனிய நறும் பூப்பெண்கள் அருகே சென்றார்
மடைதிறந்த வெள்ளம் போல் கண்ணீர் கொட்டி
மயங்கிவிழும் நிலைமையிலே ரோஜா நின்றாள்.
மல்லிகை முல்லை அருகே சென்று
என்னடி ரோஜா இன்னமும் அழுகை? நல்லவர்
இருந்தார் நானிலம் வாழ வல்லவர் இருந்தார் வாரி
அணைக்க

போனது வருமோ? புலம்பலை நிறுத்து!
பூக்களின் ராணி! புன்னகை காட்டு!
ஆறுதல் கூறினர்; அழகு ரோஜா
தேறுதல் பெறாமல் தேம்பியழுதாள்!
இரவு உமிழும் எச்சில் என்பேன் பனித்துளியை - என்
இறைவனது முத்தம் அமுதம் என்பேன்
அன்றமுதம் தந்தெனக்கு ஆசை காட்டி
இன்றென்னை எச்சில் பனித்துளியில்
நனைத்து விட்டார்; என் செய்வேன்?
முடிசூடா மன்னரவர் இனி என்னைச் சூடார்
என நினைக்கும் போதெல்லாம்
முள்ளாகக் குத்துதடி மேனியெல்லாம்!
வாழ்வில் சிரிப்பில்லா எனக்கு இந்தச் சிவப்பெதற்கு?
மனத்தில் மகிழ்வில்லா எனக்கு நறுமணந்தான் எதற்கு?
இந்தியச் சிம்மாசனத்தில் அவர் இருந்தார் - அவர்
இதயச் சிம்மாசனத்தில் நானிருந்தேன்
உறங்குகின்றார் விழித்தெழுவார்; படி

இறங்கி வந்து பாவையினை அழைப்பதற்குள்
அவர் நெஞ்ச
அரங்குதனில் ஆடுதற்குச் சிவப்பாடை
புனைந்து நின்றேன்
அதற்குள் காலக்
குரங்கின் கை மாலையாக ஆகி விட்டார்;
என் வாழ்வை இரவாக ஆக்கிவிட்டு!
போய் விடுங்கள் எனை விடுத்துத் தனியாக
புனிதனவன் பிறந்த நாளில் கண்புனலை அவன்
காலடிக்குக் காணிக்கை யாக்குதலே என் கடமை
ரோஜாவின் சொற்கேட்டுச் சோர்ந்து போனேன்; தன்
ராஜாவின் பிரிவாலே வாடுகின்ற அவளையெண்ணிப்
பேசாமல் திரும்பி விட்டேன்; இன்றென்
மனைவி கூந்தல் மணம் வீசாமல் போகட்டுமென்று
மலர் எதுவும் பறிக்காமல் வந்து விட்டேன் - இன்று
மலர் பறித்தால்இ அது மாவீரன் நேருவுக்கு
மாலை தொடுத்திடவே! நம்
மடி பறித்துச் சுதந்திரத்தை அபகரித்த வெள்ளையரின்
கொடி பறித்து விடுதலைக் கொடி பிடித்த கொள்கை
வீரன்

அடி கொடுத்தால் வாங்கிக் கொண்டு
அடக்குமுறை தாங்கிக் கொள்ள
அண்ணல் வகுத்த வழி
அயராதுழைத்த சிங்கம்!
இளமையின் எழிலை இருட்டுச் சிறையில்
கழித்த தியாகி!
எண்ணையிட்ட கடுகாய் வெடிக்கும் கோபம் எனினும்
எண்ணையிட்டார் விடுதலை வேள்விக் கென்போம்!
பணமலைக்கிடையே பிறந்தார் எனினும் ஏழையை
அணைக்கும்
குணமலையாய்த் திகழ்ந்தார் என்போம்!
பணியின் விரைவைப் பம்பரம் என்பர்

பண்டிதர் பணியோ பம்பரம் தோற்கும்
இடி இடிக்கும் பேச்சில் - இளமைத்
துடி துடிக்கும் எழுத்தில் - தேன் ஒரு
படி இனிக்கும் பண்பில் - அதிர்
வெடி முழக்கும் செயலில் - விடாப்
பிடியிருக்கும் குணத்தில் - விடுதலைக்
கொடியிருக்கும் கையில் - கொஞ்சம்
முடியிருக்கும் தலையில்!

நீதிக்கு எதிரானவற்றையெல்லாம்
நேர் நின்று எதிர்த்ததாலே நேரு வானார்..... இந்திய
நீள் எல்லைக் கோடு தன்னைப் பெரும்பகைவர்
கடந்த போது என்ன
நேருமோ என்றேங்கி இருந்த மக்கள்
நெஞ்சின் துயர் துடைத்து, எதுவும்
நேராது நான் இருக்கின்றேன் எனச் சொல்லி
நேருவானார்.

துணிவிருந்தால் உள்ளத் தூய்மையிருந்தால்
துன்பம் நேருமா? எனக் கேட்டார் குழந்தையிடம்!
இன்பமே நேரும் மாமா என்றது பிஞ்சும் பூவும் -
இதனால் நேரு மாமா வானார்.
மதம் கடவுள் நம்பிக்கை இவைகளிலே
அவர் கொள்கை தனி எனினும் பிறர்
மனம் புண்படாமல் நல்வழியில் ஆட்சி செய்தார் - தன்
மரணத்தின் பின்னாலே மதச் சடங்கு வேண்டாமெனத்
தக்க
தருணத்தில் உயிலெழுதி உலகிற்கு ஒளி செய்தார்.
நடுநிலைத் தன்மை நலமெனக் கொண்டு
நானிலம் போற்ற நமது பூங்குன்றனார் நவின்ற
யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற மொழிக்குத்
தோதாய்க் கொள்கை தொகுத்தே சொன்னார்.
காலத்தின் கோலம் காட்டுக்கு ராஜாவாய்க் கர்த்தபம்
ஆகும்

ஏலத்தில் சில பேர் கோபுர உச்சியில் குந்திக் கொள்வர்
இந்திய
ஞாலத்தின் தலைவராய் ஐவகர் ஆனது இவ்விதமல்ல!
அவர்
சேலத்து மாம்பழம் - சென்னைக் கடற்கரை -
கொற்கை முத்து - கொள்ளேகால் பட்டு -
தஞ்சைக் கோயில் - தண்புனல் காவிரி -
தறியில் காஞ்சி - தடந்தோள் பாண்டியன்.
கருத்தில் மாறுதல் இருந்த போதிலும் -
காலமானார் நேரு என்றதும்

கண்ணீர் உகுத்தார்
கலங்கி அழுதார்
காராக்கிரகம் கிடந்த அண்ணா!
கண்ணிய அரசியலைப் போற்றிடும் நாட்டில்
கண் நிகர் நேருவைப் புகழ்வோம் பாட்டில்!
படை துள்ளி வரும் - பகை
அள்ளி வரும் - எரி
கொள்ளி வரும் - கரும்
புள்ளி வரும் - சீனக்
கள்ளி வரும் - எனச் சிலர்
எள்ளி வரும் போது - விடி
வெள்ளி வரும் எனப் - பகை
கிள்ளி எறிந்தான் - இன்று திருப்
பள்ளி அயர்ந்தான் - நேரு -
திருப்பள்ளி அயர்ந்தான்!
வாய் மடித்துக் கிடந்த தலைமகனை நோக்கி
மணியதரத் தேதேனும் வடுவுண்டாயோ? எனத்
தாய் அடித்து மோதி அழும் காட்சிகளை
பேய் ஆட்டம் போடுகின்ற போர் முகத்தை
நாய் நரிகள் தீனி தின்னும் கொடுமைக் கூத்தை
காய், பழம், பூ, பிஞ்சு சாய்ந்து விழும் சமர்க்களத்தை -
நம்

கலிங்கத்துப் பரணி சொல்லும் அந்தக்
கலிங்கத்தில் அமைதி பூண்ட அசோக மன்னன்
கண்டெடுத்த அறவழியில் உலகு காக்க நேரு பிரான்
கழுகுகளின் இறக்கை வெட்டி வெண்புறாவைப்
பறக்க விட்டார் விண்ணின் மேலே!
தலையாகிய அறமே புரி
சரி நீதி உதவுவாய்
சமமே பொருள் ஜனநாயகம்
எனவே முரசறைவாய் இது
அலை மோதிடும் புதுவையின்
கலைமேவிய பாவலன் - நம்
நிலை மாறிடப் பாடிய காவியம்!
ஜனநாயகம் ஜனநாயகமென ஜவகரும் முழங்கிடச் -
சிலர்தம்
தனிநாயகம் சிறந்திடச் செயல்பட்டதை மறந்திடோம்!
பணநாயகம் கணநாழியில் தகர்ந்திடக்
குணநாயகர் நேருவும் உடன் முனைந்திடக்

காலந்தான் போதவில்லை

காலமுமே பொறுக்கவில்லை!

அன்புள்ள,

மு.க.

11-2-2002

2683. பழைய பல்லவி; மீண்டும் பாடுகிறார்கள்!

உடன்பிறப்பே,

ஆண்டிப்பட்டி தொகுதியில் ஆளுங்கட்சியானது; தேர்தல் விதிமுறைகளுக்கு மாறாக எந்த நடவடிக்கையிலும் ஈடுபடவில்லையென்று அமைச்சர்கள் சத்தியம் செய்து பேசுகிறார்கள், பேட்டி கொடுக்கிறார்கள்.

இதோ 'தினகரனிலோ, 'தினமலரிலோ' வந்த புகைப் படங்கள் மட்டுமல்ல, 'இந்து இதழில்' 10-2-2002 அன்று முதல் பக்கத்தில் வண்ணத்தில் அச்சிட்டு வெளிவந்தது.

அது பற்றிய ஆங்கிலக் குறிப்பையும், அதற்கான தமிழாக்கத்தையும் இந்தக் கடிதத்துடன் உன் போன்றோர் கவனத்திற்கு மட்டுமல்ல, ஜனநாயகத்தில் தேர்தல் விதிகளை மதிக்கும் நடுநிலையாளர்கள், மற்றும் தேர்தல் கண்காணிப்பு அதிகாரிகளாக தொகுதியில் முகாமிட்டிருப்பவர்கள் ஆகியோரின் கவனத்திற்கும் கொண்டு வருகிறேன்.

It will be easy for Amma to campaig Andpatt. Her covoy ca glide along new roads, urriedly beng laid, conectng every remote amlet. For all politcal parties, the campaig-roads ave made the tours easy for the February 21 byelecto. We kow these roads are beng laid for Amma to reac nteror aitatons easily. Otherwise, ow ca this road elp our village whc as neiter a transport system or vehcles, asks Rasia, a stauc AIADMK supporter, at Adaikampatt.

(ஆண்டிப்பட்டியில் பிரச்சாரம் செய்வது அம்மாவிற்கு சுலபமாக இருக்கும். அவருடன் வருகின்ற கார்கள் தொலைதூரத்தில் உள்ள ஒவ்வொரு குக்கிராமங்களையும் இணைத்து அவசர அவசரமாக அமைக்கப்படும் புதிய சாலைகளின் வழியாக இலகுவாகச் சென்றிட முடியும். பிப்ரவரி 21-ல்

நடைபெறும் இடைத்தேர்தலில் இந்தப் பிரச்சார-சாலைகள் எல்லா அரசியல் கட்சிகளுக்கும் பயணத்தை எளிதாக்கியுள்ளன. அடைக்கம் பட்டியைச் சேர்ந்த ராசையா என்ற தீவிர அ.இ.அ.தி.மு.க. ஆதரவாளர், இந்தச் சாலைகள் எல்லாம் அம்மா தொகுதியிலே உள்ள தொலைதூர குடியிருப்புகளைச் சுலபமாகச் சென்றடைவதற்காக அமைக்கப்படுகின்றன என்பது எங்களுக்குத் தெரியும். இல்லாவிட்டால், போக்குவரத்து வசதியோ அல்லது வாகனங்களின் வசதியோ இல்லாத எங்கள் கிராமங்களில் இந்தச் சாலைகள் எவ்வாறு உதவிகரமாக இருக்க முடியும் என்று கேட்டார்.)

Umndful of the Oppositos outcry, development works are o full swng. Tiled bathrooms and moder toilets are beng constructed every ook and corner of the constituecy with M.Ps constituecy development funds.

(எதிர்க்கட்சிகள் எழுப்பும் எதிர்ப்புக் குரலைப் பற்றிக் கவலைப்படாமல், வளர்ச்சிப் பணிகள் முழு அளவில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நவீன கழிப்பிடங்களும், குளியலறைகளும் இந்தத் தொகுதியின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து கட்டப்பட்டு வருகின்றன)

தேர்தல் அறிவிப்பு வந்து முடிந்து, வேட்பு மனு தாக்கலுக்குப் பிறகு, தேர்தலுக்கு இன்னும் சில நாட்களே இருக்கும் நிலையில் இதுபோல சாலைகள் அமைப்பதும், அடிப்படை வசதிகளை அவசர அவசரமாகச் செய்வதும், தேங்கிக் கிடந்த கைத்தறி ஆடைகளை இத்தனை நாளும் இல்லாமல் இப்போது அந்தத் தொகுதியில் கொள்முதல் செய்வதும், அந்தத் தொகுதி உள்ளிட்ட பகுதியின் போலீஸ் அதிகாரி (டி.ஐ.ஜி.)யை பதவி உயர்வு கொடுத்து புதிய நியமனமாக இரண்டொரு நாட்களுக்கு முன்பு செய்திருப்பதும் தேர்தல் விதி முறையை மீறிய செயல்கள் ஆகாதா என்பதற்கு என்மீதும், கழகத்தின் மீதும் சேறுவாரி இறைக்கும் செம்மல்களாம் அமைச்சர்கள்தான் விளக்கம் அளிக்க வேண்டும்.

முதலமைச்சர் திரு. பன்னீர்செல்வம் இந்தத் தேர்தலுக்குக் கருணாநிதியின் சதிதான் காரணம் என்று கூறியுள்ளார். அம்மாவின் வேட்பு மனுவை தள்ளுபடி செய்தது கருணாநிதி

ஆட்சி! அன்று போட்டியிட அனுமதித்திருந்தால் இன்று தேர்தல் வந்திருக்குமா? எனவே இந்தத் தேர்தல் வரக் காரணம் கருணாநிதி ஆட்சிதான்! என்று பன்னீர் செல்வம் பேசியுள்ளது ஏடுகளில் வந்துள்ளது.

சரி, இப்போது அ.தி.மு.க. ஆட்சி நடைபெறுகிறது. ஆண்டிப்பட்டி தொகுதி அன்னியில், சைதாப்பேட்டை, வாணியம்பாடி, அச்சரபாக்கம் ஆகிய மூன்று தொகுதிகளில் இடைத்தேர்தல் நடைபெற வேண்டியிருக்கிறது; நான் நண்பர் பன்னீர்செல்வத்தைக் கேட்கிறேன். அச்சரபாக்கம் தொகுதியில் போட்டியிடத் தகுதிபெற்ற ஒருவர் அந்தத் தொகுதியில் வேட்பு மனு தாக்கல் செய்து விட்டு, அவரே, சைதாப்பேட்டை தொகுதிக்கோ அல்லது வாணியம்பாடி தொகுதிக்கோ - அதாவது இரண்டில் ஒன்றில் வேட்பு மனு தாக்கல் செய்ய முடியுமே தவிர, இரண்டு தொகுதிக்கு மேலாக மூன்று தொகுதியில் வேட்பு மனு தாக்கல் செய்தால், அந்த வேட்பு மனுக்கள் அ.தி.மு.க. ஆட்சி நடப்பதால் செல்லுபடியாகி விடுமா? அதற்கு முதலமைச்சர் பன்னீர்செல்வம் உத்திரவாதம் அளிக்க முடியுமா?

இரண்டுக்கு மேல் மூன்றாவதாக ஒரு வேட்பு மனுவை மற்றொரு தொகுதியில் தாக்கல் செய்தாலே மூன்றுமே செல்லாது என்று தேர்தல் விதிமுறை தெளிவாக இருக்கும்போது, நாலாவதாகவும் ஒரு தொகுதியில் செல்வி ஜெயலலிதா வேட்பு மனு செய்தால், தேர்தல் விதிமுறை தெரிந்த அதிகாரிகள் அவற்றை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்? ஏற்றுக் கொண்டால் அந்த அதிகாரிகள் மீதல்லவா தேர்தல் விதி முறைப்படி நடவடிக்கை வந்து சேரும்!

படிக்காத பாமரர்களுக்குக் கூட இந்தத் தேர்தல் விதிமுறைகள் ஓரளவு அத்துப்படி ஆகியிருக்கும்போது படித்தறிந்த முதலமைச்சர் பன்னீர்செல்வத்துக்கு இந்த உண்மை தெரியாமல் போன மர்மம் என்ன?

தெரியாமலிருக்க நியாயமில்லை! அவர் மிகவும் தெளிவானவர்தான்! ஆண்டிப்பட்டியில் அம்மா நிற்க வேண்டிய நிலை கருணாநிதியால்தான் ஏற்பட்டது என்று கூறித் திரும்பவும் கிராமப்புறத்து மக்களை ஏமாற்றப் பார்க்கிறார்கள்.

ஏன், இரண்டு சட்டமன்ற உறுப்பினர்கள் அப்துல் லத்தீப், பெருமாள் ஆகியோர் காலமாகிவிட்ட காரணத்தால் காலியாகியிருந்த வாணியம்பாடியிலோ அல்லது சைதாப்பேட்டையிலோ இந்த அம்மையார் நிற்காமல், ஆண்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினரை ராஜினாமா செய்யச் சொல்லிவிட்டு, அங்கே இந்த அம்மையார் நிற்பதற்குக்கூட நான்தானா காரணம்?

நாலு இடங்களில் நிற்பதற்கு வேட்புமனு செய்யுமாறு நான் ஒன்றும் அறிவுரை கூறவில்லை!

இரண்டு தொகுதிகளுக்கு மேல் ஒருவர் போட்டியிட வேட்புமனு அளித்தால் எல்லா வேட்பு மனுக்களுமே செல்லாமற் போய்விடும் என்ற விதிமுறையையும் நான் வகுக்கவில்லை!

சட்டப்படியும் விதிமுறைப்படியும் அந்த மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. அதை வைத்துக் கொண்டு கடந்த சட்டமன்றத் தேர்தலில் கண்ணீரும் கம்பலையுமாக அரிச்சந்திரா நாடகம் நடத்தி அய்யோ! கருணாநிதிதான்! என்னை நிற்க முடியாமல் செய்துவிட்டார் என்று மக்களை அனுதாபத்தில் ஆழ்த்தி ஏமாற்ற முடிந்தது!

இப்போதும் அதே பல்லவியைப் பாடுகிறார் பன்னீர்செல்வம்!

திண்டுக்கல் குடகனாறு தங்கும் விடுதியை, நான் தங்குவதற்கு அனுமதி அளித்து விட்டு, அரசின் கெடுபிடிப்படி, உடனடியாக அனுமதியை ரத்து செய்து கடிதமும் எழுதி, ஏதோ நாம்தான் வேண்டாமென்று சொன்னது போல ஒரு கட்டுக்கதையும் கட்டி, தேர்தல் விதிமுறை, மனிதாபிமானம், அரசியல் நாகரிகம் அனைத்துக்கும் சமாதி கட்டியுள்ள இந்த ஆட்சியாளர்களுக்குத் தேர்தல் விதிமுறைகளை மீறியதாகக் குற்றம் சாட்ட என்ன தகுதியிருக்கிறது?

அன்புள்ள,

மு.க.

12-2-2002

2684. உடன்பிறப்புகளின் மனக்கிளைகளே என் தங்குமிடம்!

உடன்பிறப்பே,

தேங்காய் பறிக்க ஒருவன், யாருக்கும் தெரியாமல் இன்னொருவர் தோப்பில் இருந்த தென்னை மரத்தில் ஏறி உச்சிக்குப் போய்விட்டான். தோப்புக்குச் சொந்தக்காரரின் கண்ணில் பட்டுவிட, அவர் பதறிப் போய் ''ஏய், யாரது திருடன்? இறங்கு கீழே!'' என்று கூச்சல் போட்டார். ஏறியவன் உடனே கீழே இறங்கி விட்டான்.

''தேங்காய் திருடத்தானே போனாய்?''

''இல்லிங்க... தென்னை மரத்தில் புல் பறிக்கப் போனேன்!''

''தென்னை மரத்திலே புல்லா? எங்கே யாவது தென்னை மரத்திலே புல் இருக்குமா?''
''அதான், இல்லையென்றதும் இறங்கி விட்டேன்!''

இப்படிப் பதில் அளித்துக் கொண்டே, தேங்காய் திருட வந்தவன் அந்த இடத்தை விட்டு ஓடி விட்டான்.

இவன் திருடன் மட்டுமல்ல;
திறமையான பொய்யன் என்றும்
தீர்மானித்துக் கொண்டு,
தோப்புக்கு உரிமையாளர்
காவல்காரர்களை
விழிப்பாக இருக்கச் சொல்லி
அங்கிருந்து சென்றார்.

இந்தத் துக்கடாக் கதையில், ''தென்னை மரத்தில் புல் பறித்திடப் போனேன்'' என்று திறமையாகப் புளுகிய பேர் வழிக்குத் திறமையில் கொஞ்சமும் குறைந்தவரல்ல நமது மாண்புமிகு முதலமைச்சர் பன்னீர்செல்வம் என்பது அவர் மதுரை விமான

நிலைய வாசலில் நிருபர்களுக்கு அளித்த பேட்டியிலிருந்து தெளிவாகவே புரிகிறது.

தென்னை மரத் திருடன், ''தென்னையில் புல் இருக்கிறது; அதைப் பறிக்கப் போனேன்'' என்று சொன்னதற்குப் பதிலாக, ''தென்னை மரந்தான் என்னைக் கூப்பிட்டு, மர உச்சிக்கு வரச் சொன்னது'' என்று பதில் சொல்லியிருந்தால் எப்படியிருக்குமோ, அப்படியொரு பதிலை, பன்னீர்செல்வம் செய்தியாளர்களிடம் கூறியிருக்கிறார்.

நிருபர் கேள்வி:- திண்டுக்கல் குடகனாறு இல்லத்தில் தி.மு.க. தலைவர் கருணாநிதி தங்குவதற்கு அனுமதி அளித்து விட்டு, பின்னர் அந்த அனுமதி ரத்து செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறதே?

பன்னீர் பதில்:- குடகனாறு இல்லம், தமிழக அரசின் பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் இருக்கிறது. அங்கு கருணாநிதி தங்குவதற்கு தி.மு.க.வினர் முன்பதிவு செய்து வைத்திருந்தனர். பின்னர் அவர்களே அந்த முன்பதிவை ரத்து செய்துவிட்டனர்.

உடன்பிறப்பே,

பொய்யிலும் பொய்! ஜமக்காளத்தில் வடி கட்டிய பொய் என்பார்களே, அந்தப் பொய்யெல்லாம் நமது பன்னீர்செல்வத்தின் பொய்யுடன் எடை போடக் காணாது என்பேன் நான்!

5.2.2002 அன்று திண்டுக்கல் நகரக் கழகச் செயலாளரும் நகராட்சித் தலைவருமான தம்பி பசீர் அகமது அவர்களால், குடகனாறு இல்லத்தில் இரண்டு நாள் நான் தங்குவதற்கு அனுமதி கேட்கப்பட்டு, அதிகாரிகளால் எழுத்து மூலமாக அனுமதி வழங்கப் பட்டு, அதற்கடுத்த நாள் அரசாங்கத்தின் வாய் மொழிக் கெடுபிடி காரணமாக அந்த அதிகாரிகள் அவர்களே வழங்கிய அனுமதியை ரத்து செய்து பசீர் அகமதுக்குக் கடிதம் அனுப்புகிறார்கள்.

அந்தக் கடிதத்தில் ''தில்லுமுல்லு'' திருகுதாளம் என்பார்களே! அதை மெய்ப்பிப்பது போல ''ரத்து செய்து விடுமாறு பசீர் அகமது கேட்டுக் கொண்டதற்காக ரத்து செய்கிறோம்'' என்று ஒரு பெரும் பொய்யை இணைத்து எழுதுகிறார்கள். அப்படியானால் ''அந்த இடம் தேவையில்லை. ரத்து செய்து விடலாம்'' என்று பசீர் அகமது அந்த அதிகாரிகளுக்குக் கடிதம் எழுதியுள்ளதாகச் சொல்கிறாரே அவ்வாறு எழுதியிருந்தால் அந்தக் கடிதம் எங்கே?

நீதிமன்றம் வரையில் இந்தப் பிரச்சினை எடுத்துச் செல்லப்பட்டு, ''தரப்பட்ட அனுமதி தேவையில்லை என்று பசீர் அகமது அதிகாரிகளுக்குக் கடிதம் எழுதவே இல்லை'' என்று நீதிமன்றத்துக்கு மனுமூலம் திட்டவட்டமாக அவரே தெரிவித்துள்ளார்.

இதுகுறித்த ஆவணங்களை நீதிமன்றம் அரசிடம் கேட்டிருக்கிறது. வழக்கு முடிவடைந்து தீர்ப்பு கூறப்படாத நிலையில் முதலமைச்சர் மதுரையில் பேட்டி அளிக்கிறார், ''தி.மு.க.வினரே அவர்கள் செய்த முன் பதிவை ரத்து செய்து விட்டனர்'' என்பதாக!

இது எந்த வகையில் முறையானது - எந்த வகையில் நியாயமானது - என்பதை நீதி நியாயத்தின்மீது மரியாதை வைத்துள்ளவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டிய ஒன்றாகும்!

ஒரு நாளிதழ் (தினமணி) கூட, இதற்காகக் கண்டனம் தெரிவிக்காவிட்டாலும், தனது மனக் கசப்பை ஒரு ''கார்ட்டூன்'' மூலம் வெளியிட்டிருக்கிறது.

இந்தியா ஒரு ஜனநாயக நாடு! அதிலும் உலகில் பெரிய ஜனநாயக நாடு! ஆயிரம் கருத்து மாறுபாடுகள் - கடுமையான விவாதங்கள் இருந்தாலும், கண் எனப் போற்றப்பட வேண்டிய அரசியல் நாகரிகத்தைக் குழி தோண்டிப் புதைத்து விடக் கூடாது.

ஒரு நிகழ்ச்சியை நினைவூட்டுகிறேன்.

1969-76 காலகட்டத்தில் நான் முதலமைச்சராக இருந்தபோது, ஸ்தாபன காங்கிரஸ் கட்சி பிரச்சாரத்திற்காக தமிழக முழுதும் பெருந்தலைவர் காமராசர் அவர்கள் சுற்றுப் பயணம் செய்தார். அப்போது அவரது உடல்நிலையை உத்தேசித்து அவர் சுற்றுப் பயணத்தின் போது தங்குகிற வழியில் உள்ள அரசு விடுதிகள் அனைத்திலும், அதேபோல் சர்க்கரை ஆலை தங்குமிடங்களிலும் குளிர்ப்பதன வசதி (A.C.) செய்து கொடுக்கப்பட்டது.

மேலவை எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ராஜாராம் நாயுடு அவர்கள் ஒருநாள் மேலவையிலேயே என்னிடம் ஒரு கடிதம் கொடுத்தார்.

அதில், காமராஜர் அவர்கள், எம்.பி. என்ற முறையில் உதகை தமிழகம் இல்லத்தில் ஒரு வாரம் தங்க வேண்டும். அதற்கான அனுமதி வழங்க வேண்டும்

-என்று எழுதியிருந்தார். நான் கோபத்துடன் ராஜாராம் நாயுடு அவர்களிடம்; பெருந்தலைவர் காமராசர் அவர்கள் எம்.பி. என்ற முறையில்தான் தங்க வேண்டுமா என்ன - அவர் இந்த நாட்டு தலைவர்களில் ஒருவர் என்ற முறையில், உதகை தமிழகம் இல்லத்தில் ஒரு வாரமல்ல, ஒரு மாதம் கூட அவர் விருப்பம்போல் தங்கிக் கொள்ளலாம் என்று கூறினேன்.

இன்னொரு நிகழ்ச்சி:- ''நீதி கேட்டு நெடிய பயணம் என்று மதுரையிலிருந்து திருச்செந்தூர் நான் புறப்பட்ட போது அன்றைய முதலமைச்சராக இருந்த அருமை நண்பர் எம்.ஜி.ஆர் அவர்கள், எனக்கு மதுரைக்கே தொலைபேசியில் தொடர்பு கொண்டு உங்கள் உடல்நிலையில் இந்த நெடிய நடைப்பயணம் தாங்குமா?'' என்று கேட்டதுடன் "உடல்நலத்தைப் பார்த்துக் கொள்ளுங்கள்" என்றும் கேட்டுக் கொண்டார். இத்தனைக்கும் அவரது ஆட்சியை எதிர்த்துத்தான் அந்த நெடிய பயணம்!

உடன்பிறப்பே! அப்போதெல்லாம் அரசியல் எதிர்ப்பு என்ற அக்கினியாற்றையும் கடந்து மனிதாபிமானம், அரசியல் நாகரிகம் என்ற அருவிகளும் வற்றிப் போகாமல் இருந்தன.

இன்று மரக்கிளையில் தங்குமிடம் என்று கேலிச் சித்திரம் வரைந்து காட்டப்பட வேண்டிய நிலை!

உடன்பிறப்புக்களாகிய உங்களின் மனக் கிளைகளையே தங்குமிடமாகக் கொண்டுள்ள எனக்கு, அரசு இடங்களுக்கு அனுமதி கிடைத்தால் என்ன அல்லது அனுமதி மறுக்கப்பட்டால்தான் என்ன?

அன்புள்ள,

மு.க.

14-2-2002

2685. ஓய்வு உறக்கத்தை ஓரங்கட்டிவிட்டு உழைத்திடுக!

உடன்பிறப்பே,

ஒரு நாள்தான் தேர்தல் பிரச்சாரம் செய்திட உடல் நிலை இடம் தந்தது என்றாலும், அந்த ஒரு நாளில் நான் கண்ட எழுச்சி, இட்ட அடி நோக எடுத்த அடி கொப்பளிக்க இறங்கி நடந்து ஏழை பாழைகளை நோக்கி வாக்கு கேட்க வைத்திருக்கிறது என்ற செய்தியையும் படங்களையும் ஏடுகளில் கண்டேன். எனக்கென்று தனியாக என்ன சக்தி இருக்கிறது? எல்லாமே நீதானே! உன்னால்தானே நான் பலம் பெறுகிறேன். ஆம், வலுப்பெறுவதும் உன்னால்தான்! வலுவிழக்க நேரிட்டால் அதுவும் உன்னால்தான்! ஆக்கலும் அழித்தலும் ஆண்டவனின் சித்தம் என்பர் ஆத்திகப் பெருமக்கள்! என்னைப் பொருத்தவரையில் அந்த இருவிதமான செயலும் அதாவது இந்தக் கழகத்தை வளர்ச்சியுற்று வான்தொட நிற்க வைப்பதும் - அல்லது தளர்ச்சியுற்றுத் தாழ வைப்பதும் உடன்பிறப்புக்களின் கரங்களில்தானிருக்கிறது என்பதை நான் நன்கு அறிவேன்.

வைகை சேகரை, பாவம் - பலிக்கடாவாக்கி ஆண்டிப்பட்டியில் போட்டியிட வைக்கிறோம் என்று கேலிப் படம் வரைந்து கெக்கலி கொட்டியவர்களில் இருந்து, தமிழ்நாட்டுக்கு ''பார்ப்பனத் தலைமையா?'' என்று கேட்டுத் தலையங்கம் தீட்டிவிட்டு, இன்று அந்தத் தலைமை ஆடுகிற ஆட்டத்திற்குத் தாளம்போட ஆண்டிப்பட்டிக்கே சென்று விட்டவர்கள் வரையில் வெற்றி என்பது கேள்விக்குறியான நிலையில் வித்தியாசக் கணக்கு போடும் வேடிக்கை மனிதர்களாகி விட்ட விந்தையை உன்போன்ற உடன்பிறப்புகள் செய்து காட்டியிருக்கிறீர்கள்.

வெற்றி தோல்வியைப் பற்றிக் கவலைப்படாமல் ஜனநாயகக் கடமையை ஆற்றிடும் பொறுப்பை, தோழமைக் கட்சிகளின் துணையுடன் நாம் ஏற்றுக் கொண்டு களத்தில் நுழைந்துள்ளோம்.

அம்மையார் தலைமையில் உள்ள ஆளுங்கட்சியினர் எப்படித் தேர்தலை நடத்துவார்கள் என்பதற்கு, திண்டுக்கல் குடகனாறு திட்ட அரசு விடுதியில் முதலில் அனுமதி வழங்கிவிட்டு, அதை உடனடியாக ரத்து செய்து அரசியல் நாகரிகத்தை வெளிச்சம் போட்டுக் காட்டினார்களே! அப்பொழுதே அறிகுறி தென்பட்டுவிட்டது.

நல்லவேளை! கவிப்பேரரசு தம்பி வைரமுத்துவின் தென்னந்தோப்பு இல்லம், நான் தங்குவதற்குக் கிடைத்தது.

அதுவும் நான் தங்கியதாலோ என்னவோ ''வைரமுத்துப் பண்ணை வீடு'' என்று பெயர் பெற்று விட்டது. அந்த இடம் மட்டும் இல்லாமலிருந்தால், எனக்கு ''இஸ்ஸார்டு பிரிவு'' பாதுகாப்புக்காக அனுமதிக்கப்பட்டுள்ள பூனைப்படை வீரர்கள் ஆறு பேரும் உட்காருவதற்கோ - உண்பதற்கோ - ஓய்வு கொள்வதற்கோ இடமின்றித் தவியாய்த் தவித்திருப்பர்''.

மாலை 5 மணிக்கு அந்த இல்லத்திலிருந்து, சுற்றுப் பயணத்தின் முதல் நிகழ்ச்சியாக வடுகப்பட்டி தொடங்கி இரவு 11 மணிக்கு ஆண்டிப்பட்டி பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டேன்.

இடையில் எத்தனையோ சிற்றூர்கள், பேரூர்கள் - வழியெல்லாம் மடை திறந்த வெள்ளம் போல மக்கள் கூட்டம்!

''தி.மு.க.வுக்கு ஆண்டிப்பட்டி ஒரு பாலைவனம் - எங்களுக்குத்தான் அது சோலைவனம் என்று நெஞ்சு நிமிர்த்தி முழங்கிக் கொண்டிருந்தவர்கள், ஓரிரு நாட்களாக முடங்கிப் போயிருக்கிறார்கள்''.

வந்தது வரட்டும் என்று வன்முறைக் கணைகளாக அவர்கள் மாறக்கூடும். எந்தக் கணை எந்தத் திக்கிலிருந்து வந்தாலும், அக்கணையைத் தடுத்து நிறுத்தும் கேடயங்களாக உடன்பிறப்புகள் ஒரு சேர அணிவகுத்திடல் வேண்டும்.

நமது இயக்கம், ஏதோ ஒரு கட்சி வேண்டும் - தலைவராக வேண்டும் - பதவிகளில் அமர வேண்டும் என்பதற்காகத் தொடங்கப்பட்டதல்ல!

இது தன்மான இயக்கமெனும் விதையாக ஊன்றப் பெற்று, தமிழ்ச் சமுதாயத்தின் உரிமைகளைக் காத்திடும்

தருவாக வளர்ந்திருப்பதை யாரும் மறந்து விடமுடியாது! இந்த இயக்கத்தினரும் மறந்துவிடக் கூடாது!

''இருப்பது ஓர் உயிர்! அது போகப் போவதும் ஒருமுறை! அது இந்த நல்ல காரியத்திற்காகப் போகட்டுமே''

என்று, தமிழ்நாடு என இந்த மாநிலத்திற்குப் பெயர் சூட்டிய விழாவில் அறிஞர் அண்ணா குறிப்பிட்டார்.

அதுபோல ஜனநாயக நெறி காப்பதற்காக, நெருக்கடி காலத்தில் உயிர்ப் பலிகள் தந்து இரண்டாவது சுதந்திரப் போராட்டத்தில் கலந்துகொண்ட நாம்; இப்போதும் ஜனநாயகத்திற்காக எந்த தியாகத்தையும் செய்வதற்குத் தயாராகத்தான் இருக்கவேண்டும்! இருக்கிறோம்!

இடையே, எத்தனையோ ஏச்சுகள் - பேச்சுகள் - கண்டனங்கள்!

நிருபர்கள் அக்கறையுடன் என் சுற்றுப்பயணத்தின் போது ஒரு கேள்வி எழுப்பினார்கள்.

கேள்வியாகக்கூட அல்ல! அவர்களில் சிலருக்கு இருந்த ஆர்வத்தை வெளிப்படுத்தினார்கள் என்பதே சரியாக இருக்கும்!

இடைத்தேர்தலில் அராஜகத்தை ஆளுங்கட்சியினர் கட்டவிழ்த்து விடுவதையும், எதிர்க்கட்சிகளுக்குரிய உரிமைகளை மறுப்பதையும், பணத்தைக் கொட்டி வாக்காளர்களை மட்டுமல்ல, கிராமங்களையே விலை பேசுவதையும், விதிமுறைகளைக் காலில் போட்டு மிதித்துவிட்டு புதிது புதிதாகத் திட்டங்களை நிறைவேற்றுவதையும், அறிவிப்பதையும், அ.தி.மு.க. வேட்பாளருக்கு இப்போதே முதலமைச்சருக்குரிய அந்தஸ்துகள், மரியாதைகள், அதிகார தேவதைகளின் ஆர்ப்பாட்டம் என அளவுகடந்த வகையில் தேர்தல் சட்டங்களுக்குப் புறம்பாகக் காரியங்கள் நடைபெறுவதையும் காணச் சகிக்காத நிருபர்கள் சிலர்தான், ''இன்னும் இரண்டொரு கட்சிகள் நிற்பதால் - ஆளுங்கட்சி எதிர்ப்பு வாக்குகள் சிதறிவிடாதா? அதற்கு என்ன செய்யப் போகிறீர்கள்?'' என்று கேட்டனர்.

அப்போது நல்ல எண்ணத்துடன் ஒரு கருத்தைச் சொன்னேன். நடுவில் அறுந்துவிட்ட நட்பு துளிர்க்கலாமே என்ற

நம்பிக்கையுடன், சொன்னேன். அதை ஏதோ தங்கள் செவியில் நாராசத்தை நான் பாய்ச்சி விட்டதுபோல, அக்கட்சிகளின் தலைவர்கள் என் மீது சீறிப் பாய்ந்து விட்டார்கள்.

குழப்புகிறார்
பித்தலாட்டம் செய்கிறார்
மண்டியிடச் சொல்கிறார்
யாசகம் கேட்க வைக்கப்
பார்க்கிறார்

என்றெல்லாம் எனக்கு ஏகப்பட்ட அர்ச்சனைகள்! நண்பர் கிருஷ்ணசாமியாவது பரவாயில்லை, அவர் கழகத்திலிருந்து நெடுங்காலத்துக்கு முன்பே போய் விட்டவர்! அதனால் கடுமை குறைவு அவரது கண்டனத்தில்!

ஆனால் திரு. வைகோவின் மறுப்புத்தான் மழுவைக் காய்ச்சி நெஞ்சில் குத்துவதுபோல! அண்மையில் ஆறேழு வருடங்கள்தானே ஆயிற்று - குறுகிய இடைவெளியென்பதால் குத்தீட்டி போல சொற்கள்! அதையும் நான் குற்றால அருவியாகத்தான் எடுத்துக் கொள்கிறேன்.

வசைபாடுகிறவர்களை எண்ணும்போது அவர்கள் முன்பு வானளாவ வாழ்த்தியதையும் பாராட்டியதையும் நினைத்து - இன்று பாடும் வசையை மறந்து விடுகிறேன் என்றாரே அண்ணா, அவர் தம்பியல்லவா நான்!

உடன்பிறப்பே, எத்தகைய தாக்குதல்களையும் தாங்கிப் பழக்கப்பட்டவர்கள் நாம்! தாக்குவதற்கு அவர்களுக்கே உரிமை! தவறியும் நம்மில் யாராவது பதில் சொல்லிவிட்டால், அதை மட்டும் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள்!

சரி, போகட்டும். ஆளுங்கட்சியின் ஆணவத்தை அடக்கும் ஆனை வேட்டைக்குச் செல்லும்போது,

அம்புகளை முயல்களின் மீது வீசிக் கொண்டிருக்கும் வீண் வேலையில் ஈடுபடுவது விவேகமாகாது என்பதை அறியாதவர்களல்ல நாம்!

எனவே, இடையே இன்னும் இரண்டொரு நாட்கள் தான் இருக்கின்றன!

தேர்தலில்
ஆற்றவேண்டிய

ஆக்கப்பணிகளில்
அயர்வு கொள்ளாது -
ஓய்வு
உறக்கம்
இவைகளை ஓரம் கட்டிவிட்டு
உழைத்திடுக கண்மணிகாள்!
நாடறிய நமது வலிமையை உணர்த்திடுவோம்!

ஜனநாயகக் கடமையை அறவழியில் ஆற்றிட எதையும் தாங்கும் இதயத்துடன் ஈடுபடுவோம்.

அன்புள்ள,

மு.க.

19-2-2002

2686. தமிழர் நெஞ்சிலிருந்து என்னை அகற்ற தலைகீழாக நின்றாலும் முடியாது!

உடன்பிறப்பே,

‘‘எம்.ஜி.ஆர். அவர்களால் செயல்பட முடியவில்லை. முதலமைச்சர் பதவிக்கு அவர் தகுதியுள்ளவராக இல்லை. அதிலும் என்னுடைய செல்வாக்கு வளர்வதைக் கண்டு எம்.ஜி.ஆர். பொறாமைப்படுகிறார். என்னுடைய வளர்ச்சியை அவரால் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை’’ என்று தனது கைப்படவே ஆங்கிலத்தில் அன்றைய பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களுக்குக் கடிதம் எழுதிய செல்வி ஜெயலலிதா அவர்களுக்குத் தேர்தல் நேரம் என்று வந்துவிட்டால் போதும் - எம்.ஜி.ஆர். சிலைக்கு மாலைகள் என்ன - எம்.ஜி.ஆர். பெயரை மூச்சுக்கு முன்னூறு தடவை உச்சரிக்கும் திடீர் பக்திதான் என்ன - எம்.ஜி.ஆரின் மீது அன்பு செலுத்துவோர் அனைவரும் அயர்ந்துதான் போய்விடுவார்கள்!’’

சாதாரண தேர்தல்களிலேயே அம்மையார் திடீரென எம்.ஜி.ஆர். அவர்களின் படத்தைக் காட்டி பாமர மக்களை ஏமாற்றுவார் என்றால், இழுபறி நிலைமையிலே இருக்கிறது என்று அவரது கட்சிக்காரர்களால் கிசுகிசுக்கப்படுகிற ஆண்டிப்பட்டி தேர்தலில் அந்த ‘ஆயிரத்தில் ஒருவனை, ஒரு கோடித் தடவையாவது ஸ்தோத்திரம் செய்யாமல் இருப்பாரா?’

எதிர்க்கட்சிகள் பொய்ப்பிரச்சாரம் செய்வதாக இரண்டு முக்கிய விஷயங்களுக்கு அவர் சாதுர்யமாக விளக்கம் சொல்லி வருகிறார்.

‘‘இலவச மின்சாரம் நிறுத்தப்பட மாட்டாது, தொடர்ந்து வழங்கப்படும்’’

- என்று தொகுதி முழுதும் ஜெயலலிதா சொல்லி வருகிறார். சரி, அவரது உறுதிமொழி உண்மையாக இருக்குமானால், விவசாயிகளின் பம்ப் செட்களுக்கு கடந்த ஒரு மாத காலமாக

மீட்டர் பொருத்தப்படுவது ஏன்? இடைத்தேர்தல்கள் முடிந்த பிறகு, மீட்டர் கணக்கு பார்த்து, கட்டணம் வசூலிக்கத்தானே?

''ரேஷன் கடைகளில் அரிசி விலை உயர்த்தப்பட மாட்டாது'' என்றும் ஜெயலலிதா தேர்தல் பிரச்சாரம் செய்துள்ளார். அதற்கு அவர் பயன்படுத்தியுள்ள லாவகமான வாசகத்தைப் பார்த்தாலே எப்படி மக்களைத் தந்திரமாக ஏமாற்றுகிறார் என்ற உண்மை புரியும்''.

''ஏழை எளிய மக்களுக்கு நியாய விலைக் கடைகளில் வழங்கப்படும் அரிசி விலை உயராது''

- என்று அழுத்தி, அழுத்திச் சொல்லியுள்ளார். நாளைக்கு வறுமைக்கோட்டுக்குக் கீழே - வறுமைக் கோட்டுக்கு மேலே என்று பிரித்து, கிலோ அரிசி 9 ரூபாய் என்பார்கள்!

'தேர்தலில் ஆண்டிப்பட்டியில் கொடுத்த வாக்குறுதி என்ன ஆயிற்று?' என்று கேட்டால்,

ஏழை எளிய மக்களுக்கு அரிசி விலை உயராது என்றுதானே சொன்னேன் என்று பதில் கூறி சமாளிக்க அவருக்குத் தெரியும்.

அதாவது ஏழை மக்களுக்கு உயர்த்தவில்லை - நடுத்தர மக்களுக்கு உயராது என்று நான் சொல்ல வில்லையே என்று கூறி, ஏழை எளிய மக்களையும் நடுத்தர மக்களாகச் சித்தரிக்க அவருக்குத் தெரியாதா என்ன?

அது போகட்டும், தேர்தல் விதிமுறைகளை அ.தி.மு.க. ஆட்சியாளர்கள் மீறவே இல்லை என்கிறார்களே! 'இந்து ஏட்டில்', 'தினகரன்', 'தினமலர்' ஆகிய ஏடுகளில் ஆண்டிப்பட்டி தொகுதியில் அவசர கதியில் அமைக்கப்படும் சாலைகள், அடிப்படை வசதிக் கான கழிவறை போன்ற கட்டிட வேலைகள் அனைத்தும் புகைப்படங்களாக வெளிவந்துள்ளனவே! அந்தப் பணிகள் எல்லாம் தேர்தல் விதிமுறைகளை மீறியது ஆகாதா?

வாக்காளர் பட்டியலில் 17 ஆயிரம் போலி வாக்காளர்களை அதிகாரிகளின் துணையோடு சேர்த்துப் பதிவு செய்திருக்கிறீர்களே அது தேர்தல் விதிமுறைக்கேற்ற தர்ம காரியமா?

நிலக்கோட்டை தொகுதியில் உள்ள வாக்காளர்களை திடீரென ஆண்டிப்பட்டி தொகுதியில் சேர்த்துள்ளீர்களே

அம்மையார் அவர்களே! அது தேர்தல் விதிமுறை மீறல் அல்லவோ?

13 வயது, 16 வயதுள்ளவர்களையெல்லாம் 18 வயது, 19 வயது என்று குறிப்பிட்டு அவர்களுக்கு வாக்களிக்கும் தகுதியைப் போலித்தனமாக உருவாக்கியுள்ளீர்களே, அது தேர்தல் விதிமுறைக்கு மாறான செயல் அல்லவா?

பெண் வாக்காளர்களுக்கு 'எவர்சில்வர் குடங்கள் வழங்கியுள்ளீர்களே, அது தேர்தல் விதிமுறைக்கு உட்பட்டதா?'

தங்கும் விடுதிகளை ஆளுங்கட்சிக்காரர்களுக்கு மட்டுமின்றி எதிர்க்கட்சிகளுக்கும் அனுமதிக்க வேண்டும் என்று தேர்தல் விதிமுறை தெளிவாக இருந்தும்கூட, அதைத் தூக்கிக் காலில் போட்டு மிதித்துவிட்டு, முதலில் நான் தங்குவதற்குக் கடிதவாயிலாக அனுமதி கொடுத்துவிட்டுப் பிறகு அந்த அனுமதியை ரத்து செய்து விட்டீர்களே, அது தேர்தல் விதிமுறைக்கு உகந்த செயலா?

இடைத்தேர்தல் நடக்கும்போது வரி ரத்து அல்லது ஒத்திவைப்பு போன்ற சலுகைகளை அறிவிப்பது தேர்தல் விதிமுறையா?

இந்த ஆட்சியில் அப்படி அறிவிக்கப்பட்டிருக்கிறதா இல்லையா?

தேர்தலில் நிற்கும் எல்லா வேட்பாளர்களுக்கும் சம உரிமை அளிக்கப்பட வேண்டுமென்ற தேர்தல் விதிமுறைக்கு மாறாக, அ.தி.மு.க. வேட்பாளராகிய தங்களுக்கு மட்டும் செல்லும் வழியெங்கும் நூறு அடி தூரத்துக்கு ஒரு போலீஸ் நிறுத்தப்பட்டு, சலாம் போட்டுக் கொண்டிருந்தார்களே, அது தேர்தல் விதிமுறைதான் என்று எந்த நீதிமான்கள் நிரூபிக்கப் போகிறார்கள்?

கருணாநிதி 50 ஆண்டுகால மூத்த அரசியல்வாதி என்று கூறிவிட்டு அவருக்கு தேர்தல் விதிமுறைகள் தெரியவில்லை என்று குற்றம் சாட்டியிருக்கிறீர்கள்!''

பரவாயில்லை, ஆண்டிப்பட்டியிலாவது என்னை மூத்த அரசியல்வாதி என்று ஒப்புக் கொண்டிருக்கிறீர்களே! அதிலே கூட

ஒரு விளக்கம், 50 ஆண்டு கால மூத்த அரசியல்வாதி என்பது ஒரு வேளை நீங்கள் அரசியலுக்குள் அடியெடுத்து வைத்த அந்தக் காலம் வரையில் என்று கணக்கிட்டிருப்பீர்கள்!

13வது வயது முதல் இதுவரையில் 65 ஆண்டுக்கால பொது வாழ்வுக்குச் சொந்தக்காரன் என்பது தங்களுக்குத் தெரிந்திருந்தாலும், 50 என்றாவது ஒப்புக் கொண்டதற்கு நன்றி!

இந்த மூத்த அரசியல்வாதியைத்தான், அவனது ஆட்சிக்காலத்தில் கண்டிக்கப்பட்ட, தண்டிக்கப்பட்ட, காவல்துறை அதிகாரிகளை தூண்டிவிட்டு நள்ளிரவில் படுக்கையறையில் நுழைந்து பதறப் பதற அடிக்கச் சொன்னீர்கள் போலும்!

இடைத்தேர்தலில் பேசினீர்களாம் ஏடுகளில் வந்துள்ளது! ‘‘அ.தி.மு.க. இருக்கும் வரையில் ஆண்டிப்பட்டியில் தி.மு.க. ஜெயிக்கவே ஜெயிக்காது’’ என்று!

ஆண்டிப்பட்டி தொகுதியில் அ.தி.மு.க.வை எதிர்த்து தி.மு.க. வெற்றி பெற்றதை நீங்கள் மறந்துவிட்டது தவறம்மா தவறு!

என் பேச்சுக்கு மறு பேச்சில்லை.
நான் இட்டதே சட்டம்!
சொன்னதே வேதம்!

என்று கர்ச்சித்தவர்களை எல்லாம் இந்தக் கழகம் சந்தித்துத்தான் இருக்கிறது.

இன்னொரு அறை கூவலும் விட்டிருக்கிறீர்கள்.

அதை வெளியிட வேண்டாமென ஏடுகள் விட்டு விட்டன போலும்! ஆனால் அந்தப் பேச்சை நேரில் கேட்டவர்கள் சொன்னார்கள்!

“அரசியலை விட்டு கருணாநிதியை
அகற்றியே தீருவேன்”

என்று சபதம் செய்தீர்களாம்!

அகற்றுதல் என்பதற்கு ஆங்கிலத்தில் ‘‘Eliminate" என்ற சொல்லையும் பயன்படுத்துவதுண்டு!

அரசியலில் இருந்து மட்டுமல்ல;
அம்மையார் அவர்களே! கருணாநிதியை
எந்த முறையிலோ; எப்படியோ -
எங்கிருந்தோ நீங்கள் அகற்றிவிடலாம்!

ஆனால் உலகம் முழுவதும் வாழ்கின்ற நன்றியுள்ள - அன்புள்ள - பாசமுள்ள - இன உணர்வுள்ள - மொழிப் பற்றுள்ள - மனித நேயமுள்ள - என்னருந்தமிழ் மக்கள் உள்ளத்திலிருந்து என்னை அகற்றுவதற்கு, நீங்கள் தலைகீழாக நின்றாலும் முடியாது!

உடன்பிறப்பே! உன்னை என் நெஞ்சில் பதித்தவாறு இந்தப் பதிலை அந்த அம்மையாருக்குத் தருகிறேன்.

அன்புள்ள,

மு.க.

20-2-2002

2687. பணிமுடிக்கும் வரையில் பாதை மறவாமல் பாடுபடு!

உடன்பிறப்பே,

இன்று காலை உதய சூரியனுக்கு முன்னால் எழுந்து அந்தி மயங்கும் வேளை வரையில் தயங்காமல் தேர்தல் பணி புரிவாய்; எனக்குத் தெரியும்!

ஒரு நாள் உணவு - இடையிடையே ஓய்வு - இவற்றை இந்த ஒரு நாள் மட்டும் மறந்து விடலாமல்லவா?

வாக்குச்சாவடி மூடப்படும் வரையில், வாக்காளர்கள் வரிசையில் கடைசி வாக்கு, பதிவாகும் வரையில் நீ காத்திருந்து கடமையைச் செய்திட வேண்டுமல்லவா?

பதிவான வாக்குகள் பாதுகாப்பான இடம் செல்லும் வரையிலும், ஏன் அதற்குப் பிறகும்கூட எண்ணி முடிக்கும் வரையில் அருகிருந்து அருகிருந்து - அகல விழிகளைத் திறந்து திறந்து - எந்த மோசடிக்கும் இடம் தராமல் விழிப்புடன் இருந்திட உன்னால் முடியுமல்லவா?

வன்முறை என்று பூச்சாண்டி காட்டி விட்டு, அந்தப் புதருக்குள் பதுங்கியிருந்து பாயும் வேங்கைகளை அடையாளம் காட்டிட உனக்குத் தெம்பும் திறமையும் உண்டல்லவா?

சென்னையில் செய்தார்களே! வாக்குச்சாவடியிலும், வாக்குகள் எண்ணும் கூடத்திலும், வன்முறையாளர்களின் வெறியாட்டம்!

அந்த வெறியாட்டத்தை ஆண்டிப் பட்டியில் அதிகாரிகளும், காவல் துறையினரும் அனுமதிக்கமாட்டார்கள் என்றே நம்புகிறேன்!

அந்த நம்பிக்கை நாசமாகாமல், அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் எனும் சிலப்பதிகார வரியைச் சிந்தையில் பதித்தே அதிகாரிகளும் காவலர்களும் செயல்படுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

அவர்களுக்கும் மனச்சாட்சி உண்டு -

நியாய அநியாயங்களை பகுத்துணரும் ஆற்றல் அதிகமாகவே உண்டு -

இத்தனைக்கும் மேலாக அவர்களுக்கு வீட்டில் பெண்டு, பிள்ளைகள், பெற்றோர், உற்றார் எனப் பலரும் உண்டு!

எனவே வீண்பழி சேரும் காரியத்தில் அவர்கள் விரும்பி ஈடுபடமாட்டார்கள்!

நல்லோரின் சாபத்திற்கு ஆட்பட முன்வர மாட்டார்கள்!

ஒருவேளை அரசினர் உத்திரவுக்கு ஆட்படுகிறோம் என்றால், அறம் உங்களை வீழ்த்தும் -

அராஜகம் தொடர்ந்து ஆட்டம் போட்ட வரலாறு இல்லை! - என்ற உண்மையை அவர்கட்கு உணர்த்து!

தி.மு.க. ஆட்சியில் நெல்லிக் குப்பம், புதுக்கோட்டை, திருச்சி-II, அறந்தாங்கி, அருப்புக்கோட்டை போன்ற தொகுதிகளில் இடைத் தேர்தல் நடந்தபோது எதிர்க்கட்சிக்காரர்கள் எவரையும் தொகுதியை விட்டு வெளியேறச் செய்யவில்லை என்பதை வீண்வம்பு செய்வோர்க்கு விளக்கிடு!

உடன்பிறப்பே,
பணிமுடிக்கும்வரையில்
நமது பாதை மறவாமல்
பண்பு சிதையாமல்
பாடுபடு! பாடுபடு!
நம்மைத் தேடி வரும் வெற்றி!

அன்புள்ள,

மு.க.

21-2-2002

2688. காது கொடுத்துக் கேள்; கற்பனை உரையாடல்!

உடன்பிறப்பே,

காது கொடுத்துக் கேள்! காவல் துறையில் இருவர் பேசிக் கொள்வதை!

கேட்டால் இதயத்துக்கு ஒரு வகையில் இதமாக இருக்கும், இவர்கள் மனச்சாட்சிக்கு மதிப்பு தருகிறார்களே என்று!

எரிச்சலும் பீறிட்டுக்கொண்டு எழும், இப்படி ஒரு ஆட்சி நடைபெறுகிறதே என்று!

முதல் நபர் :- என்னய்யா, ஏன் இந்த வேலைக்கு வந்தோம்னு இருக்கு! என் பொஞ்சாதி கூட நான் புறப்படும்போது சொன்னது இன்னும் என் நெஞ்சைப் பிளந்துகிட்டே இருக்கு!

2ஆம் நபர் :- அப்படி என்ன சொன்னுச்சு உன் பொஞ்சாதி? இன்னைக்கு ஒண்ணும் மாமூல் கீமூல் வாங்காதேன்னு சொன்னுச்சா?

முதல் நபர் :- அட, அது இல்லய்யா - என்கிட்டே தான் அந்தப் பழக்கமே கிடையாதே! ஏதோ கடவுளுக்கு பயந்துகிட்டு, வாங்கிற சம்பளத்துக்கு ஒழுங்கா கடமையை செஞ்சுகிட்டிருக்கிற நிம்மதியிருக்கே, அது போதாதா?

2ஆம் நபர் :- ஆமாய்யா! என்னைப் போல ஒரு ஆளு, கை சுத்தமா நீ இருக்கிறதுல எனக்கும் ஒரு நிம்மதி! உம், அப்பறம் வேற எதைப் பத்தி சொன்னுச்சு உன் பொஞ்சாதி? பின்ன எதுக்காக உமக்கு நெஞ்சைப் பிளக்குது?

முதல் நபர் :- ஏன்ய்யா! நமக்கு சுதந்திரம் எதுக்கு வந்துச்சு? இந்த சுதந்திரத்துக்காக காந்தி மகான் ஏன் அவ்வளவு தியாகம் பண்ணினாரு? தேசம் பூரா தியாக பூமியா மாறினது இந்த சுதந்திரத்துக்காகத்தானே?

2ஆம் நபர் :- ஆமாம்.

முதல் நபர் :- சுதந்திரத்தினாலே நமக்கு கிடைச்ச முதல் பலன் என்னய்யா?

2ஆம் நபர் :- முதல் பலன் ஜனநாயகம்! நம்ப நாட்டு ஜனங்கள், அவுங்க விரும்புகிற ஆட்சியையோ விரும்புகிற ஆளையோ தேர்ந்தெடுக்க இந்த ஜனநாயகத்திலேதான் ஒவ்வொருத்தருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டிருக்கு!

முதல் நபர் :- அந்த வாக்குரிமையைப் பயன்படுத்தி பெரிய பெரிய தலைவர்களையெல்லாம் தோற்கடிச் சிருக்காங்களே?

2ஆம் நபர் :- நிச்சயமா! ஏன், நம்ப தமிழ் நாட்டையே எடுத்துகிட்டா பெருந்தலைவர் காமராஜர், பேரறிஞர் அண்ணா இவுங்ககூட வெற்றிபெற முடியாமல் போயிருக்கு!

முதல் நபர்:- அவுங்களுக்கு வெற்றி கிடைக்காதுன்னு தெரிஞ்சு, எப்படியும் ஜெயிச்சாகணும்னு தேர்தலிலே ஏதாவது அடியாட்களை ஏவிவிட்டு அமளி துமளி பண்ணத் தூண்டினாங்களா? அல்லது போலீசைக் கைக்குள்ள போட்டுகிட்டு அவுங் களை விட்டே திருட்டு ஓட்டு போட்டு ஜெயிக்கணும்னு பாத்தாங்களா?

2ஆம் நபர் :- சே! சே! அதெல்லாம் இல்லை! இயல்பா முடிவுசெஞ்சு தீர்ப்பளிக்க வேண்டியது மக்கள் தான்னு, அந்த மக்கள் தீர்ப்புக்கே விட்டுட்டாங்க!

முதல் நபர் :- ஆனா, இப்ப இந்த அம்மாவைப் பாரும்! எப்படியும் ஜெயிச்சாகணும்னு எதையும் செய்யத் தயாராயிருக்காங்க!

2ஆம் நபர் :- இவுங்களும் போன முறை பருகூர்ல தோத்துப் போனவங்கதானே!

முதல்நபர்:- தோக்கிற ஜாடை முன்கூட்டியே தெரிஞ்சிருந்தா, அப்பவே நம்பளைப் போல இருக்கிற போலீஸ்களையெல்லாம் இப்ப பயன்படுத்துற மாதிரியே பயன்படுத்தி, ஜனங்களை பயமுறுத்தி, ஜனநாயகம் வென்றது! ஜனநாயக தேவதையே நான் தான்! என்று சொல்லியிருப்பாங்க!

இப்ப இடைத்தேர்தலிலே இழுபறி நிலைமை என்றதும், இட்லர் மைன்டட் அதிகாரிகளையெல்லாம் அழைச்சி என்ன செய்வீங்களோ தெரியாது! நான் ஜெயிச்சேன்னு அறிவிப்பு வரணும்! என்று கண்டிப்பான உத்திரவு போட்டுட்டாங்க!

2ஆம் நபர் :- நம்ப பெரிய அதிகாரிகளிலே சில பேரு அதுக்கு தலையாட்டிட்டு அப்படியே அடியொத்தி வேலை செய்யறதா தெரியுதே!

முதல் நபர்:- பெரிய அதிகாரிகள் வீட்டு பியூன்களிலே ஒருத்தன்தான் சொன்னான். அந்த அம்மா பேரைச் சொன்னாலே அய்யா நடுங்குறாராம் - அவுங்க யார் மேலயாவது அவதூறு கேஸ் போடுன்னு சொன்னா அதை மறுக்காம அப்படியே செஞ்சுட்டு, அதுக்கு பரிகாரம் தேட, படபத்ர காளியம்மன் கோயிலுக்கு போயி, நூறு தேங்கா உடைச்சி லட்சார்ச்சனை பண்ணி பாவம் போக்க பிராயச்சித்தம் செய்துக்கிறாராம்..... இப்படியெல்லாம் அப்பாவிகளைக் கொடுமைப்படுத்துறதை விட்டுட்டு இந்த உடுப்பையே கழட்டிக் கொடுத்துடலாம்னு,

நேத்தி கூட அவரோட சம்சாரத்துகிட்டே சொல்லி வருத்தப்பட்டாராம்...

2ஆம் நபர்:- உம்! அதுக்கு அவர் சம்சாரம் என்ன சொன்னாங்களாம்?

முதல் நபர் :- பொம்பளையாச்சே பயப்படுறாங்களாம். நாம்ப புள்ளைகுட்டியுள்ள குடும்பம்; இப்படியெல்லாம் அக்கிரம - அநியாயத்துக்கு துணை போனா,

வேதாளம் சேருமே, வெள்ளெருக்குப் பூக்குமே
பாதாள மூலி படருமே சேடன் குடி புகுமே
மன்றோரம் சொன்னார் மனை

என்ற பாட்டுக்கு நம்ப வீடு உதாரணமாயிடும்ன்னு அவர் சம்சாரம், புருஷன்கிட்டே புலம்புறாங்களாம்!

(இருவரும் பிரிந்து அவரவர் வழியில் செல்கிறார்கள்)

அன்புள்ள,

மு.க.

22-2-2002

2689. அரசியல் கிறுக்கருக்கு அய்யன் வள்ளுவரின் அறிவுரை!

உடன்பிறப்பே,

ஆண்டிப்பட்டி இடைத்தேர்தலில் கருணாநிதி களமிறங்கப் பயந்து, நவரச நாடகமொன்றை நடத்தி விட்டார் என்று அரசியல் கிறுக்கர் ஒருவர் எழுதியுள்ளதைப் படித்து, ''ஏ, அப்பா! எவ்வளவு எரிச்சல் இந்த மனுஷனுக்கு - தேளுக்குக் கொடுக்கிலும், பாம்புக்குத் தலையிலும்தான் விஷம்; இந்த மனுஷனுக்கு உடம்பு முழுவதும் விஷம் என்பார்களே! இவர் எழுதியுள்ளதைப் பார்க்கும்போது அது நூற்றுக்கு நூறு உண்மையென்று தெரிகிறதே'' என்ற முடிவுக்கு வந்திருப்பாய்''.

ஆமாம் உடன்பிறப்பே, ஆண்டிப்பட்டி தேர்தல் குறித்து நான் அச்சம் தெரிவித்ததும், அத்தேர்தலில் சட்டம் ஒழுங்கையும் தேர்தல் விதிமுறைகளையும் காலில் போட்டு மிதித்து விட்டு, ஜனநாயக விரோதமான காரியங்கள் திட்டமிட்டு நடத்தப்படும் என்பதை ஏற்கெனவே உள்ளாட்சித் தேர்தலிலேயே இவர்களின் ஆட்சியில் கிடைத்த அனுபவத்தைக்கொண்டு, இப்போதும் எண்ணிப் பார்த்து, வாணியம்பாடி, சைதாப்பேட்டை தொகுதி இடைத்தேர்தல்களைத் தள்ளி வைப்பதற்குத் தேர்தல் ஆணையத்திற்கு இருந்த ஆதாரங்களைவிட ஆண்டிப்பட்டி தேர்தலை தள்ளி வைத்திட அதிக ஆதாரங்களிருந்தும் அதனைத் தள்ளி வைக்காததைச் சுட்டிக்காட்டி, ஜனநாயக நாட்டில் ஜனநாயகத்தைக் காத்திடும் பொறுப்புள்ளவர்கள் அனைவரிடமும் முறையிட்டுக் கொண்டோமென்றால், அதற்குக் காரணம் இடைத்தேர்தலை சந்திக்கக் கருணாநிதிக்கு அச்சம் என்று ஹாஸ்ய விருந்து அளிப்பவர்களுக்கு இந்தக் கருணாநிதி, எதிர்க் கட்சியில் இருந்தவாறு சந்தித்த இடைத்தேர்தல்கள் பற்றித் தெரியாது. அல்லது தெரிந்திருந்தும், விழித்துக் கொண்டே தூங்குபவர்களாக நடிக்கிறார்கள் என்றே கருதவேண்டும்!

பெருந்தலைவர் ஆட்சிக் காலத்தில் திருவண்ணா மலையில் சந்தித்த இடைத்தேர்தலில் ப.உ.ச. வெற்றி பெற்ற அந்தக் களத்தின் தளநாயகனாக என்னைத் தான் அண்ணா நியமித்திருந்தார் என்பது அரை வேக்காட்டு அரசியல் கிறுக்கர்களுக்குத் தெரிந் திருக்க நியாயமில்லை! தெரிந்தாலும் தெரியாததுபோல இருக்கும் 'அரசியல் அகல்யா'க்களை சபிக்கத்தான் முடியும்! திருத்தவா முடியும்?'

அருமை நண்பர் எம்.ஜி.ஆர். ஆட்சியில் அண்ணாநகர் இடைத்தேர்தலைச் சந்தித்து கழகம் வெற்றிகண்டது - மயிலாடுதுறை இடைத்தேர்தலிலும் கழகமே வெற்றி பெற்றது!

இவ்வாறு காங்கிரஸ் ஆட்சி, எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலங்களில் எதிர்க்கட்சியாக இருந்தும் மற்றும் ஆளுங்கட்சியாக இருந்த நிலையில் நெல்லிக்குப்பம், புதுக்கோட்டை, அறந்தாங்கி, அருப்புக்கோட்டை, திருச்சி, குன்னூர் இடைத்தேர்தல்களிலும் கழகமே வென்றுள்ளது.

ஆனால் அந்த ஆட்சிகளில் எல்லாம் இடைத் தேர்தல் களின்போது வராத அச்சம், இந்த ஆட்சியில் தி.மு.க. வுக்கு மட்டுமன்றி எல்லா எதிர்க்கட்சிகளுக்குமே ஏற்பட்டதற்குக் காரணம், ஜனநாயகத்தை நடுநிலையுடன் காத்திட வேண்டிய அமைப்புகளும் - சட்டம் ஒழுங்கை பாரபட்சமின்றி நடைமுறைப்படுத்த வேண்டிய துறைகளும் சங்க இலக்கியத்திலே வர்ணிக்கப்படும் கையில்லாத ஊமை நிலைக்கு உள்ளாக்கப்பட்டதேயாகும். கொடிய வெயிலில் பாறையில் வைக்கப்பட்ட வெண்ணெய் உருகுகிறது! அதைப்போய் எடுத்துப் பாதுகாக்க கையுமில்லை! உரக்கக் கூவிச் சொல்ல வாயுமில்லாத ஊமை!

இதுபோல ஜனநாயக அமைப்புகள் - சட்டம் ஒழுங்கு காக்கும் துறைகள் ஆகிவிட்டால் இடைத்தேர்தல் அறிவிப்பே "அஷ்டகோணல் என்கிறபோது, எதிர்க் கட்சிகளுக்கு அச்சம் வராமல் என்ன செய்யும்?"

"அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில்"

அய்யன் வள்ளுவரின் இந்தக் குறளுக்குப் பொருள் தெரியாதவர்களுக்கு வேண்டுமானால், ஆண்டிப்பட்டி

இடைத்தேர்தலில் எப்படியெல்லாம் ஜனநாயக விரோத நடவடிக்கைகள் இந்த ஆட்சியில் அமலாகும் என்பதை அறிந்து அதற்கான சட்டரீதியானதும், ஜனநாயகப் பூர்வமானதுமான தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முயற்சித்தது கோழைத்தனமாகத் தெரியலாம்.

இதோ! நாம் இவ்வளவு எச்சரிக்கையாக இருந்தும் கூட - தேர்தலில் வாக்குப்பதிவு நாளுக்கு முதல் நாள் நடந்துள்ள அநியாயத்தை உனக்கும், உன் வாயிலாக தமிழ் மக்களுக்கும் தெரிவிக்க வேண்டிய கடமையை நிறைவேற்ற வேண்டிய அவசியம் எனக்கு ஏற்பட்டுள்ளது.

வாக்காளர்களாக பட்டியலிலே இடம் பெற்றவர்கள்,

1. பாஸ்போர்ட்,
2. ஓட்டுநர் உரிமம்.
3. வருமானவரி நிரந்தர கணக்கு அட்டை.
4. மாநில மற்றும் மத்திய அரசு, பொதுத்துறை நிறுவனங்கள், ஊராட்சி ஒன்றிய அமைப்புகள் மற்றும் தனியார் தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றால் வழங்கப்பட்டுள்ள பணியாளர்/ தொழிலாளர் அடையாள அட்டை.
5. வங்கி/விவசாயி/அஞ்சலக கணக்கு புத்தகங்கள்.
6. 1-1-2001-ம் நாளுக்கு முன்பு வழங்கப்பட்டுள்ள குடும்ப அட்டை.
7. தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான உரிய அதிகாரிகளால் வழங்கப்பட்டுள்ள சான்றிதழ்கள்.
8. மாணவர் அடையாள அட்டைகள்.
9. பட்டா மற்றும் பதிவு செய்யப்பட்ட சொத்து சம்பந்தப்பட்ட ஆவணங்கள்.
10. ஆயுத உரிமம்.
11. போக்குவரத்து துறையால் வழங்கப்பட்டுள்ள நடத்துநர் உரிமம்.

12. முன்னாள் படை வீரர்கள் மற்றும் ஓய்வு ஊதிய ஆணைகள்.
13. காலம் சென்ற முன்னாள் படை வீரரது மனைவி மற்றும் சார்ந்தவர்கள் சம்பந்தப்பட்ட ஆவணங்கள்.
14. ரயில் மற்றும் பேருந்து பயண அனுமதி அட்டை.
15. ஊனமுற்றோர்களுக்கான சான்றிதழ்கள்.
16. சுதந்திர போராட்ட வீரர்களுக்கான அடையாள அட்டை.

ஆகிய இந்த 16 சான்றிதழ்களில் ஏதாவது ஒன்றை வாக்குச் சாவடியின் அதிகாரியிடம் காட்ட வேண்டுமென்று 29.4.2001 அன்றே தேர்தல் ஆணையம் அனைத்துக் கட்சிகளுக்கும் அறிவிப்பு அனுப்பி வைத்துள்ளது.

இதற்குப் பிறகு ஆளுங்கட்சியினர் ஆண்டிப்பட்டி, வாணியம்பாடி, சைதாப்பேட்டை தொகுதிகளில் பல்லாயிரக்கணக்கில் போலி வாக்காளர்களை அதிகாரிகளின் துணையுடன் சேர்த்து விட்டனர். ஆதாரபூர்வமான புகாரின்பேரில் சைதாப்பேட்டை, வாணியம்பாடி தொகுதிகளில் தேர்தலை தள்ளிவைத்த இந்தியத் தேர்தல் ஆணையம், ஆண்டிப்பட்டியில் மட்டும் தள்ளி வைக்கவில்லை.

ஆயிரக்கணக்கான போலி வாக்காளர் பெயர்களும் விலக்கப்படாமல் வாக்காளர் பட்டியலிலேயே இருந்தன!

அவர்களிடம் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள மேற்சொன்ன 16 சான்றிதழ்களில் ஏதாவதொன்று இருக்க வேண்டுமல்லவா? அதுவுமில்லாத காரணத்தால், இங்குள்ள தேர்தல் ஆணையம் ஆளுங்கட்சியின் ஆணைக்கிணங்க, அவசர அவசரமாக 19.2.2002 (அதாவது தேர்தலுக்கு இரு நாட்களுக்கு முன்பு) என்ற தேதியிட்டு 20-ந் தேதி வாக்கில் ஒரு புதிய ஆணை பிறப்பித்துள்ளது. இந்த ஆணையின்படி, போலி வாக்காளர்கள் (அதாவது புதிதாகச் சேர்க்கப்பட்ட 17,000 பேர்) ஏற்கெனவே கூறப்பட்ட 16 சான்றிதழ்களில் ஒன்றுகூட இல்லா விட்டாலும்கூட, கிராம நிர்வாக அதிகாரியிடம் ஒரு சான்றிதழ் பெற்று வந்தாலே வாக்களிக்க அனுமதிக்கலாம் என்பதுதான் இந்தப் புதிய ஆணை!

ஆணையின் நகல் இதோ:-

இந்த ஆணையில் இந்த அறிவிப்புக்கு இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அனுமதி பெற்றதாக இருக்கிறது!

இந்திய தேர்தல் ஆணையம் எப்போது இந்த அனுமதி ஆணையை அனுப்பியது?

தமிழ்நாடு தேர்தல் ஆணையத்தின் வேண்டு கோளின்படி இந்திய தேர்தல் ஆணையம் இந்த அனுமதியைத் தந்ததா?

யாருடைய அல்லது எந்தக் கட்சிகளுடைய கோரிக்கையின்படி, தமிழ்நாடு ஆணையம், இந்திய தேர்தல் ஆணையத்தை இவ்வாறு கேட்டுக் கொண்டது?

தேர்தலுக்கு முதல் நாள் இப்படி ஒரு அவசர அறிவிப்புக்கு காரணம் என்ன?

இந்த அறிவிப்பு போலியாகப் பதிவாகியுள்ள வாக்காளர்களின் பெயர்களுக்குப் போலியாகவே ஆட்களைக் கொண்டுவந்து, அவர்களுக்கு கிராம அதிகாரி சான்றிதழ் மூலம் உண்மை வாக்காளர்கள் என்று உயிர் ஊட்டி காட்டிடத்தானே!

இதற்கெல்லாம் உரிய இடத்தில் விளக்கமளிக்க தேர்தல் ஆணையங்கள் இரண்டும் கடமைப்பட்டிருக்கின்றனவா; இல்லையா?

இந்த அறிவிப்பில் ஆண்டிப்பட்டி சட்டமன்ற தொகுதிக்கு என்று மட்டுமே குறிப்பிட்டிருப்பது, நெருப்புக் கோழி புதருக்குள் தலையை மட்டும் மறைத்துக்கொண்டு உடல் முழுமையும் மறைத்துக் கொண்டதாக நினைத்திடும் மூடத்தனத்திற்குச் சிறிதும் குறைந்ததாகத் தெரியவில்லை!

இப்போதாவது அரசியல் கிறுக்கர்கள் புரிந்து கொள்ளட்டும்!

"அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில்!"

அன்புள்ள,

மு.க.

24-2-2002

2690. நிருபர் கொலையுடன் முடியுமா தீவிரவாதக் கதை?

உடன்பிறப்பே,

எத்தனையோ கொலைகள் கொடூரமாக நடைபெறுகின்றன - எத்தனையோ உயிர்கள் காட்டுமிராண்டித்தனமாகப் பலியாக்கப்படுகின்றன - எத்தனையோ பேர், பெற்றோர் என்றும், பெற்ற மைந்தர் என்றும், கணவன் என்றும், கட்டிய மனைவி என்றும், அதிபர் என்றும், அமைச்சர் என்றும், தலைவர் என்றும், நண்பர்கள் என்றும் பல்வேறு நிலையில் உள்ளோர் இரத்த வெறி பிடித்தோரின் முரட்டுக் கரங்களுக்குள் தமது இறுதி மூச்சை விட்டிருக்கின்றனர்!

ஆனால் எந்தக் குற்றமும் சாட்டப்படாமல், கற்பனையாகக் கூட ஒரு குறையும் கூறப்படாமல், ஒரு மனிதனின் கழுத்தை அறுத்து, தீவிரவாதமெனும் தீய சக்தி தனது அகோர தாகத்தைத் தணித்துக் கொண்டிருக்கிறது!

அவன் நல்லவனா? கெட்டவனா? யாருக்காவது எந்தக் கெடுதியும் செய்தவனா?

இதைப்பற்றியெல்லாம் கவலைப்படாமல் ஏதுமறியாத இளஞ்சிசு ஒன்றை கடத்திக் கொண்டு போய், பெற்றோருக்கு நிபந்தனை விதித்து இடையே அச்சிசுவை உயிர் வேறு, உடல் வேறாகப் பிரித்து விட்டதைப் போல,

செய்தியாளராகப் பணியாற்றிய ஓர் அழகான வாலிபனை - அப்பாவி மனிதனை - டேனியல் பேர்ல் எனப்படும் அமெரிக்கப் பத்திரிகை நிருபரை, தீவிர வாதிகள் சிலர் கழுத்தை அறுத்துத் தீர்த்துக் கட்டியிருக்கிறார்கள்.

டேனியல் பேர்ல்ன் வயது 38 தான்! 1990ஆம் ஆண்டிலிருந்து வால் ஸ்ட்ரீட் என்ற அமெரிக்கப் பத்திரிகையின் செய்தியாளராக இந்தியாவில் பணியாற்றி வந்தவர். கடந்த ஓராண்டு காலமாக இந்தியாவில் தங்கியிருந்து கொண்டு பாகிஸ்தானில் வளர்ந்து

வரும் தீவிரவாதிகள் பட்டியலைத் திரட்டியபடியும், செய்தி சேகரித்து அனுப்பியவாறும் இருந்தார்.

பாகிஸ்தானில் உள்ள முஸ்லிம் பழமைவாத அமைப்பின் தலைவரிடம் பேட்டி எடுப்பதற்காக நேரம் ஒதுக்கிக் கொண்டு, அங்கே சென்றிருந்த போது கடந்த மாதம் 23ஆம் தேதி கராச்சியில் அவர் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டார். இன்றோடு சரியாக ஒரு மாதம்! இடையிலே இவர் கொலை செய்யப்பட்டு விட்டதாக ஒரு முறை தகவல் வந்து, அவர் உயிரோடு இருக்கிறாரா இல்லையா என்பதில் ஐயப்பாடு எழுந்து உயிரோடுதான் இருக்கிறார் என்றும் கூறப்பட்டு வந்தது. இறுதியாக நேற்று முன் தினம் இரவு 11 மணி அளவில் சிந்து மாகாண காவல் நிலையத்திற்கு ஒரு வீடியோ டேப் வந்துள்ளது. அதிலே தி வால் ஸ்ட்டிரீட் ஜர்னல் பத்திரிகை நிருபரைக் கடத்தியபோது எடுத்த காட்சிகளும், அவரைக் கொலை செய்த காட்சிகளும் இடம் பெற்றிருந்தன. அந்த டேப்பைப் பார்த்த பிறகு தான் சிந்து மாகாண அரசு டேனியல் பேர்ல் கொலை செய்யப்பட்டதாக அறிவித்தது. அந்த டேப் அமெரிக்க தூதரகத்திற்கும், அந்தப் பத்திரிகை அலுவலகத்துக்கும் அனுப்பப்பட்டு அவர்களும் பேர்ல் கொலையை உறுதி செய்தனர்.

தீவிரவாதத் தலைவர் முபாரக் அலி ஷா ஜிலானியைப் பேட்டி எடுக்க உதவுவதாகக் கூறி டேனியலை ஏமாற்றித்தான் அவரை கடத்தினார்கள் என்றும் தகவல் வந்தது.

ஆப்கானிஸ்தானில், தலிபான்கள் மற்றும் அல் கொய்தா அமைப்பினருடன் சேர்ந்துகொண்டு, அமெரிக்காவின் தலைமையிலான பன்னாட்டுப் படைகளை எதிர்த்துப் போராடிய பாகிஸ்தானியர்கள் சிறைப்பிடிக்கப்பட்டிருந்தனர். சிறையிலே உள்ள அவர்களை எல்லாம் விடுவிக்க வேண்டுமென்று கடத்தல்காரர்கள் கோரிக்கை விடுத்து நிருபரைக் கடத்தியிருந்தனர்.

கொல்லப்பட்ட செய்தியாளர் டேனியல் பேர்ல்க்கு 1999ஆம் ஆண்டு தான் திருமணம் நடைபெற்றுள்ளது. அவரது மனைவி மரியேன், பிரஞ்ச் நாட்டைச் சேர்ந்தவர், கணவர் கடத்தப்பட்ட நாளிலிருந்து எப்படியாவது தன் கணவரை உயிரோடு மீட்டுத் தரவேண்டுமென்று கோரிக்கை விடுத்துக் கொண்டிருந்தார். அவர் ஆறேழு மாத கர்ப்பிணியும் கூட! லாஸ் ஏஞ்சலில் உள்ள பேர்லின் குடும்பத்தினருக்கு செய்தி தெரிவிக்கப்பட்ட போது, அந்தக் குடும்பத்தினர் வெளியிட்ட அறிக்கையில் பேர்ல் உயிருக்கு

ஆபத்து ஏற்படும் என்று நாங்கள் அஞ்சினோம். அவர் கொலை உறுதி செய்யப்பட்டதை அறிந்து சொல்லொணாத் துயரம் அடைந்தோம். இந்த நிமிடம் வரை போல் உயிருடன் திரும்பி வருவார் என்று நம்பிக்கையுடன் இருந்தோம். டேனியல் போன்ற ஜெண்டில்மேனை நாகரிகமான மனிதர்கள் எவரும் கொலை செய்திருக்க மாட்டார்கள். நல்ல மகனாக, நல்ல சகோதரனாக, நல்ல மாமனாக, நல்ல கணவனாக, இன்னும் பிறக்காத பிள்ளைக்குத் தந்தையாக டேனியல் போல் விளங்கினார் என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

டேனியல் வேலை பார்த்த பத்திரிகையின் நிர்வாக ஆசிரியர் கூறும்போது, டேனியின் படுகொலை காட்டுமிராண்டித் தனமான செயல். அவரைக் கடத்திக் கொலை செய்தவர்கள் பாகிஸ்தான் பிரஜைகள். ஆகையால் இந்தச் சம்பவம் அந்நாட்டிற்கும், அந்நாட்டு மக்களுக்குமே மாபெரும் தலை குனிவு என்று கூறியிருக்கிறார்.

கடத்தப்பட்ட டேனியலைக் கண்டுபிடிக்க பாகிஸ்தான் அரசும், அமெரிக்க உளவு நிறுவனமும் எவ்வளவோ முயற்சிகள் செய்து வருவதாக செய்திகள் வந்த வண்ணமிருந்தாலும் அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. இனி யாரைக் கண்டுபிடித்தால் என்ன? கண்டு பிடிக்காவிட்டால் என்ன?

கடத்தலும், கொலையும், கொள்ளையும், வன்முறைச் சேட்டைகளும்தான் தீவிரவாதத்தின் கோட்பாடுகள் என்றால்,

அந்தத் தீவிரவாதம் எந்த வடிவில் வரினும் அதற்குத் தீபாராதனைக் காட்டுவது நமக்கு நாமே தேடிக் கொள்ளும் தீமை என்பதை மனித சமுதாயம் உணரும் வரையில் உய்வில்லை இந்த உலகிற்கு!

அதுவரையில் இதுபோன்ற குலை நடுங்கும் கொடுமைகள் தொடரவே செய்யும்!

நிருபர் பேர்ல்ன் சோக முடிவு இந்தத் தொடர் கதைக்கு முற்றுப்புள்ளி வைக்குமா என்பது சந்தேகமே!

அன்புள்ள,

மு.க.

24-2-2002

2691. எதிர்பார்த்ததும் - எதிர்பாராததும்!

உடன்பிறப்பே,

தமிழ் நாளிதழ் ஒன்றில் (தினமணி) தலையங்கப் பக்கக் கட்டுரையொன்று அடிக்கடி வெளியாகும். அந்தக் கட்டுரைகளில் காணப்படும் கருத்துக்களுக்கு அந்த நாளிதழ் ஆசிரியர்குழு, ஒட்டு மொத்தப் பொறுப்புடையது அல்ல எனினும், பல்வேறு கருத்துக்களுக்கும் இடமளிக்கும் வண்ணம் வெளியாகும் அந்தக் கட்டுரைகளை நான் படிக்கத் தவறுவதில்லை. அதுபோலவே தினகரன் நாளிதழிலும் அடிக்கடி பல சிக்கலானதும், சட்ட பூர்வமானதுமான பிரச்சினைகளை அலசிக் காட்டும் கட்டுரைகள் என்னைக் கவரக் கூடியவைகளாகும்.

26-2-2002 தினமணி தலையங்கப் பக்கக் கட்டுரையில் தேர்தல்கள் வெளிப்படுத்தும் எச்சரிக்கை என்ற தலைப்பில் பல மாநிலங்களைப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தாலும், தமிழ்நாட்டில் ஆண்டிப்பட்டியில் நடைபெற்று முடிந்த இடைத் தேர்தலைப் பற்றிக் குறிப்பிட்டிருப்பதே நம்மைப் பொறுத்தவரையில் மிக முக்கியமானதாகும்.

ஆண்டிப்பட்டி தேர்தல் என்பது மாநிலத்தில் உள்ள ஆளுங்கட்சியை அகற்றக்கூடிய தேர்தல் அல்ல. எனினும் அங்கு போட்டியிட்ட முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா வெற்றி பெற்றால் மீண்டும் முதலமைச்சராவார் என்ற நிலைமை, பல்வேறு கட்சிகளிடம் பல விதக் கட்டாயங்களை - நெருக்கடிகளை உருவாக்கியது. தேர்தல் முடிந்ததும் எதிர்பார்த்த ஒன்று தான் என்று எதிர்த்து நின்ற முக்கிய கட்சியினரே கூறி விட்டனர்.

இப்படிக் கட்டுரையின் முதற்பகுதி தொடங்கி, தொடர்ந்து பல மாநிலங்களுக்குப் பயணிக்கிறது. எதிர்த்து நின்ற தி.மு.கழகம் என்று பெயர்கூட குறிப்பிடாமல் முக்கிய கட்சி என்ற அளவிலாவது

தான் இருந்த கட்சியை மதிக்கின்ற கட்டுரையாளர் நமது நன்றிக்குரியவர்!

இதில் சிறப்பாகக் கவனிக்கப்பட வேண்டியது, எதிர்பார்த்த ஒன்று தான் என்று செய்தியாளர்களிடம் நான் சொன்ன பதிலை, முழுமையாக விரிவாக ஆய்வு செய்யாமல், ஜெயலலிதாவின் வெற்றி என்பது எதிர்பார்க்கப்பட்டது என்கிற மாதிரி நான் சொன்னதாக சுருக்கமான பொழிப்புரை மாத்திரம் கூறப் பட்டுள்ளது.

எதிர்பார்த்த ஒன்று என்பதில் உட்கருத்துகள் பல உண்டு என்பதை மறந்துவிடக் கூடாது! வெற்றி அடைவார்கள் என்பது மட்டுமே அடங்கியுள்ள பதிலாகாது!

எப்படி?
என்னென்ன செய்து?
அரசு இயந்திரத்தை எவ்வாறெல்லாம் பயன்படுத்தி?
தேர்தல் விதிகளை எப்படியெல்லாம் மீறி?
காவல்துறை அதிகாரிகளை எவ்வாறு முடுக்கிவிட்டு?

என்ற இந்தக் கேள்விகட்குக் கிடைத்த ஜனநாயகத்தைக் கேலிபுரியும் விடைகளும் எதிர்பார்த்ததுதான்! என்ற ஒரே ஒரு சொற்றொடரில் அடங்கியிருப்பவைகளேயாகும்.

ஆனால் எதிர்பாராமல் நடந்த ஒரு தீங்கு பற்றி திரும்பத் திரும்பச் சொல்லி வருகிறேன், இப்போதும் சொல்கிறேன்.

வாக்களிக்க வரும் வாக்காளர்கள், தங்களின் சான்றிதழாகக் காட்டுவதற்கு 16 ஆவணங்கள் ஏற்கெனவே 29-4-2001-ந்தேதி அன்று அறிவிக்கப்பட்டு அது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அந்த 16 ஆவணப் பட்டியலில் ஒன்றான ரேஷன் கார்டு என்பது ஒரு குறிப்பிட்ட தேதிக்குள் (1.1.2001க்கு முன்பு) வழங்கப்பட்டதாக இருக்க வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளதுபோல, அஞ்சலகங்களில் சேவிங்ஸ்க்கான பணம் கட்டிப் பெறுகிற சேவிங்ஸ் பாஸ்புக் பெறுவதற்கும் ஒரு தேதி வரைமுறை இருக்க வேண்டுமல்லவா?

தேர்தல் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு, தேர்தல் வாக்குப் பதிவு நாள் வரையிலே அந்த சேவிங்ஸ் பாஸ்புக்குகள் வழங்கப்பட்டு

போலி வாக்காளர்களுக்கு, உண்மை வாக்காளர்கள் என்று உயிரூட்டப்பட்டதைத் தேர்தல் ஆணையங்களுக்கு நாம் தெரிவித்தும்கூட, அதுபற்றி தேர்தல் ஆணையங்கள் வாய் திறக்காமல் இருந்தது ஏன்?

அதைவிடப் பெரிய அநியாயம் 16 சான்றிதழ்களைத் தவிர, 17வது சான்றிதழாக வி.ஏ.ஓ. எனப்படும் கிராம நிர்வாக அதிகாரியின் ஒப்புதல் கையெழுத்துச் சான்று எனப் புதிதாக ஒன்றையும் இணைத்துக் கொள்ளலாம் என்று ஓர் அறிவிப்பு மடல்! தேர்தல் நாள் பிப்ரவரி 21 என்றால், பிப்ரவரி 20-ந் தேதி மாலையில் தமிழக தேர்தல் ஆணையத்தினால் கட்சி அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

கொடுமையான வேதனை என்னவென்றால் கட்சிப் பிரதிநிதிகளின் கூட்டத்தைக் கூட்டி கலந்து பேசி எடுக்கப்படாத இந்த முடிவை ஏற்கெனவே ஆளுங்கட்சியினர் அந்தத் தொகுதியில் போலியாகச் சேர்த்திருந்த வாக்குகளையெல்லாம் விலக்கிடச் சொல்லிப் பல முறை தேர்தல் ஆணையத்தைக் கேட்டுக் கொண்டிருந்தும், விலக்கப்படாமலிருந்த அந்தப் போலி வாக்குகளையெல்லாம் கிராம நிர்வாக அதிகாரியின் சான்றிதழ் பெற்றுச் செல்லுபடியாகும் வாக்குகளாக மாற்றிக் கொண்டு விட்டனர்.

இந்த ஜனநாயக விரோதச் செயலுக்குத் தேர்தல் ஆணையமும் துணை போயிருப்பதாகத் தெரியும் போது, பெருமைக்குரிய இந்திய ஜனநாயகம் எங்கே போய்க் கொண்டிருக்கிறது என ஏங்கிப் பெருமூச்சு விடாமல் இருக்க முடிகிறதா?

ஆளுங்கட்சியினர் போலீசாரை வைத்து எதிர்க்கட்சியினரைக் குறிப்பாக தி.மு.கழகத்தினரை தேர்தல் பணி செய்யவிடாமல் தடுத்தது இருக்கட்டும்,

ஆளுங்கட்சியினரிடமுள்ள பெரும் பணத்தைக் கொண்டு ஒவ்வொரு கிராமங்களையும் விலை பேசி முடித்தது இருக்கட்டும்,

வனப்பகுதிகளில் கஞ்சா பயிரிடுவதைத் தடுப்பதில்லை யென்றும் தாராளமாகப் பயிரிட்டுக் கொள்ளலாமென்றும் அனுமதி அளித்தது இருக்கட்டும்,

இவையெல்லாம் அரசாங்கம் தனது அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்த பட்டியலிலும், தேர்தலை முன்னிட்டு அடிப்படை வசதிகளைச் செய்தனர் என்ற தேர்தல் விதிகளை மீறிய பட்டியலிலும் இடம் பெறக் கூடியவை!

இவையனைத்தும் எதிர்பார்த்ததேதான்!

ஆனால் நடுநிலையிலிருந்து நியாயம் வழங்க வேண்டியதும், ஜனநாயக ஆரோக்கியத்திற்குப் பொறுப்பாளியானதுமான தேர்தல் ஆணையங்கள் மத்தியிலும் மாநிலத்திலும் உள்ளவை இப்படி நடந்து கொள்ளக்கூடும் என்று எதிர்பார்க்கவே இல்லையே! இப்போது அதுவும் எதிர்பார்த்த ஒன்று என்று ஆகிவிட்டதே என்பதுதான் எனக்குள்ள கவலை! அது மட்டுமல்ல, இந்த திடீர் அனுமதியை தேர்தல் ஆணையம் வழங்கியதையும், அதை தேர்தலுக்கு முதல் நாள் அறிவித்ததையும் நாம் கண்டித்து தேர்தல் ஆணையத்துக்கு தெரிவித்தது போல ஆரம்பத்திலேயே பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனத் தலைவர் டாக்டர் ராமதாஸ் அவர்களும் கண்டித்துள்ளார்.

தேர்தலையே புறக்கணித்த கட்சிகளுக்கு ஆண்டிப்பட்டி பற்றி அக்கறையில்லாமற் போனாலும், அடுத்து வருகிற தேர்தல்களில் இந்த ஜனநாயக விரோத அடாவடித்தனத்துக்கு தேர்தல் ஆணையமும் துணை நிற்காமல் பார்த்துக் கொள்ளும் அக்கறை இருக்க வேண்டுமல்லவா?

உடன்பிறப்பே, தேர்தல் ஆணையமும் சேர்ந்து நடத்தியுள்ள இந்த மக்கள் விரோத திருவிளையாடல்களுக்கு உரிய இடத்தில் நியாயம் கேட்டு வாதாடுவோம்!

இனி இது போன்ற தவறுகள் நடைபெறாமல் தடுப்பதற்கான எச்சரிக்கையாக அது அமையட்டும்!

அன்புள்ள,

மு.க.

27-2-2002

2692. முரண்பாடுகளுக்குத்தானே இது காலம்!

உடன்பிறப்பே,

மாமியார் உடைத்தால் மண் சட்டி, மருமகள் உடைத்தால் பொன் சட்டி என்று கிராமியப் பழமொழி ஒன்று உண்டு!

இதற்கு உள்ளார்ந்த பொருள் என்னவென்றால், பொன் சட்டியாகவே இருந்து அதை உடைத்தது மாமியார் என்றால் அது வெறும் மண் சட்டிதான் என்று அலட்சியமாகக் கூறி விடுவது!

அது மண் சட்டியாகவே இருந்து அதை உடைத்தது, பாவம் மருமகள் என்றால், அய்யோ! பொன் சட்டியைப் போட்டு உடைத்து விட்டாளே! என்று மாமியார், மருமகள் மீது பாய்வது!

இதில் மாமியாருக்கும் மருமகளுக்கும் உவமையாக நான் யாரையும் குறிப்பிடப் போவதில்லை!

மண்சட்டி - பொன் சட்டி என்பதை மட்டும் நினைவு வைத்துக் கொண்டு, அவற்றை யார் உடைத்தால் என்ன சட்டியாக மாறுகின்றது என்பதை ஒப்பிட்டுப் பார்த்தால் போதுமானது.

மத்திய அரசின் ரயில்வே பட்ஜெட் வெளி வந்துள்ளது. தமிழகத்திற்கு இன்னும் பல முக்கிய திட்டங்களில் மத்திய ரயில்வே அமைச்சர் கவனம் செலுத்தி அக்கறை காட்டியிருக்கலாம் என்பது தமிழகம் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் கருத்து மட்டுமல்ல, பொதுவாக தமிழக மக்களின் மனக்குறையு மாகும்!

ரயில் கட்டணங்கள் உயர்ந்திருப்பது பற்றி இன்னும் இரண்டு நாட்களில் முதல்வர் பொறுப்பு ஏற்றிட இருக்கிற செல்வி ஜெயலலிதா அவர்கள், சாதாரண பொதுமக்களை இந்தக் கட்டணம் பாதிக்கும் என்பது என் அபிப்பிராயம் என்று தெரிவித்துள்ளார்.

அதாவது இதுவரையில் சென்னையிலிருந்து திருச்சிக்கு எக்ஸ்பிரஸ் இரண்டாம் வகுப்புக்கு 83 ரூபாய் என்றிருந்த ரயில்வே கட்டணம் இனிமேல் ரூபாய் 88 என்று ஆகிறது! அதாவது ரூபாய் 5 அதிகம்! சாதாரண புகைவண்டியில் திருச்சிக்கு வெறும் 48 ரூபாய் மட்டுமே!

ரயில் கட்டண உயர்வு, சாதாரண மக்களைப் பாதிக்கும் என்று கூறும் செல்வி ஜெயலலிதா, சென்னையிலிருந்து திருச்சிக்கான விரைவு சாதாரணப் பேருந்துக் கட்டணத்தை 81 ரூபாயிலிருந்து 104 ரூபாயாக அதாவது 23 ரூபாய் அதிகமாக இந்த ஆட்சியில் 2 மாதங்களுக்கு முன்பு வெளியிட்ட மினி பட்ஜட் மூலம் உயர்த்தியிருப்பதற்கு என்ன சமாதானம் சொல்லப் போகிறார்?

ரயில்வே கட்டணம் சென்னையிலிருந்து திருச்சிக்கு ஐந்து ரூபாய் உயர்வு என்பது மருமகள் உடைத்த பொன் சட்டி என்றும், பேருந்துக் கட்டணம் சென்னையிலிருந்து திருச்சிக்கு, 23 ரூபாய் உயர்வு என்பது மாமியார் உடைத்த மண்சட்டி என்றும் கூறப்போகிறாரா?

அது மட்டுமல்ல இன்றைய ரயில்வே கட்டணம் சென்னையிலிருந்து மதுரைக்கு 107 ரூபாயிலிருந்து 116 ரூபாய் என்று 9 ரூபாய்தான் உயர்வு!

ஆனால் பேருந்துக் கட்டணமோ, சென்னையிலிருந்து மதுரைக்கு ரூபாய் 113லிருந்து - ரூபாய் 144 என்று 31 ரூபாய் உயர்த்தப்பட்டுள்ளது.

நெல்லைக்கு ரயில் கட்டணம் ரூபாய் 136லிருந்து 145 ரூபாய் - அதாவது 9 ரூபாய்தான் அதிகம்!

ஆனால் நமது தமிழக அ.தி.மு.க. அரசின் பேருந்துக் கட்டணமோ, நெல்லைக்கு 152 ரூபாயிலிருந்து 195 ரூபாயாக அதாவது 43 ரூபாய் அதிகம்!

கன்யாகுமரிக்கு ரயில் கட்டணம் 165 லிருந்து 174 ரூபாய் - அதாவது 9 ரூபாய் அதிகம்!

அ.தி.மு.க. அரசின் பேருந்துக் கட்டணமோ, 177 ரூபாயிலிருந்து 49 ரூபாய் உயர்த்தப்பட்டு இப்போது 226 ரூபாய்!

கோவைக்கு ரயில் கட்டணம் சென்னையிலிருந்து 9 ரூபாய் அதிகம். அதாவது, ரூ. 109 லிருந்து ரூ. 118.

ஆனால் பேருந்துக் கட்டணம் 128 ரூபாய் என்பது 164 ரூபாயாக உயர்த்தப்பட்டு 36 ரூபாய் அதிகம்!

புரிகிறதா உடன்பிறப்பே, ரயில் கட்டண உயர்வு எனற மண்சட்டி உடைத்ததைக்கூட நாம் ஏற்றுக் கொள்ளவில்லை. அதே நேரத்தில், அ.தி.மு.க. ஆட்சி எனும் மாமியார், பொன் சட்டியை உடைத்து விட்டு மண் சட்டிதானே போனால் போகிறது என்கிறார் - அதே திருவாயினால், மருமகள் உடைத்தது மண் சட்டி எனத் தெரிந்தும் அய்யோ! போச்சு! போச்சு! பொன் சட்டி உடைஞ்சு போச்சு! சாதாரணப் பொதுமக்களைப் பாதிக்கும் ரயில் கட்டண உயர்வு! என்கிறார்!

இந்த முரண்பாடுகளுக்குத்தானே
உடன்பிறப்பே, இது காலம்!

அன்புள்ள,

மு.க.

28-2-2002

2693. தொய்வும், தொங்கலும் இல்லாத தொடர் பயணம்!

உடன்பிறப்பே,

காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயில் சன்னதி தெருவில் சந்தவெளி அம்மன் கோயிலில் இருக்கும் அம்மன் சிலையின் வலதுபுற கண் திடீரென்று திறந்திருப்பதாக ஒருவன் புரளி கிளப்பிவிட, அதைக் கேட்டுப் பக்தர்கள் கூட்டம் முண்டியடித்துக் கொண்டு, ஒருவர் மீது ஒருவர் விழுந்து நெருக்கிக் கொண்டு அம்மனை வழிபட ஓடோடி8 வந்தனர். நேரம் ஆக ஆக கார்கள், மோட்டார் சைக்கிள்கள் போன்ற வாகனங்களில் பக்தசிரோன்மணிகள் குடும்பம் குடும்பமாக வந்து குவிந்தனர். காஞ்சி நகரமே பெரும் பரபரப்பு அடைந்தது. இப்படி கூட்டம் வந்தால் திடீர் கடைகளுக்குப் பஞ்சமா என்ன? சில்லறைக் கடைகள் ஏராளமாக அந்த இடத்தில் தோன்றின!

அம்மனின் கண் திறந்தது மாத்திரமல்ல! அந்தக் கண்ணிலே இருந்து நீர் வருவதாகவும், அண்டப் புளுகனை மிஞ்சிய ஒரு ஆகாயப் புளுகன் புரளி கிளப்பி விட்டான். இதனால் மேலும் மக்கள் கூட்டம் அதிகரித்தது.

என்ன?
ஏன்?
எப்படி?
எதனால்?
இருக்குமா?
நடக்குமா?
முடியுமா?

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் இடம் தராதவர்கள் தானே நமது சமுதாய மக்கள். போலீசார் வந்து உண்மையை எடுத்துரைத்தும் அந்த மக்கள் அதனைக் கேட்பதாக இல்லை. நீண்ட நேரத்திற்குப் பிறகுதான், யாரோ தங்களை ஏமாற்றி

விட்டதாக அந்தப் பக்த சிரோன்மணிகள் உண்மையை உணர்ந்து ஒவ்வொருவராக கலைந்தார்கள்.

காஞ்சிபுரம் புரளியை மிஞ்சக்கூடிய அளவிற்கு, காரைக்குடியை அடுத்த கரியப்பட்டி கிராமத்தில், ஒரு புரளி பூத்துக்குலுங்கி, இறுதியாக புழுதியில் தன்னைத் தானே மூடிக் கொண்டு விட்டது. முன்பின் தெரியாத ஒரு சிறுமி கடந்த 19ஆம் தேதி காலை கரியப்பட்டிக்கு வந்தாள். அவளைப் பார்த்த அந்த ஊரார் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லாமல் வாயை மூடிக்கொண்டிருந்த காரணத்தால் சிறுமியை ஒரு மேடையில் ஏற்றி உட்கார வைத்தனர். சில மணி நேரத்திற்கெல்லாம் ராஜேஷ் என்பவன், அந்தச் சிறுமிக்கு முன்னால் பாம்பு போல படமெடுத்தாட ஆரம்பித்தான். அந்த மனிதப் பாம்பு சிறுமியை நோக்கி ஊர்ந்து நகர்ந்தது. ஆத்தா! முத்து மாரி! என்றவாறு அவன் எழுந்து குதிக்க ஆரம்பித்த செய்தியறிந்த பக்கத்து ஊர் மக்கள், கரியபட்டியை நோக்கி படை எடுத்தனர். விடிய விடிய பல ஊர் மக்கள் பழங்களோடும், பூக்களோடும், விபூதி குங்குமப் பொட்டலங்களோடும் அந்த சிறுமி இருந்த இடத்திற்கு ஓடோடி வந்தனர். முதலில் அவர்கள் கொடுத்த உணவுப் பொட்டலங் களை வாங்கிச் சாப்பிட்ட சிறுமி பிறகு, எதையும் சாப்பிடாமல் பட்டினி கிடக்கத் தொடங்கினாள். அம்மனின் அவதாரம்தான் அந்தச் சிறுமி என்ற நம்பிக்கை பரவிட பரவிட, பல வழிகளில் சென்று கொண்டிருந்த பேருந்துகள் எல்லாம் கூட கரியபட்டிக்கே திருப்பி விடப்பட்டன. மூன்று நாள் பட்டினி கிடந்த சிறுமி மயங்கிய நிலைக்கு ஆளானபோது, குழுமியிருந்த பக்தகோடிகள் அம்மனைப் பற்றிய பக்திப் பாடல்களைப் பாடியபடி அங்கேயே தவம் கிடக்க ஆரம்பித்து விட்டனர்.

அவள் உயிருக்குப் போராடுகிறாள் என்பதை அறியாமல் தவடையிலும், கன்னத்திலும் போட்டுக் கொண்டு, தாயே அம்மா! வரம் தரும் தாயே! எங்களை வாழ வைப்பாய் தாயே! என்றெல்லாம் பாடத் தொடங்கி விட்டார்கள். இந்தச் செய்தி அறிந்த போலீசார் அங்கு வந்து அந்தச் சிறுமியைத் தூக்கிக் கொண்டு போய் காரைக்குடி அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள். அங்கே அந்தச் சிறுமிக்கு க்ளூகோஸ் ஏற்றப்பட்டது. டாக்டர்கள் அவளைப் பரிசோதித்த பிறகுதான் அந்தப் பெண்

மன நிலை பாதிக்கப்பட்டிருப்பது தெரியவந்தது. அப்போதும் அந்த மருத்துவமனையைச் சுற்றி பக்தர்கள் கூட்டம் பெருகிவிட்ட காரணத்தினால் அவளை மதுரை மருத்துவமனைக்கு போலீசார் கொண்டு சென்று விட்டார்கள்.

இப்படி காஞ்சிபுரத்திலும், காரைக்குடி கரியபட்டியிலும் ஏராளமான பொது மக்கள் ஏமாற்றத்திற்கு ஆளாக்கப்பட்ட இரு நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன. இரு நிகழ்ச்சிகள் மாத்திரமல்ல, இது போன்ற நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றவைகளேயாகும்.

எத்தனை ஆயிரம் நிகழ்ச்சிகள் இப்படி நடைபெற்றாலும், அந்த நிகழ்ச்சிகள் பற்றிய மோசடிகள் உடனுக்குடன் அம்பலமாக்கப்பட்டாலும், அடுத்தடுத்து இத்தகைய நிகழ்ச்சிகள் நடப்பது குறையவில்லை.

இரண்டு நாட்களுக்கு முன்பு சன் தொலைக்காட்சியில், சிறப்புப் பார்வை என்ற தலைப்பில், அதிசயம் விளைவிப்பதாகச்சொல்லும் மாய சாமியார்கள் பற்றிய ஒரு தொகுப்புச் சுருக்கம் காட்சியாக காட்டப்பட்டது.

நெல்லை மாவட்டத்தில் திருவேங்கடநாதபுரம் என்று அழைக்கப்படும் சிறுவளஞ்சி என்ற ஊரில் பூபால் அடிகளார் என்று ஒரு சாமியார். அவரை காட்சியாகக் காட்டினார்கள். அவர் ஆஞ்சநேயரின் அவதாரம் என்று தன்னைப் பற்றிக் கூறிக் கொள்கிறார். தேங்காய்களைப் பல்லால் கடித்து, உரித்துத் தள்ளுகிறார். வாழைப் பழங்களைத் தாரோடு விழுங்குகிறார். அனுமாருக்கு உள்ள சேட்டைகள் அனைத்தும் அவருடைய அங்க அசைவுகளில் காணப்படுகிறது. அந்தச் சாமியாரின் சீறல், சத்தம், பார்வை என அனைத்தையும் பார்த்து பரவசப்படும் பக்தர்கள் தங்களுக்குள்ள பல பிரச்சினைகளை அவரிடம் எடுத்துக் கூறி, குறி கேட்டுச் செல்கிறார்கள். அந்த வட்டாரத்துப் பக்தர்கள் அவருக்கு வைத்துள்ள பெயர் குரங்கு சாமியார்!

மற்றொரு சாமியார் பெயர் மாரிச்சாமி. கோவில்பட்டி அருகே ஏழாயிரம்பண்ணை என்ற ஊரில் இவர் இருக்கிறார். பால பருவம் முதல் குறி சொல்லி வரும் இவர், காளியின் வடிவமாக இருந்துதான் குறி சொல்வேன் என்று சேலை அணிந்து

கொண்டு குறி சொல்கிறார். இப்போது நான் எல்லை சாமியாராக அவதரிக்கப் போகிறேன் என்று கூறி சுருட்டு, மதுபானம் போன்றவைகளையும் பகிரங்கமாக உபயோகிக்கிறார். இவரிடம் குறி கேட்கச் செல்கிறவர்கள் பீர் பாட்டில்களை டஜன் கணக்கிலே வாங்கிச் செல்கிறார்கள். அவைகளின் மூடிகளை பல்லாலேயே கெல்லி எறிந்து விட்டு, பீர் குடித்துக் கொண்டே குறி சொல்கிறார். இவருக்கு பீர் சாமியார் என்று செல்லப் பெயரும் உண்டாம்.

தஞ்சைப் பகுதியில் பிரபலமான ஒரு சாமியாருக்குப் பெயர் ராமமூர்த்தி சாமியார். இவர் முற்றிலும் வித்தியாசமான முறையில் குறி சொல்கிறார், அல்லது வரம் தருகிறார். இவருடைய கையிலே ஒரு கத்தை தர்ப்பைகள் கட்டப்பட்ட தொகுப்பு உள்ளது. அதை தனது காதோரம் வைத்துக் கொண்டு நான் இப்போது தொலைபேசியிலே அம்மனிடம் பேசுகிறேன் என்று அம்மனிடம் பேசுவது போல பேசுகிறார். அம்மா, பக்தர்கள் வந்திருக்கிறார்கள், ஒவ்வொருவருடைய அபிலாஷையையும் பூர்த்தி செய் அம்மா! என்று கூறிக் கொண்டே ஒவ்வொன்றாகச் சொல்கிறார். அம்மன் பதில் சொல்வதைப் போல பாவனை காட்டிக் கொண்டு, எதிரே உள்ள விபூதி தட்டில் தன் கையிலே இருக்கின்ற சிறிய வேல் ஒன்றை எழுதுகோலாகப் பயன்படுத்துகிறார். குடும்பப் பிரச்சினைகள், குழந்தை பாக்கியம் என இவரை நாடி வரும் பக்தர்களுக்குப் பஞ்சமே இல்லை. தர்ப்பையை காதிலே வைத்துக் கொண்டு தொலைபேசியிலே பேசுவதைப் போல இவர் குறி சொல்வதால் இவருக்கு, எஸ்.டி.டி. சாமியார் என்றும் பெயர் உள்ளது.

குமரி மாவட்டம் உடையப்பன்குடியில், ஒரு பெண் துறவி சாமி ஆடியவாறு குறி சொல்கிறார். கண்கள் செருக, கோபாவேசமாக இவர் தரும் அருள்வாக்கைக் கேட்க, பக்தர்களுக்கிடையே பெருத்த ஆர்வம். அதே மாவட்டத்தில் நாகர்கோவில் நாகராஜா கோவிலில் இருக்கும் சாமியார் சற்று வித்தியாசமானவர். வெற்றிலையில் மை போட்டுப் பார்த்து பொது மக்களின் குறைகளைக் கேட்டு நிவர்த்தி சொல்வதால் இவருக்கு வெற்றிலை சாமியார் என்று பெயர்.

உடன்பிறப்பே,

எத்தனை புத்தர்கள் தோன்றினாலும்,
எத்தனை வர்த்தமானர்கள் தோன்றினாலும்,

இந்து மதத்திலே சீர்திருத்தங்கள் செய்ய விரும்பிய விவேகானந்தர் போன்றவர்கள் எத்தனை பேர் தோன்றினாலும்,

கண்மூடி வழக்கமெலாம் மண் மூடிப்போக! என்றுரைத்த வடலூர் வள்ளலார்கள் எத்தனை பேர் தோன்றினாலும்,

ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி அலையும் அறிவிலிகாள்! பல்லாயிரம் வேதம் அறிவொன்றே தெய்வம் உண்டாமெனல் கேளீரோ? மாடனை, காடனை, வேடனைப் போற்றி மயக்கும் மதியிலிகாள்! எதனூடும் நின்றோங்கும் அறிவொன்றே தெய்வம் என்றோதி யறியீரோ? என்றுரைத்த பாரதியார்கள் எத்தனை பேர் தோன்றினாலும்,

கடவுள் பெயரைச் சொல்லி ஏமாற்றாதே! அதைக் கேட்டு ஏமாறாதே! என்றுரைத்த பெரியார்கள் எத்தனை பேர் தோன்றினாலும்,

ஒன்றே குலம்! ஒருவனே தேவன்! என்ற திருமூலரின் வாக்கினைத் திரும்பத் திரும்ப எடுத்துக்கூறி, சமுதாயத்தைத் திருத்த நினைத்த பேரறிஞர் அண்ணா போன்றவர்கள் எத்தனை பேர் தோன்றினாலும்,

மாடுகளும் வழக்கத்தால் செக்கைச் சுற்றும் என்று புரட்சிக் கவிஞர் பாடியதற்கேற்ப இன்னமும் பழைய நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் இவற்றிற்கு ஆட்பட்டு மதியிழக்கும் மாந்தர்களும், இவற்றை மூலதனமாகக் கொண்டு பக்தி வியாபாரத்தை நடத்தி ஆதாயம் பெறும் சாமியார்களும், பெருகிக் கொண்டே தான் இருக்கிறார்கள்.

என் செய்வது?

இவற்றையெல்லாம் எடுத்துக்காட்டி பகுத்தறிவு விழிப்புணர்வினை ஏற்படுத்தத் தொடங்கப்பட்ட சுயமரியாதை இயக்கத்தின் பணி விரிவடையாமலும், வேகமுறாமலும் போனதால்தான் ஊரை ஏமாற்றும் போர்வழிகள், கடவுளர்களைத் தமக்குத் துணையாக்கிக் கொண்டு பிழைப்பு நடத்தும் பெருந்தீமை, சமுதாயத்தில் மேலும் மேலும் வேர் விட்டுக் கொண்டேயிருக்கிறது.

காட்டுமிராண்டித்தனமானச் செயல்களாலும் - காணிக்கைகள் வழங்குவதாலும் கடவுளைத் தமது கைக்குள் போட்டுக் கொண்டு, எண்ணியதை எண்ணியவாறு எய்தலாமென ஏமாற்றும் போலி வேடதாரிகளிடமிருந்து, பொது மக்களை மீட்டுப் புதிய சமுதாயம் காண்பதற்கான பயணம் முடிந்து விடவில்லை.

அதன் எல்லையை அடைவதற்கு இன்னும் தொலை தூரம் கல்லையும், முள்ளையும், காட்டாறுகளையும் தாண்டிச் செல்ல வேண்டியிருக்கிறது.

அந்த முயற்சியில் தொய்வு இல்லாமலும், தொங்கல் இல்லாமலும் ஈடுபட்டால்தான் நாம் பெரியார் - அண்ணா வழி வந்தவர்கள் என்பதை மெய்ப்பித்தவர்களாவோம்!

அன்புள்ள,

மு.க.

1-3-2002

2694. இப்போது எங்கே போனது அந்த அறிவுரை?

உடன்பிறப்பே,

மத்திய அரசின் ரயில்வே பட்ஜெட் வெளியானவுடன் அது பற்றி நான் கருத்து கூறும்போது, ரயில் கட்டண உயர்வை நாம் ஏற்றுக் கொள்ளவில்லை என்றும் தமிழகத்திற்குத் தேவையான மேலும் பல முக்கிய ரயில் பாதை திட்டங்களிலே கவனம் செலுத்தப்படவில்லை என்பது தமிழ்மக்களின் மனக்குறை என்றும் தெரிவித்தேன்.

தொடர்ந்து மத்திய அரசின் நிதிநிலை அறிக்கை நேற்று அறிவிக்கப்பட்டவுடன், அதிலே சர்வதேச அளவில் கல்வியின் தரத்தை உயர்த்துதல், விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களை நேரடியாக விற்பனை செய்வதற்கான ஏற்பாடு, பெட்ரோல், டீசல் போன்றவைகளுக்கான விலை குறைப்பு போன்ற அம்சங்களைப் பாராட்டி விட்டு, கேஸ் சிலிண்டர், மண்ணெண்ணெய், யூரியா போன்றவைகளுக்கான விலை உயர்வைக் கண்டித்து அதனை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்றும் தெரிவித்தேன். அந்தக் கருத்தில் இப்போதும் உறுதியாக இருக்கின்றேன்.

ஆனால் ஒரு சிலர் ரயில் கட்டண உயர்வு மக்கள் விரோத செயல் என்று தங்கள் தலைவியின் அறிக்கையைத் தொடர்ந்து இன்று காரசாரமாக அறிக்கை விடுகிறார்கள். நாமும் ரயில் கட்டணம் ஓரளவு உயர்வு என்பதை ஒப்புக் கொண்டுதான் அறிக்கை விடுத்துள்ளோம். ஆனால் தமிழக அரசு நிதி நிலை அறிக்கையிலேயும், பிறகு மினி பட்ஜெட் என்ற பெயரால் நவம்பர் இறுதியிலே வெளியிடப்பட்ட அறிக்கையிலும் எந்த அளவிற்கு வரிகளும், கட்டணங்களும் உயர்த்தப்பட்டன?

வெளியூர்களுக்கு சாதாரண பேருந்துகளுக்கான கட்டணம் கிலோ மீட்டருக்கு 22 பைசாவிலிருந்து 28 பைசாவாகவும்,

எக்ஸ்பிரஸ் பேருந்துகளுக்கு கிலோ மீட்டருக்கு 25 பைசாவிலிருந்து 32 பைசாவாகவும், எக்ஸ்பிரஸ் சூப்பர் டீலக்ஸ் பேருந்துகளுக்கு கிலோ மீட்டருக்கு 30 பைசாவிலிருந்து 38 பைசாவாகவும் உயர்த்தினார்கள்,

ஒவ்வொரு ஊருக்கும் மத்திய அரசு உயர்த்திய ரயில் கட்டண உயர்வும், தமிழக அ.தி.மு.க. அரசின் பேருந்து கட்டண உயர்வும் வருமாறு:

	ரயில் கட்டண உயர்வு	பேருந்து கட்டண உயர்வு
1. திருச்சி	ரூ.5	ரூ.23
2. மதுரை	ரூ.9	ரூ.31
3. நெல்லை	ரூ.9	ரூ.43
4. கன்னியாகுமரி	ரூ.9	ரூ.49
5. கோவை	ரூ.9	ரூ.36

இது மாத்திரமல்ல; சேலத்திற்கு 25 ரூபாய், கும்பகோணத்திற்கு 20 ரூபாய், தூத்துக்குடிக்கு 38 ரூபாய், ஈரோடிற்கு 29 ரூபாய் என்ற அளவிற்கு பேருந்து கட்டணங்கள் உயர்த்தப்பட்ட போது வாய் திறக்காதவர்கள், ரயில் கட்டணம் 100 கிலோ மீட்டர் வரை 3 ரூபாய் அளவிற்கும், 300 கி.மீ.வரை 5 ரூபாய் அளவிற்கும் மட்டுமே உயர்த்தப்பட்டதை எதிர்த்து வேகமாகக் குரல் எழுப்புகிறார்கள்.

அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்றதும் ஜூன் திங்களில் வைத்த நிதி நிலை அறிக்கையிலேயே 135 கோடி ரூபாய்க்கு புதிய வரிகள் போடப்பட்டன. அதற்குப் பிறகு விரைவில் புதிய நிதி நிலை அறிக்கை வரவுள்ளது. இதற்கிடையில் நவம்பர் இறுதியில் ஒரு மினி பட்ஜெட் தாக்கல் செய்து 4 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் அரசுக்கு வருவாய் வரக்கூடிய அளவிற்கு பல கட்டண உயர்வுகளையும் வரி உயர்வுகளையும் அறிவித்தார்கள்.

வீடுகளுக்கான குறைந்தபட்ச மின்சாரக் கட்டணம் யூனிட்டுக்கு 75 காசு என்பது 85 காசாகவும், அதிகபட்ச மின் கட்டணம் யூனிட்டுக்கு ரூ.3.05 என்பது ரூ.4 ஆகவும் உயர்த்தப்பட்டது, அதைப் போலவே தொழிற் சாலைகளுக்கும், வர்த்தக நிறுவனங்களுக்கும் மின் கட்டணம் உயர்த்தப்பட்டது.

மோட்டார் வாகனங்களுக்கான வரிகள் உயர்த்தப்பட்டன.

மாணவர்களின் படிப்புகளுக்கான கட்டணங்கள் உயர்த்தப்பட்டன.

தி.மு.கழக ஆட்சியில் முழு வரி விலக்கு அளிக்கப்பட்ட சமையல் எண்ணெய், பருத்தி பின்னல் ஆடை போன்றவைகளுக்கும் மற்றும் கணினி மென்பொருள், யூரியா போன்றவைகளுக்கும் 4 சதவிகிதம் வரி விதிக்கப்பட்டது. டீசல், பர்னஸ் ஆயில், சிமெண்ட் ஆகியவற்றிற்கு நுழைவு வரி 2 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாக உயர்த்தப்பட்டது.

காஸ்டிக் சோடா, காற்றழுத்த விளக்குகள் போன்ற பொருட்களுக்கு 11 சதவிகிதத்திலிருந்து 12 சதவிகிதமாக வரி உயர்த்தப்பட்டது.

பால் விலை லிட்டருக்கு இரண்டு ரூபாய் உயர்த்தப்பட்டது.

அரசு மருத்துவமனைகளில் பார்வையாளர்களுக்கு 5 ரூபாய் கட்டணம் விதிக்கப்பட்டது.

சிறப்பு சிகிச்சைக்காக வரும் நோயாளிகளுக்கு கட்டணம் விதிக்கப்பட்டது.

இந்த அளவிற்கு தமிழக அரசு மினி பட்ஜெட்டில் வரிகளையும், கட்டணங்களையும் உயர்த்திய போது திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் வீரமணி விடுத்த அறிக்கையில் “தவிர்க்கவே முடியவில்லை, வேறு வழியே இல்லை என்கிற நிலையில் தமிழ்நாடு அரசு பேருந்து கட்டணம், மின் கட்டணம், ரேஷன் அரிசி முதலிய பொருள்களின் விலைகளை உயர்த்தியுள்ளது. தமிழ்நாடு அரசின் நிதி நிலையை உணர்ந்தவர்களுக்கு இத்தகைய முடிவு ஆச்சரியத்தை ஏற்படுத்தாது. மருந்து கசந்தாலும் தேவைப்படும் நேரங்களில் அதனை விழுங்குவதில்லையா, அந்த நிலைதான் இன்று ஏற்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்தவரை பெரும் நட்டத்தில் நடந்து கொண்டிருக்கிறது, 31-3-2001 முடிய அனைத்து போக்குவரத்துக் கழகங்களையும் சேர்த்து நட்டத் தொகை ரூ. 2035.02 கோடி என்று நினைக்கிற போது தலையைச் சுற்றுகிறது. தவிர்க்க முடியாத நிலையில் சில பொருள்களின் விலைகளை உயர்த்தியுள்ள அதே நேரத்தில் சில சிக்கன நடவடிக்கைகளை

மாநில அரசு மேற்கொண்டுள்ளது வரவேற்கத் தக்கதாகும்" என்று சொல்லியிருக்கிறார்.

இந்த அளவிற்கு ஜெயலலிதா அரசின் நடவடிக்கைகளுக்கு ஆதரவு தெரிவித்தவர் தற்போது கன்னியாகுமரிக்கு மத்திய அரசு ரயில் கட்டணத்தை 9 ரூபாய் அளவிற்கு உயர்த்தியிருப்பது அதிகமாம்! ஆனால் அதே கன்னியாகுமரிக்கு ஜெயலலிதா அரசு பேருந்து கட்டணத்தை 49 ரூபாய் அளவிற்கு உயர்த்தியிருப்பது குறைவாம்! கசப்பு மருந்தாம்! விழுங்க வேண்டுமாம்!

திருச்சிக்கு மத்திய அரசு ரயில் கட்டணத்தை 5 ரூபாய் அளவிற்கு உயர்த்தியிருப்பது அதிகமாம்! ஆனால் அதே திருச்சிக்கு ஜெயலலிதா அரசு பேருந்து கட்டணத்தை 23 ரூபாய் அளவிற்கு உயர்த்தியிருப்பது குறைவாம்! கசப்பு மருந்தாம்; விழுங்கிடுக என்கிறார்!

கோவைக்கு மத்திய அரசு ரயில் கட்டணத்தை 9 ரூபாய் அளவிற்கு உயர்த்தியிருப்பது அதிகமாம்! மக்கள் விரோத செயலாம்! ஆனால் அதே கோவைக்கு ஜெயலலிதா அரசு பேருந்து கட்டணத்தை 36 ரூபாய் அளவிற்கு உயர்த்தியிருப்பது குறைவாம்! மக்கள் பாராட்டுகின்ற செயலாம்! பாவம்; அகில இந்திய ரயில்வே அளவற்ற லாபத்துடன்; நஷ்டமேயின்றி நடப்பது போலவும் - தமிழக பஸ் போக்குவரத்துக் கழகம் மட்டுமே நஷ்டத்தில் தள்ளாடுவதாகவும் கதையளக்கிறார்கள்! கசக்கும் மருந்து; கண்டிப்பாக விழுங்க வேண்டுமென்கிறார்கள்! இப்போது மட்டும் எங்கே போனது அந்த அறிவுரை?

அன்புள்ள,

மு.க.

02-03-2002

2695. இலாவணிப் பாட்டும், தாவணிக் கனவும்!

உடன்பிறப்பே,

இந்தியத் திருநாட்டின் பல மாநிலங்களில் இரத்தக் களறியும், இராணுவ நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலையும் இன்னமும் தொடர்வது மிகவும் கவலையளிப்பதாக இருக்கிறது.

27-2-2002 அன்று அயோத்தியிலிருந்து ஆமதாபாத் நகருக்கு சபர்மதி விரைவு ரயிலில் வந்து கொண்டிருந்த கரசேவகர்கள் மீது, வன்முறைக் கும்பல் பெட்ரோல் குண்டுகளை வீசியதின் காரணமாகப் குழந்தைகள், பெண்கள் உட்பட சுமார் 60 பேர் கொல்லப்பட்டதுதான் இதற்கான தொடக்கமாகும்! இந்தச் செய்தியைத் தாங்கி அனைத்து ஏடுகளும் 28ஆம் தேதி காலையில் வந்ததும், உடனடியாக அன்றைய தினமே அந்தச் சம்பவத்தைக் கண்டித்தும், இறந்தவர்களுக்கு இரங்கல் தெரிவித்தும் வன்முறை தொடராமல் இருக்க மத்திய மாநில அரசுகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டும் அறிக்கை விடுத்தேன். நான் மாத்திரமல்ல, பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ், ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ ஆகியோரும் கண்டன அறிக்கை விடுத்துள்ளனர். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஏட்டில் அந்தச் சம்பவத்தைக் கண்டித்து தலையங்கமே எழுதப்பட்டிருந்தது.

ஆனால் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா, அதே நாளன்று விடுத்த அறிக்கையில், இந்தச் சம்பவத்தைக் கண்டித்ததோடு மட்டும் நிறுத்தாமல், தேவையின்றி, உண்மையை உணர்ந்து கொள்ளாமல், பெரும்பான்மைச் சமுதாயத்திற்கு எதிராக நடத்தப்பட்ட காட்டுமிராண்டித்தனமான இந்தச் சம்பவம் மிகவும் கண்டிக்கத்தக்கது. இதுபோன்று ஏதாவது ஒரு சம்பவம் சிறுபான்மை இன மக்களுக்கு எதிராக நடத்தப்பட்டால், எல்லா அரசியல் தலைவர்களும் ஓடிச்சென்று கண்டன அறிக்கை

வெளியிடுகிறார்கள். ஆனால் அதைவிட வெறித்தனமான முறையில் பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு எதிராகக் காட்டுமிராண்டித்தனமாக நடந்த இந்தத் தாக்குதலைக் கண்டித்து எந்த ஒரு அரசியல் தலைவரும் இதுவரை கண்டன அறிக்கை வெளியிடவில்லை. இது விநோதமாகவும், வருத்தம் அளிப்பதாகவும் உள்ளது என்று குறிப்பிட்டிருந்தார்.

அந்த அறிக்கையிலே, ஜெயலலிதா, வேறு எந்த அரசியல் தலைவர்களும் நடந்த சம்பவத்திற்கு கண்டனம் தெரிவித்து அறிக்கை விடவில்லை என்று குறிப்பிட்டது முற்றிலும் தவறானதும், அவர் உண்மையை தெரிந்துகொள்ளாமலும் எழுதப்பட்ட வார்த்தைகளுமாகும். சம்பவச் செய்தி வந்த அன்றைய தினமே கழகத்தின் சார்பில், நான் அதனைக் கண்டித்திருக்கிறேன். இன்னும் சொல்ல வேண்டுமேயானால், யாரும் இதுவரை கண்டிக்கவில்லை என்று சொன்ன ஜெயலலிதா அறிக்கை வெளிவந்த அதே நாளில் என்னுடைய அறிக்கையும் ஏடுகளில் வந்துள்ளது. மேலும் ஜெயலலிதா, நடந்த சம்பவத்திற்குக் கண்டனத்தை மட்டும் தெரிவிக்காமல், பெரும்பான்மையோர், சிறுபான்மையோர் என்று சில கருத்துகளை தெரிவித்திருக்கிறார். அதனைப் பாராட்டி சில அரசியல் தலைவர்கள் கருத்து தெரிவித்திருந்தபோதிலும், அது, நமக்கு ஏற்புடையதல்ல. திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், நான் பல முறை தெரிவித்தவாறு பெரும்பான்மைச் சமுதாயம், சிறுபான்மைச் சமுதாயத்தை அரவணைத்துச் செல்ல வேண்டும். அதே நேரத்தில் சிறுபான்மைச் சமுதாயம், பெரும்பான்மைச் சமுதாயத்தை மதித்து நடந்துகொள்ள வேண்டும் என்பதுதான்.

தேசிய ஜனநாயகக் கூட்டணி உதயமான போது அதன் செயல் திட்டத்தில் We reach out to the morities and eve at the cost of repetition proclaim that we will safeguard the rights as enshrined our Constitution (அரசியல் சட்டத்தில் சிறுபான்மை மக்களுக்கு அளிக்கப்பட்டுள்ள உரிமைகளுக்கு பாதுகாப்பு அளிப்பது எங்கள் கடமையாகும்) Secularism - the emotional armory of all Indians and full protector of morities (மதச்சார்பின்மை: இந்திய நாட்டு மக்கள் அனைவரது உணர்வுகளுக்கும் மதிப்பளிக்கப்படும், சிறுபான்மை மக்களுக்கு முழுப் பாதுகாப்பு அளிக்கப்படும்) என்று

சொல்லியிருக்கிறோம். இந்த நிலையிலே பா.ஜ.க. இதுவரை உறுதியாகத்தான் உள்ளது.

பெரும்பான்மைச் சமுதாயத்தின் மீது 27 ஆம் தேதி நடைபெற்ற தாக்குதலை வன்மையாகக் கண்டித்த நான், அந்தப் பெரும்பான்மைச் சமுதாயத்தின் தாக்குதலுக்கு அதற்கடுத்த நாளே ஆளான சிறுபான்மைச் சமுதாயத்தைப் பற்றியும், நேற்றைய தினம் அறிக்கை விட தவறவில்லை. அந்த அறிக்கையிலே கூட சிறுபான்மை மக்கள், பெரும்பான்மை மக்கள் என்றெல்லாம் பகுத்துப் பார்ப்பதைவிட, எல்லோரும் இந்திய மக்கள்தான் என்ற அடிப்படையில் பிரச்சினையை அணுகி கொந்தளிப்பைத் தணிக்க வேண்டுமென்றுதான் குறிப்பிட்டிருக்கிறேன்.

பெரும்பான்மைச் சமுதாயத்தினர் தாக்கப்பட்ட போது, அதைக் கண்டித்து எந்த அரசியல் கட்சித் தலைவரும் அறிக்கை விடவில்லை என்று உண்மைக்கு மாறாக அறிக்கைவிட்ட ஜெயலலிதா, நேற்றைய தினம் சிறுபான்மையினர் 200க்கு மேற்பட்டவர்கள் கொலை செய்யப்பட்டது குறித்தோ, அதிலே காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் குடும்பத்திலே உள்ள அனைவரும் உயிரோடு கொளுத்தப்பட்டது குறித்தோ, இந்த நேரம் வரை எந்தவொரு அறிக்கையும் விடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஜெயலலிதா விடுத்துள்ள அறிக்கையைக் கண்டித்து தலையங்கம் எழுதிய மார்க்சிஸ்ட் கட்சியின் தீக்கதிர் ஏடு, தமிழ்நாட்டில் தி.மு.க., அ.தி.மு.க. லாவணி அரசியல் வேதனையான அரசியலாக ஆகி, இப்பொழுது மதவெறி அரசியலைத் தலையில் தூக்கி வைத்து அ.தி.மு.க. ஆடும் நிலைமை வந்துவிட்டது என்று எழுதியுள்ளது. அதிலே அ.தி.மு.க.வைப் பற்றி அவர்கள் எழுதியது குறித்து, நான் எதுவும் சொல்ல விரும்பாத போதிலும், தி.மு.க.வை எதற்காக வம்புக்கு இழுத்திருக்கிறார்கள் என்றுதான் புரியவில்லை. ஒருவேளை தங்களுடைய அண்மைக்காலத் தோழமைக் கட்சி என்ற காரணத்தினால், அ.தி.மு.க. விடம் பரிவுகாட்ட வேண்டும் என்பதற்காக, தி.மு.கழகத்தைத் தாக்குவதின் மூலம் அதை சமநிலைப்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கருதியோ, அல்லது வருங்காலத்தில் மீண்டும் அவர்களோடு அணிசேர நேரிடலாம் என்று எண்ணியோ அப்படி எழுதியிருக்கிறார்கள் போலும்!

அயோத்திப் பிரச்சினையிலேப் பிரதமர் வாஜ்பய் அவர்கள், பேசி முடிவெடுக்க வேண்டும், அல்லது உச்ச நீதிமன்றத் தீர்ப்பிற்குப் பிறகு அதன்படி நடக்க வேண்டும் என்ற கருத்தில் உறுதியாக இருந்து, அதை திரும்பத் திரும்பச் சொல்லி வரும்போது அதன்மீது தி.மு.கழகம் அபிப்பிராய பேதம் கொள்ளவேண்டிய அவசியம் எழவில்லை. ஆனால் தி.மு.க. விற்கும் அ.தி.மு.க. விற்கும் இடையே லாவணி அரசியல் என்று மார்க்சிஸ்ட் ஏடு எழுதியிருப்பதுதான் வேடிக்கையாக உள்ளது. நெருக்கடி நிலை அமலில் இருந்தபோது அதனை ஆதரித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும், நெருக்கடி நிலையை எதிர்த்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் நடத்திய ''தீக்கதிர் பாஷை லாவணி அரசியலும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. பி.ராமமூர்த்தி அவர்கள் வெளியிட்ட நூலுக்குக் கண்டனம் தெரிவித்து திராவிடர் கழகமும், அந்த நூலை ஆதரித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் தீக்கதிர் பாஷையில் லாவணி அரசியல் பாடியதையும் நாடு மறந்து விடவில்லை. எனவே தி.மு.கழகம் லாவணி பாடுகின்ற இயக்கமும் அல்ல! வருங்கால உறவுக்காக ஏங்கி தாவணிக் கனவில் மிதப்பதுமல்ல!''

அன்புள்ள,

மு.க.

3-3-2002

2696. இடுக்கில் நுழையும் அரசியல்!

உடன்பிறப்பே,

கொலை வெறி கோர தாண்டவமாடும் குஜராத்தில் இதுவரை மதவெறிக்குப் பலியான உயிர்களின் எண்ணிக்கை 500ஐத் தாண்டும் என்கிற செய்தியைப் படிக்கிற போதும், அன்பு வளர்த்து, அமைதி போற்றி, அவ்வழியில் அடிமை விலங்கொடிக்க அல்லும் பகலும் அயராது பணியாற்றி - மத நல்லிணக்கம் காணவும், மனித நேயம் வளர்க்கவும் தன்னையே அர்ப்பணித்துக் கொண்ட அண்ணல் காந்தியடிகள் பெற்றுத் தந்த சுதந்திர தேவிக்கு இந்த தேசத்து மக்களில் ஒரு பகுதியினர் நடத்துகிற குருதி அபிஷேகத்தைக் காணுகிற போதும், நம்மையே மறந்து அய்யகோ என அலறத் தோன்றுகிறது! அம்மவோ எனக் கூவத் தோன்று கிறது!

இந்த அவலம், குஜராத் கோத்ரா ரயில் நிலையத்தில் ஆரம்பமானபோது, மத உணர்வை முகமூடியாக்கிக் கொண்டு அரசியல், தனது நாச வேலையை நடத்தியதாக இப்போது தகவல்கள் வெளியாகின்றன. கோத்ரா ரயில் நிலையத்தில் நடத்தப்பட்ட காட்டு மிராண்டிப் பேயாட்டம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டிருப்போர் பெயர்களையும், அவர்கள் சார்ந்துள்ள அரசியல் கட்சியையும் பார்க்குமிடத்து, அவர்கள்தான் உண்மைக் குற்றவாளிகள் என அறியப்பட்டால், மதங்களைக் கேடயமாக்கிக் கொண்டு அரசியல் ஆதாயம் தேடுகிற விஷமிகள், நிச்சயமாக அடையாளம் காட்டப்படுவார்கள்.

மத வெறி வன்முறைக்கு இன்னொரு மத வெறி பதிலாக அமையுமேயானால், அதற்கு இது - இதற்கு அது என்ற பழிவாங்கும் போக்கின் ஆயுள் நீளுமே தவிர, பரிகாரம் எதுவும் விளையப் போவதில்லை.

அயோத்தியில் இராமர் கோயில் கட்டும் பிரச்சினையில், இன்றைக்குக்கூட ஏடுகளில் வந்துள்ள செய்தி விளக்கங்களின்படி,

நீதிமன்ற தீர்ப்பு மூலமோ, இரு தரப்பு பேச்சுவார்த்தை மூலமோதான் முடிவு காண முடியுமே அல்லாமல், அதற்கிடையே அரசின் அனுமதி வழங்கப்படமாட்டாது என்று இந்தியப் பிரதமர் திரு. வாஜ்பய் அவர்கள் மீண்டும் ஒருமுறை திட்டவட்டமாகத் தெளிவுபடுத்தியுள்ளார். இதனால் ஆத்திரமடைந்துள்ள விசுவ இந்து பரிட்சத், பிரதமர் அவர்களைக் கடுமையாகத் தாக்கி எச்சரித்துள்ளது.

நம்மைப் பொறுத்தவரையில், தேசிய ஜனநாயகக் கூட்டணியில் நாம் இடம் பெற்ற காலத்திலிருந்து, இந்தக் கூட்டணியும், கூட்டணி ஆட்சியும் சிறுபான்மை மக்களின் பாதுகாப்புக்கும், உரிமைகளுக்கும் அளித்துள்ள உத்திரவாதத்திலிருந்து ஓர் இழையும் வழுவாது என்பதை அழுத்தம் திருத்தமாகச் சொல்லி வருகிறோம். அது மட்டுமல்ல, நாம் ஏற்றுள்ளதும், எடுத்துள்ளதுமான அந்த நிலையை எந்தச் சூழலிலும், எவ்வளவு நெருக்கடியிலும், எத்தகைய இடரும் இன்னலும் வரக் கூடும் என்ற போதிலும், இம்மியும் பிசகாமல் கடைப்பிடிப்போம் என்பதைத் தொடர்ந்து செயலிலும் காட்டி வருகிறோம்.

கோத்ரா ரயில் கொளுத்தப்பட்டு, கரசேவைக்குச் சென்று திரும்பியவர்கள் மிகக் கொடுமையாகக் கருகிய சருகுகளாக ஆக்கப்பட்ட பரிதாபகரமான பயங்கரத்தைக் கண்டிப்பதற்கு, உடனடியாக இந்த எழுதுகோல் எப்படித் துடித்து எழுந்ததோ, அதே போலத்தான் பழிக்குப் பழி என்ற நிலையில் தொடர் படு கொலைகள் நடைபெற்று, அப்பாவிகள் ஐநூறுக்கு மேற்பட்டோரின் ஆவி போக்கப்பட்ட அக்கிரமத்தையும் கண்டித்திட இந்த எழுதுகோல் ரத்தக்கண்ணீர் சிந்துகிறது!

ஆமதாபாத்தில் கலவரப் பகுதிகளைப் பார்வையிட வந்த உள்துறை அமைச்சர் திரு.அத்வானி அவர்களுடன் வந்த மத்திய அமைச்சர் திரு. ஷாநாவஸ் உசைன் அவர்கள்,

மத்தியிலும், குஜராத்திலும் நாங்கள் ஆட்சியில் இருக்கும் வரையில், சிறுபான்மை மக்கள், தங்களின் பாதுகாப்பு குறித்து பயப்படத் தேவையில்லை. நானும் முஸ்லீம் சமூகத்தைச் சேர்ந்தவனேதான். அந்த முறையிலும் இந்த உறுதியை என்னால் கூற முடியும்.

என்று பேசியிருப்பது, சிறுபான்மை மக்களின் அச்சத்தைப் போக்கியிருக்கிறது.

நம்முடைய கருத்து என்னவென்றால், சிறுபான்மை யோராயினும், பெரும்பான்மையோராயினும் இந்த இரு பிரிவுகளிலுமுள்ள ஒரு சில மதவெறியாளர்களின் தூண்டுதலுக்கு ஆளாகாமல் - அவற்றிடையே இடுக்கு பார்த்து நுழைய முயலும் அரசியல் சந்தர்ப்பவாதங்களுக்கு இடம் தராமல், மத நல்லிணக்கத்தைக் கட்டிக் காத்திடவும், மனித நேயத்தை வளர்த்திடவும் கட்சிகளுக்கு அப்பாற்பட்ட நிலையில் கடமையாற்றிட முன் வந்தால்தான், அனைவரும் விரும்புகிற, அமைதி பூத்துக் குலுங்கும் பூமியாக இந்தியத் திருநாடு விளங்கிட முடியும்!

அதற்கு மாறாக, அமைதிக்கு விலங்கிட முனைவோர் எவராயினும், அவர்கள் எம்மதத்தைச் சார்ந்தோர் ஆயினும், அவர்கள் மதவெறியூட்டுவோர் பட்டியலில் இடம் பெற்று, மனித நேயப் பகைவர் என்ற அடைமொழிக்கு உரியவரே ஆவர்!

அயோத்தியில் இராமர் கோயில் கட்டியே தீருவோம் என ஆவேசக் குரல் எழுப்புவோரும்,

அப்படியா? கட்டிவிடுவார்களா? அரசு அனுமதித்து விடுமா என்று ஆதங்கப்படுவோரும்,

இருதரப்பு பேச்சுவார்த்தையில் தீர்வு அல்லது நீதிமன்றத் தீர்ப்பை இரு தரப்பினரும் ஏற்பது என்று எடுத்துள்ள நிலையில் மாற்றமில்லை. அதற்கிடையே அயோத்தியில் பிரச்சினைக்குரிய பகுதியில் இராமர் கோயில் கட்ட அரசு அனுமதிக்காது.

என்று பிரதமர் வாஜ்பய் அவர்கள் தொடர்ந்து கூறி வருகிற உறுதியான வார்த்தைகளுக்கு மதிப்பளித்து அமைதி காப்பது ஒன்றே இந்த நாட்டின் ஒற்றுமைக்கும், பாதுகாப்புக்கும் பேரரணாக அமையும்.

அன்புள்ள,

மு.க.

5-3-2002

2697. அவைத்தலைவர் காளிமுத்துக்கு ஓர் அன்பு மடல்!

அன்புள்ள தம்பி காளிமுத்து அவர்களுக்கு,
வாழ்த்துகளுடன் வரையும் மடல்!

அவர்களுக்கு என்று நான் விளித்திருப்பதைத் தவறாக எடுத்துக் கொண்டு - உறவில் தொலை தூரம் இடைவெளி ஏற்பட்டு விட்டதாகக் கருத வேண்டாம். பேரவைத் தலைவராக வீற்றிருக்கிற அந்த உயரிய பதவிக்கான உரிய மரியாதையை வழங்க வேண்டுமல்லவா? அதனால்தான் தங்களுக்கு எழுதும் இக் கடிதத்தில், அவர்களுக்கு என்று மரியாதையுடன் குறிப்பிட்டிருக்கிறேன்.

ஒருவர்க்கு மரியாதை தருவது தமிழர் பண்பாடு! - ஆனால் அது பரஸ்பரம் கிடைக்காவிட்டால் என்னைப் பொறுத்தவரையில், சுயமரியாதை தலைதூக்கி நிற்கும் என்பதைத் தாங்கள் அனுபவ ரீதியாக அறிவீர்கள்.

எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பு, நீங்களும், தம்பி காமராசும் இயக்கத்தின் இளம்புயல்களாக உருவெடுத்த மாணவப் பருவத்தில், மதுரையில் காலேஜ் ஹவுஸ் மாடியில் நடைபெற்ற ஒரு விழாவில், மதுரை மாவீரர் முத்து அவர்களால் எனக்கு அறிமுகப்படுத்தப்பட்டு, விழாவில் நான் ஆற்றிய உரையில் தெரிவித்த என் இதயமார்ந்த வாழ்த்துகளை இன்னமும் நினைவில் வைத்திருப்பீர்கள். இப்போதும் அந்த நிகழ்ச்சியும், நூல்கள் வெளியீடும் என் நெஞ்சில் நிழலாடிக் கொண்டுதானிருக்கின்றன.

கழகம் நடத்திய இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டு, தாங்கள் அரசியல் சட்ட மொழிப் பிரிவு நகலைக் கொளுத்தியபோது கைது செய்யப்பட்டு, பாளையங்கோட்டை சிறைக்குக் கொண்டு செல்லப்பட்டபோது, அந்தச் சிறையில் நான் 1965-ல் அடைக்கப்பட்டிருந்த அதே கொட்டடியில்தான் தங்களையும் அடைக்க வேண்டுமென்று வலியுறுத்தி வேண்டியதை நாங்கள் கேள்விப்பட்டிருக்கிறோம்.

1971ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தாங்கள் சிவகாசி சட்டப்பேரவைத் தொகுதிக்குப் போட்டியிட்ட போது, இரவு 12 மணியளவில் நான் பேசிய பொதுக் கூட்டம், பெருங்கடலாகக் காட்சியளித்ததும், அதில் தங்கள் உரையும், தொடர்ந்து நான் ஆற்றிய உரையும் மறக்கக் கூடியவைகளா?

ஒன்றை மறந்து விடப் போகிறேன்! தங்கள் மண விழாவுக்குக்கூட நான்தானே தலைமை வகித்து வாழ்த்தினேன்.

எல்லாவற்றையும் விட, அருமை நண்பர் எம்.ஜி.ஆர். புதிய கட்சி தொடங்கிய போது, தாங்களும் அதில் இணைந்திடச் சென்ற வழியில் எனக்கு அனுப்பிய கடிதத்தில், இறைவா! உன்னை விட்டுப் பிரிகிறேன் என்று குறிப்பிட்டு, காரணத்தையும் விவரித்திருந்தீர்களே! (உள்ளூர்க் காரணம்) அந்தக் கடிதம்கூட என்னிடம் பத்திரமாகவே இருக்கிறது.

இவற்றையெல்லாம் நினைவலைகளில் நனைத்துக் கொண்டு, இக்கடிதம் எழுதுவதற்கு ஒரு காரணம் இருக்கிறது. சட்டப்பேரவைக்கு நான் வந்து கலந்து கொள்ள வேண்டுமென்று அழைப்பு விடுத்திருக்கிறீர்கள். அதைச் சில ஏடுகள் அழைப்பு என்றும், சில ஏடுகள் எச்சரிக்கை என்றும், சில ஏடுகள் வேண்டுகோள் என்றும் தலைப்பிட்டு வெளியிட்டிருக்கின்றன.

நான் முதலமைச்சராக வருவதற்கு முன்பே, பெருந் தலைவர் காமராசர் ஆட்சியில் - பெரியவர் பக்தவத்சலனார் ஆட்சியில் - எதிர்க்கட்சித் துணைத் தலைவராகவும், எதிர்க்கட்சித் தலைவராகவும் பணியாற்றியிருக்கிறேன். என்னை முதல்வராகக் கொண்ட கழக ஆட்சியில் கம்பனடிமை கருத்திருமன், நண்பர் கே. விநாயகம், பொன்னப்ப நாடார் போன்ற தலைவர்கள் எதிர்க்கட்சி வரிசையிலேயிருந்து ஆக்கப் பூர்வமான விவாதங்களை நடத்தியிருக்கிறார்கள். மற்றும் பல்வேறு கட்சித் தலைவர்களும் எதிர் வரிசையில் இருந்திருக்கிறார்கள்.

அ.தி.மு.க. உதயமான கால கட்டத்தில் அவையில், திடீரென, கேள்வி நேரத்துக்கு முன்பேயும், நேரம் ஒதுக்கப்படாத நேரத்திலும் அரசின்மீது நம்பிக்கையில்லா தீர்மானம் போன்றவைகள் கொண்டு வரப்பட்டு, அதனால் அவை நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டு, விரும்பத்தகாத அசம்பாவிதங்கள் சில நடைபெற்று மிருக்கின்றன. அதுபோல மரபையும், விதிமுறைகளையும் மீறுகிற எந்தப்

பிரச்சினையானாலும் இப்போது பேரவைத் தலைவர் என்ற முறையில் தாங்கள் அனுமதிக்கமாட்டீர்கள். ஆனால் அன்றைக்கு பேரவைத் தலைவரே (மதியழகன்) அரசுக்கு விரோதமாகச் செயல்பட்ட சூழ்நிலை! பிறகு அவரே தி.மு. கழகத்திற்கு மீண்டும் வந்துவிட்டார் என்பது தாங்கள் அறிந்த ஒன்றேயாகும்!

பின்னர் எமர்ஜென்சியை சந்தித்து, அந்த நெருக்கடி நிலையை எதிர்த்த காரணத்திற்காக, கழக ஆட்சி 1976-ல் கலைக்கப்பட்டு 1977-ல் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் தலைமையில் அ.தி.மு.க. ஆட்சி அமைந்த போது, நான்தான் எதிர்க்கட்சித் தலைவர்! எத்தனையோ சூடான விவாதங்கள்! 1980-ல் எம்.ஜி.ஆர். ஆட்சியிலும் நான்தான் எதிர்க்கட்சித் தலைவர்! தங்களையும் அமைச்சர் வரிசையிலே ஒருவராகப் பார்க்கும் அரிய வாய்ப்பு கிடைத்திருந்தது!

பின்னர் 1989-ல் தி.மு. கழகம், பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று என் தலைமையில் ஆட்சி அமைந்தது. அதாவது 13 ஆண்டுக் கால இடைவெளிக்குப் பிறகு, நான் மூன்றாவது முறையாக முதலமைச்சராகிறேன். அந்த ஆட்சியின் முதல் நிதி நிலை அறிக்கையைப் படிக்க எழுந்து நிற்கிறேன்.

எதிர்க்கட்சித் தலைவியாக வீற்றிருந்த ஜெயலலிதா அம்மையார் எழுந்து குறுக்கிட்டு, கடுமையான வார்த்தைகளைக் கூறி நீ பட்ஜெட் படிக்கக் கூடாது என்று தடுத்தார். அதைத் தொடர்ந்து அ.தி.மு.க. சட்ட மன்ற உறுப்பினர்கள் என் மீது பாய்ந்தனர். என் கையில் உள்ள பட்ஜெட்டை அ.தி.மு.க. உறுப்பினர் பிடுங்குகிற புகைப்படத்தையும் இம்மடலுடன் இணைத்துள்ளேன். தாங்கள் ஒருவேளை மறந்து போயிருக்கக் கூடும் என்பதற்காக! என் மூக்குக் கண்ணாடி கீழே விழுந்து உடைந்து சிதறுகிற அளவுக்கு என் முகத்தில் குத்தப் பட்டதும் அப்போதுதான்! ஆட்சி தொடங்கி முதல் நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்த அதே நாளில், அவையில் கலவரம் விளைவித்து ஆட்சியைக் கலைக்க திட்டமிடப்பட்டதை பின்னர் ஒருநாள் அவையிலேயே தம்பி திருநாவுக்கரசு அவர்கள் அம்பலப்படுத்தியிருக்கிறார்.

ஆனால் அந்தப் புகைப்படங்களையும், திரட்டிய தகவல்களையும் அடிப்படையாக வைத்து ஆளுநராக இருந்த

அலெக்சாண்டரும் - பிரதமராக இருந்த ராஜீவ் காந்தி அவர்களும், அன்றையதினம் அ.தி.மு.க. பரப்பிய செய்திகளை நம்பத் தயாராக இல்லை. எனவே கழக ஆட்சியை உடனடியாக கலைத்துவிட எடுத்த முயற்சி வெற்றி பெறவில்லை.

இதையெல்லாம் மறந்து விட்டு, இனி ஆக்க பூர்வமாக செயல்படலாம் என்று ஓர் அரசியல் நாகரிக மறுமலர்ச்சிக்கு தொடக்கம் செய்யலாம் என்பது, மாநில மக்கள் நலனில் அக்கறை கொண்டோர்க்கு, தங்களைப் போலவே ஆர்வம் இருக்கலாம். அதற்கு நன்றியும் மகிழ்ச்சியும் தெரிவிக்கிறேன். எத்தனையோ விரும்பத்தகாத பேச்சுக்கள், நிகழ்ச்சிகள் - அனைத்தையும் மறந்து, ஏன் ஆண்டிப்பட்டி இடைத்தேர்தல் நேரத்து நிகழ்வுகளை யெல்லாம்கூட மறந்து, ஆரோக்கியமான அரசியல் நிலை நாட்டப்பட வேண்டுமென்று நாட்டு நலனில் அக்கறை கொண்ட நல்லோர் தங்களைப் போலவே விரும்பியதை நிறைவேற்ற வேண்டுமென்றுதானே,

செல்வி ஜெயலலிதா வெற்றி பெற்ற நாளில் அவருக்குப் பிறந்தநாள் வாழ்த்து!

என்று செய்தியாளர்கள் கூட்டத்தில் கூறினேன்.

ஆனால் அவர் அதே நாளில் எழுதி விடுத்த அறிக்கையில், கருணாநிதி அவரைக் கண்டு மனம் புழுங்குகிறார் என்றும், தி.மு.க.வும், அதன் தலைவர் கருணாநிதியும் இனி எழுந்திருக்கவே முடியாத அளவுக்கு பலத்த தோல்வி வழங்கியுள்ளோம் என்றும், குறிப்பிடுகிறார் என்றால், அதற்குப் பிறகும் நான் எழுந்திருக்க முடிகிறதா இல்லையா என்று முயற்சி செய்து பார்க்க வேண்டாமா?

பரவாயில்லை! அதையும் பொறுத்துக் கொண்டு தான் பதவி ஏற்பு விழாவுக்கு செல்வதின் வாயிலாக, இனியாவது தமிழக அரசியலில் பண்பாடு காத்திட வழி காட்டுவோம் என எண்ணி எதிர்க் கட்சித் தலைவர் பேராசிரியர் அவ்விழாவுக்குச் சென்றார்.

ஆனால், தமிழ்நாட்டில் உள்ள எந்தக் கட்சித் தலைவர்களும் ஒப்புக் கொள்ள முடியாத ஒரு நிலை, எதிர்க்கட்சித் தலைவருக்கு ஆறாவது வரிசையில் இடம்.

அது நியாயமா? என்று கட்சித் தலைவனாகிய நான் கேட்டால்,

அரசியல் பண்பாடு பற்றிப் பேசுகிற அம்மையார் என்ன

செய்திருக்க வேண்டும்? தவறு நடந்திருக்கிறது - இனி இவ்வாறு நடைபெறாது - நடந்ததற்கு வருந்துகிறேன் என்று கூறாதது மட்டுமல்ல! அந்தத் தவற்றை சுட்டிக்காட்டிய எனக்கு எப்படித் தெரியுமா அர்ச்சனை செய்திருக்கிறார்?

பொறாமைக்காரன்
புலம்புகிறவன்
சிறிதும் பெருந்தன்மையில்லாதவன்
கண்ணியமற்றவன்
காழ்ப்புணர்ச்சி கொண்டவன்

பேரவைத்தலைவர் அவர்களே! அன்புள்ள தம்பி அவர்களே! ஒரு காலத்தில் உங்களால் அண்ணனாக ஏற்றுக் கொள்ளப்பட்ட எனக்கு, இந்த அர்ச்சனைகள், அவைக்கு வெளியிலே அம்மையாரால் ஏடுகள் வாயிலாக செய்யப்படுவது போதாதா?

அவற்றை நான் அவைக்குள்ளே
அமர்ந்தும் கேட்டுக் கொண்டிருக்க
வேண்டும் என்றும் ஆசைப்படுகிறீர்களா?

அன்புள்ள,

மு.க.

7-3-2002

2698. இங்கே, சந்தர்ப்பவாதம் எங்கே வந்தது?

உடன்பிறப்பே,

வெகுஜன இயக்கம், சந்தர்ப்பவாதம் போன்ற சில சொற்றொடர்கள் நமது நண்பர்களான கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்கள் அடிக்கடி பயன்படுத்தக் கூடியவைகளாகும்.

ஒரு பொதுப் பிரச்சினையில், எல்லாக் கட்சிகளும் சேர்ந்து குரல் கொடுக்க வெகுஜன இயக்கம் நடத்த வேண்டுமென எடுத்துரைப்பார்கள்.

ஆனால், சென்னையில் இருந்த கண்ணகி சிலை அகற்றப்பட்ட செயலைக் கண்டித்து, மீண்டும் அந்தச் சிலையை, அதே இடத்தில், அதே நிலையில் அமைக்க வேண்டுமென அரசை வலியுறுத்துவதற்காகக் கூட்டப் பட்ட கருத்தறியும் கூட்டமான அனைத்துக் கட்சி மற்றும் தமிழ்ச் சான்றோர் கூட்டத்தில் கலந்துகொள்ள அழைத்தால், அந்த ஆலோசனைக் கூட்டத்தில் பா.ஜ.க. கலந்துகொள்வதால் நாங்கள் கலந்துகொள்ள இயலாது என்று கூறி விடுவார்கள்.

அடுத்து சில நாட்களில், தமிழகத்தில் தீண்டாமைக் கொடுமை காரணமாக சில குறிப்பிட்ட ஊராட்சி மன்றத் தேர்தல்கள் நடத்தப்படாமல் இருப்பதைக் கண்டித்திட, நண்பர் திருமாவளவன் அவர்கள் கூட்டிய கூட்டத்தில், பா.ஜ.க.வினர் கலந்துகொண்ட போதிலும், அதில் கம்யூனிஸ்டுகளும் கலந்து கொண்டு கருத்தறிவிப்பார்கள்.

வெகுஜன இயக்கத்திற்காக எடுக்கப்பட்ட முயற்சி ஒன்றில் கலந்து கொள்வது தவறல்ல!

ஆனால், கண்ணகி சிலை விவகாரமும் வெகுஜன இயக்கப் பார்வை கொண்டதாகவே அமைய வேண்டு மென்றுதான் அவர்களையும் அழைக்க விரும்பினோம்!

எந்த பாரதிய ஜனதா கட்சியைக் காரணம் காட்டி கலந்துகொள்ள மறுத்தார்களோ, அதே பாரதிய ஜனதா கட்சி கலந்துகொண்ட, விடுதலைச் சிறுத்தைகள் இயக்கம் கூட்டிய கூட்டத்தில் கம்யூனிஸ்டு பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்!

தி.மு.க. சார்பில் நான் அழைத்ததும், கண்ணகி சிலைக்கான வெகுஜன இயக்கத்தைத் திரட்டுவதற்காகத்தான்! முற்றிலும் பொதுப் பிரச்சினைதான்!

ஒரு வெகுஜன இயக்கத்தில் கலந்துகொண்டு, மற்றொரு வெகுஜன இயக்கத்தில் கலந்துகொள்ள மறுப்பதும், கம்யூனிஸ்டு கட்சி நண்பர்களின் கண்ணோட்டத்தின் அடிப்படையில் சந்தர்ப்பவாதம் தானே!

சந்தர்ப்பவாதம் குறித்து நான் எழுத முற்பட்டதற்குக் காரணமே, எனது மானசீக வாழ்த்துகளுடன் மார்க்சிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் அன்பிற்கினிய நண்பர் என். வரதராசன் அவர்கள், இரண்டு நாட்களுக்கு முன்பு சென்னையில் பேசியதாக ஏடுகளில் வந்துள்ள செய்திதான்!

நீதிமன்றத் தீர்ப்பு வரும் வரையில் காத்திருக்காமல், குறுக்குவழியில் ஏதாவது செய்துவிட, மத்திய அரசு காஞ்சி சங்கராச்சாரியார் மூலம் முயற்சித்தால் அது மதவெறிக்கு தூபமிடும் செயலாகிவிடும். தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு, ராமர் கோயில் கட்டுவதைத் தவிர்க்கும் என்று கருணாநிதி கூறுவது அரசியல் சந்தர்ப்பவாதம்.

இதுதான் நண்பர் வரதராசன் அவர்களின் பேச்சின் முக்கிய பகுதியாகும்.

ஆரம்பத்திலிருந்தே அயோத்தி இராமர் கோயில் பிரச்சினையில், பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பது அல்லது நீதிமன்றத் தீர்ப்புக்குக் கட்டுப்படுவது என்பது தான் இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டதும், நாடாளுமன்றத்தில் பிரதமர் திரு. வாஜ்பய் அவர்கள் அறிவித்ததுமாகும்.

இந்த இரண்டுக்கும் கட்டுப்படாமல்தான் திடீரென, விசுவ இந்து பரிட்சத் சார்பாக இராமர் கோயில் கட்டும் திட்டம் தீவிரப்படுத்தப்பட்டது. அந்த பரிட்சத்தின் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி, பிரதமர் அவர்களும், திரு. அத்வானி

அவர்களும், அரசு எடுத்த நிலையில் உறுதியாக இருக்கவே, பரிட்சத் தலைவர்களின் கடுமையான விமர்சனங்களுக்கு ஆளாயினர் என்பது நாடறிந்த செய்தி!

இதற்கிடையே குஜராத் கோத்ரா ரயில் நிலையத்தில் 57 பேர் கரசேவகர்கள் உயிருடன் கொளுத்தப்பட்ட கொடுமையும், அதற்கு பழிவாங்கும் காரியமாக எழுந்த வன்முறை நிகழ்வுகளில், குஜராத்தில் குவிந்த பிணங்களின் எண்ணிக்கை, சிறுபான்மையோர், பெரும்பான்மையோர் இரு சார்பிலும் ஆயிரம் பேரை நெருங்கும் என்ற அளவிலும், அந்த மாநிலத்துப் பொருளாதார இழப்பு மட்டும் ஆயிரம் கோடியிருக்கும் என்ற வகையிலும், இன்னமும் அந்தச் சோகம், தொடர்கதையாக நீளுகிற நிலையிலும் - இந்திய மக்களின் ஒற்றுமையும், பாதுகாப்பும் கேள்விக் குறிகளாக்கப்பட்டுள்ளன!

இது தொடரக்கூடாது என்பதற்காகவே, இஸ்லாமியத் தலைவர்களிடமும் - விசுவ இந்து பரிட்சத் தலைவர்களிடமும், பேச்சுவார்த்தை நடத்தி சுமுகத் தீர்வு காண்பதற்காக, பிரதமர் வாஜ்பய் அவர்கள் காஞ்சி சங்கராச்சாரியார் அவர்களின் உதவியை வேண்டினார். சமயத் தலைவர்கள் இதுபோன்ற சமரசங்களில் ஈடுபடுவது, புதிதுமல்ல! புதிருமல்ல!

அருமை நண்பர் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில், குமரி மாவட்டத்தில் மண்டைக்காடு பகுதியில் ஒரு மதக் கலவரம் உருவாகி, சிறுபான்மையோர், பெரும்பான்மையோர் இரு தரப்பிலும் உயிர்ச்சேதமும், உடமைகள் சேதமும் ஏற்பட்டபோது, குன்றக்குடி தவத்திரு அடிகளார் அவர்கள், அந்தப் பகுதிக்குச் சென்று இரு தரப்பாரிடமும் கலந்து பேசி, ஒரு சமரச முடிவு ஏற்பட்டு, பின்னர் அங்கே அமைதி அரும்பியது என்பதை மறந்து விட முடியாது!

இன்றுள்ள நிலை, இந்தியத் திருநாட்டில் குஜராத் மாநிலத்திலும், உத்திரப்பிரதேசத்திலும் கிளம்பியுள்ள தீப்பொறியை அணைக்காமல் விடுத்தால், நாடு முழுதும் நாசமாகக் கூடிய வன்முறைத் தீப்பிழம்பு ஆறாகப் பெருக்கெடுத்து, பெரும் அவலத்தையன்றோ இமயம் முதல் குமரி வரையில் கொண்டுவந்து சேர்க்கும்!

அதைத் தடுத்திட எடுக்கப்படும் முயற்சியில் அக்கறை கொண்டு துணை நிற்க வருகின்றவர்களைப் பயன்படுத்தி அமைதி

உருவானால் போதுமென ஒரு பொறுப்புள்ள அரசு கருதுவதில் என்ன தவறு இருக்க முடியும்?

பரஸ்பர உடன்பாட்டின் அடிப்படையிலோ, அல்லது நீதிமன்றத் தீர்ப்பு மூலமோ மட்டுமே அயோத்திப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என்று அண்மையில் குடியரசுத் தலைவர் ஆற்றிய உரையில் திட்டவட்டமாகக் குறிப்பிட்டிருப்பதைத் திசை திருப்பும் வகையில், இரு தரப்பினரில் எந்த ஒரு தரப்பினரும் - அல்லது இடையே அரசியல் கட்சிகளும் இந்திய நாட்டில் அமைதி நிலவப்பாடுபடும் பொறுப்பினை மறந்து செயல்படக் கூடாது என வேண்டுகிறோம் நாம்!

இரு பிரிவினர் என்று கூட அல்ல. இரு பெரிய மதத்தினர், ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்காமல் தொடங்கிய போராட்டத்தில், நாட்டின் நன்மை கருதி, அந்த இரு சாராருமே ஒரு அமைதியான நிலை உருவாக்கிடும் உடன்பாட்டுக்கு வந்தால், கூடாது! கூடாது! இருவரும் போரிட்டுக் கொண்டே இருங்கள் என்ற ரீதியில் யார் தூபம் போட்டாலும், தூண்டி விட்டாலும், அது நாட்டில், அப்பாவி மக்களின் குருதி வெள்ளம் பெருக்கெடுக்கவே பயன்படும்!

பரஸ்பர உடன்பாடு - முதல் கட்டம்!
நீதிமன்றத் தீர்ப்பு இரண்டாவது கட்டம்!

முதல் கட்டத்திலேயே சமரசம் விளையுமானால், எல்லோர்க்கும் நல்லது தானே!

எனவே, முதல் கட்ட வெற்றிக்காக மத்திய அரசு எடுத்துள்ள முயற்சி, வெற்றி பெற, ஒல்லும் வகை யெல்லாம் ஒத்துழைப்பு தருவது என்பது கம்யூனிஸ்டு நண்பர்கள் கூறுவது போல, அரசியல் சந்தர்ப்பவாதம் அல்ல!

முதல் கட்டம் வெற்றி கிட்டவில்லையெனில், இருக்கவே இருக்கிறது அடுத்த கட்டம், நீதிமன்றத் தீர்ப்பு!

இந்த உறுதிப்பாட்டில், 'தி.மு.க.வின் சந்தர்ப்பவாதம் எங்கிருந்து வந்தது?''

அன்புள்ள,

மு.க.

8-3-2002

2699. பதற்றம் நிறைந்த பத்து மாதப் பட்டியல்!

உடன்பிறப்பே,

இன்றுள்ள அ.தி.மு.க. அரசின் சார்பில் ஆளுநர் அவர்களின் உரை நிகழ்த்தப்படும் வேளையில், இந்த ஆட்சி தொடங்கிய ஏறத்தாழ ஒன்பது மாத காலத்தில் நடைபெற்றுள்ள (தி.மு.க. மீது அடக்குமுறை அல்லாத) ஏனைய நிகழ்வுகள் எந்த அளவுக்குக் கொடுமையானவை, பரிதாபகரமானவை, பயங்கரமானவை என்று பட்டியலிட்டு கடந்த பிப்ரவரி 5ஆம் நாள் முரசொலி கடிதத்தில் விரிவாகக் குறிப்பிட்டு, மொத்தத்தில் அது நாள் வரையில் 66 கொலைகள் - கொள்ளையும் திருட்டுமென 97 நிகழ்வுகள் - கற்பழிப்பு 4 - மோசடிச் சம்பவங்கள் 4 - கடத்தல் 3 - சாராய சாவு சம்பவம் 4 - இவற்றில் மொத்தம் பலியானோர் 113 பேர் என எழுதியிருந்தேன். விபத்துகள் 136 - அதில் பலியானோர் 354 பேர்!

அ.தி.மு.க. அரசை எதிர்த்து எழுத வேண்டுமென்பதற்காக அல்ல! அதிகார வர்க்கத்தினரும், காவல்துறையினரும் மேலும் அக்கறையுடனும், கவனமுடனும் செயல்பட வேண்டுமென எடுத்துக் காட்டுவதற்காக!

இதற்குப் பிறகும், இதுபோன்ற சம்பவங்கள் மென்மேலும் பெருகிவருகிறதே தவிர, குறைந்த பாடில்லை என்பதற்கு தேதிவாரியாக மேலும் விபரங்களைத் தர வேண்டியவனாக இருக்கிறேன்.

5-2-2002 ராயப்பேட்டை ஒயிட்ஸ் சாலையில் மத்திய அரசு அலுவலர் வெட்டிக் கொலை.

காஞ்சிபுரத்தில் கூலித் தொழிலாளி வெட்டிக் கொலை.

மணல் லாரி மோதி திருப்பெரும்புதூரில் 2 பேர் சாவு. கிண்டியில் பஸ் மோதி கல்லூரி மாணவர் சாவு.

நீலாங்கரை அருகே ஆட்டோ, வேன் மோதி 2 பேர் சாவு. நெல்லை அருகே நான்கு பேர் படுகொலை.

6-2-2002 பள்ளிப்பட்டு அருகே சினிமா தயாரிப்பாளர் மனைவியுடன் கார், பஸ் மோதலில் பலி. தொலைத் தொடர்புத் துறை ஊழியர் நுங்கம்பாக்கத்தில் மர்மச் சாவு. சென்னையில் கல்லூரி அலுவலர் அடித்துக் கொலை.

8-2-2002 சென்னையில் 6 மாணவிகளைக் கடத்தி நகை பறிப்பு. ஆதம்பாக்கத்தில் ரவுடி அடித்துக் கொலை.

திருப்பத்தூரில் முன்னாள் எம்.எல்.ஏ. தாயார் அடித்துக் கொலை.

9-2-2002 பழவந்தாங்கலில் ஆட்டோ மோதி மோட்டார் சைக்கிளில் சென்றவர் சாவு.

10-2-2002 பர்மா பசாரில் போலீசாருடன் வியாபாரிகள் மோதல்.

சென்னையில் ஓய்வுபெற்ற மாஜிஸ்திரேட்டிடம் போலீஸ்காரர்போல நடித்துக் கொள்ளை.

மதுரவாயல் அருகே வீடு புகுந்து கொள்ளை.

திருவேற்காடு குறிமேடை கோவிலில் அம்மன் தாலி திருட்டு.

தரமணியில் ஏலச் சீட்டு நடத்தி 6 லட்சம் ரூபாய் மோசடி.

வேலூரில் மத்திய அரசு நிறுவனத்தில் வேலை வாங்கித் தருவதாக கூறி லட்சக்கணக்கில் மோசடி.

11-2-2002 மைலாப்பூரில் வாலிபர் வெட்டிக் கொலை.

அம்பத்தூரில் பஸ் மோதி பெட்டிக்கடைக்காரர் சாவு. மோட்டார் சைக்கிள் மோதி அமைந்தகரையில் காவலாளி சாவு.

ஆலந்தூரில் கொத்தனார் அடித்துக் கொலை. சேலத்தில் சிறுமியைக் கொன்று புதைத்தனர்.

12-2-2002 கோவளம் ஓட்டல் அறையில் சென்னை வாலிபர் சாவு. சென்னை கடற்கரை சாலையில் பல்கலைக்கழக அதிகாரி பலி.

13-2-2002 சென்னை அருகே மோட்டார் சைக்கிள் மீது பஸ் மோதி 2 நண்பர்கள் பலி. அரக்கோணம் அருகே சென்னை வாலிபர்கள் மர்ம சாவு.

சென்னையில் மேலும் ஒரு நிதி நிறுவனம் ரூ.2 கோடி மோசடி.

பல்லாவரம் பேருந்து நிலையத்தில் ஆண் பிணம்.

மின்சார ஊழியர்கள் போல நடித்து திருவரங்கத்தில் நகை - பணம் கொள்ளை.

14-2-2002 சென்னை வங்கியின் வேனை வழிமறித்து 3 கோடி ரூபாய் கொள்ளையடிக்க முயற்சி.

கடலூரில் லாரி மோதி 6 பேர் நசுங்கிச் சாவு.
சாக்கடையை சுத்தம் செய்த போது 2 பேர் சாவு.

15-2-2002 கும்முடிப்பூண்டியில் துப்பாக்கி முனையில் வியாபாரி வீட்டில் 6 லட்சம் ரூபாய் மதிப்புள்ள நகை, பணம் கொள்ளை.

சத்தியமங்கலத்தை அடுத்த சதுமுகை கிராமத்தில் பத்ரகாளி அம்மன் கோவில் சிலை உடைப்பு.

அம்பத்தூர் அருகே பேருந்து மோதி போலீஸ்காரர் பலி.

மணலியில் லாரியை ஏற்றி வாலிபர் கொலை.
எழும்பூரில் சாலையோரம் வேனை நிறுத்தி விபசாரம்.

சினிமா தியேட்டரில் வாலிபரைக் கொன்று நகை கொள்ளை.

16-2-2002 சென்னையில் பெண் போலீஸ் சப் இன்ஸ்பெக்டருக்கு அரிவாள் வெட்டு.

கேளம்பாக்கம் ஓட்டல் அறையில் பெண்ணுடன் தங்கியவர் கொலை.

சேலத்தில் மருத்துவமனையிலிருந்து துப்பாக்கி முனையில் கைதி மீட்கப் பட்டான்.
மடிப்பாக்கத்தில் ஜன்னலை உடைத்து நகை கொள்ளை.

17-2-2002 ஆத்தூர் நகரில் த.மா.கா. பிரமுகரைத் தாக்கி துப்பாக்கி முனையில் 60 பவுன் நகை கொள்ளை.

வேலப்பன் சாவடியில் பெண்ணிடம் நகை கொள்ளை.

18-2-2002 பஸ் மோதி புது மணப்பெண் நசுங்கிச் சாவு.

நசரத்பேட்டையில் லாரிகள் மோதி டிரைவர் சாவு. தாம்பரம் அருகே மளிகைக் கடை அடித்து நொறுக்கப்பட்டது.

மதுராந்தகம் அருகே சென்னை வாலிபர் கொலை. குளச்சல் அருகே பாலத்தில் குண்டு வெடித்தது.

திருவொற்றியூரில் மதுக்கடையில் பூட்டை உடைத்து கொள்ளை.

19-2-2002 லாரி மோதி அண்ணா நகரில் பட்டதாரி மாணவி பலி.

கோவையில் லாரி மோதி புது மணப்பெண் சாவு.

மாணவியைக் கடத்தி கட்டாயத் திருமணம்.

20-2-2002 மதுரவாயல் அருகே வியாபாரி வீட்டில் புகுந்து கொள்ளையர்கள் தாக்குதல் - கணவன் மனைவியை வெட்டி நகை, பணத்தைப் பறித்துச் சென்றனர்.

தர்மபுரியில் கோட்டை மல்லிகார்ஜுன் சுவாமி கோவிலில் காவலாளியைக் கொன்று விட்டு உண்டியல் பணம் கொள்ளை.

மதுரை காக்காதோப்பில் ரவுடி கொலை.

வில்லிவாக்கத்தில் தொழில் அதிபரை அரிவாளால் வெட்டி பணம் - நகை கொள்ளை.

கொட்டிவாக்கத்தில் பெண்ணிடம் தாலி சங்கிலி பறிப்பு.

கோவில்பட்டி அருகே 2 கல்லூரிகளில் கொள்ளை.

21-2-2002 திருவொற்றியூரில் கண்டெய்னர் லாரி மோதி மாணவி பலி.

அம்பத்தூரில் லாரி மோதி பெண் சாவு.

டி.வி. நடிகை வீட்டில் கொள்ளை.

22-2-2002 கொள்ளை தடுப்பு இன்ஸ்பெக்டரிடமே திருட்டு.

மைலாப்பூர் அம்மன் சிலையில் தாலி திருட்டு.

23-2-2002 திருவொற்றியூரில் காண்ட்ராக்டர் படுகொலை.
நகைவாங்குவது போல் நடித்து திருட்டு.

24-2-2002 போரூரில் ஓடும் பேருந்தில் பெண்ணிடம் நகை கொள்ளை.
வேட்டவலம் அருகே துப்பாக்கி முனையில் லாரி ரூ.15 லட்சம் பொருட்களுடன் கடத்தல்.
செங்கற்பட்டு அருகே லாரி மோதி வாலிபர் பலி.
திருச்செங்கோட்டில் டாக்டர் வீட்டில் 150 பவுன் நகை கொள்ளை.
விக்கிரவாண்டியில் லாரிகள் மோதி இரண்டு டிரைவர்கள் பலி.

25-2-2002 வேலூர் - அச்சு முறிந்து தேர் கவிழ்ந்தது - அர்ச்சகர் பலி.

அண்ணா சாலையில் டீசல் லாரி கவிழ்ந்து டிரைவர் சாவு.

26-2-2002 லாரி மோதி பூவிருந்தவல்லியில் போலீஸ்காரர் சாவு.
உளுந்தூர் பேட்டையில் லாரிகள் மோதி மூன்று பேர் சாவு.
சென்னை அருகே லாரி கடத்தப்பட்டது - ரூ.23லட்சம் பொருள்கள் மாயம்.
திருச்சியில் அடகுக் கடை அதிபர் வீட்டில் ரூ.40 லட்சம் கொள்ளை.
சென்னை அருகே திருமண மண்டபத்தில் நகை கொள்ளை.

27-2-2002 குழந்தைகளிடம் நகை கொள்ளை.
சென்னை ஆதம்பாக்கம் ரவுடி வெட்டிக்கொலை.
சென்னை திருவொற்றியூரில் பெருமாள் கோவில் உண்டியல் பூட்டை உடைத்துக் கொள்ளை.
சென்னை லாரி விபத்தில் காயமடைந்த சப் இன்ஸ்பெக்டர் சாவு.
சென்னையில் நகை வியாபாரிகளை வழிமறித்துக் கொள்ளை.

அம்பத்தூரில் ஓடும் பேருந்தில் நகை கொள்ளை.
தேனாம்பேட்டையில் தண்ணீர் லாரிக்கு ஒருவர் பலி.

மீனம்பாக்கம் விமான நிலையத்தில் வேலை வாங்கித் தருவதாக மோசடி.

28-2-2002 கரூர் அருகே டெம்போ மீது லாரி மோதியதில் 7 பேர் நசுங்கி சாவு.

வியாசர்பாடியில் சாலையின் குறுக்கே படுத்து பால் வேனை மறித்து கொள்ளை. ஓட்டேரியில் பெயிண்டர் அடித்துக் கொலை.

தாம்பரம் அருகே 1 லட்சம் ரூபாய் மதிப்புள்ள தோல் திருட்டு.

திண்டிவனம் அருகே கேட்டை உடைத்துச் சென்ற லாரி மீது ரெயில் மோதி டிரைவர் சாவு.

பழனியில் ஒரே குடும்பத்தில் 4 பேர் தற்கொலை.

சென்னை வைர வியாபாரி மீது 35 கோடி ரூபாய் மோசடி புகார்.

1-3-2002 சென்னையில் ஐந்து வயது சிறுமி கடத்தல்.

2-3-2002 ஓடும் ரெயிலில் கல்லூரி மாணவர் குத்திக் கொலை.

அயனாவரத்தில் திருமண ஆசை காட்டி மாணவி கற்பழிப்பு.

திருமங்கலத்தில் டி.வி. ரிப்பேர் செய்வதாகக் கூறி கொள்ளை.

போலி முத்திரைத்தாள் அச்சடித்து சென்னையில் விற்பனை.

கடற்கரை ரெயில் நிலையத்தில் ஸ்டேஷன் மாஸ்டர் அறை சூறை.

ரெயில் பயணியிடம் திருட முயன்ற போலீஸ்காரர் கைது.

4-3-2002 சென்னை புதுமாப்பிள்ளை தலை துண்டித்து கொலை.

வில்லிவாக்கத்தில் பால் வியாபாரிக்கு அரிவாள் வெட்டு.

கைதானவர்களை விடுவிக்கக் கோரி அ.தி.மு.க.வினர் முற்றுகை.

5-3-2002 உடுமலைப்பேட்டையில் பள்ளிக் கூடத்தில் புகுந்து 5 வயது மாணவன் வெட்டிக்கொலை.

சென்னையில் ராணுவ அதிகாரி வீட்டில் தங்க, வைர நகைகள் கொள்ளை.

அமைச்சர்கள் வீடு அருகே ரவுடி மாமூல் கேட்டு கடைகள் சூறை.

ஓடும் ரயிலில் மாணவர் படுகொலை.

6-3-2002 துப்பாக்கி குண்டுகளுடன் மர்ம கவர் - கோவை ரூ.25 லட்சம் கேட்டுக் கடிதம்.

இளம்பெண் கற்பழித்துக் கொலையா? திருவள்ளூர் அருகே பத்து நாட்களுக்குப் பின் பிணம் தோண்டி யெடுப்பு.

மெரினா கடற்கரையில் பிணமாக கிடந்த இளம்பெண்.

மீன்சுருட்டியில் ப்ளஸ் 2 மாணவி கற்பழிக்கப்பட்டுக் கொலை.

தஞ்சை மாவட்டத்தில் போலீஸ் விசாரணைக்காகச் சென்றவர் மர்ம சாவு.

கோவை சிறையில் கைதி தூக்கு போட்டுத் தற்கொலை காஞ்சிபுரம் அருகே லாரி - கார் மோதி 3 பேர் சாவு.

நெல்லையில் கள்ளத் துப்பாக்கியுடன் 3பேர் கைது - வெடிகுண்டுகளும் கைப்பற்றப்பட்டன.

7-3-2002 கோயம்பேட்டில் 2 லட்சம் ரூபாய் வழிப்பறிக் கொள்ளை.

வில்லிவாக்கத்தில் தாய், இரண்டு குழந்தைகள் கடத்தல்.

லாரி மோதி அரசு ஊழியர் மெக்கானிக் பலி.

கத்தியால் குத்தி ஒன்றரை லட்சம் ரூபாய் கொள்ளை.

சிம்போனிக் கம்பெனி 100 கோடி ரூபாய் மோசடி.

8-3-2002 மதுரை அருகே காவல் நிலையத்தில் பட்டப் பகலில் குண்டுவீச்சு - துப்பாக்கிச் சூடு - அல் உம்மா கைதிகளை மீட்டுச் சென்றனர்.

வாணியம்பாடி அரசு சந்தன ஆலையில், காவலர்களைத் தாக்கி அறைக்குள் பூட்டி விட்டு ஒரு கோடி ரூபாய் எண்ணெய் கொள்ளை.

ஓரகடத்தில் லாரி மோதி வியாபாரி பலி.
கத்தியைக் காட்டி ஆட்டோ டிரைவரிடம் வழிப்பறி.

ராமனாதபுரத்தில் கோர்ட்டு முன்பு தந்தையும், மகனும் கொலை.

விபத்து, கொலை, கொள்ளை, கலவரம், எந்த ஆட்சியிலும் தவிர்க்க முடியாதவை என்பதை மறுப்பதற்கில்லை. அதற்காக 'நல்லவை பாராட்டப் படலாம், - 'அல்லவை கட்டுப்படுத்தப்பட வேண்டு மல்லவா?'

எனவேதான் அரசின் தலைமை நிர்வாகிகள், காவல் துறை பெரிய அதிகாரிகள் கவனத்திற்கு இவற்றைக் கொண்டு வருகிறேன்.

இவையனைத்தும் சரிதான்! நடக்க வேண்டியது தான் என்று ஆளுந்தரப்பிலேயிருந்துகூட வாதிட மாட்டார்கள்! ஆகையால் இந்த அவலங்களுக்கு முடிவு காண அக்கறைகொண்டு அரசு இயங்க வேண்டும்!

ஓர் எதிர்க் கட்சியின் கடமையைத்தான் இக்கடித மூலம் செயல்படுத்துகிறோம்!

ஆவன செய்யுமா? ஆளுங்கட்சி!
அல்லது நம்மீது அர்ச்சனை நடத்துமா?

அன்புள்ள,

மு.க.

9-3-2002



1924 - 2018

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்
9, செ. ஜான் சர்ச் வணிக வளாகம்,
ராக்கின்ஸ் சாலை, திருச்சி - 1.
gowraputhagamaiyam@gmail.com

கௌரா ஏஜென்ஸீஸ்
1, சாமி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 5. gowra09@gmail.com.
www.facebook.com/gowrabookcentre

கௌரா
பதிப்பகக் குழுமம்

அட்டை : ஜே.ஜே டிசைன்ஸ்

GO 2300
ரூ.300

2022